
திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனைகள்



டாக்டர்
G. கௌசல்யா விஜயன்

திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனைகள்

திருமதி டாக்டர் G. கௌசல்யாவிஜயன்
M. A., M. Phil., Phd.

விஜயன் பதிப்பகம்
12/A, சஞ்சீவிப் பிள்ளை வீதி
சாயிநாதபுரம்
வேலூர் — 632 001

முதற்பதிப்பு : டிசம்பர், 1996

உரிமை : பதிப்பகத்தார்க்கு

மொத்த பக்கங்கள் : 352 + VIII = 360

விலை : ரூ. 130-00

அச்சிட்டோர் :

ஸ்ரீ பரமேசுவரி அச்சகம்

49, காரணீசுவரர் கோயில் தெரு

மயிலாப்பூர்

சென்னை-600 004

25-2

என் தந்தைக்கும்



என் அன்புக் கணவருக்கும்



அன்புக் காணிக்கையாக்குகிறேன்.

முன்னுரை

மறை பொருட்களைத் தன்னுள் அடக்கியது மந்திரம்—திருமந்திரம் என்னும் இச்சொல்லில் உள்ள ''திரு'' என்னும் சொல் தெய்வத் தன்மை வாய்ந்த நூல் என்னும் பொருளைத் தருகிறது. 'மந்திரம்' என்னும் சொல் தொல்காப்பியர் கூற்றுப்படி

''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப''

என்ற மறைமொழிகளை உடையதாய் விளங்குகின்றது.

விட்டகுறை, தொட்டகுறையாகவோ அல்லது

''ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து''

என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்பவோ யான் பெற்ற இப்பிறவியின் பயனாக 'மானிட சட்டை தாங்கி நம்முன் நடமாடும் சித்தர்' மாணிக்கவாசகம், எம்.ஏ., பிஎச்.டி அவர்களது அருளாசியாலும், மூலிகைமணி டாக்டர் க. வேங்கடேசன் அவர்களுக்குத் திருமந்திரத்தில் இருந்த ஈடுபாட்டின் காரணமாகவும், எனது பிஎச். டி ஆய்வின் நெறியாளர் டாக்டர் அரங்க. இராமலிங்கம் எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி அவர்களுக்குள்ள இறைப்பற்றின் காரணமாகவும் எனக்கு ''திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனைகள்'' என்னும் தலைப்பு பிஎச். டி. ஆய்வுக்குரியதாக வாய்க்கப் பெற்றது.

இத்தலைப்பினை ஆயும் முகமாக முதல் முதலாகத் ''திருமந்திரம்''— ஜி.வரதராஜன் அவர்களது (விளக்கவுரையுடன்) கூடிய நூலைப் படித்த பொழுது அச்சம் ஏற்பட்டது. அப்போது என் கணவர் அமரர் திரு S. விஜயன் எம்.ஏ., எம்.எட் அவர்கள் அளித்த ஊக்கத்தின் காரணமாக இரண்டாம் முறை படித்த பொழுது பல செய்திகள் புலப்படத் தொடங்கியது.

எனது தந்தை அமரர் திரு. R. கஜேந்திரன் முதலியார் அவர்கள் சொன்ன ஓரிரு விளக்கங்களுடனும் என் பெரிய

25-2

தந்தை அமரர் திரு T. கணேச முதலியார் அவர்கள் விட்டுச் சென்றுள்ள விளக்கக் குறிப்புக்களுடன் மேலும் தொடர்ந்து படித்தேன். அதனால் ''திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனைகள்'' என்னும் தலைப்புக்கேற்ற கருத்துகள் கிடைத்தன.

இக்கருத்துகளை எனது நெறியாளர் டாக்டர் அரங்க. இராமலிங்கம், எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி அவர்களது அறிவுரைப்படி வரிசைப்படுத்தினேன்.

இக்கருத்துகளை வகுத்தும் தொகுத்தும் உரிய விளக்கங்களையும் அவ்வப்போது அளித்து ஆய்வு சிறக்கப் பல்லாற்றானும் உதவினார் டாக்டர் சித்தர் மாணிக்கவாசகம் அவர்கள். மேலும் அண்டலிங்கத்திற்கான 96 வகை தத்துவ விளக்கங்களை விளக்கி உதவினார், திருவேங்கடவன் மேனிலைப் பள்ளித் தமிழாசிரியர் புலவர் எஸ். கந்தசாமி அவர்கள்.

இப்பெரியோர்களது துணையுடன் எனது பிஎச்.டி ஆய்வு ஐந்து பெரும் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டு ஆயப்பட்டது. இவ்வாய்வு நூலாக வெளிவரவேண்டும் என்று என் கணவரும் பிறரும் பெரிதும் விரும்பினர். அவர்களது விருப்பத்தாலும், சுமார் இரண்டு ஆண்டுகளாக முயன்ற எனது முயற்சியாலும் ''திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனைகள்'' என்ற எனது பிஎச்.டி ஆய்வு சென்னைப் பல்கலைகழகத்தின் அனுமதியுடன் நூலாக வெளி வந்துள்ளது.

வேலூர்-1

திருமதி டாக்டர் G. **கௌசல்யா**
எம்.ஏ., எம்ஃபில்., பிஎச். டி

பதிப்புரை

"திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனைகள்" என்னும் நூல் மிகச் சிறந்த ஆன்மீக நூல். "திருமந்திரம்". இதன் ஆசிரியர் திருமூலர் ஆவார். மூவாயிரம் பாடல்களைத் தன்னகத்தே கொண்டது திருமந்திரம். அதனால் இதற்குத் 'தமிழ் மூவாயிரம்' என்ற மற்றொரு பெயரும் உண்டு. இந்நூல் ஆகமங்களின் விளக்கமாக அமைந்துள்ளது. மிகச் சிறந்த சாத்திர நூலாகவும் தோத்திர நூலாகவும் விளங்கும் திருமந்திரத்தைத் தமிழ்வேதம் என்பர். திருமூலர் இந்நூலின்கண்,

> "என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
> தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே"

என்றும்,

> "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"

என்றும் கூறுகின்றார்.

இக்கூற்றுகளைப் பின்பற்றிப் பேராசிரியை டாக்டர் G. கௌசல்யா, எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி விரிவுரையாளர் தமிழ்த்துறை, டி. கே. எம். கல்லூரி வேலூர்-1 அவர்கள் 'திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனைகள்' என்னும் தலைப்பில் திருமந்திரத்தை ஆய்ந்துள்ளார். அவரது நோக்கில் திருமந்திரம் இம்மை, அம்மை வாழ்க்கை முறைகளை உள்ளடக்கி இல்லற, துறவற நெறிகளை விளக்குகின்றது என்பதை,

1. திருமூலரும் திருமந்திரமும்
2. சமுதாய வாழ்வும் திருமந்திரச் சிந்தனைகளும்
3. புராணக் கதைகள் தொடர்பான சிந்தனைகள்
4. விலங்குகள் பறவைகள்—தாவரங்கள் உலோகங்கள்—மணிகள் தொடர்பான சிந்தனைகள்
5. திருமந்திரமும் ஆன்மீக வாழ்வும்
   (அ) இல்லற வாழ்க்கை
   (ஆ) துறவற வாழ்க்கை
6. முடிவுரை

முதலிய பகுதிகளாய் ஆயப்பட்டுள்ளது. ஒவ்வொரு தலைப்பும் அரிய பல்வேறு கருத்துகளை உள்ளடக்கியதாகக் காணப் படுகின்றது.

''அறம் பொருளின்பம் வீடடைதல் நூற்பயனே"

என்னும் நன்னூலார் கருத்திற்கேற்ப மனிதன் முதல் பறவை, விலங்கு, தாவரம்—உலோகம் மணி போன்றவற்றின் குணங்களும் விளக்கப்படுகின்றன. அதோடு இல்லறமும், துறவறமும் மிகச் சிறந்த முறையில் அலசப்படுகின்றது. திருமந்திரம், சாதி, மத, இன, பேதங்களைக் களைந்து

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்'
'அன்பே சிவம்'

என்பன போன்ற ஒற்றுமை உணர்வுகளை மக்களிடையே தூண்டு கின்றது என்னும் கருத்துகளை நூலாசிரியை மிகச் சிறப்பாகச் சுட்டிக்காட்டியுள்ளார். திருமூலரது அறிவியல் சார்பான கருத்துக்களையும் எடுத்துக்காட்டியுள்ளார். ''திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனைகள்'' என்னும் நூல்

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்''

என்னும் வள்ளுவப் பெருந்தகையின் இலக்கணத்திற்கு இலக்கிய மாகத் திகழும் என்பதில் ஐயமில்லை என்று கூறி,

''மூலன் உரைசெய்த முப்பது உபதேசம்
மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரைசெய்த மூவாயிரந் தமிழ்
மூலன் உரைசெய்த மூன்றும் ஒன்றாமே''

என்னும் திருமந்திரப் பாடலுக்கு எளிய உரைநடை நூலாக விளங்கும் இவ்வாய்வினை நூலாக வெளியிட ஆகும் செலவினைக் கடனாக விஜயன் பதிப்பகத்தாருக்கு அளித்து உதவிய மாநில வங்கி— சிறுதொழில் பிரிவு வேலூர் மேலாளருக்கும் ''டிக்'' நிறுவனத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

வேலூர்-1

G. விஜயலட்சுமி
பதிப்பாளர்
விஜயன் பதிப்பகம்

வாழ்த்துரை

தமிழக வரலாற்றில் தமக்கெனத் தனி இடம் வகுத்துக் கொண்டவர்கள் சித்தர்கள். மிக அண்மைக்காலம் வரை 'பண்டாரப்பாட்டு' என்று இலக்கிய வாதிகளால் ஒதுக்கப்பட்ட பாடல்களுக்குச் சொந்தக்காரர்களான இவர்கள் வாழ்வும், பாடல்களைப் போலவே புரியாத புதிர் நிறைந்தது. 'நவில் தொறும் நூல் நயம் போலும்' என்றாற்போல் பயில் தொறும் பல்பொருள் தரும் பாடல்களைப் பாடியவர்கள் இவர்கள். வைத்தியம், வாதம், யோகம், ஞானம் ஆகிய பல துறைகளிலும் ஒப்பற்ற தொண்டாற்றிய இவர்கள் பாடல்கள் மறைபொருள் நிறைந்தவை. இவற்றின் பொருளைப் புரிந்து கொள்ள மொழி அறிவு மட்டும் பயன்படாது. காட்டெருமைப்பால் என்பது எருமைக்கனைச்சான் மரப்பாலைக் குறிக்கும் குழூஉக்குறிச்சொல்; இருகுரங்கின் கை என்பது முசுமுசுக்கையைக் குறிக்கும் குறிப்புச் சொல். எனவே இவர்தம் பாடல்களை ஆராய்ந்து தெளிதல் என்பது எளிதான செயலன்று.

தாம் பயின்று உருவான திருக்கயிலை மரபினின்று வேறு பட்டுத் தமக்கென ஒரு கோட்பாட்டினை வகுத்து மூலர் மரபு என உருவாக்கிச் சித்தர்களின் ஒரு சாரார்க்குத் தலைமை தாங்கிய ஒரு தாந்திரிகச் சித்தரான திருமூலரின் திருமந்திரத்தை திருமதி கௌசல்யா ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெற்றது ஒரு பெரிய சாதனை என்பதை விட பெறுதற்கரிய பேறு என்றே சொல்ல வேண்டும். இத்துறை நூல்களைப் படிப்பதற்கோ சிந்திப்பதற்கோ எல்லோருக்கும் வாய்ப்பு கிடைப்பதில்லை. கிடைத்தற்கரிய இந்த வாய்ப்பினைத் துணிந்து பயன்படுத்தி முயன்று வெற்றி பெற்றதும் நல்லூழே.

அறிவு, அனுபவம், ஆயுள் இவை அனைத்தும் வரையறை செய்யப்பட்ட நம்முடைய பார்வையில் அவற்றைக் கடந்த ஞானியர், சித்தர் முதலியோரின் வாழ்க்கை பற்றியோ, பாடங் களில் பொதிந்துள்ள பொருள்களைப் பற்றியோ உறுதியாக—அறுதியிட்டு— எதையும் கூறமுடியாது. நமது எல்லைக்குள் நின்று நாம் பார்க்கும் கோணத்துப் பார்வையில் கிடைக்கும் கருத்துக் களைத் தொகுத்துக் கூறுவதில் எந்த அளவு சிறப்புள்ளது என்பது தான் கவனிக்கத்தக்கது.

இவ்வகையில் திருவளர் கௌசல்யா, 'திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனைகள்' என்னும் தலைப்பில் ஓர் அரிய ஆராய்ச்சி நூலினைத் தந்துள்ளார். திருமந்திரமும் திருமூலரும்; சமுதாய வாழ்வும், திருமந்திரச் சிந்தனைகளும்; புராணக் கதைகள், தொடர்பான சிந்தனைகள்; விலங்குகள், பறவைகள், தாவரங்கள், உலோகங்கள், மணிகள் தொடர்பான சிந்தனைகள்; திருமந்திரமும் ஆன்மீக வாழ்வும் எனும் ஐந்து பெரும் தலைப்புக் களின் திருமந்திரத்தின் சாரத்தைத் தொகுத்தும் வகுத்தும் தந்துள்ளார்.

இளம் வயதில் இல்லறத்துறவியாக வாழ்ந்து கொண்டிருக்கும் இவர், இந்த யோக, ஞான நூலினைத் 'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' எனும் உயர்ந்த எண்ணத்தில் உங்கள் கைகளில் தந்துள்ளார். இனிய தமிழில் எளிய நடையில் உள்ள இந்நூல் தமிழறிந்த அனைவர் இல்லங்களிலும் இருக்க வேண்டிய ஒன்று. இது மங்களம் தரும் மந்திர நூல் என்பதும் மறந்துவிடக் கூடாது. இவர் இத்தகைய பயன்தரும் நூல்கள் பலவற்றை வெளிக் கொணர வேண்டும் என அன்னையின் அருளை இறைஞ்சுவன்.

அன்னை அபிராமி அருள் — அன்புடன்
34/2 A, கஜபதி தெரு — **இரா. மாணிக்கவாசகம்**
சென்னை-30

நன்றியுரை

''திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனைகள்'' என்னும் நூல் இன்று நமக்குக் கிடைப்பதற்கு முதற் காரணமாய் விளங்கியவர் டி.கே.எம். கல்லூரி முதல்வர் செல்வி. ஏ.பி. வசந்தகுமாரி எம்.ஏ., அவர்கள். நான் பிஎச்.டி ஆய்வினை மேற்கொள்ள அளித்த அனுமதியின் பேரில் கல்லூரிக் கல்வி இயக்குநர் டாக்டர் இராஜாராம் அவர்கள் எனக்கு பிஎச்.டி ஆய்வினைச் செய்ய அனுமதியளித்தார்.

சென்ன அஞ்சல்வழிப் பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் டாக்டர் அரங்க. இராமலிங்கம் எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி அவர்கள் எனது நெறியாளராக இருந்து சுமார் ஐந்தாண்டுகள் இவ்வாய்வு செம்மையாக அமைய, அவரது முதல் ஆய்வு மாணவியாகிய எனக்கு உதவினார். அஞ்சல் வழிப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் மா. கோதண்டராமன் எம்.ஏ., பிஎச்.டி அவர்கள் அன்புடன் ஆய்வு சிறக்க உதவினார். மற்றுமுள்ள தமிழ்த்துறைப் பேராசிரியர்கட்கும், அஞ்சல் வழிக்கல்வி நிறுவனம் பொருளாதாரத் துறைப் பேராசிரியர் டாக்டர் R. வீரமணி, எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி அவர்கட்கும்,

டாக்டர் R. தாண்டவன், எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி., துறைத்தலைவர், வரலாற்றுத்துறைப் பேராசிரியர், சென்னை பல்கலைக் கழகம் அவர்கட்கும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரி தமிழ்த்துறைப் பேராசிரியர் கலைமாமணி திரு. டாக்டர் R. குமரவேலன் எம்.ஏ., பிஎச்.டி, அவர்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

FIP யில் பிஎச்.டி ஆய்வினை நிறைவு செய்வதற்கான வழிமுறைகளை ஆய்ந்து எனக்கு ஓராண்டு ஊதியத்துடன் விடுப்பினைப் பெற்றுத்தந்த டி.கே.எம் கல்லூரி முதல்வர் செல்வி. ஏ. வி. வசந்தகுமாரி அவர்கட்கும், தமிழ்த்துறைத் தலைவர் திருமதி S. கலாவதி எம்.ஏ, எம்ஃபில், கல்லூரி நூலகர் திருமதி. கிரீடா விக்டோரியா அவர்கட்கும் எனது நன்றியை உரித்தாக்குகின்றேன்.

பொதுவாக சித்தர்களது வாழ்க்கை முறைகளை அலசி ஆராய உதவிய ''சுவாமி ஞான தேசிகன்''— சின்ன கொல்லப் பட்டி சேலம் அவர்கட்கும், திருவாளர் கிருஷ்ணமூர்த்தி— அலுவலகப் பணியாளர்— அஞ்சல் வழிக்கல்வி நிறுவனம் அவர் கட்கும், அஞ்சல் வழிக்கல்வி நிறுவன இயக்குநர் டாக்டர் சண்முகம் எம்.ஏ., பிஎச் டி அவர்கட்கும், ஆய்வினை நூலாக வெளியிட அனுமதி அளித்த சென்னைப் பல்கலைக் கழகத் தினருக்கும் N. K. M அறக்கட்டளைத் தாளாளர் திரு. T. சிவக்குமார் அவர்கட்கும், கல்லூரி செயலர் திருமிகு. D. மணிநாதன், B E அவர்கட்கும் எனது நன்றி.

இந்நூலை அச்சிட்டு குன்றின் மேலிட்ட விளக்காகத் திருமூலரது கருத்துக்களைத் தமிழ் நெஞ்சங்கள் பல்லாற்றானும் சுவைக்க வகை செய்த விஜயன் பதிப்பகத்தார்க்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

மிக்க நன்றி!

வேலூர்-1 G. கௌசல்யா எம்.ஏ; எம்ஃபில். பிஎச்.டி.

காப்புறு திருப்பதியுறு முற்றுப்பெறு

புனிதப்பணி மனித இனத்திற்கணி

வாழ்வே கலை வடிவே நலம்

அருளருள் தூவசிகளார் அவர்களின்

வாழ்த்துரை

திருமதி ஜி. கௌசல்யா அவர்கள் 'திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனைகள்' போன்று வாழ்வாங்கு வாழ்க.

உலகம் வாழ ஒருவன் வாழ்த்தும் திருமந்திர அபய முத்திரைக்குள் அனைவரும் மகிழ்வோம். சிந்திக்காது உழலு கின்ற செறிவற்ற சூழ்நிலையைச் செம்மைப்படுத்தத் திருமூலத்தின் மூலம் புதிய திருப்பத்தினைச் சாமானிய வாழ்விற்குச் சத்து ஏற்றுகிறார் திருமதி ஜி. கௌசல்யா அவர்கள். எங்கோ இடியும், மின்னலும், ஓசையும், ஒளியும், உமிழ இங்கே கேட்கப்படுகின்ற திருமந்திரமாகி விட்டது. அழிவினை அறிவியலாக்கி வாழ்வியலைப் பாழ்படுத்தும் இக்கால கட்டத்தில் இந்நூல் நுகரப்பட்டு உணரப்பட்டால் மானுடம் மகிழ்வுறும். எனவே காலம் அறிந்து வினையாற்றும் இவ்வாழ்வியல் சிந்தனையைத் திருமந்திர மேற்கோள்களுடன் வெளியிடும் இத்தவ முயற்சிக்கு டாக்டர் அரங்க. இராமலிங்கம் அவர்கள் நெறியாளராக நிற்பது பெரும் பாராட்டிற்கும் வாழ்த்திற்கும் மகிழ்விற்கும் உரியது.

என்னைத் தன்னை[1] என்ற சொற் கூறிட்டு ஒன்றே குலம் ஒருவனே தேவன்[2] என்ற சிகர நிலைக்கு வாழ்வியலைக் கணித்துக் காட்டும் திருமூல மந்திரத்தில் சிந்தனைக்கு எட்டாத செம்மாந்த தீர்வு களும், தீர்ப்புகளும் அகமும் புறமும் ததும்பி வழிவது மாமந்திரத்தின் மாட்சிமையாகும்.

''கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொல் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் கருத்தறி யாரே'' (திரும. 317)

என்று முடிக்கும் அருஞ்சிந்தனையை, வாழ்வியலுக்குள் திணித்துப் பார்த்தால் வாழ்ந்தவர், வாழ்கின்றவர் வாழ்பவர் பற்றிய ஒரு புதிய கணக்கெடுப்பினைக் கண்டறியலாம். காணவும் கேட்கவும் கடன்பட்ட வாழ்வியலில் கருத்திழந்த நிலையில் சிக்கிக் கிடக்கின்ற செங்கதிர்ச் சுற்றை (காலத்தை) நுணுகிப் பார்க்கும் பொழுது சென்றது போக நின்றது என்று குறிப்பிடும் காலக்கணிதம், கால வழக்கிலா அல்லது ஞால வழக்கிலா என்று சிந்திக்கத் தூண்டுகிறது. எனவே தோன்றலும், துய்த்தலும், துகலுறுதலும் மடைமாற்றக் கூடியன என்பது அடிப்படையான சிந்தனை.

---

1) என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே. (திரும. 81)

2) ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி யில்லை நுஞ்சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே (திரும. 2104)

அதை அடுத்த சிந்தனையோடு கூடிய பிடிவாதமான செயல் இவற்றின் பின்னணியில் வாழ்வியல் பிணைக்கப்படுவதுதான் மனித வாழ்வின் முத்தாய்ப்பு.

இயற்கையின் ஏமாற்றுத் தந்திரத்தில் தற்காலம் மானுடத்தில் ஆணினம் (ஆண்மை) குறைந்து வருகிறது. இது பற்றிய பன் நோக்கு ஆய்வுகளின் தீர்ப்பாகச் சாத்தியப்படும்படியான நடை முறை வாழ்வியலைச் சாதனைக்குக் கொண்டு வரவேண்டும். அதற்குச் சுவாசிப்பதா? மூச்சு விடுவதா? என்று குழப்ப நிலையில், திருமூல மந்திரத்தின் தீர்ப்பில்தான் உலகமே தீர்வு செய்ய முடியும். மிகச் சாதாரண வலது இடது காற்றோட்டக் கணிப்பு முழுக்க முழுக்கப் பலனளிப்பது.

''குழவியும் ஆணாம் வலத்தது வாகில்
குழவியும் பெண்ணாம் இடத்தது வாயில்
குழவியும் இரண்டாம் அபானன் எதிர்க்கில்
குழவி அலியாகும் கொண்டக்கால் ஒக்கிலே'' (திரும. 482)

ஆக ஒரு புதிய மானுடத்தையே படைத்து வாழ்வியலைப் புனிதப் படுத்தும் சிந்தனையைக் காட்டிலும் வேறெதுவும் செம்மாந்தது அன்று.

சேவை, தொண்டு, திருப்பணி, உதவி, கடமை என்றெல்லாம் தனிமனிதன் தொடங்கிச் சமுதாயம் தொடர்ந்து மானுடம் முழுவதுமே சூதாட்டத்தின் பகடையாக மேற்கண்ட சொற்சித்து உலகியலில் ஒப்புக் கொள்ளப்பட்டு உள்ளது. இதன் உண்மை ஒரளவேனும் கண்கூடாக்கப்பட்டிருந்தால் அல்லது கைவரப் பெற்றிருந்தால் இத்தனை சமயங்களும், மதங்களும், சடங்கு சம்பிரதாயங்களும், கட்டுப்பாடுகளும் உருவாகியிருக்காது. இன்னும் ஆழ்ந்து பார்த்தால் புலனடக்கம் என்று சொல்லிப் பொய் வேடங்கள் புனைந்து, உரைகள் தொடர்ந்த வண்ணம் துலங்கியபடித் தொற்று நோய் போலக் காலத்தைக் கடித்துச் சுவைக்கின்றன. இப்பரிணாமம், மேற்குறிப்பிட்ட உலகியல்பு அறிவார்ந்த சிந்தனையால் வேரற்று விடலாம். குறிப்பாக இப்பிரபஞ்சச் சுழற்சி மண், நீர், தீ, காற்று, ஆகாயம், ஒலி, ஒளி ஆகிய ஐந்திற்குள் அடங்கிவிடும். இவற்றால் ஓரறிவு புல் முதல் ஆறறிவு மனிதன் வரை உலகுக்கொரு தெய்வம் உயிர்தான் என்று கண்டறிந்த மனிதன் நிறைவடைகிறான். உயிர்தான் தெய்வம் என்ற இந்தச் சிந்தனை இன்றைய அரசியல், பொருளாதாரம், ஆன்மீகம் கல்வி கலாச்சார கலை இவைகளால் நிராகரிக்கப்படுகின்றது. உயிர் தான் தெய்வமென்ற உயர் சிந்தனை நம் முன்னோர்களால் பலன் கண்டு பரிந்துரைக்கப்பட்டது.

இதனை,

''காளியோ டாடிக் கனகா சலத்தாடிக்
கூளியோ டாடிக் குவலயத் தேயாடி
நீடிய நீர்தீகால் நீள்வா னிடையாடி
நாளுற அம்பலத் தேயாடும் நாதனே" (திரும. 2746)

என நுட்பமாகத் திருமூலர் உணர்த்துகிறார்.

தற்காலச் சூழ்நிலை, தேடுகின்றவன் அடையப் பெற்றாலும் நிறைவடையாமை ஒரு தனித்தன்மையாகப் பரவிவிட்டது. இந்த

ம்தலைத் தன்மை, வருங்காலச் சந்ததியினரை மலைப்புக்குள் ளாக்கி விடும். இந்த அறிவழுகலைச் செம்மைப்படுத்துவது என்பது முற்றிலும் இயலாதது. ஆனாலும் அந்த முயற்சியில் ஈடுபடுதல் மனிதத்தன்மையாம். ஒரு மனிதன் தேடும் செல்வம் (நிலையாமையில் அடங்கிய செல்வம்) பெரும் சிறப்பை உடையதாகக் கருதப்படுகிறது. அந்தத் தேடல் நிறைவற்றதால், மேலும் சில அனுபவங்களைத் தேடுவதும் புகழோச்சி மகிழ் வதற்கும் தன்னுள் மனப்பால் குடித்துத் தானே தெய்வமும் ஆகிவிட்டதாகப் பறைசாற்றி மடந்தொழிவதும் ஒரு மனு நீதி யாக்கப்பட்டுவிட்டது. இதனை நெறிப்படுத்தி— முறைப்படுத்தி அனுபவித்தவர் செல்வம், ஞானம், பெருந்தன்மை, தெய்வநிலை ஆகிய அனைத்தையும் தன்னுள் வெளிப்படுத்தி உலகிற்கு வெள்ளிடை மலையாக நின்று நிலவுகிறார். இவரே பிரான் எனத் தொழத்தக்கவர். இதனைச் சிந்திக்கும் பொழுது, அறிவாழ்ந்து சிந்திக்கும் பொழுது செயல்படத் தூண்டுகிறது. இப்படிப்பட்ட பிரானை எப்படிப்பட்ட நிலையில் தன் பிராணனுடன் ஏற்புடையதாக்கிக் கொள்ளவேண்டும் என்பதைச் சிந்திப்பதே நல்ஞானம், நற்செல்வம் எனலாம். இதனைப் பெற்று மானுடத்தின் வழி காட்டியாக வாழ்வாங்கு வாழ்வதே வாழ்க்கை.

''பிரானருள் உண்டெனில் உண்டுநற் செல்வம்
பிரானருள் உண்டெனில் உண்டுநன் ஞானம்
பிரானரு ளிற்பெருந் தன்மையும் உண்டு
பிரானரு ளிற்பெருந் தெய்வமு மாமே'' (திரும. 1645)

எனத் தெய்வநிலையினைப் பெற்றிட வழிகாட்டுகிறார் திருமூலர். பிரானைக் கண்டு, பிரானருளினால் நல்ஞானம் பெற்று தெய்வ நிலைக்கு உயருவதற்கு முயற்சி செய்யவேண்டும். அதற்கு நம்மைச் சூழ்ந்துள்ளவற்றை ஆழ்ந்து அறிதல் வேண்டும். அவ்வாறு தன்னைச் சூழ்ந்தறியும்போது அதுவே (அறியும் அறிவே) தத்துவ மாகவும் சூத்திரமாகவும், தமிழாகவும், வாழ்வாகவும் மலர்ச்சி பெற்றுத் ததும்பி வழிவதை உணரலாம்.

''தன்னைச் சூழ்ந்ததறிவது தத்துவம்
தன்னைச் சூழ்ந்ததறிவது சூத்திரம்
தன்னைச் சூழ்ந்ததறிவது தமிழ்
தன்னைச் சூழ்ந்ததறிவது வாழ்வு''

இப்பெரு வாழ்விற்குச் சிந்திப்பதே சிந்தனையென்று வாழ்த்து கிறேன்.

'சித்தகம்'
சேலம்-636 008

இவண்
தவசிகளார்
ஞான தேசிக சுவாமிகள்
சமய சிசிச்சானந்த சித்தகம்
சின்ன கொல்லப்பட்டி
சேலம்-636008

அணிந்துரை

டாக்டர் **அரங்க. இராமலிங்கம்**
எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி
தமிழ் இணைப் பேராசிரியர்
அஞ்சல்வழிக் கல்வி நிறுவனம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை-600 005

'திருமந்திரம்' ஓர் அனுபவ நூல். முயற்சியோடு கூடிய பயிற்சியால் பெறும் அனுபவ அறிவால் உணரக்கூடிய நூலாகத் திருமந்திரம் திகழ்கிறது. திருமந்திரத்தில் உள்ள மூவாயிரத்து நாற்பத்தைந்து பாடல்களும் திருமூலரின் அனுபவ வெளிப் பாடாகும். இந்நூலை ஒவ்வொருவரும் அவரவர் அனுபவத்திற் கேற்ப அறிந்து கொண்டு வருகின்றனர். இந்நூலைப் பக்திநூல் என்றும், சாத்திரநூல் என்றும், வேதாந்தநூல் என்றும், தாந்திரிகநூல் என்றும், ஞானநூல் என்றும் அவரவர் உணர் திறனுக்கேற்ப உரைத்து வருகின்றனர். அந்த வகையில் திருமதி ஜி. கௌசல்யா அவர்கள் திருமந்திரத்தை வாழ்க்கைக்கு வழி காட்டும் நூலாக உணர்ந்து உரைத்து இருக்கின்றார்கள். ஞான நூலாகவும், சித்தாந்த நூலாகவும் போற்றப்பெறும் திருமந்திரத் தினை வாழ்க்கைக்கு வழிகாட்டும் நூலாகத் தம் ஆய்வின் வழி நிறுவியிருக்கும் திருமதி ஜி. கௌசல்யா அவர்கள் தமிழர்களின் பாராட்டுதல்களுக்கு உரியவர்.

திருமந்திரத்தில் உபதேசம் எனும் தலைப்பில் தரப்பெற்றுள்ள முப்பது பாடல்களின் விளக்கமாகவே ஏனைய மூவாயிரம் பாடல் களும் அமைந்துள்ளன. உபதேசப் பகுதியிலுள்ள பாடல்களை ஒருவர் ஊன்றிப் படித்து உணர்ந்து தெளிந்தால் அவரே மந்திர மாகி விடுவார்.

இதனை,

'யான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே'' (திரும. 85)

என உரைத்திருப்பது உணரத்தக்கது. இம்மந்திரம் உற்று உற்றுப் பார்க்க ஒளிவிடும் என்கிறார்.

'நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி
உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடு மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரமன் இருந்திடம்
சிற்றம் பலமென்று சேர்ந்து கொண்டேனே'' (திரும. 2770)

இப்படி ஒளிவிடுகிற மந்திரம் ஓங்காரத்திற்குள்ளே ஒடுங்கியுள்ளது. அந்த ஓங்காரத்திலிருந்து தான் 'அண்டம்', 'பிண்டம்' ஆகிய அனைத்தும் கருவாகி, உருவாகி, பயிராகி, வளர்ந்து, வாழ்ந்து மறைகின்றன.

இதனை,

'ஓமெனும் ஓங்காரத் துள்ளே யொருமொழி
ஓமெனும் ஓங்காரத் துள்ளே யுருவரு
ஓமெனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனும் ஓங்காரம் ஒண்முத்து சித்தியே'' (திரும. 2676)

'ஓங்காரத் துள்ளே யுதித்தஐம் பூதங்கள்
ஓங்காரத் துள்ளே யுதித்த சராசரம்
ஓங்காரா தீதத் துயிர்மூன்றும் உற்றன
ஓங்கார சீவ பரசிவ ரூபமே'' (திரும. 2677)

என திருமூலர் நுட்பமாக உணர்த்துவது உணரத்தக்கது. இந்த ஓங்காரப் பொருளை உணர்ந்து உயிரின் ஆற்றலைத் தெளிந்து முத்திபெறுவது எவ்வாறு? அஞ்ஞானம் எனும் ''திமிரத்தால்" நம்முடைய கண்கள் குருடாய் இருக்கின்றன. அகக் கண்களை மறைத்திருக்கும் அஞ்ஞான மென்னும் அறியாமைத் திரைகளை மெய்ஞ்ஞான குருபரனின் அருளினால்தான் அகற்றமுடியும்; அகற்றி, உன் அறிவாகிய உயிரைப் பார் எனக் காட்டமுடியும். குருபிரான் தயவின்றி அகங்காரம் அடங்காதே!!

'அடங்காத என்னை அடக்கி அடிவைத்
திடங்காண் பரானந்தத் தேயென்னை இட்டு
நடந்தான் செயும்நந்தி நன்ஞானக் கூத்தன்
படந்தான் செய்துள்ளும் படிந்திருந் தானே'' (திரும. 2741)

எனத் தம் அனுபவத்தினை உரைத்து அருளியிருக்கிறார், திருமூலர்பிரான். குருவருளால் தன்னையறிந்த ''சீவன்'' தானே அதுவாக இருப்பதை உள்ளத்தால் உணர்கிறது.

இதனை,

'தலையடி யாவதறியார் காயத்தில்
தலையடி யுச்சியிலுள்ளது மூலந்
தலையடி யான அறிவை அறிந்தோர்
தலையடி யாகவே தானிருந் தாரே'' (திரும. 2426)

என்கிறார் திருமூலர்பிரான். தலையாகவும், காலாகவும், புனலாகவும், அமைந்து; அருளறமாகவும், அருளருளாகவும், அறிவாகவும் செயல்பட்டு அருள்ஞானப் பெருவளியாக ஒளி விடும் தெய்வத்தை உணர்ந்து கொண்டவர், பிறவிப் பிணிகளி லிருந்து விடுபடுவர். பழவினைகளாகிய வல்வினைகளை அறுத்து ஒழிப்பர். அத்தகைய பெருநிலை பெற்றவரே,

''நமன்வரின் ஞானவாள் கொண்டே எறிவன்
சிவன்வரின் நாஞுடன் போவது திண்ணம்
பவம்வரும் வல்வினை பண்டே யறுத்தேன்
தவம்வருஞ் சிந்தைக்குத் தானெதி ரரரே'' (திரும. 2968)

எனக் கூறமுடியும்.

உள்ளமாகிய கோயிலில் உறையும் இறைவனைக் காண வேண்டுமே! எப்படிக் காண்பது.

''உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய்யட்டி உயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால் எரிகொளஇருந்து நோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே''
(திருநாவுக்கரசர் — தேவாரம்)

என்பதற்கேற்ப ஞானத்தீயில் உணர்வு உருகும் போது உயிர் ஒளிவிடும். நந்தியின் மேல் வீற்றிருக்கும் சிவத்தைக் காணலாம். இந்த உண்மையை உணர்ந்தவர் உய்தி பெறுவர். உய்தி பெற்றவர் அறிவாகத் திகழும் சிவத்தைத் தன் சீவனில் (உயிரில்) காண்பர்.

''உய்யவல் லார்கட்கு உயிர் சிவஞானமே
உய்யவல் லார்கட்டு உயிர் தெய்வமே
உய்யவல் லார்கட்கு ஒடுக்கம் பிரணவம்
உய்யவல் லார்அறிவு உள்ள அறிவாமே'' (திரும. 2822)

என்னும் மந்திரம் உரைப்பதை உணர வல்லவர் உய்தி பெற்றவர் எனலாம்.

இவ்வாறு அறிவாகிய சிவத்தைத் தன்னுள்ளே கண்டவர் களே சித்தர்.

''சித்தர் சிவத்தைக் கண்டவர்'' (திரும. 2526)
''சித்தர் சிவலோகம் இங்கே தெரிசித்தோர்'' (திரும. 125)

எனச் சித்தர் நிலைபற்றித் தெளிவாக உரைக்கிறார் திருமூலர்.

உயிர்கள் ஏன் பிறக்கின்றன என்பதையும் அவற்றின் நிலை பற்றியும் மிகத் தெளிவாக உரைக்கிறார்.

''பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசநில் லாவே'' (திரும. 115)

எனும் முப்பொருள் உண்மையே சைவ சித்தாந்தத்தின் அடிப்படை. பசு, பாசத்தினை விட்டுப் பதியிடம் சென்று சரணடைதல் வேண்டும். சேர்ந்த பிறகு பதியே குருவுருவாய் வந்து உணர்த்திவிடும்.

''ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்துஎனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே''
(சிவஞான போதம்— 8-ஆம் சூத்திரம்)

என்பதற்கேற்பக் குருவும், சீடனும் அன்னியம் இல்லாத நிலையினைப் பெற வேண்டும். பெற்றால் குருவருளைச் சீடன் பெற்றுப் பிறவிப் பிணியினை அறுக்க முடியும்.

'கல்லாலின் புடையமர்ந்து நான்மறை ஆ(று)
அங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத் தொடர்கை வெல்வாம்'
(பரஞ்சோதி முனிவர்— திருவிளையாடல்
புராணம்— காப்புச் செய்யுள்)

என்பதற்கிணங்க பிறவிப் பிணிகளை அறுத்து வெற்றிபெறலாம். அவ்வுயிர்கள் எப்படி குருவருளால் ஈடேறுகின்றன என்பதையும் நுட்பமாக உணர்த்துகிறார்.

'விண்ணின்று இழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
உண்ணின் றுருக்கியொ ரொப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே'' (திரும. 113)

என உயிர்கள் விடுதலை பெறும் நுட்பத்தை உபதேசப் பகுதியில் உணர்த்தியுள்ளார்.

உயிர்கள் ''அவா'' என்னும் பற்றிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்பதற்காக நிலையாமைக் கருத்துகளை மிகவும் சுவைபடக் கூறியுள்ளார்.

''அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்
இடப்பக்கமே இறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே' (திரும 148)

''ஊரெலாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே'' (திரும. 145)

எனக் கூறி நிலையாமையை வற்புறுத்துகிறார்.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதைத் தெளிவுறுத்துகிறார். நடமாடும் கோயிலாக இருக்கும் மனிதர்களுக்குச் செய்யும் தொண்டே படமாடும் கோயிலில் இருக்கும் மகேசனுக்குச் செய்யும் தொண்டாகும்.

இதனை,

''படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயில் பகவற்க தாமே'' (திரும. 185)

என எளிமையாகக் கூறித் தொண்டு செய்வதற்குத் தூண்டுகிறார். தொண்டு செய்வதற்கான எளிய வழியையும் பின்வருமாறு புலப்படுத்துகிறார்.

''யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே" (திரும. 252)

எனத் தொண்டே தொழுகையாகும் நுட்பத்தைப் புலப்படுத்தியுள்ளார்.

நிலையாமையை உணர்ந்து மக்கள் தொண்டு செய்து உய்தி பெற வேண்டுமானால் உண்மையை (சத்) உணர வேண்டும். என்றுமுள்ள உண்மையை உணர அறிவை (சித்) அறிய வேண்டும். அறிந்தால் ஆனந்தம் (சத் + சித் + ஆனந்தம் = 'சச்சிதானந்தம்') அடையலாம். அறிவை அறிவிக்கக் குருபிரான் வேண்டும். 'குருவும்', 'சிவனும்' வேறு, வேறு அல்லர். இருவரும் ஒருவரே (ஒன்றே).

இதனை,

'குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே'' (திரும. 1581)

என்கிறார் திருமூலர்பிரான். இவ்வாறு குருவருளைப் பெற்றவர் குருவாகவே மாறிவிடுவர். என்னையும், நின்னையும் ஒருருவாக்கி (அருட்பெருஞ் ஜோதி அகவல்) என்கிறார் வடலூர் வள்ளற்பிரான். நானும் கடவுளும் ஒன்றாகிவிட்டோம் என்கிறார் திருமூலர்.

''ஒழிந்தேன் பிறவி உறவென்னும் பாசம்
கழிந்தேன் கடவுளும் நானும் ஒன்றானேன்
அழிந்தாங்கு இனிவரும் ஆக்கமும் வேண்டேன்
செழுஞ்சார் புடைய சிவனைக் கண்டேனே'' (திரும. 2958)

என உறுதிபடத் திருமூலர்பிரான் உரைப்பது உணரத்தக்கதாகும். குளவி கொட்டிக் கொட்டிப் புழுவினைக் குளவியாக மாற்றுதல் போல் குருபிரான் தன் திருவாய் அமிழ்தத்தினை உமிழ்ந்து உமிழ்ந்து சீடனைத் தானேயாக உருமாற்றுகிறார். ஒரு நிலையில் குருவும், சீடனும் ஒன்றாகி விடுவார்கள். குருவருளால் நிகழும் உருமாற்றம் இது.

இவ்வாறு குருவருளைப் பெற்று உண்மையை உணர்ந்து தெளிந்தவரால் மட்டுமே சீவனைச் சிவமாக்கிட இயலும்.

'சீவ னெனச்சிவ னென்னவே றில்லை
சீவ னார்சிவ னாரை யறிகிலர்
சீவ னார்சிவ னாரை யறிந்தபின்
சீவ னார்சிவ னாயிட் டிருப்பரே (திரும. 2017)

என நுட்பமாகச் சீவன் (உயிர்) சிவமாக உருமாறும் தந்திரத்தை மந்திரமாகச் செப்பியுள்ளார். உயிர் தன்னை அறியாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? மயக்கம்தான். உண்மையைக் காணாக் கண்ணராய் ஆணவமலம் எனும் இருட்டறையில் கிடந்து உயிர்கள் உழல்கின்றன.

'பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணம்
தன்னை மறைத்தது தன்கர ணங்களாம்
தன்னின் மறைந்தது தன்கர ணங்களே (திரும. 2289)

'மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதம்'' (திரும. 2290)

இவ்வாறு உயிர்கள் தன்னையறியாமல் தானே கெட்டு உழல் கின்றன. தன்னையறிந்து விட்டால் விடுதலைதான். எப்படித் தன்னை அறிவது?

'தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பார்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவார்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே" (திரும. 2611)

என்கிறார் திருமூலர்பிரான். சென்னியிலிருக்கும் சிவத்தை நடுக்கண் புருவப்பூட்டுத் திறந்து காட்டுவதற்குக் குருபிரான் தேவை. அவரவர் விதிவழி அடைய நின்றனர், அவ்வளவே.

தம் உயிராகிய சிவனைச் சிவமாக மாற்றிக் சொள்ளும் ஆற்றல் பெற்றவர்களால் மட்டுமே பின்வருமாறு கூறமுடியும்.

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்ம்மினே'' (திரும. 2104)

என்னும் திருமந்திரப் பாடல் நினைந்து, நினைந்து உருகுவதற் குரியது. உள்ளமாகிய சித்தத்தில் நின்று, நின்று நினைக்க வேண்டும். அதுவும் நன்றே நினைக்க வேண்டும். எதற்காக? (நீர் நினைந்து உய்ம்மினே) உய்வதற்காக!! எதிலிருந்து உய்வதற்காக? எமனிடமிருந்து உய்வதற்காக. (நமனில்லை) அதாவது நினைந்து போற்ற வேண்டும். உள்ளத்தில் சித்தாக— அறிவாக இருந்து எல்லாவற்றையும் நமக்கு அறிவித்துக் கொண்டிருக்கும், அந்தப் பரம்பொருளைப், பெரும்பொருளைப்—பேரொளிப் பிழம்பைப்— பெருவெளியை— அறிவை நேர் கூராக்கி ஒரே நினைவில் 'ஆணியாய்'— 'ஆப்பாய்', அறைந்து நிறுத்திக் காண வேண்டும் என்பதே இத்திருமந்திரத்தின் நுண் பொருள்.

இவ்வாறு அறிவாகிய பெரும் பொருளை அறிவதற்குக் குருபரனின் அருளாகிய மெய்யறிவின் துணை வேண்டும். உலகியலில் படித்துப் பெறும் அறிவினை (ஏட்டறிவு— படிப்பறிவு) ஞானிகள் அறிவாக ஏற்றுக் கொள்வதில்லை.

''அறிவறி வென்றங் கரற்றும் உலகம்
அறிவறி யாமையை யாரும் அறியார்
அறிவறி யாமை கடந்தறி வானால்
அறிவறி யாமை அழகிய வாறே'' (திரும. 2637)

என்பதிலிருந்து உண்மையறிவின் இயல்பை உணர்த்தியுள்ளார். உயிர்கள் அறிவு வடிவம் (அறிவு சொரூபம்) என்பதை மறந்து அவை மயங்கியிருப்பதை உணர்த்துகிறார். குருபிரான் உணர்த்திய பின்னரே உயிர்கள் மாயத் திரைகளிலிருந்து விடுபட்டுத் தாமே அந்த அறிவின் வடிவம் (அறிவு ஸ்வரூபம்) என்பதை உணர முடியும்.

'அறிவுக்கு அழிவில்லை ஆக்கமும் இல்லை
அறிவுக்கு அறிவல்லது ஆதாரம் இல்லை
அறிவே அறிவை அறிகின்றது என்றிட்டு
அறைகின்றன மறை யீறுகள் தாமே' (திரும. 2358)

என்பதை உணர்ந்து, உணர்ந்து, ஊற்றெழும், கண்ணீர். அதனால் நனைந்து, நனைந்து உய்தி பெறுதல் வேண்டும். சிரஞ்சீவிப் பதத்தைப் பெறுதல் வேண்டும். இதுவே திருமந்திரப் பயன்.

''தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை யறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே யர்ச்சிக்கத் தானிருந் தானே'' (திரும. 2 55)

என்கிறார் திருமூலர்பிரான். சூட்சுமமும், இரகசியமும் இதுதான். தானேதான் அது. அதுவேதான் நாம்.

இந்த நிலையை அடைவதற்கு நாம் என்ன செய்யவேண்டும்? நிலையாமையை உணர வேண்டும். நிலையாமையே நிலையாக உள்ள இவ்வுலகத்தின் இயல்பை உணர்ந்து உணர்ந்து தெளிதல் வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் மரணபயம் வரவேண்டும்.

இறப்பதற்கு இன்னும் ஏழு நாட்களே உள்ள நிலையில் பரீட்சித்து மகாராஜாவுக்கு வந்ததே அந்த மரணபயம்— வர வேண்டும். அதன் விளைவாகவே சுகப் பிரம்மரிஷியின் திருவாய் மொழியாக ''ஸ்ரீமத் பாகவதம்'' வெளிப்பட்டது. நீலமணிக் கண்ணனின் கண்ணபிரானின் மணியான வாழ்க்கைச் செய்திகள் தான் ''பாகவதம்''.

மரணபயம் கொண்டு குருபிரானை அண்டி அவர் அருளைப் பெற்றுத் திருவடி பிடித்துச் செவிச் செல்வமாகத் திருவமுது உண்டால் திருமந்திரம் உள்ளத்துள்ளே ஒளிவிடக் காணலாம். உற்று உற்றுப் பார்க்க மந்திரம் ஒளிவிடும். நீங்கள் அதைப் பார்க்கப், பார்க்க அது உங்களைப் பார்க்க ஆரம்பிக்கும். அதற்குப் பிறகு,

''கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல'' (குறள் - 1100)

என்னும் நிலையேற்படும். அதற்குப் பிறகு பார்ப்பவரும் மணியான மந்திரமும் ஒன்றிவிடுவர். இதுவே அத்வைதம். அகம் பிரம்மாஸ்மி தத்துவம் அசி.

இந்த நிலையினை அடைய அல்லது பெற— என்ன செய்ய வேண்டும்?

''கண்டதெல்லாம் அனித்தியமே கேட்டதெலாம் பழுதே
கற்றதெலாம் பொய்யே நீர்களித்ததெலாம் வீணே
உண்டதெலாம் மலமே உட்கொண்டதெலாம் குறையே
உலகியலீர் இதுவரை உண்மையறிந் திலிரே''

(திருவருட்பா—ஆறாம் திருமுறை-5579)

என வடலூர் வள்ளற்பிரானாகிய திருவருட் பிரகாச வள்ளலார் திருவாய் மலர்ந்தருளியதை நினைந்து நினைந்து உணர வேண்டும். அதற்குப் பிறகு செயலுக்கு வரவேண்டும்! என்ன செய்ய வேண்டும்!! இதோ, மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஆரா அமுதினைக் கேளுங்கள். செவி படைத்தவர்களே நன்றாக ஊன்றிக் கேளுங்கள்.

''கூரான குருவருளைக் கூர்ந்து போற்றிக்
குணமாமங் கரையாற்றிக் காலங்காற்றி
மாறாக வோடுகின்ற மனத்தை மைந்தா
மரணபயச் சவுக்கு கொண்டு மாறிமாறி
நேராக வைராக்கிய மணிக்கம் பத்தில்
நீயிறுக்கிக் கட்டிப்பார் நிலைத்தே நிற்கும்.
பேராதே பெரும்பெருவான் கடைனி கொண்டால்
பேச்சற்று மூச்சற்றுப் போவென்று ஊனே!''

—ஆதிமெய் உதயபூரணம்—முரீதுச் சுருக்கம்-17

என்னும் தேவவாக்கு உங்கள் செவிகளில் தேனாகப் பாய்ந்ததா? ஞானத்தைப் பெறுவதற்கு இந்த ஒரே வழிதான் இருக்கிறது.

ஞானத்தை இப்படித்தான் பெறமுடியும். மாயமந்திரங் களாலோ, தந்திரங்களாலோ பெற முடியாது. மெய்க் குரு பிரானின் வாயமுதமாகச் செவிச் செல்வத்தைப் பெற்றுப் பெற்றுத்தான் உயர வேண்டும். செவி வாயாக, நெஞ்சு களனாக ஒரே நினைவில் நின்று கேட்க வேண்டும். இந்த நுட்பத்தை அறிந்தவர்களின் சித்தம் ஒரு நிலையில் நிற்கும். அவர்களே சித்தர்கள். அவர்களால்தான் சித்தத்தைச் சிவன்பாலே வைக்க முடியும். இவ்வாறு அரிய பெரிய செய்திகளைத் தனக்குள்ளே பொதித்து வைத்திருக்கும் ஞானக் கருவூலமாகத் திகழ்வது திருமந்திரம். திருமதி ஜி. கௌசல்யா அவர்கள் திருமந்திர நூலினை ஆய்வு செய்து, தாம் உணர்ந்தவற்றை நூலாக வெளியிடுகிறார்.

'திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனைகள்' என்னும் இவ் ஆய்வு நூல் ஆறு இயல்களில் மிகச் சிறப்பாக எழுதப்பட்டுள்ளது.

நூலின் இறுதியியல் முடிவுரையாகத் தாம் கண்ட ஆய்வு மணிகளை முத்தாரமாகக் கோத்து அளித்துள்ளார்.

திருமதி ஜி.கௌசல்யா அவர்கள் எதையும் முயன்று முடிக்கும் முயற்சியுடைவர். ஞானத் தேட்டம் உடையவர். வாழ்வில் வரும் சோதனைகளைச் சாதனைகளாக மாற்றிக் கொள்ளும் பயிற்சி பெற்றவர். அவரின் முயற்சிக்குப் பாராட்டுக்கள்.

ஞானக் கருவூலமாகவும், அறிவுக் கற்பகத் தருவாகவும் திகழும் திருமந்திர நூலில் தாம் உணர்ந்த அளவிற்கு எடுத்து உரைத்துள்ள நூலாசிரியருக்கு வாழ்த்துக்கள். பெருவெளியில் இருந்து எடுத்த ஒரு சில நட்சத்திரங்களை இந்நூலில் அவர் காட்டியுள்ளார். தொடர்ந்து இம்முயற்சியில் அவர் ஈடுபட்டுச் சில கோள்களையாவது காட்ட வேண்டும் என்பது என் விருப்பம். மதியாகிய சந்திரனைக் காட்டினால் மகிழ்ச்சியே. ஞான நெருப்பாகிய சூரியனைக் காட்டினால் இரட்டிப்புப் பெரு மகிழ்ச்சி. ஒன்பது கோள்களையும் ஒரு சேர அண்டத்திலும், பிண்டத்திலும் திருமூலர் காட்டியதுபோன்று காட்டினால்......!!!. காணுவதற்கு என்போல்வார் தயாராக உள்ளோம். காட்டுவார் தான் அரிதாக உள்ளனர். கண்படைத்ததன் பயனைப் பெற இறைக் காட்சிதனைக் காட்டிடும் முயற்சியில் நூலாசிரியர் மேலும் முயல்வாராக. இறையருள் குருவருள் வழிச் சிந்தையில் சித்தித்திட கண்ணான கணபதியைக் கருத்தில் வைத்து வாழ்த்து கிறேன்.

> ''சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
> சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
> சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
> சிவசிவ என்னச் சிவகதிதானே'' (திரும. 2716)

314, அவ்வை சண்முகம் சாலை — **அரங்க. இராமலிங்கம்**
இராயப்பேட்டை
சென்னை-600 014

பொருளடக்கம்

மூலன் உரைசெய்த முப்ப துபதேசம்
மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
மூலன் உரைசெய்த மூன்றுமொன் றாமே

— *திருமந்திரம் 3046*

இயல் — ஒன்று

திருமந்திரமும் திருமூலரும்

நூலின் தோற்றம்

மக்களுடைய சமுதாய வாழ்வினையும் காலச் சூழ்நிலையினையும் எடுத்துக்காட்டுவதாக இலக்கியம் அமைகிறது. ஓர் உயர்ந்த குறிக்கோளினையோ, கோட்பாட்டினையோ உணர்த்துவது அதன் நோக்கம். மக்கள் அறவாழ்வு மேற்கொண்டு, செந்நெறியில் பொருளீட்டி, இன்பம் நுகர்ந்து, வீடு பேறடைதல் வேண்டும் என்பதற்காகவே நூல் படைக்கப்படுகிறது.

தமிழர்தம் இலக்கியக் கொள்கை

> நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
> பாடல் சான்ற புலனெறி வழக்கம் [1]

என்று தொல்காப்பியம் இலக்கியப் படைப்பின் இருவகை வழக்குகளைத் தெரிவிக்கிறது. 'நாடக வழக்கு' என்பது புனைந்துரை; 'உலகியல் வழக்கு', வாழ்க்கை நடைமுறை. புனைந்துரையாகவும் வாழ்க்கை நடைமுறையாகவும் அமைவன இலக்கியத்தின் பாடுபொருளாகவும் பாடுநெறியாகவும் விளங்கும். அகம், புறம் என்னும் பாகுபாடு இவற்றின் அடிப்படையிலேயே உருவாயிற்று. இனிமையும் அழகும் வாய்ந்த நலமிகு வாழ்வியற் கூறுகளை ஓராற்றான் சுவைபடத் தொகுத்துக் கூறுதலே புலனெறி வழக்கமாகும்.

காதல் உணர்ச்சியும் நெகிழ்ச்சியும் அகப்பொருளின் உயிர் நாடி; போர் வீரமும் பெருமிதமும் ஈகையும் புறப்பொருளின் அடிநாதம். இறைவனிடம் காட்டப்பெறும் அன்பு நெகிழ்ச்சியும் பெருமிதமும் இறையுணர்வுப் பாடல்களின் வேரும் விழுதும் ஆகும்.

பரம்பொருளிடத்து இறையன்பர் காட்டும் பேரன்பு பக்தி எனப்படும். இறைவனது அருளினில் திளைத்து, அன்பினில் படிந்து, அடியவர் நெகிழ்ந்து நெகிழ்ந்து பாடுவது பக்திப் பாடல் அல்லது இறையுணர்வுப் பாடலாகும்.

சைவசமயப் பக்திப் பாடல்கள் இறை, உயிர், தளை ஆகிய வற்றைத் தம் அடிப்படைக் கொள்கைகளாகவும் உயிர்ப் பொருளாகவும் கொண்டு அமைந்துள்ளன. முழுமுதற் கடவுள் சிவனே என்றும், அவன் எங்கும் யாவுமாய் நிற்பவன் என்றும் பண்சுமந்த பாடல்களால் சைவத் திருமுறைகள் இறைவன் பெருமையை நிலை நாட்டுகின்றன. இவற்றுள் ஒன்பதாம் திருமுறையாகிய திருவிசைப்பா— திருப்பல்லாண்டினை அடுத்துப் பத்தாம் திருமுறையாக இலங்குவது திருமூலரின் திருமந்திரம் ஆகும்.

நூற்பயன்

பவணந்தியார் நூலின் பயனைச் சொல்ல முற்பட்டபோது,

> அறம்பொரு ளின்பம் வீடடைதல் நூற்பயனே [2]

என்று வரையறை செய்கிறார். இதற்கேற்ப நாற்பயனையும் நல்கும் ஒரு நூலாகத் திகழ்கிறது திருமந்திரம். அறம் பொருள் இன்பம் ஆகியவற்றை நெறிப்பட விளக்கி வீடு பேறு அடையும் முறைகளையும் விளக்கும் முதல்நூல் திருமந்திரம் எனலாம்.

உலகோர், காலை எழுந்தவுடன் திருமந்திரத்தைப் பொருளுணர்ந்து ஓதிவந்தால் உலக நாயகனாகிய இறைவனை அடைந்து இன்புறுவர். இதனைத் திருமந்திரப் பாயிரம்,

> காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்
> ஞாலந் தலைவனை நண்ணுவ ரன்றே [3]

என்கிறது.

பொதுவும் சிறப்புமாக அமைந்து ஓதுவாருக்கு இன்பமும் நன்மையும் பயப்பது திருமந்திரம்; இம்மை இன்பமே யன்றி முத்திப் பேரின்பத்தையும் நல்குவது இந்நூல். இதனை,

வைத்த பரிசே வகைவகை நன்னூலின்
முத்தி முடிவிது [4]

என்னும் திருமந்திரப் பாடற்பகுதி உணர்த்தும்.

திருமந்திரம் பற்றிய சில கருத்துக்கள்

திருமந்திரம் பற்றி அறிஞர் பெருமக்கள் பல்வேறு அரிய கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். அவை திருமத்திரத்தின் அருமையையும் பெருமையையும் உணர்த்துவனவாகும். அவற்றுள் சில ஈண்டு ஆராயப்படுகின்றன.

சைவத் திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாகக் கருதப்படுவது திருமந்திரம். இதற்கு ஓர் அரிய காரணத்தை ஆய்ந்து,

> ''இத்திருமந்திரம் பத்தாம் திருமுறையாகப் பண்டுள்ளோர் தொகுத்தமைக்குக் காரணம் சிவஞானபோதச் செழுந் தமிழின் பத்தாம் நூற்பாக் குறிப்பாகு மென்ப. — அந்நூற்பா வின் குறிப்பு இறைப்பணி நிற்றல். இறைப்பணி நிற்பார் சிவபெருமானின் சிறந்த அடியாராவர். வேறொரு வகையாகக் கருதுங்கால் சிவபெருமானின் எண்பெருங்குணங் களும் முறையே எட்டுத் திருமுறைகளாகவும், ஒன்பதாவ தாகக் காணப்படும் திருக்கோவையார் எட்டுக் குணங்களையு முடைய குணிப்பொருளாம் சிவபெருமானாகவும் கொண்டு, அச்சிவபெருமானின் ஒப்பிலா வழிபாட்டினையும் அவ்வழி பாட்டினுக்குரிய மக்கள்தம் உலகியல் ஒழுகலாற்றினையும் ஒருங்கு குறிக்கும் ஒரு பெரும் தமிழ்மறையாம் திருமந்திரம் பத்தாவதாக இயல்பாகவே அமைந்துள்ளதென்றலும் ஒன்று'' [5]

என்பர் அறிஞர். இக்கருத்து ஏற்கத்தக்கதேயாம்.

திருமந்திரத்தின் சிறப்புகளுள் ஒன்று அதன் பெயர் (ஒற்று நீக்கி) ஐந்தெழுத்தால் ஆனது என்பது.

> ''திருமுறைகளுள் சிறப்பாகத் 'திருமந்திரம்' எனத் திருப்பெயர் பெற்றுத் திகழ்வது பத்தாம் திருமுறையாகும். இதற்கு 'மந்திர மாலை' என்னும் மற்றொரு திருப்பெயரும் உண்டு. இவ்விரு திருப்பெயர்களும் ஐந்தெழுத்தாலமைந்துள்ளன. இதுவும் திருவருட் சிறப்பேயாகும்'' [6]

என்னும் கருத்து ஈண்டு நினைக்கத்தக்கது.

சைவ சமய நெறியின் அடிப்படை நூலாக விளங்குவது இத்திருமந்திரமே யாகும். இதனை முதல் நூலாகக் கொண்டு பதினொரு திருமுறைகளும், பதினான்கு சித்தாந்த நூல்களும் விளக்கம் தரும் நூல்களாகத் தோன்றின என்னும் கருத்து நிலவுகிறது. அதனால் இதனைத் 'தமிழ் வேதாகம முழுமுதற் கருவூலம்' என்று அறிஞர் போற்றுவர்.[7]

சுந்தரர் தம் திருத்தொண்டத் தொகையில் திருமந்திர ஆசிரியரை,

நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்[8]

என்று குறிப்பிடுவர். நம்பியாண்டார் நம்பிகள் தம் திருத்தொண்டர் திருவந்தாதியில்,

படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டெனுச்சி
அடிமன்ன வைத்த பிரான்மூல னாகின்ற அங்கணனே[9]

என்று பாடுவர்.

பெரியபுராணம் இருபத்தெட்டுப் பாடல்களிலும்,[10] புலவர் புராணம் இருபத்தொரு பாடல்களிலும்[11] திருமூலர் வரலாற்றையும் திருமந்திர நூலின் தோற்றத்தையும் விளக்குகின்றன.

திருவாவடுதுறையில் தோன்றியமை

சைவப் பெருந்தலமாகிய திருவாவடுதுறையில் திருமந்திரம் தோன்றியது என்னும் கருத்து நிலவுகிறது. இதனைப் பெரிய புராணம் கூறும் திருமூலர் வரலாற்றால் நன்கறியலாம். அது வருமாறு:

இந்திரன், திருமால், பிரம்மன் ஆகியோருக்குச் சிவநெறியை அருளிய நந்திதேவர் திருக்கயிலையில் சிவபெருமானுக்கு முதன்மைக் காவலராவார். அவரிடம் உபதேசம் பெற்ற சிவ யோகி ஒருவர் அகத்தியரைக் காணப் பொதியமலை வந்தார். வரும்வழியில் திருக்கேதாரம், பசுபதி, கங்கைக்கரை, காசி, ஸ்ரீசைலம், திருக்காளத்தி, திருவாலங்காடு, காஞ்சி, திருவதிகை வீரட்டம், சிதம்பரம் முதலிய திருத்தலங்களைக் கண்டு இறைவனை வழிபட்டு மகிழ்ந்து இறுதியாகத் திருவாவடுதுறை சேர்ந்தார். அங்கு யோகத்தில் ஆழ்ந்தார். ஆண்டுக்கு ஒரு பாடல் வீதம் மூவாயிரம் பாடல்களை அவர் அருளினார்.

யோகியார் வரும் வழியில் காவிரிக் கரையில் சாத்தனூர் என்னும் ஓரிடம் இருந்தது. அங்கு ஆநிரை மேய்ப்பவனாகிய

மூலன் என்பானைப் பாம்பு கடிக்க அவன் இறந்தான்; அதனால் சுற்றி நின்ற பசுக்கூட்டங்கள் வருந்தின. யோகியார் இதனைக் கண்டு ஆவின் துயர் நீக்கக் கருதித் தம்முடலை ஓரிடத்து வைத்து விட்டு, இறந்தவன் உடலில் புகுந்து அவனை உயிர்பெறச் செய்தார். ஆநிரைகளை அவற்றின் இல்லம் சேர்த்தார்.

மூலன் இல்லத்திற்கு அவர் செல்லாததால் மூலனின் மனைவி தேடி வந்தாள். இவர்க்கு ஏதோ தீங்கு நேர்ந்தது என்னும் அச்சம் கொண்டாள். தொட வந்த அவளிடம் 'இங்கு உனக்கு என்னுடன் தொடர்பு இல்லை' என்று மறுத்து விட்டார். பொது மடம் சார்ந்த ஊரார் மூலன் மனைவியிடம் குறைவற்ற யோக நிலையில் இவர் உள்ளார் என்றும், சீவன் முத்தராய் விளங்கு கிறார் என்றும், முன்னைப் போல் கூடார் என்றும் கூறினர். அவள் துன்பமுற்று அங்கிருந்து அகன்றாள்.

யோகியார் ஆநிரை வந்த வழியே சென்று முன்பு மறைத்து வைத்திருந்த தம் உடலைத் தேடினார். அது கிடைக்கவில்லை. பின், இறைவன் சித்தம் இஃது என உணர்ந்து, திருவாவடுதுறை அடைந்தார். அங்கு எழுந்தருளியிருந்த இறைவனை வணங்கித் திருக்கோயிலின் மேற்குப் பகுதியில் இருந்த அரசமரத்தடியில் யோகத்தில் ஆழ்ந்தார். பரம்பொருளை உணர்ந்தார். பிறவி என்னும் தொடர்பிணி அறும்வகையில் சரியை, கிரியை; யோகம், ஞானம் என்னும் நான்கு நெறிகளை விளக்கும் திருமந்திர மாலை யினைப் பாடத் தொடங்கினார். சிவனைப் போற்றி 'ஒன்றவன் தானே' எனத் தொடங்கி ஆண்டுக்கு ஒரு பாடலாகத் 'தமிழ் மூவாயிரம்' பாடியருளினார். பின் இறையருளால் கயிலை சென்று சிவனோடு ஒன்று கலந்தார்.

சேக்கிழார் திருமூல நாயனார் வரலாற்றையும், திருவாவடு துறையில் நூல் தோன்றியமையையும் இவ்வாறு விளக்கியுள்ளார்!

திருமந்திரத்தில் திருமூலரின் வாயிலாகவும் நூலின் தோற்றம் குறித்து அறிய முடிகிறது. கயிலையிலிருந்து தெற்கு நோக்கி வந்த திருமூலர், 'சிவபெருமான் சீவர்களைப் பக்குவம் செய்யும் பொருட்டு எழுந்தருளியிருக்கும் வீணாத் தண்டில் பொருந்தி யிருப்பவள் சக்தி; அவள் திருவடியில் சேர்ந்திருந்தேன்' [12] என்று கூறுகிறார். அப்போது,

சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவ னாவடு தண்டுறை [13]

என்று குறிப்பது கருதத்தக்கது. 'ஆவடுதண்டுறை' என்பது திருமந்திரம் தோன்றிய திருவாவடுதுறை என்னும் திருத்தலம்.

இவ்வாறு திருவாவடுதுறையில் 'சிவபோதியின் நீழலில்' திருமூலர் யோகத்தில் அமர்ந்திருந்தார். அங்கு,

நான் பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம் [14]

என்று கருதி, நந்தியம்பெருமான் திருவருளினால் தான் பெற்ற சிவானந்த இன்பத்தை மூவாயிரந் தமிழ்ப் பாக்களாகப் பாடி யருளினார் திருமூலர்.

திருமூலர் பாடியவை

திருமூலர் பாடியது திருமந்திரம் ஒன்றே; 'மூலன் உரை செய்த மூவாயிரந் தமிழ்' [15] என்பதால் அவர் பாடிய பாடல்களின் தொகை மூவாயிரம் என்பதும் பெறப்படுகிறது. இப்பாடல்கள் மட்டுமே பத்தாம் திருமுறையில் இடம் பெற்றிருக்கின்றன. எனவே திருமந்திரம் தவிர வேறு எந்த நூலையும் திருமூலர் பாடவில்லை எனலாம்.

ஆயினும் தமிழறிஞர்கள் சிலர் வேறு சில கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். அவற்றை ஈண்டுத் தொகுத்துக் காணல் நன்று.

> "இவர் அருளிச் செய்ததாகக் கூறப்படும் 'எண்ணாயிரம்' என்னும் நூல் தற்போது கிடைக்கவில்லை" [16]

என்கிறார் க. வேங்கடேசன். இதனை,

> "யோக நெறி பற்றியும் சக்கரங்களைப் பற்றியும், மருத்துவம் பற்றியும் மிக விரிவாக— ஆனால் மறைவாகக் கூறும் திருமூலர் பாடியன 8000 என்ற குறிப்பினை இராமலிங்க சுவாமிகள் தருகின்றார்" [17]

என்னும் கருத்தோடு ஒப்பு நோக்கலாம். கா. சு. பிள்ளை,[18] சண்முகவேலன்[19] ஆகியோரும் திருமூலர் 'எண்ணாயிரம்' பாடினர் என்னும் கருத்துடையவர்களே ஆவர். இந்நூல் கிடைக்காததால் இதுபற்றி எதுவும் கூறுதற்கில்லை.

திருமந்திரத்தின் சிறப்புப் பாயிரப் பாடல் ஒன்று,

மூலன் உரைசெய்த முப்ப துபதேசம்
மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
மூலன் உரைசெய்த மூன்றுமொன் றாமே [20]

என்று வருகிறது. 'உபதேசம் முப்பது', 'மந்திரம் முந்நூறு', 'தமிழ் மூவாயிரம்' என்று மூன்று நூல்களைப் பாடினாரோ திருமூலர் என்னும் ஐயத்தை இப்பாடல் ஏற்படுத்துகிறது. திருமூலர் திருமந்திரம் தவிர ஏனைய நூல் எதுவும் பாடியதாகச் சேக்கிழார் தம் பெரியபுராணத்தில் குறிப்பிடவில்லை. எனவே, திருமூலர் மேற்கண்டவாறு மூன்று நூல்களை இயற்றவில்லை எனலாம்.

> ''முதல் தந்திரத்தில் 'உபதேசம்' என்னும் தலைப்பில் முப்பது பாடல்கள் காணப்படுகின்றன. இதனை 'உபதேசம் முப்பது' எனக் கொள்ளலாம். நான்காம் தந்திரத்தில் காணப்படும் திருவம்பலச் சக்கரம், திரிபுரைச் சக்கரம், வயிரவி மந்திரம், ஏரொளிச் சக்கரம், வயிரவச் சக்கரம், சாம்பவி மண்டலச் சக்கரம், புவனாபதிச் சக்கரம், நவாக்கரிச் சக்கரம் முதலியன மந்திரத்தை அடிப்படையாகக் கொண்டன. எனவே, இவற்றில் முந்நூறு பாடல்களுக்கு 'மந்திரம் முந்நூறு' எனக் கொள்ளலாம். இடையே நேர்ந்த இடைச் செருகல் முதலியன வற்றால் அவை சிதைந்திருக்கலாம். விசுவநாதப் பிள்ளை பதிப்பில் இம்முந்நூறு பாடல்களைத் திரட்ட முயன்று உள்ளார். இம்முப்பதும், முந்நூறும் போக எஞ்சியவையே 'மூவாயிரந் தமிழ்' என்ற பெயரில் குறித்திருத்தல் வேண்டும். 'மூலன் உரைசெய்த மூன்றும் ஒன்றுமாமே' எனவரும் அடியைக் கூர்ந்து நோக்கின் இத்திருமந்திர மாலையிலேயே மேற்கண்டவண்ணம் மூன்றும் அடங்கியுள்ளன என்பதைத் தக்க சான்றுகள் கிடைக்கும்வரை ஏற்றுக்கொள்வது பொருந்தும்'' [21]

என்னும் கருத்துரை திருமூலர் செய்தது திருமந்திரம் ஒன்றே என்பதை உறுதி செய்கிறது.

திருமூலர் பெயரில் வழங்கும் நூல்கள் பல உள்ளன. அவை யாவன:

1. திருமூலர் தத்துவக் கட்டளை (உரை நடை)
2. திருமூலர் தியானக் குறிப்பு (28 பாடல்கள்)
3. திருமூல தேவர் வாலை பஞ்சாக்ஷர விளக்கம் (20 பாடல் கள்)
4. திருமூலர் வைத்தியம் (102 பாடல்கள்)
5. திருமூலர் வைத்தியமுறை வசனம் (உரை நடை)
6. திருமூலர் சொச்சச் சூத்திரம் (33 பாடல்கள்)

7. திருமூலர் தண்டகம் (98 பாடல்கள்)
8. திருமந்திரச் சூத்திரம் 200
9. திருமூலர் நாடிச் சூத்திரம்
10. திருமூலர் வாகடம் (25 பாடல்கள்)
11. திருமூலர் வாலை
12. திருமூலர் எட்டு (எட்டுப் பாடல்கள்)
13. திருமூலர் வைத்தியம் 600
14. திருமூலர் கவுன நூல்
15, திருமூலர் குளிகை முறை 50
16. திருமூலர் பூரண மாலை
17. திருமூலர் சூத்திரத்திரட்டு (13 பாடல்கள்)
18. திருமூலர் கற்ப முறை 500 (360 பாடல்கள்)
19. திருமூல நாயனார் வாத சூத்திரம் 300
20. திருமூல நாயனார் நிகண்டு 300
21. திருமூலர் குருமுறை
22. திருமூலர் ஞானம் (11 பாடல்கள்)
23. திருமூலர் கருக்கிடை தொள்ளாயிரம்
24. திருமூலர் ஆயிரம்
25. திருமூலர் கருமானச் சுருக்கம் [22]

திருமூலர் பெயரால் வெளிவந்துள்ள நூல்களும், குறிப்பிடப் பெறும் நூல்களும் இங்ஙனம் பலவாக உள்ளன. இவற்றுள் எதனையும் திருமூலர் செய்யவில்லை எனலாம். 'திருமந்திரம்' ஒன்றே திருமூலர் இயற்றியது ஆகும்.

நூலமைப்பு

சைவ சித்தாந்தச் சாத்திரங்கள் தோன்றுவதற்கு ஊற்றுக் கண்ணாக விளங்குவது திருமந்திரம். கயிலாய பரம்பரையைச் சேர்ந்த வினையின் நீங்கிய முனைவனாகிய திருமூலரின் விளங்கிய அறிவில் தோன்றிய நூல் அது.

பன்னிரு திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் தனித்தன்மை வாய்ந்தது. ஏனையவை ஆன்மீக நெறியில் ஆழ்ந்த அடியவர்களின் பக்திப் பனுவல்கள். ஆனால் திருமந்திரம் ஆன்மீகத்தோடு தத்துவ சாத்திர நூலாகத் திகழ்வது. மற்றவற்றைக் காட்டிலும் காலத்தால் முந்தையது.

திருமந்திரம் ஒன்பது தந்திரங்களைக் கொண்டது; 232 அதிகாரங்களில் அமைந்தது; இடைச் செருகல்களோடு மொத்தம் 3071 பாடல்களைப் பெற்றது. வரதராஜன் பதிப்பில் 3047 பாடல்கள் உள்ளன.

திருமந்திரம்

இறையுணர்வு நூல்கள் இருவகைப்படும். ஒன்று, இறைவன் புகழ் கூறும் 'புகழ்நூல்' அல்லது 'தோத்திரம்'; மற்றது, இறை, உயிர், தளை ஆகியவற்றின் இயல்பு கூறும் 'பொருள்நூல்' அல்லது 'சாத்திரம்'. தமிழில் புகழ்நூல்கள் 'திருமுறை' எனவும், பொருள்நூல்கள் 'சித்தாந்த சாத்திரம்' எனவும் வழங்கப்படுகின்றன. திருமுறைகள் பன்னிரண்டு; மெய்கண்ட மறையாகிய சாத்திரங்கள் பதினான்கு.

சிவபெருமான் தன்னை உணர்ந்தவர்கட்கு மந்திரம், தந்திரம், உபதேசம் முதலியவற்றை அருளுவான். இம்மூன்றும் அடங்கியது ஆகமம். திருமூலரின் திருமந்திரமும் ஓர் ஆகமம் ஆகும்.

ஆகும் அனாதி கலையா கமவேதம்
ஆகுமத் தந்திர மந்நூல் வழிநிற்றல்
ஆகும் அனாதி யுடலல்லா மந்திரம்
ஆகும் சிவபோ தகம்உப தேசமே[23]

என்பது திருமந்திரம்.

தந்திரக்கலை அல்லது கருமகாண்டமாவது நாள்தோறும் செய்யப்படுவனவாகிய கடமைகளை வகுப்பது; மந்திரக்கலை அல்லது உபாசனா காண்டமாவது, கருமகாண்டத்தில் வகுக்கப்பட்ட கடமைகளை மேற்கொண்டு செய்யும் முறைகளைக் கூறுவது; மனம் முதலியவற்றை அடக்கித் தெய்வ வழிபாடு மேற்கொள்வதைக் கூறுவது; உபதேசக்கலை அல்லது ஞான காண்டமாவது இறைவனது இயல்புகளையும், உயிரின் இயல்புகளையும், பாசம் முதலியவற்றின் இயல்புகளையும் அறிவது.[24] சிவஞான சித்தியாரின் இந்த விளக்கம் திருமந்திரத்திற்குப் பொருந்துவதாகும்.

திருமூலர் தம் நூலில் ஒன்பது ஆகமங்களைக் குறிப்பிடுகிறார். அவை சிவன் அருளிய இருபத்தெட்டு ஆகமங்களின் கருத்துகளை உட்கொண்டனவாகும்.

திருமந்திரம் என்னும் பெயரில் உள்ள 'திரு' என்ற சொல் 'தெய்வத்தன்மை வாய்ந்த நூல்' இது என்பதைத் தெரிவிக்கிறது.

'மந்திரம்' என்னும் சொல் பல பொருள்களை உடையது. இங்கு மந்திரம் என்பதற்கு 'மறைபொருள்' அல்லது 'மறை மொழி' என்னும் பொருள் கொள்ளலாம். தொல்காப்பியர்,

நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப [25]

என்று கூறுவது இங்கு நோக்கத்தக்கது. இதற்கு விளக்கம் தரும் பேராசிரியர்,

"சொல்லிய சொல்லின் பொருண்மை யாண்டும் குறைவின்றிப் பயக்கச் சொல்லும் ஆற்றலுடையராவார் ஆணையிற் கிளக்கப்பட்டுப் புறத்தார்க்குப் புலனாகாமல் மறைத்துச் சொல்லும் சொற்றொடரெல்லாம் மந்திரம் எனப்படும்" [26]

என்று கூறுவர். பரிமேலழகர்,

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் [27]

என்னும் திருக்குறளுக்கு உரை கூறும்போது,

"அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தே விடும் மொழி... நிறைமொழி மாந்தராவார் இரு வகைப் பற்றுக்களையும் நீக்கி ஐந்து புலன்களையும் அடக்கி எவ்வுயிர்க்கும் அருளுடையராய் வாழும் பெரியோர்... ஆணையிற் கிளத்தலாவது இஃதிவ்வாறு ஆகுக எனத் தமது ஆற்றல் தோன்றச் செய்தல்" [28]

என்னும் விளக்கங்களைத் தருவர். இவற்றான் மந்திரம் என்னும் சொல்லுக்கு 'மறைமொழி' என்பதே ஏற்ற பொருள் என்று கொள்ளலாம்.

ஆகமங்கள்—9 தந்திரங்கள்—9

திருமந்திரம் 'தமிழ் ஆகமம்' ஆகும். இது முன்னர் இருந்த ஒன்பது ஆகமங்களின் சாரமாகும். இதனை,

பெற்றநல் ஆகமங் காரணங் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சிந்தியம் வாதுளம்
மற்றவ் வியாமள மாகுங்கா லோத்தரந்
துற்றநற் சுப்பிரஞ் சொல்லு மகுடமே [29]

என்னும் திருமந்திரப் பாடல் தொகுத்துரைக்கிறது.

இப்பாடலில் கூறப்பெற்றுள்ள காரணம் முதல் மகுடம் வரையுள்ள ஒன்பது ஆகமங்களின் சாரமும் திருமந்திரத்தின் ஒன்பது தந்திரங்களில் இடம்பெற்றுள்ள.

முதல் தந்திரம்	—	காரண ஆகமம்
இரண்டாம் தந்திரம்	—	காமிக ஆகமம்
மூன்றாம் தந்திரம்	—	வீர ஆகமம்
நான்காம் தந்திரம்	—	சிந்தியாகமம்
ஐந்தாம் தந்திரம்	—	வாதுள ஆகமம்
ஆறாம் தந்திரம்	—	வியாமள ஆகமம்
ஏழாம் தந்திரம்	—	காலோத்தர ஆகமம்
எட்டாம் தந்திரம்	—	சுப்பிரபேத ஆகமம்
ஒன்பதாம் தந்திரம்	—	மகுட ஆகமம்

இவற்றுள் காரணம், காமிகம், சிந்தியம், சுப்பிரம் என்பன சிவபேதம் என்றும்; வீரம், வாதுளம், காலோத்தரம், மகுடம் என்பன உருத்திர பேதம் என்றும்; யாமளம் தந்திர சாத்திரம் என்றும் கூறப்பெறும்.

ஆகமங்கள் ஒன்பதும் தந்திரங்கள் ஒன்பதில் அடங்குமாற்றை அறிஞர் பலர் விளக்கிக் கூறியுள்ளனர். அவற்றுள் ஒன்று:

''முதல் தந்திரம் காரணாகமத்தை அடிப்படையாகக் கொண்டது. யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, கொல்லாமை, புலால் மறுத்தல், அன்புடைமை, கல்வி, கேள்வி, கல்லாமை, நடுவுநிலைமை, கள்ளுண்ணாமை முதலிய பலவற்றைப் பற்றிக் கூறுகிறது.

''காமிகாமகத்தின் அடிப்படையில் அமைந்த இரண்டாந் தந்திரம் புராணக் கதைகள், இறைவனின் ஐந்தொழில்கள், விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர், திருக்கோயில், தீர்த்தம், சிவநிந்தை, குருநிந்தை, அடியார் நிந்தை, பெரியோரைத் துணைக்கோடல் முதலிய பலவற்றைப்பற்றிக் கூறுகிறது.

''மூன்றாம் தந்திரம் (வீராகமம்) அட்டாங்க யோகம், அட்டமாசித்தி, கலைநிலை, காலச் சக்கரம், கேசரி யோகம், பரியங்க யோகம், அமுரிதாரணை, சந்திரயோகம் போன்றவற்றை விளக்குகிறது. இதனை யோகநூல் பகுதி என்றே குறிக்கலாம்.

''நான்காந் தந்திரம் (சிந்தாகமம்) மந்திரங்கள், உபாசனைகள், சக்கரங்கள், ஆதார ஆதேயங்கள் முதலியவற்றைக் கூறுகிறது.

''வாதுளாகமத்தின் அடிப்படையிலமைந்த ஐந்தாம் தந்திரம் சைவத்தின் பலவகைகள், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நெறிகள், சன்மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், தாசமார்க்கம் என்னும் நான்கு முறைகள், நால்வகை முத்திகளாகிய சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம், மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என நால் வகையில் அமைந்த சத்திநிபாதம் ஆகிய பலவற்றைப் பற்றிப் பேசுகிறது.

''ஆறாந் தந்திரம் (வியாமளாகமம்) சிவகுரு தரிசனம், ஞானம், துறவு, தவம் முதலியவற்றைப் பற்றியும், அவற்றோடு தொடர்புடையவற்றைப் பற்றியும் கூறுகிறது. திரிபுடி ஞானம், அதாவது அறிவான், அறியும் பொருள், அறிவு என்பதனை அது குறிப்பிடுகிறது. திருநீற்றின் பெருமை யையும் அது விளக்குகிறது.

''காலோத்தராகமத்தைத் தழுவி எழுந்த ஏழாம் தந்திரம் ஆறு அத்துவாக்கள், அண்டம், பிண்டம், சதாசிவம், ஆத்மா, ஞானம், சிவம் என்னும் ஆறு லிங்கங்கள், திருவருள், சிவபூசை, அடியார் பூசை, குருபூசை, அடியார் பெருமை ஆகியவற்றைப் பற்றி எடுத்துரைக்கிறது. சமாதியைப் பற்றியும், பசுவிலக்கணத்தைப் பற்றியும், ஐம்பொறிகளை அடக்கும் முறைபற்றியும் கூட எடுத்துரைக்கிறது.

''எட்டாந் தத்திரம் (சுப்பிராகமம்) உடலமைப்பு, அவத்தை பேதம், முக்குணங்கள், தத், துவம், அசி என்னும் மூன்று சொற்களின் விளக்கம், மூன்று துரியங்கள் முதலியவற்றை விளக்குகிறது.

''ஒன்பதாவதும், மகுடாகமத்தை ஒட்டி எழுதப்பட்டதும் ஆகிய கடைசித் தந்திரம் குரு, குருதரிசனம், சமாதி ஐந்தெழுத்து (தூலம், சூக்குமம், அதிசூக்குமம்), இறைவனின் கூத்து, ஞானோதயம், சிவ சொரூப தரிசனம், மறை பொருட் கூற்று, மோனசமாதி, அணைந்தோர் தன்மை, இறைவனின் பெருமை முதலியவற்றைப் பேசுகின்றது'' [30]

என்று திருமந்திரத்திலுள்ள ஒன்பது தந்திரங்களும் ஒன்பது ஆகமங்களின் சாரமாகத் திகழும் பாங்கினை டி. பி. சித்தலிங்கம் விளக்கியுள்ளார்.

திருமூலர் வரலாறு — காலம்

திருமூலரின் வரலாறும் கால வரையறையும் கருத்து வேறுபாடுகளுக்கு உரியன. எண்ணற்ற ஆய்வாளர்கள் இவற்றில் முனைந்து உண்மை அறிய முயன்றும் இன்னும் தெளிவு பிறக்கவில்லை.

திருமூலர் மரபு

சித்தர் கணத்துள் முதலாமவராகக் கருதப்படுபவர் திருமூலர். இவர்தம் குருமரபு 'குரு பாரம்பரியம்' என்னும் பாயிரப் பகுதியில் கூறப்படுகிறது.

திருமூலர் கயிலாய மரபில் வந்தவர். கயிலையில் சிவநாத சித்தர்கள் எண்மர் இருந்தனர். பிறவி நீக்கமாகிய பெரும் பேற்றினைக் கயிலைநாதன் சாத்திரமாக அருள, அதனை இந்த எண்மரும் ஒருவரையடுத்து ஒருவராக அறிந்த முறையே கயிலை மரபு அல்லது கயிலாய பரம்பரை ஆகும்.

> ''கயிலை மரபு என்பது கயிலைநாதராகிய சிவன் சக்திக்குச் சாத்திர முறையை அருள, சக்தி நந்தி தேவருக்கு அருள, நந்திதேவர் சனற்குமாரர் முதலியவர்களுக்கு அருள, அவர்கள் அதனைச் சத்தியஞான தரிசினிகளுக்கு அருள, அவர் அதனைப் பரஞ்சோதி முனிவருக்கு அருள, அவர் அதை மெய்கண்ட தேவர்க்கு அருள— இங்ஙனமாக வந்த பரம்பரை ஆகும்'' [31]

— இது கயிலை மரபு வந்த வழி.

சிவபெருமானிடம் உபதேசம் பெற்ற குருநாதர்கள் எண்மர் பற்றி,

> நந்தி அருள் பெற்ற நாதரை நாடின்
> நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
> மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
> என்றிவர் என்னோ டெண்மரு மாமே [32]

என்னும் திருமந்திரப் பாடல் தெரிவிக்கிறது. சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரர், சிவயோக மாமுனிவர், பதஞ்சலி, வியாக்ரபாதர், திருமூலர் ஆகிய இவ்வெண்மரும் கயிலை மரபைச் சேர்ந்தவர்கள்; நந்தியாகிய கயிலை நாதனது— சிவபெருமானது— அருள் பெற்ற நாதர்கள்.

இந்த எண்மருள் சனகாதி நால்வருக்கு அருளிச் செய்தது உலகை விட்ட துறவு நெறி; சிவயோக முனிவர், பதஞ்சலி, வியாக்ரபாதர் ஆகிய மூவருக்கு அருளிச் செய்தது உலகுடன் இருந்து உலகுக்கு அருளும் நெறி. இந்த இருநெறிகளையும் இணைப்பதே திருமூலர் உணர்த்திய நெறி. அனைத்து நெறிகளும் பிறவி நீக்கத்துக்கு வழிகாட்டுவன.

திருமூலர் நெறி அவரோடு முடிவு பெறவில்லை. அவர் வழி முறையாக மேலும் எழுவர் அவருக்கு மாணாக்கராக அமைந் தனர். அவர்கள்,

> மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
> இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
> கந்துருக் காலாங்கி கஞ்ச மலையனோ
> டிந்த எழுவரும் என்வழி யாமே [33]

என்னும் திருமந்திரப் பாடலால் குறிக்கப் பெறுகின்றனர். மாலாங்கன், இந்திரன், சோமன், உருத்திரன், பிரமன், காலாங்கி, கஞ்சமலையோன் ஆகிய இவ்வெழுவரும் திருமூலருக்குப் பின் அம்மரபில் வந்தவர்கள் ஆவர். இவ்வெழுவருக்குப் பின்னரும் இம்மரபு நீடித்தது என்பதை அறிய முடிகிறது. போகர், கொங்கணர் முதலானோர் இம்மரபினராகவே தங்களைக் கருது கின்றனர். சான்றாக,

> ''வாதம் பற்றிய ரகசியத்தைச் சிவன் சக்திக்குச் சொல்ல, சக்தி நந்திக்குச் சொல்ல, நந்தி திருமூலருக்குச் சொல்ல, திருமூலர் காலாங்கிக்குச் சொல்ல, காலாங்கி எனக்குச் (போகர்) சொன்னார்'' [34]

என்றும்,

> ''சிவன் ஏழு லட்சம் கிரந்தத்தைத் தேவிக்கு உபதேசிக்க, தேவி நந்திக்குச் சொல்ல, நந்தி மூலருக்குச் சொல்ல, மூலர் போகருக்கும், போகர் கொங்கணருக்கும் சொன்னார்'' [35]

என்றும் வருவன இதனை உறுதிப்படுத்தும்.

ஒருசேர அருள்பெற்றவர்கள் பதஞ்சலியும் திருமூலரும் ஆவர். இவருள் பதஞ்சலி வடபாலும், திருமூலர் தென்திசையிலும் தம் நெறிகளை எடுத்துரைத்தனர்.

தமிழக வரவு

திருமூலர் கயிலை மரபினர் என்பதனால் அவர் வட நாட்டினரோ என்னும் ஐயம் எழுகிறது. இங்கு,

> ''கயிலை வழி என்பதைக் கயிலையினின்று வந்தவர் என்பதைக் காட்டிலும் கயிலை மரபில் வந்தவர் என்று கொள்வதே பொருத்தமாகும். எனினும் வடக்கினின்று வந்தவர் என்பதில் ஐயமில்லை. ஆயினும் வட இந்தியாவையே பிறப்பிடமாகக் கொண்டவர் என்பதற்குச் சான்று களில்லை'' [36]

என்னும் கருத்து நினைவிற் கொள்ளத்தக்கது. இவர் பிறப்பால் தமிழர் என்று கருதுவர் இரா. மாணிக்கவாசகம். [37]

> ''திருமூலரின் தாய் பள்ளர் சாதியைச் சேர்ந்தவள். தந்தையோ ஒரு ரிஷி'' [38]

என்கிறது போகர் ஏழாயிரம் என்னும் நூல். இதற்கு வேறு ஆதாரம் இல்லை.

இயற்பெயர்

திருமூலரின் இயற்பெயர் யாதென அறிய முடியவில்லை. பெரியபுராணத்துள் இவர் திருமூலர் என்று குறிக்கப் பெற்றாரே அன்றி இயற்பெயரால் சுட்டப் பெறவில்லை.

தற்சிறப்புப் பாயிரத்துள் ஒன்று,

> **தந்திரம் ஒன்பது சார்புமு வாயிரம்**
> **சுந்தரன் ஆகமச் சொன்மொழிந் தானே** [39]

என்கிறது. இவ்வடிகளை ஆதாரமாகக் கொண்டு திருமூலரின் இயற்பெயர் சுந்தரநாதன் என்றும், மூலன் எனும் இடையனது உடம்பினுள் புகுந்தபின் திருமூலர் என்னும் பெயர் பெற்றார் என்றும் கருதுவர். மேலும்,

> **மந்திரம் கொண்டு வழிபடு வோர்க்குச்**
> **சுந்தர நாதன் சொல்லிய மந்திரம்** [40]

என்பதனால் அவர் சுந்தரநாதன் என்னும் பெயருடன் விளங்கிய காலத்துச் செய்தது திருமந்திரம் என்று குறிப்பிடுவர் லெ. ப. கரு. இராமநாதன். [41] இது பொருந்துமாறில்லை.

கண்ணப்பரது இளமை வரலாற்றைக் கூறும் சேக்கிழார், திண்ணன் என்னும் அவரது இயற்பெயரை வெளிப்பட வரைந்து செல்வர்; அவ்வாறிருக்க, திருமூலரின் இயற்பெயர் சுந்தரநாதன்

என்பதானால் சேக்கிழார் அதனைக் குறிப்பிடாமல் இரார் என்பது உறுதி.

'சுந்தரன் ஆகமம் சொல் மொழிந்தானே' என்பதற்குத் 'திருமூலர் சுந்தரனாகிய சிவபெருமான் அளிருய ஆகமக் கருத்தைத் தமிழ்ச் செயற்களால் கூறினார்' என்பது பொருளாகும். 'சுந்தரநாதன் சொல்லிய மந்திரம்' என்னும் தொடரும் சுந்தர நாதன் (சொக்கநாதன்) ஆகிய சிவபெருமான் அருளிய மந்திரம் என்றே பொருள் தருகிறது. எனவே இத்தொடர்களை அடிப்படையாகக் கொண்டு திருமூலரின் இயற்பெயர் சுந்தர நாதன் என்று கூறுதல் பொருந்துவதன்று.

திருமூலரின் காலம்

திருமூலரின் காலத்தை வரையறுப்பதில் அறிஞர்களிடையே கருத்து ஒற்றுமை இல்லை. கி.மு. 6000 தொடங்கிக் கி.பி. 900 வரை வெவ்வேறு ஆசிரியர்களால் திருமூலரின் காலம் குறிக்கப் பெற்றுள்ளது. இவற்றை ஆராய்ந்து உண்மை காணல் வேண்டும்.

1) கி.மு. 6000— கி.பி. 100: கழகப் பதிப்பும், திருப்பனந்தாள் பதிப்பும் வரையறுக்கும் காலம் இது.[42]

2) கி.பி. முதல் நூற்றாண்டு: சோ. சிவபாதசுந்தரம், சுரேந்திரநாத் தாஸ்குப்தா ஆகியோர் கருத்து.[43]

3) கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதி— ஆறாம் நூற்றாண்டின் தொடக்கம்: க. வெள்ளைவாரணனார் கருத்து.[44]

4) கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இடைப்பகுதி: மறைமலையடிகள், தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், மா. இராசமாணிக்கம்.[45]

5) கி.பி. 100க்குப் பின்— கி.பி. 900க்கு முன்: கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி, முதலானோர்.[46]

6) கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு: ந. சி. கந்தையா பிள்ளை, இரா. மாணிக்கவாசகம்.[47]

இவ்வாறு திருமூலரின் காலத்தை அறிஞர்கள் பல்வேறு ஆதாரங் களின் அடிப்படையில் வரையறை செய்ய முயன்றுள்ளனர். அவற்றின் வன்மை மென்மைகளை ஆய்ந்து திருமூலரின் காலத்தை வரையறை செய்ய இனி முயலலாம்:

முதற் கருத்து

திருமூலரோடு நந்தி அருள்பெற்ற குருநாதர்களுள் பதஞ்சலியும் வியாக்கிரமரும் அடங்குவர். திருமூலரின் சமகாலத்தவரான வியாக்கிரமர் இராமனின் குலகுரு வசிட்டருடைய தங்கையை மணந்து கொண்டவர். இந்த வியாக்கிரமருடைய மகன் உபமன்யு. இராமனுடைய காலம் கி.மு. 6000. எனவே, திருமுலர் காலமும் அதுவே. மேலும், திருமந்திரம் 51 எழுத்துக்களைப் பற்றிக் (திரு. 943, 944, 949) குறிப்பிடுகிறது. 35 மெய்யெழுத்துக்களும், 16 உயிரெழுத்துக்களும் சேர்ந்து 51 எழுத்துக்கள் வட்டெழுத்துக் காலத்தில் வழங்கின. அது கி. மு. 6000 வரையிலான இடைச்சங்க காலம். எனவே திருமூலர் இக்காலத்தைச் சேர்ந்தவர். திருக்குறளிலும் திருமந்திரத்திலும் ஒற்றுமைகள் பல காணப்படுகின்றன. திருக்குறளின் காலம் கி.மு. 75 முதல் கி.மு. 36 வரை. எனவே, திருமூலர் கி.மு. 6000 முதல் கி. மு. 100 வரை வாழ்ந்தவராகலாம்.

மறுப்பு

ஆண்டுக்கொரு பாடலென மூவாயிரம் பாடல்களை இயற்றியவர் திருமூலர் என்னும் கருத்தின் அடிப்படையில் அவரது காலத்தை மிக நீண்ட இடைவெளியாக ஏறத்தாழ ஆறாயிரம் ஆண்டுகளாகக் குறிப்பிடுவது பொருந்தாது. சித்தர்கள் உடம்பையும் உயிரையும் நீண்ட காலம் போற்றி வளர்க்கக் கூடியவர்களே என்றாலும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் அவர்கள் வாழ்ந்தவர்கள் என்று கொள்ள இயலாது. புராணக் கற்பனை அடிப்படையிலான இக்கால வரையறை இன்றைய ஆய்வுலகம் ஏற்றுக் கொள்ளத் தக்கதன்று.

இரண்டாம் கருத்து

தேவார ஆசிரியர்களுக்குக் காலத்தால் முற்பட்டவர் திருமூலர் என்பதாலும், கடைச்சங்க காலத்தை ஒட்டி அவர் வாழ்ந்தவர் ஆதல் வேண்டும் என்பதாலும் திருமூலர் காலத்தைக் கி.பி. முதல் நூற்றாண்டு என்று குறிப்பர்.

மறுப்பு

இக்கருத்துடையோர் தக்க காரணங்களைக் காட்டித் திருமூலர் காலத்தை வரையறை செய்யாமல் மேற்போக்காகவே கூறிச் சென்றுள்ளனர். எனவே இக்கருத்தும் ஏற்பதற்கில்லை.

மூன்றாம் கருத்து

க. வெள்ளைவாரணனார் திருமூலரின் காலத்தைக் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதி— ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதி என்று ஆய்ந்து கூறுவர். இவர் காட்டும் ஆதாரங்கள்:

1) சுந்தரர் திருமூலரைப் பெயர் குறித்துப் போற்றி யிருத்தலாலும், தேவார மூவர் பாடல்களில் திருமந்திரச் சொற்றொடர்களும் பொருட் கூறுகளும் எடுத்தாளப்பட்டிருத்தலாலும் திருமூலரது காலம் கி. பி. 7ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டது. இது மேலெல்லை.

2) திருமூலர் தம் நூலில் பதினெண் மொழிகளைக் குறிப்பிடுகிறார் (திரு. 59). இப்பாகுபாடு தொல்காப்பியத்திலும் சங்க நூல்களிலும் இல்லை. எனவே, கடைச்சங்க காலத்திற்குப் (கி. பி. மூன்றாம் நூற்றாண்டிற்கு) பின்னர் வாழ்ந்தவர் திருமூலர். இது கீழெல்லை.

3) திருமூலர் தில்லைக் கோயிலைப் 'பொன்னம்பலம்' என்பர். கூத்தப் பெருமான் ஆடும் அம்பலத்திற்கு முதன் முதல் பொன்வேய்ந்தவன் கி. பி. 5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பல்லவன் சிம்மவர்மன் ஆவன். எனவே, இதற்குப் பின்னரே இப்பாடல் எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆதலால் திருமூலர் காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதி அல்லது ஆறாம் நூற்றாண்டின் தொடக்கம் ஆகும்.[48]

ஏற்பு

மேலே வெள்ளைவாரணனார் காட்டிய ஆதாரங்கள் அனைத்தும் பொருந்துவன. எனவே, திருமூலரின் காலம் இவர் கூறுமாறு கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதி அல்லது ஆறாம் நூற்றாண்டின் தொடக்கம் எனலாம்.

நான்காம் கருத்து

மாணிக்கவாசகர் காலம் பற்றி ஆராய்ந்த மறைமலையடிகள் திருமூலரைப் பற்றிக் குறிப்பிடும்போது,

> ''திருஞானசம்பந்தர் திருவாவடுதுறை சென்றதாகவும் அக்கோவில் கொடி மரத்தின் அருகில் புனிதமணம் வீசிய தனால் சம்பந்தர் கொடி மரத்தின் கீழ் தோண்டிப் பார்த்த போது திருமந்திரப் பாடல்கள் அடங்கிய ஏடுகள் கிடைத்தன என்றும், அதன் அருமை தெரிந்து அவ்வேடுகளை வெளிக் கொணர்ந்தார் என்றும் கூறுவர்''[49]

என்கிறார். இதனடிப்படையின் திருமூலரின் காலம் ஆறாம் நூற்றாண்டின் இடைக்காலமாகும் என்று முடிவு கட்டுகிறார் அடிகள்.

> ''திருமந்திரத்தின் ஆசிரியராகிய திருமூலர் பல்லவர் காலத்தின் தொடக்கத்தில் வாழ்ந்திருந்தார்'' [50]

என்று கூறும் மா. இராசமாணிக்கனாரும் அதே கால எல்லையைக் குறிக்கின்றார்.

மறுப்பு

இவ்விருவர் கருத்துகளும் முந்தைய கருத்துக்கு மிகவும் அணுக்கமானவை. எனினும், சம்பந்தர் திருமந்திர ஓலைகளைக் கண்டெடுத்த வரலாறு நினைக்கத்தக்கது. திருமந்திர ஏடுகள் சம்பந்தருக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னர்ப் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கொண்டால் திருமூலரின் காலம் ஆறாம் நூற்றாண்டின் இடைக்காலம் ஆகாது; எனவே, வெள்ளை வாரணனார் கருத்தே பொருத்தமுடையதாகிறது.

சம்பந்தருக்கு மிகக் குறுகிய கால முன்னர் ஏடுகள் கொடி மரத்தின் கீழ் புதைக்கப்பட்டிருக்குமானால் வேறு எவரேனும் அதனை எடுத்திருப்பர் என்பதும் கருதத்தக்கது.

ஐந்தாம் கருத்து

கி. பி. 100க்குப் பின்— கி. பி. 900க்கு முன் என்னும் இக் கருத்தில் தெளிவில்லை.

திருமந்திரம் பத்தாம் திருமுறையாகத் திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகியவற்றிற்குப் பின்னர் வைக்கப்பட்டிருத்தலால் அந்த வரிசை முறையைக் கொண்டு மாணிக்கவாசகர் காலமாகிய 8ஆம் நூற்றாண்டினை அடுத்த ஒன்பதாம் நூற்றாண்டினைத் திருமூலர் காலமாக இக்கருத்தினர் நினைத்தனர் போலும்.

மறுப்பு

க. வெள்ளைவாரணனார் கருத்தாக முன்னர்க் கூறிய மேலெல்லை, கீழெல்லை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டால் திருமூலரின் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்கும் கி. பி. மூன்றாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டதாக அமையும். அதுவே முறையானதும் கூட. ஆதலால் இந்த ஐந்தாம் கருத்து ஏற்புடையதாக ஆகாது.

ஆறாம் கருத்து

திருமூலரின் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு என்னும் கருத்துடைய அறிஞர்கள் இரு கருத்துகளை முன் வைக்கின்றனர்.

1) சிம்மவர்மன் (550 — 575) தில்லைக் குளத்தில் குளித்தவுடன் தன் சருமநோய் நீங்கி 'இரணிய வர்மன்' (பொன் நிறமுடையவன்) ஆனான். அங்குப் பதஞ்சலி, வியாக்கிரபாதர் முதலியோர் தங்கி வழிபாடு செய்தல் கண்டு குளத்தைப் புதுப்பித்தான்; கோயிலும் எழுப்பினான்.

2) 'தமிழ் மண்டலம் ஐந்தும்'[51] என்னும் திருமந்திரப் பாடல் குறிப்பிடும் ஐந்து மண்டலங்கள் கி. பி. நான்காம் நூற்றாண்டில்தான் பிரிக்கப்பட்டன.[52] எனவே திருமூலர் காலம் கி. பி 5ஆம் நூற்றாண்டு.[53]

மறுப்பு

முதல் கருத்துப்படி திருமூலரின் காலம் ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகிறது; இரண்டாம் கருத்துப்படி ஐந்தாம் நூற்றாண்டாகிறது. எனவே இது முரண்பாடானது.

மேலே கூறிய அனைத்துக் கருத்துகளையும் நுணுகி ஆராய்ந்து நோக்கும்போது திருமூலரின் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியும் ஆறாம் நூற்றாண்டின் தொடக்கமும் ஆகும் என்று முடிவுக்கு வரலாம்.

திருமூலரின் சிறப்பு

திருமூலர் மேற்கொண்ட யோகத்தின் மேன்மை

திருமூலர் திருவாவடுதுறை என்னும் தலத்தில் அரச மரத்தடியில் பல்லாண்டுகள் யோகநிலையில் ஒன்றியிருந்தார் என்பது அறிஞர் அனைவரும ஒப்புக்கொண்ட முடிபாகும்.

திருமூலர் மேற்கொண்ட யோகம் ஒப்பற்ற தன்மையது; மிக மேன்மையானது. பாயிரப் பகுதியிலமைந்த திருமூலர் வரலாறு என்னும் பிரிவு அவர்தம யோக மேன்மையை விரித்தோதுகிறது.

திருமூலர், சிவனது திருவடிகளைத் தலைமேற்கொண்டு யோக நிலையில் அவனை அறிவினுள் நிறுத்தி வணக்கம் செய்தார்.[54]

"சிவோபாசனை செய்வது, பக்திநெறி என்றும் ஞானநெறி என்றும் இருவகைப்படும். பக்திநெறி, உருவம் பற்றிய

வழிபாடு. இஃது அநாகதச் சக்கரத்தில் தியானம் செய்யப் படுவதாகும். ஞானநெறி உருவமற்ற சோதி வழிபாடாகும். இரு கண்கள் இறைவனது திருவடி என்பது சம்பிரதாயக் குறிப்பு ஆகும். இவற்றின் துணைகொண்டு, குரு காட்டிய நெறியில் நின்று பழகினால் நெற்றிக்கண் என்ற அறிவுக் கண் விழிக்கும். அதன் மேல் ஈசானமூர்த்தி வழிபாடு பொருந்துவதால் ''நந்தி திருவடி நான் தலைமேற்கொண்டு புந்தியினுள்ளே புகப் பெய்து போற்றி'' என்று திருமூலர் சென்ற ஞானயோக நெறியை விளக்கியுள்ளார்'' [55]

என்று ஜி. வரதராஜன் ஆசிரியரின் யோக மேன்மையைப் பற்றி நல்ல விளக்கம் தந்துள்ளார்.

யோகநிலையில் இருந்த திருமூலர், ஒப்பில்லாத ஏழு ஆதாரங்கள் விளங்குமாறு ஒளிநெறி பற்றி, உள்ளும் புறம்பும் ஒன்றுபடுத்தி, ஒளிமயமாக இருந்தார். இதனை,

> தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
> ஒப்பில் எழுகோடி யுகம்இருந் தேனே [56]

என்று திருமூலர் பாடுகிறார். யோகத்தில் நின்ற திருமூலர், எவரும் காண இயலாத சிற்சத்தியைக் கண்டு சேர்ந்து மகிழ்ந்தார். அது,

> நேரிழை யாவாள் நிரதிச யானந்தப்
> பேருடை யாள்என் பிறப்பறுத் தாண்டவள்
> சீருடை யாள்சிவ னாவடு தண்டுறை
> சீருடை யாள்பதஞ் சேர்ந்திருந் தேனே [57]

என்பதனால் அறியப்படுகிறது.

திருமூலரின் யோகநெறி மேன்மை இவற்றால் தெளிவாகிறது.

தவ வலிமை

திருமூலர் தவ வலிமை படைத்தவர்; தமிழில் திருமந்திரம் செய்யும் பேறு படைத்தமைக்கு அவர் தவ முயற்சியே முதற் காரணம்.

> பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
> முன்னைநன் றாக முயல்தவம் செய்கிலர்
> என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
> தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே [58]

என்னும் பாடல் திருமூலரின் தவ வலிமையை விளக்குகிறது. அதனால் அவர் பெற்ற பயனையும் தெரிவிக்கிறது.

> "பிற்பால் தயங்கி நின்று ஏன் பிறவியைப் பெறுகிறார்கள்? அவர்கள் முற்பிறவிகளில் நன்றாக முயன்று தவம் செய்யாதவர்களாம். நான் நல்ல தவம் செய்தமையின், தன்னைப் பற்றித் தமிழில் ஆகமம் செய்யும் வண்ணம் எனக்கு நல்ல ஞானத்தை அளித்து இறைவன் பிறவியைக் கொடுத்தருளினான்" [59]

என்பது இப்பாடலின் பொருள். தமிழில் திருமந்திரம் என்னும் ஆகம நூலை இயற்றுவதற்கான இப்பிறவி தவத்தால் விளைந்தது என்பது திருமூலர் கருத்தாகும்.

ரிஷி — முனி — சித்தர்

மூலமுதற் கடவுளின் உண்மையை அறிந்து, தம்மை வருத்தியும் தவங்கள் இயற்றியும், தனிவாழ்விலும் பொது வாழ்விலும் நன்னெறி காட்டிய சான்றாண்மை மிக்க பேரறிவாளர்கள் பலர் இந்திய நாட்டில் பன்னெடுங் காலமாக வாழ்ந்து வந்தனர். இதிகாச புராணக் காலந்தொட்டு இவர்களின் கணங்கள் பெருகி வளர்ந்து வந்தன. தொண்டாலும், செயலாலும், நோக்காலும், நெறியாலும் வெவ்வேறுபட்ட தன்மையாளர்களாக இவர்கள் விளங்கினர். அதனால் இச்சான்றோர்களை 'ரிஷி' (இருடி) என்றும், 'முனி' என்றும், 'சித்தர்' என்றும் பல்வேறு பெயரிட்டு அழைத்தனர்.

புதிய பொருள்களைக் கண்டுபிடிப்பவர்களையும், புதிய கொள்கைகளை வகுப்பவர்களையும் 'ரிஷி' என்பர்.

> "இருடி எனத் தமிழில் குறிக்கப்படும் 'ரிஷி' என்னும் சொல் 'த்ர' என்பதன் அடியாகப் பிறந்தது. சிந்தித்தறிதல் என்பது இதன் பொருள் என்றும், திருஷ்டி என்னும் சொல்லுக்கு இதுவே அடிச்சொல்லாகும் என்றும் கூறுவர். புதியனவற்றை— கொள்கையாகவும் இருக்கலாம், பொருளாகவும் இருக்கலாம்— கண்டுபிடிப்பவர்களுக்கு 'ரிஷி' என்று பெயர்" [60]

என்னும் கருத்து ஈண்டு நோக்கத்தக்கது. இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலை,

> ஈங்கிவர் நுங்குலத் திருடி கணங்கள் [61]

என்று அவர்களைக் குறிக்கிறது. ஆன்மகன் அசலன், மான்மகன் சிருங்கி, புலிமகன் விரிஞ்சி, நரிமகன் கேசகம்பளன் என்று இவ்விருடிகளின் பிறப்பை உணர்த்தும் ஆமகன் ஆபுத்திரன்

தன்னை இழித்துப் பேசிய அந்தணர்களிடம் 'இவர்கள் அனைவரும் நும் குலத்தவர்களே' என்று அறிவுறுத்துகிறான்.

'ரிஷி' என்பது வடசொல்; அது தமிழில் 'இருடி' என மாற்றம் பெற்றுக் கையாளப்படுகிறது.

'முனி' என்பது தமிழ்ச்சொல். மனிதனை உலகியலுக்கு அடிமையாகும் பொறிபுலன் ஆசை உணர்வுகளிலிருந்து நீங்கி, அவற்றை முனிந்தவர்களே 'முனிவர்கள்' ஆவர். இவர்கள் ஒரு வகையில் மக்களுக்கு நெறிகாட்டும் சமுதாய மறுமலர்ச்சியாளர்கள் எனலாம். [62]

ரிஷிகளும் முனிகளும் வெவ்வேறுபட்டவர்கள் என்று ஒரு கருத்து நிலவுகிறது:

> ''ரிஷிகள் புதியன கண்டு மக்கட் கூட்டத்திற்கு அறிமுகப் படுத்தும் தொண்டர்கள்.
>
> முனிகள், சமுதாயத்தின் பழக்கவழக்கங்களில் காணும் குறைகளை நீக்கிக் களையெடுத்து நன்னெறிப்படுத்த முயலும் தொண்டர்கள் [63]

என்பர் இரா. மாணிக்கவாசகம். ஆனால், சிலம்பிற்கு அழகான உரை எழுதிய அடியார்க்கு நல்லார் 'தேவவிருடியாகிய குறுமுனி' [64] என்று இருடி, முனி ஆகிய இரு சொற்களையும் அகத்தியரைக் குறிக்கப் பயன்படுத்துவர்.

'சித்தர்' என்பார் இவர்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவர். சித்தத்தை வென்றவர்களே சித்தர்கள் ஆவர். சித்தம் என்பது அந்தகரணங்களுள் ஒன்று. சித்தத்தின் அசைவுகளாலேயே அனைத்துத் தத்துவங்களும் தோன்றுகின்றன. எனவே இச்சித்தத்தை அடக்குவதில் சான்றோர் ஆர்வம் காட்டுவர்.

> **சித்தமல மறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட**
> **அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே** [65]

என்று மாணிக்கவாசகர் இதனை அறிவுறுத்தக் காணலாம்.

சமுதாயத்திற்கு உதவாத சாத்திரங்களைப் பின்பற்றாதவர்கள் சித்தர்கள். அதனால் அகத்தியர்,

> **சாத்திரத்தைச் சுட்டு எரித்தால் அவனே சித்தன்** [66]

என்பர்.

சித்தத்தை வென்று, சிவானுபவம் பெற்றுச் சிறந்தவர்களே சித்தர்கள் என்பது இவற்றால் பெறப்படும்; இவர்கள் ரிஷி, முனி ஆகியோரிலிருந்து வேறுபட்டவர்கள் என்பதும் தெரியப்படும்.

தமிழகத்தில் பதினெண் சித்தர்கள் வாழ்ந்தனர்; அவர்கள் யாவர் என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. ஆனால் அவர்களுள் தலையாயவர் திருமூலர் என்பதில் அனைவரும் ஒன்றுபடுவர்.

திருமூலர் வாழ்நாள்

திருமூலர் எத்தனை ஆண்டுகள் நிலவுலகில் வாழ்ந்தார் என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. சேக்கிழார் தம் பெரிய புராணத்தில் 'பிறவி நீங்கி வீடு பேறு அடையும் பொருட்டுத் திருமந்திரத்தை ஆண்டு ஒன்றுக்கு ஒரு பாடல் என மூவாயிரம் ஆண்டுகள் யோகமிருந்து மூவாயிரம் பாடல்கள் பாடினார்' என்று கூறுவர். இத்தனை ஆண்டுக் காலம் திருமூலர் வாழ்ந்தார் என்பது இயற்கைக்கு மாறானது. ஆயினும்,

> **ஒப்பில் எழுகோடி யுகம்இருந் தேனே** [67]

என்றும்,

> **இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி** [68]

என்றும்,

> **உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்**
> **உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே** [69]

என்றும்,

> **சீற்ற மொழிந்து சிவயோக சித்தராய்க்**
> **கூற்றத்தை வென்றார் குறிப்பறிந் தார்களே** [70]

என்றும்,

> **யோகச் சமாதி யுகந்தவர் சித்தரே** [71]

என்றும் வரும் பாடலடிகள் குறிப்பிட்ட முறையில் உடலைப் பேணி வளர்த்ததால் திருமூலர் நீண்ட வாழ்நாளைப் பெற்றவராக விளங்கியிருத்தல் வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றன. இருப்பினும்,

> "ஆண்டுக்கொரு பாடலாக மூவாயிரம் பாடப்பெற்றன என்பதற்குத் திருமந்திரத்தில் தெளிவான சான்றெதுவும் காணப்படவில்லை" [72]

என்று குறிப்பிடுகிறார் க. வெள்ளைவாரணனார். எனவே, திருமூலர் நீண்ட காலம் வாழ்ந்தார் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. ஆனால், ஆண்டொன்றுக்கு ஒரு பாடல் என மூவாயிரம் பாடல்கள் எழுதினார் என்பதற்கு, ஏறத்தாழ ஏழு நூற்றாண்டுகளுக்குப் பின் வந்த சேக்கிழார் கூற்றுத் தவிர வேறு எந்த ஆதாரமும் இல்லை.

இவற்றைக் கூர்ந்து நோக்கின், திருமூலர் இயல்பான மனித வாழ்க்கையைக் காட்டினும் ஓரளவு நீண்ட வாழ்நாள் பெற்றிருந் தார் என்ற முடிவுக்கு வரலாம்.

தாயுமானவர் பாராட்டு

சித்தர்கள் பலருடைய போற்றுதலையும் பாராட்டுதலையும் பெற்றவர் திருமூலர். அவர்களுள் தாயுமானவர் திருமூலரைச் சிறப்பித்துப் பாடுவது குறிப்பிடத்தக்கது.

'எந்நாள் கண்ணி' என்னும் தலைப்பில் அமைந்த பாடல்களில் 'அடியார் வணக்கம்' என்னும் பகுதியில் தாயுமானவர் எண்மரைப் புகழ்ந்து பாடுகிறார். அவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், பட்டினத்தார், பத்ரகிரி, சிவவாக்கியர், அருணகிரி ஆகியோராவர். இவர்களோடு ஒன்பதாவதாகத் திருமூலரையும் போற்றுகிறார் தாயுமானவர். அது,

சக்கர வர்த்தி தவராஜ யோகிஎனும்
மிக்கதிரு மூலன்அருள் மேவுநாள் எந்நாளோ [73]

என வருகிறது.

திருமூலர் சித்தர்களுள் 'சக்கரவர்த்தி' என உயர்ந்து நின்ற நிலையைத் தாயுமானவரின் இப்பாடற் பகுதி உணர்த்துகிறது. அத்துடன் அவர் திருமூலரைத் 'தவராஜயோகி' என்றும் பாராட்டுவது ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும்.

பிற சித்தர்கள் தரும் குறிப்புகள்

வேறு பிற சித்தர்கள் தங்கள் படைப்புகளில் தரும் பல்வேறு குறிப்புகளாலும் திருமூலரின் சிறப்புகளை உணரலாம். திருமூலரின் பிறந்த மாதம், நட்சத்திரம் முதலியவற்றைப் போகர் சப்த காண்டம் குறிப்பிடுகிறது:

செய்யவே யின்னமொரு மார்க்கம் பாரு
　　செம்பவள கனிவாயா துய்ய பாலா
உய்யவே திருமூல ரென்ற சித்து
　　உலகமதில் தான்பிறந்த தேதி வண்ணம்
பையவே புரட்டாசி திங்க ளப்பா
　　பாலகனார் வந்துதித்த மாத மாகும்
வெய்யவே அவிட்டமென்ற மூன்றாங் கால்தான்
　　மேதினியில் வந்துதித்த சித்து மாச்சே [74]

திருமூலர் பிறந்த மாதம் புரட்டாசி; நட்சத்திரம் அவிட்டம் மூன்றாம் கால். ஆனால், அவர் நந்தியிடம் உபதேசம் பெற்றதும்

முத்தி பெற்றதும் மூல நட்சத்திரத்தில்; அதனால் மூலர் என்ற பெயர் பெற்றார் என்று மற்றொரு பாடல் கூறுகின்றது.[75] இக்கருத்து திருமூலர் மூல நட்சத்திரத்தில் பிறந்தவர் என்னும் கருத்துக்கு முரணானது ஆகும்.

திருமூலரின் மரபு குறித்தும், அவரது சாதி குறித்தும் சித்தர் பாடல்வழி அறியலாம்:

பாடினேன் இன்னமொரு மார்க்கங் கேளு
பாலகனே புலிப்பாணி மைந்தா பாரு
நாடியே திருமூல வர்க்கத்தார்கள்
நலமான சாதியது மரபே தென்றால்
தேடியே வேளாள சாதி யாகும்
திருக்கூட்டம் மெத்தவுண்டு சொல்ல ஒண்ணாது
ஆடியதோர் தலைமுறைகள் ஏதென் றக்கால்
அப்பனே ரெண்டுபத்து ஒன்று தானே[76]

இதனால் திருமூலரின் சாதி வேளான் சாதி என்பது புலப்படுகிறது; அவர்தம் திருக்கூட்ட மரபு இருபத்தொரு தலைமுறைகளாக வருவது என்னும் குறிப்பு இதில் சுட்டப்படுகிறது.

அகஸ்திய வைத்ய ரத்ன சுருக்கம் 360 என்னும் நூல் இவரைக் கைக்கோளர் என்னும் சாதியர் என்று குறிப்பிடுகிறது.

இருந்துதான் யோகமுற்றார் இவரைப்போல்
யார்தான் வாழ்ந்தார்
சிறந்திருக்குந் திருமூலர்தான் கைக்கோளர்
சாதி யாகும்[77]

என்பது அந்நூல் தரும் குறிப்பு.

அகஸ்தியர் 12000 என்னும் நூல் திருமூல வர்க்கத்தாரின் தோற்றம் பற்றிக் குறிக்கிறது; தென்பொதிகையின் வடபாலுள்ள ஆயிரங்கால் மண்டபத்தின் மையப் பகுதியில் திருமூலரின் கூடம் உண்டு என்றும், அங்கு யோகத்திலிருந்த அவர் சிவனைப்போல் சடைமுடியுடன் காட்சியளிப்பவர் என்றும் அந்நூல் அறிவிக்கிறது.[78]

இவற்றையெல்லாம் நோக்குங்கால் அவரது பிறந்த மாதம் நட்சத்திரம், உபதேசம் பெற்ற நாள், முத்தி பெற்ற காலம், தோன்றிய மரபு, அவர்க்குரிய சாதி முதலான யாவற்றையும் திருமூலருக்குப் பின்வந்த சித்தர் மரபினர் ஆதாரம் ஏதுமின்றித் தாமாகவே சுட்டி மகிழ்ந்தனர் என்னும் முடிவுக்கே வரத் தோன்றுகிறது.

அடுத்து அவர்தம் யோகநெறி காணற்குரியதாகும்.

திருமூலரின் யோகநெறி

வடமொழியில் 'சாங்கியம்' என்னும் நூல் யோகத்திற்கு அடிப்படையாக விளங்குவது; தமிழில் திருமந்திரம் அடிப்படை நூலாகக் காட்சியளிக்கிறது.

> ''உயிரின் இயல்பு கட்டுக்களினின்று தன்னை விடுவித்துக் கொள்வதாகவோ, கட்டற்ற ஒன்றோடு தன்னை இயைத்துக் கொள்வதாகவோ இருத்தலைக் காணலாம்.
>
> இவ்வாறு கட்டுக்களைக் கடத்தலில் கட்டற்ற ஒன்றில் கடத்தலில் உயிர் முயன்ற இம்முயற்சிநெறி பலவாய் விரிந்தது. அத்தகு நெறிகளுள் யோக நெறியும் ஒன்று.
>
> உயிர்ப்பயிற்சிக்கு யோகம் பலவாறு பயன்படும் வழிவகைகள் காணும் முயற்சியில் துன்பத்திலும் தொல்லையிலும் இந்த உழலும் நூற்றாண்டு பெரிதும் ஈடுபட்டுள்ளதைக் காணலாம்'' [79]

என்று யோகநெறி பற்றிக் கூறுகிறார் பொன். சௌரிராசன்.

யோகம் — சொற்பொருள்

யோகம் என்னும் சொல் 'ஒன்றாகக் கட்டுதல்' அல்லது 'ஒன்று சேர்த்தல்' என்னும் பொருள் கொண்டது. [80] இருக்கு வேதம் 'ஒன்றுதல், அடக்குதல், புலன்களை வெல்லுதல்' என்னும் பொருள்களைத் தருகிறது. [81] பக்தியுடன் செயல்களை அர்ப்பணித்தலே யோகம்' என்று தெரிவிக்கிறது உபநிடதம். [82]

அட்டாங்க யோகம்

> நாலிரு வழக்கிற் றாப்பதப் பக்கம் [83]

என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு உரையெழுதும் நச்சினார்க்கினியர்,

> ''அவ்வறிஞர் கூறிய ஆகமத்தின் வழிநின்று வீடுபெற முயல்வார்க்கு உரியவாகிய எண்வகை மார்க்கத்துத் தவம் புரியுங் கூறு. வழக்கென்றதனான் அந்நாலிரண்டுந் தவம் புரிவார்க்கு உரியனவும், தவஞ்செய்து யோகஞ் செய்வார்க்கு உரியனவுமென இருவகைய என்று கொள்க.
>
> இனி யோகஞ் செய்வார்க்குரியன இயமம், நியமம், ஆசனம், வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, நினைதல், சமாதி என்னும் எட்டும் ஆகும்'' [84]

என்று அட்டாங்க யோகத்தைக் குறிக்கின்றார்.

முதன் முதலாகத் தமிழில் யோகத்தை விரிவாக விளக்கிக் கூறியவர் திருமூலர் ஆவார். திருமந்த்ரத்தின் மூன்றாம் தந்திரத்தில் அட்டாங்க யோகத்தை விளக்கும் திருமூலர், கேசரி யோகம், பரியங்க யோகம், அமுரிதாரணை, சந்திரயோகம் முதலான பிற யோகங்களையும் நன்கு தெளிவாக்குகிறார். 'மந்திர யோகம்' என்பதனை நான்காம் தந்திரத்தில் குறிப்பிடு கிறார்.

இங்குக் குறிக்கப்பட்ட எட்டுவகை யோகங்களையும் 'அகத்தவம்' என்று வழங்குதலுமுண்டு.[85] அட்டாங்க யோகத் தைப் 'பிரைச்சதம்' என்று திருமூலர் குறிப்பதோடு, கட்டுப் படுத்தப்பட்ட மூச்சுக் காற்றைக் கடிவாளமிட்ட பரிக்கு இணை யானதாகக் கூறுகிறார்.[86]

யோகப் பயிற்சியால் ஆற்றல்கள் பலவற்றை ஞானிகள் பெற்றுச் சிறந்து விளங்கியுள்ளனர். இதன் பயனை,

> "யோகப் பயிற்சியில் வல்லவர்கள் அண்டத்தில் உள்ள அனைத்தையும் பிண்டத்தின் காண்பர். பேரண்டத்தை இயக்கும் சக்திகளின் உருவகமாகத் தெய்வங்களை யோகியர் தம் உடலிலேயே காண்பர். நெற்றியில் சதாசிவத்தையும், கழுத்திலே மகேசுவரனையும், நெஞ்சிலே உருத்திரனையும், உந்தியில் விஷ்ணுவையும், மூலத்தில் பிரம்மனையும் காணும் ஆற்றல் மிக்கவர்கள் யோகியர்"[87]

என்று கூறுகிறார் க. நாராயணன்.

இயமம்

இயமம் என்பது தீயனவற்றைச் செய்யாது ஒழுகுதல் ஆகும். புலன் அடக்கலே தீயன விலக்கலுக்கு வழியாகும். எட்டுத் திசை யிலும் மழை பொழிந்தபோதும் தீயன விலக்கல் வேண்டும். பிறர்க்குத் தீங்கு செய்யாமலும் பிறரைத் துன்புறுத்தாமலும் வாழ்வதே இயமம்.

> **நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்**
> **அல்லது செய்தல் ஓம்புமின்**[88]

என்னும் புறநானூறு இதனையே குறிக்கிறது. எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றினாலும் தீயன விளைத்தலாகாது என்பது இதன் கருத்து.

திருமூலர் இயம ஒழுக்கங்களாகப் பதினொன்றனைச் சுட்டிப் பேசுகிறார்:

கொல்லான் பொய்கூறான் களவிலான் எண்குணன்
நல்லான் அடக்க முடையான் நடுச்செய்ய
வல்லான் பகுந்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லான் நியமத் திடைநின் றானே [89]

என்பது அவர் திருமந்திரம் ஆகும். இவற்றை மேற்கொள்பவன் இயமத்தான் ஆவான்.

நியமம்

நியமமாவது நல்லனவற்றையே செய்து ஒழுகுதலாகும். நியமத்தான் கடைப்பிடிக்க வேண்டியவை எனப் பத்துக் குணங்களைச் சுட்டுகிறார் திருமூலர். அவையாவன:

தூய்மை அருள்ஊண் சுருக்கம் பொறைசெவ்வை
வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றிவை
காமம் களவு கொலையெனக் காண்பவை
நேமிஈ ரைந்து நியமத்த னாமே [90]

என்பனவாம். ஆதியாகவும், வேதத்தின் முடிபாகவும், பேரொளியனாகவும், பராசக்தியைத் தன் உடலின் பாதியுள் வைத்திருப்போனாகவும் உள்ள சிவனின் உண்மையுணர்ந்தோர் நீதியுணர்ந்த நியமத்தார் ஆவர்.[91] இதனைப் பதஞ்சலி கூறவில்லை. நியம நெறிகளுள் சிவனை உணர்தல் தலையாயதாகும். நியம நெறியில் நிற்பவன் மேற்கண்ட பத்துவகையானவற்றைக் கடைப்பிடித்தலோடு அமையாது, தவங்களையும் விரதங்களையும் மேற்கொண்டொழுகிச் சிவபூசைகளையும் செய்தல் வேண்டும் என்பர் திருமூலர்.[92]

ஆதனம்

ஆதனம் என்பது இருக்கை. யோகம் புரிவதற்குமுன் இருக்க வேண்டிய ஆசன முறை பற்றியும், அதனால் உண்டாகும் பயன் பற்றியும் திருமூலர் ஆறு பாடல்களில் குறிப்பிடுகிறார்.

> ''யோகம் செய்யப்புகுந்த ஒரு மாணவன் தன்னுடைய உடம்பிலே தனது தவத்திற்கு இடையூயான வாதனைகள் தோன்றாமல் முன்னெச்சரிக்கை செய்து கொள்ள வேண்டும்'' [93]

என்கிறார் மீ. ப. சோமு. இதற்குப் பயன்படுவதே ஆசன முறைகள். திருமூலர் எட்டு ஆசனங்களைப் பற்றி குறிப்பிடுகிறார். இறுதியில்,

எட்டெட்டுப் பத்தொடு நூறுபல ஆசனமே [94]

என்று முடிக்கிறார். இதனடிப்படையில் நூற்றிருபத்தாறு ஆசனங்களின் பட்டியலொன்றைத் தருகிறார் மீ. ப. சோமு. [95]

சுவத்திகாசனம் :— முழந்தாளுக்கும் தொடைக்கும் நடுவில் இரண்டு பாதங்களையும் கீழே வைத்து உடல்நிமர்ந்து உட்கார்தல். இதனைச் 'சுகாசனம்' என்றும் வழங்குவர். சுவத்திகம் என்னும் சுகாசனத்தில் தங்கியிருப்பவன் தலைவனு மாவான் என்பர் திருமூலர். [96] இங்குத் தலைவன் என்பது தலைமையிடம் அல்லது சிறப்பிடம் என்று கொள்ளல் தகும்.

பத்மாசனம் :— ஒரு பக்கம் அணைந்த காலைத் தொடையின் மேல் ஏறும்படிச் செய்து, இழுத்து வலப்பக்கத் தொடையின் மேல் இடக்காலையும் இடப்பக்கத் தொடையின் மேல் வலக்காலை யும் வைத்து அழகாகக் கைகளை மலர்த்தித் தொடைகளின் மேல் வைக்கப் பத்மாசனம் அமையும். [97]

பத்திராசனம் :— வலக்காலை இடப்பக்கத் தொடையின் மேல் விளங்கும்படி வைத்து, அருமையான முழங்கால்களின் மேல் கைகளை நீட்டித் தளர்கின்ற உடம்பைச் செம்மையாக இருத்தினால் தோன்றுவது பத்திராசனம். [98]

குக்குட ஆசனம் :— குக்குடம் — கோழி. இவ்வாசனம் கோழி போன்று இருத்தலால் குக்குடாசனம் எனப் பெயர் பெற்றது. பாதங்கள் இரண்டையும் தொடையின் மேல் மாறி ஏற்றி, முக்கி, உடம்பை முழங்கைவரைத் தூக்கி நிறுத்தி, உடம்பின் பாரம் கைகளில் தாங்குவதற்கான சமநிலை தெரிந்து அசையாமலிருத்தல் குக்குடாசனமாகும். [99]

சிங்காசனம் :— சிங்காதனமாவது பாத நுனிகளைப் பூமியில் ஊன்றியிருந்து, முழங்கால்களில் கைகளை நீட்டி, வாயைத் திறந்து கொண்டு புருவ நடுவைத் பார்த்திருப்பது. கேசரி முத்திரையில் நாக்கை மடித்து உள்நாக்குப் பகுதியில் செலுத்தி யிருப்பதால் வாய் மூடாதிருக்கும். இவ்வாசனம் சிங்கம் போன்றிருத்தலால் சிங்காதனம் எனப்படும். [100]

கோமுகாசனம் :— இடப்பக்கம் பின்பாகத்தில் வலக்கால் பரட்டினையும், வலப்பக்கம் பின்பாகத்தில் இடக்கால் பரட்டினையும் சேர்க்க அமைவதால் கோமுகாசனம் உண்டாகும். இது பசுவின்முகம் போன்றிருத்தலின் இப்பெயர் கொண்டது.

வீராசனம் :— வலப்பக்கத் தொடையின்மேல் இடக்கால் பரட்டினைச் சேர்த்து இருமாந்திருத்தல் வீராசனமாகும்.

சுகாசனம் :— சுகாசனமாவது சாதகன் சுகமாக அமர்ந்து இருத்தலாகும்.

பிராணாயாமம்

மேற்சொன்ன ஆசனங்களுள் ஏதாவது ஒன்றனைத் தேர்ந் தெடுத்துக் கொண்ட சாதகன் பிராணாயாமம் செய்வான்.

பிராணாயாமம் என்பது மூச்சினைக் கட்டுப்படுத்தல் ஆகும். இதனை பதினான்கு பாடல்களில் விளக்குகிறார் திருமூலர். ஐம்புலன்களுக்கும் நாயகனான ஆன்மா சுவாசமாகிய குதிரை யென்னும் மூச்சினைக் கட்டுப்படுத்துவதனால் 'பிராணசெயம்' ஏற்படும் என்பர்.[101] இதற்கு இறையருள் தேவை.

இப்பயிற்சியால் உடற்சோர்வு நீங்கிச் சுறுசுறுப்பு உண்டாகும்.[102] திருமூலர் 'வேந்தன் கடமை' என்னும் தலைப்பின் கீழும் சமுதாயத்தில் கள்ளுண்போரைத் தண்டித்துப் பிராணாயாமம் பயிற்ற வேண்டும் என்கிறார்.[103]

பிரத்தியாகாரம்

பிரத்தியாகாரம் என்பது புலனொடுக்கத்தைக் குறிக்கின்றது. அட்டாங்கயோகத்தில் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் என்பன பூர்வபட்சம் ஆகும்; பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன உத்தரபட்சம் எனப்படும்.

பொறிகளைப் புற உலகப் பொருள்களிலிருந்து துண்டித்துக் கொள்ளவேண்டும் என்பதே இதன் நோக்கம்.

குண்டலினியின் வெளிப்புற உட்புற இடத்தினைத் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

> எருவிடும் வாசற் கிருவிரன் மேலே
> கருவிடும் வாசற் கிருவிரற் கீழே
> உருவிடும் சோதியை உள்கவல் லார்க்குக்
> கருவிடுஞ் சோதி கலந்துநின் றானே[104]

இவ்வாறு பிரத்தியாகாரத்தில் மனத்தை வைத்து இறைச் சிந்தனையுடன் இருப்பின் ஒவ்வோர் ஆதாரத்திலும் அதற்குரிய ஒளி கிட்டும். இச்சிவ ஒளியின் துணையால் சாதகன் இருந்த இடத்திலேயே உலகைக் காண்பான் என்கிறது திருமந்திரம். சிவ ஒளி கண்ட சாதகனைத் தேவராக்கும் தன்மையுடையது இப்பிரத்தியாகாரம்.

தாரணை

மனத்தைக் கட்டுப்படுத்துவது பிரத்தியாகாரம்; மனத்தை ஒருமுகப்படுத்துவது தாரணை. புற நிகழ்ச்சிகளைக் காணாது

'காணாக் கண், கேளாச் செவி என இருப்பவன் காலங் கடந்து வாழும் பாலன் ஆவான்; அவனுக்குப் பிறவியின் வழியை அடைக்கும் சாதனமாக இருப்பது இத் தாரணை' என்கிறார் திருமூலர்.[105] இப்பயிற்சியற்றவர்களின் வாழ்நாள் வீணாளாகும்; சகஸ்ரதளமாகிய செப்பினைத் திறக்காதவர்கள் கோழைகளாவர்;[106] இப் பயிற்சியால் ஞானேந்திரியங்கள் ஐந்தும் தங்கினால் கன்மேந்திரியங்கள் செயலற்றுப் போகும்; இப்பயிற்சி இல்லாதவர் இடிந்துவிழும் ஆற்றங்கரை போன்றவர் ஆவர்.[107]

பஞ்ச பூதங்களின் சூட்சுமநிலை சத்த, பரிச, ரூப, ரச, கந்தம் ஆகிய தன்மாத்திரைகளாகும். இவ்வைந்திலும் சூக்குமம் சத்தமாகும். இஃது ஆகாயக் கூறு. இந்த ஆகாயத்தில் உண்டான நாதத்தில் அந்தகரணங்கள் பொருந்தினால் மனம் எண்ணுவதையும், புத்தி நிச்சயம் செய்வதையும் விட்டு நிற்கும்; சித்தம் ஆணவத்துடன் பொருந்தும். தத்பரம் என்ற உயர்ந்த பொருளோடு மனம் சென்றபோது சித்தமும் இல்லை; ஆணவமும் இல்லை; எஞ்சி நிற்பது தத் என்ற சிவமும், பரம் என்ற ஆன்மாவுமே ஆகும். இந்நிலையை அடைந்தவரே தாரணையை அடைந்தவர் ஆவர்.

தியானம்

தாரணையின் முதிர்ந்த நிலையே தியானம் எனப்படும். தியானம் தாரணையின் அடுத்த படிநிலை. தியான நிலையில் உணர்வுகள் ஆன்மீக மயமாய் இருக்கும்; தூய அறிவுச் சுடராய் விளங்கும். புலன்கள் காண ஒண்ணாத முழுமுதற் பொருளைத் தியானநிலை உணர்த்துகின்றது. உருவைக் கண்டு தியானிப்பது 'சகுணத் தியானம்' எனப்படும்; இத்தியானம் அருவத் தியானமான 'நிர்க்குணத் தியானம்' என்பதற்கு வழிவகுக்கும். இதனைத் திருமூலர்,

> **உருவாய சத்தி பரத்தியானம் உன்னும்**
> **குருவார் சிவத்தியானம் யோகத்தின் கூறே**[108]

என்னும் பகுதியில் உணர்த்துகிறார்.

ஊர்த்துவ முகமாய் மேலே செல்லும் வாக்கு வெளிப்படும் தொண்டைச் சக்கரத்துக்கு இரண்டு விரற்கிடை கீழேயுள்ள அநாகதச் சக்கரத்தில் கடல் முழக்கம் போன்று பொங்கி எழுகின்ற ஒலியினைத் தியானிக்க வல்லவர்கள் உடம்புக்குரியனாகிய ஆன்மாவை அறிந்தவர்கள் ஆவர். ஆன்மாவை உணர்ந்து முப்பத்தாறு தத்துவங்களையும் நீங்கியவர்கள் சிவனோடு ஒன்றாவர்.[109]

சமாதி

உயிர், தன்மலம் நீங்கி, தத்துவங்களை நீக்கி, இறைவனோடு சமம் ஆதலே சமாதியாகும்.

ஒளியும் ஒலியும் சிரசின்மேல் சகஸ்ரதளத்தில் மிகுந்து விளங்கினால் யோகமான சமாதியில் சீவன் பொருந்தியிருக்கும். நினைத்தலைச் செய்யும் மனம் உள்ளவிடத்துப் பிராணவாயுவும் உண்டு; மனம் நினைக்கவில்லை யெனில் வாயுவும் அடங்கும். வாயு அடங்கிய நிலையில் மனத்திற்குச் சமாதி கிடைக்கும். மனமாகிய கயிற்றைக் கொண்டு பிராணனைக் கட்டுதல் வேண்டும்.[110]

யோகியர் உலக நாட்டம் விட்டு அகநாட்டத்தில் பொருந்தி யிருப்பர் என்று திருமூலர் கூறுவர்:

> பூட்டொத்து மெய்யிற் பொறிப்பட்ட வாயுவைத்
> தேட்டற்ற வங்கிலஞ் சேரும் படிவைத்து
> நாட்டத்தை மீட்டு நயனத் திருப்பார்க்குத்
> தோட்டத்து மாம்பழந் தூங்கலு மாமே[111]

என்னும் இப்பாடலில் 'பூட்டை' என்பது கிணற்றுச் சகடையைக் குறிக்கும். கிணற்றுச் சக்கரத்தின் உதவியால் கயிறு மேலும் கீழும் செல்லுதலைப் போல், எண்ண அலைகளால் இயங்கும் பிராணன் மனம் அடங்கின் அடங்கும் என்பது இதன் கருத்தாகும்.

திருமூலர் குண்டலினியின் வடிவம் பற்றி ஒரு பாடலில் விளக்குகிறார். அது நான்கு இதழ்களோடு கூடிய மூலாதாரத்தி லுள்ள முக்கோண வடிவுள்ளது. இக்குண்டலினி, அபானனின் செயல்கெடுத்துப், பிராணனோடு சேர்ந்து, மூக்குத் துளைகள் வழி புகுந்து பிரமரந்திரம் செல்லும். அவ்வாறு சென்று இறைவனைச் சேருவதே சாந்தம் பொருந்திய 'சமாதி'யாகும்.[112]

பிற யோக முறைகள்

அட்டாங்க யோகங்களே அன்றி வேறு சில யோகங்களைப் பற்றியும் திருமூலர் விளக்கியுள்ளார். அவையாவன:

கேசரி யோகம்:— கேசரி என்பது ஆகாயம் என்றும், சிங்கம் என்றும் பொருள்படும். கேசரி யோகமாவது, சிங்கத்தைப் போன்று பார்வையை மேல்நோக்கிச் செலுத்துவதாகும். சீவன் ஆகாயத்தில் ஆற்றலை இதனால் பெறுகிறது. இக்கேசரி யோகத்தை மூன்றாகப் பிரிக்கிறார் திருமூலர்.

அடயோகம்:— சாதகன் பத்மாசனத்தில் அமர்ந்து இச் சாதனையைச் செய்தல் வேண்டும். பிராணாயாமத்தினைப்

பிரமரந்திரம் நோக்கிச் செல்லுமாறு கழுத்தை நெஞ்சில் அழுந்த வைத்திருக்கவேண்டும்.

லம்பிகாயோகம் :— சாதகன் ஆசனத்தில் அமர்ந்து நாவின் நுனியை அண்ணாக்குக்கு மேல் வீசியிருக்க வேண்டும். அவ்வாறு சாதனையை மேற்கொண்டால் பிராணன் அண்ணாக்கின் வழியாகப் பிரமரந்திரம் செல்லும்.

இராசயோகம் :— சாதகன் இரு கண் பார்வையையும் நெற்றிப் பிரதேசமாகிய மூளையின் முன்புறம் செலுத்தியிருக்க வேண்டும். அப்போது தோன்றும் ஒளியினால் சகஸ்ரதளத்தை நிரப்பினால் இருள்விலகித் தூய்மை ஏற்படும். [113]

பரியங்க யோகம் :— பரியங்கம் என்றால் கட்டில் என்று பொருள். கட்டிலில் பெண்ணோடு கூடியிருந்து செய்யும் யோகமே பரியங்க யோகம் ஆகும். [114] இராமநாதப் பிள்ளையும், சாமி சிதம்பரனாரும் இதற்கு 'ஆண்— பெண் புணர்ச்சி' எனக் குறிப்பு எழுதியுள்ளனர். [115]

> ''சித்தர்கள் குழூஉக்குறியில் குண்டலினி குமரி என்றும், வாலை என்றும் குறிக்கப்படும். யோக முயற்சியால் விழிப்படைந்த குண்டலினி குமரிநிலை எய்திய பெண்ணாகவும், அநாகதச் சக்கரத்தை அடைந்த நிலையில் சேர்க்கைக்கு ஏற்ற நிலை எய்தியவளாகவும் கூறுவர். சகஸ்ராரத்தை அடைந்த பின்னர் அங்குள்ள சதாசிவமாகிய சத்துடன் இணைகின்றது. இங்ஙனம் உறங்குகின்ற குண்டலினியை விழிப்பித்து மேலேற்றிக் சகஸ்ராரத்தில் இணைப்பதே பரியங்க யோகமாகும். இதுவே 'நாதவிந்துக் கலப்பு' '' [116]

என்று பரியங்க யோகத்திற்கு விளக்கம் தருவர்.

அமுரி தாரணை :— இது பரியங்க யோகத்தோடு தொடர்பு உடையது. பரியங்க யோகத்தின் விளைவான அமிர்தம் காயப்பால், கறவாப்பால், மாங்காய்ப்பால், அருளமுது எனப் பலவாறு சித்தர்களால் குறிப்பிடப்படும். மதியமுதைச் சித்தர்கள் நாவை மடித்து உண்ணுவர்.

> ''இவ்வமுதினை எவன் உண்ணுகின்றானோ அவன் வியாதி இல்லாதவனாய்த் தாமரைத் தண்டுபோல் மிருதுவான சரீரம் உடையவனாய் வெகுகாலம் சீவித்திருப்பான்'' [117]

என்று சிவயோகசாரம் குறிப்பிடுகிறது. திருமூலரும் இவ்வமுதினைப் பருகுபவர் நரை, திரை, நமன் இன்றி வாழ்வர் என்று ஆறு பாடல்களில் கூறுகின்றார். [118]

சந்திரயோகம் :— சந்திரனை உடம்பில் விளங்கச் செய்வது சந்திரயோகம் ஆகும். அண்டத்தில் உள்ள சந்திரன், சூரியன், அக்கினி முதலியவை உடலிலும் உண்டு.

> "உடம்பில் மூலாதாரத்திலிருந்து துவாதசாந்தம் வரை செல்லும் கலைகள் சந்திரனுக்குப் பதினாறு என்றும், சூரியனுக்குப் பன்னிரண்டு என்றும், அக்கினிக்குப் பத்து என்றும் அகஉணர்வு அறிந்த யோகியர் கூறுவர்.[119]

திருமூலரோ இம்மூன்றும் சேர்ந்து ஒன்றாவதில் சந்திரயோகம் அமையும் என்கிறார்.[120]

மந்திரயோகம் :— மந்திரம் என்றால் நினைப்பவனைக் காப்பது. மந்திர யோகம் என்றால் நினைப்பவனைக் காத்து இறைவனொடு சேர்க்கும் நெறி என்பது பொருள். ஆதலால், திருமூலர் கேசரி யோகம், பரியங்க யோகம், சந்திர யோகம், அமுரி தாரணை ஆகியவற்றைக் கூறிய பின்பு இந்த மந்திர யோகம் பற்றிக் கூறியுள்ளார்.

'ஓம்' என்னும் ஓரெழுத்து மந்திரம், அ, உ, ம் என்ற மூன்றெழுத்தின் கூட்டால் ஆனது.[121] சுவாதிட்டான முதல் சுழுமுனை மார்க்கமாய்ச் செல்லும் நமசிவாயப் பஞ்சாக்கரம் இறைவனின் நிற்கும் நிலையை விளக்குகின்றது.[122]

அசபா மந்திரம் செபிக்கப் படாமலேயே பிராணனோடு சேர்ந்து இயங்கும். இதுவே பிரணவம் என்றும் வழங்கப்படும். மூச்சுக்காற்று 'ஹ' என்ற ஒலியோடு உட்புகுந்து 'ஸ' என்ற ஒலியோடு வெளிப்படுகின்றது. எல்லா உயிர்களும் இம் மந்திரத்தை ஓதுகின்றன.

யோகம், மந்திரம் பற்றிப் பல செய்திகளைக் கூறிச் செல்கிறார் திருமூலர்; விரிவஞ்சி இத்துடன் நிறுத்தப்படுகிறது.

அட்டமா சித்திகள்

யோகநெறி நின்று குற்றமற்ற மனத்தால் இறைவனை நினைத்தால் அட்டமாசித்திகள் என்னும் எண்வகைப் பெரும் பேறுகளை அடையலாம் என்பர் திருமூலர்.[123]

சந்திர கலையாகிய இடப்பக்க மூக்கின் வழியும், சூரிய கலையாகிய வலப்பக்க மூக்கின் வழியும் விடுத்தலாகிய உயிர்ப்பு பன்னிரண்டு விரலளவு வெளியிற் செல்லும். அதில் நான்கு விரலளவு வீணாகிறது. எஞ்சிய எட்டு விரலளவே அகத்துள் தங்குகிறது. அவ்வாறன்றிப் பன்னிரண்டு விரலளவு உயிர்ப்பும்

அகத்திற் தங்கச் செய்யவேண்டும். இப்பயிற்சியைப் பன்னிரண்டு ஆண்டுகள் செய்தால் அட்டமாசித்திகளைப் பெறலாம்.[124]

கல்வி, கலைகளினால் இச்சித்திகளைப் பெற இயலாது. சிவனிடம் மாறா அன்புடையவர்களுக்கே இவை கிட்டும்.[125]

அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பன அட்டமா சித்திகளாகும்.

அணிமா என்றால் நுண்மை. விந்து நீக்கமின்றிச் சேமித்து வைத்து ஓராண்டு யோக முயற்சியில் ஈடுபடுவார்க்கு அணிமா சித்தி வரப்பெறும். அணுப்போன்று சூக்குமமாகும் அவன் பஞ்சினும் மென்மையானவனாக இருப்பான்.[126]

இலகிமா என்றால் மென்மை. இறையருளால் பராசக்தியுடன் மூலாதாரத்திலிருந்து மேலே செல்லும் எல்லாத் தத்துவங்களிலும் அச்சக்தியே ஆதாரமாய்ச் செல்லவேண்டிய காலங்கள் தன் வழிப் பட்டு நிற்பின், அணிமா சித்தி பெற்ற ஐந்தாண்டுகளுக்குப் பின் 'இலகிமா' சித்திக்கும். இவனது ஆன்மா பால்போன்று பரந்து நின்று எல்லாவற்றிற்கும் மேலான சிவனைத் தரிசிக்கும்.[127]

மகிமா என்பது பருமை. விந்து மயமான பரையும், நாத மயமான சிவமும் ஒன்றாய் நின்றபோது நாதாந்தம் என்று பெயர். இதில் இருப்பவர் தம் விருப்பம் போல் உருவத்தைப் பெருக்கலாம்.[128]

பிராத்தி (பிராப்தி) என்பது விரும்பிய செய்தல் ஆகும். சக்தியுடன் தூலமாய்க் காணப்பட்ட உலகப் பொருள்களெல்லாம் சூக்குமமாய் ஒடுங்கும். இதனை ஓராண்டு தாரணை செய்யின் வேண்டுவன அடையும் சித்தி கிட்டும்.[129]

கரிமா என்பது விண் தன்மை ஆகும். யோகப் பயிற்சியால் ஒளியைக் கண்டபின் இருந்த இடத்திலிருந்தே உலகப் பரப்பு முழுவதும் காணலாம். கரிமா சித்தி அடைந்தோருக்கு இறப்பும் பிறப்பும் இல்லை. அவர்கள் சக்தியுடன் ஓராண்டு இருந்தால் பரகாயப் பிரவேசம் செய்யலாம்.[130]

பிரகாமியம் என்பது நிறைவுண்மை எனப்படும். மூலாதாரத் தில் உள்ள மூலக்கனலை ஒளி, ஒலியாகக் கண்டவர்களுக்குச் சிரசுக்கு மேல் விளங்கும் சிவ ஒளியும், அதனால் வீடுபேறும் பத்தாம் ஆண்டில் எளிதில் கிட்டும்.[130]

ஈசத்துவம் என்பது தத்துவங்களை விருப்பப்படி நடத்தல் அல்லது ஆட்சியனாதல் ஆகும். சீவர்களிடம் என்றும் நிலை பெற்றுள்ள சிவசக்தியுடன் சூக்கும திருஷ்டிக்குப் புலப்படும் ஒளி

அணுக்கள் எல்லாவற்றையும் சிரசுக்கு மேலுள்ள விந்து மண்டலத்தில் வெவ்வேறு வகை ஒளிபாய்வதை ஓராண்டு சேர்த்திருந்தால் அவனுக்குச் சதாசிவ தத்துவம் தோன்றும். தானே சந்திரனாய் விளங்குவான்; மேலும் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில் செய்ய வல்லானுமாகத் தானே சிவனென விளங்குவான்.[132]

வசித்துவம் என்பது தத்துவங்களில் இரண்டறக் கலந்திருத்தல் ஆகும். இதனை 'வியாப்பியம்' என்றும் கூறுவர். சிறப்பு மிகுந்த மேலேழ் உலகங்களிலும், கீழேழ் உலகங்களிலும் சென்று அழகுடன் தங்கி நிற்கும் இத்தகுதி பன்னிரண்டாம் ஆண்டில் சாதகனுக்குக் கிட்டும்.[133]

இந்த எட்டுப் பெரும்பேறுகளும் யோகப் பயனாலும், இறைவன் அருளாலும் சாதகனுக்குக் கிடைக்கும்.

அணிமா முதலாண்டிலும், இலகிமா ஆறாம் ஆண்டிலும், மகிமா ஏழாமாண்டிலும், பிராத்தி எட்டாமாண்டிலும், கரிமா ஒன்பதாமாண்டிலும், பிரகாமியம் பத்தாமாண்டிலும், ஈசத்துவம் பதினோராம் ஆண்டிலும், வசித்துவம் பன்னிரண்டாமாண்டிலும் முறைப்படி சாதகம் செய்வானுக்குக் கிட்டும்.

முடிவுரை

இவ்வியலின்கண் ஆராய்ந்த கருத்துகளைப் பின்வருமாறு தொகுத்துக் காணலாம்.

1. சைவத் திருமறை நூல்களுள் சாத்திர நூலாகவும், தோத்திர நூலாகவும், வாழ்வியல் நூலாகவும் விளங்கி, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பயனையும் நல்கும் ஒரு பெருநூல் திருமந்திரம்.

2. இம்மை இன்பமே அன்றி முத்திப் பேரின்பத்தையும் நல்குவது இந்நூல்.

3. 'தமிழ் வேதாகம முழுமுதற் கருவூல'மாகத் திகழ்வது இத் திருமந்திரம். சுந்தரரும், நம்பியாண்டார் நம்பியும், சேக்கிழாரும் தம் நூல்களுள் திருமூலரைப் பற்றிச் சிறப்பாகக் குறித்துள்ளனர்.

4. திருமந்திரமும், திருத்தொண்டர் புராணமும் திருவாவடுதுறையில் இந்நூல் தோன்றியதாகக் குறிப்பிடுகின்றன.

5. திருமூலர் மூவாயிரம் பாடல்களே பாடினர்; அவர் எண்ணாயிரம் பாடினர் என்பதோ, மூன்று நூல்களைப் பாடினர் என்பதோ பொருந்தாக் கூற்றாகும். திருமூலர் பெயரில் வழங்கும் இருபத்தைந்துக்கு மேற்பட்ட நூல்கள் அவர் இயற்றியன அல்ல.

6. ஆன்மீகத்தைவிடவும், தத்துவ நூலாகத் திகழ்வது திருமந்திரம். தேவாரம் முதலான பிற பக்தி நூல்களிலும் காலத்தால் முந்தியது இது.

7. 9 தந்திரங்கள், 232 அதிகாரங்கள், ஏறத்தாழ 3000 பாடல்கள் கொண்ட திருமந்திரம் ஓர் ஆகம நூல் ஆகும். ஒன்பது ஆகமங்களின் கருத்துச் செறிவைத் திருமந்திரத்தின் ஒன்பது தந்திரங்களில் காணலாம்.

8. திருமூலர் காலம் கருத்து மாறுபாட்டிற்குரியது. கி.மு. 6000 தொடங்கிக் கி.பி. 900 வரை அவரது காலம் குறிக்கப் பெற்றுள்ளது. இருப்பினும் க. வெள்ளைவாரணனார் கூறுவது போல் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதி அல்லது ஆறாம் நூற்றாண்டின் தொடக்கம் என்று கொள்வதே பொருந்துவ தாகும்.

9. திருமூலர் கயிலாய மரபினைச் சேர்ந்தவர் என்றும், பிறப்பால் பள்ளர் சாதிப் பெண்ணுக்கும் முனிவர் ஒருவருக்கும் தோன்றியவர் என்றும் கூறப்படுவன ஆதாரமற்றவை.

10. திருமூலரின் இயற்பெயர் சுந்தரநாதன் என்று கூறுவதும் பொருத்தமற்ற கருத்தாகும்.

11. திருமூலர் திருவாவடுதுறையில் அரச மரத்தடியில் மேற்கொண்ட யோகம் ஒப்பற்ற தன்மையது; ஏழுகோடி யுகமிருந்து எவரும் காணற்கரிய சிற்சக்தியைக் கண்டு மகிழ்ந்தவர் திருமூலர்.

12. திருமந்திரம் என்னும் ஆகம நூலைத் தமிழில் தருவதற்காகவே இறைவன் தன்னைப் படைத்ததாகத் திருமூலர் கருதினார்; தம் வலிய தவத்தால் அதனை நிறைவேற்றினார்.

13. தமிழ்ச் சித்தர்களுள் தலையாயவராக விளங்கியவர் திருமூலர் ஆவார். அதனால் நீண்ட காலம் வாழ்ந்தவராகக் கருதப்பட்டார்.

14. தாயுமானவர் திருமூலரைச் 'சக்கரவர்த்தி' என்றும் 'தவராஜயோகி' என்றும் பாராட்டி மகிழ்கிறார்.

15. திருமூலரின் பிறந்த மாதம், நட்சத்திரம், உபதேசம் பெற்ற நாள், முக்தி பெற்ற காலம், தோன்றிய மரபு, சாதி முதலியன பற்றி வரும் குறிப்புகள் அனைத்தும் ஆதாரமற்றவை.

16. 'அகத்தவம்' அல்லது 'பிரைச்சதம்' என்னும் அட்டாங்க யோகம் பற்றித் திருமூலர் விரிவாகக் கூறியுள்ளார்.

17. தீயன விலக்கும் இயமம், நல்லன இயற்றும் நியமம், யோக இருக்கை பற்றிய ஆதனம், மூச்சினைக் கட்டுப்படுத்தும்

பிராணாயாமம், புலனொடுக்கும் பிரத்தியாகாரம், மனத்தை ஒருமுகப்படுத்தும் தாரணை, அதன் அடுத்த படிநிலையான தியானம், உயிர் தத்துவங்களைக் கடந்து இறைவனோடு சமநிலை பெறும் சமாதி ஆகிய அட்டாங்க யோகங்களின் செய்முறைகளையும், பயன்களையும் திருமூலர் முதன்முதலாகவும் சிறப்பாகவும் தீந்தமிழில் விளக்கியிருக்கிறார்.

18. அட்டாங்க யோகங்களே அன்றித் திருமூலர், கேசரியோகம், பரியங்கயோகம், அமுரி தாரணை, சந்திரயோகம், மந்திரயோகம் ஆகியன குறித்தும் விளக்கம் தந்துள்ளார்.

19. எண்வகைப் பெரும்பேறுகளான அட்டமா சித்திகள் குறித்தும் திருமூலர் நன்கு விளக்கியுள்ளார். அணிமா (நுண்மையாதல்), மகிமா (பருமையாதல்), கரிமா (விண்தன்மை பெறல்), இலகிமா (மென்மையாதல்), பிராப்தி (விரும்பிய செய்தல்), பிராகாமியம் (நிறைவண்மை), ஈசத்துவம் (ஆட்சியனாதல்), வசித்துவம் (தத்துவங்களில் இரண்டறக் கலத்தல்) ஆகியன முதலாண்டு தொடங்கிப் பன்னிரண்டாம் ஆண்டு ஈறாக அடையப்பெறும் வழிமுறைகளைத் திருமூலர் தம் நூலில் காட்டியுள்ளார்.

20. திருமூலர் தவஞானம் மிக்க சித்தர் என்பதும், தவராச யோகி என்பதும், அவர் படைத்த திருமந்திரம் முதன்மையான சைவ சித்தாந்த சாத்திர நூல் என்பதும் இவற்றால் தெளிவாகும்.

அடிக்குறிப்புகள்

1 தொல். பொருள். ப. 70
2 நன்னூல், நூ. 10
3 திருமந்திரம், பா. 182
4 ,, பா. 100
5 ப. இராமநாத பிள்ளை, 'திருமந்திரம்', ப. 29
6 மே. கு. நூ., ப. 5
7 ,, ப. 5
8 பெரிய புராணம், பா. 5
9 மே. கு. நூ., பா. 34
10 ,, பா. 1— 28
11 புலவர் புராணம், திருமூலர் சருக்கம், பா. 1, 2
12 திருமந்திரம், பா. 78
13 ,, பா. 79
14 ,, பா. 85
15 ,, பா. 99

16 க. வேங்கடேசன், மூலிகை மணி, ஜூன்— ஜூலை, 1989, ப. 41
17 திருவருட்பா, உபதேசக் குறிப்பு, ப. 282
18 கா. சுப்பிரமணிய பிள்ளை, தமிழ் இலக்கிய வரலாறு, ப. 366
19 சண்முகவேலன், திருமூலர் அருளிய மருத்துவ மந்திரம் 8000, ப. 40
20 திருமந்திரம் தொகைச் சிறப்பு, கழகம், சென்னை, பா. 2
21 இரா. மாணிக்கவாசகம், திருமந்திர ஆராய்ச்சி, பக். 220—221
22 மே. கு. நூ., பக். 224—231
23 திருமந்திரம், கழகம், சென்னை, பா. 2338
24 சிவஞான சித்தியார் சுபக்கம், ப. 13
25 தொல். பொருள். 176
26 தொல். பொருள். பேராசிரியர் உரை, ப. 569
27 திருக்குறள், பா. 28
28 திருக்குறள், உரைக்கொத்து, திருப்பனந்தாள் வெளியீடு, பக். 31—32
29 திருமந்திரம், பா. 63
30 டி. பி. சித்தலிங்கம், சைவ சமயத் தோற்றமும் வளர்ச்சியும், பக். 57—59
31 இரா. மாணிக்கவாசகம், நம்நாட்டுச் சித்தர்கள், ப. 202
32 திருமந்திரம், பா. 91
33 ,, பா. 69
34 இரா. மாணிக்கவாசகம், சித்தர்கள் சொன்னவை, ப. 26
35 மே. கு. நூல், ப. 30
36 இரா. மாணிக்கவாசகம், திருமந்திர ஆராய்ச்சி, ப. 68
37 பி. கோவிந்தன், தமிழர் சமயம், ப. 118
38 இரா. மாணிக்கவாசகம், சித்தர்கள் சொன்னவை, ப. 19
39 திருமந்திரம், கழகம், பா. 1
40 ப. இராமநாதபிள்ளை, திருமந்திரம், ப. 67
41 லெப. கரு. இராமநாதன் செட்டியார், திருமந்திர மாநாட்டு மலர் 8, பக். 2—3
42 ப. இராமநாதபிள்ளை, திருமந்திரம், பக். 69—70; திருமந்திரம், திருப்பனந்தாள் வெளியீடு, பக். 21—23
43 S. Sivapadasundaram, The Saiva School of Hinduism, Introduction, p. 17
Dasgupta, Surendranath., A History of Indian Philosophy, p. 19
44 க. வெள்ளைவாரணனார், பன்னிரு திருமுறை வரலாறு—2, ப. 417
45 Maraimalai Adikal, The Age of Manikkavasagar, p. 300
Meenakshisundaram, T. P., A History of Tamil Literature, p. 66
Rajamanickam, M., Development of Saivism in South India, p 34.
46 Neelakanta Sastri, K. A., The Culture and History of the Tamils, p. 117
Farquhar, J. N. & Griswold, H. D., The Religious Quest of India, p. 197

Winternitz, M., A History of Indian Literature, p. 588
47 ந. சி. கந்தையா பிள்ளை, தமிழ் இந்தியா, ப. 196
இரா. மாணிக்கவாசகம், திருமந்திர ஆராய்ச்சி, பக். 89
48 க. வெள்ளைவாரணனார், மு. கு. நூல், பக். 17—18
49 Maraimalai Adikal, op. cit., p. 300
50 M. Rajamanickam, op. cit., p. 34
51 திருமந்திரம், பா. 1646
52 C. V. Narayana Ayyar, Origin and Early History of Saivism in South India, p. 224
53 இரா. மாணிக்கவாசகம், திருமந்திர ஆராய்ச்சி, ப. 91
54 திருமந்திரம், பா. 73
55 ஜி. வரதராஜன் (ப—ர்), திருமந்திரம், முதல் பாகம், ப. 85
56 மே கு. நூ. பா. 74
57 ,, பா. 78
58 ,, பா. 81
59 ,, ப. 39, ஜி. வரதராஜன் உரை
60 இரா. மாணிக்கவாசகம், நம் நாட்டுச் சித்தர்கள், ப. 36
61 மணிமேகலை, காதை 13, அடி. 44
62 இரா. மாணிக்கவாசகம், நம் நாட்டுச் சித்தர்கள், ப. 39
63 மே. கு. நூ., ப. 41
64 சிலம்பு, பதிகம், அடி. 10
65 திருவாசகம், அச்சோ பதிகம், பா. 1
66 சித்தர் ஞானக் கோவை, அகத்தியர், பா. 5
67 திருமந்திரம், பா. 74
68 ,, பா. 80
69 ,, பா. 724
70 ,, பா. 1477
71 ,, பா. 1490
72 க. வெள்ளைவாரணனார், பன்னிரு திருமுறை வரலாறு, ப. 417
73 தாயுமானவடிகள் திருப்பாடல்கள், எந்நாட் கண்ணி, அடியார் வணக்கம், பா. 7
74 இரா. மாணிக்கவாசகம், திருமந்திர ஆராய்ச்சி, ப. 91 (மேற்கோள்)
75 மே. கு. நூ , ப. 92 (மேற்கோள்)
76 ,, ப. 92 ,,
77 ,, ப. 93 ,,
78 ,, ப. 95 ,,
79 அ. ஜெகதீசன், தமிழ் இலக்கியத்தில் யோகம், ப. 5
80 George Feverstein, Textbook of Yoga, p. 3
81 Rig Veda. p. 129
82 Bhagavad Gita, 5/24; 6/15; 6/27; 6/31; 6/32
83 தொல். பொருள். நூ. 207/6
84 மே. கு. நூ., நச். உரை, ப. 217
85 ப. இராமநாத பிள்ளை, திருமந்திரம், கழகம், ப. 241
86 திருமந்திரம், பா. 549
87 க. நாராயணன், சித்தர் தத்துவம், ப. 142

88 புறம், பா. 195
89 திருமந்திரம், பா. 554
90 ,, பா. 556
91 அ. ஜெகதீசன், தமிழிலக்கியத்தில் யோகம், ப. 85
92 திருமந்திரம், பா 557
93 மீ. ப. சோமு, சித்தர் இலக்கியம், ப. 135
94 திருமந்திரம், பா. 563
95 மீ. ப. சோமு, மு. கு. நூ., ப. 135
96 திருமந்திரம், பா. 568
97 ,, பா. 559
98 ,, பா. 560
99 ,, பா. 561
100 ,, பா. 562
101 ,, பா. 564, 565
102 ,, பா. 566
103 ,, பா. 246
104 ,, பா. 584
105 ,, பா. 589, 592, 591, 590, 589
106 ,, பா. 593
107 ,, பா. 296
108 ,, பா. 598
109 ,, பா. 617
110 ,, பா. 620, 621
111 திருமந்திரம், பா. 624
112 ,, பா. 640
113 ,, பா. 800
114 ஜி. வரதராஜன், திருமந்திர நெறி, ப. 78
115 ப. இராமநாத பிள்ளை, திருமந்திரம், கழகம், ப. 813
116 இரா. மாணிக்கவாசகம், திருமந்திர ஆராய்ச்சி, ப. 253
117 அரு. இராமநாதன், சித்தர் பாடல்கள், சிவபோகசாரம், பா. 5
118 திருமந்திரம் பா. 848
119 ஜி. வரதராஜன், திருமந்திர நெறி, ப. 85
120 திருமந்திரம், பா. 852
121 ,, பா. 885
122 ,, பா. 956
123 ,, பா. 640
124 ,, பா. 645
125 ,, பா. 646
126 ,, பா. 673
127 ,, பா. 674, 675
128 ,, பா. 677
129 ,, பா. 679
130 ,, பா. 680, 681, 682
131 ,, பா 683
132 ,, பா. 684, 686
133 ,, பா. 690

புடைவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை
அடையப்பட் டார்களும் அன்பில ரானார்
கொடையில்லை கோளில்லை கொண்டாட்ட மில்லை
நடையில்லை நாட்டில் இயங்குகின் றார்கட்கே

— *திருமந்திரம் 209*

இயல் — இரண்டு

சமுதாய வாழ்வும் திருமந்திரச் சிந்தனைகளும்

சமுதாயம் என்றால் என்ன?

சமுதாயம் என்பது குறித்து அறிஞர்களிடையே பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. சமுதாயத்திற்கு அடிப்படை குடும்பம் என்பதே அனைத்துக் கருத்துகளின் தொகுப்பாகவும் முடிவாகவும் அமைகிறது.

> ''குடும்பம் என்ற மூலக் கருவிலிருந்துதான் சமூகம் வளர்ந்திருக்கிறது'' [1]

என்கிறார் பாஸ்கல் கிஸ்பர்ட். பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து கூட்டு வாழ்க்கை மேற்கொள்ளும்போது சமுதாய உணர்வு மலர்ச்சியடைகிறது. இதனை,

> ''கூட்டு வாழ்க்கை அல்லது மனித இன அமைப்புகளின் மேம்பாடான வடிவம் சமுதாயம்'' [2]

என்னும் 'லெஸ்லி'யின் கூற்று உறுதிப்படுத்துகிறது. அவரே சமுதாயம் என்னும் பொருள் தரும் 'சொஸைடி' என்ற ஆங்கிலச் சொல் இலத்தீன் மொழியிலிருந்து வந்திருக்கலாம் என்று விளக்குகிறார். [3]

மனித இனத்தில் என்று ஒருமைப்பாட்டு உணர்வு தோன்றிப் பிறருக்குப் பரிவுகாட்டும் பண்பாடு அரும்பியதோ அந்தத் தொன்மைக் காலத்திலேயே சமுதாயம் உருவாகியிருக்கலாம்.

> ''மனிதனது சிந்தைக்கும் அறிவுக்கும் எட்டாத வகையில் அது (சமுதாய அமைப்பு) காலமறியாத— அந்தத் தோன்றிய

> நாள்தொட்டு மெல்லமெல்ல வளர்ந்து, உருப்பெற்று, காலத்தேவன் கையிற்பட்டுப் பெறவேண்டிய மாறுதல் களைப் பெற்று, வளர்ந்து, வாழ்ந்து வரும் ஒப்பற்ற ஒன்று என்பதே தோற்றம்'' 4

என்று அ. மு. பரமசிவானந்தம் சமுதாய அமைப்பின் தோற்றம் குறித்துக் கூறியுள்ளது கருதத்தக்கது.

தனிமனிதர்கள் ஒன்று சேர்ந்து உருவாக்கியது குடும்பம்; குடும்பங்கள் பல ஒன்று சேர்ந்து உருவானது ஊர்; ஊர்கள் பல ஒன்று சேர்ந்து உருவானது சமூகம்; சமூகங்கள் பல ஒன்று சேர்ந்து உருவான ஒரு பேரமைப்பு சமுதாயம்.

தமிழ்ச்சான்றோர் அன்றைய சமுதாயத்தின் இயல்பிற்கும் மரபிற்கும் ஏற்ப மக்கள் வாழ்க்கை முறைகளைப் பாகுபாடு செய்துள்ளனர். தொல்காப்பியர்,

> **வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே**
> **நிகழ்ச்சி அவர்கட் டாக லான 5**

என்று நூற்பா வகுக்கின்றார். இதற்கு விளக்கம் தர முனைந்த பேராசிரியர்,

> ''வழக்கென்று சொல்லப்படுவது உயர்ந்தோர் வழங்கிய வழக்கமே; என்னை? உலகத்து நிகழ்ச்சியெல்லாம் அவரையே நோக்கினமையின். அவரையே நோக்குத லென்பது அவராணையான் உலக நிகழ்ச்சி செல்கின்ற தென்றவாறு'' 6

என்று கூறுகின்றார். இதனால், உயர்ந்தவர் வரையரை செய்தன வற்றை விதிகளாகக் கொண்டு சமுதாயம் இயங்கியது என்பது பெறப்படுகிறது.

சமுதாயச் சிந்தனையாளரான திருமூலர் மனித இனத்திற்கு வகுத்துவைத்த வழக்கங்கள், வழிமுறைகள், விதிமுறைகள் மிகப்பல. அவை, மனிதன் தன்னையொத்த பிறிதொரு மனிதனின் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொண்டு, ஒழுக்கநெறி நின்று, பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பி, ஆரவாரமும் வேறுபாடும் நிறைந்த சாதிகள், மதங்கள், சடங்குகள், மூடநம்பிக்கைகள் முதலியன வற்றிற்கு இடமளிக்காது, அன்பு, அறிவு, அருள் மிக்கவனாக வாழவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன.

சமுதாயமும் அன்பும்

அன்பு

அன்பு என்பது அகத்தே உணரும் மென்மையான உணர்வு; இதற்குப் புறவடிவம் என்ற ஒன்று இல்லை. அன்பு ஒருவனை உந்த, அவன் ஆக்கம் தரும் செயலில் ஈடுபடுவான்; அதுவே அன்பின் அடையாளமாகக் கருதப்படும். அன்பு தெரிந்தவர் களிடையேயும் பழகியவர்களிடையேயும் மலரக் கூடியது. ஆனால், அருள் என்னும் அன்பீன் குழவி எல்லா மனிதரிடையேயும் வேறுபாடு காண இயலாத நிலையில் தோன்றுவது. உலகில் அன்புடையோர் பலர்; அருளுடையோர் மிகச் சிலரே. அன்பும் அருளும் மனித சமுதாயத்தை உயர்த்துவன ஆகும்.

இறைவனிடம் ஏற்படும் அன்பு முதிர்ந்து இறையன்பு ஆகும்; உறவினரிடம் ஏற்படும் அன்பு கனிந்து உறவன்பு ஆகும்.

இறையன்பு

மனிதனுக்கு பயிற்சியினாலும் உள்ளுணர்வினாலும் இறைவன்பால் உருவாவது இறையன்பு எனப்படும். திருமூலர் அன்பும் சிவமும் ஒன்றே, இரண்டல்ல என்னும் கருத்தினர். இதனைத் திருமந்திரம்,

> **அன்பும் சிவமுமிரண் டென்பர் அறிவிலார்**
> **அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்**
> **அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்**
> **அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே [7]**

என்று கூறுகிறது.

அன்புதான் சிவம்; சிவந்தான் அன்பு. அன்பைக் கண்ணால் காண இயலாது; உள்ளத்தால் உணர முடியும். அதுபோன்றே எளிய மானிடர் சிவத்தைக் கண்ணால் காண முடியாது; ஆனால் மெய்யுணர்வு பெற முடியும்; உணர முடியும்.

அன்பின் முதிர்வாகச் சிவன் விளங்குகின்றான். இறைவன் எல்லா உயிர்களிடமும் நீக்கமற நிறைந்துள்ளான் என்பதனை நன்குணர்ந்து, எல்லா மனிதர்களையும் சிவனாகப் பார்க்கும் அன்பு உள்ளம் உடையவர்களுக்கு அன்பும் சிவமும் ஒன்று என்பது தெளிவாகும். மாணிக்கவாசகரும்,

> **ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த**
> **இன்பமே என்அன்பே [8]**

என்று சிவனைக் குறிப்பிடுகின்றார். இறைவன்பால் அன்பு செலுத்துபவர்களுக்குத் தாயினும் நல்லவனாகச் சிவன்

விளங்குவான்.[9] சிவனைக் காதலித்து வணங்கினால்,[10] அவன் வெளிப்பட்டு அருளை வழங்குவான்.[11]

உறவன்பு

உற்றார் உறவினர்பால் ஏற்படும் இயல்பான பாசம் 'உறவன்பு' எனப்படும். ''இவ்வுலகில் இறந்து கிடப்பவரிடம் ஏற்பட்ட அன்பின் காரணமாகச் சற்று நேரம் அழுது, பின் சடலத்தை விட்டு அகன்று செல்வர் மக்கள்''[12] என்றும், ''வறுமையில் வாடுபவர்களிடம் சுற்றத்தினரும் அன்பு செலுத்த மாட்டார்கள்; அன்பில்லாத காரணத்தால் வறுமையாளர் துன்பம் கண்டு இரங்கி அவருக்கு உதவாது மேலும் துன்பத்தில் உழல விட்டு விலகிச் செல்வர் மக்கள்''[13] என்றும் திருமந்திரம் குறிப்பிடுகிறது. இறந்தவரது உடலைக் கண்டு அழும் செயல் அன்பின் காரணமாக ஏற்படுவது என்பதும், வறியவருக்கு உதவாது அவரை விட்டு விலகுவது அன்பில்லாத காரணத்தால் ஏற்படுவது என்பதும் பெறப்படுகின்றன. இதனால்தான் திருவள்ளுவரும்,

பொருளில் லார்க்கிவ் வுலகில்லை[14]

என்று குறிப்பிடுகின்றார். உறவின் காரணமாக ஏற்படும் அன்பும் அன்பின்மையும் பாசத்தின்பாற்பட்டதாகவும், பணத்தின்பாற் பட்டதாகவும் உள்ளன என்று கொள்ளுதற்கு இடமுண்டு.

அன்பினால் வன்முறை குறையும்

மனிதனுக்கும் இறைவனுக்கும் அன்பினால் ஏற்படும் பிணைப் பினையும் அதன் சிறப்பினையும் திருமந்திரப் பாடல்கள் பல சுட்டிக் காட்டுகின்றன.[15] இப்பிணைப்பால், மனிதரிடையே பொருளால் ஏற்படும் உயர்வு தாழ்வுக்குத் தருவதான முதன்மை நீங்கும்; பண்புக்கு முதன்மை கிட்டும். அனைவரையும் இறைவ னாகப் பார்க்கும் பக்குவத்தை இன்றைய சமுதாயம் பெற்று விட்டால் வன்முறைகளுக்கு இடம் இராது. ஒற்றுமையும் ஒருமைப்பாட்டுணர்வும் அன்பு வழியினால் உருவாகும் என்பதைத் திருமந்திரம் உணர்த்துகிறது.

சமுதாயமும் அறமும்

மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற[16]

என்றும்,

அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்[17]

என்றும் அறத்திற்குச் சிறந்த விளக்கங்களைத் தருவர் திருவள்ளுவர். மனத்தூய்மையே அறம் என்பதும், பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல் ஆகியன இல்லாமையே அறம் என்பதும் குறட்பாக்களால் அறியப்படுவனவாகும்.

> ''நன்கு வரையற செய்யப்பட்ட விதிமுறைகளால் உருவாக்கப்படும் அறச்சூழ்நிலைகளையும், பழக்க வழக்கங்களையும், பற்றுக்களையும் விளக்கி உரைப்பதற்கு 'எதோசு' என்ற சொல்லே பயன்படுகிறது என்றும், உலகம் முழுவதும் அறிவியல் கொள்கையின் வெளிப்பாடே வழக்காற்று நெறிமுறை என்றும் ஹெக்கல் என்னும் அறிஞர் விளக்குகிறார்'' [18]

— இக்கருத்தும் ஈண்டுக் கருதத்தக்கது.

அறம் சார்ந்து தோன்றிய பழக்க வழக்கங்கள் மேலை நாட்டிலும் நம் நாட்டிலும் ஒழுக்கத்தை வலியுறுத்துவனவாக உள்ளன. ஒழுக்கத்தின் அடிப்படையில் நன்மை தீமைகள் வரையறை செய்யப்படுகின்றன. இவற்றின் தொடர்பால் இருவினைகள் தோன்றி உயிரைப் பற்றுகின்றன; வினைப்பற்று உள்ளவன் பிறவி தொடரும்; பிறவி தொடர்ந்தால் உயிர் இறைவனைச் சென்று சேர முடியாது. எனவே உயிர் பேரின்பத்தில் திளைப்பதற்கான அடிப்படையாக ஒழுக்கத்தை வற்புறுத்தும் அறம் விளங்குகிறது எனலாம்.

திருமந்திரம் காட்டும் அறம்

சமுதாயத்தில் நல்லன எல்லாமே அறம் என்று பொதுவாகக் கொண்டாலும் அறம் என்னும் சொல் (1) ஒழுக்கம், (2) வழக்கம், (3) நீதி, (4) கடமை, (5) ஈகை, (6) புண்ணியம், (7) அறக் கடவுள், (8) சமயம் என்னும் எட்டுப் பொருள்களில் வழங்கி வருகின்றது.

திருமந்திரம்— (1) கொல்லாமை, (2) புலால் மறுத்தல், (3) நல்குரவு, (4) அறம் செய்யாமை, (5) கல்லாமை, (6) கள்ளுண்ணாமை, (7) திருக்கோயிலிழிவு, (8) மயேச்சுர நிந்தை, (9) கூடா ஒழுக்கம், (10) மோட்ச நிந்தை, (11) பொய் கூறல், (12) அவா ஆகியவற்றை அறத்திற்குப் புறம்பானவைகளாகக் குறிப்பிடுகின்றது.

சங்கப் பாடல்களில் நீதி, சமூகத் தொண்டு, இன்சொல், அன்பு, அரசியல் முறைமை, தியன விலக்கல் என்று அறம் பல நிலைகளில் பயின்று வந்துள்ளது.[19]

திருமந்திரம் காட்டும் சமுதாயச் செய்திகள்

1) ஒழுக்க அறம்

வேதத்தில் குறிப்பிடப்படும் அறங்களை மனிதன் ஓதி உணர்தல் வேண்டும் என்று திருமந்திரம் அறிவிக்கிறது.[20] அக்காலத்தில் வழக்காற்றிலிருந்த பதினெட்டு மொழிகள் சொல்லும் அறத்தைக் கடைப்பிடித்தல் நன்று என்றும் கூறுகிறது.[21] வேதமும் நூல்களும் குறிப்பிடும் அறத்தினைக் கடைப்பிடிப்பவர் தவத்தினை மேற்கொள்வர்; முத்தியும் அடைவர். இதனை,

திறந்தரு முத்தியுஞ் செல்வமும் வேண்டின்
மறந்தும் அறநெறியே ஆற்றல் வேண்டும்[22]

என்று திருமந்திரம் சுட்டுகின்றது.

அறத்தினை அந்தணர் வாய்மொழி வாயிலாகக் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும்;[23] பின் அதனைக் கடைப்பிடித்து அவ்வழி நிற்றல் வேண்டும்;[24] அவ்வாறு நிற்பார்க்குச் சிவனருள் கிட்டும்.[25] சிவனது அருளைப் பெற்றவர்கள் பேரின்பத்தில் திளைப்பர். எனவே, ஒழுக்கம் அட்டாங்க யோகத்தின் கூறுகளாகிய இயம நியமங்களோடு ஒப்பவைத்து எண்ணுதற்குரியதாகின்றது.

2) இன்சொல்

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று[26]

— என்பது வள்ளுவர் வாக்கு. திருமந்திரம் இந்த இன்சொல் கூறும் அறத்தைச் சுட்டுகின்றது.

இன்சொல் பிறரை ஏமாற்றும் நோக்கத்துடன் பயன்படுத்தலும் ஆகாது என்கிறது திருமந்திரம்.

அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்[27]

என்னும் பாடல் அடியால் இதனைத் தெளியலாம். இன்சொல் கூறுவதோடு இனியனவற்றை நினைப்பவர் உள்ளத்தில் இறைவன் வந்து தங்குவதோடு அவர்களிடம் உறவாடுவான்; உறவாடி மனத்தில் பின்னிப் பிணைந்து நிற்கும்போது நல்லன நினைப்பவரது உள்ளத்தில் விளையாடவும் செய்வான் இறைவன். இன்சொல்லால் இறைவனோடு மனிதனுக்கு ஏற்படும் பிணிப்பாகிய பயன்,

நல்ல வசனத்து வாக்கு மனாதிகள்
மெல்ல விளையாடும் விமலன் அகத்திலே[28]

என்னும் திருமந்திரப் பாடலால் தெளிவாகும்.

3) பொய் கூறாமை

உண்மைக்கு மாறானது பொய். பிற உயிர்களுக்குத் தீங்கு ஏற்படாது நன்மை விளையும் என்றால் பொய்யும் ஏற்கத் தக்கதே என்பது வள்ளுவர் வாதம்.[29] ஆனால், பொய்யால் துன்பம் ஏற்படும் என்று கூறி, அதனை விலக்கல் வேண்டும் என்கிறது மணிமேகலை.[30]

திருமந்திரம் பொய் என்ற சொல்லை 'இந்த உலகம் பொய் யானது' என்னும் பொருளில் எடுத்தாளுகிறது. 'மெய்' என்ற சொல் ஆதியும் அந்தமும் இல்லாத இறைவனைக் குறிக்கும் ஒரு சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது.

''இவ்வுலகில் இறைவனை உணர்ந்து கொள்ளாது பொய் பேசி அதனால் ஏற்படும் துன்பத்தில் வருந்தும் மனிதன், உண்மைப் பொருளான— மெய்ப் பொருளான— சிவனை நினைத்து, அவன் பேரைச் சொல்லி மனத்தை ஒருநிலைப் படுத்தினால் வானுலகில் உள்ளவர்களும் தொழுகின்ற தகுதியை மண்ணிற் பெறுவான். அந்த நிலைக்குத் தன்னை உண்மையோடு நினைப்போரையெல்லாம் உயர்த்துவான் சிவன்''[31] என்பது திருமந்திரம் தரும் செய்தி.

மற்றோரிடத்தில் திருமந்திரம், ''உண்மைப் பொருளான சிவனது நினைவில் சார்ந்துள்ள துறவிகள், பொய்யான சொற் களை உண்மைபோலப் பேசும் பெண்களோடு சிற்றின்பத்தில் ஈடு பட்டிருந்தாலும் அவர்களுடைய மனம் சுழுமுனையில் இலயித் திருக்கும்''[32] என்று குறிப்பிடுகிறது. இதனால் விந்துசெயம் பெற்ற துறவிகள் சிற்றின்பத்தில் ஈடுபட்டாலும் விந்து நீக்கம் செய்யாது, உலக நினைவற்று, மெய்ப்பொருளோடு ஒன்றி யிருப்பர் என்னும் கருத்து அறியப்படுகிறது.

4) கொல்லாமை

இறை வழிபாட்டில் 'பலியிடுதல்' இடம் பெறுகின்றது. பலியாக உயிர்களும், பூ, மலர் முதலாயினவும், மும்மலங்களும் மனமும் இடப்படுகின்றன. பிற உயிரினங்களைப் பலியிடுதல் பொதுவாகச் சக்திக்குரிய வழிபாடாகக் கருதப்படுகின்றது. இத்தகைய வழிபாட்டைத் திருமந்திரம் கடிந்துரைக்கிறது:

பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்

நற்றார் நடுக்கற்ற தீபமுஞ் சித்தமும்
உற்றாரும் ஆன அமர்ந்திடம் உச்சியே[33]

என்னும் இத் திருமந்திரப் பாடல் கொல்லாமைக்குச் சிறந்த சான்றாகும். மலர், அதன் காம்பிலிருந்து நீங்கிய நிலையில் பூசைக்குரியதாக அமையும் பொழுது, மலருக்கு அல்லது செடிக்கு அணுக்களின் இழப்பு இல்லை. இது, புறவழிபாடு. இரண்டு கண்களாகிய மலர்களை இணைத்து மாலையாக்கி, உச்சியில் மனத்தினைப் பதித்து இருப்பவரது நெற்றியில் ஒளியாக இறைவன் வெளிப்படுவான் என்பது அகவழிபாடு. இவ்வக வழிபாட்டில் அணுக்களுக்கும் அழிவில்லை. இவ்வாறு திருமந்திரம் கொல்லாமையை வலியுறுத்துகிறது.

5) புலால் மறுத்தல்

கொல்லாமையை அடியொற்றிப் புலால் மறுத்தல் இடம் பெறுகிறது. திருவள்ளுவர் 'புலால் மறுத்தல்' என்னும் தலைப்பில் பத்துக் குறட்பாக்களில் ஊனுண்ணும் செயலைக் கடிந்து கூறுகின்றார்.[34] திருமந்திரம் புலால் உண்பவரைப் 'புலையர்' என்கிறது; ஊன் உண்பவர்களுக்கு அம்மைப்பேறு கிட்டாது; தான் செய்த வினைக்கேற்ற வடிவம்பெற்று வாழும் அழிவற்ற ஆன்மாவைத் தன் உடலினின்று வெளியேற்றும் செயலை, ஊன் விருப்பம் கருதிச் செய்வதால், அவ்வான்மா பெறவேண்டிய வினைப்பயனைப் பெறாது உடல் அழிக்கப் பெறுகிறது; அதனால் பிற உயிரைக் கொல்பவர் இறைவனின் விருப்பத்திற்கு மாறான செயலில் ஈடுபடுபவர் ஆவர். அதனால் ஊன் உண்பவர்கள் இறப்பிற்குப் பின் நரகத்தில் உழல்வர் என்று கூறி மனிதனை எச்சரிக்கிறது திருமந்திரம்.[35] இதனால், புலால் உண்ணுதல் சமுதாயத்தால் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று என்பது புலனாகும். இராமலிங்க அடிகளாரும் உயிர்வதைக்கு வருந்திப் பல பாடல்களைப் புனைந்துள்ளார்.[36]

6) கள்ளும் காமமும்

சமுதாயத்தில் கள்ளுண்ணுதலும், காமவேட்கையும் அறமற்ற செயல்களாகக் கொள்ளத்தக்கவை. சக்தியை வழிபடும் சாக்த சமயத்தினர் கள்ளை விரும்புவர். கள்ளுண்பதில் தவறேதும் இல்லை என்று கூறுவாருமுளர். அது தவறுதான் என்பதை,

சத்தியை வேண்டிச் சமயத்தோர் கள்ளுண்பர்
சத்தி அழிந்தது தம்மை மறத்தலால்
சத்தி சிவஞானந் தன்னில் தலைப்பட்டுச்
சத்திய ஞானஆ னந்தத்திற் சார்தலே[37]

என்னும் திருமந்திரப் பாடல் சுட்டுகின்றது. கள், உண்டாரது சக்தியை அழிக்கின்றது. அப்பொழுது அவர் தம்மை மறப்பர்; தம்மை மயக்கத்தால் மறந்திருப்பவரால் சக்தியை வழிபடவோ, அதனால் ஏற்படும் சத்திய ஞான ஆனந்தத்தில் திளைத்திடவோ இயலாது. எனவே, கள்ளுண்ணுதல் திருமூலரால் கடியப்படுகிறது.

கள் உண்பவரை ஒழுக்கத்தின் நீங்கியவர் என்றும்,[38] கருத்தற்று இருப்பர் என்றும்[39] கூறும் திருமந்திரம், அவர்களைச் சமுதாயம் மூடராகக் கருதும் என்று எச்சரிக்கிறது.[40]

கள்வெறி பின்னர்க் காமத்தைத் தூண்டும். கள்ளையும் காமத்தையும் கீழ்மக்களே விரும்புவர்; நல்லோர் அவற்றை விரும்பார்.[41] காமத்தை நாடுபவர்கள் அதையே விரும்பி மயங்குவர்; வேறு எண்ணம் இல்லாதவராக இறைவனை மறந்திருப்பர்.[42] இத்தகையோர் மகளிரை விரும்பிச் சிற்றின்பத்தில் ஈடுபட்டிருப்பரே அன்றி, ஞானத்தைத் தழுவி, அதன் பயனாகிய முத்தியை அடையவேண்டும் என்னும் எண்ணம் எழாதவராய் இருப்பர். இதனால் கள்ளும் காமமும் கடிந்து ஒதுக்கப்பட வேண்டியனவாகக் கருதப்படுகின்றன.

7) களவு

தனக்குச் சொந்தமில்லாத பிறருடைய பொருளை அவரறியாது தன்னுடைமை ஆக்கிக் கொள்ளுவது 'களவு' ஆகும். இதனைத் திருமந்திரம்,

வெவ்விய னாகிப் பிறர்பொருள் வவ்வன்மின்[43]

என்று கூறுகின்றது. 'வெவ்வியன்' என்னும் சொல் கொடியவன் என்ற பொருளைத் தருகின்றது. இப்பாடலில், வெவ்வியன் என்னும் இச்சொல் ஆழ்ந்து நோக்கத்தக்கது. சாதாரண நிலையிலுள்ள மனிதன் சில தீய நோக்கங்களை உட்கொண்டு, அதன் காரணமாக வெவ்வியன் ஆகின்றான்; அவ்வாறு அவன் வெவ்வியனாகும் பொழுதுதான் பிறர் பொருளைக் களவாடுகிறான். அதனால், திருமந்திரம் சமுதாயத்தைப் பார்த்துச் சொல்லும்போது 'வெவ்வியனாகிப் பிறர் பொருளைத் திருடாதீர்' என்று அறிவுறுத்துகிறது.

பாவச் செயல்களைத் தொகுத்துக் கூறி, அவற்றை நீக்கிச் சிவனடி சார்ந்து இன்பம் காணவேண்டும் என்று வலியுறுத்தும்,

கொலையே களவுகள் காமம் பொய்கூறல்
மலையான பாதகமாம் அவை நீக்கித்

தலையாஞ் சிவனடி சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்
கிலையாம் இவைஞானா னந்தத் திருத்தலே [44]

என்னும் திருமந்திரப் பாடலில் கொலையை அடுத்துக் களவு கூறப்பட்டிருத்தல் அதன் தீமையையும் கொடுமையையும் உணர்த்துவதாகும்.

எனவே, கொலை, களவு, கள், காமம், பொய்கூறல் முதலான பாதகங்களை அறவே நீக்கி, அன்பும் அறமும் சார்ந்த ஒழுக்க நெறி நின்று சிவனடி சார்ந்தோர் பேரின்பமாகிய வீடுபேற்றைப் பெறுவர். திருமந்திரம் சமுதாயத்திற்குத் தரும் அறம் தொடர்பான கருத்து இதுவேயாகும்.

சமுதாயமும் ஈகையும்

திருமந்திரத்தில் இடம் பெறும் மற்றொரு சமுதாயச் சிந்தனை 'ஈகை' பற்றியதாகும்.

வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து [45]

என்று திருக்குறள் ஈகையை வரையறை செய்கின்றது. வறியவர்களுக்கு ஒன்றைக் கொடுக்கும் போது பயனைக் கருதக்கூடாது; அதுவே ஈகை. நல்ல நிலையில் வாழ்பவர்களுக்குக் கொடுப்பனவெல்லாம் பயன் கருதிய செயல்கள்; அவை ஈகை ஆகா.

ஈகை, ஓர் அறம். மணிமேகலை ''அறமெனப்படுவது யாதெனக் கேட்பின்...........'' [46] என்னும் பகுதியில் இதனை உணர்த்துகிறது.

ஈகை — இடுதல்: வேறுபாடு

பயன் எதனையும் கருதாது உணவு, உடை முதலானவற்றைக் கொடுப்பது 'ஈகை'; பயன் கருதிக் கொடுப்பது 'இடுதல்'.

ஈகை தரும் இன்பம்

ஈதல் இன்பம் தருவது. இதனை வள்ளுவர் 'ஈத்துவக்கும் இன்பம்' என்பர். [47] முடிந்த அளவு பொருள்களைப் பிறருக்குக் கொடுக்கலாம்; கொடுப்பதால் இன்பம் ஏற்படும். இதனை அறிந்தும் பிறருக்குக் கொடுக்காதவர்கள் உளர்; அவர்கள் தமக்கு மட்டும் தம் பொருள் சொந்தம் என்று சேமிப்பர்; ஒரு நாள் அவர்கள் செல்வத்தைக் கள்வர் கொள்ளை இடுவர்; அவர்களுக்குத் துன்பமும் இழைப்பர்.

திருமூலர் ஈகையைப் பல நிலைகளில் ஆய்கிறார். பொருளாகவும், உணவாகவும், உடையாகவும், பொன்னாகவும் ஈகைக்குரிய பொருள்கள் பேசப்படுகின்றன. திருமந்திரம் ஈகையை ஏற்றுக் கொள்பவர்களை (1) பசு, (2) இரவலர், (3) தவமுனிவர்கள், (4) பிச்சை ஏலாத முனிவர்கள், (5) சிவபெருமான் ஏற்கும் பிச்சை என்று பிரித்துக் காண்கிறது.

உண்டியும் உடையும் உறையுளும் கைம்மாறு கருதாது வறியவர்க்குக் கொடுப்பது ஈகை; இவற்றைக் கொடுக்கும் நிலையில் செல்வச் செழிப்பு இன்றேல் ஈகையை மேற்கொள்வது அரிது. அதனால் மக்கள் தங்களால் முடிந்த அளவு ஈகையை மேற் கொள்ளலாம். ''எளிய நிலையில் பசுவுக்குக் கைப்பிடி அளவு புல்லை உணவாகக் கொடுப்பது யாவர்க்கும் ஏற்ற செயல்; தான் உண்ணும் உணவில் ஒரு கைப்பிடி உணவினைப் பிறருக்குக் கொடுப்பது என்பதும் எல்லோருக்கும் எளிய செயல்'' என்கிறது திருமந்திரம்.[48] உண்ணும் உணவில் ஒரு கைப்பிடி குறைவதால் பெரிய இழப்புமில்லை; பசித்துன்பம் மிகுவதுமில்லை. ஆனால், ஈகைக்குணம் மறையாது பிறருக்கு நலம் பயக்கும்; சமுதாயத் திற்கு நன்மை உண்டாகும். பத்துப் பேரிடம் பத்துக் கைப்பிடி உணவு பெற்றவனும் தன் பசி நீங்கி உயிர் வாழலாம். கைப்பிடி உணவே ஈகைக்குரிய வித்தாகிறது.

ஈயாதார் செல்வம்

பிறருக்குக் கொடுப்பதால் ஏற்படும் இன்பமறிந்தும் கொடுக்காமல் வாழும் மக்களைத் திருமந்திரம்,

> இன்பம் அதுகண்டும் ஈகிலாப் பேதைகள்[49]

என்கிறது.

ஈயினது தலையளவும் இரவலர்க்குக் கொடுக்காதவர்கள் பலர் உளர். இவர்களது நன்றியில் செல்வம் இறுதியில் வீணாகி எவர்க்கும் பயன்படாது அழியும். இதனை,

> ஓட்டித் துரத்திட் டதுவலி யார்கொள[50]

என்று திருமந்திரம் உணர்த்துகிறது. இக்கருத்தையே பழமொழி

> ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்[51]

என்கிறது திருமூலர் குறிப்பிடும் 'வலியார்' உடலால் வலியவர் மட்டும் அல்லர்; உள்ளத்தாலும் தீயவர்; பிறர் பொருளைத் திருடும் கள்வர் ஆவர்.

ஞானியர்க்கும் வறியோர்க்கும் அளிக்கும் ஈகை

மனைவி மக்களோடு நன்னிலையில் வாழும் ஓர் ஆண்மகன் தான் ஈட்டிய செல்வத்தைக் கொண்டு பிறருக்கு ஆடை வழங்கியதை,

மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கியது [52]

என்று திருமந்திரம் குறிப்பிடுகின்றது. இதில் உள்ள 'முக்கோடி' என்பதற்கு, ''தாழ்ந்தார்க்கும், ஒத்தார்க்கும், மிக்கார்க்கும் புத்தாடை வழங்குதல்'' என்று விளக்கம் கூறுகிறார் ஜி. வரதராசன். [53]

பயன் கருதித் தனக்கு நன்மை விளைய வேண்டும் என்ற நோக்கத்தோடு சிவஞானிகளுக்கு அன்னம் இடுதலைத் திருமந்திரம் 'இடுதல்' என்று சுட்டுகின்றது. [54] எனவே உலக நன்மைக்காக வாழும் ஞானிகளைத் தேடிச் சென்றேனும் உணவளித்தல் சிறந்தாகும்.

சீடனுக்குச் சிவ ஒளியைக் கொடுப்பவரே நல்ல குரு. அவருக்குச் சீடன் தன்னிடம் உள்ள பொருளையும் உடலையும் உயிரையும் காணிக்கையாக்குதல் வேண்டும். [55]

அம்மைப் பயன் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு உள்ள சீடன் தன்னிடம் உள்ள 'எள்' அளவு பொன்னையும் குருவுக்குக் கொடுப்பானாயின் அதன் பயனாக அவனுக்கு இம்மையில் சித்திகளும் போகமும், மறுமையில் வீடுபேறும் ஏற்படும். [56] பொன்னைப் பெற்ற குருவும் அதனைச் சமுதாய நலனுக்காகப் பயன்படுத்துவார்.

சிறப்புடைய சிவஞானியர்களுக்கு உணவளிப்பது அறம் என்று நூல்கள் வாயிலாக அறிந்த பின்னும் மனிதர்கள் கிணறு குளங்களுக்கு அருகே உலகச் சிந்தனையின்றிச் சிவசிந்தனை மட்டுமே கொண்ட ஞானியரை அழைத்துவந்து உணவளிக்காமல் உள்ளனரே என்று திருமூலர் வருந்துகிறார். [57]

சிவஞானியர்க்கு உணவளிப்பது மிகவும் சிறந்தது என்பதைத் திருமந்திரம்,

பண்ணிடில் ஞானிஊண் பார்க்கில் விசேடமே [58]

என்றும்,

தாமகிழ்ந்து
உண்டது மூன்று புவனமும் உண்டது [59]

என்றும் கூறுகிறது. சிவஞானியர் உண்ட உணவு மூன்று உலகங்களிலும் உள்ள மக்கள் உணவு உண்டதற்கு ஒப்பு. இத்தகைய நிகழ்ச்சி வில்லிபாரதத்திலும் இடம்பெறுகிறது கண்ணன் பருக்கை உண்டு பசி நீங்கியதால் முனிவரது பசியும் நீங்கியது என்பது பாரதக் குறிப்பு. [60]

தவசிகளுக்கு அளித்த பொருள் மும்மூர்த்திகளுக்கும் மூவேழு சுற்றத்தாருக்கும் அளித்ததற்கு ஒப்பாகும். [61] அந்தணர்களுக்கு ஆயிரம் நகரங்களைத் தானமாகக் கொடுப்பதால் ஏற்படும்

பயனைக் காட்டிலும் உயர்ந்தது; கோவில்கள் ஆயிரம் கட்டுவதால் ஏற்படும் பயனைக் காட்டிலும் சிறந்தது.[62] இத்தகைய ஞானியர் உண்ட உணவின் மிச்சத்தை உண்டாலே முத்தி கிட்டும்.[63] இதனை,

> சிந்தந் தெளிந்தவர் சேடம் பருகிடின்
> முத்தியா மென்றுநம் மூலன் மொழிந்ததே [64]

என்னும் மூலன் கூற்று உணர்த்துவதாகத் திருமூலர் தெரிவிக்கிறார்.

சிவபெருமான் சிவனடியவரது காமம் கெடும் பொருட்டுச் சுவாதிட்டான சக்கரத்தில் உள்ள பிரமன் தலையைக் கொய்தான் என்பதும், சிவனடியாரது சீவபோதம் கெடும்பொருட்டு விந்தினையே பிச்சையாகப் பெற்றான் என்பதும் 'சிவன் பெற்ற பிச்சை'யாகத் திருமந்திரம் மூலம் அறியப்படுகின்றன.[65]

ஏமாற்றுவார்க்குத் தரும் ஈகை கடியப்படுதல்

> தோமாறும் ஈசற்குந் தூய குரவற்கும்
> காமாதி விட்டோர்க்குந் தரல்தந்து கற்பிப்போன் [66]

என்னும் திருமந்திரப் பாடல் குற்றமற்ற குருவிற்கும் தூய்மையான பெரியோர்க்கும், காமம், வெகுளி, மயக்கம் ஆகியன விட்டவர்களுக்கும் கொடுக்க வேண்டியனவற்றைக் கொடுத்து, அவரது மனம் நிலைமாறாது இலங்குவதற்குத் துணைநிற்பவன் நரகத்தில் சென்றுபட மாட்டான் என்கிறது. இத்தகையோர்க்கு அன்றி ஏனையோர்க்கு ஈதலாகாது என்பது கருத்து.

ஒழுக்கமும் தவமும் இல்லாதவர்க்குக் கொடுப்பது பருவ காலம் கடந்தபின் செய்யப்படும் பயிர் உழவனுக்குத் தக்க பலனைக் கொடுக்காதது போல வீணாகும்; சீடனுக்கு ஒளியைக் காட்டாத சிவகுருவால் ஒளியைக் காட்ட இயலா நிலை ஏற்படும் என்பதால் ஒழுக்கமும் தவமுமிலார்க்குக் காணிக்கை தரத் தேவையில்லை.[67]

இறைவனைச் சார்ந்து நிற்காதவர்க்குக் கொடுப்பது பெரும் பிழை.[68] இறைவனை எண்ணாது கொடுப்பவரும் ஏற்பவரும் நரகில் இடர்ப்படுவர்.[69] எனவே, சிவ சிந்தனையோடு 'எல்லாம் அவன் செயல்' என்ற எண்ணத்தோடு சீடன், சிவகுரு ஆகிய இருவரும் செயல்படுதல் வேண்டும்.

> படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்
> நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
> நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
> படமாடக் கோயில் பகவற்க தாமே [70]

என்னும் திருமந்திரப் பாடல் ஆழ்ந்து நோக்கத் தக்கதாகும். ஓவியம் சிறந்த மாடங்களை உடைய கோவிலில் எழுந்தருளி யிருக்கும் சிவனுக்கு நிவேதனமாகப் படைக்கின்ற பொருளை இறைவன் ஏற்றுக்கொள்வான். ஆனால் அந்த நிவேதனப் பொருளை ஏற்றுக் கொண்டதனால் ஏற்படும் நிறைவாகிய பயன் சிவனடியவரை வந்து சேராது. தம்முடைய ஊனுடம்பை ஆலய மாக்கி வீடுபேறு அடையும்வரை இவ்வுடம்பு அழியக்கூடாது என்று கருதி உடலின்பத்திற்காக உண்டு வாழாது, முத்தி யடையவே உடல் வளர்க்கும் சிவஞானியர் நடமாடும் கோயிலாக விளங்குகின்றனர். அவர்களது உடலில் சிவன் ஒளியாக வந்து தங்குகிறான். இத்தகைய சிவஞானியர் ஏற்கும் உணவு சிவனே ஏற்றுக் கொண்டதாகும். எனவே, கோயிலில் அருவுருவாக உள்ள இறைவனுக்குப் படைக்கப்படும் உணவு அவனுக்கு மட்டுமே உகந்ததாக, சிவஞானிக்குப் படைக்கப்பட்ட உணவு சீவனுக்கும் சிவனுக்கும் உகந்ததாகிறது.

உண்மையான சிவஞானிகளுக்கு இவ்வாறு உணவளிக்கலாமே தவிர போலி ஞானிகளுக்கு அளித்தலாகாது என்று திருமந்திரம் உணர்த்துகிறது. இத்தகையோரை,

பொய்வேடம் பூண்பர் பொசித்தல் பயனாக[71]

என்று திருமந்திரம் கடிகிறது. அதே திருப்பாடலில் திருமூலர் மெய்வேடம் பூண்டோர் உயிர் பிரியாதிருக்க வேண்டிக் கைப் பிச்சை ஏற்பர் என்று தெரிவிக்கிறார். சுவைக்காக உண்மைத் தவஞானியர் மீதூண் விரும்பியதில்லை. இதனைப் பத்திரகிரியார்,

கும்பிக்கு இரைதேடிக் கொடுப்பார் இடம்தோறும்
வெம்பித் திரிகை விடுப்பதினி எக்காலம்?[72]

என்று பாடுவர்.

இக்கருத்துக்களால் சமுதாய மேன்மைக்காக வாழும் உண்மை ஞானிகளுக்கும், வறுமையால் வாடுபவர்களுக்கும் உணவு முதலான பொருள்களை அளித்தல் சிறந்த அறம் என்பது பெறப் படுகிறது.

சமுதாயமும் சாதி மதம் சடங்கு ஆகியனவும்

சமூகம் — சமுதாயம்: வேறுபாடு

சமூகமே சமுதாயமாகப் பரந்து விரிவடைகின்றது. எனவே, சமுதாயத்துள் சமூகம் அடங்கும்.

சமூகம் வரையறைகட்கு உட்பட்டு மொழி, உணவு, உடை, பண்பாடுகளுக்குள் அடங்குகின்றது. சமுதாயமோ விரிவடைந்து நிற்கிறது.

சமூகத்தில் குறுகிய நோக்கு, தன்னலம், இனநலம் ஆகியன உள்ளன; ஆனால் சமுதாயத்தில் பொது நோக்கும், பொது இலக்கணமும், பொது உறுதிப்பாடும் இடம் பெறுகின்றன. இட அளவில்கூடச் சமூகத்திற்கு வரையறை உண்டு; சமுதாயத்திற்கு அது இல்லை.

சாதிகள்

சமூகத்தின் பிரிவுகள் 'சாதி' என்னும் சொல்லால் வழங்கப் பட்டு வருகிறது. இச்சொல் தமிழ்ச்சொல் அன்று. "பழந் தமிழகத்தில் பிறப்பு அடிப்படைப்பட்ட சாதி என்ற பிரிவினை ஏற்படவில்லை" என்று கூறுகிறார் ம.பொ. சிவஞானம்.[73] இக் கருத்து ஏற்புடையதே.

தொல்காப்பியர் சாதி பற்றிக் குறிக்கவில்லை; ஆயினும் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் பற்றிக் குறிக்கின்றார்.

தொழிலடிப்படையில் சாதிகள்

தொடக்கத்தில் மக்கள் தொழில் அடிப்படையிலேயே பாகுபடுத்தப்பட்டனர். தொல்காப்பியர்கூடத் தம் நூலில் பல இடங்களில் உயர்ந்தோர் என்றும், இழிந்தோர் என்றும் சுட்டு கின்றார்; அவர் அனைத்து இடங்களிலும் சாதியையே கருத்தில் கொண்டாரா என்பதற்குத் தெளிவான சான்றுகள் இல்லை.

> "சாதியில் உயர்ந்தவர், சாதியில் இழிந்தவர் என்று பொருள் கொண்டு அந்தணர், அரசர், வணிகர் ஆகியோரை உயர்ந்தவராகவும், வேளாளரைத் தாழ்ந்தவராகவும் சுட்டிக் காட்டுகின்றனர்"[74]

என்று உரையாசியர்களின் கருத்துக்கு விளக்கம் தரலாம்.

சித்தர்கள் சமுதாயத்தை முன்னிலைப்படுத்தியே தம் கருத்து களைக் கூறுவர். எனவே, அவர்கள் சாதி வேறுபாடுகளை எதிர்த்தனர்.

> சாதி பேதந் தனைக்குறித்துத்
> தயங்கி மயங்கித் தளராதே
> சாதி யாவ தெவரறிவார்
> சருவ வுடலு மொன்றாச்சே[75]

என்றும்,

> பறைச்சி யாவ தேதடா பணத்தி யாவ தேதடா"[76]

என்றும்,

சாதிபேத மென்பதொன்று சற்றுமில்லை இல்லையே [77]

என்றும்,

சாதிகுல மில்லை சற்குரு வறிந்தால் [78]

என்றும் வருவன இதற்குச் சான்றுகளாகும். இவ்வாறு குரல் கொடுத்த சித்தர்கள் மக்களிடையே சாதி வேறுபாடுகள் நீங்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றனர்:

சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம் [79]

என்றும்,

ஆதிகபிலர் சொன்ன ஆகமத்தின் சொற்படியே
சாதிவகை இல்லாமல் சஞ்சரிப்ப தெக்காலம் [80]

என்றும் குறிப்பிடுவன இதற்குச் சான்றுகள்.

திருமந்திரத்தில் சாதி வேறுபாடு பற்றிய கருத்து

திருமந்திரத்தில் நால்வகை வருணத்தார்க்கும் உரிய இலிங்கங்கள் சாதி அடிப்படையில் குறிப்பிடப்படுகின்றன.[81] பரத்தையர் தன்மைகள் சுட்டப்படுகின்றன.[82] அந்தணர்கள் தானம் பெறுவதும், வேதம் ஓதுவதும், வேள்வி செய்வதும் அவர்தம் தொழில்களாகக் திருமந்திரத்தில் காட்டப்படுகின்றன.[83] இவை யாவும் அன்றைய சமுதாய நிலையைக் குறிப்பனவே அன்றிச் சாதிகளிடையே உயர்வு தாழ்வு கற்பிக்கும் நோக்கில் சுட்டப்படவில்லை.

திருமந்திரத்தில் பல்வேறு தொழில்கள் அடிப்படையிலான பிரிவுகள் காணப்படுகின்றன. கட்டட வேலை செய்வோர்,[84] சிற்பிகள்,[85] தட்டார்,[86] கொல்லர்,[87] தச்சர்,[88] தேர், தோணி முதலியன செய்வோர்,[89] குயவர்,[90] பறையர்,[91] சக்கிலியர்,[92] நெசவாளர்,[93] மீன்பிடிப்போர்,[94] உப்புக் காய்ச்சுவோர்,[95] வாணிகர்,[96] மருத்துவர்,[97] கள்வர்,[98] வண்ணார்[99] முதலான பல்துறைத் தொழில் செய்வோர் திருமந்திரத்தில் குறிக்கப் பெறுகின்றனர். இவற்றின் வாயிலாக அன்றைய சமுதாயம் இயங்கியமையைத் திருமந்திரம் எடுத்துக் கூறுகின்றது. இத்தொழில்களை மேற்கொண்டோர் தத்தம் கடமைகளைச் செய்ததாகக் குறிக்கப்படுகின்றதே அன்றி, இவர்களுக்குள் ஏற்றத்தாழ்வு இருந்ததாக எடுத்துக் காட்டப்படவில்லை. இத்தொழில்கள் வாயிலாக மனித சமுதாயம் பண்படுவதற்கான தத்துவக் கருத்துகள் எளிமையாக விளக்கப்பட்டுள்ளன. எனவே திருமந்திரம் சாதி வேறுபாடுகளுக்கு இடமளிக்கவில்லை எனலாம்.

தீண்டாமையைக் கடிதல்

தீண்டாமையை ஆதரித்த மக்கள் அக்காலச் சமுதாயத்தில் இருந்தனர். திருமந்திரம் அதுபற்றியும் சுட்டுகின்றது.

தீண்டாமை 'ஆசூசம்' என்னும் சொல்லால் குறிப்பிடப்படு கின்றது. இச்சொல் அசுத்தம் என்னும் பொருளை உடையது. தாழ்த்தப்பட்ட மனிதர் உடலே 'தீட்டு' என்னும் கருத்து இருந்தது. இதனை,

ஆசூச மானிடம் ஆசூச மாமே[100]

என்னும் திருமந்திரத்தால் அறியலாம். எல்லோரும் இறைவனின் வடிவம் என்ற எண்ணமுடையவரிடம் இவ்வெண்ணம் எழாது.

> ''தத்துவ ஞானத்தால் தன்னை உணர்ந்தவர்கள், சிவனை வணங்குபவர்கள் தீண்டாமையை விரும்பார்; மூலாக்கினி யால் ஒளியைத் தன்னுள் கண்டவர் தீண்டாமையை விரும்பார்; வேதத்தை உணர்ந்தவர் தீண்டாமையை விரும்பார்'' [101]

என்கிறது திருமந்திரம்.

தொழிலடிப்படையில் எழுந்த சாதிகளிடையே ஒரோவழி தீண்டாமை இருந்தது; அத்தீண்டாமைக்குத் திருமந்திரம் இடம் அளிக்காது, மனித உடல் எல்லாம் அசுத்தமானது என்பதால் தொழிலில் உள்ள ஏற்றத்தாழ்வு அதற்குக் காரணமில்லை என்று கருதுகிறது; அதனால் மனத்தூய்மையும் இறையுண்மையும் உணர்ந்தவரிடத்துத் தீண்டாமை இல்லை என்பதை உணர்த்தி, அத்தீண்டாமையைக் களைய முற்படுகிறது.

மதம்

இறைவன் — மனிதன் — உலகம்

மதம் என்பது இறைவன், உலகம், மனிதன் ஆகிய மூன்று அடிப்படைத் தத்துவங்களின் உறவாகும். இவ்வுலகில் பயணம் செய்யும் மனிதன் களைப்படையும்போது, அவனுக்கு ஆறுதல் கொடுப்பது மதம். இந்த உலக வாழ்க்கையின் மறைபொருளை மனிதனுக்கு விளக்குவதும் மதமே. அழியாத பேரின்ப வாழ் விற்கு— வீடுபேற்றிற்கு வழிகாட்டுவதும் அதுவே.

மதம் உலக வாழ்க்கையை வெறுத்து ஒதுக்குவதன்று; அது வாழ்க்கையின் நிறைவாகும். அதுவே என்றுமுள்ள நிலையான வாழ்வாகும். ஒழுக்கம், கட்டுப்பாடு, தியானம் ஆகியவற்றின் மூலம் மனிதன் இறைவனாக முடியும் என்பதை அறிவிப்பதுதான் மதம்.

பிறருக்கு நன்மை செய்வதிலும், பிறரிடம் அன்பு காட்டு வதிலும், பிறிதோர் உயிர்க்கு இரக்கம் காட்டுவதிலும், உண்மை பேசுவதிலும், வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் தூய்மை யோடிருக்க வேண்டும் என்பதை மதம் வலியுறுத்துகிறது.

> ''மதம் என்பது நடைமுறை வேதாந்தம்; வேதாந்தம் என்பது நடைமுறை மதம். ஆராய்ச்சி, வினாவுதல், விசாரணை ஆகியவை வேதாந்தம் எனப்படும்; அறிதல், உணர்தல், அனுபவம் என்பது மதம் எனப்படும்'' [102]

என்னும் விளக்கம் மதத்திற்கும் வேதாந்தத்திற்கும் உள்ள தொடர்பை எடுத்துக் காட்டுகிறது.

மதங்கள் பல நம்மிடையே உள்ளன. அவை மனித சமுதாயத்தின் தேவைகளை நிறைவு செய்யச் சான்றோர்களால் நிறுவப்பட்டன; சில நேரங்களில் வரலாற்றுப் பின்னணியிலும் அவை தோற்றம் கொண்டன. ஆனால் இந்துமதம் இன்ன காலத்தில் தான் தோன்றியது என்பதை ஆய்ந்து நிறுவ இயலவில்லை.

சமணத்திற்கு மகாவீரரும், பௌத்தத்திற்குப் புத்தரும், இசுலாம் மதத்திற்கு முகமது நபிகளும், கிறித்துவத்துக்கு ஏசுநாதரும் போல இந்து மதத் தோற்றத்திற்கு இன்னார்தான் காரணம் என்று தெளிவாகப் புலப்படவில்லை. அதனால் இந்து மதம் மிகத் தொன்மை வாய்ந்தது என்னும் முடிவை ஏற்கவேண்டியுள்ளது.

இந்துமதம் சைவம், வைணவம் என்று இரு பெரும் பிரிவுகளாகக் காட்சியளிக்கிறது. இவற்றுள் சைவத்தின் விளக்கமாகவும், ஆகமங்களின் சாரமாகவும் திகழ்வது திருமந்திரம்.

சைவ சமயமும் உட்சமயங்களும்

சைவ சமயத்தின் உட்பிரிவுகளாக ஆறு சமயங்கள் அமைந்துள்ளன; அவற்றுட் சிறந்தது சிவனை வழிபடும் சுத்த சைவம். [103] இதனடிப்படையில் திருமந்திரம் சிவனை வழிபடுதலை விளக்கிக் கூறுகிறது.

திருமந்திரத்தின் அடிப்படைக் கொள்கையினை,

> **ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்**
> **நன்றே நினைமின் நமனில்லை நாணாமே**
> **சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து**
> **நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே** [104]

என்னும் பாடலால் அறியலாம். இப்பாடலுக்கு,

> ''பண்டு தென்னாட்டில் வழிபடும் முழுமுதற் கடவுள் வழிக் குலம் ஏற்பட்டது. முன்னாளில் எல்லாரும் செந்தமிழ் நாட்டில் சிவனை வழிபட்டனர்; தொழுதனர். அதனால் 'சைவர்' என்னும் ஒரு குலமே திகழ்ந்திருந்தது. தொழில் பற்றிய குலம் பலவிருந்தாலும் வழிபாட்டுக் குலம் ஒன்றாக இருந்தமையால் பிணக்கின்றி அனைவரும் இணக்கமாக

வாழ்ந்தனர். அதனால் 'ஒன்றே குலமும்' என்னும் இம்மறைமொழி எழுவதாயிற்று. அதுபோல் சிவ பெருமானையே செந்தமிழர் முழுமுதற் தெய்வமாகக் கொண்டு வணங்கினர். அதனால் 'ஒருவனே தேவனும்' என்னும் இம்மறைமொழியும் எழுவதாயிற்று'' [105]

என்னும் விளக்கம் தருகிறார் ப. இராமநாத பிள்ளை. இக் கருத்துப் பொருந்துமாறு இல்லை. தென்னாட்டில் சங்ககாலம் முதல் சைவர் குலம் இருந்தது என்றாலும், பிற தெய்வ வழிபாடு களும் இருந்தன. விட்டுணு, சக்தி, முருகன் முதலான பிற தெய்வங்களையும் மக்கள் தொன்மைக் காலத்தில் வழிபட்டிருந் தனர். இன்றும் இவ்வழிபாடுகள் சமுதாயத்தில் நிலைபெற்று உள்ளன. திருமந்திரத்திலும் சிவனின் வடிவாக உள்ள வைரவர், சக்தியின் வடிவாக உள்ள சாம்பவி, இராஜேஸ்வரி, எண்வகைக் காளிகள், சிற்சக்திகள் குறிப்பிடப்படுகின்றன. மேலும் முருகனை ஆன்மாகவாகவும் திருமந்திரம் சுட்டுகின்றது; 'ஆன்மாவே மைந்தன்' என்ற தொடரால் பெயர் சொல்லாமல் முருகனைக் குறிக்கிறது திருமந்திரம். [106]

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே [107]

என்பது திருமந்திரத்தில் இடம்பெறும் காப்புச் செய்யுள். இதனை முதல் தந்திரத்தில் எடுத்தாளுகின்றார் ஜி. வரதராஜன். ஆறாம் தந்திரத்தில் இணைக்கின்றார் ப. இராமநாதன். [108] இப்பாடலில் விநாயகருக்கு உரிய உருவ அமைப்பு விளக்கப்படுகின்றதே தவிர பெயர் சுட்டப்படவில்லை. இவற்றால் சைவ சமயத்திலேயே பல தெய்வங்களை வழிபடும் வழக்கம் இருந்தமை தெளிவாகின்றது. அவ்வாறே வைணவம், சமணம், பௌத்தம் சார்ந்த தெய்வங் களை வழிபடுபவர்களும் இருந்தனர். இதன் வெளிப்பாடாக வாதப் போர்கள் எழுந்தன. மணிமேகலையில் இதற்குச் சான்று உள்ளது. [109] இதனால் மக்களிடை அன்பு நலிந்து, வன்பு வளர்ந்தது; சமுதாய அமைதி கெடும் நிலை ஏற்பட்டது. இதனைத் தடுத்துச் சமுதாயத்தை உய்விக்கும் நோக்கத்தோடு திருமூலர் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்று குரல் கொடுத்திருக்கிறார்.

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள் [110]

என்னும் பாடல் ஈசனிடம் கொள்ளும் பற்றின் காரணமாகப் பக்குவம் பெறாதவர் சமயவாதப் போரில் ஈடுபடலாம் என்னும் எண்ணத்தில் ஈசனிடம் கொள்ளும் ஆசைக்கு அளவு கோலு கின்றது.

வேறுபாட்டினை விடுத்துச் சைவத்தின் உட்பிரிவுகளாகவும், சைவம், வைணவம், கௌமாரம், சாக்தம், சௌரம், காணா பத்தியம் என்னும் சமயங்களாகவும் உள்ளவன் சிவன்[111] என்பதை உணர்ந்து அகவழிபாட்டை மேற்கொள்பவர் நாதாந்தம் கடந்து வீடுபேறடைவர்.[112]

திருமூலர் சிவனைத் தேடி அலைந்தமை

ஒரு காலத்தில் உண்மையறியாது திருமூலர் உய்தி பெறும் பொருட்டுச் சிவனைத் தேடி அலைந்துள்ளார்; சைவமே தக்க சமயம் என்பதறிந்தும், தெளிவில்லாமல் வேறு பிற சமயங்களை நாடி வருந்தியிருக்கிறார். இதனை,

அரனெறி யாவ தறிந்தேனும் நரனுஞ்
சிவநெறி தேடித் திரிந்தஅந் நாளும்
உரநெறி யுள்ளக் கடல்கடந் தேறுந்
தரநெறி நின்ற தனிச்சுடர் தானே[113]

என்னும் பாடல் தெரிவிக்கிறது. இத்தவம் நல்லது, அத்தவம் நல்லது என்று வேறுபடுத்தும் பேதஞானம் படைத்த அறிவிலிகள் உயர்வு தாழ்வு ஏற்படுத்திப் போர்புரிவர். இப்பித்தர்களைக் கண்டு சிவன் ஏளனம் செய்வான்.

எத்தவ மாகிலென் எங்குப் பிறக்கிலென்
ஒத்துணர் வார்க்கொல்லை யூர்புக லாமே[114]

என்று திருமந்திரம் குறிப்பிடுகிறது. இதனால் திருமந்திரம் சமயப் பொதுமையை விரும்பும் நூல் என்பதும் தெளிவாகும்.

ஒன்றே தெய்வம் என்று தெளிதல்

திருமூலரை அடியொற்றிப் பின்வந்த சித்தர்கள் பலரும் 'தெய்வம் ஒன்றே' என்னும் கருத்தை வலியுறுத்திச் சென்றுள்ளனர்.[115]

உள்ளன்பால் கசிந்து உருகுபவர்கட்குப் பல்வேறு தெய்வங்களிடையே வேற்றுமை தோன்றாது. அதனால் மதவேறுபாடுகள் ஏற்படாது. மதத்தின் பெயரால் ஏற்படும் சீர்கேடுகளும் கலவரங்களும் மறையும்.

சடங்குகள்

ஆன்மிகத்திற்கும் சடங்குகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பொருளுடைய சடங்குகள் சில; பொருளற்ற சடங்குகள்

பல. பாவம் செய்வதிலிருந்தும் தீய வழிகளிலிருந்தும் மீண்டால் தான் தவம் பயன்தரும்; சடங்குகள் நன்மை விளைவிக்கும். தான தருமங்கள் செய்வதால் பாவம் விலகாது; செய்த தவறுகளை உணர்ந்து மனம் மாறுவதே தக்க பிராயச்சித்தமாகும். சடங்கு களை ஒழுங்காகக் கடைப்பிடித்தால் பாவம் செய்தவரின் மனம் மாறும்.[116] பொருளற்ற சடங்குகளைச் சித்தர்கள் பலவாறாகச் சாடியுள்ளனர்.[117]

மரணமும் சடங்கும்

மரணமடைந்தவர்களுக்குச் செய்யப்படும் சடங்குகள் திருமந்திரத்தில் சுட்டப்பட்டுள்ளன. உடலைவிட்டு உயிர் பிரிந்து விடுதலை,

> **மூக்கினிற் கைவைத்து மூடிட்டுக் கொண்டுபோய்க்**
> **காக்கைக் குப்பலி காட்டிய வாறே**[118]

என்கிறது திருமந்திரம். மூக்கில் கைவைத்து மூச்சு வரவில்லை என்று அறிந்தபின், உடலை மூடி மயானத்திற்குக் கொண்டு சென்று, ஆங்குள்ள காகங்களுக்கு அரிசி போட்டு இறுதிக்கடன் செய்வர் என்பது இதன் கருத்து. இறந்தவுடன் ஊர்மக்கள் ஒன்று கூடி அழுவர்; பின் இயற்பெயரினை ஒழித்துப் ‘பிணம்’ என்று சுட்டுவர்.[119] பாடை கட்டிச் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்வர்; அப்போது பறை முழக்குவர்; பாடையின்பின் மக்கள் திரண்டு செல்வர்.[120] சுடுகாட்டிற்குப் பிணத்தை எடுத்துச் செல்லுமுன் பெண்களும் பிறரும் நீர்த்துறைக்குச் சென்று புதுநீர் கொண்டுவந்து நீராட்டுவர்; ஊர் எல்லையில் பெண்டிரும் மக்களும் நிற்பர்; சுடுகாடு வரை செல்லும் வழக்கம் இல்லை. தீக்கு இரையாக்கியபின் சுற்றத்தார் நீரில் மூழ்குவர்.[121]

எவ்வளவுதான் அன்பு கொண்டிருந்தாலும் இறந்தவரின் உயிரோடு எவரும் தொடர்பு கொள்ள முடியாது; இறந்தவரோடு எவரும் செல்ல இயலாது. திருமந்திரம்,

> **கொண்ட விரதமும் ஞானமும் அல்லது**
> **மண்டி அவருடன் வழிநட வாதே**[122]

என்று விரதமும் ஞானமும் மட்டுமே இறந்தவரோடு செல்லக் கூடியவை என விளக்குகிறது. இங்கு ஞானம் என்பது ஒழுக்கம் ஆகும்; அறிவு என்றும் பொருள் கொள்ளலாம். சுடுகாடு வரும் சுற்றத்தாரும் மயக்கத்தோடு உடலைத் தீயில் வைத்துவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்று விடுவர்.[123] இறந்த பின்னர் உணர்ச்சியற்ற இந்த உடலுக்கு புறச்சடங்காக யார் எது செய்தால் என்ன என்கிறது திருமந்திரம்:

காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென்
பாற்றுளி பெய்யிலென் பல்லோர் பழிச்சிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன் புறப்பட்டுப் போனஇக் கூட்டையே [124]

இந்தப் பாடலில் கூத்தன் புறப்பட்டுப் போன கூடு என்று உடலைக் குறிக்கிறார் திருமூலர். சீவனுள் சிவன் உறைகிறான் என்பதையும் இது சுட்டுகிறது. தீயில் உடல் வேதலை அறிந்த மக்கள், உடனிருந்த உயிர் என்னவாயிற்று என்பதை அறியார்; அவ்வாறிருக்கப் புறச் சடங்குகள் எந்தப் பயனையும் தாரா. அதனால் திருமூலர்,

வெந்து கிடந்தது மேலறி யோமே [125]

என்கிறார்.

அந்தணர் சடங்குகள்

அந்தணர்க்குச் சடங்காவது வேதம் ஓதுதல். சடங்கு என்பதற்குச் செய்யும் பணி அல்லது கரணம் என்பது பொருள். [126] அந்தணர்கள் பிறவி அறுவதற்காக ஓதல், ஓதுவித்தல், தவம் செய்தல், வேட்டபித்தல், ஈட்டல், ஈதல் ஆகிய அறுதொழில் களைச் செய்வர். தீ ஓம்பி இயம நியம வழிநின்று சந்தியாவந்தன மும் செய்வர். [127] இவை அந்தணர்களின் அகச்சடங்குகள். இவற்றை மேற்கொள்வோர் சமாதி கூடுவர் என்பதை,

குருநெறி யாலே குருபதஞ் சேர்ந்து
கரும நியமாதி கைவிட்டுக் காணுந்
துரிய சமாதியாந் தூய்மறை யோர்க்கே [128]

என்னும் திருமந்திரப் பாடற்பகுதி விளக்குகிறது. சமாதி அடையும் தகுதியுடைய அந்தணர்கள் வாழ்கின்ற நாடு செழிப்புறும்; மன்னவனும் செங்கோலனாவான். [129]

புறத்தோற்றத்தினால் மட்டும் அந்தணர்க்குரிய கோலம் கொண்டிருப்பவரை,

நூலுஞ் சிகையும் நுவலிற் பிரமமோ
நூலது கார்ப்பாச நுண்சிகை கேசமாம்
நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்
நூலது அந்தணர் காணும் நுவலிலே [130]

என்று குறிப்பிடுகிறது திருமந்திரம். 'நூல்' என்பது கார்ப்பாசத் தால் (பருத்தியால்) ஆன பூணூல்; அது மார்பில் அணியத்தக்கது. இடகலை, பிங்கலை, சுழுமுனை ஆகிய மூன்று நாடிகளை முப்புரி உணர்த்தும்; நுண்சிகை தலையால் ஞானத்தை உணர்தல்; அதாவது சகஸ்ரதளத்தைத் திறத்தலாம். இவற்றை உணராதார்

புறக்கோலமும் புறச்சடங்கும் மேற்கொண்டு யாது பயன்— என்பது இப்பாடலின் கருத்தாம்.

இறை வழிபாட்டுச் சடங்குகள்

அருவமான இறைவனை அருவுருவமாக வணங்கும் ஒருவகை வழிபாடு இலிங்க வழிபாடு. முத்து, மாணிக்கம், பவளம், செதுக்கிய மரக்கொம்பு, கல், திருநீறு, மரகதம், சிவாகமம், சாதம், அரிசி, பூ, மணல் ஆகியவற்றாலும்,[131] தயிர், நெய், பால், பசுஞ்சாணம், செம்பு, தீ, பாதரசம், நீர், செங்கல், வில்வம், பொன் ஆகியவற்றாலும் அமைந்த[132] இலிங்கத்தையும் வழிபடலாம். இவ்வாறு வழிபாட்டுச் சடங்கில் ஒரு வரையறையைக் கூறுகிறது திருமந்திரம். பிறப்பு, காதுருத்தல், நோன்பு எடுத்தல், திருமணம், இறப்பு முதலான நிகழ்ச்சிகளில் இன்றைய சமுதாயத்தினரும் இலிங்க வழிபாடு இயற்றுவதைக் காணலாம்.

சமாதிக்குரிய சடங்குகள்

திருமந்திரம் 'சமாதி கிரியை' என்னும் தலைப்பின்கீழ் சமாதிக்கு உரிய சடங்குகளை வரையறுத்துச் சொல்கிறது. ஞானியர் உடலைவிட்டுச் சிவனை அணைந்தபின் அவ்வுடலைச் சமாதியில் வைத்து வழிபடுவர் மக்கள்.

தன்மனை சாலை குளங்கரை யாற்றிடை
நன்மலர்ச் சோலை நகரினற் பூமி
உன்னருங் கானம் உயர்ந்த மலைச்சாரல்[133]

ஆகிய இடங்களில் சமாதிக் குகை அமைக்கலாம் என்கிறது திருமந்திரம்.

முக்கோண வடிவமான குகைக்கு நீளம் மூன்று சாணாகவும், ஆழம் ஒன்பது சாணாகவும் இருத்தல் வேண்டும்; குழியிலிருந்து எடுத்த மண்ணைக் குழியைச் சுற்றி ஐந்து சாணுக்கு அப்பால் வளைத்துக் கொட்டவேண்டும்.[134]

சதுர வடிவமான சமாதிக் குகைக்கு, நாற்புறமும் ஐந்து காலடி அகலம் அளவும் ஆழம் ஒன்பது காலடி அளவும் இருத்தல் வேண்டும். குறுக்களவு மூன்றுக்கு மூன்றாக அமைதல் வேண்டும்.[135]

குகை அமைத்தபின் அதில் பஞ்சலோகங்கள், நவமணிகள் ஆகியவற்றைப் போட்டு, அதன்மேல் ஆசனம் அமைத்துத் தருப்பை பரப்பித் திருநீற்றைக் கொட்டி, மஞ்சள் முதலான சுண்ணப்பொடிகளைத் தூவ வேண்டும். பின் குகையின் நடுவில் நாற்சதுரம் செய்து, அதன்மேல் மலர், சந்தனம், கத்தூரி, சாந்து,

புனுகு, பன்னீர் ஆகியன கலந்து தெளித்தல் வேண்டும்; பின்னர்க் குகைக்கு தீப ஆராதனை செய்தல் வேண்டும்.[136]

குகையின் நாற்புறமும் மண்ணைப் பரப்பிப் பொரிக்கறி, உணவு, இளநீர் வைத்தல் வேண்டும்: குருவின் திருவடி, காதணி, முகம், கண் இவற்றை அமைத்து இதன்மேல் வட்டமாக மேலாடையை அணிவித்தல் வேண்டும். குகையை அலங்காரம் செய்து, அதன்மேல் குருவின் உரு வரைந்து, நிவேதனம் படைத்தல் வேண்டும். ஞானியர் வீட்டிற்கு வந்தால் உபசரிப்பது போன்று வெண்ணீறு, வாசனைப் பொடி ஆகியனவற்றைக் குகையின்மீது சொரிந்து, பாத்தியம், ஆசனம், அர்க்கியம் முதலியன முறைப்படி படைத்து, நிலத்தின்மேல் மூன்றுக்கு மூன்றடி மேடை அமைத்தல் வேண்டும். மேடைமேல் அரசங் கன்று அல்லது சிவலிங்கம் அமைத்துச் சமாதியின் வாயில் வடக்கு அல்லது கிழக்கு நோக்கியிருக்கும் வகையில் வைத்து, அன்புடன் பதினாறுவகை உபசாரங்களைச் செய்தல் வேண்டும்.[137] இவ்வாறு சமாதிக்குரிய சடங்குகளை விளக்கு கிறது திருமந்திரம்.

இந்தச் சடங்குகளுக்கு மாறாகச் சிவஞானியரது உடல் எரி யூட்டப்பட்டால் உலக மக்கள் சுரத்தால் வாடுவர்; நாய் நரி உண்டால் பகை ஏற்படும்; மக்கள் மாண்டு நாய்நரிக்கு இரை ஆவர். சிவஞானியுடல் தீப்பட்டு வேவது சிவன் வாழும் ஆலயம் தீயிடப்பட்டதற்கு ஒப்பாகும். அதனால் நாடு மழை யின்றி அழியும்; பஞ்சம் பரவும்; அரசன் தன் நாடிழப்பான். ஞானியர் உடலைப் புதைப்பது புண்ணியம் தரும்; எவரும் காணாத நிலையில் அவர் உடல் அழிந்தால் உலகின் அழகு கெட்டுத் தீப்பிடித்து எரிந்து பாழாகும். இவ்வாறு, சடங்குகள் முறையாகச் செய்யப்படாவிட்டால் நேரும் தீமைகளையும் திருமந்திரம் தெளிவுபடுத்துகிறது.[138]

இல்லறத்தார் உடல் எரிக்கப்படுவது குறித்துப் பேசும் திருமூலர், ஞானியர் உடல் புதைக்கப்பட வேண்டும் என்பதைத் தெளிவாகக் கூறியுள்ளார்.

சமுதாயமும் நிலையாமையும்

உலக நிலையாமை

மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்[139]

என்னும் புறநானூற்றுப் பாடலடி உலகம் நிலையற்றது என்ப தனைச் சுட்டுகிறது. மணிமேகலை,

இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா [140]

என்று இளமை, உடல், செல்வம் ஆகியவற்றின் நிலையாமைப் பண்பை எடுத்துரைக்கிறது.

உலகைப் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருளுபவன் சிவன். சிவனுக்குரிய ஐந்தொழில்களுள் மூன்றாவது அழித்தல் தொழில். உலகம் தோன்றி, இயங்கி, அழிவதால் அது நிலையற்ற தாகின்றது. உலகின் அழிவு 'திருமந்திரமும் ஆன்மீக வாழ்வும்' என்ற தலைப்பின்கீழ் உள்ள 'துறவற வாழ்க்கைத் தொடர்பான சிந்தனைகள்' என்னும் உட்பிரிவில் 'சீவன் சிவனாதல்' என்ற பகுதியில் விளக்கப்படுகிறது.[141] உலக நிலையாமை பற்றிய கருத்துகள் அங்குக் கூறப்படுவதால் இங்கு விளக்கப்படவில்லை.

யாக்கை நிலையாமை

வினைப் பயனுக்கேற்ப ஆன்மா உலகில் கருவாய்த் தாய் வயிற்றில் தோன்றி, வளர்ந்து, மூத்து, இறந்துபடும். இஃது இயல்பான நிலை. இதற்கு மாறுபட்ட நிலையில் முதுமை எய்து வதற்கு முன்பும் இறத்தல் உண்டு. பட்டினத்தார் உடலின் அழிவினைப் பலவாறு எடுத்துச் சொல்கிறார்.[142] அவர் உடற் கூற்று வண்ணத்தில் மனிதன் பிறந்து வீணே மடியும் உலகியல் வாழ்க்கை மேற்கொள்வதைக் கடிந்து பாடுகிறார். பத்திரகிரியாரும் உடல் பொய்யானது என்பதை உணர்ந்து இறை யனுபவம் பெற்று இறைவனுடன் ஒன்றுவது எப்போது என்பதனை 231 கண்ணிகளில் எடுத்துரைக்கிறார்.[143]

திருமந்திரம் மூன்று நிலையாமைகளையும் விளக்குகிறது. திருமூலர் முதலில் உடலினை இழுக்கு என்று நினைத்து இருந்தமை யையும், பின் உயிர் வளர்ச்சிக்காக உடல் வளர்த்தமையையும் பாடுகிறார்.[144]

உலகில் மனிதன் பிறத்தலை,

ஆலிங் கனஞ்செய் தகஞ்சுடச் சூலத்துச்
சாலிங் கமைத்துத் தலைமை தவிர்த்தனர் [145]

என்று திருமந்திரம் சுட்டுகிறது.

தாயின் உடலில் கரு வளரத் தொடங்கும்போது சிவன் சூக்கும உடலைப் படைப்பான். பரம், சிவம், சக்தி ஆகியவற்றைச் சிவன் உயிர்க்கூட்டங்களின் இடையே பொருத்திப் பின் அவற்றை உறக்கத்தில் வைப்பான். எனவே, படைப்பின் முதல்நிலை சுத்த மாயையில் தோன்றுகிறது.[146] சூக்குமத்தில் விந்து, நாதம், சக்தி, சிவம், பரம் ஆகிய ஐந்தன் நிலைகளிலும் உள்ள ஐந்தொழில்களை

யும் ஈசானமூர்த்தி செய்வான்.[147] பின் வினைப் பயனுக்கேற்ற ஆன்மாக்களின் தகுதிப்படி விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் நிலைகளில் உயிர் உலகில் உருவெடுக்கும்.[148]

மனிதன் தன்னைச் சுற்றியுள்ள இயற்கை, விலங்கு, தாவரம் ஆகியவற்றின் அழிவு கண்டும், தன் அழிவை எண்ணாது இருக்கிறான். இதனை,

மண்ணொன்று கண்டீர் இருவினைப் பாத்திரந்
திண்ணென் றிருந்தது தீயினைச் சேர்ந்தது
விண்ணின்று நீர்விழின் மீண்டும் மண்ணாவபோல்
எண்ணின்ற மாந்தர் இறக்கின்ற வாறே[149]

என்றும்,

குடையும் குதிரையுங் கொற்ற வாளுங்கொண்
டிடையுமக் காலம் இருந்தது நடுவே
புடையும் மனிதனார் போகுமப் போதே
அடையும் இடம்வலம் ஆருயி ராமே[150]

என்றும் திருமந்திரம் மனிதர்க்கு அறிவுறுத்துகிறது. இவற்றுள் முதற்பாடல், யோகத்தீயில் சுடப்பட்ட உடலினர் சுட்ட மண் பாத்திரம் போல் உடல் அழியாதிருப்பர் என்றும் யோகசாதனை உணராதவர் தீயில் சுடப்படாத மண்பாத்திரம் மழைநீரில் கரைவதுபோல் உலகில் பிறந்து இறப்பர் என்றும் தெளிவுபடுத்துகிறது. அடுத்த பாடல், மன்னன் தனக்குரிய குடையும் வாளும் படைகளும் சுற்றி நின்றாலும் உயிர்போகும்போது அவை மன்னன் உயிரைத் தடுத்து நிறுத்த முடியாது என்பதைச் சுட்டுகிறது. இவற்றைக் கண்டுணர்ந்தும் மக்கள் யாக்கை நிலையாமையை உணராதிருக்கின்றனரே என்று வருந்துகிறார் திருமூலர். உவமைகள் வாயிலாக அவரே,

கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டுந் தேறார் விழியிலா மாந்தர்
குழக்கன்று மூத்துஎரு தாய்ச்சில நாளில்
விழக்கண்டுந் தேறார் வியனுல கோரே[151]

என்று நிலையாமையை வலியுறுத்துகின்றார். இதனை உணராதவர்களை,

தூண்டு விளக்கின் சுடரறி யாரே[152]

என்று இழித்துக் கூறுகின்றார். நிலையாமையை உணர்ந்து இளமையிலேயே சிவனைத் தேர்ந்துகொள்ள வேண்டும் என்பார்,

ஓர்ந்துற்றுக் கொள்ளும் உயிருள்ள போதே[153]

என்று தெரிவிக்கின்றார்.

முப்பது வயதிற்குள் உலகினியல்பு உணர்ந்து ஆன்ம அறிவைப் பெறல் வேண்டும். அவ்வாறு பெற்றவர் சூரிய சந்திரன்

இயக்கமறிந்து வீடு பேறடைவர். இதனை உணராதவர் உலகில் பிறந்து இறந்து அழிவர்.[154]

உயிரின் அழிவற்ற தன்மை

'உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு என்ன? நான் யார்? இவ்வுடலை நீத்தபின் என் நிலை என்ன?' என்பதை உணர்ந்து, தத்துவ விசாரணையில் ஈடுபடுவோர் 'பூரக, கும்பக இரேசக முறைகளை அறிந்து கடைப்பிடித்துக் காலனைக் கடப்பர்' என்கிறார் திருமூலர்.[155] இத்தகையவர் நரை திரை கடந்து என்றும் இளமையோடு இருப்பர். இதனை,

தேகத்துக் கென்றுஞ் சிதைவில்லை யாகுமே[156]
வாணாள் அடைக்கும் வழியது வாமே[157]
பிண்டமும் ஊழி பிரியா திருக்குமே[158]
நஞ்சறச் சொன்னோம் நரைதிரை நாசமே[159]
நரையுறுவாச் செல்லு நாளில வாமே[160]
பருவஞ் செய்யாததோர் பாலனு மாமே[161]
மூத்துடல் கோடியுகங் கண்ட வாறே[162]
ஒள்ளிய காயத்துக் கூனமிலை யென்று[163]
சாவது மில்லை சதகோடி யூனே[164]
சாதலு மில்லை சதகோடி யாண்டினும்[165]

என்று பலவாறாக வரும் திருமந்திரச் செய்யுட் பகுதிகள் உணர்த்தும். இவற்றால் உடல் அழியாது; உடலை விட்டு உயிர் பிரியாது; முதுமை ஏற்படாது; இளமை நிலைக்கும்; இறப்பு உண்டாகாது; எடுத்த உடலில் கோடி ஆண்டுகள் வாழலாம் என்று யோக சாதனையில் ஈடுபட்டுச் சிவசொரூபத்தில் சொல்லிறந்து வாழ்பவரைப் பற்றித் திருமூலர் கூறுகிறார். இதனை,

இறவில்லை என்றியம்பினர் காணே[166]

என்றும் அவர் தெளிவுபடுத்துவர். 'இயம்பினர் காணே' என்று திருமூலர் கூறுவது, அவருக்கு முன்பும் பலர் இத்தகைய ஆன்மீக வாழ்வில் ஈடுபட்டு வீடுபேறடைந்தமையை உணர்த்துவதாகும்.

செல்வ நிலையாமை

பொருட்செல்வம் நிலையற்றது; அது சக்கரம் போன்று ஓரிடத்திருந்து வேறோரிடத்திற்கு உருண்டு செல்லக் கூடியது. திருவள்ளுவர் தம் குறளில் ''பொருளில்லார்க்கு இவ்வுலக மில்லை''[167] என்று பேசுகிறார். அதன் நிலையாத் தன்மையை,

கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று [168]

என்று குறிப்பிடுவர். இதற்கு,

"அக்குழாம் கூத்தாட்டுக் காரணமாக அரங்கின்கண் பல்திறத்தால் தானே வந்து, அக்காரணம் போயவழித் தானும் போமாறு போலச் செல்வமும் ஒருவன் நல்வினை காரணமாக அவன்மாட்டுப் பல்திறத்தால் தானே வந்து, அக்காரணம் போயவழித் தானும் போம்'' [169]

என்று பரிமேலழகர் விளக்கம் தருவர்.

திருமந்திரம் பொருட்செல்வத்தின் நிலையாமையை விரிவாகப் பல பகுதிகளில் எடுத்துரைக்கிறது. சான்றாக,

அருளும் அரசனும் ஆனையுந் தேரும்
பொருளும் பிறர்கொள்ளப் போவதன் முன் [170]

இயக்குறு திங்கள் இருட்பிழம் பொக்கும்
துயக்குறு செல்வத்தைச் சொல்லவும் வேண்டா [171]

தன்னது சாயை தனக்குத வாதுகண்டு
என்னது மாடென் றிருப்பார்கள் ஏழைகள் [172]

ஆற்றுப் பெருக்கிற் கலக்கி மலக்காதே
மாற்றிக் களைவீர் மறுத்துங்கள் செல்வத்தை [173]

மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே
கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லும் கலம்போல் [174]

என்று விளக்குவதை ஈண்டு நினைவுகூறலாம். இப்பாடல்களில் நிலையாத பொருட்செல்வத்தைத் திருமூலர் நிலவில்லா இருளிற்கும், தனக்குதவா நிழலுக்கும், நில்லாதோடி வறளும் ஆற்று வெள்ளத்திற்கும், கடல்நீரில் கவிழ்ந்தழியும் கலத்திற்கும் ஒப்புமையாக்கி மாந்தருக்கு அறிவூட்டுகிறார்.

எனவே, உலகியலுக்கு உதவும் பொருட்செல்வம் நிலையானது அன்று; ஆனால், இறையருள் மழைமேகம் போன்றது. இதனை உணர்ந்து கண்ணொளியைப் பெருக்குபவர்கள் வீடுபேற்றினை அடைவர்; அருட்செல்வம் வேண்டிப் பெற்றவர் பெருவளம் பெற்றுப் பேரின்பம் அடைவர்.

வறுமையாளரை உலகம் புறக்கணித்தல்

பொருளின்றி வறுமையால் வாடுபவரைச் சமுதாயம் இகழ்ந்து புறக்கணித்தல் இயல்பு. அவர்களைப் பற்றித் திருமந்திரம்,

புடைவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை
அடையப் பட்டார்களும் அன்பிலரானார்

கொடையில்லை கோளில்லை கொண்டாட்ட மில்லை
நடையில்லை நாட்டில் இயங்குகின் றார்கட்கே [175]

என்று கூறுகிறது. ''ஆடை கிழிந்து பயனற்றது போல வறியவர் வாழும் வாழ்க்கையும் பயனற்று விட்டது'' என்று கருதிச் சுற்றி யிருந்த சுற்றத்தினர் அன்பின்றி வெறுத்து விலகுவர் என்கிறது திருமந்திரம். கொடுக்கலும் இல்லை; வாங்கலும் இல்லை; மகிழ்ச்சியுமில்லை; மிடுக்கான நடையும் அவர்களுக்கு இல்லை.

இதனை உணர்ந்தவர்கள் வயிற்றை நிரப்புவதற்குரிய வழியைத் தேடுவதை விட்டுப் பிறவி நீக்கத்துக்கான வழியைத் தேடுதல் வேண்டும்.

சிவ சிந்தனை

வறுமையின்றி வளத்துடன் வாழ வேண்டுமானால் மனிதன் சிவனைச் சிந்திக்க வேண்டும். சிவ சிந்தனையுடன் இறைவனை வேண்டுபவர்க்கு வினையின் காரணமாகத் தொடரும் வறுமை விலகும்.[176] இவ்வாறு நல்வினையை ஈட்டிப் பெறுவதற்குப் புலனடக்கமும், சிவ சிந்தனையோடு வேண்டிக் கொள்ளுதலும் வழிகளாகும்.

எனவே, செல்வம் அழியக் கூடியது; அது உயிருக்குத் துணை யாகாது; ஆனால் அருட்செல்வமோ உயிருடன் இறுதிவரை வரக் கூடியது. வீடுபேற்றினைத் தரக்கூடியது. தீவினை காரணமாக வறுமை ஒருவனைப் பற்றும்; அவனுக்கு நல்லாடையும் இல்லை; நற்சுற்றமும் இல்லை; நல்ல நாளும் கோளும்கூட அவனுக்கில்லை. வயிற்றுப் பசிக்காக அவன் அலைவானே தவிரச் சிவ சிந்தனை அவனுக்கு இராது. அதனால் அவனுக்கு உய்தி இல்லை. புலன் களை அடக்கிச் சிவ சிந்தனையுடன் இறையை வேண்டினால் தீவினை நீங்கும்; வறுமை விலகும்; வீடு கிட்டும்.— இவை செல்வம் நிலையாமை வாயிலாகத் திருமந்திரம் சமுதாயத்திற்குத் தரும் செய்திகளாகும்.

சமுதாயமும் நம்பிக்கைகளும்

நம்பிக்கை என்பதன் விளக்கம்

தொன்றுதொட்டுப் பண்பட்ட சான்றோர்கள் உணர்ந் தறிந்து பின்பற்றுவன அறிவிற்கும் ஆய்விற்கும் அப்பாற்பட்டன வாகலாம்; ஆயினும் அவை 'நம்பிக்கைகள்' என்னும் வகையில் சமுதாயத்தால் ஏற்கப்படும். எல்லாச் சமுதாயங்களிலும், நாடு களிலும் இத்தகைய நம்பிக்கைகள் உண்டு.

> "நம்பிக்கை என்பது ஒரு சக்தி. அது மலைகளை நகர்த்தும். மலைப்பைப் போக்கும். காரியங்களைச் சாதிக்கும். மனத்தை உறுதிப்படுத்தும். எண்ணங்களுக்கு வலிமை யூட்டும். எதிர்காலத்தை ஒளிமயமானதாக்கும்" [177]

என்று நம்பிக்கைக்கு விளக்கம் தருவர். மனிதன் தன்னிடமுள்ள தன்னம்பிக்கை என்ற சக்தியுடன் தெய்வ சக்தியையும் இணைக்கும் பொழுது புதுமைகளைக் காண்கின்றான்.[178] ஆன்மீக வாழ்வில் ஈடுபட்ட ஞானியர் உணர்ந்து கண்ட உண்மைகள் நம்பிக்கை களாக இன்றும் மக்களிடையே நிலவி வருகின்றன.

இரு வினைகள்

நம்பிக்கைகளில் முதலிடம் பெறுபவை மனிதன் செய்யும் செயல்களின் விளைவான இரு வினைகள். அவை (1) நல்வினை, (2) தீவினை என்பன.

நல்லன செய்வதால் மறுபிறவியில் நல்வினையும், தீயன செய்வதால் தீவினையும் உண்டாகின்றன. துன்பங்களின் தோற்றத்திற்குக் காரணம் இவ்வினைப்பயனே என்பதனை உணர வேண்டும். உணர்ந்து வினைகளை நீக்க முயற்சி எடுக்க வேண்டும். அவ்வாறு நீக்கிக் கொள்ளாதவர்கள் வினை ஏற்படுத்தும் பிறவியில் சிக்கி அல்லற்படுவர்.

திருமந்திரம் வினையின் தன்மையையும் வினையின் விளைவை யும் ஒரு பாடலில் மிக அழகாக எடுத்துச் சொல்கிறது. அது:

> **வினையாம் அசத்து விளைவது உணரார்**
> **வினைஞானந் தன்னில் வீடலும் தேரார்**
> **வினைவிட வீடென்னும் வேதமும் ஓதார்**
> **வினையாளர் மிக்க விளைவறி யாரே** [179]

என்பதாகும்.

> "மயக்கத்திலுள்ள சீவர்கள் வினையால் அசத்தாகிய மாயை வலுவடைந்து அதன் பயனாக விளையும் துன்பச் சுழலை அறியமாட்டார்கள். வினை ஞானத்தை உணர்ந்து அதன் வழி நிற்பதில் கொடிய வினை நீங்குதலையும் தெளிந்து அறியமாட்டார்கள். வினைகள் சீவர்களைப் பற்றாது நிற்பதில் முக்திநிலை உள்ளது என்று வேதம் கூறும் உண்மையை அறியமாட்டார்கள். தீவினையால் பந்திக்கப் பட்ட சீவர்கள் அதன் காரணத்தையும் அதனால் விளையும் பயனையும் அறியமாட்டார்கள் [180]

என்று ஜி. வரதராசன் இப்பாடலுக்குத் தரும் விளக்கம் ஆழ்ந்து நோக்குதற்குரியது. சீவர்கள் மயக்கத்தில் இருப்பதாலேயே அசத்தாகிய மாயை அவர்களை வினைவயப்படுத்துகிறது. அந்த

மயக்கத்தாலேயே வினை நீக்கிக் கொள்ளவும் முனையமாட்டார்கள். மாயை விலகி, மயக்கம் நீங்கினால் சீவர்களை வினை பற்றாது; அப்போது அவர்களுக்கு முக்தி நிச்சயம் என்கிறது வேதம். இன்றேல் அவர்களைத் தீவினை சூழ்ந்து அதன் பலன்களை அனுபவிப்பர்.

இதனை வேறுவகையிலும் விளக்குகிறார் திருமூலர். வினைப் பயனைக் கெடுத்தால் உள்ளத்தின்கண் சக்தி, உள்ளொளியாக எழுந்தருளுவாள்; தன்னைச் சரணாக வந்தடைந்தவர்களுக் கெல்லாம் உண்மைப் பொருளாக நிற்பாள் என்கிறார் திருமூலர். இதனை,

> வினைகடிந் தாருள்ளத்து உள்ளொளி மேவித்
> தனையடைந் தோர்க்கெல்லாம் தத்துவமாய் நிற்பள்[181]

என்னும் திருமந்திரப் பாடல் தெளிவுறுத்துகிறது.

முதற்பாடல் வினையாளர் தன்மையை விளக்கியது; இப்பாடல், வினைகடிந்தார் அடையும் நன்மையைத் தக்க வகையில் உணர்த்துகிறது.

சொர்க்கம் — நரகம்

வினைகளின் விளைவே சொர்க்கமும் நரகமும். நல்வினை ஒருவன் இறந்தபின் அவனைச் சொர்க்கத்தில் கொண்டு சேர்க்கும். தீவினை செய்பவர்கள் அதன் காரணமாகவே நரகத்தில் அழுந்தித் துன்புறுவர்.

> ஆமா றறியான் அதிபஞ்ச பாதகன்
> தோமாறும் ஈசற்குந் தூய குரவற்குங்
> காமாதி விட்டோர்க்குந் தரல்தந்து கற்பிப்போன்
> போமா நரகில் புகான்போதங் கற்கவே[182]

என்னும் திருமந்திரம் பஞ்சமகா பாதகம் செய்தாரும் குற்றமற்ற ஞான குரு, தூய்மையான பெரியோர், காமம் முதலானவற்றை நீக்கிய அறவோர் ஆகியவர்களுக்குக் கொடுப்பாராகில் ஆழும் நரகில் புகமாட்டார்கள் என்று விளக்குகிறது.

நரகம் ஏழு வகைப்படும் என்பதனைத் திருமந்திரம்,

> அடைவது தானேழ் நரகத்து ளாயே[183]

என்னும் பாடலடியால் தெரிவிக்கிறது. ப. இராமநாதன் அவற்றை,

> ''பெருங்களிற்று வட்டம், பெருமணல் வட்டம், எரிபரல் வட்டம், அரிபடை வட்டம், புகையின் வட்டம், பெருங்கீழ் வட்டம், இருளின் வட்டம் என்று ஏழுவகை நரகம் என்று பிங்கலம் கூறுகிறது''[184]

என்று குறிப்பிடுகின்றார். ஞானமில்லாது தவவேடம் பூண்பவரும் இத்தகு நரகில் கிடந்து வருந்துவர்.[185]

இவ்வாறு நரகத்தின் இயல்புகளைச் சொல்லி, நல்லன செய்து சொர்க்கம் புக முயலவேண்டும் என்று அறிவுறுத்துகிறது திருமந்திரம்.

திருக்கோயிலும் நற்குருவும்

திருக்கோவிலில் உள்ள சிவலிங்கத்தை எடுத்து வேறோர் இடத்தில் வைப்பதாலும், மதிற்கல்லை எடுப்பதாலும், கோவில் களுக்குரிய பூசைகள் தவறுவதாலும், புறத்தோற்றத்தால் மட்டும் அந்தணராய்க் காட்சியளிப்பவர்கள் செய்யும் சிவபூசையாலும் தீமைகள் ஏற்படும். அவை: (அரசனது ஆட்சி அழியும்; சிவலிங்கத்தைப் பெயர்த்து வைத்தவன் இறப்பதற்குள் பெருநோயால் துன்புறுவான்; மன்னர் வெட்டப்படுவர்; முனிவரது தவம் முற்றுப்பெறாது; மதிற்கல் எடுத்தவர் அந்தணராயினும் நாட்டின் நலன்கருதி அவரையும் வெட்டு வித்தல் வேண்டும்; நோய்கள் பெருகும்; கீழ்மக்கள் பிறப்பர்; மன்னனது போராற்றல் குறையும்; நாட்டில் பஞ்சம் ஏற்படும் என்பன.[186] இவ்வாறு 'திருக்கோயிலிழிவு' என்னும் தலைப்பில் அமைந்த திருமந்திரப் பாடல்கள் உணர்த்துகின்றன. இதனாலேயே 'சிவன் சொத்து குலநாசம்' முதலான பழமொழிகள் தோன்றின.

குழந்தைகளைப் பாசத்தோடும் நேசத்தோடும் வளர்ப்பது போலத் திருக்கோவில்களையும் அன்போடும் கருணையோடும் பாதுகாக்கவேண்டும். பாதுகாப்பால் தெய்வத்திடமிருந்து மனித னும், மனிதனிடமிருந்து தெய்வமும் சக்தியைப் பெறுகின்றன. இந்தக் காரணத்தினால்தான் தெய்வப் படிமங்களுக்குச் சிறந்த கற்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. உள்ளறையில் (கர்ப்பக்கிருகத் தில்) சக்தி தேக்கிவைக்கப்பட்டுள்ளது. எனவே, புனிதமான இடத்தில் சக்தியுடன் உள்ள இலிங்கத்தைப் புனிதமற்ற வேறோரிடத்தில் மாற்றி வைப்பதால் இலிங்கத்தின் சக்தி குறையும்; மனிதனுக்குக் கிடைக்கும் அருட்சக்தியும் குறையும்.[187]

நற்குரு தம் சீடனுக்கு 'ஓம்' என்ற ஓங்காரத்தின் நுட்பங் களை உணர்த்துபவராவார். அவரை மனம் வருந்தும்படி இகழ்ந்து பேசுபவர்கள் அடுத்த பிறவியில் நாயாய்ப் பிறப்பர்; அதனையடுத்துப் புழுவாய் ஒரு யுகம் பிறந்து துன்புறுவர்.[188] ஞானியர்தம் மனம் வருந்துமாறு கேடு செய்பவர்கள் பெற்ற செல்வம் ஓராண்டில் அழியும். உயிரும் ஓராண்டில் அவர்களை

விட்டு நீங்கும். சிவனடியார்கள் மனம் கலங்கினால் நாடும் மன்னனும் அழிதல் உறுதி.[189] குருவிடம் பொய் சொன்னால் ஒருவன் பெற்ற ஞானமும் மறந்துவிடும்; ஆன்ம வளர்ச்சி குன்றும்; வறுமை வாட்டும்.[190] குரு பரசுராமரிடம் தான் ஓர் அந்தணன் என்று கூறி வில்வித்தை கற்ற கர்ணன், உண்மை தெரிந்தபின் பரசுராமர் இட்ட சாபத்தால் பிரம்மாஸ்திரத்தைச் செலுத்தும் மந்திரத்தைத் தக்க சமயத்தில் மறந்து, அருச்சுனன் அம்புக்கு இரையான வரலாறு இக்கருத்துக்கு அரண் செய்வதாகும்.

சோதிடம்

கதிரவன் இயக்கத்திற்கேற்பக் கணிக்கப்படுதல்

சோதிடத்தில் நம்பிக்கை உடையவர்களாக மக்கள் விளங்கினர். 'ஏரொளிச் சக்கரம்' என்னும் தலைப்பில் அமைந்த பாடல்கள் இதனை விளக்குகின்றன. சீவன் ஒளியுடல் பெறும் முறையைச் சொல்லும்பொழுது பல செய்திகளைச் சொல்கிறார் திருமூலர்.

கதிரவன் இயக்கத்தால் காலம், ஆண்டு, திதி, பருவம், திங்கள் முதலியன கணிக்கப்படும்; பன்னிரு இராசிகளில் சூரியன் இயங்கும் முறை சூரிய வீதியாகக் கொள்ளப்படும்; இச்சூரிய வீதியும் மூன்று வகையாக உள்ளது; சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்றும் ஒன்றி வெளிப்பட்டு, சகஸ்ரதளத்தை நிமிரச் செய்யும். அப்போது ஆன்மா என்ற தாரகை பூரணமாகும். அதன்மேல் சிவந்த சிவ ஒளியும், கருமையான சக்தியின் ஒளியும் ஒன்றும். இக்காரொளி பஞ்ச பூதங்களில் ஒன்றி அண்ட கோசத்தை ஒளிமயமாக்கும். இவ்வாறு சீவன் ஒளியுடல் பெறும் என்று திருமந்திரம் தெளிவுறுத்துகிறது.[191]

ஜாதகம் கணித்தல்

மூவகை சூரிய வீதிகளுக்கு உரிய பன்னிரு இராசிகளின் அமைப்பு மட்டும் இவ்வுலகியல் வாழ்வை மேற்கோள்ளும் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. பிறந்த நேரத்திற்கு ஏற்ப வாழ்வில் நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகள் கணிக்கப் பெறுகின்றன. இதுவே 'ஜாதகம்'[192] என்று வழங்கப்படுகிறது. சூரியனின் இயக்கத்திற்கு ஏற்பத் தங்களது இராசிக்கு ஏற்படும் நன்மை தீமைகளை முன்கூட்டி அறிந்து, அதற்கேற்பத் தம் வாழ்க்கையை அமைத்துக் கொள்வது சமுதாயத்தில் ஒரு கூறாகிவிட்டது.

வாரசூலம்

வாரசூலம் என்பது இந்த நாளில் இந்தத் திசையில் பயணம் மேற்கொள்வதால் நன்மையோ தீமையோ விளையும் என்பதைச் சுட்டுவது.

சனி, திங்கள் — கிழக்குத் திசையில் பயணம் கூடாது.
செவ்வாய், புதன் — வடதிசையில் பயணம் கூடாது.
ஞாயிறு, வெள்ளி — மேற்குத் திசையில் பயணம் கூடாது.
வியாழன் — தென்திசையில் பயணம் கூடாது.[103]

இவ்வாறு கூறும் திருமந்திரம் புறப்படும் ஊருக்குப் பின்பக்கமாகவும் இடப்பக்கமாகவும் உள்ள திசையில் உள்ள ஊருக்குச் சென்றால் நன்மை விளையும் என்றும், முன்பக்கமாகவும் வலப் பக்கமாகவும் உள்ள ஊருக்குச் சென்றால் தீமை விளையும் என்றும் குறிப்பிடுகிறது. இக்காலச் சமுதாயத்தில் சிலரே வாரசூலம் பார்க்கின்றனர்; அவ்வாறு பார்ப்பவர்களும் அந்த நாள்களில் பயணம் செய்ய நேர்ந்தால் பரிகாரம் செய்துவிட்டுப் பயணம் மேற்கொள்கின்றனர்.

சமுதாயமும் அரசும்

சமுதாயத்தைக் காப்பவன் அரசன்

மன்னன் 'காடுகெடுத்து நாடாக்கிக் குளந்தொட்டு வளம் பெருக்கவேண்டும்' என்றோ, சங்கம் வைத்துத் தமிழ் வளர்க்க வேண்டும் என்றோ, இமயம்வரை சென்று வெற்றி பெற்று வில் பொறிக்க வேண்டும் என்றோ, கொடைமடம் பட்டவராதல் வேண்டும் என்றோ திருமந்திரம் அறிவுறுத்தவில்லை. அது, மன்னனுக்குரிய அறநெறிகளையே பெரிதும் பேசுகின்றது. இதற்குக் காரணம் திருமந்திரம் அம்மை வாழ்வைப் பெறுவதற் கான வழிமுறைகளை இம்மை வாழ்வை மேற்கொண்டிருப் பார்க்குச் சொல்ல முற்படும் நூலாக அது விளங்குதலே ஆகும்.

'இராசதோடம்' என்னும் பகுதி அரசனுக்குரியனவற்றைக் கூறுகிறது. நாட்டைக் காக்கும் மன்னனுக்குக் கல்வி இன்றி யமையாதது; ஏனெனில் கல்வி கற்ற அரசனாலேயே அறத்தை உணர்ந்துகொள்ள இயலும்; அறவழி நிற்க முடியும். கல்லாத அரசன் அறம் உணராது கொடுஞ்செயல் புரிவான்.[104]

பசு, பெண்டிர், அறவோர் காத்தல்

அரசன் நாட்டு நலனில் அக்கறையுடையவனாய் இருத்தல் வேண்டும்; அதனால் அவன் சில அறங்களை மேற்கொள்ள

வேண்டியவனாகிறான். பொய்த்தவ வேடம் பூண்டு வாழ்பவரையும், பொய்க்குருவையும், கள் உண்பவரையும், தத்தம் சமயவழி நில்லாதவரையும் அரசன் ஒறுத்தல் வேண்டும்; போர் நாட்டம் அரசனுக்கு இருக்கக் கூடாது; அரசன் தானும் அறவழி நின்று மக்களையும் அந்நெறியிற் செலுத்தல் வேண்டும்; இன்றேல் மக்களை வந்தடையும் தீவினையில் ஆறில் ஒரு பங்கு மன்னனை வந்தடையும்.[195]

பசு, பெண்டிர், அறவோர், துறவோர் முதலானோரை மன்னன் காத்தல் வேண்டும் என்கிறது திருமந்திரம்; அவ்வாறு காவானெனில் அவ்வரசனுக்கு நரகமே கிட்டும். இதனை,

> **ஆவையும் பாவையும் மற்றற வோரையும்**
> **தேவர்கள் போற்றும் திருவேடத் தாரையும்**
> **காவலன் காப்பவன் காவா தொழிவனேல்**
> **மேவும் மறுமைக்கு மீளா நரகமே**[196]

என்னும் பாடல் எடுத்துரைக்கிறது.

தொகுப்புரை

திருமந்திரம் அன்பு, அறம், ஈகை முதலியவற்றைப் பெரிதும் வலியுறுத்துகின்றது.

இறையன்பும் உறவன்பும் மக்களை நன்னெறியின்கண் உய்க்கும் வழிகளாகும்.

அன்பினால் உலகில் வன்முறையற்ற இனிய சமுதாயம் மலரும்; வளம் பெருகும்.

அறவழி நிற்போரே வீடுபேறு அடைவர்; அதனால், மக்கள் அறநெறியில் நிற்றல் கடன். சமுதாய முன்னேற்றத்திற்கு அதுவே வழி.

ஈகை தன்னலமற்றது; இடுதல் ஒரு பயன்நோக்கிச் செய்வது. ஈகையினாற் பெறும் இன்பத்தை நுகராதவர்கள் தாம் பெற்ற செல்வத்தால் தீமையே அடைவர். சமுதாயத்தின் மேன்மை கருதி ஞானியர்க்கும் வறுமையாளர்க்கும் ஈதல் வேண்டும். உலகை ஏமாற்றித் திரியும் போலிகட்கு ஈதல் கூடாது என்று திருமந்திரம் கடிகிறது.

திருமந்திரம் சாதிகளைக் குறிக்கிறது; ஆனால் உயர்வு தாழ்வு சுட்டவில்லை. தொழிலடிப்படையிலேயே சாதிகள் தோன்றின. அதனால் திருமந்திரம் தீண்டாமையைக் கொடியதெனக் கடிந்துரைக்கிறது.

இறைவன், உலகம், மனிதன் ஆகிய மூன்றனை இணைக்கும் பாலமே மதம் என்பது. இந்துமதம் தொன்மையானது; அதன் பல

பிரிவுகளுள் சைவ சமயம் சிறந்தது; அஃது ஆறு உட்பிரிவுகளைக் கொண்டது. முதலில் சிவனது இருப்பிடம் அறியாது அலைந்த திருமூலர் பின்னர்க் கண்டு தெளிவடைந்தார்; பின், 'ஒன்றே தெய்வம்' என்று தெரியக் கூறினார். திருமந்திரத்தில் மத வேறுபாடுகளுக்குச் சிறிதும் இடமில்லை.

உலகம், யாக்கை, செல்வம் ஆகியன நிலையற்றன. உலகின் நிலையாமையைச் சிவன் மேற்கொண்ட தொழில்களுள் ஒன்றான 'அழித்தல்' தொழிலால் அறியலாம். உலக நிலையாமையை உணர்ந்து இறையை நினைத்துப் போற்றினால் சீவன் சிவனாகும்,

உடல் நிலையில்லாதது; ஆயின் உயிர் அழிவற்றது. அதனால் யாக்கை நிலையாமையினை நன்குணர்ந்து மனிதன் யோகநெறி நின்று வீடுபேறு அடைய முற்படவேண்டும்.

பொருட்செல்வம் நிலையில்லாதது; அதனை மதித்தல் ஆகாது. பொருட் செல்வத்தைப் புறக்கணித்து எப்போதும் சிவ சிந்தனையோடு இருப்பவர் அருட்செல்வம் பெற்று வீடுபேறு அடைவர்.

சமுதாயத்தில் பல்வேறு நம்பிக்கைகள் தொன்றுதொட்டு வழங்கி வருகின்றன. அவற்றுள் நல்வினை, தீவினை ஆகியன குறிப்பிடத்தக்கன. நல்வினை செய்வார் சொர்க்கம் அடைதலும், தீவினை இயற்றுவார் நரகம் உய்தலும் இயல்பென்கிறது திருமந்திரம்.

கதிரவன் இயக்கத்தின் அடிப்படையில் சோதிடம், ஜாதகம் ஆகியன கணிக்கப் பெற்றன. வாரசூலம் பார்த்துப் பயணப் படுதலும் மக்களிடையே உள்ள ஒரு நம்பிக்கையாகும். இது பற்றியும் திருமந்திரம் குறிக்கிறது.

சமுதாயத்தைக் காக்க வேண்டிய பொறுப்புள்ளவன் அரசன் ஆவான். அவனுக்குக் கல்வி மிக இன்றியமையாதது. பசு, பெண்டிர், அறவோர், துறவோர் முதலானோரை மன்னன் காத்தல் வேண்டும்; இன்றேல் மன்னன் நரகம் புகுவான். கள்ளுண்போர், பொய்த் தவவேடம் புனைந்தோர், பொய்க்குரு ஆகியோரை மன்னன் ஒறுத்தல் வேண்டும்.

உலக அரங்கில் தமிழ்ச் சமுதாயமும் இந்திய நாடும் சிறந்த ஓர் இடத்தைப் பெறுவதற்கான சமுதாயக் கருத்துக்களும், ஆன்மீக வழிமுறைகளும் திருமந்திரத்தில் நிரம்ப உள்ளன.

அடிக்குறிப்புகள்

1 பாஸ்கல் கிஸ்பர்ட், சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள் ப. 128
2 Leslie A. White, An Introduction to the History of cociology, p. 131
3 Compton's Pictured Encyclopaedia, Vol. 18, p. 220
4 அ. மு. பரமசிவானந்தம், சமுதாயமும் பண்பாடும், பா. 32
5 தொல். பொருள். நூ. 647
6 ,, பேராசிரியர் உரை, ப. 477
7 திருமந்திரம், பா. 270
8 திருவாசகம், பா. 388
9 திருமந்திரம், பா. 8
10 ,, பா. 12, 31
11 ,, பா. 274
12 ,, பா. 152
13 ,, பா. 209
14 திருக்குறள், பா. 247
15 திருமந்திரம், பா. 44, 271, 273, 275, 276, 279, 281— 283, 285, 287, 453, 626, 630, 1005, 1008, 1011, 1127, 1128, 1456, 1464, 1465, 1471, 1577, 1590, 1977, 1987, 2361, 2742, 2788, 2965, 2980, 3013.
16 திருக்குறள், பா. 4
17 ,, பா. 5
18 J. N. Findlay, A.R.E. Examination, p. 318
19 புறம் 58; கலி. 139; மணி. 11/92— 94; குறள். 77, 93; சிலம்பு. பதிகம் 55; 20/1
20 திருமந்திரம், பா. 51
21 ,, பா. 59
22 ,, பா. 258, 244
23 ,, பா. 300
24 ,, பா. 251
25 ,, பா. 305
26 குறள், பா. 100
27 திருமந்திரம், பா. 196, 252
28 ,, பா. 2138
29 குறள், பா. 292
30 மணி. சிறைவிடுகாதை, அடிகள் 124 — 125
31 திருமந்திரம், பா. 2068
32 ,, பா. 2916
33 ,, பா. 197
34 குறள், பா. 81
35 திருமந்திரம், பா. 198, 199
36 திருவருட்பா, பா. 3469, 3471, 3472, 3478
37 திருமந்திரம், பா. 332
38 ,, பா. 324
39 ,, பா. 328

40 திருமந்திரம் பா. 329
41 ,, பா. 326
42 ,, பா. 327
43 ,, பா. 196
44 ,, பா. 200
45 குறள், பா. 221
46 மணி., காதை 25, அடிகள் 228 — 231
47 குறள், பா. 228
48 திருமந்திரம், பா. 252
49 ,, பா. 267
50 திருமந்திரம், பா. 171
51 ஔவையார், கொன்றைவேந்தன், பா. 4
52 திருமந்திரம், பா. 149
53 ,, ஜி. வரதராஜன் உரை, முதற்பாகம், ப. 74
54 திருமந்திரம், பா. 268
55 ,, பா. 1693
56 ,, பா. 501
57 ,, பா. 253
58 ,, பா. 1851
59 ,, பா. 1858
60 வில்லி பாரதம், ஆரண்ய பருவம், துரு. சருக்கம், பா. 8 — 10
61 திருமந்திரம், பா. 1859
62 ,, பா. 1860
63 பத்திரகிரியார் அளித்த உணவை ஒரு நாய் உண்டது; அது அடுத்த பிறவியில் காசிராசன் மகளாகப் பிறந்தது; திருமண வயது வந்த போது திருமண வாழ்வுக்கு உடன்படவில்லை. அரசனோடு திருவண்ணாமலை வந்து குரு பத்திரகிரியாரை வணங்கிப் பின் முக்தியடைந்தது. நாய்க்கு உணவளித்த காரணத்தால் தன் குரு பட்டினத்தாரால் சம்சாரி என்று இகழப்பட்டார் பத்திரகிரியார்; அதனால் மனம் வருந்தித் தன் கையிலிருந்த திருவோட்டைக் கொண்டு நாயைத் தாக்க அது இறந்தது. இது செவிவழிக் கதை.
64 திருமந்திரம், பா. 1866
65 ,, பா. 1887, 1888
66 ,, பா. 507
67 ,, பா. 505
68 ,, பா. 506
69 ,, பா. 508
70 ,, பா. 1857
71 ,, பா. 1660
72 பத்திரகிரியார் பாடல், 37
73 ம. பொ. சிவஞானம், இலக்கியங்களில் இனவுணர்ச்சி, ப. 9
74 தொல். பொருள், இளம்பூரணர் உரை, ப. 21, 33, 34.
நச். உரை, ப. 25, 26 பேராசிரியர் உரை, ப. 639
75 அரு. இராமநாதன், சித்தர் ஞானக் கோவை, சிவானந்த போதம், ப. 496
76 சிவவாக்கியர், பா. 38
77 ,, பா. 211

78 ஞான ஏற்றம், பா. 128
79 பாம்பாட்டிச் சித்தர் பாடல், பா. 123
80 பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப் புலம்பல், பா. 125
81 திருமந்திரம், பா. 1721
82 ,, பா. 356, 206, 330, 2873
83 ,, பா. 1860, 52, 215, 224, 230, 231, 1565.
84 ,, பா. 144, 146, 149, 152, 159, 208, 253, 845, 513, 1643
85 ,, பா. 154, 308
86 ,, பா. 485, 818, 834, 2289
87 ,, பா. 166, 178, 189, 269, 503, 658, 667, 2567
88 ,, பா. 173, 1651, 2290, 2531
89 கப்பல் கட்டுதல் போன்ற தொழில் செய்பவரையும் குறிக்கும்.
90 திருமந்திரம், பா. 143, 158, 193, 440, 443, 2351
91 ,, பா. 153, 748
92 ,, பா. 511
93 ,, பா. 192, 209, 295, 2131
94 ,, பா. 2031
95 ,, பா. 136
96 ,, பா. 1781
97 ,, பா. 2888
98 ,, பா. 171, 196
99 ,, பா. 800, 2422
100 ,, பா. 2551
101 ,, பா. 2553
102 கோ. செல்வம், இந்துமதம் என்ன சொல்கிறது, ப. 3
103 1. சுத்த சைவம்; 2. பாசுபதம்; 3. மாவிரதம், 4. காளாமுகம், 5. வாமம், 6. வைரவம்.
104 திருமந்திரம், பா. 2104
105 ப. இராமநாதபிள்ளை, திருமந்திரம், ப. 823
106 திருமந்திரம், பா. 2306
107 ,, விநாயகர் காப்பு, ப. 1
108 ப. இராமநாதபிள்ளை, திருமந்திரம், ப. 405
109 மணி., சமயக்கணக்கர்தந் திறங் கேட்ட காதை, அடிகள் 5—262
110 திருமந்திரம். பா. 2615
111 ,, பா. 1550, 1557, 1558, 1561
112 ,, பா. 1545

113 திருமந்திரம், பா. 1562

114 ,, பா. 1568

115 அரு. இராமநாதன், சித்தர் ஞானக் கோவை, பட்டினத்தார் பாடல், 30, 60; அகஸ்தியர் ஞானம், பா. 4

116 கோ. செல்வம், இந்துமதம்: 'இது என்ன சொல்கிறது', பக். 116—117

117 அரு. இராமநாதன், மு. கு. நா., சிவவாக்கியர் பாடல் 127, 188, கடுவெளிச்சித்தர் பாடல் 127

118 திருமந்திரம், பா. 147

119 ,, பா. 145

120 ,, பா. 153

121 ,, பா. 145, 150, 157, 162

122 ,, பா. 144

123 ,, பா. 155

124 ,, பா. 167

125 ,, பா. 159

126 ப. இராமநாதபிள்ளை, திருமந்திரம், ப. 32

127 திருமந்திரம், பா. 224

128 ,, பா. 232

129 ,, பா. 234

130 ,, பா. 230

131 ,, பா. 1719

132 ,, பா. 1720

133 ,, பா. 1915

134 ,, பா. 1914

135 ,, பா. 1916

136 ,, பா 1917, 1918

137 ,, பா. 1919—1922

138 ,, பா. 1910—1913

139 புறம், பாடல் 165

140 மணி., காதை 22, அடிகள் 135—136

141 ஆய்வின் இறுதி இயல் 'திருமந்திரமும் ஆன்மீக வாழ்வும்' காண்க. ப. 351

142 அரு இராமநாதன், மு.கு.நா., பட்டினத்தார் பாடல்கள், கோயில் திரு அகவல் 1, உடற்கூற்று வண்ணம், பக். 94—96

143 பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப் புலம்பல், பா. 42, 49, 170, 100—109

144 ஆய்வின் இறுதி இயல் காண்க, ப. 338
145 திருமந்திரம், பா. 2908
146 ,, பா. 2415
147 ,, பா. 2416
148 ,, பா. 2414
149 ,, பா. 143
150 ,, பா. 166
151 ,, பா. 177
152 ,, பா. 178
153 ,, பா. 179
154 ,, பா. 184
155 ,, பா. 574
156 ,, பா. 581
157 ,, பா. 588
158 ,, பா. 612, 758
159 ,, பா. 727
160 ,, பா. 2100
161 ,, பா. 1134, 590
162 ,, பா. 1042
163 ,, பா. 791
164 ,, பா. 803
166 ,, பா. 1953
166 ,, பா. 1301
167 குறள் 247
168 ,, 332
169 ,, பரிமேலழகர் உரை, ப. 110
170 திருமந்திரம், பா. 168
171 ,, பா. 169
172 ,, பா. 170
173 ,, பா. 172
174 ,, பா. 173
175 ,, பா. 209
176 ,, பா. 213
177 பி. சி. கணேசன், தெய்வ சக்தியும் மனித முயற்சியும், ப. 97
178 மே. கு. நூ., பக். 63 — 64
179 திருமந்திரம், பா. 2557
180 ஜி. வரதராஜன், திருமந்திரம் மூன்றாம் பாகம், உரை, ப. 415

181 திருமந்திரம், பா. 1123
182 ,, பா. 507
183 ,, பா. 2194
184 ப. இராமநாதபிள்ளை, திருமந்திரம், ப. 89
185 திருமந்திரம், பா. 1668
186 ,, பா. 515—519
187 பி. சி. கணேசன், முன்னர்க் குறித்த நூல், ப. 46
188 திருமந்திரம், பா. 531, 533
189 ,, பா. 532, 534
190 ,, பா. 535
191 ,, பா. 1267—1275
192 அபிதான சித்தாமணி, ப. 615
193 திருமந்திரம், பா. 797—798
194 ,, பா. 238
195 ,, பா. 239—247
196 ,, பா. 243

போற்றிஎன் பார்அம ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்அசு ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்மனி தர்புனி தன்அடி
போற்றிஎன் அன்புள் பொலியவைத் தேனே

— திருமந்திரம் 44

இயல் — மூன்று

புராணக் கதைகள் தொடர்பான கருத்துகள்

புராணங்கள் வரலாற்றை உள்ளடக்கியவை

புராணக் கதைகள் தொன்றுதொட்டு வருபவை; வரலாற்றுக் கூறுகளை உள்ளடக்கியவை.

கிரேக்கத்தைப் போலத் தமிழிலும் புராணங்கள் இலக்கிய வகைகளுள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன.

புராணம் என்பதற்குப் பழைய வரலாறு என்பது பொருள். அது தொன்மைக் காலந்தொட்டு இக்காலம் வரை தொடர்ந்து வழங்கி வருவது. வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், காப்பியங்கள் உட்பட அனைத்துவகை இலக்கியங்களுள்ளும் புராணங்கள் இடம்பெற்றுள்ளன.

புராணங்கள் பதினெட்டாகும்; இவற்றை வேதவியாசர் இயற்றினார் என்பர்.[1]

இவற்றால், தொன்றுதொட்டு இன்றுவரை நிலைத்துள்ளதும், பழைய வரலாறு கலந்ததும் புராணம் என்பது தெளிவாகிறது.

புராண நூல்கள் அனைத்தும் இறைத்தொடர்பு உடையவை; தெய்வங்கள், முனிவர்கள், அசுரர்கள் ஆகியோரைப் பற்றிய பழமையான செய்திகளை இவை தெரிவிக்கின்றன. தொன்மையான இப்புராணங்கள் வெறுங்கதைகள் அல்ல; அவை வரலாற்றையும் அடிப்படையாகக் கொண்டவை என்னும் கருத்து நிலவுகிறது. இதனை,

> ''நம் தேசத்தில் சரித்திரம் இல்லை என்று ஒரு குறை சொல்லப் படுகிறது; புராணம் சரித்திரந்தான்... ஸாம்ராஜ்யங்கள்,

சண்டை, படையெடுப்புகள், ராஜவம்சங்கள் இவைதான் சரித்திரம் என்று நினைப்பது சரியில்லை. எல்லா விஷயங்களுக்கும் சரித்திரம் உண்டு. அரசியல் சரித்திரத்தை மட்டும் ஹிஸ்டரியில் பிரதானமாக வைத்து விட்டார்கள். தர்ம விஷயங்களைப் பிரதானமாக வைத்து, அதற்கு ராஜவம்சத்தை மட்டுமின்றி, மற்ற புண்ய புருஷர்கள், ரிஷிகள், ஸாமானிய ஜனங்கள் முதலியோரின் கதைகளையும், மற்ற எல்லா விஷயங்களின் சரித்திரத்தையும் துணையாகச் சேர்த்துத் தருவனவாகப் புராணங்கள் இருக்கின்றன''[2]

என்று விளக்குகிறார் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்கள்.

இக்கருத்துகளுக்கேற்பத் திருமந்திரம் தரும் புராணச் செய்திகளும் தேவர்கள், முனிவர்கள், அசாதாரணத் தன்மை வாய்ந்த மனிதர்கள் ஆகியோரைப் பற்றிய வரலாற்று விளக்கங்களாக அமைந்து திகழ்கின்றன.

மறுமைப் பயன் தருவன

தமிழகத்தில் புராணங்கள் புனிதமானவையாகத் தொன்று தொட்டுக் கருதப்படுகின்றன. அவற்றில் இறைவனைப் பற்றிய பெருமைகள், ஆற்றல்கள், பண்புகள் முதலியன மிகுதியாகப் பேசப் பெறுவதால் அவை சமயச் சான்றோரால் மிக உயர்ந்தன வாகப் போற்றப் பெறுகின்றன. புராணங்கள் இல்லற வாழ்க்கை நெறிகளை உணர்த்திச் சமுதாயத்திற்கு உதவி செய்கின்றன; அதன் வாயிலாக அடுத்துவரும் பிறவிகளுக்கும் வழிகாட்டுகின்றன.

இம்மைக்கே அன்றி மறுமைக்கும் பெரும் பயன் தருவன இந்தப் புராணங்கள் என்பது அறிஞர் கருத்து.[3]

திருமந்திரம் புராணங்களைக் கையாளக் காரணம்

திருமந்திரம் பல அரிய உண்மைகளை மக்களுக்கு உணர்த்த வேண்டிப் புராணக் கதைகளை ஆங்காங்கே கையாண்டுள்ளது.

உலகத்தின் தோற்றம், இறைவனது பண்புகள், தெய்வ அருளாற்றல், தேவர்களின் செயல்கள், சாபம், வீடுபேறு, அசுரர்களின் இயல்புகள், இறைவழிபாடு ஆகியனவற்றை விளக்கவும், சமுதாயச் சிந்தனைகள் பலவற்றை விளக்கவும் புராணக் கதைகளைத் திருமூலர் நன்கு பயன்படுத்தியுள்ளார்.

புராணங்கள் குறிப்பிடும் தெய்வங்களும், முனிவர்களும், பிற மாந்தர்களும், அவர்களின் செயல்களும், அவற்றால் அடைந்த விளைவுகளும் தொன்றுதொட்டு வழங்கி வருவன ஆதலால் மக்களுக்குக் கருத்துகள் பலவற்றையும் தெளிவித்தல் எளிது என்று கருதி ஆசிரியர் புராணக் கதைகளைத் திருமந்திரத்தில் இடம் பெறச் செய்துள்ளார் எனலாம்.

திருமந்திரம் குறிப்பிடும் சிவன், தேவர், அசுரர், மக்கள் பற்றிய புராணக் குறிப்புகள் ஈண்டு ஆராயப்படுகின்றன.

சிவன் குறித்தவை

திருமந்திரம் கூறும் சிவன் பற்றிய செய்திகளை ஐந்து பிரிவாகப் பகுக்கலாம். அவை:

1. உலகத் தோற்றம்
2. ஐந்தொழில்கள்
3. சிவன் வடிவம்
4. சிவன் அணிகலன்கள்
5. சிவன் செயல்கள்

என்பன.

1. உலகத் தோற்றம்

உலகம் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டது. இறைவன் சிவனே ஆவன். அவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன். பராபரன். சிவன், சக்தி என்று பிரிக்கமுடியாதவன். உலகத் தோற்றத்தின்போது ஒளிமயமான பராபரனிடமிருந்து பரன் தோன்றும். பின் பரையும், பரையிடம் விளங்கும் நாதமும் தோன்றும்.[4]

பராபரம்
(சிவசக்தி)

பரன் — பரை

நாதம்
விந்து
சிவன் சக்தி
ஞானம் — செயல்
உலகத்தோற்றத்திற்கான
இச்சை

சுத்த மாயையில் தோன்றுவன நாதம், விந்து, சிவன், சக்தி, ஞானம், செயல், இச்சை என்பன. இச்சையின் காரணமாகத் தோன்றும் அசுத்த மாயையிலிருந்து ஆகாயம், காற்று, நெருப்பு,

நீர் ஆகியன தோன்றும். இவை ஒன்று கலந்து கடினத் தன்மையுடைய நிலமாகும். இவ்வைந்தில் உள்ள ஒவ்வொன்றிலும் ஐம்பூதங்களின் கூறுபாடு கலந்துள்ளது. இதனை,

தேனின்கண் ஐந்துஞ் செறிந்தைந்து பூதமாய்
பூவின்கண் நின்று பொருந்தும் புவனம்[5]

என்னும் திருமந்திரப் பாடல் விளக்குகின்றது. நிலமாகிய பூதத்தில் நிலத்தின் தன்மை அரைப்பங்கும், பிற நான்கு பூதங்களின் தன்மைகள் அரைக்காலே அரைக்கால் பங்கும் உள்ளன.

2. ஐந்தொழில்கள்

உலகைப் படைக்கும் சிவசக்திக்குப் புதல்வர்கள் பிரமன், விட்டுணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என ஐவராவர்.[6] உலகங்கள் இருநூற்று இருபத்து நான்கு என்பதனால் ஒவ்வோர் உலகுக்கும் இவ்வைவரும் சிவசக்தி புதல்வர்களாய் இருந்து அவற்றை இயக்குவர்.

உலக இயக்கத்தில் முக்கிய பங்குபெறும் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் முறையே அயன், அரி, அரன் ஆகிய மூவரும் நிகழ்த்தும்போது சிவன் உடனிருந்து அறிவான். இதனைத் திருமந்திரம்,

புகுந்தறி வான்புவ னாபதி அண்ணல்
புகுந்தறி வான்புரி சக்கரத் தண்ணல்
புகுந்தறி வான்மலர் மேலுறை புத்தேள்
புகுந்தறி யும்முடிக் காகிநின் றாரே[7]

என்று விளக்குகின்றது.

சிவசக்தி விளையாட்டால் கதிரவன் இயக்கத்தில் மாறுபாடு ஏற்படுகிறது; அதனடிப்படையில் உலக இயக்கத்திற்கான பருவ காலங்களும் தோன்றுகின்றன. இதற்கிணையான ஒத்த கருத்துகளைத் 'தேவி பாகவதம்' தெரிவிக்கிறது.[8]

முத்தொழில்களையும் உலகில் முறையாகச் செய்வது சிவசக்தி கூட்டமாகும் என்பதனை,

ஓராய மேஉல கேழும் படைப்பதும்
ஓராய மேஉல கேழும் அளிப்பதும்
ஓராய மேஉல கேழும் துடைப்பதும்
ஓராய மேஉல கோடுயிர் தானே[9]

என்று திருமந்திரம் சுட்டுகின்றது.

நான்காவது தொழில் 'திரோபவம்' என்பதாகும். இதன் பொருள் 'மறைத்தல்' ஆகும். மகேசுவரன் சிவனது ஆணைப்படி சீவர்களுக்கு வினையை ஊட்டுவான். இறைவன் சீவர்களுக்கு வினைப்போகம் ஊட்டுவதை அச்சீவர்கள் அறியாதவாறு

மறைத்து ஊட்டுவான்; பிரபஞ்ச அழிவுக்குப்பின் அதனையும் அதிலுள்ள சீவர்களையும் இறைவன் தன்னுள் மறைத்துக் கொள்வான். இவ்வாறு இருவகையில் மறைத்தல் தொழில் அமைகிறது. மாணிக்கவாசகர்,

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்[10]

என்று திருப்பள்ளியெழுச்சியில் இதனைத் தெரிவிக்கிறார்.

ஐந்தாவது 'அநுக்கிரகம்' என்பது. இதற்கு 'அருளல்' என்று பொருள் கூறுவர். சிவனது ஆணையை ஏற்றுச் சதாசிவன் சீவர்களுக்குப் பிறவியை அளிப்பதோடு மலநீக்கம் பெறவும் அருள் புரிகின்றான். இவ்வாறு பல ஊழிகளையும், பல உலகங்களையும் ஐம்பூதங்களையும், தேவர்களையும், சீவர்களையும் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருளும் ஐந்தொழில்களையும் செய்யும் பரமாக இருப்பவன் இறைவன் ஆவான்.

3. சிவன் வடிவம்

இறைவன் அணுவினும் நுண்ணியன்; பஞ்ச பூதங்களாகப் பரந்தவன்; இயற்கையோடு இயற்கையாக இரண்டறக் கலந்தவன். அகந்தை கொண்ட அயனும் மாலும் இறைவனை அறிய முடியாது அலமந்தனர்; அடிமுடி காணாது அவலமுற்றனர். ஒளிவடிவாக நின்றவன் இறைவன்; சிவ சக்தியாய்ப் பிரிக்க முடியாது பராபரனாக விளங்குபவன்.

பெண்ணொரு பாகம் பிறவி பெண்ணாமே[11]

என்னும் பாடலில் சிவ சக்தியாக உள்ள சிவன் உலகப் படைப்புக்காக ஆணாக (சிவன்)— பெண்ணாக (சக்தி) இருந்தான் என்று கூறப்படுகிறது. படைத்தல் தொழில் முடிவுற்றபோது சிவன் தன்னோடு சமமாக உள்ள சக்தியை விரும்ப, அவளைப் போலப் பெண்தன்மை அடைவான். இதனைப் 'பராசக்தியின் மெய்யுருவம்' என்னும் தலைப்பில் தேவி பாகவதம் விரிவாக விளக்குகிறது.

> ''பிரமனே, நானும் பரமசிவம். எங்களைப் புத்திப் பிரமையுடையவனே பேதமாகக் காண்பான். நித்யமாகவும் அநாதியாகவும் இருக்கும் பரப்பிரம்மமானது 'ஏகமேவா' என்றும் 'அத்விதீயம்' என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. இதன் உட்பொருள் என்ன தெரியுமா? ஒன்றாயிருக்கும் பரப்பிரம்மமானது எப்படி துவித பாவத்தை அடைகிறது? கண்ணாடியின் நடுவில் அதன் தன்மையால் ஒரு விளக்கின் ஜோதி இரண்டாகவும்,

ஒருவன் உருவம் இரண்டாகவும் தெரிவதைப் போல், எங்களுடைய உருவம் இரண்டாகத் தெரிகிறது. படைப்பின் காரணமாக நான் இரண்டென்கிற பேதமாகத் தோன்றுவதை எந்த விதத்தில் எடுத்துச் சொன்ன போதிலும் அது திரிஸ்யம் அத்ரிஸ்யம் என்ற பேதமுடையதாகிறதே தவிர வேறல்ல. எல்லாவற்றையும் அழிக்கும் ஸர்வசங்கார காலத்தில் நான் ஸ்திரீயுமன்று; புருஷனுமன்று; அலியுமன்று. மறுபடியும் உற்பத்தியாகும் காலத்தில் புத்தி, ஸம்பத்து, புகழ், தைரியம், நினைவு, சிரத்தை, தீர்க்க ஆலோசனை, தயை, வெட்கம், பசி, தாகம், பொறுமை, தேஜஸ், சாந்தி, துக்கம், சோம்பல், நரை, திரை, மூப்பு, ஞானம், அஞ்ஞானம், ஆசை, அபேஷை, பலம், பலவீனம், இரத்தம், மஜ்ஜை, மேனித் தோல், கண்கள், வாக்கு, பொய், மெய் என்றெல்லாம் புத்தியால் கற்பிக்கப்பட்டு பேத ரூபமாக இருக்கின்ற இவையெல்லாம் நானாகவே இருந்து அதனதன் செயலையும் பயனையும் செய்பவளாகவே இருக்கிறேன். ஆகையால் எல்லாப் பொருளும் நானே என்பதை நிச்சயம் செய்து கொள்வாயாக. எல்லாமே நானாக இருக்கும்போது, அவ்வப் பொருளின் வண்ணமும் நான் ஏன் ஆக மாட்டேன்? புனருற்பவ காலத்தில் கௌரி, பிராம்மி, ரௌத்ரி, வராகி, வைஷ்ணவி, சிவா, வாருணி, கௌரி பேரி, நாரசிம்ஹி, இந்திராணி என்னும் பல்வேறு பெயர்களுடன், நானே அந்தத்தச் சக்தி ரூபமாய் இருந்து அந்தந்தச் சக்திக்குரிய ஆற்றலுடன் செயலாற்றி வருகிறேன். உற்சவமாகிய சகல பொருள்களும் தொழிற்படுங் காலத்தில் அவற்றைக் காரணமாக வைத்து நானே சகல காரியங்களையும் செய்கிறேன். தண்ணீரில் குளிர்ச்சி நான்; நெருப்பில் உஷ்ணம் நான்; சூரியனில் ஒளி நான்; சந்திரனில் குளுமை நான். பிரபஞ்சத்தில் ஜீவகோடிகள் எதுவுமே என் சம்பந்தமில்லையெனில் சிறிதும் அசையக் கூட மாட்டா'' [12]

என்பது தேவி பாகவதம் தரும் செய்தி. இக்காரணங்களால் பராபரமாக உள்ள இறைவனிடம் பெண்தன்மையும் அடங்கியிருக்கிறது என்பதும், இறைவனே எல்லாமாகவும் இருந்து இயங்குகின்றான் என்பதும், படைப்புக்குப் பின் பெண் தன்மையை விரும்பிப் பெற்றுப் பெண்ணாக மாறுகிறான் என்பதும் புலப்படுகின்றன. இதனை,

சத்தின் நிலையினில் தானான சத்தியும்
தற்பரை யாய்நிற்குந் தானாம் பரற்குடல்
உய்த்தகு மிச்சையில் ஞானாதி பேதமாய்
நித்த நடத்து நடிக்குமா நேயத்தே [13]

என்கிறது திருமந்திரம்.

வானமே உடலாக உடையவன் இறைவன்; [14] சிவசக்தியாக இறைவன் ஆடும் நடனம் தத்துவங்களை உள்ளடக்கியது; [15] உலக நன்மைக்காக நடனமாடுபவள் சக்தி. அவள் நாற்பத்தொரு சக்திகளும் எட்டுக் கன்னிகளும் புடைசூழ வீற்றிருப்பவள். [16]

சிவன் சனகர், சனற்குமாரர், சனந்தனர், சனாதனர் ஆகிய நால்வருக்கும் வேதம் அருளினார்; அந்நிலையில் வேதம் அருளிய இறைவனைத் தட்சிணாமூர்த்தி என்பர். வேதம் கற்றும் அதன் உண்மைப் பொருளை அவர்கள் உணராத காரணத்தால் சிவனிடம் அது பற்றி வினவ, இறைவனும் சின்முத்திரையால் அதனை உணர்த்தினான். நடுவிரல், மோதிர விரல், சிறுவிரல் ஆகிய மூன்றும் ஆணவம், கன்மம், மாயை எனவும், சுட்டுவிரல் ஆன்மா எனவும் உணர்ந்து, மும்மலம் நீக்கியபின் சுட்டுவிரல் ஆகிய ஆன்மா பெருவிரலாகிய சிவன் பாதங்களில் பணிதல் வேண்டும் என்பது அதன் கருத்து. [17] விரல்களைக் கொண்டு சின்முத்திரையில் கல்லால மரத்தின்கீழ்ச் சனகாதி நால்வர்க்கு வேதம் உணர்த்தும் சிவபெருமானின் உருவம் இன்றும் சிவாலயங் களில் காணப்படுகின்றது.

இச்சான்றுகள் இறைவனின் வடிவ அமைப்பை ஓரளவு கோடிட்டுக் காட்டுகின்றன. இவ்வடிப்படையில் சிவனது வடிவங்கள்,

அ) சிவலிங்கம் அல்லது கந்து வடிவம்
ஆ) தட்சிணாமூர்த்தி வடிவம்
இ) சிவசக்தி அல்லது அர்த்தநாரி
ஈ) நடராசன்

என்பனவாகும் என்ற முடிவுக்கு வரலாம்.

4. சிவன் அணிகலன்கள்

வேதப்பொருளுணர்த்தும் சிவன் அணிந்துள்ள அணிகலன்கள் தனிச் சிறப்புடையனவாகும். அவை மக்களுக்கு உலகின் உண்மை களைக் குறிப்பாக உணர்த்துகின்றன எனலாம்.

அராபரன்:— சிவன் அரவினை அணிகலனாக அணிந்தவன் என்பது 'அராபரன் மன்னி மனத்துறைந் தானே' [18] என்னும் திருமூலர் வாக்கால் அறியலாம். அரவு, குண்டலினி யோகத்தை உணர்த்துவ தற்காக அமைந்த ஒரு குறியீடு ஆகும்.

பனிமதி சூடி:— சிவன் தலையில் பனிமதி சூடியுள்ளான்.[19] சந்திர யோகத்தால் நெற்றிக்குமேல் ஏற்படும் ஒளியை அது குறிக்கிறது. இதற்காகவே ஒரு குறியீடாகச் சந்திரன் விளங்குகிறான்.

கங்காளன்:— எலும்பு மாலை அணிந்தவன் சிவன். எலும்பில் சோதியை வெளிப்படுத்தும் சக்தி உள்ளது. இவ்வொளி சோதி வடிவானது; அதாவது வான வடிவானது. சமய வல்லுநர்கள் தூல உரு அழிந்து ஒளிவடிவாக மாறி, மீண்டும் உலக உற்பத்தியின் போது தேவைக்கேற்ற உருவம் பெறும் தன்மையுடையது ஆன்மா என்று கூறுவர். இதனை உணர்த்துவதற்காகவே சிவன் எலும்பை அணிந்துள்ளான்.[20]

கவசத் திருநீறு:— பேருழிக் காலத்தில் எலும்பையும் மண்டையோட்டையும் ஏந்திக்கொண்டு எழுபவன் சிவன்.[21] அப்போது இடுகாட்டுச் சாம்பலையும் வெண்ணீறாக அணிந்திருப்பான். மணிமுடி தரித்த திருமால் முதலிய தேவரது உருவமாகிய எலும்பையும், அறிவாகிய மண்டையோட்டையும் சிவன் சூக்குமத்தில் தாங்கவில்லை எனில் பிறவிக்கு வரும்போது மக்களுடைய பழைய உருவமும் அறிவும் பொருந்தாது தொடர் பின்றிப் போகும். திருவள்ளுவரும், கல்வி பிறவிதொறும் தொடர்ந்து வரும் என்று கூறுவர்:

> **ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
> **எழுமையும் ஏமாப் புடைத்து**[22]

என்பது குறள். அதனால் ஆன்மாவின் அறிவு பிறவிகள் தோறும் வளர்ந்து, இறுதியில் பக்குவம் பெறுவதற்கு ஏதுவாகின்றது; மேலும், ஆன்மாவினை, அறிவு— உடல் என்பனவற்றைத் தொடர்பு படுத்தும் இணைப்புப் பொருளாக எலும்பிலிருந்து கிடைக்கும் வெண்ணீற்றின் கூறுகள் அமைந்துள்ளன.

புலித்தோல்:— சிவன் இடையில் ஆடையாக அணிந்திருப்பது புலித்தோல் ஆகும்.

> **பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன்**[23]

என்று திருமந்திரம் கூறுகின்றது. சுந்தரரும்,

> **பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து**[24]

என்று பாடுவர்.

தியானத்தினால் ஞானியர் தம்முடலில் பொன்போன்ற மஞ்சள் நிற ஒளியைத் தம்முள் காண்பர் என்பதை உணர்த்தவே இறைவன் புலித்தோலை ஆடையாக அணிந்துள்ளான்.

கரியுரி:— தாருகா வனத்து முனிவர்களின் அகந்தையை அடக்குவதற்காகச் சிவன் பிச்சாடனராக வந்தார்; அவர்தம் அழகில்

முனிவர்களின் மனைவியர் நிறையழிந்தனர். இதனால் முனிவர்கள் சினம்கொண்டு சிவனை அழிப்பதற்காக யாகம் செய்தனர். அவ்யாகத்தில் இருந்து வந்த புலியைக் கொன்று இடுப்பில் ஆடையாகக் கட்டிக் கொண்டார் சிவபெருமான். அடுத்து வந்த யானையை அழித்து, அதன் தோலைப் போர்வையாக அணிந்து கொண்டார். இந்தப் புராணச் செய்தியை,

அடுத்த ஒருபுலி கொடுத்த சோமனும்
ஆனை கொடுத்தவி தானச் சேலையும் [25]

என்று திருக்குற்றாலக் குறவஞ்சியும் குறிப்பிடுகின்றது. இப்புராணச் செய்தி 'ஆணவம் அழிதல்' என்னும் தத்துவத்தைக் குறிக்கிறது. கரிய இருளாகிய யானை அகந்தை நிறைந்த ஆன்மாவாக உருவகம் செய்யப்படுகிறது; மும்மலங்களில் ஒன்றான ஆணவம் மூலமலமாகக் கருதப்படும்; அதனை அழித்தால் ஆன்மா ஒளிபெற்று இறைவனைக் காண்பதற்கு வழி பிறக்கும். உலகோர்க்கு இத்தத்துவத்தை உணர்த்தவே இறைவன் கரியுரி அணிந்திருக்கிறான்.

கண்டம் கறுத்த கருத்து:— பாற்கடலைக் கடைந்தபொழுது அதில் தோன்றிய நஞ்சினை உண்டவன் சிவன்; அது மிடற்றில் நின்றதால் சிவன் கண்டம் கறுத்தவன் ஆனான். 'கண்டம் கறுத்தல்' என்பதில் ஒரு தத்துவக் கருத்து உண்டு. விந்து செயம் பெற்ற சாதகனுக்கு, விந்து மாற்றமடைந்து, கண்டத்தைத் தாண்டிய பின்னரே ஒளி ஏற்படும். அதுவும் சிறிது சிறிதாக நீலம், மேகம், வெண்மேகம் முதலிய நிறங்கள் முதலில் ஏற்பட்டு, இறுதியில் சுத்தப் படிகநிறம் ஏற்படும். 'நஞ்சு' என்று சுக்கிலத்தைக் குறிப்பிடாமல் 'சினஞ் செய்த நஞ்சு' என்று குறிப்பிடுகிறார். விந்துநீக்கம் வீடுபேற்றை இழக்கச் செய்யும் என்பதாலும், வீடுபேற்றை விரும்பும் சாதகன் விந்து நீக்கத்திற்குக் காரணமான சிற்றின்பத்தை வெறுத்து ஒதுக்குதலே விந்துசெயம் என்பதாலும் 'சினம் செய்த நஞ்சு' என்றார். விந்து மாற்றம் அடைந்து, சகஸ்ரதளத்தில் மோதி, அமுதமாக மாறுகிறது. அதனைக் கேசரி யோக முத்திரையில் நாவை மடித்து உண்டவர்கள் நீண்ட ஆயுளையும் ஒலி ஒளிகளைப் பெற்று வீடுபேறடைவர். அத்தகைய சிறப்புடையவன் சிவன். அதனால் சினஞ் செய்த நஞ்சுண்ட தேவர் தலைவனான சிவனை அடையவேண்டும் என்பது பெறப்படுகின்றது. இறைப் பேறடைய எண்ணமின்றி இருப்பாரைக் கண்டு,

கண்டம் கறுத்த கருத்தறி வாரில்லை [26]

என்கிறார் திருமூலர். சிவபெருமானைக் குறிக்கும்போது,

விடங்கொண்ட கண்டன் [27]

என்றும்,

மைதாழ்ந் திலங்கு மிடறுடை யோனே [28]

என்றும் பலவாறாகக் குறிப்பிடுகின்றது திருமந்திரம்.

கங்கைப் படர்சடை:— சிவபெருமான் பகீரதன் தவத்தினை ஏற்றுக் கொண்டு ஆகாய கங்கையை பூமிக்குக் கொடுத்தபோது, பூமி கங்கையின் வேகத்தைத் தாங்காது என்பதால் தன் சடையில் தாங்கிப் பூமியில் விட்டான் என்பது புராணச் செய்தி. இதனை உள்ளடக்கித் திருமந்திரம்,

தேய்ந்தற் றொழிந்த இளமை கடைமுறை
ஆய்ந்தற்ற பின்னை அரிய கருமங்கள்
பாய்ந்தற்ற கங்கைப் படர்சடை நந்தியை
ஓர்ந்துற்றுக் கொள்ளும் உயிருள்ள போதே [29]

என்கிறது.

இளமை அழியக்கூடாது என்பதாலும், இளவயதிலேயே இறையுணர்வும் விந்துசெயமும் பெறுவது பேரின்ப வாழ்விற்கு வித்திடும் என்பதாலும் இறைவன் பெருமையைக் கூறி, அவன் பாதங்களைப் பற்றுதல் வேண்டும் என்று இப்பாடல் சுட்டுகிறது. இதனை வள்ளுவர்,

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு [30]

என்று வலியுறுத்துவர். இதனால் சீவர்கள் பற்றுக்கோடாக இறைவன் பாதங்களைப் பற்ற வேண்டும் என்பது அறியப்படுகிறது.

எனவே, திருமந்திரம் சிவனுக்குரிய அணிகலன்களையும், அதனை அவன் அணிந்ததற்கான காரணங்களையும், அவற்றின் உட்பொருள்களையும் உலகுக்கு உணர்த்தி வழிகாட்டுகிறது எனலாம்.

5. சிவன் செயல்கள்

ஐந்தொழில்களைப் புரியும் இறைவன் எல்லாமாய் எல்லாவற்றுள்ளும் நிறைந்துள்ளான். இதனை உணராத தேவர், அசுரர், மனிதர் முதலானவர்களுக்கு இறைவன் பல செயல்களைச் செய்து தன் இறைத் தன்மையை நிலைநாட்டுகிறான். அன்பு வடிவான சிவன், தேவ அசுரர்க்கு இடையே ஏற்படும் அழிவுகளையும், தேவ— அசுர— மனிதர்களுக்கிடையே ஏற்படும் அகந்தைகளையும் நீங்குமாறு செய்வான். சுருங்கக் கூறின் மும்மலங்களை நீக்குவதற்காக இறைவன் செய்த செயல்கள் புராணச் செய்தி

களாக நின்று இன்றளவும் மக்கள் மனமாசுகளை நீக்கும் கருவிகளாக விளங்குகின்றன.

அடிமுடி தேடல்

சிவபெருமான் உடம்பாய், உயிராய், அதனுள் நின்ற உணர்வாய், நெருப்பாய், திருமால், பிரம்மா ஆகியோரால் அறிய முடியாதவனாய், ஒளியாய் ஓங்கித் தம்ப வடிவாய் நிற்பவன். இத்தம்பமே அண்டங்களுக்கு ஆதாரமாய் விளங்குவது. சூரியனும் சந்திரனும் அண்டங்களும் இத்தம்பத்தை சுற்றுகின்றன [31] இதனை மறந்ததனால் மாலும் அயனும் தங்களுக்குள் யார் பெரியவர் என்று வாக்குவாதம் தொடங்கி, அதற்குத் தீர்வு காண்பதற்காகச் சிவனை நாடினர். அப்போது சிவன் சோதி வடிவாய் நின்று, அதன் அடிமுடி தேடுமாறு பணித்தான். தங்கள் இயலாமையால் இருவரும் தோற்றனர்; ஆயினும் திருமால் உண்மையை ஒப்புக்கொள்ள, அயன் கண்டதாகப் பொய் கூறித் தண்டனைக்கு ஆளானான். திருமாலுக்கு உலகில் வழிபாடு சிறக்கும் என்றும், அயனுக்குப் பொய் சொன்ன காரணத்தால் வழிபாடு இராது என்றும் சிவன் கூறியதோடு நில்லாமல், அயனது ஐந்தாவது தலையையும் கிள்ளியெறிந்தான். இதன் பின்னரே பிரமனின் உள்ளத்திலிருந்த அகந்தை அகன்றது. பஞ்ச பூதத் தலங்களில் தீயைக் குறிக்கும் திருவண்ணாமலை இதற்குச் சான்றாக இன்றும் விளங்குகிறது. இப்புராணக் கதையினால் அகந்தை அழிய வேண்டும் என்னும் அரிய உண்மை மக்களுக்கு உணர்த்தப்படுகிறது.

கூற்றினை உதைத்தல்

நாற்றிசைக்கும் தலைவனாகிய சிவன் தென்திசைத் தலைவனான கூற்றுவனை உதைத்த வரலாற்றைத் திருமந்திரம் சுட்டுகிறது. மனிதன் மூப்படையாமல் இளமையுடன் பல ஆண்டுகள் வாழ்தற்குரிய முறையினை விளக்கும் 345ஆம் பாடலில் 'ஞாலக் கடவூர்' என்னும் சொல் இடம் பெறுகிறது. இச்சொல்லுக்குச் சிவன் திருக்கடவூரில் மார்க்கண்டேயன் என்றும் பதினாறாக விளங்குமாறு வரம் கொடுத்த வரலாறு விளக்கமாகிறது. சாதகன் சுழுமுனையில் பொருந்திநின்று குண்டலினி யோகத்தால் மூலாதாரத்தில் உள்ள மூலத்தீயை மேலெழுப்பி உடம்பாகிய உலகைக் கடந்து சகஸ்ரதளமாகிய ஊரில் அழியாது இருக்கலாம் என்பதே 'ஞாலக் கடவூர்' என்பதன் தத்துவ விளக்கம் ஆகும்.

காமன் செயலொழித்தல்

மன்மதனைச் சிவபெருமான் அழித்த புராணச் செய்தியினை உள்ளடக்கித் திருமூலர்,

திருந்திய காமன் செயலழித் தங்கண் [32]

என்று பாடுகிறார். காமன் செயலழிப்பதற்கு முக்கிய காரணம் விந்துசெயம் பெறுதல் ஆகும். இதனை இப்பாடலின் இறுதி அடியில்,

அருந்தவ யோகங் கொறுக்கை அமர்ந்ததே [33]

என்று ஆசிரியர் குறிக்கிறார். 'அருந்தவ யோகம்' என்னும் தொடர் இல்லறத்தில் பெண்ணொடு பொருந்தி இருந்தே விந்து செயம் பெறுவதைக் குறிக்கிறது. 'கொறுக்கை' என்பது கொறு, கை என்று இரண்டு சொற்களின் கூட்டாக அமைகிறது. கொறு என்பது கன்று பால் உண்ணாதவாறு கட்டும் முகக்கட்டு; கை என்பது சுழுமுனையைக் குறிக்கும் சொல்.[34] இல்லறத்தில் இருந்துகொண்டு மனம் இறையின்பத்தை விரும்பிச் சகஸ்ர தளத்தில் பதிவுற்று இல்லற இன்பமாம் சிற்றின்பத்தில் ஈடுபட்டால் சிவனருளால் ஞானக்கண் கிட்டும். 'கொறுக்கை அறுத்தது' என்ற புராணக் கருத்துப்படி, உலக மக்கள் திருக் கொறுக்கை என்ற கோயிலில் சிவன் மன்மதனை அழித்ததையே வெளிப்படையான பொருள் என்று கொள்வர். இப்பாடலின் உட்பொருளாக விளங்குவது, கன்று பாலருந்தாவாறு அதன் முகத்தில் கட்டப்படும் வாய்ப்பூட்டு அல்லது கொறுக்கை எப்படித் தொழில் புரிகிறதோ அவ்வாறு மனம் என்ற கொறுக்கை கொண்டு விந்துசெயம் பெற்றவரது விந்து அமுதமாகிறது என்பதாம். சிற்றின்பம் மட்டுமே உலக வாழ்வின் குறிக்கோள் அன்று என்பதும் இங்கு உணர்த்தப்படுகிறது. காமதகனம் என்ற புராணச் செய்தியின் வாயிலாகப் பேரின்பம் பற்றிய தத்துவம் விளக்கப்பட்டுள்ளது.

பிரமன் தலை கொய்தல்

கொலையிற் பிழைத்த பிரசா பதியைத்
தலையைத் தடிந்திட்டுத் தானங்கி யிட்டு
நிலையுல குக்கிவை வேண்டுமென் றெண்ணித்
தலையை யரிந்திட்டுச் சந்திசெய் தானே [35]

என்பது திருமந்திரம். கொலையிற் பிழைத்த பிரசாபதி என்பது சுவாதிட்டான சக்கரத்தில் உள்ள பிரமன் விந்துநீக்கம் செய்து கொண்டு இருக்கிறான். பிரமனின் இச்செயலைக் கடிந்த சிவன் பிரமன் தலையைக் கிள்ளினான் என்பது புராணம். சீவனின் பக்குவத்துக்கேற்ப ஞானம் அருள்பவன் சிவன். அந்நிலையில் மூலாதாரத்தில் உள்ள மூலத்தீ மேலேற்றப்பட்டு விந்துசெயம் பெறுகின்றனர், உலக மக்கள். பிரமனது விந்துநீக்கமாகிய செயலை நீக்கி, ஐந்து தலைகளில் ஒன்றைத் தடிந்ததன் மூலம்

பிரமனின் அகந்தையை அழித்து, உலக இயக்கத்திற்காக அவனை உயிருடன் விடுக்கின்றான் சிவன். 'அடிமுடி தேடல்' என்னும் புராணச் செய்தியும் பிரமன் தலை கொய்யப்பட்டதைக் குறிப்பதாகும்.

மாலுக்குச் சக்கரமும் பிரமனுக்கு வாளும்

திருமாலுக்குச் சக்கரத்தையும் பிரமனுக்கு வாளையும் ஈந்தான் சிவபெருமான் என்னும் புராணச் செய்தி,

> **ஆழி கொடுத்தனன் அச்சுதற் கவ்வழி**
> **வாழி பிரமற்கும் வாள்கொடுத் தானே** [36]

என்னும் திருமந்திரப் பாடலில் இடம்பெறுகிறது.

சீவனுக்கு உலகப்பற்று உள்ளபோது சுவாதிட்டானம், மணிபூரகம் இரண்டு சக்கரங்களும் முறையே அயன், அரிக்கு உரியவை; உலகப்பற்று நீங்கிய நிலையில் சீவனின் அபான வாயு சுவாதிட்டான சக்கரமான நீர்ப்பிரதேசத்திலிருந்து மேல் செல்லவும், மணிபூரகத்திலுள்ள மாலும் உலக மயக்கத்திலிருந்து சீவனை விடுபடச் செய்ய அபானனும் பிராணனும் சுழுமுனையில் ஒன்றுபட்டுச் சகஸ்ரதளத்தை விரிவடையச் செய்யும். திருமாலும் பிரமனோடு ஒளிமயமான உருத்திரனைச் சுற்றிவர இறைவன் சுவாதிட்டானத்தில் இருந்துகொண்டு பிறப்புத் தொழிலைப் பிரமன் செய்யாதது கண்டு, ஒளியினைப் பிரமனுக்குக் கொடுத்தான். அதுவே ஒளிவீசும் வச்சிராயுதம் (வாள்) என்று புராணங்களில் பேசப்படுகிறது. சீவன் உலக இயக்கத்தில் நிலைபெற்றபோது மணிபூரகத்தை இடமாகக் கொண்ட திருமால், பேரின்பத்தை விரும்பியபோது சகஸ்ரதளத்தில் இருக்குமாறு இடமளித்தான் உருத்திரன். இதனையே புராணம் திருமால் சுதர்சன சக்கரத்தை உருத்திரனிடமிருந்து பெற்றதாகக் கூறுகிறது. திருமால் சக்கரத்தைத் தாங்கமுடியாமல் சிவனை வேண்டியதால், சிவன் தன் உடலில் பாதியைத் திருமாலுக்குப் பகிர்ந்து தந்தான் என்பதும் திருமந்திரத்தில் இடம்பெறும் புராணச் செய்தியாகும். [37]

சக்தி சிவனை வழிபடல்

பஞ்சபூதத் தலங்களில் ஒன்று காஞ்சிபுரம். அது மண்ணின் கூறு. சிவனை இத்தலத்தில் மண்ணில் வடித்துத் தவஞ்செய்து சிவனோடு சேர்ந்தாள் சக்தி. இதனை,

> **அடிசேர் வன்என்னஎம் ஆதியை நோக்கி**
> **முடிசேர் மலைமக னார்மக ளாகித்**
> **திடமார் தவஞ்செய்து தேவர் அறியப்**
> **படியார அர்ச்சித்துப் பத்திசெய் தாளே** [38]

என்னும் திருமந்திரப் பாடல் விளக்குகின்றது. சக்தி மன வலிமையோடு உறுதியாக நின்று தவஞ் செய்து தேவர் அறிய இறைவனைச் சென்று சேர்ந்தாள் என்பது புராணச் செய்தி. மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தி உச்சந்தலையில் விளங்கும் சிற்சக்தியாகிய சிவனை அடைந்தாள் என்ற உண்மையும் சீவன் சிவனாகும் என்ற தத்துவமும் இதன் மூலம் உலக மக்களுக்கு எடுத்துரைக்கப்படுகிறது.

இதுவரை தேவர்களுடன் சிவன் புரிந்த செயல்கள் புராண அடிப்படையில் ஆராயப்பட்டன; இனி, அசுரர்கள், முனிவர்கள், மனிதர்கள் ஆகியோருக்கு இறைவன் அருள்புரிந்த புராணச் செய்திகள் பலவும் திருமந்திரத்தில் இடம்பெற்றுள்ளன.

அந்தகாசுரன் அழிதல்

குருத்துயர் சூலங்கைக் கொண்டுகொன் றானே [39]

என்னும் திருமந்திரப் பாடலில் சீவர்களது உள்ளத்தில் இருக்கும் அறியாமை என்னும் அந்தகனாகிய அசுரன் சிவன் சூலத்தால் அழிந்தமை கூறப்படுகிறது.

அறியாமை உலகில் வெளியில் இல்லை; உள்ளத்தில் உள்ளது; அஃது இறையருளால் நீக்கப்படவேண்டும் என்பதே பாடலின் உட்பொருள்.

> "மனிதர் முதுகெலும்பில் முடிவிடமான பகுதி கழுத்து எலும்புகளுக்கு மேல் உள்ளது. அது பின்மூளைப் பகுதிக்கும் முன்மூளைப் பகுதிக்கும் இடையில் முடிவுறுகிறது. அதைக் குருத்து என்றும், குருந்தம் என்றும் வழங்கியுள்ளனர். அதன்மேல் சோமவொளி, சூரியவொளி, ஆன்மவொளி என்று கூறும் மூன்று ஒளிகளும் உள்ளன. அவைகளே 'குருத்துயர் சூலம்' அஞ்ஞானத்தை அழிப்பது சிவவொளியே ஆகும்" [40]

என்பர் ஜி வரதராசன். சீவன் யோகத்தின் மூலம் சூரிய, சந்திர, அக்கினிக் கலைகளை ஒன்றுபடுத்திப் புருவ நடுவில் ஒளியைக் கண்டு, உலகம் பொய்யானது என்று உணர்ந்து கொள்கிறது. உலக மாயையாகிய அறியாமை என்ற இருளால் ஏற்படும் அழிவு முச்சுடராகிய ஒளியாம் சூலத்தின் மூலம் நீங்கிப் பேரின்பம் விளைகின்றது என்பதே அந்தகாசுரன் புராணக் கதை மூலம் உணர்த்தப்படும் தத்துவமாகும்.

சலந்தராசுரன் அழிவு

எங்கும் கலந்துமென் உள்ளத் தெழுகின்ற
அங்க முதல்வன் அருமறை யோதிபாற்

பொங்குஞ் சலந்தரன் போர்செய்ய நீர்மையின்
அங்கு விரற்குறித் தாழிசெய் தானே[41]

என்பது திருமந்திரப் பாடல். எங்கும் கலந்து சீவனின் உள்ளத்தில் எழுபவன் சிவன்; அவன் வேதங்களை ஓதக்கூடியவன்; சலந்தரன் தேவர்களுடன் போர்செய்த போது அவனது வலிமைக்கு ஈடுகொடுக்க முடியாத அவர்களுக்காகச் சலந்தரனை எதிர்த்துச் சிவன் போர்புரிந்தான். அப்போது தரையில் கால் கட்டை விரலால் ஒரு சக்கரத்தை எழுதி, 'நீ சுத்த வீரனாக இருந்தால் இந்தச் சக்கரத்தை எடு பார்க்கலாம்' என்றான்; அதைப் பெயர்க்கக்கூட அவனால் முடியவில்லை. சிவன் அதனை எளிதாக எடுத்து அசுரன்மீது எறிந்தான். அப்போதே அவன் அழிந்தான். தேவர்கள் மலர்மாரி பொழிந்து போற்றினர். இப்புராண நிகழ்ச்சி நடந்த இடம் திருவிற்குடி என்னும் ஊர்.[42]

திருமந்திரத்தில் இடம்பெற்றுள்ள இப்புராணச் செய்திக்குத் தரப்படும் தத்துவ விளக்கம்: ''சலந்தரன் நீரை முகமாக உடையவன். போர் செய்தலாவது, அபானன் கீழ்நோக்குதலைத் தடுத்து மேல் நோக்கிப் பிராணனோடு கலக்குமாறு அருளுதல். விரற்குறித்து ஆழிசெய்தலாவது, யோனி முத்திரை அல்லது சண்முகி முத்திரையைக் குறிப்பது. இஃது ஒரு சம்பிரதாய இரகசியமாகும். ஞானம் விரும்பும் சீடனுக்குக் குருவினால் காட்டியருளும் ஒரு முத்திரையாகும் இது''[43] என்று கூறுவர் ஜி. வரதராசன். இக்கருத்துப்படி நவ துவாரங்களும் அடைபடக் கீழ்முகமாகச் செல்லும் அபானன் மேல் நோக்கிச் சென்று பிராணனுடன் கலக்கும் என்பது பெறப்படுகிறது. பிராணனும் அபானனும் ஒன்றுபட சுழுமுனை திறக்கும் இறையனுபவம் பெறலாம். இதுவே சலந்தராசுரன் சங்காரத்தின் தத்துவம் ஆகும்.

திரிபுர சங்காரம்

அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறி வாரே[44]

என்னும் திருமந்திரப் பாடல் முப்புரம் அழிந்த புராணச் செய்தியைக் குறிக்கிறது. சிவன் முப்புரத்தை அழித்தான் என்பது மனத்தெளிவில்லாத மூடர்கள் கருத்து என்கிறார் திருமூலர். முப்புரமாக உருவகிக்கப்படுவது ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலம். இவற்றை இறைவனின் அருளால் கிட்டும் ஞானத்தால் சுட்டெரிப்பவர் பேரின்பம் அடைவர். இதனை உணராது பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றால் ஆன

கோட்டைகளை வித்யூன்மாலி, தாருகாட்சன், கமலாட்சன் ஆகிய மூவரும் வானில் இயக்கியதாக நம்பிய மக்களின் அறியாமையைக் கண்டு மனமிரங்குகிறார் திருமூலர். தனக்கு அழிவையும், தன்னையொத்த பிற மக்களுக்கு இன்னலையும் ஏற்படுத்தும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் மூலாக்கினியை எழுப்பிச் சுட்டெரிப்பதையே இக்கதை குறிக்கிறது.

இராவணன் கயிலையைப் பெயர்த்தெடுத்தல்:

> தாங்கி இருபது தோளுந் தடவரை
> ஓங்க எடுத்தவன் ஒப்பில் பெருவலி
> ஆங்கு நெரித்தம ராவென் றழைத்தபின்
> நீங்கா அருள்செய்தான் நின்மலன் தானே [45]

என்பது மற்றொரு திருமந்திரப் பாடல். அகந்தையின் காரணமாகவும், தன்னம்பிக்கையின் காரணமாகவும் இராவணன் தன் இருபது தோள்களால் கயிலை மலையை எடுத்து இறைவனைச் சோதிக்க முயன்றான் என்பது புராணச் செய்தி. சிவன் தன் காற் பெருவிரலால் அழுத்தியவுடன் வலி தாங்க முடியாத இராவணன் தன் தவறுணர்ந்து வருந்தி வேண்டி நிற்க இறைவன் அவனுக்கு அருள்புரிந்தான்.

இராவணனின் பத்துத் தலைகள் சீவர்களிடம் இருக்கக் கூடாத 'காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம், டம்பம், தர்ப்பம், அசூயை, இரீஷை' என்ற பத்துக் குணங்களையும்; இருபது தோள்கள் ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, அவற்றால் பற்றப்படும் புலன்கள் பத்து ஆகிய இருபதையும் உருவகம் செய்கின்றன என்பர். [46]

தன் அகந்தையால் கயிலை மலையைப் பெயர்த்தெடுக்க முற்பட்டு இயலாதபோது இறைவனை 'அமரா' என்று அழைத்து இறையருள் பெற்றான் இராவணன். இவ்வாறே சீவர்களிடத்து நான் என்ற எண்ணமும், மாயையால் உலகப் பொருள்களின் மீது பற்றும் ஏற்படத் துன்பம் விளைகிறது; இதனை உணர்ந்து விடுதலை பெற நினைக்கும் சீவர்கள் 'சிவயநம' என்று சிந்திக்க முற்பட்டுச் செயலறும் போது பேரின்பம் அடைவர்.

கயமுகாசுரன் அழிவு:

> முத்தீக் கொளுவி முழங்கெரி வேள்வியுள்
> அத்தி யுரியர னாவ தறிகிலர் [47]

என்று திருமந்திரம் கூறுகிறது.

காருகபத்தியம், ஆகவனியம், தட்சிணாக்கினி என்பன முத்தீ. புறத்தில் இத்தீயினை யாகமாக வளர்க்கும்போது அதில் இருளைக்

கிழித்துக்கொண்டு ஒளிமயமாக இறைவன் வெளிப்படுவான்; தேவர்கள்கூட இதனை உணராமல் அஞ்சுவர். தேவர்களுக்குத் துன்பம் இழைத்துக் கொடுமை செய்த யானை வடிவுகொண்ட கயமுகாசுரனைச் சிவன் அழித்து, அதன் தோலைப் போர்வை யாக அணிந்துகொண்டான் என்னும் புராணச் செய்தி மேற்கண்ட கருத்தை விளக்குகிறது.

புறத்தில் உள்ள முக்தீயினைப் போல் நம் உடலில் சூரிய (பிங்கலை), சந்திர (இடகலை), மூலாதார நெருப்பு (அக்கினி) ஆகிய மூன்றையும் இணைக்கும்போது, யானையான அறியாமை நீங்க, அப்போது சீவன் தன்னுள் ஒளிகண்டு சிவனாகும். உடலின் ஆறு ஆதாரங்களில் இருந்து அறியாமையை ஏற்படுத்திவந்த தேவர்களும் உடன் அழிவர் என்பது இப்பாடலின் கருத்து. அத்தி (யானை), அறியாமையின் உருவகம்.

தக்கன் வேள்வி

'தக்கன் வேள்வி' என்னும் தலைப்பில் திருமந்திரம் தக்கன் அழிவை விளக்குகிறது.[48]

தந்தைபிரான் வெகுண்டான் தக்கன் வேள்வியை[49]

என்னும் திருமந்திர அடிக்கு, "தக்கனின் தந்தையாகிய நான்முக னுக்கும் முதல்வன் சிவபெருமான். தக்கன் பிழைபடச் செய்த புலைவேள்வியினை உன்னி மனத்திற்கொள்ளும் பொல்லாங்குச் சூடாகிய வெகுளியைச் சிவன் கொண்டனன்"[50] என்று விளக்கம் தருகிறார் இராமநாதப் பிள்ளை. இதன்படி, சிவன் சினம் கொண்டபோதே தேவர்கள் அஞ்சி ஓடினர்; திருமால் மன்னிப்புக் கேட்டார்; தக்கன் வேள்வியை அழிக்க வீரபத்திரன் தோன்றினன். 'தந்தைபிரான்' என்னும் தொடர் நான்முகனுக்கும் முற்பட்டவன் சிவன என்பதை உணர்த்துகின்றது. ஊழி முதல்வனாம் சிவனைப் பழித்ததால் தக்கன் வீரபத்திரனால் அழிக்கப்பட்டான்.

"தக்கன் வேள்வியாவது ஆண்பெண் கூட்டுறவாகும். சிவபெருமானை நினைந்து வெய்யாமையால் விந்து செயமாகிய பயனைப் பெறாது— கூட்டுறவாகிய வேள்வி சிதைந்தது" என்று விளக்கம் தருவர் ஜி. வரதராஜன்.[51] சிவனது அருள் இல்லை யெனில் விந்துசெயம் கிட்டாது என்று உணராதவரைக் கண்டும், அவர்தம் காமத்தைக் கண்டும் சிவன் சினப்பான் என்பது இதனால் புலனாகின்றது.

அரிபிர மன்தக்கன் அருக்க னுடனே
வருமதி வாலை வன்னிநல் இந்திரன்

சிரமுக நாசி சிறந்தகை தோள்தான்
அரனருள் இன்றி அழிந்தநல் லோரே[52]

என்னும் திருமந்திரம், திருமால், பிரமன், தக்கன், சூரியன், சந்திரன், நாமகள், அக்கினி, இந்திரன் ஆகியோர் முறையே தங்களுடைய அகந்தைக்குத் தலை, முகம், மூக்கு, கை, தோள் ஆகியவற்றை இழந்து உண்மையுணர்ந்து வீடுபேறடையும் தகுதி பெற்றனர் என்று தெரிவிக்கிறது.

காமன் உடலுயிர் காலன்பற் காய்கதிரோன்
நாமகள் நாசிசிரம் பிரமன் கரம்ஏரியைச்
சோமன் கலைதலை தக்கனையும் எச்சனையுந்
தூய்மைகள் செய்தவா தோணோக்கம் ஆடாமோ[53]

என்னும் திருவாசகப் பாடலும் இதனை வலியுறுத்துகின்றது. '' 'தான்' என்னும் அகந்தை அழிய வேண்டும்; அவ்வாறு அழியப் பெற்றவர் நல்லவராவர்'' என்னும் கருத்து, 'தக்கன் வேள்வி'யால் உணர்த்தப் பெறும் தத்துவமாகும்.

சண்டீசர் வரலாறு

சண்டீச நாயனார் வரலாறு திருத்தொண்டர்புராணத்தில், இடம்பெறுகிறது.[54] சிவத்தொண்டு புரிந்துவந்த சண்டீசன் அதற்கு இடையூறாக விளங்கிய தன் தந்தையின் காலையே மழுப்படையால் வெட்டினான் என்பது புராணச் செய்தி.

உறுவ தறிதண்டி ஒண்மணற் கூட்டி
அறுவகை ஆனைந்தும் ஆட்டத்தன் தாதை
செறுவகை செய்து சிதைப்ப முனிந்து
மறுமழு வால்வெட்டி மாலைபெற் றானே[54a]

என்று திருமந்திரம் சண்டீசன் வரலாற்றைக் குறிக்கிறது. ''தனக்கு உறுவதைக் காரண காரியத்தோடு அறியவல்ல சீவனாகிய சண்டீசன், வெண்மையான ஒளியாகிய மணலைச் சேர்த்துப், பிறவி அறும் வகையில் ஞானேந்திரியமாகிய ஐந்து பசுக்களையும் புறப்புலன்களில் மேயாது தடுக்க, மாயையாலுண் டான உடம்பாகிய தந்தை பொறாது பகைகொண்டு கெடுக்க, வெகுண்டு அக்கினிக் கலையாகிய வாளால் இடைபிங்கலையாகிய இரு கால்களையும் தொழிற்படாமல் செய்து சிவத்தொண்டன் ஆயினான்''[55] என்பது இதன் பொருள். பாடலில் தண்டி என்பது தண்டனை தருபவனாகிய சண்டீசன் என்பானைக் குறிக்கிறது; தாதை என்பது தண்டியின் தந்தையாவன். ஈண்டு, சண்டீசன்— சீவன்; தந்தை — மாயை; மழு — அக்கினி கலை; ஆன்ஐந்து— ஞானேந்திரியங்கள்; இரு கால்கள் — இடைகலை பிங்கலையாகிய இரு நாடிகள் என்று கொள்ளுதல் வேண்டும்.

குண்டலினி யோகத்தின்போது கீழ்நோக்கியுள்ள மழு என்ற உறுப்பு நிமிர, சித்ரணி என்ற நடுநாடி வழியாக மேலேறிச் சுழுமுனையை அடையும்; அப்போது சூரியகலை, சந்திரகலை ஆகிய இரண்டும் தொழிற்படா. அந்நிலையில் வெண்ணிற ஒளி தோன்றும் இதனைச் சீவன் உணருவான் என்பது தத்துவக் கருத்து. இங்குப் பிராணாயாமத்தின் இன்றியமையாமை உணர்த்தப்படுகிறது; இப்பயிற்சியால் கோடாயுதமாகிய மழு நிமிர்ந்து சீவனின் உடலில் ஒளி ஏற்படும் என்பது புலப்படுகிறது.

வடகோடு உயரத் தென்கோடு தாழ்தல் :

> **நடுவுநில் லாதிவ் வுலகஞ் சரிந்து**
> **கெடுகின்ற தெம்பெரு மானென்ன ஈசன்**
> **நடுவுள அங்கி அகத்திய நீபோய்**
> **முடுகிய வையத்து முன்னிரென் றானே [56]**

என்பது, உலகம் நிலைகுலைந்த போது சிவன் ஆணையிட, அகத்தியன் தென்பொதியமலை சேர்ந்து சமன்படுத்தினான் என்னும் வரலாற்றை உள்ளடக்கிய திருமந்திரப் பாடல். கந்தபுராணத்தில் இப்புராணச் செய்தி இடம்பெற்றுள்ளது [57]

தேவர்களும் பிறரும் சிவனை நோக்கி, 'இவ்வுலக மக்கள் சுவாசத்தைச் சுழுமுனையில் செலுத்தாது இடை, பிங்கலை வழியாக இயக்க உலக வாழ்வில் சிக்கி அழிகின்றனர்'' என்றனர். அதற்குச் சிவபெருமான், 'சுழுமுனை வழியாக மூலாதாரத்தில் உள்ள குண்டலினி மேலே சென்று புருவ நடுவில் சேர்ந்தால் சீவன் விருப்பு வெறுப்பற்றுச் சமன்பட்டு, இறைவனை அடையும்' என்றனன். இத்தத்துவக் கருத்து மேற்கண்ட பாடலில் பொதிந்துள்ளது. இதனோடு தொடர்புடைய மற்றொரு பாடல்,

> **அங்கி உதயம் வளர்க்கும் அகத்தியம்**
> **அங்கி உதயஞ்செய் மேல்பா லவனொடு**
> **மங்கி உதயஞ்செய் வடபால் தவமுனி**
> **எங்கும் வளங்கொள இலங்கொளி தானே [58]**

என்பதாகும். அங்கி— அகத்தீ. உலகோர் உடலில் வளர்க்கும் தீ அகத்தியம் ஆகின்றது. சிரசின் முன்பக்கம் நடுநாடியில் கலந்த தீ சிரசின் வடபக்கம் வரை வளர்ந்து பரவிச் சிரசு எங்கும் ஒளியாகத் தன் உடலில் ஒளியைக் காண்பான் சாதகன். இறுதியில் அவன் உடல் முழுதும் ஒளியாகி இறைச் சோதியோடு ஒன்றுவான். இதுபற்றி விளக்கும் ஜி. வரதராஜன்,

> ''மனிதனின் முன்மூளைப் பகுதியில் உள்ள நாளமில்லாச் சுரப்பியின் பிட்யூட்ரி கிளாண்டு (Pituitary Gland). பின் மூளையில் உள்ள நாளமில்லாச் சுரப்பியின் பெயர் பினியல்

கிளாண்டு (Pineal gland). இவை இரண்டும் மனிதனிடம் வெவ்வேறு வகையில் தொழிற்படுகின்றன. தெளிவான விளக்கங்கள் முன்மூளையிலும், கருத்தானவை பின்மூளையிலும் பதிவுறுகின்றன. இதை ஆங்கிலத்தில் concrete and abstract என்று கூறுவர். பஞ்சேந்திரிய அறிவு முன்மூளையில் பதிவுற்றுப் பின்மூளையில் கருத்தாகப் பதிவு பெறுகின்றது. இவ்வுண்மையை இன்றளவும் மருத்துவ உலகம் காணவில்லை. அதை யோகியர் அறிவில் கண்டனர். அதகப் பற்றை விட்ட கருத்துகள் ஆகாயமயமாய்ச் சிறப்படைந்து முன்மூளையிலும் பின்மூளையிலும் பதிவைச் செய்து கொண்டே உள்ளன. அவ்வகையான கருத்துகளின் முதிர்ச்சியால் முன்மூளையில் ஒருவகை அதிர்வு (ஸ்பந்த உணர்வு) ஏற்பட்டுப் பின்மூளை நோக்கியும், பின்மூளையிலிருந்து ஓர் அதிர்வு முன்மூளை நோக்கியும் உரசுவதில் சிரசில் நாதமும் ஒளியும் உண்டாகும். இவ்விதமான அதிர்வு தலையில் முழுதும் பரவிக் கவிழ்ந்த சகஸ்ரதளத்தை நிமிர்ந்த சகஸ்ரதளமாக மாற்றும். இதுவே அகத்தியம்.''[59]

என்று கூறுகிறார். இவற்றால் திருமந்திரம் தரும் ஒலி, ஒளி பற்றிய குறிப்புகள் தொடர்ந்து சித்தர்களால் ஆராயப்பட்டு வந்தன என்பது புலனாகின்றது. ஆனால் சாதாரண மனித நிலையில் உடல், பொருள், ஆவி ஆகியவற்றைப் பெரிதென எண்ணும் வாழ்க்கைச் சூழலில் உள்ளவர்களால் இவ்வுணர்வுகளை அறியமுடியாது. இடகலை, பிங்கலை ஆகிய இரு நாடிகளையும் சுழுமுனையில் இணைப்பதையே உடலில் உள்ள தீயை உணர்ந்த அகத்தியன் செய்கிறான்; இதையே புராணக் கருத்தாக வடக்கும் தெற்கும் இணைத்தவன் என்று மக்கள் வழங்கி வருகின்றனர். அகத்தியன் வரவால் வடக்கும் தெற்கும் சமப்பட்டதைப் போலக் கவிழ்ந்த நிலையில் உள்ள சகஸ்ரதளம் மூலாக்கினி மேலேற்றப்படும் பொழுது ஒலியும் ஒளியும் ஏற்பட்டு அதில் மோத, அப்போது கவிழ்ந்த சகஸ்ரதளம் சுழுமுனை வழியாகப் பிராணன் அபானன் கலந்து சகஸ்ரதளத்தில் மோதுவதால், நிமிர்ந்த சகஸ்ரதளமாக அமைகிறது. அதத்தியர் உருவத்தால் சிறியர் என்று புராணம் கூறுகிறது; அதுபோல், சிறிய அளவுள்ள சுழுமுனை வழியாகக் குண்டலினி மேலேற மாயையில் சிக்கித் தாழ்ந்துள்ள ஆன்மா (பசு) உயர்ந்த நிலையில் உள்ள பதியை அடைகிறது. மாயை குண்டலினி யோகத்தால் பசுவை விட்டு விலகப் பதி, பசு ஆகியவற்றிடையே இருந்த சூக்குமமான

உயர்வும் தாழ்வும் விலகுகிறது என்ற தத்துவக் கருத்துக்கும் இப் பாடல் இடமளிக்கிறது.

முருகன் தோற்றம்

சூரபன்மன் செய்த கொடுமைகளைத் தாங்க முடியாத தேவர் கள் வருந்தி, இறைவனை அணுகி அவனை அழிக்கும் வகையில் ஒரு திருமகனைத் தருதல் வேண்டும் என்று வேண்டினர். ஈசனும் உடன்பட்டுத் தம்முடைய பழைய ஆறுமுகங்களையும் கொண்டு, அவற்றின் நெற்றிக் கண்கள் தோறும் ஒவ்வொரு தீப்பொறியைத் தோற்றுவித்தான். அத்தீப்பொறிகள் வாயுவாலும் தீயாலும் தாங்கப்பட்டுச் சரவணப் பொய்கையில் கார்த்திகைப் பெண்க ளால் வளர்க்கப்பட்டன. இவ்வாறு கந்தபுராணம் முருகனது தோற்றத்தை விளக்குகிறது.[60]

> **எந்தை பிரானுக் கிருமூன்று வட்டமாய்த்**
> **தந்தைதன் முன்னே சண்முகம் தோன்றலால்**[61]

என்றும்,

> **ஆன்மாவே மைந்தன் அரனுக் கிவனென்றல்**
> **ஆன்மாவும் இல்லையால் ஐயைந்தும் இல்லையே**[62]

என்றும் திருமந்திரம் முருகனைக் குறிக்கிறது. முருகன், சிவ குமாரன்; சிவகுமாரன் என்பது ஆன்மாவே. தந்தைக்கு உள்ள தன்மையை மகன் பெறுவது சிவகுமாரத் தத்துவம். அதாவது சீவன் அல்லது ஆன்மா நின்மலாவத்தையில் சிவனாவது. சீவன் நின்மலாவத்தையில் பொருந்திப் புருவ நடுவில் தோன்றும் ஒளியும் பெருகிப் பேரொளியாகும்போது சீவன் சிவகுமாரன் ஆகிறது. இந்தத் தத்துவத்தை உள்ளடக்கியே திருமந்திரம் முருகன் தோற்றத்தைக் குறிக்கிறது.

சிவ நடனம்

சிவன் ஆடிய நடனங்கள் பல. அவற்றின் விளக்கம் :

1. கொடுகொட்டி:— எல்லாத் தத்துவங்களையும் அழித்து நின்றாடும் கூத்து இது.
2. பாண்டரங்கம் :— முப்புரங்களை எரித்த போது உண்டான திருநீற்றினை உடலில் அணிந்து ஆடிய கூத்து.
3. கோடு:— பிரமனது சிரசைக் கிள்ளி எடுத்து ஆடியது.
4. சங்காரம் :— நாள்தோறும் அழிப்பினைச் செய்யும் கூத்து.
5. நடம் எட்டு:— அட்ட மூர்த்தத்திலும் ஆடிய கூத்து.
6. நடம் ஐந்து:— நிவிருத்தி முதலிய ஐந்து கலைகளிலும் ஆடும் கூத்து.
7. நடம் ஆறு:— ஆறு ஆதாரங்களிலும் ஆடும் கூத்து.

8. தேவதாருவனம்:— தாருகாவனத்தில் முனிவர்களின் ஆணவத்தை அழிக்க ஆடிய கூத்து.

9. தில்லைவனம்:— அஞ்ஞானமாகிய தில்லைவனத்தை அழிக்க நெஞ்சத் தாமரையில் ஆடிய கூத்து. அஞ்ஞானத்தின் இருப்பிடம் நெஞ்சம். அதில் இறைவன் ஆடும் அசபா மந்திரமே தில்லைவனக் கூத்து.

10. வடமாவனம் :— திருவாலங்காடாகிய மூலாதாரத்தில் சிவன் ஆடும் கூத்து. இங்கு வடம் என்னும் சொல் ஆலமரம் என்னும் பொருள் கொண்டது.

சிவபெருமான் நடனம் ஆடிய இடங்கள் பலவற்றை ஒன்று சேர்த்துத் திருமந்திரம்,

> காளியோ டாடிக் கனகா சலத்தாடிக்
> கூளியோ டாடிக் குவலயத் தேயாடி
> நீடிய நீர்தீகால் நீள்வா னிடையாடி
> நாளுற அம்பலத் தேயாடும் நாதனே [63]

என்று பாடுகிறது.

முதலில் காளியோடு ஆடுவது குறிக்கப்படுகிறது. காளி என்பது வாயுவைச் செலுத்தும் சக்தி. இதனைச் செலுத்துபவர் காலர் அலலது ஈசானர் ஆவர். ஈசானர் அதோமுகம் கொண்ட போது காமகாரியம் நடைபெற்று உடலின் ஆற்றல் அழிகிறது. சீவர்களிடம் நிலைபெற்றுள்ள மும்மலங்களில் ஒன்றான காமம் நீங்க, காளியுடன் ஆடுவன் சிவன்.

அடுத்து, கனகாசலத்து ஆடுவது. கனகாசலம் என்பது பொன்மலையைக் குறிக்கும். துவாதசாந்தம் என்னும் பெரு வெளியில் பொன்னிறமான ஒளியில் இறைவன் வெளிப் படுவதையே இது குறிக்கிறது.

மூன்றாவதாக, 'கூளியோடு' ஆடியது. கூளி என்பது பேய். பேய்களுடன் ஆடும் நடனம் என்பது சீவர்களது அஞ்ஞானத்தைப் போக்கச் சிவன் ஆடிய நடனம். அஞ்ஞானமே கூளி அல்லது பேய்.

அடுத்து, 'குவலயத்தே ஆடி, நீடிய நீர், தீ, கால், நீள்வானிடை ஆடி'யது. உலக இயக்கத்திற்காக மண்ணிலும், நீரிலும், நெருப்பிலும், காற்றிலும், வானத்திலும் சிவன் ஆடுவான்.

இறுதியில் கூறப்படுவது 'அம்பலத்தே' ஆடியது. சீவர்கள் நீண்ட வாழ்நாள் பெறவேண்டும் என்ற நோக்கத்திற்காக 'அம்பலம்' எனப்படும் ஆகாயத்திலும், அதன் உருவகமாக உள்ள சிதம்பரத்திலும் சிவன் ஆடுவது.

அம்பல மாவ தகில சராசரம்
அம்பல மாவது ஆதிப் பிரானடி
அம்பல மாவது அப்புத்தீ மண்டலம்
அம்பல மாவது அஞ்செழுத் தாமே [64]

என்று திருமந்திரம் 'அம்பலம்' பற்றி விளக்கம் தருகிறது. இந்தப் பாடலுக்கு ஜி. வரதராஜன்,

> ''பஞ்சாக்கரம் ஆகாயமயமானது. அதை அறிவதில் இறைவன் திருவடி உள்ளது. அதுவே ஆதிப்பிரான் திருவடிநிலை. அவன் அறிவுருவானவன் என்பதாம். அப்புத்தீ மண்டலம்... சிதாகாயப் பெருவெளியில் ஒளியும், நீரின் அசைவுபோன்ற ஒரு நிலையும் உண்டு. அவ்வசைவே அப்புத்தீ மண்டலமும் அவனது திருவடி நடனமுமாகும்'' [65]

என்று கூறும்.விளக்கம் நினைவில் கொள்ளத்தக்கது.

முயலகன் அழிவு :

ஆகாச மாமுட லங்கார் முயலகன் [66]

என்னும் திருமந்திரம் முயலகன் அழிவைக் குறிக்கிறது. இறைவன் நடனமிடும் ஓரிடம் ஆகாயம். அதில் கருமையே முயலகன் என்னும் உருவகம். இம்முயலகனே சீவர்களிடம் இருளைப் பெருக்கும் மும்மலம். திசை எட்டுக் கைகளாக அமைந்து அவனது மேலாடையாக விளங்க, இறைவனின் முக்கண்களே இடகலை பிங்கலை தீயாக இருக்க அறிவுப் பெருவெளியாகிய ஞான வெளியில், இருளாகிய முயலகன் அழியுமாறு ஆடுபவன் சிவன் என்பது இத்திருமந்திரத்தின் உட்கருத்து.

திருப்பாற்கடல் கடைதல் :

திருப்பாற்கடல் கடைதலாகிய புராணக் கதையைச் சிவபுராணம் கூறுகிறது. [67] இதனைத் திருமந்திரம்,

மிக்கார் அமுதுண்ண நஞ்சுண்ட மேலவன்
தக்கார் உரைத்த தவநெறி யேசென்று
புக்கால் அருளும் பொன்னுரை ஞானத்தை
நக்கார் கழல்வழி நாடுமின் நீரே [67a]

என்னும் பாடலில் குறிப்பிடுகிறது.

அகந்தை மிகுந்த தேவர்கள் திருப்பாற்கடல் கடைந்தபோது வெளிப்பட்ட அமுதத்தை உண்ண, சிவன் நஞ்சினை உண்டான்; குரு உரைத்த தவவழி நின்று அவனை அடைந்தால் அவன் ஞானத்தைத் தருவான்; எனவே சிவன் உபதேசித்த வழிநின்று அவனை அடைதல் வேண்டும் என்பது இப்பாடலின் பொருள்.

இப்பாடல் குறிப்பிடும் அமுதுண்ணும் செயல், ஒளியில் நிலை பெற்று நிற்பது; சாதகனுக்கு உரிய தவநெறி விந்தினை இழக்காமல் இருப்பது; விந்து மாற்றமடைந்து அமுதமாக மாறிச் சகஸ்ரதளத்திலிருந்து வடிய யோகியர் கேசரி யோகத்தால் நாவை மடித்து உண்டு ஒளியுடல் பெறுவர்; இறையோடு ஒன்றுவர் என்பது இப்பாடல் உணர்த்தும் தத்துவக் கருத்தாகும்.

தேவர் குறித்தவை

விண்ணுலகத்தில் உள்ளோர் தேவர் என்றும், வானவர் என்றும், சுரர் என்றும் வழங்கப்படுவர். தேவர்களுக்கு தூல உடல் இல்லை; அவர்கள் ஒளிமயமான சூக்கும உடல் உடையவர்கள்; அவர்களது தோற்றத்தைத் தேவி பாகவதம் நன்கு விளக்கு கிறது. [68]

தேவர்களை மக்கள் பெருந்தெய்வம், சிறுதெய்வம் என்று வகைப்படுத்தி வணங்குவர்; எண்ணிக்கையில் அவர்கள் முந்நூற்று முக்கோடியினர் என்று கணித்துக் கூறுவர். [69]

> ''தேவர்கள் என்பதற்குத் தேசு (ஒளி, நிறைந்தவர்கள் என்பது பொருள். அவர்கள் சுவர்க்கத்தில் வாழ்வார்கள். அமரகோசம் என்னும் அகராதி பின்வரும் பல பெயர்களில் அவர்களைக் குறிக்கிறது. அவர்கள் அமரர்கள் (மரண மில்லாதவர்கள்), நிர்ஜரர் (மூப்பில்லாதவர்கள்), தேவர்கள் (ஒளியுள்ளவர்கள்), திரிசர்கள் (மூன்றாவதான யௌவன தசை ஒன்றே உடையவர்கள்), விபுதர்கள் (எல்லாம் அறிந்தவர்கள்), சுரர்கள் (ஐசுவரியம் கொடுப்பவர்கள்'') [70]

என்று கலைக்களஞ்சியம் குறிப்பிடுகின்றது.

திருமந்திரம் தேவர்களைப் பல பெயர்களில் சுட்டிச் செல்கிறது. தெய்வம், தேவர், வானவர், அமரர், உம்பர், அண்டர், வித்யாதரர், இமயவர், விண்ணவர் என்று திருமந்திரம் தேவர்களை வகைப்படுத்துகிறது.

தெய்வம்

'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்னும் கோட்பாடு உடையவர் திருமூலர். அவர் தம் திருமந்திரத்தில் பெருந்தெய்வம் என்று சிவபெருமானை ஏற்றுக் கொண்டுள்ளார். சிவனின் பெருமையை சொல்லும்போது, 'உடலில் உயிர் பொருந்தி உடலை இயக்குதல்போல் உலகை இயக்குபவன் சிவன்; ஆதலால் சிவன் உலகிற்கு உயிர்' என்று கூறுவர். உலகங்கள் பலவற்றை

யும் உடலாக உடையவன் அவன்; அவனே அனைத்து உலகங்களுக்கும் ஒரே தெய்வமாக விளங்குபவன். இதனை,

ஒன்று கண்டீர் உலகுக்கொரு தெய்வமும் [71]

என்று திருமந்திரம் எடுத்துக் கூறுகின்றது. சிவன் பிறப்பு, இறப்பு அற்றவன். ஆதலால் உலக மக்களை நோக்கி,

கூறுமின் நீர்முன் பிறந்திங் கிறந்தமை
வேறொரு தெய்வத்தின் மெய்ப்பொருள் நீக்கிடும் [72]

என்று வினவுகின்றார். சிவன் தேவர்களின் தெய்வமாகவும் இருப்பவன்; அவனைப் போல மற்றொரு தெய்வத்தைத் தேடினாலும் காண முடியாது; அவனோடு ஒப்பு நோக்கிக் கூறத் தக்க தகுதியும் வேறு எந்தத் தெய்வத்துக்கும் இல்லை. இதனை,

சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கு யாவரும் இல்லை [73]

என்னும் கூற்றால் தெளிவுபடுத்துகிறார் திருமூலர். இவற்றால் தேவர்களுக்குத் தெய்வமாகவும், தலைவனாகவும் விளங்குபவன் சிவன் என்பது உறுதியாகிறது.

தேவர்களது தோற்றம்

பராபரனால் படைக்கப்பட்டவர்கள் தேவர்கள்; அதிதியின் மக்கள் தேவர்கள்; தக்கன் வேள்வியை அழிக்கத் தோன்றிய வீரபத்திரனும் தேவர். ஆகையால் திருமூலர்,

படைத்துடை யான்பல தேவரை முன்னே [74]

என்று கூறுகிறார்.

தேவர் எண்ணிக்கை

தேவர்களின் எண்ணிக்கை முப்பத்து முக்கோடி என்பது வழக்கு. அதாவது தேவர்கள் அளவற்ற எண்ணிக்கையில் இருப்பவர்கள் என்பதாகும். அதனால் திருமூலர்,

ஆதி படைத்தான் எண்ணிலி தேவரை [75]

என்று குறிப்பிடுகிறார்.

தேவர் வகைகள்

தேவர்களின் வகைகள் பற்றிய குறிப்பும் திருமந்திரத்தில் காணப்படுகிறது. ''தானவர் — நிருதி முதலிய அட்டதிக்குப் பாலகர்கள்; சட்டர்— பைரவர்கள் எண்மர்; சதிரர் இருவர்கள், நந்தி முதலிய சிவகணங்கள் எண்மர்'' [76] என்னும் செய்தி திருமந்திரத்தில் இடம் பெறுகிறது.

தேவர்களின் எண்ணிக்கையும் வகையும் பலவாக இருப்பினும் இவருள் சிறப்புக் கருதி 'இந்திரன், தீ, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், வடதிசையில் உள்ள ஈசன்' [77]. ஆகிய எண்மர்தம்

பெயர்கள் எடுத்துக் கூறப்படுகின்றன. தேவர்களைப் போலவே தேவதைகள் எண்மரையும் திருமந்திரம் கூறுகிறது.[78]

தேவர்களின் இருப்பிடம்

தேவர்கள் பொதுவாகப் பூமிக்கு மேல் ஆகாயத்தில் இருப்பதாகக் கருதுவர்; ஆனால் பிற இடங்களிலும் அவர்கள் வந்து தங்குவர். இதனை,

> அண்டத்தில் தேவர்கள் அப்பாலைத் தேவர்கள்
> தெண்டிசை சூழ்புவிக் குள்ளுள்ள தேவர்கள்
> புண்டரிகப் பதப்பொன் னம்பலக் கூத்துக்
> கண்டுசே வித்துக் கதிபெறு வார்களே [79]

என்னும் திருமந்திரப் பாடலால் அறியலாம். இப்பாடலால் அண்டத்திலும், அதற்கு மேலும், கடல் சூழ்ந்த இப்புவிக்குள்ளும் உள்ள தேவர்கள் இறைவனை வணங்கிக் கதி பெறுவார்கள் என்னும் செய்தி எடுத்துரைக்கப்படுகிறது.

மனிதர் தேவராதல்

மாணிக்கவாசகர் தாவர சங்கமத்தை வரிசைப்படுத்தும் போது 'மனிதராய்த் தேவராய்க் கணங்களாய்'[80] என்று கூறுகிறார். இதனால் மனிதர்களாய்ப் பிறந்தவர்களும் தேவர்களாக முடியும் என்னும் குறிப்புப் பெறப்படுகின்றது. திருமந்திரமும் மனிதராகப் பிறந்தவர்கள் தேவராக மாறலாம் என்று கூறுகிறது.[81] மனிதர்கள் தேவராகத் தெய்வ உலகில் தங்குவர் என்பதை வள்ளுவரும் குறிப்பிடுகின்றார்.[82] யோக சாதனையும் தவமும் இன்றிச் 'சிவன் எம்பெருமான்' என்று பேசுபவர்கள் கூடத் தேவராவர் என்கிறார் திருமூலர்:

> பெருமா னிவனென்று பேசி யிருக்குந்
> திருமா னிடர்பின்னைத் தேவரு மாவர் [83]

என்னும் பாடற்பகுதி இதனை உணர்த்துகின்றது.

தேவர் வழிபாடு

தேவர் இறைவனை யாகம் வளர்த்து வழிபடுவர்;[84] மந்திரம் சொல்லியும் வழிபடுவர்;[85] அவனை உணர்ந்தும் இருப்பர்.[86]

இறைவன் வீற்றிருந்தபோது தேவர்கள் அனைவரும் பணிந்து தொழுதனர்; அப்போது உமையும் தேவர்களோடு சேர்ந்து சிவனைப் போற்றி வழிபட்டனள் என்று திருமந்திரம் கூறுகிறது. இதனை,

> அங்கே யடற்பெருந் தேவரெல் லாந்தொழச்
> சிங்கா சனத்தே சிவனிருந் தானென்று
> சங்கார் வளையுஞ் சிலம்புஞ் சரேலெனப்
> பொங்கார் குழலியும் போற்றிஎன் றாளே [87]

என்னும் பாடல் சுட்டுகிறது. இதனால் தேவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து இறைவனைப் போற்றி வழிபட்டு மேன்மை யடைவர் என்பது புலனாகின்றது.

மண்ணுலகில் மனிதர்கள் சிவபெருமானுக்குச் செய்யும் வழிபாட்டிலும் தேவர்கள் கலந்துகொள்வதுண்டு. இதனை,

மஞ்சன மாலை நிலாவிய வானவர்
நெஞ்சினுள் ஈசன் நிலைபெறு காரணம்
அஞ்சமு தாம்உப சாரம்எட் டெட்டொடும்
அஞ்சலி யோடுங் கலந்தர்ச்சித் தார்களே [88]

என்னும் திருமந்திரம் தெரிவிக்கிறது. இதில் தேவர்கள் அர்ச்சனை யோடு அஞ்சலி செய்தது தெளிவாகிறது.

முன்னிருந் தார்எமு தென்கணத் தேவர்கள்
எண்ணிறந் தன்பால் வருவர் இருநிலத்
தெண்ணிரு நாலு திசையந் தரமொக்கப்
பன்னிரு காதம் பதஞ்செய்யும் பாரே [89]

என்னும் பாடலும் இதனை வலியுறுத்துகிறது.

தேவர் செயல்கள்

மனிதன் தன் செயல்களால் சிறந்து, அதனால் வானுலகில் தேவராக வாழும் தகுதியை அவனது ஆன்மா பெற்றால், தேவர் கள் சிலரைப் போல மன அடக்கமின்றித் திரியாது, சிவனால் ஆட்கொள்ளப் பெறும் பேறு பெறுவான். இதனை,

கூடிநின் றானொரு காலத்துத் தேவர்கள்
வீடநின் றான்விகிர் தாவென்னு நாமத்தைத்
தேடநின் றான்திக முஞ்சுடர் மூன்றொளி
ஆடநின் றான்என்னை ஆட்கொண்ட வாறே [90]

என்று திருமந்திரம் கூறுகிறது. தேவரொடு கூடி, அவர்களால் போற்றப்படும் சிவன், சூரிய, சந்திர, அக்கினி கலைகளாக நிற்பான் என்பதும், தேவனாக உள்ள ஆன்மாவை ஆட்கொள் வான் என்பதும், பின்னர் வீடளிப்பான் என்பதும் இப்பாடலால் தெளிவாகின்றது.

வானவர் — அமரர் — உம்பர் — அண்டர்

தேவருட் சிலர் வானவர் என்னும் பெயரால் வழங்கப்படுவர்; உறைவிடம் வானகம் ஆதலால் இவர்கள் வானவர் எனப் பட்டனர்.

மேலுலகில் வாழும் மரணமில்லாதவர்களைத் திருமந்திரம் 'அமரர்' என்னும் சொல்லால் குறிக்கிறது.

உம்பர், அண்டர், விண்ணவர் முதலான சொற்களும் வானுலகத் தேவர்களைக் குறிப்பதற்காகத் திருமூலரால் பயன் படுத்தப் பெற்றுள்ளன.

வானவர்,
ஊனப் பிறவி ஒழிக்கும் ஒருவனை [91]

என்றும்,

வானவர்,
கற்றவர் பேரின்பம் உற்றுநின் றாரே [92]

என்றும் திருமந்திரம் வானவர் ஊனப்பிறவியைச் சிவன் ஒழிப்பன் என்பதையும், அவர்கள் அதனால் பேரின்பம் உறுவர் என்பதை யும் விளக்குகிறது.

புண்ணிய வானவர் பூமழை தூவிநின்று
எண்ணுவர் அண்ணல் இணையடி மந்திரம் [93]

என்பதனால் அவர்கள் மலர் தூவி, மந்திரம் ஓதி இறைவனை வழிபாடு செய்தமை உணரப்படுகிறது.

மதியமும் ஞாயிறும் வந்துடன் கூடித்
துதிசெய் பவரவர் தொல்வா னவர்கள்
விதியது செய்கின்ற மெய்யடி யார்க்குப்
பதியது காட்டும் பரமன்நின் றானே [94]

என்னும் பாடல் வானவர் வாசியோகம் பயின்றமையைத் தெரிவிக் கிறது. 'கிற்ற விரகிற் கிளரொளி வானவர்' [95] என்னும் தொடர் வானவர் ஒளியுடல் பெற்றவர் என்பதை உணர்த்துகிறது. வானவர் நினைத்தால் தூலவடிவம் பெறுவர். வானவர் அனை வரும் சிவபெருமான் ஆணைக்கு உட்பட்டவர்கள் என்பதனை,

வானவர் தம்மை வலிசெய் திருக்கின்ற [96]

என்னும் திருமந்திரம் விளக்குகிறது.

புலனடக்கம்

தேவர்க்கும் புலனடக்கம் இன்றியமையாதது. உடலில் பெரிதும் கிளர்ச்சியூட்டும் புலன்களை அடக்கியவர்களே அமரர் என்பது திருமந்திரம் உணர்த்தும் கருத்து:

கிடக்கும் உடலிற் கிளரிந் திரியம்
அடக்க லுறுமவன் தானே யமரன் [97]

இவ்வாறு கூறும் திருமந்திரம், புலனடக்கமில்லாத தேவர்களையும்

அஞ்சு மடக்கும் அமரரும் அங்கில்லை [98]

என்று சுட்டிக் காட்டுகிறது.

அமரர் சிந்தையை அடக்கும் ஆற்றல் உடையவர்;[99] சிவனையும்[100] உமையம்மையும்[101] வணங்குவர். ஊழிதொறூழி அமரர்க்குத் தலைவனாகச் சிவன் விளங்குவான்.[102]

இறைவன் அருளிய திவ்யாகமத்தை உணர்ந்து கொள்ளுதல் அமரர்க்கும் அரிதாகும்.[103] சிவதருமம் சொல்லும்போது அமரர்கள் இறைவனை வணங்குவர்.[104] சிவாகமங்களை உணர்ந்து கொள்ளாத அமரர்க்கு வீடுபேறு கிட்டாது; உணர்ந்துகொண்ட மனிதர்க்குக் கிட்டும்.[105] இறைவன் திருமூலருக்கு அமரரும் அறியா உலகம் அளித்தான்.[106]

இறைவனைச் 'சிவ சிவ' என்று சொல்லி வழிபடுபவர்களுக்கு அமரர் கூட்டம் ஏவல் செய்யும்;[107] ஆன்மாக்களிடம் படிந்துள்ள தத்துவங்களை நீக்கவும் அமரர்கள் உதவுவர்.[108]

இவ்வாறு புலனடக்குதல் சிந்தையை ஒருமைப்படுத்தல்; ஆகம நூல்களைப் பயின்றுணர்தல், சிவநாமம் சொல்லி வழிபடுதல், ஆன்ம தத்துவங்களை நீக்கல் என்னுமிவற்றில் தேர்ந்தவர்கள் அமரர் ஆவர்.

வீடு பேறு

சிவன் தன்மைகளை ஆராய்ந்தறிந்து, சிவன் பாதங்களைத் தொழ, இம்மையாகிய இவ்வுலக வாழ்வையும் தெளியக் கண்டார் திருமூலர்; அவ்வுலக வாழ்வையும் இனிது கண்டார்.

> **ஆய்ந்தறிந் தேனவன் சேவடி கைதொழ**
> **ஆய்ந்தறிந் தேன்இம்மை அம்மைகண் டேனே**[109]

என்னும் பாடல் இதனை உணர்த்துகிறது.

தேவரையும் மனிதரையும் படைப்பவன் சிவன்.[110] யோக சாதனையால் தேவலோகத்திற்குச் செல்பவர்களுக்கு அது பூலோகம் போல் பழகிய இடமாக இருக்கும்.[111] தாம் எடுத்த மனித உடலில் பல நூறு ஆண்டுகள் வாழ்ந்து பின் சிவன் பாதங்களின் கீழ் சிவபதப்பேறு பெற்ற பொழுது தேவர்களாலும் வாழ்த்தப் பெற்றார் திருமூலர் என்பதை,

> **இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி**
> **இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே**
> **இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே**
> **இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே**[112]

என்னும் பாடல் தெளிவுபடுத்துகிறது.

இதுவரை ஆய்ந்தனவற்றைத் தொகுத்துக் காணின் பின்வரும் முடிவுகளுக்கு வரலாம்:

1. தேவர்களுக்குத் தெய்வம் சிவனே.
2. பராபரத்தால் படைக்கப் பெற்றவர்கள் தேவர்கள்,

3. எண்ணிக்கையில் அளவிடமுடியாதவர்கள் தேவர்கள்.
4. வானுலகில் என்றும் வாழ்பவர்கள்.
5. தேவர்கள் ஒளியுடல் பெற்றவர்கள்; நினைத்தால் தூல உடல் எடுத்துக்கொள்ளும் ஆற்றல் உடையவர்கள்.
6. தேவர்கள் இறைவனை வழிபட்டு உய்வடைவர்; சிலர் கயவராய்ப் புலனடக்கமின்றி இருத்தலும் உண்டு.
7. இறைச்சிந்தையோடு இருப்பவர் வீடுபேறடைவர்.
8. சிவனை வாழ்த்தும்போது வீடுபேறடைந்த ஞானிகளையும் தேவர்கள் வாழ்த்துவர்.
9. சிவன் படைத்த ஆகமங்களை உணராத தேவர்கள் உண்டு.
10. மனிதர்கள் செய்யும் யாகங்களை நடத்திக் கொடுப்பதற்காகத் தேவர்கள் மண்ணுலகிற்கு வருவர் (சான்று) தக்க யாகம்.
11. மனிதர்கள் சிவனை வழிபாடு செய்யும்போது அதில் தேவர்களும் விரும்பி வந்து கலந்து கொள்வர்.
12. மனிதர்களுக்கு நன்மை செய்பவர்களாகவும், அவர்களால் வழிபாடு செய்யப்படுபவர்களாகவும் தேவர்கள் விளங்குகின்றனர்.

அசுரர் குறித்தவை

கந்தபுராணச் செய்தி

அசுரர்களின் பிறப்பைப் பற்றிக் கந்தபுராணம் விரிவாகக் குறிப்பிடுகின்றது.

அசுரேந்திரனுக்கும் மங்கலகேசிக்கும் தோன்றியவள் மாயை என்பவள். அசுரகுலம் பெருகவேண்டும் என்பதற்காகக் குரு சுக்கிராச்சாரியார், மாயை, காசிபரை மயக்கிச் சேர்தல் வேண்டும் என்று கட்டளை இட்டார் அவ்வாறே மாயை, காசிபரை மயக்கி மறைகிறாள். பின், புலம்பிச் சோர்ந்த காசிபர் முன்பு அவள் காட்சியளிக்க அவர் அவளிடம் தன்னை ஆட்கொள்ள வேண்டும் என்று வேண்டுகிறார்.

மாயை காசிபரைப் பார்த்து, ''நீர் இப்பொழுது இங்கு நிற்கும் என் பேரழகுக்குத் தக்க வடிவங் கொள்ளுதல் வேண்டும்; பிறகு நான் கொள்ளும் ஒவ்வொரு வடிவத்திற்கும் தக்கவாறு நீரும் வடிவம் கொள்ளுதல் வேண்டும்; அவ்வாறு கொள்வீராயின் நான் உம்மைக் கூடுவ்வன்'' என்றாள்.

முதல் யாமத்தில் இருவரும் தேவ வடிவம் பெற்றனர்; அப்போது அவர்களது வேர்வையிலிருந்து சூரபன்மன் முதலிய முப்பதினாயிரம் அவுணர்கள் தோன்றினர்; இரண்டாம் யாமத்தில் அவர்கள் சிங்கங்களாக உருவெடுத்தபோது சிங்கமுகமுடைய சிங்கமுகாசுரர்கள் நாற்பதினாயிரம் வெள்ளத்தினர் பிறந்தனர்; மூன்றாம் யாமத்தில் இருவரும் யானை வடிவங் கொண்டபோது தாரகாசுரன் உள்ளிட்ட நாற்பதினாயிரம் வெள்ளம் அசுரர்கள் தோன்றினர்; நான்காம் யாமத்தில் ஆடாக உருவெடுத்தபோது அசமுகி உட்பட முப்பதினாயிரம் வெள்ளம் பெண் அரக்கிகள் ஆட்டுமுகங்களுடன் பிறந்தனர்.

இதற்குமேலும் அவர்கள் புலி, குதிரை, மான், ஆ, கரடி, பன்றி, கூளி முதலியவற்றின் உருக்கொண்டு சேர்ந்ததால் மேலும் அறுபதினாயிரம் வெள்ளம் அசுரர்கள் தோன்றினர் என்று அசுரர்களின் தோற்றம் குறித்துக் கந்தபுராணம் கூறுகிறது.[113] தாம் பெற்ற இந்த அசுரப் பிள்ளைகளுக்கு உலகில் உறுதிப்பொருள் எது என்பதைக் காசிபர் விளக்கிக் கூறினார். அறிவுரைகள் பல கேட்ட பின்னர் அவ்வசுரர்கள் அறவழியில் செல்லாமல் பல நிலைகளிலும் புலனடக்கமின்றிப் பிறருக்கு இன்னல் விளைத்து அதனால் அழிந்தொழிந்தனர்.

அசுரர்கள் பராபரத்தின் கட்டளையின் பொருட்டே படைக்கப் பெற்றனர்; அவர்கள் தூல உடல் உடையவர்கள்; மனிதர்களைக் காட்டிலும் பன்மடங்கு வலிமை மிக்கவர்கள். அசுரர்களின் தோற்றம் குறித்துத் தனிப்பட்ட செய்தி எதுவும் திருமந்திரத்தில் காணப்படவில்லை. ஆனால், உலக மக்களது அறியாமையை நீக்கும்பொருட்டு அசுரர்களின் செயல்களைச் சான்றாகக் காட்டி விளக்கும் புராணச் செய்திகள் பல திருமந்திரத்தில் இடம்பெற்றுள்ளன.[114]

அசுரர் செயல்கள்

தேவர், அசுரர், மனிதர் ஆகிய மூவரும் சிவனை வழிபடுபவர்களாகவும், தவம் செய்பவர்களாகவும் உள்ளனர்; இதனை,

போற்றிஎன் பார்அம ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்அசு ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்மனி தர்புனி தன்அடி
போற்றிஎன் அன்புள் பொலியவைத் தேனே[115]

என்னும் திருமந்திரப் பாடல் தெளிவுபடுத்துகின்றது. அமரரும் அசுரரும் உய்வடையும் பொருட்டு இறைவன் உலகினைப் படைத்தான்.[116]

அசுரர்கள் தவம் செய்யும் போது எலும்பும் இறைச்சியும் ஆகுதிப் பொருள்களாகும். இது,

என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்போல் மணியினை எய்தவொண் ணாதே [117]

என்னும் திருமந்திரப் பாடலில் குறிக்கப்படுகிறது. அவ்வாறு வேள்வி செய்து தவமியற்றும் பொழுதும் அசுரர்கள் உள்ளம் உருகி வேண்டாது தங்களது புறப்பகையை வெல்லவேண்டும் என்பதற்காகத் தவமியற்றுவதால் இறைவனை அவர்கள் தங்கள் உடலில் காணமுடியாதவர்கள் ஆவர். ஆனால் அசுரர்கட்கு இறைவன் அவரவர் தவ வலிமைகளுக்கு ஏற்ப வரம் தருவன். அசுரர்களோ இறைவனிடம் பெற்ற வரத்தின் வலியால் தேவர்களோடு போர்புரிவர்; மக்களுக்குத் துன்பம் தருவர். இறைவனிடம் வரங்களைப் பெற்றுப் பின் தேவர்களோடு போர் புரிந்தமைக்கு இரணியன், பத்மாசுரன் முதலானவர்களைச் சான்றாகக் காட்டலாம். அசுரர்கள் உலக மக்களுக்குத் துன்பம் இழைத்தமைக்குச் சான்றாகத் தாடகை, நரகாசுரன் முதலானவர் களைக் குறிப்பிடலாம். ஆக அசுரர்கள் என்போர்,

1. இவ்வுலகில் வாழ்பவர்கள்
2. பிறருக்கு இன்னல் செய்பவர்கள்
3. அகந்தை மிக்கவர்கள்
4. தவம் செய்பவர்கள்
5. தேவர்களோடு போர் செய்பவர்கள்
6. வீடு பேற்றினை அறியாதவர்கள்

என்பன போன்ற இயல்புடையவர்கள் என்பதனை அறியலாம். பாகவதத்தில் வரும் நரகாசுரன் பிறப்பு வரலாற்றிலிருந்து அசுரர்களும் தேவர்களும் சகோதரர்கள் என்று கொள்வதற்கு இடமுண்டு.

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் உலக மக்களோடு உள்ள தொடர்பு

தேவ, அசுரர்களைப் பற்றிக் காஞ்சிப் பெரியவர் குறிப்பிடும் போது,

"வெளிச்சம் இருந்தால் கூடவே நிழலும் இருக்கும் என்கிற ரீதிப்படி வேத சக்திகளைப் போலவே அசுர, ராட்சச சக்திகளும் ஸ்தூலமாகத் தெரிகிற மாதிரி லோகத்தில் இருந்திருக்கிறார்கள். இப்போதும் தேவாசுர யுத்தம் முதலானவை மநுஷ்யனின் கண்ணுக்குத் தெரியாமல் (நல்லது கெட்டதுகளின் மோதலாக) நடந்து கொண்டே தான் இருக்கிறது. அந்தக் காலத்தவர்களுக்கு இந்த நல்ல சக்திகளையும் கெட்ட சக்திகளையும் தபோ சக்தியால் கண்கொண்டு பார்க்க முடிந்தது. எல்லா விதமான light waveகளும் (ஒளி, ஒலி அலைகளும்) மநுஷ்யக் கண்ணின் லென்ஸுக்கு அகப்பட்டு விடாது என்று விஞ்ஞானிகளே சொல்கிறார்கள். அதில் சில விஞ்ஞானிகள் இன்னும் ஒருபடி மேலே போய் occult என்கிற இயற்கைக்கு அதீதமான மர்ம சக்திகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து, தேவதைகள் இருக்கின்றனர்; நல்ல தேவதைகள், துர்தேவதைகள் எல்லாம் இருக்கின்றன என்றுகூட எழுதி வைத்திருக்கிறார்கள்" [118]

என்று மாறுபட்ட இரு சக்திகளைப் பற்றிச் சொல்லியுள்ளார். மேலும் தேவர்களுள் வேறுபாடும், உயர்வு தாழ்வுகளும் இருப்பதற்கான காரணங்களையும் அவர் விளக்கியுள்ளார்:

"ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் ஆகிய சகலத்தையும் செய்கிற பரமாத்மா ஒன்றேதான் இருக்கிறது. அதுவேதான் இத்தனை தெய்வங்களாகவும் ஆகியிருக்கிறது... ஆக, புராணங்களிலே ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இந்த ஸ்வாமிதான் உசத்தி என்றும், அந்த ஸ்வாமிதான் உசத்தி என்றும் காட்டும்படியான கதைகள் வருவது அந்தந்தக் குறிப்பிட்ட சமயத்தில் ஒன்றிடமே இதுதான் பரமாத்மா என்று நாம் ஆழமாக ஈடுபட்டு நிற்பதற்காகச் சொன்னது என்றே எடுத்துக்கொள்ளவேண்டும். ஒன்றைத் தாழ்த்தியது போல் சொன்னது உண்மையில் அதை நிந்திப்பதற்காக இல்லை; இன்னொன்றை இதுவே சகலமும் என்று கெட்டியாகப் பிடித்துக்கொள்ளச் செய்வதுதான் இதன் உத்தேசம்... 'ஒருருவே மூவுருவாய்' என்றுதான் நம் பெரியவர்கள் பாடி வைத்திருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட ஃபிலாசஃபியைத்தான் சொல்லவேண்டும், ஒரு சித்தாந்தத்தைத்தான் நிலைநாட்ட வேண்டும் என்ற எண்ணங்கள் இல்லாமல் திறந்த மனஸோடு, விசாலமான பார்வை

யோடு தங்களுக்குத் தோன்றிய சத்தியங்களையே சொல்லிக்கொண்டு போன மகாகவிகள் எல்லோரும் ஒரே வஸ்துதான் மும்மூர்த்திகளாக, முப்பத்து முக்கோடி தேவதைகளாக ஆகியிருக்கிறதென்று சொல்லியிருக்கிறார் கள். பாணன் 'ஸர்க ஸ்திதி—நாச ஹேதவே' (ஸர்க்கம் என்றால் சிருஷ்டி) என்று ஒரே வஸ்துவை மூன்று தொழிலுக்காக மூன்றானதாகச் சொல்கிறான். காளி தாஸனும் ஸ்பஷ்டமாக, 'ஏக ஏவ மூர்த்தி: பிபிதே த்ரிதா ஸா' (ஒன்றுதான் பரமாத்மா; அது முத்தொழிலுக்காக மூன்றாகப் பிரிந்தது) என்கிறான்'' [119]

—இவ்வாறு காஞ்சிப் பெரியவர்கள் கூறியுள்ள கருத்துகள் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கன. இவற்றால், மனித மனத்திற்குள் ஏற்படும் சலனங்களை நீக்குவதற்காகவும், மனத்தை ஒருநிலைப்படுத்து வதற்காகவும் புராணங்கள் இவ்வாறு கூறியுள்ளன என்பது புலனாகின்றது. இவற்றின் சாரமாக விளங்குவதே ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்னும் திருமூலரின் கொள்கை. [120]

எனவே, மனிதர்களுக்கு இடையே நடக்கும் நன்மை தீமைகளை இயக்குவதும், தேவ, அசுர சக்திகளே என்பது ஓராற்றான் பொருந்துவதாக உள்ளது. தேவர்களைப்பற்றிய இத்தகைய கருத்துகள் கிறித்துவ மதத்திலும் காணப்படுகின்றன; இவற்றை விவிலியத்தில் தானியேல் அதிகாரம் மூன்றிலும், [121] அதிகாரம் ஆறிலும் [122] காணலாம்.

இவ்வாய்வினால் நாம் அறியக்கூடிய செய்திகள் வருமாறு:

1. பரம்பொருளால் படைக்கப்பட்ட மனிதர், அசுரர், தேவர் ஆகிய அனைவரும் மும்மலங்களில் சிக்கி இருவினைகட்கு உட்படுவார்கள்.

2. மூவரும் இறைவனைப் பெரிதும் போற்றி வணங்கித் தவமியற்றி வரமும் வீடுபேறும் பெறக் கூடியவர்கள்.

3. அகந்தையின் காரணமாக ஆசுரர்களும், தேவர்களும், மனிதர்களும் தங்களுக்குள் போரிட்டுக் கொள்ளக் கூடியவர்கள் ஆவர்.

4. அசுரர்கள் தம் ஆணவத்தின் காரணமாகப் பல நிலை களில் தேவர்களோடு போரிடுவர்; சில நேரங்களில் வெற்றியும் பெறுவர்.

5. அசுரர்கள் தம் ஆற்றலில் பெருமிதங் கொண்டு தம் இறுமாப்பால் முனிவர்கள் முதலான மனிதர்களை எதிர்த்தும் போர் செய்வது உண்டு.

6. மனிதர்கள் அச்சத்தின் காரணமாகவும் போற்றுதல் காரணமாகவும் தேவர்களை எதிர்த்துப் போரிடுவது இல்லை.

7. தேவர்கள், அசுரர்கள், மனிதர்கள் ஆகிய அனைவருடைய மும்மலங்களையும் இறைவனே நீக்கி அருளுவான்.

8. இறைவன் தன் பிரதிநிதியாகவே தேவனைப் படைத்துப் பின் நீக்குவான் என்பதைத் தெரிவிக்கின்றன புராணங்கள்.

9. அசுரர்களும் மனிதர்களும் செய்யும் இறைவழிபாடுகளில் தேவர்களும் வந்து கலந்து கொள்வர்.

திருமந்திரம் இத்தகைய உண்மைகளைப் புராணச் செய்திகளின் சாரமாக அறிவிக்கிறது.

அடிக்குறிப்புகள்

1 வாழ்வியல் கலைக்களஞ்சியம், தொகுதி 4, ப. 891
2 காஞ்சி பரமாசார்ய சுவாமிகள், தெய்வத்தின் குரல்- 2, ப. 18
3 சு. அ. இராமசாமிப் புலவர், திருவருட் கதைகள்,
4 திருமந்திரம், பா. 381
5 ,, பா. 385
6 ,, பா. 2459
7 ,, பா. 396
8 அரு. இராமநாதன், தேவி பாகவதம்-1, பக். 208—216
9 திருமந்திரம், பா. 407
10 திருவாசகம், திருப்பள்ளியெழுச்சி, பா. 8
11 திருமந்திரம், பா. 1158
12 அரு. இராமநாதன், தேவி பாகவதம்-1, பக். 222 — 224
13 திருமந்திரம், பா. 2459
14 ,, பா. 2463
15 ,, பா. 1392
16 ,, பா. 1394
17 ,, பா. 2424
18 ,, பா. 1760
19 ,, பா. 881
20 ,, பா. 1661
21 ,, பா. 371
22 குறள், 398
23 திருமந்திரம், பா. 271
24 சுந்தரர் தேவாரம், பா. 1
25 திருக்குற்றாலக் குறவஞ்சி, ப. 11

26 திருமந்திரம், பா. 521
27 ,, பா. 2002
28 ,, பா. 2068
29 ,, பா. 179
30 குறள், 350
31 திருமந்திரம், பா. 374
32 ,, பா. 346/3
33 ,, பா. 346/4
34 ஜி. வரதராஜன், திருமந்திரம்— 1, உரை, ப. 165
35 திருமந்திரம், பா. 340
36 ,, பா. 349
37 ,, பா. 367 — 369
38 ,, பா. 347
39 ,, பா. 339
40 ஜி. வரதராஜன், திருமந்திரம்—1, உரை, பா. 161
41 திருமந்திரம், பா. 342
42 கார்த்திகேயன், சிவபுராணம், ப. 357
43 ஜி. வரதராஜன், திருமந்திரம்—1, ப. 163
44 திருமந்திரம், பா. 343, 348
45 ,, பா. 350
46 ஜி. வரதராஜன், திருமந்திரம்—1, உரை, ப. 167
47 திருமந்திரம், பா. 344
48 ,, பா. 353—361
49 ,, பா. 353
50 ப. இராமநாதபிள்ளை, திருமந்திரம்—1, உரை, ப. 156
51 ஜி. வரதராஜன், திருமந்திரம்—1, ப. 169
52 திருமந்திரம், பா. 358
53 திருவாசகம், திருத்தோணோக்கம், பா. 11
54 பெரியபுராணம், பா. 23; 54a திருமந்திரம், பா. 347
55 ஜி. வரதராஜன், திருமந்திரம்—1, ப. 168
56 திருமந்திரம், பா. 337
57 சு. அ. இராமசாமிப் புலவர், கந்தபுராணம், பக். 25 — 26
58 திருமந்திரம், பா. 338
59 ஜி. வரதராஜன், திருமந்திரம்—1, உரை, ப. 168
60 சு. அ. இராமசாமிப் புலவர், கந்தபுராணம், பக். 30 — 31
61 திருமந்திரம், பா. 1026
62 ,, பா. 2306

63 திருமந்திரம் பா. 2733
64 ,, பா. 2775
65 ஜி. வரதராஜன், திருமந்திரம்—3, ப. 533
66 திருமந்திரம், பா. 2774
67 கார்த்திகேயன், சிவபுராணம், பக். 208 — 210
67a திருமந்திரம், பா. 2815
68 அரு. இராமநாதன், தேவி பாகவதம்-1, பக். 218
69 கலைக்களஞ்சியம், தொகுதி 6, ப. 183
70 மே. கு. நூ., ப. 183
71 திருமந்திரம், பா. 2962
72 ,, பா. 1822
73 ,, பா. 5
74 ,, பா. 446
75 ,, பா. 110
76 ,, பா. 988
77 ,, பா. 2527
78 ,, பா. 2531
79 ,, பா. 2777
80 திருவாசகம், சிவபுராணம், பா. 28— 29
81 திருமந்திரம், பா. 302; திருமூலர் இறைவனைச் சென்று சேர்ந்து தெய்வமானது பா. 636; பிற பாடல்கள் 322, 502, 1658, 1716; 2716
82 குறள், 50
83 திருமந்திரம், பா. 303
84 ,, பா. 214
85 ,, பா. 359, 1762
86 ,, பா. 1796
87 ,, பா. 2356
88 ,, பா. 1827
89 ,, பா. 1881
90 ,, பா. 2794
91 ,, பா. 21
92 ,, பா. 298
93 ,, பா. 286, 634, 993, 1505, 1833
94 ,, பா. 710
95 ,, பா. 298
96 ,, பா. 2631
97 ,, பா. 2032

98 திருமந்திரம் பா. 2033
99 ,, பா. 1327
100 ,, ப. 28, 34
101 ,, பா. 1053, 389
102 ,, பா. 299
103 ,, பா. 60
104 ,, பா. 2855
105 ,, பா. 3019
106 ,, பா. 123
107 ,, பா. 1831
108 ,, பா. 545
109 ,, பா. 1571
110 ,, பா. 1557
111 ,, பா. 637
112 ,, பா. 80
113 சு. அ. இராமசாமிப் புலவர், கந்தபுராணம் பக். 76— 79
114 திருமந்திரம், பா. 339, 342, 343, 344, 348, 350, 353
115 ,, பா. 44
116 ,, பா. 2427
117 ,, பா. 272
118 காஞ்சி பரமாசார்ய சுவாமிகள், தெய்வத்தின் குரல்-2, ப. 689
119 மே.கு.நூ., பக். 711, 714, 718
120 திருமந்திரம், பா. 2104
121 பரிசுத்த வேதாகமம், பக். 1032 — 1033
122 மே. கு. நூ., பக். 1038 — 1040

பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப்
பசுக்களைக் கட்டிய பாசமுன் றுண்டு
பசுத்தன்மை நீக்கியப் பாசம் அறுத்தாற்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே

— திருமந்திரம் 2406

இயல் — நான்கு

விலங்குகள், பறவைகள், தாவரங்கள், உலோகங்கள், மணிகள் தொடர்பான சிந்தனைகள்

திருமந்திரம் மனித சமுதாயத்தை வாழ்விக்க வந்த ஓர் உயரிய நூல். அதன் ஒவ்வொரு பாடலும் மனிதனிடம் உள்ள குறைகளை நீக்கி உயர்வடைவதற்கான வழிமுறைகளை விளக்கிச் சொல்கின்றது. அதனால் ஆசிரியர் திருமூலர், தாம் சொல்லவந்த கருத்துகளை மக்கள் மனம் ஏற்றுக்கொள்ளும் வகையில் தக்க எடுத்துக்காட்டுகள் மூலம் தெளிவுபடுத்த முயன்றுள்ளார். பிறவிகள் தோறும் துன்புறும் மனிதனின் பிறவியை நீக்கி வீடுபேறடையச் செய்து, அழிவற்ற ஆன்மாவை அழிவற்ற இறைவனோடு ஒன்றச் செய்யும் தம் நோக்கத்திற்குத் துணையாக விலங்குகள், பறவைகள், தாவரங்கள், உலோகங்கள், மணிகள் முதலானவற்றை எடுத்துக்காட்டுகளாகக் கொண்டுள்ளார் திருமூலர்.

விலங்குகள்

உலகம் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களால் ஆனது. இவற்றுள் நிலம் மட்டுமே திடப்பொருள்; ஏனையவற்றுள் நீர்— திரவம்; காற்றும வானும்— அருவம்; தீ— அருவுருவம். நிலம் திடப் பொருளாதலால் இதிலிருந்தே உலகிலுள்ள அனைத்துப் பொருள்களும் உருவாயின; அதனால் நிலத்தினைத் தாயாகக் கருதி மக்கள் 'நிலமகள், பூதேவி' என்று

வழங்கத் தலைப்பட்டனர். பூமியில் உள்ள பொருள்களைச் சரம் என்றும், அசரம் என்றும் இருவகையாகப் பிரிப்பர். சரம் என்பது இயங்கும் உயிரினங்கள்; அசரம் என்பது இயங்காத பிற பொருள்கள்.

இயங்கும் விலங்குகளும் பறவைகளும் சரம் என்பதன்பால் அடங்கும்; இயங்காதனவாகிய தாவரங்கள், மலைகள், உலோகங்கள், மணிகள் முதலியன அசரம் என்பதனுள் அடங்கும்.

தொல்காப்பியர் உயிரினங்களைப் பாகுபாடு செய்யும்போது, அவற்றின் புலன் வளர்ச்சிகளுக்கேற்ப வரிசைப்படுத்தினார்.

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே [1]

என்பது அவர் கூற்று. இதற்கு உரையெழுதிய இளம்பூரணர்,

"உடம்பினால் வெப்பம், தட்பம், வன்மை, மென்மை, அறியும் (உயிர்கள்); நாவினால் கைப்பு, காழ்ப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, புளிப்பு, மதுரம் என்பன அறியும். மூக்கினால் நன்னாற்றம், தியநாற்றம் அறியும்; கண்ணினால் வெண்மை, செம்மை, பொன்மை, பசுமை, கருமை, நெடுமை, குறுமை, பருமை, நேர்மை, வட்டம், கோணம், சதுரம் என்பன அறியும். செவியினால் ஓசை வேறுபாடும், சொற்படும் பொருளும் அறியும். மனத்தினால் அறியப் படுவது இதுபோல்வன வேண்டுமெனவும், இதுசெயல் வேண்டுமெனவும், இஃது எத்தன்மையெனவும் அனுமானித் தல். அனுமானமாவது, புகை கண்டவழி நெருப்புண்மை கட்புலன் அன்றாயினும் அதன்கண் நெருப்பு உண்டென்று அனுமானித்தல். இவ்வகையினான் உலகிலுள்ளவெல்லாம் மக்கட்கு அறிதலாயின" [2]

என்று கூறுகின்றார். இதனால் மனிதனின் பரிணாம வளர்ச்சி தெளிவாக்கப்படுகின்றது. இங்ஙனம் உடலும் மனமும் வளர்ந்த நிலையில் உள்ள மனிதன் தான் உய்வடைவதற்கான வழிகளைத் தேடுகிறான். 'தான் அதுவாக வேண்டும்' என்ற பாவனை நிலையில் கொள்ள வேண்டியன யாவை, தள்ள வேண்டியன யாவை என்பதை அவன் மனம் ஆராய்கின்றது; இந்த ஆராய்ச்சிக்கு ஒரு விளக்கமாக அமைவதே திருமந்திரம்.

திருமூலர் மேற்கூறிய அடிப்படையிலேயே விலங்குகள், பறவைகள் முதலானவற்றைச் சான்றுகளாகக் காட்டி மனிதன் தவிர்க்க வேண்டுவனவற்றையும், ஏற்க வேண்டுவனவற்றையும் விளக்குகின்றார். திருமந்திரம் முழுவதும் இக்கருத்துகள் நிரம்பி யுள்ளன எனினும் ஒன்பதாம் தந்திரத்தில் 'சூன்ய சம்பாஷணை' என்னும் தலைப்பின்கீழ் 2866ஆம் பாடல் முதல் 2935ஆம் பாடல் வரையுள்ள எழுபது பாடல்களில் இத்தகைய உவமைகள் மிகுதி யாக எடுத்தாளப்பட்டுள்ளன. இவற்றில் இறைவனை அடைதற் குரிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்குவகை நெறிகளும் மறைமுகமாகப் பேசப்படுகின்றன. 'சூன்யம்' என்றால் ஒன்றுமில்லாதது; 'சம்பாஷணை' என்றால் பேசுதல். 'சூனிய சம்பாஷணை' என்பது உடலாலும் செயலாலும் இறைவனை அடைதற்குரிய நெறியை அலசுதல் என்னும் பொருள் படும்.

இந்த ஒன்பதாம் தந்திரத்திலும், ஏனைய தந்திரங்களிலும் பசு, கன்று, எருது, எருமை, ஆடு, முயல், குரங்கு, நாய், யானை, குதிரை, பன்றி, சிங்கம், புலி, நரி, முதலை, கரடி, ஒட்டகம், உடும்பு, கயல்மீன், பாம்பு முதலானவற்றை எடுத்துக் காட்டுக ளாகக் தக்க வகையில் பயன்படுத்திக் கொண்டுள்ளார் ஆசிரியர் திருமூலர்.

இனி, ஒன்றன்பின் ஒன்றாக இவற்றின் வாயிலாகத் திருமந்திரம் உணர்த்தும் சிந்தனைகளை ஆராயலாம்.

1. பசு — கன்று

ஆன்ம தத்துவம் இருபத்து நான்கு; வித்தியா தத்துவம் ஏழு; சிவ தத்துவம் ஐந்து. இவற்றைப் பசுக்களுக்கு இணையாக உருவகப்படுத்துகிறார் திருமூலர். ஆன்ம தத்துவம் இருபத்து நான்கும் மேய்ப்பாரின்றித் திரியும் பட்டிப் பசுக்களாம்; ஏனைய வித்தியா தத்துவம், சிவ தத்துவம் ஆகிய ஏழும் ஐந்தும் குட்டிப் பசுக்களாம். குட்டிப் பசுக்கள் அனைத்தும் குடம் நிறையப் பால் தருவன; ஆயினும் கறவாத பட்டிமாடே ஆன்மாவாகிய பார்ப்பானுக்கு உரியதாகும். இதனை,

பட்டிப் பசுக்கள் இருபத்து நாலுள
குட்டிப் பசுக்களோ ரேழுள ஐந்துள
குட்டிப் பசுக்கள் குடப்பால் சொரியினும்
பட்டிப் பசுவே பனவற்கு வாய்த்ததே[3]

என்கிறது திருமந்திரம். குட்டிப் பசுக்கள் தரும் குடப்பால் சிற்றின்பம் ஆகிய பாலாம்; அவை ஆன்மாவிற்குத் தேவையான

பேரின்பப் பாலைத் தருவதில்லை; ஆன்மாவோ பேரின்ப நாட்டமின்றி உள்ளது.

பட்டிப் பசு என்பது கறக்காத பசு; கறக்காத என்பது பாலை மட்டுமே குறிக்காது பேரின்ப நாட்டமில்லாத ஆன்மாவை உணர்த்தும். பேரின்பத்தை நாடி வளர்வதை விட்டு ஆன்மா சிற்றின்பத்தையே நாடிக் கெடுகிறது என்பது இப்பாடலின் கருத்து.

அடுத்த பாடலில்,

காற்றுப் பசுக்கள் கறந்துண்ணுங் காலத்து
மாற்றுப் பசுக்கள் வரவறி யோமே [4]

என்கிறார் ஆசிரியர். ஈண்டுக் 'காற்றுப் பசுக்கள்' என்பது இடகலை பிங்கலை ஆகியனவற்றைக் குறிக்கிறது; இவற்றைச் சிக்கெனக் கட்டி மேல்முகமாகப் பிராணனைச் செலுத்தினால் உச்சியில் ஒளி தோன்றும். இஞ்ஞான சாதனையைச் செய்யும் சாதகன் நிதானமாக அதனைச் செய்து சிவப்பயிராகிய செந் நெல்லை அறுவடை செய்யவேண்டும். சிவப்பயிரைச் செய்வதற்கு உரிய கிடாக்களாக இடகலை பிங்கலைகளைக் குறிப்பிடு கின்றார் ஆசிரியர். [5]

ஐம்புலன்களையும் பார்ப்பான் வீட்டில் உள்ள பசுக்களாகக் கற்பனை செய்கிறார் திருமூலர்; ஆன்மா வெறியோடு புலனடக்க மின்றித் திரிவது; அது மேய்ப்பானாகிய சிவனருள் பெற்றால் பேரின்பப் பாலினைச் சொரியும். [6]

ஆமாக்கள் ஐந்தும் [7]

என்பதால் பஞ்சப் பிராணனாகிய ஆன்மாவைக் காட்டுப் பசுவாக ஆசிரியர் உருவகித்தல் தெளிவாகிறது. வீட்டுப் பசு கட்டுப் பாட்டில் நிற்பது; ஆனால் காட்டுப் பசு கட்டுப்பாடற்றது. புலனடக்கமின்றி வெறியோடு திரியக்கூடியது; மேயப்பவன் இருந்து நெறிப்படுத்தினால் காட்டுப்பசுவும் கட்டுப்பாட்டுக்குள் வரும்; இதுவரை நினைத்த இடத்தில் பால் சொரிந்த அது இனி நெறிக்குள் அடங்கி முறையாகப் பால் தரும். அதைப்போல அலையும் மனத்தை உடைய ஆன்மாவைச் சிவனாகிய மேய்ப்பான் குருவாக வந்து முறைப்படுத்தினால் ஆன்மா தன்னைப் பேரின்பத் தில் நிலைப்படுத்திக் கொண்டு வீடுபேறடையும் என்பது இதன் கருத்து.

உலக வாழ்க்கையில் சிக்கித் தவிக்கும் மனம் தீமையில் அடக்கமுடையதாய் விளங்கும் என்பதை உணர்த்துவதற்குப் பசுவைச் சான்றாக ஓரிடத்தில் காட்டுகிறார் திருமூலர். [8]

பாலுண்ணும் நோக்கத்தோடு ஆன்கன்று தாய்ப்பசுவை அழைக்கும்; அதுபோல் சீவன் சிவனை அடையவேண்டும் என்னும் நோக்கத்தோடு அழைத்தல் வேண்டும். பசியைத் தீர்த்துக் கொள்ளும் ஆன்கன்றின் வேகம் சீவனுக்கும் இருந்தால், கன்றின் குரல் கேட்டுத் தாய்ப்பசு வந்து பசியாற்றுதல்போல், சிவனும் சீவனின் மனம் விரும்பும் வீடு பேற்றைத் தந்து பிறவியை நீக்கியருள்வான். இதனைத் திருமூலர் ''ஆன்நின்று அழைக்கு மதுபோல்''[9] என்று கூறுவர். கன்று உண்பதற்காகப் பசு மடியிலிருந்து பால் தருவதைப் போன்று, சிவனும் சீவனின் பசிநீக்க உச்சந்தலையிலுள்ள சகஸ்ரதளத்திலிருந்து வடியும் அமுதத்தினைக் கொடுப்பான். இந்தக் கருத்தைக்

கன்றது வாகக் கறந்தனன் நந்தியும்[10]

என்னும் அடி தெரிவிக்கிறது.

பசுவைப் பிரிந்த கன்று தன் தாயைச் சென்றடைய வேண்டும் என்ற ஆவலில் எவ்வாறு கதறுமோ அதுபோல் சீவன் இறைவனை அடைய வேண்டும் என்ற வேணவா கொள்ளுதல் வேண்டும். அப்போது, கன்றைப் பிரிந்த தாய்ப்பசு குரல்கேட்டுத் தேடிவந்து அணைவதுபோல் சிவனுடன் சேரவேண்டும் என்ற பக்குவத்திற்குச் சீவன் வந்தால் சிவனும் குருவாகத் தேடிவந்து ஆட்கொள்ளுவான். இதனை,

கோனக்கன் றாயே குரைகழல் ஏத்துமின்[11]
கன்று நினைந்தெழு தாயென வந்தபின்[12]
ஆன்கன்று தேடி யழைக்கு மதுபோல்[13]

என்னும் திருமந்திர அடிகள் உணர்த்தும்.

இளங்கன்று துள்ளிக் குதித்தல்போல் பிராணன் உடலுக்குள் இயங்குகின்றது. மனிதன் நாள் ஒன்றுக்கு 21, 600 முறை சுவாசிக்கிறான். கன்று கொட்டிலில் கட்டப்பட்டவுடன் துள்ளாமல் நிற்பதுபோல், இத்தனைப் பிராண இயக்கமும் நிகழாது கட்டுப்படுத்த வல்லவர்கள் சுவாசத்தை ஓரங்குலமாகக் குறைப்பர். ஓரங்குலமாகக் குறையும்பொழுது அது தலையினுள்ளேயே சுழலும் என்று குறிப்பிடுவர் பிரம்மஸ்ரீ கணபதி சுவாமிகள்.[14] இந்தக் கருத்தைத் திருமந்திரம்,

பழுக்கின்ற வாறும் பழமுண்ணு மாறும்
குழக்கன்று துள்ளியக் கோணியைப் பல்காற்
குழக்கன்று கொட்டிலிற் கட்டவல் லார்க்குள்
இழுக்காது நெஞ்சத் திடவொன்று மாமே[15]

என்று தெளிவுபடுத்துகிறது.

பசு என்பது பிராண இயக்கத்திற்குக் கட்டுப்பட்ட ஆன்மா; பதியைப் போன்றே பசுவும் பாசமும் அனாதியானது. பசுவின் பாசத்தைப் பதி குருவாக வந்து ஆட்கொண்டு நீக்குவான். இதனால் பசுவின் பாசம் பதியைச் சென்றடையுமோ எனில் அடையாது; ஏனெனில் பசுவின் பாசம் பதியைப் போல் அனாதியாக இருந்தாலும் வானத்தில் தவழும் மேகம் வானத்தைச் சென்று சேராமல் தனித்து இருப்பதைப் போலவும், நாம் கண்ணாற் காணும் பற்பல காட்சிகள் கண்ணில் வந்து பொருந் தாது கண்ணைவிட்டுத் தனித்துநின்று பார்க்கப்படுவதைப் போலவும் சிவன் பாசத்தைப் பசுவிடமிருந்து நீக்கினாலும் அது சிவனைச் சென்றடையாது; தான் தோன்றிய மாயையில் சென்று பொருந்தும்.[16]

பாசம் நீங்கிய பசு பதியைச் சென்றடையும்வரை பிறந்து பிறந்து இறக்கும். ஓரறிவுயிரிலிருந்து பிரம்மன்வரை அனைத்தும் இத்தன்மையன. இதனைப்

பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப்
பசுக்களைக் கட்டிய பாசமூன் றுண்டு
பசுத்தன்மை நீக்கியப் பாசம் அறுத்தாற்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே[17]

என்னும் திருமந்திரப் பாடலால் அறியலாம். சிவலிங்கத்தைக் குறியீடாகக் கொண்டு 'பாசத்தை நீக்கிய ஆன்மா' நற்பசுவாகக் கருதப்படும்.[18] இந்த நற்பசு பதியோடு என்றும் இருக்கக் கூடியது.[19] கன்றினை ஈன்ற பசு தன் கன்றுக்கு எவ்வாறு இடையறாது பால் தருமோ அவ்வாறு சிவனும் ஒளியை இடையறாது வழங்குவான்.[20]

உலகப் பற்றுடைய ஆன்மாக்களைத் திருமூலர்,

கொல்லையின் மேயும் பசுக்களைச் செய்வதென்[21]

என்று கூறி வருந்துகிறார்.

பசுக்கள் பலவண்ணம் பாலொரு வண்ணம்
பசுக்களை மேய்க்கின்ற ஆயன் ஒருவண்ணம்
பசுக்களை மேய்க்கின்ற ஆயன் கோல்போடிற்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே[22]

என்னும் திருமந்திரப் பாடலில் பசுக்களையும் ஆயனையும் சான்று களாகக் காட்டிப் பேசுகிறார். பசுக்கள் பல நிறமுடையவை; ஆனால் அவை தரும் பாலின் நிறம் வெண்மை; அதைப்போல ஆன்மாக்களின் செயல்கள் பலவாக இருப்பினும் அவை பாசத்தை அடிப்படையாகக் கொண்டு எழுவனவாகும். 'பசுக் களை மேய்க்கின்ற ஆயன் கோல்போடின்' என்பதில் ஆயன்

என்பது ஆன்மா ஆகும்; பசுக்கள் என்பது இச்சைப் பொருள்களாய்; ஆயன் தன் கையிலுள்ள கோலைக் கீழே போட்டால் பசுக்கள் மேய்வதை நிறுத்திவிட்டு ஆயனைச் சூழ்ந்து நிற்கும்; அவ்வாறு ஆன்மா பாசத்தை விட்டுவிட்டால் ஆன்மா தன்னில் லயிக்கும்; அப்போது அது தலைவனைப் பற்றிக் கொண்டு வீடு பேறடையும்.

பாலில் தயிர், வெண்ணெய், நெய் முதலியன மறைந்துள்ளன. பல்வேறு படிநிலைகளுக்கேற்பப் பாலில் உள்ள தாதுப் பொருட்கள் தயிராகவும் வெண்ணெயாகவும் நெய்யாகவும் வெளிப்படுகின்றன; அதுபோல் சீவனின் உடலிலும் உள்ளத்திலும் இறைவன் மறைந்துள்ளான்; ஆன்மாக்களின் படிநிலைகளுக்கேற்ப அவன் பலவகையில் வெளிப்படுவான். இதனை,

புரையற்ற பாலினுள் நெய்கலந் தாற்போல்[23]
நெய்த்தலைப் பால்போல் நிமலனும் அங்குளன்[24]

என்னும் பகுதிகள் உணர்த்தும். திருமூலர் மற்றொரு பாடலில் பாலை உவமையாகக் காட்டிப் பேரின்பத்தைப் புலப்படுத்துகிறார். அது:

ஆரு மறியாத அண்டத் திருவுருப்
பார்முத லாகப் பயிலுங் கடத்திலே
நீரினிற் பால்போல் நிற்கின்ற நேர்மையைச்
சோராமற் காணுஞ் சுகமறிந் தேனே[25]

என்னும் பாடலாகும். உறைய வைக்காத காய்ச்சிய பாலில் தயிர் மறைந்திருப்பதுபோல் ஆன்மாவில் இறைவன் கலந்திருக்கிறான். சலனமற்ற மனத்தில் நிறைந்துள்ள சிவனை நல்ல குருவின் உபதேச மொழிகளை அறிந்தோர் உரையற்றுப் பேச்சற்று உணர்வால் உணர்ந்து மகிழ்வர் என்பது 'ஆரு மறியாத அண்டத் திருவுரு' என்பதால் அறியப்படும் பொருளாகும். பாலில் நெய் கலந்துள்ளமை போலச் சீவ ஒளியில் சிவ ஒளி மறைந்துள்ளது; அந்த ஒளியை உணர்ந்து உலகமக்கள் வழிபாட்டினை மேற்கொள்ளவில்லையே என்று எடுத்துக் கூறுகின்றது இரண்டாம் அடியாகிய 'பார் முதலாகப் பயிலும் கடத்திலே' என்பது. பாலில் நீர் கலந்துள்ளது; அதுபோலச் சிவனும் சீவனுள் கலந்து நிற்கிறான். இத்தன்மையைச் சோர்வின்றிக் கண்டால் சிவானந்த சுகத்தைச் சீவன் காணலாம். இதனையே ஆசிரியர் இறுதி இரண்டடிகளில் அறிவுறுத்துகிறார்.

இவ்வாறு திருமூலர் பசு, கன்று, பால் முதலான பொருள்கள் ஆகியவற்றை அடிப்படையாக வைத்துப் பல அரிய தத்துவச் செய்திகளை விளக்கிச் சொல்லியுள்ளார்.

வேறு பல உண்மைகளையும் விலங்குகளை உவமைகளாகவும் உருவகங்களாகவும் படைத்து விளக்கியுள்ள திறத்தை இனிக் காணலாம்.

2. எருது — கடா

எருது சிவபெருமானின் ஊர்தி. இது பெற்றம்[26] என்றும், விடை[27] என்றும் வழங்கப்படும். சிவன் ஒளிவடிவானவன் என்பதால் வெண்மை நிறமான எருது அவன் வாகனமாகக் கொள்ளப்பட்டது. வினை நீங்க வேண்டுமென்றால் "ஏறுடையாய், இறைவா, எம்பிரான்" என்று கூறி, நீறணிந்து, இறைவன் திருவடி புனைவார் ஆதல் வேண்டும்.[28]

சிவன் கோவில்களில் எருது வடிவமைப்புகளைக் காணலாம். கோவிலின் கொடிமரத்திற்கு அருகில் நந்தி உருவம் பெரியதாக அமைக்கப்பட்டிருக்கும். இந்நந்தியை அடுத்துப் பலிபீடம் காணப்படும். சீவன் தன்னிடம் உள்ள பாசத்தைச் சிவனிடம் பலியிடுவதற்குமுன் பாசம் நிறைந்து பெரிய நந்தியாக விளங்குகிறது; அதே சீவன் பாசத்தைப் பலிபீடத்தில் பலியிட்டபின் சிவனுக்கு அருகிலுள்ள நந்திபோன்று சிறியதாக விளங்குகிறது. பாசம் நீங்கிய பசுவின் (சீவன்) தூல உடல் படிப்படியாக மறைந்து சிவனைப் போன்ற அருவநிலை அடையக்கூடியது என்பதைச் சீவர்களுக்கு உணர்த்தும் பொருத்தமான குறியீடாகக் கொடிமரத்தின் அருகில் பாசத்தோடு கூடிய நந்தி தூலமாகவும் பெரிதாகவும் காட்சி தருகிறது. சீவன் சிவனைத் தொழுதலால் பாசம் தேய்ந்து சிவனாக ஒளிவடிவம் அடையும் என்பது சிறிய நந்தி உருவத்தால் உணர்த்தப்படுகிறது.

விடையவன் ஏறி விளங்கி யிருக்கும்[29]

என்னும் திருமந்திர அடியில் 'விடையவன்' என்பது 'எருதை உடைய சிவன்' என்னும் பொருளைத் தந்தாலும் உட்பொருளாக விந்து மண்டலத்தை வென்றவர் ஒளியில் திளைத்து ஒளியுடல் பெற்று விளங்குவர் என்பது அறியப்படுகிறது.[30]

பிராண செயத்தைச் சொல்ல முற்பட்ட திருமூலர் இடகலை, பிங்கலை இரண்டையும் கடாக்களாக உருவகிக்கிறார். இவ்விரண்டையும் ஒன்றுபடுத்தினால் சுழுமுனையாகிய ஒரு கடா அமையும் என்பதனை,

இரண்டு கடாவும் இருத்திப் பிடிக்கில்
இரண்டு கடாவும் ஒருகடா வாமே[31]

என்னும் திருமந்திர வரிகள் உணர்த்துகின்றன. சுழுமுனை திறந்தால் சகஸ்ரதளம் திறக்கும் என்பதும், யோகத்தினால்

இறைவனை அடைய முடியும் என்பதற்குச் சுழுமுனை திறப்பதே முதற்படி என்பதும் இந்தக் கடாக்களின் உருவகத்தால் தெளியலாம்.

3. எருமை

திருமூலர் எருமையைச் 'சித்த'மாக உருவகப்படுத்துகிறார். இன்றளவும் கோயில்களில் எருமைக்கு என்று தனியிடம் ஒதுக்கப் படவில்லை. ஆனால் திருமூலர்,

குடைவிட்டுப் போந்தது கோயில் எருமை [32]

என்று குறிப்பிடுகிறார். இதனால் ஆன்மாவாகிய மந்திரி, புத்தியாகிய சித்தத்திற்கு (எருமைக்கு) அறிவுரை கூற, அதனை ஏற்ற சித்தம் இறையுணர்வில் தன்னைப் பிணைத்துக்கொண்டு உடலைக் கடந்து விளங்கும். இவ்வாறு உடலைக் கடந்து விளங்கும் தன்மையையே திருமூலர் 'குடை விட்டுப் போந்தது என்று பாடுகிறார். இத்தொடரில் உள்ள 'குடை' என்ற சொல் உடலைக் குறிக்கிறது.

4. ஆடு

பிறர் சுட்டிக் காட்டும் குறிகளையும் அடையாளங்களையும் கடந்தவன் சிவன். அவனைப் பற்றி எழுதிவைப்பதனால் பயன் எதுவுமில்லை. ஏட்டில் எழுதியவற்றைக் குருவின் துணையின்றிப் படிப்பதனாலும் இறையனுபவத்தை முழுமையாக உணர்ந்து கொள்ள முடியாது. இதனைத் திருமந்திரம்,

காட்டுங் குறியுங் கடந்தவர் காரணம்
ஏட்டின் புறத்தில் எழுதிவைத் தென்பயன்
கூட்டுங் குருநந்தி கூட்டிடி னல்லது
ஆட்டின் கழுத்தில் அதர்கிடந் தற்றே [33]

என்று தெரிவிக்கிறது. ஆட்டின் மடியில் பால் ஊறுமே அன்றி, வெள்ளாட்டின் கழுத்தின் கீழ்ப்பகுதியிலுள்ள அதரில் பால் ஊறாது; அதரினால் ஆட்டிற்கு எந்தப் பயனும் இல்லை. பிரணவமாய் உள்ள இறைவனை உணர்ந்து கொள்வதற்கு ஏட்டில் எழுதப்பட்ட சரியை கிரியை முதலியனவும் மந்திரங்களும் தேவையில்லை; அவற்றால் பயனில்லை. சீவனின் பக்குவ நிலைக் கேற்பச் சிவகுரு மானிட சட்டை தாங்கி வந்து குருவாக விளங்கி உணர்த்த உணர்பவரே சிவானந்தத்தை முழுமையாக உணர்ந்தவ ராவர். ஏனையவர் சிவானுபவம் பெற்றேன் என்று கூறிக் கொள்வது ஆட்டின் கழுத்தில் உள்ள அதரில் பால் குடித்தேன் என்பதற்கொப்பான பொய்யாகுமே அன்றி உண்மையாகாது. இப்பாட்டில் ஆட்டின் அதர் உவமையாக அமைவதோடு,

உண்மையான இறையனுபவம் புறத்தில் தோன்றுவதல்ல என்பதும், அக உணர்வாகவே அது ஏற்படவேண்டும் என்பதும் விளக்கப்படுகின்றன.

5. நாய்

பொதுவாக நாய் ஓரிடத்தில் அமைதியாக நிற்பதில்லை; அது காரணமின்றிப் பல இடங்களில் அலைந்து திரிந்து கொண்டிருக்கும். மனமும் அதைப்போல ஒன்றிலும் நிலைக்காது அலைந்த வண்ணம் இருக்கும். இத்தகைய நாய் போன்ற மனத்தைக் கட்டுப்படுத்தி சகஸ்ரதளத்தில் பதியச் செய்பவள் மனோன்மணியாவாள். இதனை,

> சுவாவை விளக்குஞ் சுழியகத் துள்ளே
> அவாவை அடக்கிவைத் தஞ்சலென் றாளே [34]

என்று திருமந்திரம் சுட்டுகின்றது. 'சுவா' என்ற சொல் நாயைக் குறிக்கும். இப்பாடலில் அலையும் மனம் நாயின் அலைதலுக்கு ஒப்புமையாக்கப்பட்டுள்ளது.

சமயப் பொதுமையை அறிவுறுத்திச் சமயங்களுக்கிடையே உள்ள காழ்ப்புணர்ச்சியைக் கடிவது திருமந்திரம். இறைவன் ஒருவனே என்றும் அவனை அடைவற்குரிய வழிமுறைகள் ஆறு சமயங்களாக உள்ளன என்றும் கூறுவர்; ஆனால் ஆறு சமயங்களிலும் உள்ள சமயவாதிகள் அவரவர் சமயமே சிறந்தது என்று தங்களுக்குள் வாதிட்டுக் கொள்வர். இவற்றால் பயனொன்றும் இல்லை. மலையைப் பார்த்து இடைவிடாது குரைப்பதனால் நாய்க்கு எப்பயனும் ஏற்படாததைப் போலச் சமயவாதிகளின் வாதங்களால் இறைவனை அடைய முடியாது. திருமந்திரம்,

> ஒன்றது பேரூர் வழியா றதற்குள
> என்றது போல இருமுச் சமயமும்
> நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்
> குன்று குரைத்தெழு நாயையொத் தார்களே [35]

என்று இதனைத் தெளிவுபடுத்துகிறது. பக்தியைத் தக்க முறையில் இறையை நோக்கிச் செலுத்தாதவர்கள் சிவானுபவம் பெற இயலாது என்பதை,

> பத்தியைப் பாழில் உகுத்தஅப் பாவிகள்
> கத்திய நாய்போற் கதறுகின் றாரே [36]

என்று திருமந்திரம் நாயினை உவமையாக்கி விளக்குகிறது.

மாயவித்தை காட்டுபவர்களைக் 'கழுவடி நாய்' என்று கடிந்து கூறுகிறது திருமந்திரம். கழுமரத்தின் அடியில் நாய் காத்திக்கொண்டு நிற்கும்; கழுமரத்தில் தொங்கும் உடலிலிருந்து

இற்றுவிழும் குறுதிக்காகவும் நிணத்துக்காகவும் நாய் சுற்றிச் சுற்றி வரும். கழுவடி நாய் போன்றவர்கள் மாயவித்தை காட்டிப் பொருள் சேர்ப்போர். இவர்களிடமிருந்து சிவஞானிகளை வேறுபடுத்திக் காட்ட,

கத்தித் திரிவர் கழுவடி நாய்போல்
கொத்தித் திரிவர் குரக்களி ஞானிகள்
ஒத்துப் பொறியும் உடலும் இருக்கவே
செத்துத் திரிவர் சிவஞானி யோர்களே [37]

என்று திருமந்திரம் செப்புகிறது; ஊனுக்காகக் கழுவடி நாய்கள் கத்தித் திரியும்; பொருளுக்காகக் குரக்களி ஞானிகள் பாமரரைக் கொத்தித் திரிவர்; வினைநீங்கிய சிவஞானிகளோ பொறியும் உடலும் இருந்தாலும் அவற்றை இயக்காது உலகியல் கடந்த நிலையில் தம் பிராணனைச் சுழுமுனையில் செலுத்திச் சகஸ்ர தளத்தில் மோதச் செய்து உயர்நிலையில் இருப்பர்.

வேறொரிடத்தில் திருமூலர் 'மடம்புகு நாய்' பற்றிச் சொல்கிறார். மடம் சைவ ஞானியர்க்கு உரியது; அங்கிருப்போர்— ஊன் உணவு கொள்ளார்; அந்த மடத்திற்கு வந்து சேரும் நாய், தான் விரும்பும் ஊனுணவு கிடைக்கப் பெறாமல் அலைந்து திரிந்து வெளியேற நினைக்கும்; ஆனால் செல்லும் வழிதெரியாது மடத்தினுள்ளேயே மயங்கிக் கிடக்கும். உயிருள்ளபோதே பிராண செயம் பெறாதவர் மடம்புகுநாய் போல் மயங்கிப் பிறவியில் உழல்வர் என்று விளக்கம் தரவே இவ்வுவமை வந்தது.

உடம்பும் உடம்பும் உடம்பைத் தழுவி
உடம்பிடை நின்ற உயிரை அறியார்
உடம்பொ டுயிரிடை நட்பறி யாதார்
மடம்புகு நாய்போல் மயங்குகின் றாரே [38]

என்பது அப்பாடல்.

தூல உடல் (அன்னமய கோசம்), சூக்கும உடல் (மனமய கோசம்) ஆகியவற்றைத் தழுவி இணைத்துநிற்கும் உயிர் (பிராணமய கோசம்) என்ற அமைப்பின் முறையை உலக மக்கள் அறியவில்லை. ஆன்மா தன்னைவந்து சேரவேண்டும் என்பதற்காக இறைவன் சூக்கும உடலையும், கண்ணுக்குப் புலப்படாத மனத்தையும், இவையிரண்டும் இணைந்துள்ள தூல உடலையும், இம்மூன்றையும் இயக்கும் உயிரையும் தந்துள்ளான். இதில் தூல உடல் அழியக் கூடியது; ஏனைய உடல் அழியாதது; உயிரும் அது பெற்ற அனுபவமும் அழியாது சூக்கும உடலுடன் தொடர்புற்று விளங்கக் கூடியவை. இவற்றை உணராத உயிர் எனும் நாய், சைவ மடமாகிய உடலில் நின்று, அதுவே அழிவற்றது என்று

மயங்குவது தவறானது. மடம்புகுந்த நாய் மயக்கம் நீங்கியவுடன் தான் விரும்பும் உணவு மடத்தில் கிடைக்காது என உணர்ந்து மடத்தைவிட்டு வெளியேறுவதைப் போன்று உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பை உணர்ந்துகொண்ட சீவன், தான் நிலையாகத் தங்குதற்குத் தகுந்த இடம் சிவன் என்றுணர்ந்து, தூல உடலை நீத்துச் சூக்கும உடலைப் பற்றிச் சிவத்தில் அடங்கும். இந்த அரிய தத்துவத்தையே திருமூலர் 'மடம்புகு நாய்' உவமை வாயிலாக எளிய முறையில் தெளிவுபடுத்துகிறார்.

காமச் செயல்களில் விருப்பம் உடைய மனிதனைத் திருமூலர் இழிந்த மலமுண்ணும் நாயின் செயலோடு ஒப்புமைப்படுத்திக் கூறுகிறார்.[39]

6. குதிரை

உடம்பாகிய கூட்டில் வந்து புகுந்த பிராணன் பற்றிக் கூறும் போது திருமந்திரம் ''கூடுபுக் கானது ஐந்து குதிரையும்'' என்று கூறுகிறது.[40] இதற்கு விளக்கம் தரும் ஜி. வரதராஜன், ''உடம்பாகிய கூட்டினில் புகுந்ததான பஞ்சப் பிராணனாகிய ஐந்து குதிரையும்''[41] என்கிறார். எனவே, இவ்வுடம்பு பஞ்ச பூதங்களின் கூட்டுறவால் ஆனது என்பதையே இத்தொடர் குறிக்கிறது எனலாம். பாடலின்படி ஐந்து பூதங்கள் குதிரை களாகக் குறிக்கப்படுகின்றன.

குண்டலினி யோகம் மூலாதாரத்திலிருந்து மேலேறிப் புருவ மத்தியில் ஒன்றுபடும் முறை என்று விளக்கும்போது மீண்டும் குதிரையினைச் சுட்டுகிறார் திருமூலர். சந்திரகலையும் அகூர கலையும் ஒன்றுபடும் போது, நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி ஆகிய நான்கு கலைகளின் இயக்கத்தையும் சாதகன் அறிந்து செயல்படவேண்டும். இங்கு ஆசிரியர் நான்கு கலை களையும் நான்கு குதிரைகளாகக் கொண்டு,

> **நாகமும் எட்டோடு நாலு புரவியும்**
> **பாகன் விடாவிடிற் பன்றியு மாமே**[42]

என்று பாடுகிறார். எனவே, கலைகளின் தன்மையறிந்து இயக்குபவன் இறையடியைச் சேருவான் என்பதும், குண்டலினி யின் தன்மையை உணராதவன் இழிந்தவன் என்பதும் இப்பாடலால் உணர்த்தப்படும் செய்தியாகும்.

யோகப் பயிற்சிக்குப் பிராணாயாமம் இன்றியமையாதது; மனமடங்கிய நிலையில் சீவன் தேகத்தை விட்டு அகண்டத்தில் நிற்கும்போது இயங்கும் பிராணன் குதிரையாக உருவகப்படுத்தப் படுகின்றது.

ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்
உய்யக் கொண்டேறுங் குதிரை மற்றொன்றுண்டு [43]

என்றும்,

உரைத்தன வற்கரி ஒன்று [44]

என்றும் பிராணன் குதிரையாக உருவகப்படுத்தப்படுவது காணத் தக்கது. மெய்யை விட்டு அகண்டத்தைப் பற்றி நிற்போர்க்கு இக்குதிரை வசப்பட்டு நிற்கும்.

பிராணனைப் பொதுவாகக் குதிரை என்று குறித்தாலும், இடுப்புக்கு மேலே இயங்கும் காற்று 'பிராணன்' என்றும், இடுப்புக்குக் கீழே இயங்கும் காற்று 'அபானன்' என்றும் பெயர் பெறும். இதனால் திருமந்திரம்,

ஆரியன் நல்லன் குதிரை இரண்டுள [45]

என்று கூறுகிறது. ஆரியன் என்பது மனம்; இரண்டு குதிரை களையும் வெளியே விட்டு உள்ளே நிறுத்தும் விரகு அறிந்தாரில்லை; பிராணசெயம் பெற்ற குருநாதன் அருளினால் பிராணன் அபானனாகிய இரண்டு குதிரைகளையும் 'வாரிப் பிடித்து' வசப்படுத்தலாம் என்பது திருமூலர் உள்ளக்கிடக்கை.

இந்தக் குதிரைகளை அடக்கிப் பிராணசெயம் பெற்றவர் களின் உடலும் மனமும் சுறுசுறுப்புடன் இருக்கும்; சோம்பலும் நீங்கும். [46]

பிராணாயாமம் செய்யத் தொடங்கும்போது முதலில் திகைத்துப் பின் சீருடன் இயங்கும் பிராணனை முறைப்படுத்தும் பாகன் சிவகுருநாதன் ஆவன். பிராணாயாமத்தால் முறைப் படுத்தப்பட்ட காற்று சீவனது தலையில் சென்று பாய்கின்றது. போர்க்களத்தில் குதிரை வேகமாகச் சென்று மீண்டும் தான் முதலில் இருந்த இடத்திற்கே வருவதைப் போன்று பிராணனும் ஐவகைக் கோசங்களைக் [47] கடந்து சூக்கும உடலின் அருகிலும் வெகுதூரத்திலும் சென்று மீண்டும் இத்தூல உடம்பை வந்தடை யும். இதனை,

காயுங் கடும்பரி கால்வைத்து வாங்கல்போற்
சேய விடமண்மை செல்லவும் வல்லது
காயத் துகிர்போர்வை யொன்றுவிட் டாங்கொன்றிட்
டேயு மவரென்ன ஏய்ந்திடுங் காயமே [48]

என்னும் திருமந்திரம் உணர்த்துகின்றது.

வாசி என்னும் மூலவாயு வேகமாகச் செல்லக்கூடியது; அதனைத் திருமந்திரம் குதிரையின் வேகத்திற்கு ஒப்பாகச் செப்புகிறது.

பரிய புரவியும் பாறிப் பறந்தது[49]

என்பது பாடல் வரி.

துரியப் பரியில் இருந்தஅச் சீவனைப்
பெரிய வியாக்கிரத் துள்ளே புகவிட்டு[50]

என்னும் பாடலடிகள், துரியமாகிய குதிரை மேலிருந்த சிவனை மென்மையான பராவத்தையில் புகச்செய்யும் என்று தெரிவிக்கின்றன. இங்குத் 'துரியம்' குதிரையாக உருவகிக்கப் பட்டுள்ளது.

இறைவன் திருவருளால் மட்டுமே மேல்நோக்கிய சீவனது பயணம் நிகழும். பொய்யான ஒன்பது துவாரங்களையும் அடைத்துப் பிராணனை— மெய்யான வாசியாகிய குதிரையை— மேல்நோக்கிச் செலுத்தினால் சிவயாத்திரை செய்து சிவனை அடையலாம். இந்தக் கருத்தை,

பொய்செய் புலன்நெறி யொன்பதுந் தாட்கொளின்
மெய்யென் புரவியை மேற்கொள்ள லாமே[51]

என்னும் பாடலடிகளால் திருமூலர் சொல்கிறார். ''இடகலை, பிங்கலை ஆகிய இருநாடிகளின் வழியாகப் பிராணனை மேலேற்றி அமுதத்தை உண்ண வல்லீரானால் நீரிலும் நிலத்திலும் ஆயிரம் ஆண்டுகள் சமாதியிருந்தாலும் உடல் அழியாது'' என்னும் திருமூலர், இரு நாடிகளையும்,

ஈறாறு கால்கொண் டெழுந்த புரவி[52]

என்று குதிரைகளாக உருவகிக்கிறார். வேறொரிடத்தில் திருமூலர் சீவன் சிவனாகும் முறையைக்,

குண்டாலங் காயத்துக் குதிரை பழுத்தது[53]

என்று கூறுகிறார்.

7. யானை

யானை ஆற்றல் நிறைந்தது; உடலில் அவத்தைகளைத் தோற்றுவிக்கும் ஐந்து பூதங்களையும், ஐந்து தன்மாத்திரைகளையும், ஐந்து புலன்களையும் அத்தகைய ஆற்றல் வாய்ந்த யானைகள் என்று திருமூலர் உருவகித்து,

யானை பதினைந்து[54]

என்கிறார். இவற்றை மனிதன் வெல்லவேண்டும்; அவ்வாறு வென்றவனே இறையின்பம் பெறுவான் என்பதை ஆசிரியர் குறிப்பாக உணர்த்துகின்றார்.

வளமான உடலும் கட்டுப்பாடற்ற வாழ்வும் உடைய யானையை வீட்டில் வளர்க்க இயலாது; அதுபோன்றவர்கள்

பரத்தையர். பொது மகளிர் இழிவுபற்றிப் பேசும் திருமூலர் அவர்களை,

இளம்பிடி மாதர் [55]

என்று வருணிக்கிறார்.

சாதகர் யோக சாதனையின்போது கேட்கும் ஒலிகள் பத்தனுள் யானையின் பிளிறலும் ஒன்றாகக் கூறப்படுகிறது. [56]

பிறிதோரிடத்தில் திருமூலர் ஐம்புலன்களைக் 'கும்பக் களிறு ஐந்து' என்றும், அவற்றைத் தன்வழியே செலுத்தும் மனத்தைக் 'கோலொடு பாகன்' என்றும் குறிப்பிடுகிறார். [57]

ஆக மதத்தன ஐந்து களிறுள
ஆக மதத்தறி யோடணை கின்றில
பாகனு மெய்த்தவை தாமும் இளைத்தபின்
யோகு திருந்துதல் ஒன்றறி யோரமே [58]

என்னும் திருமந்திரப் பாடல் இந்திரியங்களை மதம்பிடித்த களிறுகளாகவும், இந்திரியங்கள் சந்திர மண்டலமாகிய கட்டுத் தறியில் அணையாமையைத் 'தறியோடு அணைகின்றில' என்றும், அடக்க முயலும் ஆன்மாவைப் 'பாகன்' என்றும் உருவகித்து உள்ளது.

யானையைக் குறிக்கும் வேழம் என்னும் சொல் கரும்பையும் குறிக்கும். இதை அடிப்படையாக வைத்துத் திருமூலர்,

முழக்கி யெழுவன மும்மத வேழம்
அடக்க அறிவென்னுங் கோட்டையை வைத்தேன்
பிழைத்தன வோடிப் பெருங்கேடு மண்டிக்
கொழுத்தன வேழம் குலைக்கின்ற வாறே [59]

என்று பாடுகிறார். "புலன்களாகிய மும்மத யானைகள் பிளிறிக் கொண்டு எழுகின்றன; அவற்றை அடக்க அறிவெனும் கோட்டையை வைத்தேன். ஆனால், அவை அதிலிருந்து தப்பியோடி வெளியே கேடு விளைக்கும் புலன்களில் மண்டி, உடம்பாகிய கரும்பை அழித்துத் திமிர்கொண்டு அலைகின்றன" என்பது இதன் பொருள். பிரணவமான விந்து நாதங்களில் யானை போன்ற இந்திரியங்கள் வசப்படும் என்பது இப்பாடலின் தத்துவக் கருத்தாகும். [60]

புலன்களாகிய யானைகள் நுகர்ச்சியில் ஈடுபட்டுக் கரும்பாகிய உடலை அழித்து விடுகின்றன. இவ்வழிவை விரும்பாத சீவன் பிரணவ வடிவமாக, ஓங்கார வடிவமாக உள்ள யானை வடிவான இறைவனை மனத்தில் இருத்தித் தியானித்தால் புலன்கள் கட்டுப்படும். [61] தியானமோ உறக்கம் வரும் வரை மேற்கொள்ளப் படுதல் வேண்டும்; இல்லையெனில் புலன்கள் விடுபட்டுத் தம்

விருப்பம் போல் செயல்படும்.[62] ஐம்புலன்களையும் அடக்கி, அறிவாகிய ஞானத்தைத் தூண்டி, ஊனுடம்பைச் சோதி வடிவமாகக் கண்டவர்கள் சிவனைச் சென்றடைவர். இக்கருத்தை,

ஆனைகள் ஐந்தும் அடக்கி அறிவென்னும்
ஞானத் திரியைக் கொளுவி அதனுட்புக்
கூனை இருளற நோக்கும் ஒருவற்கு
வானக மேற வழியெளி தாமே[63]

என்னும் பாடல் உணர்த்துகிறது ஐம்புலன்களும் பிராணன், சகஸ்ரதளத்தை அடையும்போது அழிந்துபடும்.[64]

உலகச் சிந்தனையற்றுச் சிவச் சிந்தனையில் ஈடுபட்டு ஞான சாதனை புரிவோர் யானை, புலி முதலியன துரத்தினாலும் தம் செயலினின்றும் நழுவமாட்டார்.[65]

யானையை உவமையாகவும் உருவகமாகவும் காட்டி இவ்வளவு செய்திகளை உணர்த்திய திருமூலர் மரத்தினால் செய்யப்பட்ட உயிரற்ற யானையையும் நினைவுக்குக் கொண்டு வந்து ஒரு செய்தியைச் சொல்கிறார்.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே[66]

என்பது திருமந்திரம். மரத்தால் செய்யப் பெற்ற யானை உருவத்தைப் பார்க்கும்போது மரத்தைப் பற்றிய எண்ணமில்லை; யானையே முன் நிற்கிறது. ஆனால், மரத்தின் தன்மையை நோக்குபவனுக்குச் செதுக்கப்பட்ட யானையின் உருவம் புலப்படுவதில்லை; மரமே முன்நிற்கும். அதுபோலப் பரத்தால் விளக்கம் பெற்ற நிலம் முதலிய பூதங்களைப் பார்க்கும்போது பரமானது காட்சிக்குப் புலனாவதில்லை; குருவருளால் பார்க்கும் போது பரமே காட்சியளித்து நிலம் முதலான பூதங்கள் பரத்தில் ஒடுங்கி மறைந்தன. சீவன் குருவினது அருளால் ஆன்ம ஒளியை உணரும்போது பஞ்ச பூதங்களும் பரத்தில் ஒடுங்கிவிடும் என்பதே இப்பாடலின் உண்மையான கருத்து.

திருமூலர் வேறொரு யானை பற்றிய உவமையையும் கையாள் கிறார். இது பொய்யான யானை. யானையின் உருவத்தைப் போலச் செய்து அதனுள் இருவர் புகுந்து ஆட்டுவது பொய்யான யானை அல்லது 'பொய்க்கரி' எனப்படும். இவ்வுலக வாழ்வு பொய்க்கரியைப் போன்று பொய்யானது என்பது திருமூலர் கருத்து. தூல உடலில் உயிர் நிற்கவும் ஞானம் பெறவும் சக்தி

அருள் புரிகிறாள்; பிறப்பு, இறப்பு, சொர்க்கம், நரகம் முதலியவற்றை அளிக்கிறாள்; இறுதியில் ஞானத்தைக் கொடுத்து சிவனருள் கூடச் செய்கிறாள். எனவே, சீவர்களுக்கு ஞானம் ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்திற்காக அருட்சக்தி அவர்களிடம் படிகிறது; சீவர்களின் உடனிருந்து இயக்குகிறது; சீவர்களின் உடலில் சக்தியின் அருளும் பதியப் பொய்க்கரி இருவரால் இயக்கப்படுவது போல, சீவனும் சிவன், சிவனருட் சக்தி இரண்டாலும் இணைந்து இயக்கப்படுகின்றது. 'பொய்க்கரி' என்னும் சிறந்த உவமம் ஓர் அரிய தத்துவ விளக்கத்திற்கு ஈண்டுப் பயன்பட்டுள்ளது.[67]

8. முயல்

திருமூலர் முயலைச் சிவனுக்கு உருவகமாக்கி ஒரு பாடல் புனைந்துள்ளார்.

> **கயலொன்று கண்டவர் கண்டே இருப்பர்**
> **முயலொன்று கண்டவர் மூவரும் உய்வர்**[68]

என்பது அது. ''மாறிக் கொண்டே இருக்கும் உலகமாகிய கயல்மீனைக் கண்டவர் உலகில் பிறந்து இறந்து கொண்டே இருப்பர்; ஆனால், சிவமாகிய முயலை அடைய வேண்டுமென்று சரியை, கிரியை, யோகம் ஆகிய நெறிகளில் நிற்பவர் சிறிது சிறிதாக ஞானத்தை அடைந்து உய்தி பெறுவர்'' என்பது திருமூலர் கருத்து. ஈண்டு, முயல் என்றது சிவனை; மூவர் என்றது சரியை, கிரியை, யோகம் ஆகிய நெறிகளில் நிற்கும் மூவர். ஞான சாதனையின்றித் தர்க்கம் செய்பவர்களுக்கு அப்பாற்பட்டவன் சிவன் என்னும் கருத்தை இப்பாடல் சுட்டுகிறது.

முயலாகிய இந்த விலங்கையே அன்றிச் சந்திரனில் காணப்படும் முயலாகிய கறை பற்றியும் திருமூலர் ஓரிடத்தில் பாடியுள்ளார். 'புறங்கூறாமை' என்னும் தலைப்பில் அகவழி பாட்டின் சிறப்பைச் சொல்லும் போது இதனைக் கூறுகிறார் அவர்.

> **பிறையுட் கிடந்த முயலை எறிவான்**
> **அறைமணி வாட்கொண் டவர்தமைப் போலக்**
> **கறைமணி கண்டனைக் காண்குற மாட்டார்**
> **நிறையறி வோமென்பர் நெஞ்சிலர் தாமே**[69]

என்பது திருமந்திரம்.

உயரத்தில் உள்ள சந்திரனின் கறையைச் சிலர் முயல் என்று கருதுவதோடு அமையாது, அதனை எறிவதற்காகத் தம் மணி கட்டிய வாளையும் வீச முற்படுவர். அதுபோல, அறியாமை

யுடையவர்கள் விருப்பு வெறுப்புகள் அற்ற நிலையான உபசாந்த நிலையை அடையாமலேயே, அந்நிலையை அடைந்து சிவனைக் கண்டதாகக் கூறுவர். இத்தகையோர் வீண் ஆரவாரம் செய்து புறவுலகில் திரிபவரே யன்றித் தம் உள்ளத்தில் இறைவனை அறியாதாரே ஆவர். இதனையே மேற்கண்ட பாடல் தெளிவு படுத்துகிறது.

9. சிங்கம்

திருமந்திரத்தில் சிங்கம் பற்றிய குறிப்பு மிகச் சில இடங்களில் மட்டுமே வருகிறது.

ஆன்ம தத்துவம், புருடன் நீங்கிய வித்தியா தத்துவங்கள் ஆகிய முப்பதையும் ஆசிரியர் ''அரியேறு முப்பதும்'' என்று குறிக்கிறார்.[70]

உடல், காடு; புலன்கள் ஐந்தும், சிங்கங்கள்; இவை புறம் சென்று புறப்பொருள்களை மேய்ந்து திரும்பவந்து சேரும்; அது போல மனமும் புலன்களும் விஷயங்களைப் பற்றி ஈடுபாடு கொண்டு பின் திருந்தும்; சிங்கத்தின் பல்லையும் நகத்தையும் நீக்கினால் அது அடங்கும்; அதைப்போலவே புலன்களையும் மனத்தையும் புறம்செல்ல வொட்டாது அடக்கவேண்டும்; அப்போது இறைவனை அடையலாம். இந்தக் கருத்தைத் திருமூலர்,

> அஞ்சுள சிங்கம் அடவியில் வாழ்வன
> அஞ்சும்போய் மேய்ந்துதம் அஞ்சக மேபுகும்
> அஞ்சின் உகிரும் எயிறும்அறுத் திட்டால்
> எஞ்சா திறைவனை எய்தலு மாமே[71]

என்னும் பாடல்வழி உணர்த்துகிறார். ஈண்டுச் சிங்கம் பொருத்த மான உருவகமாக அமைந்துள்ளது.

நன்மை தீமைகளைப் பிரித்தறிய மாட்டாத மனத்தில் காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று சிங்கங்கள் உள்ளன; ஆனால் மனம் தீமையான புறத்தில் செல்லாது, நன்மையாகிய அகநோக் கினைக் கொள்ளும்போது சிங்கங்களை அடக்கும் ஆற்றல் பெற்றுவிடுகிறது. இந்தக் கருத்தினை விளக்கும் திருமூலர் காம வெகுளி மயக்கங்களைத்,

> திகைக்கின்ற சிந்தையுள் சிங்கங்கள் மூன்று[72]

என்று உருவகிக்கிறார்.

10. புலி

உடலில் உள்ள நாடிகள் பத்தையும் புலிகளாக உருவகம் செய்கிறார் திருமூலர். ''பத்துப் பரும்புலி''[73] என்பது அவர் கூற்று.

இன்னொரு பாடலில் ஆன்மா புலியாகக் கொள்ளப் படுகின்றது. இதனை,

பதுங்கியதும் பாய்புலி பன்னிரு காதம் [74]

என்னும் பாடலடியிற் காணலாம். இங்கு ஆன்மா தொழிலின்றி இருப்பதைப் பதுங்குதல் என்றும், சூரியன் பன்னிரு இராசிகளில் இயங்குவதைப் 'பன்னிரு காதம்' என்றும் திருமூலர் குறிக்கின்றார்.

ஆன்மா செயலற்று இருந்தாலும் சூரியனது இயக்கம் பன்னிரு இராசிகளிலும் செல்லும்; ஆன்மா தன் புலன்களைப் பதுக்கிய நிலையில் புலனை வென்றால் சந்திர மண்டலத்தின் தன்னறிவைச் செயல்படாதவாறு அடக்கும்; அவ்வாறு அடக்கினால் சூரியன் பன்னிரு இராசிகளில் இயங்கும் இயக்கமும், அவ்வியக்கத்திற் கேற்ப மனிதனின் வாழ்க்கையில் ஏற்படும் விளைவுகளும் அடங்கும். மன அடக்கத்தால் கோள்களின் இயக்கம் மனிதனைப் பாதிக்காதவாறு செய்யலாம் என்பதே இப்பாடலில் திருமூலர் வெளிப்படுத்தும் கருத்து.

11. நரி

கூப்பிடு கொள்ளாக் குறுநரி [75]

என்று திருமூலர் நாதத்தை உடலில் ஏற்படா வண்ணம் தடுக்கும் காமவாயுவை நரி என்னும் விலங்காக உருவகித்துள்ளார். நரி, வஞ்சனை புரிவது; காமமும் அத்தகையது என்பதனால் உவமை நன்கு பொருந்துகிறது. நரி தங்கும் கொட்டிலை 'விந்துப்பை' என்று அதே பாடலில் அவர் சுட்டுவதும் நினைக்கத்தக்கது.

சாதகன் யோகநிலையில் இருக்கும்போது அவன் மனம் உலக சிந்தனைகளில் ஈடுபடக் கூடாது; அவ்வாறிருந்தால் தியானம் ஆகிய மாங்கனி கிட்டாது; அதனால் இறைப்பேறும் கைகூடாது. நிட்டை கலைந்த பிறகு சாதகன் மீண்டும் சரியை, கிரியை முதலானவற்றில் ஈடுபடுதல் நரி ஊளையிடுவதனை ஒக்கும். எனவே திருமந்திர ஆசிரியர்,

தோட்டத்தில் மாம்பழம் தோண்டி விழுந்தக்கால்
நாட்டின் புறத்தில் நரியழைத்தென் செயும் [76]

என்று வினா எழுப்புகிறார். நாட்டின் புறத்தே காட்டிலிருந்து நரி ஊளையிடுவதால் அதனைக் கேட்டு எவரும் அஞ்சுவதில்லை; அதன் குரலுக்குப் பயனில்லை; அதுபோலவே மனம் ஒன்றுபடாத நிலையில் சாதகன் செய்யும் சரியை, கிரியை முதலியவற்றால் எவ்விதப் பயனுமில்லை என்பது கருத்து.

12. மான்

சிவன் தன்னை மனத்தில் நினைந்து போற்றுபவர்களது நெஞ்சில் பெண்மானை விரும்பும் ஆண்மானைப் போன்று

அன்புடன் வந்து தங்குவான்.[77] சிவன் சீவனது நெஞ்சில் தங்குவதால் ஏற்படும் இறையின்பம் அமுதமாக ஊற்றெடுக்கும்; அதனை உண்ணும் சீவனது உடல் முதுமை பெறாது, என்றும் இளமையுடன் விளங்கும். இதனை,

ஊன்கண்டு கொண்ட உணர்வு மருந்தாக
மான்கன்று நின்று வளர்கின்ற வாறே[78]

என்கிறது திருமந்திரம். சூரியன், சந்திரன், தீ, நட்சத்திரம் ஆகிய கலைகளில் சிவன் பொருந்தும் தன்மையால் சீவன் மான் கன்றினைப் போன்று எப்போதும் இளமையுடன் விளங்கும் என்பது கருத்து.

கருணையின் காரணமாக மூலாதாரத்திலிருந்து மேலெழும் பராசக்தி அறிவை ஒளிவீசச் செய்து, ஆகாய மண்டலத்தைத் தெரியச் செய்வாள்; அவள் நடனமிடும் சிற்றம்பலம் உண்மையான அன்புடையவர் உள்ளமாகும். இதனை விளக்கவந்த திருமூலர்,

நேனேர் எழுகின்ற தீபத் தொளியுடன்
மானே நடமுடை மன்றறி வீரே[79]

என்று பாடுகிறார். ஈண்டு ஆசிரியர் பராசக்தியைக் குறிக்கும் சொல்லாக 'மான்' என்னும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

சிவன் திருக்கரத்தில் மான் விளங்குகின்றது;[80] இது சிவன் கருணை வடிவினன் என்பதைக் குறிப்பால் உணர்த்துகின்றது

மானின்கண் வானாகி[81]

என்னும் தொடரில் மான் அசுத்தமாயைக்கு உருவக்மாக வந்துள்ளது.

சிவனது கருணை, சீவனது இளமை, நடனமாடும் சக்தி, அசுத்த மாயை ஆகியவற்றைக் குறிக்க மான் குறியீடாகத் திருமந்திரத்தில் வந்துள்ளது.

13. ஒட்டகம்

ஒட்டகம் பற்றிய குறிப்பும் திருமந்திரத்தில் இடம்பெற்று உள்ளது. இது வறண்ட பாலைவனத்திலும் வாழக்கூடிய வலிமை வாய்ந்தது. அதைப்போல மனத்தைத் துன்புறுத்தும் காமம், குரோதம் முதலான ஆறும் வலிமை மிக்கன. எனவே இவற்றை ஒட்டகங்களாக உருவகிக்கிறார் திருமூலர். அந்தப் பாடல்,

முடுக் காஉது ஆறுள ஒட்டகம்
முடு புகாவிடின் மூவனை யாமே[82]

என்பதாகும். 'மூடு புக்கு ஆனது' என்பது உடம்பால் சூழப்பட்டு உள்ள மனத்தைக் குறிப்பது; இந்த மன மண்டலத்தைக் காமம்

முதலான ஆறு ஒட்டகங்களும் மறைக்காமல் இருப்பின் சீவன் ஆனது சீவதுரியம், பரதுரியம், சிவதுரியம் ஆகிய மூன்றையும் கடந்து விளங்கும் என்பது இப்பாடலின் கருத்து. மூவணை என்பது மூன்று துரியங்களைக் குறிக்கிறது.

14. ஆமை

ஆமை மெதுவாக நகர்வது; அதன் முதுகின்மேல் ஓர் ஓடு உண்டு. அது தனக்குத் தீங்கு ஏற்படும் என்று கருதினால் தன் உடலுறுப்புகளை அதில் அடக்கிக் கொள்ளும். புலனடக்கத்திற்கு ஆமையையே எடுத்துக்காட்டாகத் தருகிறார் திருவள்ளுவர்.[33]

அண்டத்திலும் அணுவிலும் நிறைந்துள்ள சிவன் பெருமை அறிந்த சாதகர் சிவசிந்தனையில் ஈடுபட்டிருப்பர்; அவர்கள் தீமை, நன்மை ஆகிய இரண்டையும் உணர்ந்து தம் புலன்களைப் புறத்தே அலையவிடாது மன அடக்கத்துடன் இருப்பர். இந்த நிலையைத் திருமூலர்,

> **ஒருமையுள் ஆமைபோல் உள்ளைந் தடக்கி**
> **இருமையும் கேட்டிருந் தார்புரை அற்றே**[84]

என்று சுட்டுகிறார்.

'ஓம்' என்னும் பிரணவம் பற்றி உரைக்கும்போது அகார உகார மகாரங்களைத் தூலப் பிரணவம் என்றும், மகர ஒற்றை 'ஊமை எழுத்து' அல்லது அர்த்த மாத்திரைப் பிரணவம் என்றும் கூறுவர்.[85] பிரணவ நாதத்தில் திளைப்பவர் புலனடக்கம் பெற்றவராய் ஒளியுடல் பெறுவர். இதனை,

> **ஊமை யெழுத்தொடு பேசும் எழுத்துறில்**
> **ஆமை யகத்தினில் அஞ்சும் அடங்கிடும்**[86]

என்று உருவகமாகப் பாடுகிறார் திருமூலர். இங்ஙனம் ஒளியில் திளைப்பவர் மலநீக்கம் பெறுகின்றனர். ஆதலால் அவர்கள் நின்மலாவத்தையில் நின்று, பிரணவ தேகம் பெற்று ஆயிரம் ஆண்டுகள் மரணமிலாப் பெருவாழ்வு வாழ்வர். இவர்களைப் பற்றிச் சொல்லும்போது திருமூலர்,

> **ஊமைக் கிணற்றகத் துள்ளே யுறைவதோர்**
> **ஆமையின் உள்ளே யமுவைகள் ஐந்துள**
> **வாய்மையி லுள்ளே வமுவா தொடுங்குமேல்**
> **ஆமையின் மேலுமோ ராயிரத் தாண்டே**[87]

என்று நயமுடன் சித்திரித்துக் காட்டுகிறார். சீவன் புலனடக்கு தலையும், பிரணவ மந்திரத்தில் திளைத்தலையும், மரணமிலாப் பெருவாழ்வு பெறுதலையும் ஆமையை உருவகப்படுத்தி இனிது விளக்கியுள்ளார் திருமூலர்.

15. முதலை — கரடி

நீரில் வாழும் முதலையையும் காட்டில் வாழும் கரடியையும் ஒரே பாடலில் உவமைகளாக்கி மகிழ்கிறார் திருமூலர். துன்பம் நீங்குவதற்கு எளிய வழி நூல்களை அறிந்து நற்றவம் செய்தலே என்பதை விளக்கும் ஆசிரியர்,

> ஆற்றிற் கிடந்த முதலைகண் டஞ்சிப்போய்
> ஈற்றுக் கரடிக் கெதிர்ப்பட்ட தன்னொக்கும்[88]

என்னும் உவமையைப் படைக்கிறார். திருமறை, திருமுறை முதலான நூல்களை அறியாதவர் நோற்றுத் தவஞ்செய்யாதவர் ஆவர்; அவர்கள் தவத்தைக் கண்டு அஞ்சுபவர்; ஆயினும் பிச்சை ஏற்றுத் துன்புற்று வாழ்வு நடத்துவர். இவர்தம் இல்லறம் ஆற்றில் உள்ள முதலையைக் கண்டஞ்சி அதிலிருந்து மீண்டு ஈன்றணிமையுடைய கரடியின் கையில் சிக்கித் துன்புறுதல் போன்றது என்று விளக்குகிறார் திருமூலர். துறவற நோன்பு கடுமையானது என்று தவறாக உணர்ந்து பிச்சையேற்று வாழ்பவரைப் பற்றிப் பட்டினத்தாரும் குறிப்பிட்டுள்ளார்.[89]

16. பன்றி

விலங்குகளில் இழிந்தது பன்றி; மாயையில் சிக்கி, மும்மலங்கள் அலைக்கழிக்க வாழும் சீவன் பன்றியோடு ஒத்த நிலையது என்று திருமூலர் குறிப்பிடுகிறார்.[90] இத்தகைய மனமும் இறையன்பை விரும்பினால் பன்றியின் நிலைக்குச் செல்லாமல் சிறப்புறும். பக்குவப்படாத ஆன்மா பன்றியினை ஒத்தது.

17. பாம்பு

திருமந்திரத்தில் குண்டலினி பாம்பாக உருவகப்படுத்தப் படுகிறது. திருமூலர்,

> மூங்கின் முளையில் எழுந்ததோர் வேம்புண்டு
> வேம்பினிற் சார்ந்து கிடந்த பனையிலோர்
> பாம்புண்டு பாம்பைத் துரத்தித் தின்பாரின்றி
> வேம்பு கிடந்து வெடிக்கின்ற வாறே[91]

என்னும் பாடலில் குண்டலினியைப் பாம்பாகக் குறியீடு செய்வதைக் காணலாம். இந்தப் பாடலில் மூங்கில் என்பது மனம்; வேம்பு என்பது வைராக்கியம்; பனை என்பது முதுகந்தண்டு; பாம்பு என்பது குண்டலினி.

முதலில் சீவனின் மனமாகிய மூங்கிலில் வைராக்கியமாகிய வேம்பு தோன்றும்; வைராக்கியம் இருவகைப்படும். ஒன்று, நிலையற்ற உலகின் மீது ஏற்படும் வைராக்கியம்; மற்றொன்று, நிலையான சிவனை அடையவேண்டும் என்ற வைராக்கியம்,

வைராக்கியத்தோடு குண்டலினி பனைமரமான முதுகந்தண்டின் சித்ரணி நாடி வழியாக மேலேற அமுதம் கிடைக்கும். அதனை உணர்ந்து உண்பவர்களது மனம் சிதறாது சிவனைச் சென்றடைகிறது.

18. எலி

குலைக்கின்ற நன்னகை யாங்கொங் குழக்கின்
நிலைக்கின்ற வெள்ளெலி மூன்று கொணர்ந்தான்[92]

என்னும் திருமந்திரப் பாடலில் வெள்ளெலி பற்றிய குறிப்பு வருகிறது. 'குலைக்கின்ற நன்னகை' என்பது குலையாகவுள்ள நல்ல எண்ணம் என்னும் பொருளுடையது. 'வெள்ளெலி' என்பதற்குச் சீவனாகிய வெள்ளை எலி என்று பொருள்தருவர் ஜி. வரதராஜன். அதாவது, ''குலையாகவுள்ள நல்ல எண்ணமாகிய வாசனையைக் கலக்கிவிட்டால், நிலைபெற வேண்டிய சீவனாகிய வெள்ளை எலி தாமத இராசத சாத்துவிகமாகிய முக்குண வசப்பட்டு நிற்கும்'' என்பது இவ்வடிகளின் பொருள். இம்முக்குணங்களின் வசமான சீவனை 'வெள்ளெலி' என்று உருவகப்படுத்துகிறார் திருமூலர்.

வெள்ளெலியைச் சீவன் என்று கொள்ளாமல் 'வெள்ளெலி மூன்று' என்று சேர்த்து, மூவகைக் குணங்களை மூன்று வெள்ளெலிகள் என்று கொள்வதும் பொருந்தும்.

19. உடும்பு — பல்லி

உடும்பும் பல்லியும் விடாது பிடித்துக் கொள்ளும் ஆற்றல் உடையவை. அதேபோல உலகியல் கல்வி கற்றவர்கள் பிரணவத்திலிருந்து விலகி உலகியலினை உடும்பினைப் போல இறுகப் பற்றிக் கொள்கின்றனர். இந்தப் பற்றுதலினால் சீவனைப் பிறவிகள் தொடர்ந்து ஆட்கொள்கின்றன. எனவே, பற்றிக்கொள்ளும் ஆற்றலுடைய சீவன், உலகியலைப் பற்றாது விடுத்து பிரணவத்தைப் பற்றிக்கொண்டு குண்டலினி யோகம் செய்தால் பொன்னனைய பிரணவதேகம் பெற்று வாழலாம்.[94]

மற்றொரு பாடலில், பல்லியைப் போல இறைவனைப் பற்றுதல் வேண்டும் என்றும், நாவினை அண்ணாக்குப் பகுதியில் செலுத்தி இறைவனை நினைத்து அமுதம் உண்ணுதல் வேண்டும் என்றும் திருமந்திரம் உணர்த்துகிறது.[95] பற்றியது விடாத எண்ணத்தைப் பல்லி என்று உருவகம் செய்துள்ளார் திருமூலர்.

20. கயல் — மீன்

கயலொன்று கண்டவர் கண்டே இருப்பர்[96]

என்பது திருமந்திரப் பாடலடி. இதில் உலகினைக் கயலாக உருவகம் செய்கிறார் திருமூலர். 'கயலொன்று கண்டவர்' என்பது உலகைக் கண்டவர் என்னும் பொருள்படும். அதாவது உலக மாயையில் சிக்கியவர்கள் அதிலேயே மூழ்கியிருப்பர்.

நிலத்தைப் பிளந்து நெடுங்கடல் ஓட்டிப்
புனத்துக் குறவன் புணர்ந்த கொழுமீன்
விலக்குமின் யாவர்க்கும் வேண்டிற் குறையா
தருத்தமு மின்றி யடுவது மாமே[97]

என்னும் பாடலிலும் மீன் உருவகமாக வருகிறது. இங்கு மீன் என்பது விந்து; நிலத்தைப் பிளத்தல் என்பது மண்தன்மை உடைய உடலில் குண்டலினியை மேல் ஏற்றுதல்; நிலம் இங்குச் சுவாதிட்டானத்தைக் குறிக்கிறது; குறவன் என்பது சீவனாகிய வேடன்; புணர்ந்த கொழுமீன் என்றதனால் சிற்றின்பத்தில் ஈடுபடும் சீவன் என்பது பெறப்படுகிறது.

சிற்றின்பத்தில் ஈடுபட்டு விந்துநீக்கம் செய்யும் சீவன் சிவனாகாது; கொழுவிய மீனான விந்துவைச் செயம் செய்யும் சீவன் பக்குவப்பட்டுச் சிவனாகும் என்பது இப்பாடலின் கருத்து.

பறவைகள்

விலங்குகளை உவமைகளாகவும் உருவகங்களாகவும் அமைத்துப் பல்வேறு சிந்தனைகளை வெளிப்படுத்திய திருமூலர், பறவைகளையும் சீரிய முறையில் அவ்வகையிலேயே பயன்படுத்திக் கொண்டுள்ளார். தனித்தனியாகவும் தொகுப்பாகவும் விண்ணில் பறந்து செல்லும் அவ்வுயிரினங்களைக் கொண்டு பல கருத்து விளக்கங்களைத் தந்துள்ளார் அவர். அவற்றுள் எண்ணற்ற அரிய சிந்தனைகள் பொதிந்துள்ளன.

1. பறவையினம்

புலன்கள் பலவாதலின் அவற்றை ஒட்டுமொத்தமாகச் சுட்டக் கருதிய ஆசிரியர் பறவைகளைப் பயன்படுத்துகிறார்.

கூடும் பறவை இரைகொத்தி மற்றதன்
ஊடுபுக் குண்டி யறுக்குறில் என்னொக்கும்
குடெறி நெய்யுண்டு மைகான் றிடுகின்ற
பாடறி வார்க்குப் பயனெளி தாமே[98]

என்னும் பாடலில் ஐம்புலன்களையும் 'கூடும் பறவை'களாக கற்பனை செய்துள்ளார் திருமூலர். இவை இரைகொத்துதல் என்பது ஆன்மா உலக மாயையில் சிக்குதலாகும். இவ்வாறு இவை

உலக மாயையில் சிக்கவில்லையெனில் இறையுணர்வாகிய நெய் மூலாதாரத்தில் சொரியப்படும். அப்போது மூலாதாரமாகிய நெருப்பு நன்கெரிந்து சீவனின் அண்ட கோசத்தில் உள்ள இருளைப் போக்கி, ஒளிமயமாக்கிச் சிவனுடன் ஒன்றிணையும் நிலையைக் கொடுக்கும். உலக மாயையில் ஐம்புலன்களாகிய பறவைகள் சிக்கும்போது, சீவன் சிவ ஒளியில் திளைக்கும் நிலை பெறாது என்பதனை 'என்னொக்கும்' என்னும் தொடரால் உணர்த்துகிறார் திருமூலர்.

பறவையினத்தைத் தொகுப்பாகக் குறிப்பிடும் மற்றோர் இடமும் திருமந்திரத்தில் உண்டு. அதனை,

> ஆறு பறவைகள் ஐந்தகத் துள்ளன
> நூறு பறவை நுனிக்கொம்பின் மேலன
> ஏறும் பெரும்பதி ஏழும் கடந்தபின்
> மாறுத லின்றி மனைபுக லாமே [99]

என்னும் பாடலிற் காணலாம்.

ஆறு பறவைகள் என்பது காமம் முதலிய ஆறு; ஐந்து என்பது பஞ்சபூதங்களாலாகிய உடல்; நூறு பறவைகள் என்பது தலையிலிருந்து கீழிறங்கும் நூறு நாடிகள். இந்த நாடிகள் நூறும் காமம், ஆணவம், மாயை, சினம், பொறாமை, பொய் ஆகிய பகைகளால் இயங்கி ஆன்மாவை உலகியல் அனுபவங்களைப் பெறச் செய்கிறது. ஆனால் இந்த நாடிகள் மேல்நோக்கப் பிராணாயாமம் வேண்டப்படுகின்றது. பிராணாயாமத்தால் ஏழு ஆதாரங்களையும் கடக்கலாம்; அங்கே நுனிக் கொம்பில் உள்ள சகஸ்ரதளம் விரிவடைந்தால் சீவன் சிவனாவது உறுதி. இதனையே ஆசிரியர் 'மாறுதலின்றி மனைபுகலாமே' என்பதால் தெளிவுபடுத்துகிறார்.

திருமூலர் மற்றொரு பாடலில் ஐம்புலன்களைக் 'கூபப் பறவைகள்' என்று உருவகப்படுத்துகிறார். கூபம் என்பது கிணறு; இங்கு உடம்பைக் குறிக்கிறது. கிணற்றினுள்ளே கூடு கட்டி வாழும் சில பறவைகளும் உள; உலக மாயையில் சிக்கிய ஆணும் பெண்ணும் தம்மை மறந்து தழுவக் கரு உருவாகின்றது. கரு உருவானபின் காமச் செயலைக் கைவிடுவர். கிணறாகிய உடம்பில் வாழும் பறவைகளும்— புலன்களும்— தம் செயலொழியும் நிலை உண்டாகும். அதாவது புலன்கள் மனத்தின் வழியே செல்லாது கட்டுப்பட்டு நிற்கும். இதனையே ஆசிரியர்,

> கோலிங் கமைத்தபின் கூபப் பறவைகண்
> மாலிங்கன் வைத்தது முன்பின் வழியே [100]

என்னும் பாடலடிகளால் உணர்த்துகிறார்.

இன்னொரு பாடலில் திருமூலர் மனப் பண்புகளை உருவகிக்கும்போது பறவைகளைச் சுட்டுகின்றார்:

கூகையும் பாம்பும் கிளியொடு பூஞையும்
நாகையும் பூழும் நடுவில் உறைவன
நாகையைக் கூகை நணுக லுறுதலும்
கூகையைக் கண்டெலி கூப்பிடு மாறே [101]

இந்தப் பாடலில், கிளி என்பது தர்மம்; பூஞை (பூனை) என்பது அதர்மம்; பூழ் (காடை) என்பது குரோதம்; கூகை (கோட்டான்) என்பது அறியாமை; நாகை (நாகணவாய்ப்புள்) என்பது சிற்றறிவு; எலி என்பது சீவன்.

மனிதனின் சிற்றறிவாகிய நாகணவாய்ப்புள்ளை அவனது அறியாமையாகிய கூகை அழிக்க வருகிறது; இதனைக் காணும் நாத வடிவான எலி, இரவில் பார்வை கொண்ட காரணத்தால் நாகணவாய்ப்புள்ளின் அழிவைத் தடுக்கக் குரல் கொடுக்கின்றது. நாத ஒலியைக் கேட்ட சிற்றறிவு எச்சரிக்கை பெற்று அறியாமையி லிருந்து விடுபடுகிறது. தர்மத்தின் வழிநிற்கும் கிளியைப் பூனை அதர்மமாகக் கொல்ல முனைவதுபோல் பேரின்பத்தை மனிதன் நாட அறியாமை அவனைச் சிற்றின்பத்தில் தள்ளிவிடுகிறது. எலியின் எச்சரிக்கைக் குரல்— நாத ஒலி— மனிதன் இறையுணர் வினையும் சிவானுபவத்தையும் பெற்றுத் திளைப்பதற்கு நல்வழி காட்டுவதாகும்.

அறியாமை முதலிய பண்புகளைக் கூகை முதலான பறவை களாக உருவகம் செய்து, சிற்றறிவுடைய சீவனுக்கு மெய்ஞ்ஞான வழி காட்டியுள்ளார் திருமூலர்.

திருமந்திரத்தில் பறவையினத்தைப் பொதுவாகச் சுட்டும் வேறு பிற இடங்களும் உண்டு. ''சீவன்கள் பறவைகள்; அவை தங்கும் காடுகளே உடல்கள்'' என்று ஒரு பாடல் குறிப்பிடக் காண்கின்றோம். [102]

இவ்வுடல் ஐங்கோசங்களால் ஆனது; இது நிலையானதன்று என்பதைச் சீவன் உணர்ந்து கொண்டபின், சரியையில் சரியை முதலான பதினாறு நிலைகளையும், பத்து ஆக்கங்களையும் கடைப்பிடித்து வீடுபேறு அடையும். [103]

பறவைகள் இருள்நீங்கிப் பகற்பொழுது தொடங்கும் நேரத்தில் ஏற்படும் ஒளியைக் கண்டு ஆரவாரத்துடன் குரல் கொடுக்கும். இதனைத் திருமந்திரம்,

போதறி யாது புலம்பின புள்ளினம் [104]

என்கிறது. இரவு முடிந்து ஏற்படும் காலை ஒளிக்கதிர்களைக் கண்டு பறவைகள் குரல் கொடுப்பது இன்பமானது; ஆனால்

பகல் மறைந்து ஏற்பட்ட இருள் விலகவில்லையே என்று அவை புலம்புவது துன்பமானது. இத் துன்ப நிலையிலேயே ஞானேந்திரியங்களாகிய பறவைகள் உள்ளன என்று இப்பாடலில் உருவகிக்கப்பட்டுள்ளன. இவை தம் உடலில் ஒளியாக இறைவனைக் காணவில்லையே என்று வருந்துகின்றன; அகண்டத்தில் உள்ள சிவசூரியனைக் கண்டமாகிய இவ்வுடலிலும் ஒளி தருவான் என்று நினைத்துப் பிராணனைச் தலையுச்சியில் இயங்கச் செய்யாதவரது அறியாமையை நீக்கச் சிவனும் சக்தியும் உதவ இயலாதவர்களாக உள்ளனர். எனவே, புலன்களாகிய பறவைகள் பிராணாயாமம் செய்தால் இறைவனை உடலிலேயே ஒளியாகக் காணமுடியும் என்பதும், ஒளியைக் கண்ட அவை துன்பக்குரல் தாரா என்பதும் இப்பாடலால் அறியப்படுகின்றன.

2. கோழி

பரத்தை யொருத்தி தான் வளர்க்கும் கோழியைத் தன் காமக் கிழவனுக்கு உணவாக ஆக்கிப் படைப்பாள்; அதுபோல, வீரியமாகிய நீர் நன்முறையிற் பயன்படாது வீணாகச் சிற்றின்பத்தினால் அழிகிறது. இதனைத் திருமந்திரம்,

பாத்தியிற் பாயாது பாழ்ப்பாய்ந்து போயிடிற்
கூத்தி வளர்த்ததோர் கோழிப்புள் ளாமே [105]

என்கிறது. சூரிய கலை, சந்திர கலை இணைந்து அக்கினி கலையாகிய பாத்தியில் பாய்ந்து, சகஸ்ரதளமாகிய வயலில் சென்று அமுதமாக மாறாமல், விந்து வீணாக அழிந்து போகிறது என்பது இப்பாடலால் உணர்த்தப்படும் செய்தி. கோழியின் உயிரும் உடலும் அதற்குப் பயன்படாது பரத்தையின் சிற்றின்பம் நுகரும் கிழவனுக்கு உணவாதல் போலச் சீவனின் விந்து அமுதமாக மாறிச் சீவனுக்கு வீடுபேற்றை அளிப்பதற்குப் பயன்படாது என்பது இதன் கருத்து. சீவனின் சிற்றின்பத்துக்காக அதன் விந்தும், அது தாங்கியுள்ள உயிரணுவும் அழிகின்றன என்பது திருமந்திரம் உடற்கூற்றினை நுணுகி ஆயும் திறத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

3. கிளி

பசுமை நிறமுடைய அழகிய கிளியைப் பராசக்தி தன் கரத்தில் ஏந்தியுள்ளாள். கிளியைத் தன் கைகளில் ஏந்தியிருக்கும் சுருண்ட சடை முடியுடன் கூடிய சக்தி சாமுண்டி எனப்படுவாள். கிளியின் மொழி இனியது; அதுபோன்றது குண்டலினி யோகத்தால் தோன்றும் இனிமை என்றும் திருமந்திரப் பாடல் குறிக்கிறது. இவற்றை,

பூங்கிளி தங்கும் புரிகுழ லாள்[106]

என்றும்,

பரந்தஇப் பூங்கிளி பாச மழுவாள்[107]

என்றும்,

வேலம்பு தமருக மாகிளி விற்கொண்டு[108]

என்றும்,

நன்மணி சூலம் கபாலம் கிளியுடன்[109]

என்றும் வரும் திருமந்திரப் பாடலடிகள் தெரிவிக்கின்றன.

4 பருந்து — கருடன்

ஞானிகள் இன்ப துன்ப உணர்வுகளில் ஈடுபடாது சிவானந்தத்தில் திளைத்திருப்பர் என்பதை விளக்கும் திருமூலர் பருந்தையும் கிளியையும் உருவகமாக்கிப் பாடுகின்றார்.

பருந்தும் கிளியும் படுபறை கொட்டத்
திருந்திய மாதர் திருமணப் பட்டார்[110]

என்பது திருமந்திரம் 'திருந்திய மாதர்' என்பது சமபுத்தியுடைய சீவரைக் குறிக்கிறது. இன்ப துன்பங்களைச் சமமாகப் பார்க்கும் பண்புடைய சீவன், தருமமாகிய கிளியும் அதருமமாகிய பருந்தும் முறையே தனக்கு இன்பத்தையும் துன்பத்தையும் கொடுத்தாலும், அது இன்பத்தைக் கண்டு மகிழ்ச்சியும், துன்பத்தைக் கண்டு துக்கமும் கொள்ளாது தன் இயல்பிலிருந்து மாறாது இருக்க வேண்டும்; அவ்வாறு இருப்பவரே வீடுபேறு அடைவர் என்பது இப்பாடலின் கருத்து. இங்கு அழகிய பசுங்கிளி இன்பமாகவும், கொடிய பருந்து துன்பமாகவும் உருவகிக்கப்பட்டுள்ளன.

பனைமரத்தில் கூடுகட்டி வாழும் பருந்து தனக்கு இரை தேவை எனும்போது கூட்டைவிட்டு வெளியே வரும்; இரை கிடைத்தவுடன் அலையாது கூட்டில் தங்கியிருக்கும். இதை உவமையாக்கி ஒரு கருத்தை விளக்குகிறது திருமந்திரம். அது,

பனையுள் இருந்த பருந்தது போல
நினையாத வர்க்கில்லை நின்இன்பந் தானே[111]

என்னும் பாடலாகும். மேற்கூறிய பருந்தைப் போன்று இல்லற வாழ்வை மேற்கொள்பவர்கள் உலகப் பற்றில் மனம் செல்லாது சிவ சிந்தனையில் ஈடுபட்டிருப்பர். இல்லற வாழ்க்கைக்கு உரிய கடமைகளைச் செய்யும்போது உலகியல் நினைவுடனும், அவை முடிந்தபின் சிவ சிந்தனையுடனும் ஈடுபடும் சீவனைப் பாசம் வந்து சேராது. பாசம் நீங்கிய சீவன் சிவத்துடன் கலந்து பேரின்பம் துய்க்கும். இந்தக் கருத்தை மேற்கண்ட பருந்து பற்றிய உவமை தெளிவுபடுத்துகிறது.

விருப்பு வெறுப்பற்ற தன்மையை ஆன்மா அடையும் நிலை உபசாந்த நிலை என்று கூறப்பெறும். இந்நிலையை ஆன்மா அடைதல் வேண்டும் என்று அறிவுறுத்தும் திருமந்திரம்,

கருந்தாட் கருடன் விசும்பூ டிறப்பக்
கருத்தாட் கயத்திற் கரும்பாம்பு நீங்கப்
பெருந்தன்மை பேசுதி நீயொழி நெஞ்சே
அருந்தா அலைகட லாறுசென் றாலே [112]

என்று கூறுகிறது. வானில் பறக்கும் பருந்தின் நிழல் குளத்தில் உள்ள பாம்பின்மீது பட்டவுடன் அது பருந்துக்கு அஞ்சி அடங்கும்; அதுபோல, உலகியலில் விருப்பமுடைய ஆன்மாவை உபசாந்திநிலை அடக்குகின்றது என்பது இதன் கருத்து. இதில் உபசாந்தநிலை பருந்தாகவும், ஆன்மா பாம்பாகவும் உவமிக்கப் படுகின்றன.

பாம்பினைப் புறவுலகில் கருடன் எவ்வாறு கொன்று வெற்றி கொள்ளுமோ, அவ்வாறு கருடமந்திரம் பாம்பின் விடத்தினை உடலிலிருந்து நீக்கும். இதனை அடிப்படையாக வைத்துத் திருமூலர்,

கருடன் உருவங் கருது அளவிற்
பருவிடந் தீர்ந்து பயங்கெழு மாபோல்
குருவின் உருவங் குறித்தஅப் போதே
திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே [113]

என்று பாடுகிறார். பாம்பு கருடனது நினைவு வந்தாலே அஞ்சும் தன்மையது; அதனால் பாம்பு கடித்து நஞ்சேறி மயங்கியிருப்பவனிடம் கருட மந்திரத்தைச் சொல்வர். கருடனோ அதன் நிழலோ படுவதற்குப் பதிலாக, கருடனை மனத்தால் நினைந்து மந்திரம் சொல்வதற்கே பாம்பின் நஞ்சு உடலைவிட்டு இறங்கிச் செல்லும். பாம்பு கடித்தவனும் மயக்கம் நீங்கப் பெற்று, மரணபயமின்றி எழுந்து செல்வான்; அதுபோல, திரிமலத்தில் சிக்கியுள்ள சீவனும் ஞானகுருவான சிவனது உருவத்தை மனத்தில் நினைத்தபோதே மலங்கள் நீங்கப்பெற்றுச் சிவனாகும் தகுதி பெறும். இப்பாடலில் பாம்பின் நஞ்சு மும்மலங்களாகவும், கருடமந்திரம் நஞ்சினை நீக்கும் மருந்தாகவும், சிவன் கருடமந்திரம் சொல்பவனாகவும் கொள்ளப்பட்டுள்ளன.

கருடன் வானில் மிக உயரமாகப் பறக்கக் கூடியது; அது விண்ணில் பறந்தாலும் அதன் கூரிய பார்வை நிலத்தின் மீதுள்ள பொருள்களைக் கண்டு கொள்ளும். அதுபோலப் பிறப்பும் இறப்பும் இல்லாத புனிதனான சிவனும் உலக மக்களின் துன்பங் களைக் கண்டு, அதனை நீக்குவதற்காகப் பாய்ந்து வருவான். [114]

5. வண்டு

திருமந்திரத்தில் ஓர் அழகான பாடல் வண்டினை உருவகப் படுத்தி ஒரு தத்துவத்தை விளக்கிச் சொல்கிறது. அது,

> எழுதாத புத்தகத் தேட்டின் பொருளைத்
> தெருளாத கன்னி தெளிந்திருந் தோத
> மலராத பூவின் மணத்தின் மதுவைப்
> பிறவாத வண்டு மணமுண்ட வாறே[115]

என்பதாகும். இதில் 'எழுதாத புத்தகம்' என்பது வேதம்; 'தெருளாத கன்னி' என்பது குண்டலினி; 'மலராத பூ' என்பது ஊர்த்துவ சகஸ்ரதளம்; 'பிறவாத வண்டு' என்பது உடலோடு கூடாத ஆன்மா என்று உருவகங்கள் வந்துள்ளன.

எழுதாத புத்தகமாகிய வேதத்தின் பொருளை இளைய கன்னியான குண்டலினி சிரசை அடைந்து எழுப்ப, ஊர்த்துவ சகஸ்ரதளமாகிய பூவின் ஆனந்தமயமான தேனை (நாத ஒலியை), உடலின்மீது பற்றில்லாத ஆன்மாவாகிய வண்டு திளைத்து இன்பம் பெறும் என்பது இப்பாடலின் நுட்பப் பொருள். 'பிறவாத வண்டு' என்னும் தொடர் உடலின்பத்தில் திளைக்காது மனம் கடந்த நிலையில் ஆன்மாவாகிய சீவன் விளங்குவதைக் குறிப்பதற்காக ஆளப்பட்டுள்ளது.

மற்றொரு பாடலிலும் திருமூலர் வண்டினை உருவகப் படுத்திக் கற்பனை செய்துள்ளார்.

> பெடைவண்டும் ஆண்வண்டும் பீடிகை வண்ணக்
> குடைகொண்ட பாசத்துக் கோலமுண் டானுங்
> கடைவண்டு தானுண்ணுங் கண்கலந் திட்ட
> பெடைவண்டு தான்பெற்ற தின்பமு மாமே[116]

என்பது அது. பாடலில் வரும் பெடைவண்டு ஆன்மாவாகிய சீவனையும் ஆண்வண்டு இறையாகிய சிவனையும் குறிக்கின்றன. சிவ ஒளியில் திளைக்கும் சீவர்களுக்குப் பாசம் அறும்; அதனால் உலகப்பற்று நீங்கும்; நீங்கவே உலக மாயையால் ஏற்படும் துன்பமும் இல்லாமற்போகும் என்பது பாடலின் கருத்து.

இப்பாடலுக்கு விளக்கம் தரும் அறிஞர் ஜி. வரதராஜன் அவர்கள்,

> ''பெடைவண்டு— ஆன்மா; ஆண்வண்டு— சிவம்; பீடிகை— ஆசனம், மண்; வண்ணம்— தன்மை; குடைகொண்ட பாசம்— ஆகாய மயமான பாசம்; கோலமுண்டான்— சிவன். கடைவண்டு— மனம்; கண்கலந்திட்ட பெடை வண்டாவது, வலக்கண்ணின் மேல் விளங்கும் ஆன்மா.

வலக்கண்ணின் மேல் விளங்கும் ஆன்மா. வலக்கண்ணின் மேல் ஆன்மா உள்ளதாக உபநிடதம் கூறும். கண்கலந் திட்ட பெடைவண்டு தான் பெற்றது இன்பமுமாமே என்பது வலக்கண்புறமுள்ள புருடன் இடக்கண்புறம் மாறிவிடில் சிவப்பேற்றை அடையும் என்றபடி'' [117]

என்று விரித்தெழுதுவர். சிவம் சீவனின் பக்குவத்திற்கேற்ப வந்து தங்கும்; அதன்பின் சீவன் சிவானுபவத்தை மனத்தால் நுகர்கிறது; வண்டு தேனுண்டு மயங்குவது போன்ற பேரின்பம் அது; வலக்கண்ணில் உள்ள ஆன்மா சந்திரயோக முறையில் இடக் கண்ணில் மாறும் போதும் சீவன் சிவனாகும் தன்மை பெறும்; அப்போது சீவனின் உடலில் ஒலியும் ஒளியும் ஏற்பட்டுச் சிவானந்தம் பெருகும். இந்த மேலான கருத்தை இத்திருமந்திரப் பாடல் வண்டினைக் குறியீடாக வைத்து விளக்குகிறது.

பல இடங்களில் அலைவது வண்டு; அவ்வாறு புறத்தில் அலையும் மனமுடையவர் உள்ளத்தில் இறைவன் வெளிப்பட மாட்டான் என்று ஒரு பாடலில் தெரிவிக்கிறார் திருமூலர். [118]

வண்டு மலரிலிருந்து இனிய தேனை எடுக்கிறது; இதனைக் கண்டும் இன்பம் தரும் இறைவனை வழிபட்டு இறையுணர்வில் திளைக்காமல் உள்ளனரே மக்கள் என்று திருமூலர் மற்றொரு பாடலில் வருந்துகிறார். [119]

இறையுணர்வில் தோய்பவர்களின் உடலில் இறைவன் தங்க, அதன் பயனாக அவன் ஒலிவடிவில் சீவர்களுக்குத் தன்னை வெளிப் படுத்துவான். அப்போது சீவரது உடலில் பத்துவகையான ஒலி பேதங்கள் ஏற்படும். அவற்றுள் ஒன்று, வண்டினது 'ரீங்காரம்' போன்றது; மற்றொன்று, தும்பி பறப்பதை ஒத்தது. [120]

6. குருகு

பாசி படர்ந்து கிடந்த குளத்திடைக்
கூசி யிருக்குங் குருகிரை தேர்ந்துண்ணுந்
தூசி மறவன் துணைவழி எய்திடப்
பாசங் கிடந்து பதைக்கின்ற வாறே [121]

என்னும் திருமந்திரப் பாடல் சீவனுக்குக் குருகினை உருவக மாக்கிக் கருத்துவிளக்கம் தருகிறது. உலகம் என்னும் குளத்தில் காமம் முதலிய அறுபகையான பாசி படர்ந்துள்ளது; இங்குச் சீவனாகிய குருகு விஷயானுபவமாகிய உலகமாயை என்னும் இரையினைத் தேடியுண்ணும்; கொடி ஏந்திய வீரனாகிய சிவனது துணை கிடைத்தவுடன் இருளாகிய பாசம் விலகிச் செல்கிறது.

கொக்காகிய சீவன் இறையருளாகிய மீன் கிடைக்கும் வரையில் பாசிபடர்ந்த குளமாகிய உலகை நோக்கிக் காத்திருக்கின்றது. சிவபெருமானது துணை சீவனுக்குக் கிட்டியவுடன் விஷயப் பற்றுக்கள் எல்லாம் நீங்கிவிடும் என்னும் கருத்தைக் குருகு உருவகம் மூலம் விளக்கியுள்ளார் திருமூலர்.

'ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்கும்' இயல்புடையது கொக்கு. சாதகன் ஊர்த்துவ திருஷ்டியோடு பொறுமையாக இருந்தால் ஒளிபெற்றுப் பல்லாண்டு வாழலாம் என்பதை விளக்குவதற்குத் திருமந்திரம் கொக்கினை உவமையாக்குகிறது:

> கடைவாச லைக்கட்டிக் காலை எழுப்பி
> இடைவாசல் நோக்கி இனிதுள் இருத்தி
> மடைவாயிற் கொக்குப்போல் வந்தித் திருப்பார்க்
> குடையாமல் ஊழி இருக்கலு மாமே[122]

என்னும் திருமந்திரப் பாடல் மேற்சொன்ன வாழ்விற்கு வழி காட்டுகிறது. கடைவாசல் அடைப்பது என்பது மூலாதாரத்தை அடைத்தல்; கீழ்நோக்கும் அபானனை எழுப்பி, சுழுமுனையாகிய இடைவாயிலில் மனத்தினைப் பொருந்தச் செய்வது என்பது இரண்டாமடியின் விளக்கம். பின், சீவன் இறையுணர்வோடு நிற்றல் வேண்டும். பசியால் வாடியிருக்கும் கொக்கு ஓடும் சிறுமீன்கள் எதிரில் வரினும் அவற்றை ஏற்றுக் கொள்ளாமல், தன் பசிக்கேற்ற உறுமீன் வருமளவும் காத்திருந்து கொத்திச் செல்லும்; அதுபோல், சீவனும் பிராணாயாமம் செய்யும் போது முதன்முதலில் ஏற்படும் ஒளித்துளியைக் கண்டவுடன் அதனை நிறுத்திவிடாமல் தொடர்ந்து முயன்று இறைச் சிந்தனையோடு இருந்தால் ஒளியுடல் பெற்று ஊழிக்காலம் இருக்கலாம். இங்கு, இகவாழ்விற்கு உணவு தேடும் கொக்கின் செயல், பரவாழ்விற்கு உணவு தேடும் சாதகனுக்கு உவமமாகின்றது. பிராணாயாமம் செய்யும் சாதகன் மனம் புறவுலகில் அலையாது இறைச் சிந்தனையுடன் சுழுமுனையில் பதிவுற்றிருக்க வேண்டியதன் இன்றியமையாமையை இந்த உவமை நன்கு உணர்த்துகிறது.

7. காக்கை

காக்கை, குயில் முதலிய புட்கள் விடியற்காலையில் இளங்கதிரவனின் ஒளிகண்டவுடன் ஒலி எழுப்புவன. இந்த ஒலியினைத் திருமந்திரம் கருத்து விளக்கத்திற்குப் பயன்படுத்திக் கொண்டுள்ளது.

சீவனின் அகவிருள் நீங்கி ஒளி ஏற்படப் பிராணாயாமத்தால் குண்டலினி கீழிருந்து மேலே ஏறி ஆறு ஆதாரங்களிலும்

பொருந்துமாறு செய்தல் வேண்டும்; அப்பொழுது சீவனது உடலில் ஒளி தோன்றும். இது புறவிருள் நீங்கிக் கதிரொளி தோன்றுவதற்கு ஒப்பானது. சீவன் சிவனாகும் நோக்கத்துடன் இருக்கும்பொழுது சிவனின் கூறுகள் படிப்படியாகச் சீவன்மீது படிகின்றன; இந்நிலை சீவனுக்கு ஏற்படுமுன், சீவன் யோக நிலையில் உள்ளபொழுது ஓர் ஒலி சீவனது உடலில் தோன்றுகிறது. இதனையே 'புட்கள் சிலம்ப' என்னும் தொடர் உணர்த்துகிறது. பாடல் பின்வருமாறு:

புலர்ந்தது போரதென்று புட்கள் சிலம்பப்
புலர்ந்தது போதென்று பூங்கொடி புல்லிப்
புலம்பி னவளோடும் போக நுகரும்
புலம்பனுக் கென்றும் புலர்ந்திலை போதே [123]

இதில் 'பூங்கொடி புல்லி' என்னும் தொடர், குண்டலினி யோகத்தில் மேலேறி இறையின்பத்தில் ஆன்மா திளைப்பதைக் குறிக்கிறது. சிவானந்தத்தில் திளைப்பவருக்கு இரவு என்பது ஏற்படாது; அறியாமை நீங்கும்; சீவன் ஒளிமண்டலத்தில் திளைத்துச் சிவனாகும்; இரவுபகலற்ற நிலையாதலால் பொழுது புலரவேண்டிய நிலையில்லை. இதனை உணர்த்த 'புலர்ந்திலை போதே' என்கிறது திருமந்திரம். ஈண்டு,

> ''புலர்தல்— ஒளி தோன்றுதல். புட்கள்— சிவதத்துவம். சிவதத்துவத்தில் மகேசுவரத்தில் ஒளியும், சாதாக்கியத்தில் ஒலியும் உள்ளன. நாத உதிப்பே சாதாக்கிய மண்டல விழிப்பு என்க.'' [124]

என்று ஜி. வரதராஜன் குறிப்பது கவனிக்கத்தக்கது. இந்த ஒலி, ஒளி ஆகிய நிகழ்ச்சிகளைக் காலை நேரத்தில் காக்கை, குயில் முதலான புட்கள் எழுப்பும் ஒலிகளோடும், கதிரவனின் ஒளியோடும் ஒப்புமை காட்டியுள்ளார் திருமூலர்.

குயிலின் முட்டையைக் காக்கையின் கூட்டில் இட்டால், அது குயிலின் முட்டை என்றறியாது வளர்ப்பது இயல்பு. இதனை உவமையாக்கி ஆசிரியர் ஓர் அரிய கருத்தினைப் பின்வரும் பாடலில் விளக்கியுள்ளார்:

குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக்கூட் டிட்டால்
அயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின் றதுபோல்
இயக்கில்லைப் போக்கில்லை யேனென்ப தில்லை
மயக்கத்தால் காக்கை வளர்க்கின்ற வாறே [125]

இறைவன் தன் அருளாலும் விருப்பத்தாலும் ஆன்மாக்களின் வினைக்கேற்ப ஓர் உயிரைத் தந்தையின் உடலில் இரண்டு மாதமும், தாயின் வயிற்றில் பத்து மாதமும் வளரச்

செய்கின்றான். இறைவனுக்குரிய ஆன்மா தாயின் உடலாகிய கூட்டில் தூல உடல் பெறுதற் பொருட்டு வந்து தங்கியிருக்கின்றது என்னும் உண்மையை உணராது தாய் தந்தையர் பாசத்தின் பிணைப்பில் சிக்கியிருப்பர். குயிலின் முட்டையைக் காக்கை வளர்ப்பது போன்றது இது. மக்களின் அறியாமையை நினைத்தும், பற்றற்ற உள்ளம் இல்லாதவர்களாக அவர்கள் இருக்கின்றனரே என்று கருதியும், அவர்களின் பாசம் நீங்காமையைக் கண்டு வருந்தியும் இப்பாடலை இயற்றியுள்ளார் ஆசிரியர்.

8. குயில்

குயிலின் குரல் இனிமையானது; அதைப் போன்ற இனிய ஒலி தோன்றும் இடம் மூலாதாரம் ஆகும். இதனை,

உயிர்க்கின்ற வாறும் உலகமும் ஒக்க
உயிர்க்கின்ற உள்ளொளி சேர்கின்ற போது
குயிற்கொண்ட பேதை குலாவி யுலாவி
வெயிற்கொண்டென் உள்ளம் வெளியது வாமே [126]

என்னும் திருமந்திரப் பாடல் குறிப்பிடுகின்றது.

உலகம் இயங்குவதற்குக் காரணமாயுள்ள பராஃபரத்தின் உயிர்ப்பும், பிராணாயாமத்தினை மேற்கொள்ளும் சீவனின் உயிர்ப்பும் இணையும்போது மூலாதாரத்திலுள்ள சக்தி நாதத்தைக் குயிற்குரல்போல் எழுப்பிச் சீவனின் உள்ளத்தில் ஒளியாகப் பொருந்திச் சூக்கும உடலைத் தனித்து வெளியாகச் செய்வாள் என்பது இப்பாடலின் கருத்து. இதில் 'பேதை' என்பது வாலை ரூபமான மூலாதார சக்தி; 'குலாவுதல்' என்பது நாதத்தை எழுப்புதல்; 'உலாவுதல்' என்பது சீவனின் உடலில் உணர்வாகப் பரவுதல்.

9. மயில்

சிற்றின்பத்தால் ஏற்படும் இன்ப நிலையைக் காதலர் எவ்வாறு பிறருக்கு எடுத்தியம்ப இயலாதோ அவ்வாறே சீவன் முத்தரின் பேரின்ப நிலையையும் விளக்கிக் கூறமுடியாது. எனவே, பராசக்தி சீவர்களுக்குத் தரும் பேரின்பப் புணர்வினை,

குத்து முலைச்சி குழைந்த மருங்கினள்
துத்தி விரிந்த சுணங்கினள் தூமொழி
புத்தகச் சீறடிப் பாவை புணர்வினைத்
தொத்த கருத்துச் சொல்லகில் லேனே [127]

என்று புலப்படுத்துகிறது திருமந்திரம். அழகும் இளமையும் தூமொழியும் மயில்தோகை போன்ற மென்மையான சீறடிகளையும் உடைய பராசக்தியுடன் சேர்ந்திருந்தபோது ஏற்பட்ட

சிவானந்தமாகிய பேரின்பத்தை எடுத்துச் சொல்ல முடியாது என்கிறார் திருமூலர். இங்குப் 'புத்தகச் சீறடி' என்னும் தொடர் அம்மையின் மயில்தோகை போன்ற மென்மையான பாதங்களைக் குறிக்கின்றது.

நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம் [128]

என்று தொடக்கத்தில் கூறி, ஆசிரியர் தாம் உணர்ந்த இறையின்பத்தைப் பிற உயிர்களும் உணர்ந்துகொள்வதற்காக யோக நிலையிலிருந்து மூவாயிரம் பாடல்களைப் பாடியதாகத் தம்மை அகப்படுத்திக் கூறியுள்ளார். அவ்வாறு சொல்லும் பொழுது உடலமைப்பு, வாழ்க்கை முறை, சிற்றின்பம், அழிவு நிலை, பிராணாயாமம், அதனால் கிட்டும் பேரின்பம், வீடுபேறு ஆகியன பற்றி விரித்துச் சொல்கிறார். சிற்றின்பம் போன்றதே பேரின்பமும் என்று உலக மக்கள் அறியுமாறு கூறுகின்றார் திருமூலர். ஏனெனில் சிற்றின்பம் நுகராத சீவன் இல்லை. 'உவமை என்பது தெரிந்த ஒன்றைக் கொண்டு தெரியாத ஒன்றை விளக்குவது' [129] என்பதற்கொப்ப ஆசிரியர், எல்லாச் சீவன்களும் உணர்ந்த சிற்றின்பத்தைக் காட்டிப் பேரின்பத்தை விளக்கு கின்றார்.

சிற்றின்பத்தை நுகர்ந்த தலைவன் தலைவியர் தாம் நுகர்ந்த தன்மையை வாயினால் எடுத்தியம்ப முடியாதது போன்றே, சக்தியினருளால் குண்டலினியை மேலேற்றிச் சகஸ்ரதளத்தில் உள்ள சிவத்துடன் சக்தியைச் சேர்ப்பதால் சீவன் சிவனாகும் பேரின்ப நிலையும் விளக்கிக் கூற முடியாததாகும். சிற்றின்பத்தை அனுபவத்தால் உணர்தல் போன்று, பேரின்ப நிலையைப் புலன் களையும் மனத்தையும் கட்டுப்படுத்திப் பிராணாயாமம் செய்து அடையவேண்டும். மற்ற வகையில் சிவானந்தம் இத்தகையது என்று எடுத்துச் சொல்ல முடியாது. எனவேதான் திருமூலர் இப்பாடலில், மயிலின் தோகை போன்ற மென்மையான பாதங்களையுடைய சக்தியுடன் சேர்ந்து தாம் பெற்ற பேரின்ப அனுபவத்தையும் எடுத்துச் சொல்ல முடியவில்லை என்கிறார்.

இறைவனை அடைவதற்கு அவனது திருவடிகளைப் பற்றுக் கோடாகக் கொள்வதே சிறந்ததாகும். திருக்குறள் 'கடவுள் வாழ்த்து'ம் இறைவனது 'அடி' பற்றிப் பேசுகிறதே அன்றிப் பிற உறுப்புகள் பற்றிப் பேசவில்லை. [130] உரைப்பாயிரத்தில் பரிமேலழகர்,

''இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமிலின்பத் தழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு

> உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. அவற்றுள், வீடென்பது சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது இலக்கண வகையாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்'' 131

என்று கூறுவர்; அதனால், துறவற நெறியினைப் பலரும் பின்பற்ற வில்லை என்பதும், பின்பற்றுவாரும் காரணவகையான், அதாவது பிறவி நீக்கற் பொருட்டாகிய காரணவகையான் குருபரம்பரை யாகப் பயிலப்பட்டது என்பதும், இலக்கண முறையில் எடுத்துச் சொல்லப் படாததாய் இருந்தது அது என்பதும் அறியப்படும். எனவே, இத்தகைய பேரின்பத்தை முதன் முதலில் ஓராற்றான் விளக்க முற்பட்ட திருமூலர் அதனைச் சிற்றின்பம் என்பதனோடு ஒப்பிட்டு நோக்குகிறார். சிற்றின்பம் சிறிது நேரத்தது என்றும், இளமை அழிந்து முதுமையடைந்தவர் அடைய முடியாதது என்றும் கருத்திற் கொள்ளுமாறு செய்து, பேரின்பம் சிற்றின்பம் போன்றது என்றாலும் நீண்ட நேரத்திற்கு நிலைபெறக் கூடியது என்றும், அதில் திளைப்பவர் முதுமையடையாது இளமை யுடனிருந்து அரிய சக்திகளைப் பெற்று, இறுதியில் இறைவனுடன் இணைந்து விடுவர் என்றும் உணரவைக்கிறார். இதனை,

> **முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்**
> **அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்**
> **மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய**
> **சுகத்தைச் சொல்லென்றாற் சொலலுமா றெங்ஙனே** 132

என்னும் பாடலிலும் வலியுறுத்துகின்றார். தாய் தன் கணவனுடன் பெற்ற இல்லற இன்பத்தை மகளுக்கு எவ்வாறு விளக்கிச் சொல்ல முடியாதோ அவ்வாறே இறையின்பமும் பிறருக்கு எடுத்துரைக்க முடியாதது என்பது திருமூலர் கருத்து. இப்பாடலிற் கூறப்படும் தாய், மகள் உறவு போன்றதே குரு, சீடன் உறவு. இறையின்பத்தை முகக்கண்களால் புறவுலக உணர்வுடன் காண முடியாது; அகக்கண்களால் கண்டு இன்புறல் வேண்டும். தம் உடலில் தாமடைய வேண்டிய இன்பத்தைப் புறத்தில் சொல்லுமாறு கேட்பவரும் மூடர் ஆவர். எனவே, இறையின்பம் பயிற்சியால் பெறவேண்டிய மென்மையான அனுபவ உணர்வு; அதனால்தான் மென்மையான மயில்தோகை போன்ற திருவடிகளையுடைய பராசக்தியிடம் பெறும் இன்பமும் மென்மையானது என்று உணர்த்துகிறார்.

10. அன்னம்

சீவன் சிவ சிந்தனையுடன் இருந்தால், சிவன் சீவனது சிதாகாயத்தில் நடனமிடுவான்; சிவனது நடனத்தால் ஏழேழ் பிறவிகளாகச் சீவனைத் தொடர்ந்து வரும் இருவினைகளாகிய வித்து வறுக்கப்படும்; அதனால் சீவன் மலமற்றுத் தூய்மை யடைகிறது சிவன் சீவனிடத்துள்ள வினைகளைப் பிரிப்பது, அன்னம் நீரிலிருந்து பாலைப் பிரிப்பது போன்றதாகும் என்கிறது திருமந்திரம். இதனை,

> ஆமேவு பால்நீர் பிரிக்கின்ற அன்னம்போல்
> தாமே தனிமன்றில் தன்னந்தனி நித்தம்[183]

என்னும் அடிகள் உணர்த்துகின்றன.

இறைவனை அடைதற்குரிய நான்கு நெறிகளில் இரண்டாவ தாக இடம்பெறும் நெறி கிரியை. வண்டு, அன்னம் ஆகியவற்றை உவமையாகக் கொண்டு கிரியையின் சிறப்பை நவில்கிறார் திருமூலர்:

> அறுகாற் பறவை அலர்தேர்ந் துழலும்
> மறுகா நரையன்னம் தாமரை நீலங்
> குறுகா நறுமலர் கொய்வன கண்டும்
> சிறுகால் அறநெறி சேர்கி லாரே[186]

என்னும் திருமந்திரம் கிரியையாளர் அன்னம் போன்று ஒரு நெறியில் நின்று வழிபட்டு மேன்மை அடைவர் என்பதை உணர்த்துகிறது. வண்டு பற்பல மலர்களிலும் சென்று தேனை உண்டு சேர்க்கும்; இக்காட்சியைக் கண்ட பின்னரும் அன்னம் தான் வாழும் தாமரை மலரை விட்டுக் கவர்ச்சி மிக்க நீலோற்பல மலரை நாடிச் செல்வதில்லை; அதுபோல கிரியை நெறியை மேற்கொண்டவர்கள் இறைவழிபாடு செய்வதையே தம் தொண்டாகக் கருதி அதிலேயே ஈடுபடுவர். ஆனால் உலக வாழ்வில் விருப்பமுடைய பிறரோ மலருக்கு மலர் தாவும் வண்டினைப் போலப் பலவழிகளிற் சென்று வீணாகின்றனர்.

இறைவழிபாட்டின் இன்றியமையாமையையும், கிரியை நெறியின் பெருமாண்பையும் அன்னப் பறவை வாயிலாகத் திருமந்திரம் சிறப்பான முறையில் வெளிப்படுத்தியுள்ளது.

11. முட்டை

பறவைகளை உவமையாக வைத்துக் கருத்துகளை விளக்கியது போலவே அவற்றின் முட்டைகளையும் நினைவு கூர்ந்துள்ளார் திருமூலர். மனிதப் பிறவியைப் பற்றிச் சொல்லும் பொழுது,

முட்டை பிறந்தது முந்நூறு நாளினில்
இட்டது தானிலை ஏதேனும் ஏழைகாள்[135]

என்று கூறுகிறார். மீன் முட்டையைப் போல் கருப்பையில் உயிருடன் சேர்ந்த உடம்பு உள்ளது; முந்நூறு நாட்களில் அது வெளிப்படுகிறது. இருப்பினும் உயிரின் விருப்பப்படி உடல் அமைவதில்லை; வினைக்கேற்பவே அமைகிறது. உலக மாயையால் பீடிக்கப்பட்ட முட்டையாகிய உடல் கெடுவதால் உயிர் மீண்டும் தனித்துச் செல்கின்றது. எனவே அழியக்கூடிய உடலை நிலை என்று எண்ணவேண்டா என்று யாக்கை நிலையாமையைக் கூறுகிறது திருமந்திரம்.

மூன்று மடக்குடைப் பாம்பிரண் டெட்டுள
வேன்ற வியந்திரம் பன்னிரண் டங்குலம்
நான்றவிம் முட்டை யிரண்டையும் கட்டியிட்
டூன்றி யிருக்க உடம்பழி யாதே[136]

என்னும் திருமந்திரப் பாடலும் முட்டையை நினைவுபடுத்துகிறது. இவ்வுடல் மூலாதாரம், சுவாதிட்டானம் ஆகிய இரண்டும் பிரமன் ஆட்சிக்குட்பட்ட முதல் மடக்கு; மணிபூரகம், அநாகதம் இரண்டும் திருமால் ஆட்சிக்குட்பட்ட இரண்டாம் மடக்கு; சுழுத்தி, ஆஞ்ஞை ஆகிய இரண்டும் உருத்திரன் ஆட்சிக்குட்பட்ட மூன்றாம் மடக்கு. இம்மூன்று மடக்குகளும், சூரிய கலை சந்திர கலை ஆகிய இரண்டும், எட்டும் (அ—அகரம்) பாம்பைப் போன்று பின்னிப் பிணைந்துள்ளன. இவ்வுடம்பு பன்னிரண்டு அங்குலம் ஓடும் பிராணனால் இயக்கப்படுகின்றது. மனிதரது உடல் பிராண ஓட்டம் நின்றதும் இயங்குவதில்லை; பிராண இயக்கத்தைச் சீராக்கக் குருவின் துணையோடு கீழ்முகமாகச் செல்லும் சந்திர சூரியனாகிய இரு கண் பார்வையும் ஒன்று சேருமாறு செய்து, பிராணனும் குண்டலினியும் பிரமரந்திரத்தில் சென்று மோதும்படிச் செய்தால் பிராணலயம் கிட்டும்; அழியக் கூடிய உயிருடம்பாகிய முட்டையை, இரண்டு முட்டைகளாக விளங்கும் சூரிய சந்திரர்களான கண்களின் உதவியால் சீர்பெறச் செய்து அழியாததாக்க வேண்டும். உயிருடம்பு முட்டை போன்ற ஒரு துளி விந்தினின்று உருவாகும் காரணத்தால் அதனை முட்டை என்று அழைக்கின்றது திருமந்திரம். வெண்ணிறம், வட்டவடிவம் ஆகியனகொண்டு கண்கள் முட்டை எனப்பட்டன.

தாவரங்கள்

சித்தர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை நடத்தியவர்கள். அவர்கள் தம் வாழ்வினை மருத்துவராகவும், சித்தராகவும், இருடிகளாகவும், ஞானியராகவும் அமைத்துக்கொண்டு சமுதாயத்திற்குப் பேருதவி புரிந்தனர். உலக நன்மையைக் கருதியும், தவமிருப்பதற்கு ஏற்ற தனிமையைக் கருதியும் ஊருக்குப் புறத்தேயிருந்த காடுகளில் வாழ்ந்தனர்; மக்களுக்கு மனித நேயத்தோடு அறிவுரை கூற முற்பட்டபோது அவர்களோடு கலந்தும் வாழ்ந்தனர். காடு, மலை, குகை என அவர்கள் தங்கியிருந்த இடங்களில் வளர்ந்த தாவரங்களை அறிவியல் நுட்பத்தோடு ஆய்ந்தனர்; தாவரங்களின் இயல்புகளையும், வளர்ச்சிநிலைகளையும், அமைப்புகளையும் கருத்திற்கொண்டு சில உண்மை விளக்கங்களை மக்களுக்கு வழங்கினர். திருமந்திரமும் தாவரங்கள் வாயிலாகப் பல வாழ்வியல் உண்மைகளை எடுத்துக் கூறுகின்றது.

1. நிலம்

நிலம் பண்பட்டிருந்தால்தான் பயிர் செழித்து வளரும்; அதன் பயனும் நிறைவுடையதாக இருக்கும். நிலத்தை மூன்றாகப் பிரித்து ஓர் உண்மையைச் சமுதாயத்திற்கு உணர்த்துகிறது திருமந்திரம். பள்ளமான நிலம் 'பள்ளச்செய்' எனப்படும்; பயன்படாது பாழான நிலம் 'பாழ்ச்செய்' எனப்படும்; காண்பதற்கு அருமையான நிலம் 'கள்ளச்செய்' எனப்படும். இவற்றை,

> பள்ளச்செய் யொன்றுண்டு பாழ்ச்செய் இரண்டுள
> கள்ளச்செய் அங்கே கலந்து கிடந்தது
> உள்ளச்செய் யங்கே உழவுசெய் வார்கட்கு
> வெள்ளச்செய் யாகி விளைந்தது தானே [137]

என்னும் திருமந்திரப் பாடல் சுட்டுகிறது.

இப்பாடலில் பயனில்லாத சுழுத்தி 'பள்ளச்செய்' என்றும், நன்மை விளைவிக்காத சாக்கிரம், சொப்பனம் ஆகிய இரண்டும் 'பாழ்செய்' என்றும், காண்பதற்கரிய ஒன்றான ஆன்மா 'கள்ளச்செய்' என்றும் உருவகிக்கப்பட்டுள்ளன. ஆன்மா உள்ளமாகிய நிலத்தில் பொருந்திச் சிவத்தொண்டு செய்ய முற்பட்டால் பள்ளச்செய்யும் பாழ்ச்செய்யும் நல்ல செய்யாக மாறும்; ஆன்மா கள்ளத்தனத்தைக் கொண்ட காரணத்தால் அது 'கள்ளச்செய்' எனப்பட்டது; நல்ல விளைநிலமாக மாறியபின் அங்கே இடகலை, பிங்கலை ஆகிய ஏற்றங்கள் பயிர் வளர்வதற்குரிய நீரை இறைக்கின்றன; இந்நீர் ஏழாதாரங்களிலும் ஊறுகின்றது.[138]

பயிர் செழித்து வளர்வதற்கு நிலம் பண்பட வேண்டும்; சிவப் பயிர் செழித்து வளர்வதற்கு மனம் என்னும் நிலம் செம்மையாக இருத்தல் வேண்டும்.[139] பண்பட்ட நிலத்தில் (மனத்தில்) இறைவனை வணங்குபவர்கள் பேரின்பமாகிய நல்ல விளைச்ச லைப் பெறுவர். பிரமன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் ஆகிய ஐவரும் சிவப்பயிர் வளர்வதற்கு ஏற்ற உடலில் உள்ள உயிருக்கு வினைப்பயனைத் தருவர். இறுதியில் இவ்வுடம் பிற்கு உரிய காலம் முடிந்துவிட்டது என்னும் சிவனது ஆணை வந்தவுடன், உடலைக் காவல் காத்தவர் அதனை விட்டு விலகுவர்.[140] உடலுக்கு அழிவேற்பட்ட பின்னர் உயிர் தனித்து இறையனுபவம் பெற இயலாது என்பதால், உடலில் உயிர் இருக்கும்போதே சிவனை நினைத்து மனத்தினைப் பண்பட்ட விளைநிலமாக மாற்றிக் கொள்ளல் வேண்டும்.

கரையரு காறாக் கழனி விளைந்த
திரையரு காமுன்னம் சேர்ந்தின்பம் எய்தும்[141]

என்னும் திருமந்திர அடிகள் சுக்கிலத்தை 'விளைநிலம்' ஆகக் காட்டுகிறது. இச்சுக்கிலம் வீணாகாமல் இடைகலை, பிங்கலை ஆகிய கரைகள் காக்கின்றன; அதாவது சுக்கிலமாகிய விந்து வீணாகாமல் இடை, பிங்கலைகளாகிய கரைகளால் பிராணா யாமம் செய்தால் நீர் தேங்கிச் சிவப்பயிர் வளரும்.

களர்நிலத்தில் பயிர்செழித்து வளர்ந்து பயன்தருவதில்லை; அதைப்போல விளங்குவதே பக்குவப்படாத ஆன்மாவின் சிற்றின்ப வேட்கை. மனித வாழ்வு பயனுடையதாக விளங்குதற்குச் சிற்றின்பத்தை ஒதுக்கிப் பேரின்பத்தில் நாட்டம் கொள்ள வேண்டும். இதனை உட்கொண்டு திருமூலர்,

களருழு வார்கள் கருத்தை அறியோம்
களருழு வார்கள் கருதலு மில்லை[142]

என்று பாடுகிறார். அடயோகமாகிய களர்நிலத்தில் சாதனை யாகிய உழவினைச் செய்பவர்கள் எண்ணத்தை அறிய முடிய வில்லை; அவ்வாறு ஏன் செய்கிறோம் என்று அவர்களும் எண்ண வில்லை என்பது இவ்வடிகளின் கருத்து. நிலம் செம்மையாக விளங்க உழவும் சிறப்பாக இருக்குமானால் விளைச்சல் மிகுதி யாகக் காணப்படும். சிவப்பயிர் வளர்வதற்கான ஞான உழவாகிய தவம் வேண்டும்; அப்போது பேரின்ப விளைச்சல் இனிது கிட்டும்.

உழவொன்று வித்து ஒருங்கின காலம்[143]

என்னும் திருமந்திரப் பாடல் இதனை விளக்குகிறது.

பேரின்பமாகிய பயனை விரும்புவோர், நன்னிலமாகிய மனத்தில் தியானமாகிய உழவினை முயன்று செய்தால், தவம் கைவரப் பெற்று, இறைவனோடு ஒன்றுவதற்கு வழியுண்டு என்னும் கருத்தினை, உழவையே பெரிதும் செய்துவந்த தமிழருக்கு அவர்கள் உள்ளம் ஏற்றுக் கொள்ளும்வண்ணம் உவமையாகவும் உருவகமாகவும் எடுத்துச் சொல்லியுள்ள திருமூலரின் திறம் எண்ணி மகிழத் தக்கதாகும்.

2. வித்து

நல்ல விளைநிலத்தில் சிறந்த வித்து விதைக்கப்படல் வேண்டும். சில வித்துக்கள் விதையாக இருக்கும்; சில கிழங்காக அமையும்.[146] விதைகள் சிறியதாக இருந்தாலும் பின்னர் மரமாகும்பொழுது மிகப் பெரிய உருவம்பெறும். வறுக்கப்பட்ட வித்து,[145] குற்றப்பட்ட வித்து,[146] விற்கப்பட்ட வித்து[147] என்று வித்துக்கள் பல வகைகளாகத் திருமந்திரத்தில் குறிக்கப் பட்டுள்ளன.

வித்துக்கள் பாவ புண்ணியங்களாக உருவகிக்கப்படுகின்றன; இவை முளைக்காமல் இருக்க வேண்டுமானால் வறுக்கப்பட வேண்டும்; வறுக்கப்படுவது என்பது இறைவனது நடனம் சீவனுள் திகழ்வது; இது விந்துசெயம் பெறுதலைக் குறிக்கும்; வித்தினைக் குற்றி உண்பது என்பது இல்லறவாழ்வில் விந்தினை வீணாக்குவது; சிற்றின்பத்தில் ஈடுபடுவது. வித்தினைச் சுட்டு உண்பது என்பது அடயோக நெறியில் முத்திரைகளைச் செய்து விந்தினை வற்றச் செய்தல். இவற்றால் இறைவனை ஊனுடம்பில் காணும் பயன் கிட்டாது.[147a]

விந்துசெயம் பெற்றவர்க்குப் பிறவியில்லை; விந்துசெயம் பெறாதவர் பிறவியில் உழலுவர். அத்தகையோர் பிறவியைத் திருமந்திரம் பின்வருமாறு பேசுகிறது:

> **அத்திப் பழமும் அறைக்கீரை நல்வித்தும்**
> **கொத்தி உலைப்பெய்து கூழட்டு வைத்தனர்**
> **அத்திப் பழத்தை அறைக்கீரை வித்துண்ணக்**
> **கத்தி எடுத்தவர் காடுபுக் காரே**[148]

இதில் அத்திப்பழம் என்பது பெண்முட்டை (சுரோணிதம்); அறைக்கீரை வித்து என்பது விந்து (சுக்கிலம்). இரண்டையும் தாயின் வயிறாகிய உலையில் பெய்யச் செய்து, கருவாகிய கூழை வளரச் செய்தனர். சுக்கில, சுரோணிதங்களின் கலப்பால் உண்டானவர் மாண்டார் என்பது இப்பாடலின் கருத்து.

அறைக்கீரை வித்து மிகவும் சிறியது; அஃது எளிய கீரையினைத் தருகிறது. ஆனால், அதனினும் சிறிய ஆலம் வித்து பெரிய மரம் உருவாகக் காரணமாகிறது. அதுபோல, ஆலம் விதைக்கிணையான மிகச்சிறிய ஆன்மாவில் பாசங்களும், அதற்குரிய தன்மைகளும் அடங்கியிருக்கின்றன.[149]

ஆன்மாவாகிய விதை வளரும் இடம் உடம்பாகிய நாற்றங் கால்; இதில் வளர்ந்த நாற்றே உரிய காலத்தில் வயலில் நடப்படும். வளர்ந்த பயிரில் விதை மறுபடியும் தோன்றும். இந்த விதை இருவினை எனத்தகும். இவ்வினைகளை நீக்கத் தெரியாது மக்கள் வருந்துகின்றனர். உலகில் பொருளில்லார் வயிற்றை நிரப்புதற்குக் கடன் வாங்கியேனும் நெல்லைக் குற்றி உணவாக்கி உண்பர். ஆனால், உழைப்போர் வரவுக்கேற்ற செலவு செய்து கடனின்றி வாழ்க்கை நடத்துவர். எனவே திருமந்திரம்,

> கடன்கொண்டு நெற்குத்துக் கையரை யூட்டி
> உடம்பினை யோம்பி உயிராத் திரிவார்[150]

என்று கூறுகிறது. 'கையர்' என்னும் சொல் கயவர் என்னும் பொருளைத் தரும். "அறியா மக்கள் கடன்வாங்கியேனும் நெல்லைப் பெற்றுக் குத்தி உண்டு, கயவராகிய பொறிகளைத் திருப்தி செய்து, உடம்பை வளர்த்து, அவ்வுடம்பே உயிரென மதித்துத் திரிவர்" என்பது இதன் பொருள். இறைவனை நினையாது உடம்பை நினைத்துப் போற்றிக் கெடுகின்றனரே என்று அறிவிலாரை எண்ணி இரங்கி இவ்வாறு பாடுகின்றார் திருமூலர்.

ஞான சாதனையால் வைராக்கியம் ஏற்பட்டு ஆன்மலாப மாகிய சிவக்கனி கிட்டும் என்பதை ஓர் அரிய பாடலால் தெளிய வைக்கிறார் திருமூலர். அது,

> வழுதலை வித்திடப் பாகல் முளைத்தது
> புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது
> தொழுதுகொண் டோடினார் தோட்டக் குடிகள்
> முழுதும் பழுத்தது வாழைக் கனியே[151]

என்னும் பாடலாகும். வழுதலை என்பது கத்தரி விதை; ஞான சாதனையின் முதல் துடிப்பு இவ்விதையாக உருவகிக்கப்படுகிறது; இது சாதகனின் புருவ நடுவில் தோன்றுவது. ஞானத்தின் முதல் ஒளியாக உள்ள கத்தரிவிதை சாதகன் கொண்ட வைராக்கியத்தின் வெளியீடாகக் கசப்பான பாகற்கொடியாக முளைக்கிறது; மேலும் தத்துவ ஆராய்ச்சியைச் சாதகன் மேற்கொள்ள—

அதாவது புழுதியைத் தோண்ட— பூசணி மலர் பூத்தது; பூசணி மலர் என்பது சகஸ்ரதளம் ஆகும். பின்னர், சாதகனின் உடலில் ஒலி (நாதம்) தோன்றுகிறது. இறுதியில் ஞான சாதனையில் வாழ்வில் தலைமை அளிக்கும் வாழைக்கனி கிட்டுகிறது.

எனவே, விளைநிலத்தைப் பக்குவப்படுத்தி, இடை, பிங்கலைகளாகிய ஏற்றத்தின் மூலம் ஏழு ஆதாரங்களிலிருந்து பிராணாயாமமாகிய நீரை இறைத்தால் ஞான சாதனையின் விதையான வழுதுணைவிதை ஒளித்துளியாகத் தோன்றுகின்றது; இவ்வொளியே வளர்ந்து இறுதியில் வாழ்வின் தலைமைப் பேறான வீடுபேறும், அதன் பயனாகிய சிவப்பேறும் கிட்டுகின்றன. ஈண்டு,

> "வழுதலை— கத்தரி. கத்தரிவிதை மிகவும் சிறியது. ஞான சாதனையில் முதலில் தோன்றுவது புருவ நடுவில் சிறிய துடிப்பாம். பாகல்— பாகற்கொடி. பாகற்காய் மிகவும் கசப்புடையது. வைராக்கியமும் உலகக் கசப்பால் தோன்றுவது. தோட்டக்குடிகள் ஓடுதல் என்பது, ஐம்பத்தோர் அக்கரங்களும் வெவ்வேறாகத் தொழிற் படுவதைவிட்டு நாத ரூபமாகச் சிரசில் வெளிப்படுவது என்றபடி. பூசணி— பூசணி மலர். இது மஞ்சள் நிறமுடையது. ஞான சாதனையில் சிரசின் மேல் விளங்குவது மஞ்சள் ஒளி. வாழ்— ஐ— கனி— வாழைக் கனி— வாழ்வில் தலைமை அளிக்கும் கனி, சிவம்[152]

என்று ஜி. வரதராஜன் அவர்கள் தரும் விளக்கம் கவனிக்கத் தக்கது.

வேறொரு பாடலில் விந்துமண்டலம் வெள்ளரிவிதையாக உருவகிக்கப்படுகின்றது. வெள்ளரிப் பழத்தின் விதை வெண்மையாக இருத்தலைப் போன்று சாதகன் உடலில் வெண்மையான விந்து மண்டலம் அமைந்துள்ளது. வெள்ளரி விதையை வினையாகவும், அவ்விதை விளையும் இடம் நாற்றங்காலாகவும் சுட்டப் படுகின்றது. பிறவிகள்தோறும் தொடரும் வினை வளர்வதற்குரிய வயல் உடலாகும். இவ்வுடலாகிய வயலில் கீழ்முகமாகும் பிராண சக்தியை மேல்முகமாக்கிச் சிவதத்துவத்தில் விருப்பம்கொண்டு ஆன்மதத்துவத்தை விலக்கினால் விந்து வற்றி வெண்ணிறமான ஒளிமண்டலம் அமையும். இதனை,

> அரிக்கின்ற நாற்றங்கால் அல்லற் கழனி
> திரிக்கின்ற வொட்டஞ் சிக்கெனக் கட்டி
> வரிக்கின்ற நல்லான் கறவையைப் பூட்டில்
> விரிக்கின்ற வெள்ளரி வித்துவித் தாமே[153]

என்னும் திருமந்திரப் பாடல் விளக்குகின்றது.

முற்றாத விதையைப் 'பொய்வித்து' என்பது உலகவழக்கு. பொய் வித்தினைப் பண்பட்ட வயலில் உரிய பருவகாலத்தில் விதைத்தாலும் முளைவிடாது. ஓரிரண்டு முளைத்தாலும் நன்கு வளர்ந்து பயன்தராது. அதைப்போல, உலகில் மனிதனாகப் பிறந்து நன்முறையில் வாழ்ந்தாலும் பிராண, அபான இயக்கம் இல்லையெனில் ஐம்புலன்களும் உலக இன்பங்களை நுகர முடியாது. இவ்வுண்மை உணர்ந்து பேரின்பத்தை விரும்பும் மனிதன் பிராண, அபான இயக்கத்தைக் கட்டுப்படுத்திப் புலனுகர்ச்சியைத் தவிர்த்து வாழ்ந்தால் பயனுடைய வாழ்வைப் பெறுவான். உடலாகிய வித்து நாவல் மரமாக வளர்ந்து இறுதியில் புலனடங்கிப் பேரின்பம் நுகருமாயின் அவ்வுடலும் ஆன்மாவும் மெய்வித்தாகும்; இன்றேல் பொய்வித்தாகிப் பயனற்றுவிடும். இறுதியில் இவ்வுடல் வெந்து அழியப் போகின்றது என்பதனை நன்குணர்ந்து மனிதன் தன்னைப் பொய்வித்தாவதற்கு இடமளிக்காது மெய்வித்தாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்பது திருமந்திரம் தரும் செய்தி. [154]

3. முளை

உறக்கத்திலிருக்கும் வித்தின் முதல் வளர்ச்சி முளை எனப்படும். இந்நிலையில் தாவரத்தின் வேரும் இலையும் வளர்ச்சியடைகின்றன. பிரபஞ்ச இயக்கத்தைத் தாவரத்தின் வாழ்வோடு இணைத்துப் பேசும் திருமந்திரம்,

> **முதற்கிழங் காய்முளை யாய்அம் முளைப்பின்**
> **அதற்புத லாய்ப்பல மாய்நின் றளிக்கும்**
> **அதற்கது வாய்இன்ப மாவது போல**
> **அதற்கது வாய்நிற்கும் ஆதிப் பிரானே** [155]

என்று கூறுகிறது. தாவரமானது முதலிற் கிழங்காய் இருந்து, பின் முளையாய், அதன் பின் புதராய், பின் பழமாய்ப் பயன் தரும்; அதுவே அத்தாவரத்திற்கு இன்பமாக அமையும்; அது போன்று, எல்லாவற்றையும் படைத்துக் காத்துப் பயனளிப்பதே ஆதி இறைவனின் இன்பமாகும் என்பது இப்பாடலின் கருத்து.

வித்து, முளை என்று இரண்டாகப் பிரித்துக் கூறினாலும் முளையின் இருப்பிடம் வித்திலாகும். முளை வித்திலிருந்து முளைத்து வருகிறதே அன்றி வேறிடத்திலிருந்து வருவதில்லை. ஒன்றில்லாமல் மற்றொன்றில்லை. இரண்டும் ஒன்றே. சிவ நெறியாகிய அரனெறியும் அத்தகையதே. சிவமும் விந்துவும் சேர்ந்ததே அரனெறி. உலகத் தோற்றத்தின்போது உயிர்ப் படைப்பின் ஒளியிலிருந்து உடல் அமைகிறது; அவ்வுடலில் வீரிய

மாகிய விந்து ஏற்படுகிறது; விந்தினை வெற்றி காண்பவருக்கு ஒளியுடல் கிடைக்கிறது; அந்த ஒளியை வித்து எனலாம்; ஒளி வளர்வது முளை வளர்வதற்கு ஒப்பாகும்; முளை வளர்ந்தபின் வித்து மறைந்துபோவதைப் போல, ஒளிபெருகி ஒளிமண்டலம் அமைந்தபின் விந்து இல்லாமல் போகிறது; அத்துடன் பஞ்ச பூதங்களில் ஒன்றான ஆகாயத்திலிருந்து வந்த உடல் ஒளியில் ஒளியாக— அதாவது சிவனில் சீவனாகக் கலக்கின்றது. இதுவே வித்து— முளை ஆகியவற்றின் வாயிலாக உணர்த்தப்படுகிறது.

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள் ஆன்மாவை மூடியுள்ளவரை அது சிவனைச் சென்று சேராது. உமியும் தவிடும் மூடியுள்ளவரை அரிசி தோன்றாது போவதை ஒத்தது அது. இங்கு நெல்லின் முளை ஆன்மாவாகச் சுட்டப்படுகின்றது.[156]

4. வேர்

நிலையாக நிற்பதற்கும், நீரையும் சத்தையும் உறிஞ்சுவதற்கும் தாவரங்களுக்குத் தேவைப்படும் முக்கியமான பகுதி வேர். இதனையும் திருமூலர் பயன்படுத்திக் கருத்துவிளக்கம் செய்துள்ளார். சிவனடியார் உள்ளத்தில் எழுந்தருளும் சிவன் அடியவரை ஆணிவேர்போல நின்று தாங்குவான் என்றும், சிவனது அருளால் அடியாரது ஆணிவேர் போன்ற பாசம் கெடும் என்றும், பாசம் கெட்டவர் உடலில் தோன்றும் சோதியைத் தாம் சிவனோடு கலப்பதற்கு ஏற்ற ஆதார வேராகக் கொண்டு ஒளியுடல் பெற்றுச் சிவமாவர் என்றும் திருமந்திரம் கூறுகின்றது.[157]

5. மரம்

கூகை குருந்தத் தேறிக் குணம்பயில்[158]

என்னும் திருமந்திரப் பாடலில் கூகை குருந்த மரத்தின்மீது ஏறிக் குணம் பெற்றது என்று கூறப்படுகிறது; அறியாமையில் உழன்று கொண்டிருந்த கூகை குணம் பெற்றதற்குக் குருந்தமரம் காரணம். உலக மாயையே பிறப்புக்குக் காரணம் என்று உணர்ந்து ஆன்மாவானது ஒளியாகிய குருந்த மரத்தில் ஏறி இறைவனுக்குரிய குணங்களைப் பெற்றது என்பது இதன் உட்பொருள். கூகை குருந்த மரத்தின்மீது ஏறுதல் என்பது சீவன் குண்டலினி யோகத்தால் ஒளியுடல் பெற்று சகஸ்ரதளத்தில் உள்ள சிவனொடு ஒன்றுபடுதலைக் குறிக்கிறது.

ஒளியுடல் பெற்ற சீவன் அதில் திளைப்பதற்குச் சிவன் கற்பகத் தருவைப் போல அருள்புரிவான். இதனை,

காரொன்று கற்பக மாகிநின் றானே [159]

என்னும் திருமந்திர அடி தெரிவிக்கிறது.

சிவபெருமான் கல்லால மரத்தின் கீழிருந்து சனகாதி முனிவர்களுக்கு வேதத்தின் பொருளை உணர்த்தினார் என்று குறிக்குமிடத்தில் திருமந்திரம் கல்லால மரத்தைக் குறிக்கிறது.[160]

இன்ப துன்பங்களைத் தேமா என்று உருவகப்படுத்தித்,

தேமா இரண்டோடு [161]

என்று குறிப்பிடுகிறது திருமந்திரம். 'தே' என்பது தேன்போன்ற இன்பத்தையும், 'மா' என்பது புளிப்புத் தன்மையான துன்பத்தையும் தன்னகத்தே உடையது உலகம் என்று இதன்மூலம் உணர்த்தப்படுகிறது. இந்நிலையில் மனிதன் துன்பம்தரும் உலகியல் வாழ்வை நீக்கி, இன்பம்தரும் அம்மை வாழ்வை மேற்கொள்ளவேண்டும் என்பது கருத்து.

பேரின்பத்தினைத் திருமந்திரம்,

மதுங்கிய வார்கனி யாரமுது [162]

என்றும்,

ஆலிப் பழம்போல் அளிக்கின்ற [163]

என்றும்,

மூன்றுள வாழைகள் [164]

என்றும் குறிப்பிடுகின்றது.

திருமந்திரம் சிவனை ஆலமரமாக உருவகம் செய்கிறது. இதனை,

அக்கரை நின்றதோர் ஆலமரம் [165]

என்னும் திருமந்திர அடி காட்டுகிறது. இப்பாடலில் குறிப்பிடப்படும் அக்கரை என்பது உடலைக் கடந்து உருவமற்று இருக்கும் சிவம் ஆகும். உருவமற்ற ஒளிவெள்ளமாக விளங்கும் சிவனைக் கண்ட சீவனும் சிவமாகும் என்னும் கருத்தை விளக்குதற்கே சிவன் ஆலமரமாக உருவகம் பெறுகிறான். ஆலமரம் என்னும் சொல்லை 'ஆல்—அமர்—அம்' என்று பிரித்தால் நஞ்சு அமரும் அழகிய கண்டத்தை உடைய சிவன் என்னும் பொருள் தோன்றக் காணலாம். ஆலமரம் அக்கரையில் உள்ளது என்பதால் சீவன் இக்கரையில் உள்ளது என்பது பெறப்படும். பிற மரங்களைவிட ஆலமரம் அளவால் பெரியது; அதுபோலவே சிவனும் தத்துவங் கடந்த பெருநிலையில் உள்ளவன். இருவினையாகிய ஆற்றினைக் கடந்தால் சீவன் பக்குவம் பெற்று அக்கரை செல்லும். அதற்குள் அது தன்னைப் பிணித்துள்ள வினையினை—நஞ்சினைச் சிவனைப் போல் நெஞ்சில் தேக்குகின்றது; இந்நிலையில் சீவன் விந்துசெயம் பெற்றுச் சிவனாகும். இதனையே மரத்தை உருவகமாகக் கொண்டு விளக்குகிறது திருமந்திரம்.

அடியும் முடியும் அமைந்ததோர் ஆத்தி
முடியும் நுனியின்கண் முத்தலை மூங்கில்[166]

என்னும் திருமந்திரப் பாடலில் ஆத்தியும் மூங்கிலும் குறிக்கப் படுகின்றன. அடி என்பது மூலாதாரம்; முடி என்பது தலை. உடலில் உள்ள முதுகந்தண்டினை அடியும் முடியும் உடைய ஆத்திமரமாகக் காண்கிறார் திருமூலர். இவ்வாத்திமரம் முடியும் இடம் முத்தலைகளை உடைய மூங்கிலைப் போல உள்ளது. சூரிய, சந்திர, அக்கினிக் கலைகளே முத்தலைகள் ஆகும். ஆசிரியர் இப்பாடலில் சிவனின் உடற்கூற்றினை விளக்க மரங் களை உருவகப்படுத்தியுள்ள திறம் போற்றுதற்குரியது.

6. மலர் — மணம்

இறைவனது அணியாகக் கொன்றைமலர் குறிப்பிடப் படுகிறது.[167] அது மஞ்சள்நிற ஒளியையும் குறிப்பால் உணர்த்து கிறது.[168] இவ்வொளி சிவனுக்கு அமைந்தது.

தாமரைமலர் ஆறு ஆதாரங்களிலும் இதழ் வேறுபாடுக ளோடு குறிக்கப்படுகிறது;[169] அதுவே சகஸ்ரதளமும் ஆகும்;[170] சகஸ்ரதளமும் இருவகைப்படும்.[171] இதனையே இருப்பிடமாகக் கொண்டவள் சக்தி.[172]

குவளைமலர் போன்ற கண்களையுடைய சக்தி[173] காயாம்பூ நிறத்தவள்.[174]

நீலோற்பல மலர் நிறம், மணம், அழகு கலந்து விளங்குவதைப் போன்று சீவன் சிவசக்திகளோடு ஒன்றுசேர்ந்து பிரிக்க முடியாதவாறு கலந்திருப்பான்.[175] சகஸ்ரதளத்தில் உள்ள சிவனது பாதம் வாடா மலரனையது.[176]

சக்தி கூந்தலில் மலரணிந்தவள்;[177] அவள் சுழுமுனையில் விளங்குபவள். சுவாதிட்டான மலரிலிருந்து சித்ரணி வழியாகச் சுழுமுனை திறந்து உணர்வாகிய நீர் ஏந்தி வழிபடுவது நீர்மலர் என்றும், பூவொடுநீர் என்றும் குறிப்பிடப்படுகின்றது.[178] செவ்வரத்தம்பூ சிவனது பஞ்ச முகங்களில் ஒன்றாகக் குறிக்கப் படுகின்றது.[179]

புறவழிபாட்டிலும் மலர் இடம் பெறுகின்றது; மலர் கொண்டு இறைவனை வழிபடும் பொழுதும், உணர்வொன்றி வழிபடும் பொழுதும் பயன் கிட்டுமேயன்றி, ஆரவாரமான வழிபாட்டால் பயனில்லை; உடற்பற்றினை விட்டு வழி படுவார்க்கே ஞானம் கைகூடும்.[180] லிங்கம் அமைத்து வழி படுவதற்கு உரிய பொருள்களில் பூவும் ஒன்று.[181]

மலரும் அதன் மணமும் பிரிக்க இயலாதவாறு இணைந்திருப்பன; அதுபோலச் சிவனும் சக்தியும் இணைந்துள்ளனர்.[182] பூவில் மணம் கண்ணிற்குப் புலப்படாத நிலையில் பொருந்தியிருப்பதைப் போல மென்மையான முறையில் கருவில் வந்து பொருந்தும் தனஞ்செயன் என்ற வாயு இறுதிவரை உடலில் தங்கும்; உடலை விட்டு உயிர் பிரிந்து சென்ற பின்பும் இது நீங்காமலிருந்து, உடல் அழுகிய பின்னரே விட்டு விலகும்.[183]

மலரின் மணம் காற்றில் பரந்து விரவக் கூடியது. இதனைத் திருமந்திரம்,

குலைக்கின்ற நன்னகை யாங்கொங் குழக்கின்[184]

என்று பாடுகிறது. இப்பாடலில் கொங்கு என்னும் சொல் நறுமணத்தைக் குறிக்கிறது. சீவனின் நல்ல எண்ணம் நறுமணமாக உருவகிக்கப்படுகின்றது. மலரின் நறுமணம் அதன் தன்மைக்கேற்பக் காற்றில் பரவுவதைப் போலச் சீவன் உலகப் பற்றுடையதாயின் தாமத, இராசத, சாத்துவிகமாகிய முக்குண வயப்படும்; சீவன் உடலுக்குள் இறையைக் காண வேண்டும் என்ற எண்ணமுடைத்தாயின் அறிவின் வயப்பட்டு நிற்கும்; அந்த நிலையில் சீவன் சிவனாகும் என்று குறிப்பிடுவதற்காகவே ஈண்டு மலரின் மணம் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீவனின் மனம் சிவநினைவில் பொருந்துவதனால் சகஸ்ரதளம் விரிவடைகின்றது; அப்போது சகஸ்ரதள மலரின் ஊடே புன்னை மலரின் மகரந்தப் பொடி போன்ற மலமாய அணுக்கள் இருபுறம் ஒதுங்குகின்றன. பின் மலம் நீங்கப் பொன்னிற ஒளி சகஸ்ரதளத்தில் தோன்றுகின்றது. இதனைச் சுற்றிலும் நீலவொளி ஏற்படும். இதனை,

போதும் புலர்ந்தது பொன்னிறம் கொண்டது
தாதவிழ் புன்னை தயங்கு மிருகரை
ஏதமில் ஈசன் இயங்கு நெறியிது
மாத ரிருந்ததோர் மண்டலந் தானே[185]

என்று திருமந்திரம் சுட்டுகிறது. இதற்கு விளக்கம் தரும் ஜி. வரதராஜன்,

> "தாதவிழ் புன்னை தயங்கும் இருகரை என்பது சகஸ்ரதள மலர் விரிந்தபின் மஞ்சள் ஒளி நடுவிலும் ஊதா ஒளி அதைச் சூழவும் சாதகர்க்கு விளங்கும் என்றபடி"[186]

என்று கூறுவர். மனம் ஒன்றிய நிலையில் இருளகன்று ஒளி தோன்றுதலைச் சீவன் உணர்ந்து சிவனோடு பொருந்துதல் என்பர். அப்போது சீவன் தன் உடலில் காணும் ஒளிகளை மலருவமை கொண்டு விளங்குகிறது திருமந்திரப் பாடல்.

7. கனி

கனிகள் வாயிலாகவும் திருமந்திரம் மாந்தர்க்குச் சில சீரிய அறிவுரைகளை வழங்குகின்றது. கனிகள் பொதுவாக இனிமை யானவை என்றாலும் சில புளிப்பும் கசப்பும் கொண்டனவாக இருத்தலுண்டு.

எட்டிப்பழம் கசக்கும் தன்மையுடையது; உணவிற்கு அது பயன்படாது. அதுபோல, உயிர் இந்த உலகத்தில் பெறும் அனுபவமும் கசப்பானது; அதனால் இவ்வுலகம் எட்டிப்பழம் போன்றது. இதனை,

> கண்டார்க் கழகிது காஞ்சிரத் தின்பழம்
> தின்றார்க் கறியலாம் அப்பழத் தின்சுவை [187]

என்று திருமந்திரம் நவில்கிறது. எட்டிப்பழத்தை உணவாக ஏற்காது ஒதுக்குவதைப் போல உலக வாழ்வையும் மக்கள் வெறுத்து ஒதுக்குதல் வேண்டும் என்பது திருமூலரின் கருத்து.

புளியங்காய் பிஞ்சாக உள்ளபோது அதன் மேலோடு காயை விட்டுப் பிரிக்க முடியாதவாறு இணைந்திருக்கும்; அதுவே முற்றிப் பழமாகும் போது, ஓடு புளியம்பழத்தை மூடியிருந்தாலும் பழத்தை விட்டு விலகி நிற்கும். அப்போது பழத்திற்கு எவ்விதக் குறையுமில்லாமல் ஓட்டைத் தனியே பிரித்தெடுக்க முடியும். அதைப் போல மக்கள், உலகில் வாழ்ந்தாலும் உலக நடப்புகளில் பற்றற்றுப் புளியம்பழத்தின் ஓட்டைப்போல் இருத்தல் வேண்டும். அத்தகையவர்களைப் பக்குவத்துக்குரியவராகக் கொண்டு ஆட்கொள்வாள் பராசக்தி. இக்கருத்தை,

> அளியொத்த பெண்பிள்ளை ஆனந்த சுந்தரி
> புளியுறு புன்பழம் போலுள்ளே நோக்கி [188]

என்னும் உவமையால் உணர்த்துகிறார் திருமூலர்.

பக்குவப்பட்ட ஆன்மா சகமார்க்கத்தில் நிற்கும் போது பழுத்த கனிபோன்று விளங்கும். எனவே அதனை ஆசிரியர் 'விளங்கனி' என்று உருவகம் செய்கிறார்.[189] நல்ல கனியைப் போன்று இனிமையைத் தருபவன் சிவன் என்னும் கருத்தில் திருமந்திரம் சிவனை 'வளங்கனி' என்று குறிக்கின்றது.[190] 'நமச்சிவாய' என்னும் ஐந்தெழுத்துகளுக்கு உரியவனாகி இன்பம் தருதலால் திருமந்திரம் சிவபெருமானை 'நமச்சிவாயக் கனி' என்றும் பாடுகிறது.[191]

சீவனிடம் உள்ள அறியாமையாகிய அஞ்ஞானத்தைத் திருமந்திர ஆசிரியர்,

> கானக வாழைக் கனிநுகர்ந்து [192]

என்று கூறுகிறார். அறியாமை நீங்கிச் சீவன் உண்மைத் தவத்தில் இருக்கும்போது ஒலியையும் ஒளியையும் உணரும்; அப்போது சிவன் சீவனுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குவான். இக்கருத்தைத் திருமூலர்,

மெய்த்தவத் தானை விரும்பும் ஒருவர்க்குக்
கைத்தலஞ் சேர்தரு நெல்லிக் கனியொக்கும் [193]

என்று வெளிப்படுத்துகிறார்.

திருமந்திரம் சீவர்களைக் கரையேற்றும் சிவபெருமானைப் பற்றிக் கூறும்போது,

கரியுண் விளவின் கனிபோல் உயிரும்
உரிய பரமுமுன் னோதும் சிவமும் [194]

என்று விளக்குகிறது. சிவன் 'கரியுண் விளைவு' போன்றவன்; அதாவது 'வேழம் உண்ட விளங்கனி' போன்றவன் அவன். விளாம்பழத்தை நோய் தாக்கும்போது அஃது உள்ளீடற்றதாகி விடுகிறது. சீவன் சிவனோடு இணையும் போது, உலகத்தார் பார்வைக்கு மனிதனாக இருந்தாலும், அவனுள் இருந்த சத்தாகிய மலங்கள் நீங்கி இருப்பான்; ஆனால் சிவன் சீவனது மலங்களை நீக்கினாலும் தன்குணம் மாறாதவனாகவே விளங்குவான் என்பது 'கரியுண் விளவு' என்னும் உவமையால் திருமந்திரம் உணர்த்தும் கருத்தாகும்.

உலகப்பற்று நீங்கும்வரை சீவன் உலகமாயையில் சிக்கித் தவித்து எட்டிப்பழமும் வேப்பம்பழமும் போலக் கசந்து காணப் படுகின்றது; இதனை உணர்ந்து பக்குவமடையும் சீவன் சத்தாகவும், சித்தாகவும், ஆனந்தமாகவும் விளங்கி வாழைப் பழமும், கற்கண்டும், தேனும் போன்ற இனிமை பெறுகின்றது. சீவன் இந்த இனிமையை நுகர்ந்து சிவானந்தம் என்னும் பேரின்ப உணர்வில் நிலைபெறும்போது ஆன்ம இன்பமும்; உடலின்பமும் அடைந்து வீடுபேற்றையும் பெறுகிறது. இதனை,

கொட்டியும் ஆம்பலும் பூத்த குளத்திடை
எட்டியும் வேம்பும் இனியதோர் வாழையும்
கட்டியும் தேனும் கலந்துண்ண மாட்டாதார்
எட்டிப் பழத்துக் கிளைக்கின்ற வாறே [195]

என்னும் திருமந்திரப் பாடல் தெரிவிக்கின்றது. அறிவும் அறியாமையும் கொட்டியும் ஆம்பலுமாக உருவகிக்கப்பட்டு உள்ளன; நாமரூபமான பிரபஞ்சம் எட்டியும் வேம்பும் என உருவகம் பெற்றுள்ளது; சத்து, சித்து, ஆனந்தம் ஆகிய மூன்றும் வாழை, கற்கண்டு, தேன் என உருவகிக்கப் பெற்றுள்ளன. இப்பாடலுக்கு விளக்கம் தரும் ஜி. வரதராஜன் அவர்கள்,

"கொட்டியும் ஆம்பலும் கொடிவகை. ஆம்பல்— துன்பம். சீவன் சுட்டியறியும் அறிவினால் நாமரூபமான பிரபஞ்சத்தில் மயங்கி அவற்றின் தன்மை அறியாது அதனை நாடுகிறது. ஆனால் அனுபவித்த பிறகு நஞ்சாகவும் கசப்பாகவும் உள்ளது என்பதை அச்சீவன் அறியவில்லை. நாமரூபமற்ற அகண்ட சிவம் வாழைப்பழம் கற்கண்டு தேன் கலந்த சுவை போன்று உண்ணும்போது சுவையுடையதாய், உண்டபின்னர் உடம்புக்கு நன்மை செய்வதாய் உள்ளது"[196]

என்று கூறுவது இங்குக் கருதத்தக்கது. சீவன் எட்டியும் வேம்பும் போல் தீமை செய்வதாகிய உலக போகத்தைவிட்டு, வாழையும் கற்கண்டும் தேனும்போல் நன்மை செய்வதாகிய சிவபோகத்தை நாடவேண்டும் என்பது திருமந்திரத்தின் உள்ளக்கிடக்கை.

8. பிற செய்திகள்

இறைவன் கரும்பு போன்றும், அமுது போன்றும் இனிப்பவன் என்பதைத் திருமூலர்,

> **சேயன் அணியன் தித்திக்கும் தீங்கரும்**
> **பாயமு தாகிநின் றண்ணிக்கின் றானே**[197]

என்று கூறுகிறார். அவனே,

> **காலினில் ஊறும் கரும்பினிற் கட்டியும்**
> **பாலினுள் நெய்யும் பழத்துள் இரதமும்**
> **பூவினுள் நாற்றமும் போலுளன் எம்மிறை**[198]

என்றும் விளக்குகின்றார். இறைவன் கருப்பங்கட்டியாய், பாலில் மறைந்த நெய்யாய், பழரசமாய், பூவினில் விரவிய மணமாய் விளங்குகிறான் என்பது திருமூலர் கருத்து.

சாதியாலும் அறிவாலும் தினையின் கூறுபோன்ற சிறியவராக இருந்தாலும் இறைவனை இடைவிடாது சிந்திப்பவர் பெருமையுடையவர் ஆவார்.[199] இறைவனை என்றும் தியானிப்பவர்க்குத் தேன்போன்ற இன்பத்தைத் தருபவன் சிவன்; அதனால் அவர்கள் சிவானந்தம் அடைவர்; ஆனால் மயக்கத்தைத் தருகின்ற கள்ளுண்பார் இறைவனது பெருமையை உணராது கெடுவர்.[200]

சீவர்களைத் தொடரும் பாசம் கோரை அல்லது தாமரைக் கொடி; பூசையால் தெளியும் மனம் பாசி நிறைந்த குளம்.[201] பாசி படர்ந்த குளத்தில் கல் விழும்போது பாசி விலகுதலும், பின் முன்போல மூடிக் கொள்ளுதலும் போலப் பூசையின் போது மனம் தெளிந்து பின் உலக மயக்கத்தால் கலங்கும் என்பது இதன் கருத்து.

மூங்கிலில் எழும் தீ காட்டையே அழித்துவிடுவதைப் போன்று குரு உபதேசத்தால் சீவனது உந்திக் கமலத்தில் எழும் சோதி தத்துவக்காட்டை அழித்துவிடும்; அப்போது சீவன் சிவனாகும் தகுதியைப் பெறும்.[202]

குருவினிடம் உபதேசம் பெறும்பொழுது சீடனுக்கு விந்து நீக்கம் ஏற்படாது; விந்துசெயம் கிடைப்பதற்காக மஞ்சு அல்லது கருப்பைப் புல்லினால் ஆகிய கயிற்றைச் சீடனின் இடுப்பில் கட்டுவர்; இதில் மந்திர சக்தி இருக்கும்.[203]

அமுரி தாரணை செய்யும் யோகியர் வெண்மிளகு, நெல்லி, மஞ்சள், வேம்பு ஆகியவற்றின் விதையுடன் கடுக்காய்த் தோலும் சேர்த்து அரைத்துத் தலை முழுகுவர்; இவ்வைந்தும் சேர்ந்த கலவை 'பஞ்சகற்பம்' எனப்படும்; இதனால் யோகியரது தலைமுடி கறுப்பதோடு உடலும் மென்மையாகும்.[204] இவ் வித்துக்களைச் சேர்ப்பதற்கான விகிதம் திருமந்திரத்தில் குறிக்கப் படவில்லை; அதனால் யோகியரது குறிப்பறிந்து தெளிவுபெற்று அவர்களுடைய உதவியுடன் பஞ்சகற்பம் செய்தல் வேண்டும்.

மரங்களடர்ந்த காடு பற்றிய குறிப்பு ஒன்றும் திருமந்திரத்தில் இடம் பெறுகிறது. அது,

> கூப்பிடு மாற்றிலே வன்காடு இருகாதம்
> காப்பிடு கள்ளர் கலந்துநின் றாருளர்
> காப்பிடு கள்ளரை வெள்ளர் தொடர்ந்திட்டுக்
> கூப்பிடு மீண்டதோர் கூரைகொண் டாரே[205]

என்பதாகும் கூப்பிடும் ஆறு என்பது ஆரவாரம் நிறைந்த இல்லறம், வன்காடு என்பது அஞ்ஞானமாகிய காடு; இக்காட்டில் நன்னெறியில் செல்வோரைக் கட்டிப்போட்டிடும் கள்வராகிய ஐம்புல வேடர் உண்டு; சிவ ஒளியாகிய வெள்ளர் நாதமாகிய ஒலியை எழுப்பி இக்கள்வரை அழைக்க அவர்கள் தம் கொடுந் தொழிலைவிட்டுக் கூரையாகிய சகஸ்ரதளத்தில் நிலைபெறுவர் என்பது இப்பாடலின் கருத்து.

இவ்வாறு திருமந்திரம் தாவரங்களின் அடிப்படையில் பல உவமை உருவகங்களை அமைத்து மக்களுக்கு நன்னெறி காட்டி யுள்ளது.

உலோகங்கள்

மனிதனின் வாழ்வோடு இணைந்து அவன் தேவைகளைப் பெரிதும் நிறைவு செய்வன உலோகங்கள். அணிகலன்களாகவும், கருவிகளாகவும், பொருள்களாகவும் பல்வேறு வகைகளில் இவை

மனிதனுக்குப் பயன்படுகின்றன. அவற்றுள் பொன், வெள்ளி, செம்பு, இரும்பு முதலியனவற்றின் வாயிலாகத் திருமந்திரம் சில செய்திகளை விளக்குகிறது.

1. பொன்

பொன் பிற உலோகங்களைக் காட்டிலும் உயர்ந்தது. இதனை ஆடகம், சாம்பூநதம், கிளிச்சிறை என்று மூவகையாகப் பாகுபாடு செய்வர். இவற்றுள் ஆடகப்பொன் சிறந்ததாக விளங்குகின்றது. மனிதன் தன் உடைமைப் பொருளாக ஆக்கிக்கொள்ள விரும்பும் மூவகை ஆசைகளுள் பொன்னாசையும் ஒன்று. திருமந்திரம் ஆசைகள் எட்டு என்று குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றாக இதனைக் குறிப்பிடும்.[206] இறைவனைப் 'பொன்னார் மேனியன்' என்று சுந்தரர் குறிப்பிடுதலும் இங்கு நினைக்கத்தக்கது.[207] இறைவனது மேனி பொன்போன்றது என்றும், அவன் பொன் ஒளியில் திகழ்பவன் என்றும் பலவாறாகக் கூறுகிறது திருமந்திரம்.[208]

சிவனுக்குரிய இருப்பிடம் பொன் வேய்ந்த தில்லை என்று கூறும் திருமந்திரம், தில்லை என்னும் சொல்லால் சகஸ்ரதளத்தையும் குறிக்கிறது.[209] சக்தியின் நிறமும் பொன்.[210] பொன்னால் பல அணிகலன்கள் பல வடிவங்களில் செய்யப்பட்டாலும் அவை யாவும் பொன்னால் உருவாதலைப் போல, சக்தி பல வடிவங்களில் பல தெய்வங்களாக உலக மக்களால் வழிபடப்படுகிறாள். இருப்பினும் அத்தெய்வங்கள் வாயிலாக அருளுபவளும் சக்தியே.[211] பொன்னாலான அணிகலன்களை அணிந்தவள் சக்தி.[212] சிவனும் பொற்சிலம்பு அணிந்தவனாவான்.[213]

ஆண், பெண் ஆகிய இருவரும் சிற்றின்பத்தில் ஈடுபடும் பொழுது பெண்ணுக்குப் பொன்னிறமான சுரோணிதம் வீணாகி ஆற்றல் அழிகிறது; ஆணுக்கு வெண்ணிறமான சுக்கிலம் வீணாகி அவன் ஆற்றலும் அழிகின்றது. இவ்விரண்டும் அழியாது இருப்பின் சுழுமுனை திறக்கும். இந்தக் கருத்தை விளக்கும் திருமந்திரம் பொன்னின் நிறத்தைப் பயன்படுத்தக் காண்கிறோம்.[214]

விந்துசெயம் பெற்றவர் சிவநீரால் (அமுரி தாரணையால்) உடல் பொன்னிறம் பெறுவர்.[215]

செம்பில் உள்ள களிம்பு நீங்கினால் செம்பும் பொன் ஆகும். இதனைத் திருமந்திரம்,

> செம்புபொன் னாகுஞ் சிவாய நமவென்னிற்
> செம்புபொன் னாகத் திரண்டது சிற்பரஞ்
> செம்புபொன் னாகும் ஸ்ரீயுங் கிரீயுமெனச்
> செம்புபொன் னான திருவம் பலமே[216]

என்று குறிப்பிடுகின்றது. இரசவாத முறையினால் செம்புப் பொன்னாகும்; அதுபோலச் சிவாயநம என்றால் உடல் பொன்னாகும்.[217] ஹ்ரீம், கிரீம் என்னும் சக்திக்குரிய மந்திரத்தை ஓதினாலும் செம்பில் உள்ள களிம்பு நீங்குதல் போல உடலில் உள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய முக்குற்றமும் நீங்கி உடல் பொன்போல ஒளிவிடும். இதற்குக் காரணமாக இருப்பவன் சிவன். பரிசனவேதி பட்டதெல்லாம் பொன்னாதல் போல இறைவனது திருவடி குருவின் மூலமாகச் சீவன் மீது பதிக்கப்பெற்றால் அது சிவனாகும். பின், பொன்னகரான சிவலோகம் சென்று வீடு பெறும்.[218]

பொன் தகட்டில் நவாக்கரி சக்கரம் வரைந்து வழிபடு பவர்க்குப் பொன் கிட்டும்; சாம்பவி சக்கரம் வழிபடுவார்க்கும் பொன் கிடைக்கும்.[219]

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய வழிகளின் மூலம் சீவன் இறைவனை அடையும்; வேதங்களின் உட்பொருளை ஆய்ந்து கண்ட சிவனைப் போன்று பொன்போல் ஒளிவிடும். இதனைத் திருமந்திரம்,

மறையொன்று கண்ட துருவம் பொன்னாமே[220]

என்று குறிப்பிடுகின்றது சீவன் சிவனாகும்போது சீவனுடைய உருவமும் சிவனது உருவம்போல் பொன்னொளியாகத் திகழும். சீவன் ஒளியுடல் பெறும் என்னும்போது திருமந்திரத்தில் பொன்னின் நிறமே எடுத்துக் கூறப்படுகின்றது.

2. வெள்ளி

அறிவு நெறியிற் சென்று விந்துநீக்கம் செய்யாதிருப்பவர் களது காமவாயு மேனோக்கிச் செல்லும்; அப்போது அவர்கள் ஒளியுடல் பெறுவர்; விந்துசெயம் பெறுவதால் வெள்ளியைப் போன்ற சுக்கிலம் அமுதமயமாக மாறும். அப்போது சக்தியும் அமுத மயமாகச் சகஸ்ரதளத்தில் இருப்பாள்.[221]

3. செம்பு

செம்பு சிறந்த உலோகம்; அது வழிபாட்டிற்குப் பயன்படக் கூடியது. அதில் உள்ள களிம்பு நீக்கப்பட்டால் அந்தச் செம்பே பொன்னாக மாறும் தன்மையுடையது.

செம்பினால் சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்யலாம்.[222] பிறவி கெடுதற்குச் செம்பு கொண்டு அறுகோணம் அமைத்து வழிபாடு செய்தலுண்டு.[223] செம்பு போன்ற மலம்நிறைந்த உடலில் 'சிவாயநம' என்று செபித்தால் உடல் பொன்போல ஒளிவீசும்.[224] பத்திரகிரியாரும் மும்மலத்தைச் செம்பு என்று பாடுகிறார்.[225]

உடல் ஒளிவீசுவதற்குச் சகஸ்ரதளம் மலருதல் வேண்டும். சகஸ்ரதளத்தைத் திறக்கும் ஆற்றலுடையவர் நகைகளைச் சேமித்து வைக்கும் செப்புக் கோயைத் திறக்கும் ஆற்றலுடையவர்களுக்கு இணையாவர். 'கோய்' என்பது நகைவைக்கும் செப்பு. உலக வாழ்விற்கு இன்றியமையாத செல்வத்தையும் அணிகலன்களையும் சேர்த்து வைப்பதற்குரியது செம்பினால் ஆன கோய்; அதுபோல அவ்வுலக வாழ்விற்கு உரிய செல்வமாகிய ஒளியைச் சேமித்து வைக்கும் செப்பு சகஸ்ரதளம். இதனைப் பிராணாயாமத்தால் திறக்க முடியாதவர்களைக் கோழைகள் என்கிறது திருமந்திரம். இக்கருத்தினை,

> வாய்திற வாதார் மதியிட்டு மூட்டுவர்
> கோய்திற வாவிடிற் கோழையு மாமே[226]

என்னும் பாடற்பகுதி தெளிவுபடுத்துகிறது. பேசாத மௌனியர் மதிமண்டலத்தில் பிராணனைச் செலுத்திச் சோதியை அறிகின்றனர்; சகஸ்ரதளமாகிய செப்பினைத் திறந்துபார்க்க வல்லமையற்றவர்கள் கோழைத்தனமுள்ளவராவர் என்பது இதன் விளக்கம்.

4. இரும்பு

இரும்பு வன்மையானது; பிற உலோகங்களைப் போல ஒளி வீசாதது; மிகுதியான அளவில் மக்களுக்குப் பயன்படுவது. இதனால் செய்யப்பட்ட வாள், மழு, கத்தி போன்ற ஆயுதங்கள் திருமந்திரத்தில் பல இடங்களில் குறிப்பிடப்படுகின்றன.[227] ஆன்மா நின்மல துரியத்தில் நிற்கும்போது உலகப்பற்று எஞ்சி நிற்கும் என்பதை விளக்கும் ஆசிரியர்,

> காய்ந்த இரும்பு கனலை யகன்றாலும்
> வாய்ந்த கனலென வாதனை நின்றாற்போல்
> ஏய்ந்த கரணம் இறந்த துரியத்துத்
> தோய்ந்த கருமத் துரிசக லாதே[228]

என்று பாடுகிறார். நெருப்பில் சிவக்கக் காய்ச்சப்பட்ட இரும்பு அதிலிருந்து எடுக்கப்பட்டபின் அதன் நிறம் மாறிக் கருநிறம் அடையும்; அப்போதும் இரும்பினுள் தீயின் வெப்பம் நிலைத்திருக்கும். அதைப்போல இரும்பாகிய ஆன்மா தத்துவங்களைக் கடந்து நின்மல துரியத்தில் இறைச் சிந்தனையில் நிலைத்து ஒன்றியிருந்தாலும் அதனிடம் உலகப்பற்று என்பது சிறிதளவேனும் எஞ்சிநிற்கும். இங்கு இரும்பு உவமை பொருத்தமாக அமைந்திருத்தலைக் காணலாம்.

காய்ந்த இரும்பின்மீது நீர் பட்டால் அதனை இரும்பு வேகமாக உள்ளிழுத்துக் கொள்ளும்; அதுபோலத் தத்துவங்களை விட்டுப் பிராணனையும் அபானனையும் ஒன்றுகலந்து மேல்முக மாக்கிய காய்ந்த இரும்பு போன்றவரின் மீது தெளிக்கப்படும் நீராக இறைவன் விரைவில் வந்து தங்குவான். இந்தக் கருத்தை,

இரும்பிடை நீரென என்னையுள் வாங்கிப்
பரம்பர மான பரமது விட்டே
உரம்பெற முப்பாழ் ஒளியை விழுங்கி
இருந்தஎன் நந்தி இதயத்து ளானே [229]

என்று திருமந்திரம் பாடுகிறது. இங்கு முப்பாழ் என்பது பரத்தினுடைய சீவப்பாழ், சக்திப்பாழ், சிவப்பாழ் ஆகிய வற்றைக் குறிக்கும். இறைவன் தங்கிய இவ்வுடலிலே ஆயிரம் ஆண்டுகள் சீவன் வாழும்.

பேணியே இவ்வாறு பிழையாமற் செய்வீரேல்
ஆணி கலங்காதவ் வாயிரத் தாண்டே [230]

என்று இதனைச் சுட்டுகிறது திருமந்திரம். உடலை இரும்பாலான ஆணிக்கு ஒப்புமைப்படுத்துகிறது இப்பாடல்.

இரும்பு இரசாயன மாற்றத்தால் பொன்னாகும். ஆனால், பொன்னான இரும்பு மீண்டும் இரும்பாகாது. இதனைப் பயன் படுத்தி வேறொரு கருத்தை வலியுறுத்துகிறார் திருமூலர்:

கறுத்த இரும்பே கனகத் தானால்
மறித்திரும் பாகா வகையது போலக்
குறித்தஅப் போதே குருவருள் பெற்றால்
மறித்துப் பிறவியில் வந்தணு காரே [231]

இதனால், குருவினருளால் சிவத்துடன் இணைந்து வீடு பேறடைந்த சீவனுக்கு மீண்டும் பிறவியில்லை என்னும் கருத்து, இரும்பானது பொன்னான பின் மீண்டும் இரும்பாகாது என்னும் அறிவியல் உண்மை மூலம் உணர்த்தப்படுகிறது.

5. அணிகலன்கள்

இறைப் பெருமைகளைச் சொல்லும் திருமந்திரம் அதே நேரத்தில் உலக அனுபவங்களால் ஏற்படும் சிறுமைகளையும் எடுத்துக் காட்டுகின்றது. சான்றுக்கு ஒன்று:

கூறையுஞ் சோறுங் குழாயகத் தெண்ணெயுங்
காறையும் நாணும் வளையலுங் கண்டவர்
பாறையி லுற்ற பறக்கின்ற சீலைபோல்
ஆறைக் குழியில் அழுந்துகின் றாரே [232]

என்பது திருமந்திரப் பாடல். இதில், கூறை என்பது ஆடை; சோறு என்பது தாழைமடல் போன்றவற்றின் உள்ளீடு;

குழாயகத்து எண்ணெய் என்பது பூசிக் கொள்வதற்காக மூங்கில் குழாயில் சேமித்து வைத்துள்ள எண்ணெய்; காறை என்பது கழுத்தணி; நாண் என்பது இடுப்பணி; வளையல் என்பது கையணி; ஆறைக்குழி என்பது ஆறு—ஐ—குழி; அதாவது காமாதியாகிய ஆறு பாழுங்கிணறுகள்.

காறை, நாண், வளையல் ஆகிய அணிகலன்களைக் கொண்டு மகளிர் தங்களை அழகுபடுத்திக் கொள்கின்றனர்; இவர்களது நலன் விரும்பி ஆசைவயப்படும் ஆடவர் பிறவிப்பயன் அடையாது கெடுவர். இது, பாறையின்மீது உலர்த்தப்பட்ட ஆடை காய்ந்ததும் காற்றில் பறந்து சென்று உலர்த்தியவருக்குப் பயன்படாதது போன்றதாகும்.

விளையாட்டு

மக்களின் பொழுதுபோக்கு விளையாட்டு. இவற்றுள் நன்மை தருவனவும் உண்டு; தீமை பயப்பனவும் உண்டு. நன்மைதரும் விளையாட்டுகளை ஏற்றுக்கொண்டு தீமைதரும் விளையாட்டு களை விலக்குதல் வேண்டும். இறைச்சிந்தனையற்ற மனித வாழ்க்கை தீமைதருகின்ற விளையாட்டைப் போன்றது என்று குறிப்பிடுகின்றது திருமந்திரம். சூதாட்டம் மனித மனத்தை மயக்கமடையச் செய்து, உடலைச் சோர்வுடையதாக்கிக் கடமை களைப் புறக்கணிக்கச் செய்கின்றது; அதுபோல, சீவனும் இவ் வுலகில் தான் யார், தனக்கு விதிக்கப்பட்ட கடமை யாது என்பன வற்றை உணராது தன்னைச் சூதாட்டம் போன்ற உலகியல் வாழ்க்கையில் பிணைத்துக்கொள்கிறது. இதனை,

> காயம் பலகை கவறைந்து கண்மூன்றாய்
> ஆயம் பொருவதோர் ஐம்பம்தோ ரக்கரம்
> ஏய பெருமா னிருந்து பொருகின்ற
> மாயக் கவற்றின் மறைப்பறி யேனே 233

என்கிறது திருமந்திரம். இதில் இடம்பெறும் சூதாட்டம் 'தாயம்' எனப்படும் விளையாட்டு. இதற்குத் தாயப்பலகை, காய்கள், தாயக் கட்டை ஆகியன வேண்டும். தாயக்கட்டையில் நான்கு பக்கங்கள்; அதில் ஒரு பக்கத்தில் ஒரு கண் அல்லது புள்ளி இருக்கும்; இரண்டாவது பக்கம் இரண்டு கண்கள் அல்லது இரண்டு புள்ளிகள்; மூன்றாவது பக்கத்தில் மூன்று கண்கள்

அல்லது புள்ளிகள் உண்டு; நான்காவது பக்கம் கண் அல்லது புள்ளி ஏதுமிராது. இவையனைத்தும் இருந்தாலும் இவற்றை இயக்கும் மனிதன் முக்கியமானவன் ஆவான். தாயம் விளையாடும் பலகை போன்றது மனித உடல்; ஐம்புலன்களே சூதாடும் காய்கள்; தாயக் கட்டையில் உள்ள புள்ளிகளைப் போன்று விளங்குவன மனிதனிடம் உள்ள ஆசை, ஞானம், காரண, காரியங்கள் ஆகிய கிரியைகள்; இவற்றிற்குப் புலப்படாத நிலையில் சூக்குமமாய் மனித உடலில் நிலை பெற்று இருப்பவை ஆறு ஆதாரங்களும் ஐம்பத்தோ ரெழுத்துக்களும் ஆகும். இவற்றில் இறைவன் பொருந்தியிருப்பதைச் சீவன் உணராதவரை உலக வாழ்வாகிய சூதாட்டத்தில் ஈடுபடுகின்றது. சூதாட்டத்திற்குப் பலகையும், கவறும், கண்களும் மட்டும் போதா; இயக்குபவனும் தேவை; அதுபோலவே உடலில் உள்ள புலன்களைக் கட்டுப்படுத்திச் சீவன் சிவனாவதற்கு இவ்வுடலுள் உள்ள சீவன் இன்றியமையாது வேண்டப்படுகின்றது. எனவே, இச்சீவன், புலனுணர்வு உடையதாய் இருக்கும்வரை சிவானந்தத்திற்கு வாய்ப்பற்றதாக உள்ளது. ஆனால் சீவன் புலனடக்கமுடையதாய் இறைநினைவுடையதாயின் அதுவே சிவனாகும் பெற்றி கொண்டதாகும் என்பதை இப்பாடல் தெளிவு படுத்துகிறது.

நவமணிகள்

'கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைரம், வைடூரியம்' என்று நவமணிகளை வரிசைப்படுத்துகிறது அபிதான சிந்தாமணி.[234] திருமந்திரம் பவளம், மாணிக்கம், முத்து, வைரம் ஆகியவற்றோடு மணி, சூரியகாந்தக்கல், பளிங்கு முதலானவற்றையும் குறிக்கிறது.

1. பவளம்

சிவந்த நிறமுடைய பவளம் லிங்கமாக வைத்து வழிபடுவதற்கு உரியது.[235] பவளம் போன்ற சிவந்த நிறமுடையவன் சிவன்[236] சிவன் சடைமுடியும் பவளம் போலச் சிவந்தது.[237] பவளத்தால் ஆன மாலை அணிந்தவள் சக்தி.[238] பவளம் போல ஒளிவீசுபவன் சிவன்.[239] பாச இருளை நீக்கியபின் தன்னோடு

பொருந்திய சிவன் பவள ஒளியோடு இருந்ததாகத் திருமூலர் பாடுகிறார். இதனை,

ஒளிபவளத் தென்னோ டீசன்நின் றானே [240]

என்பதனால் அறியலாம்.

2. மாணிக்கம்

மாணிக்கம் லிங்கமாக வைத்து வழிபடுதற்கு உரியது.[241] சக்தி மாணிக்கம் போல் சிவந்த ஒளிவீசக் கூடியவள்.[242] மாணிக்கம் இழைத்த அணிகலனையும் மணிமுடியையும் அணிந் தவள் சக்தி.[243]

செவ்வானிற் செய்ய செழுஞ்சுடர் மாணிக்கமே [244]

என்னும் பாடற் பகுதியில் சிவன் செவ்வானத்தை விடவும் சிவந்த ஒளி வீசக்கூடிய மாணிக்கம் என்று கற்பனை செய்கிறார் திருமூலர்.

மாணிக்கத் துள்ளே மரகதச் சோதியாய்
மாணிக்கத் துள்ளே மரகத மாடமாய்
ஆணிப்பொன் மன்றில் ஆடும் திருக்கூத்தைப்
பேணித் தொழுதென்ன பேறுபெற் றாரே [245]

என்னும் பாடலில் மாணிக்கம், மரகதம், பொன் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார். இப்பகுதிக்கு உரையெழுதும் ஜி. வரதராஜன் அவர்கள்,

> "மாணிக்கத்துள்ளே மரகதச் சோதி என்பது, சிரசின்மேல் விளங்கும் செவ்வொளியினூடே கொடிபோன்று பின்னிக் கிடக்கும் பச்சை ஒளி. சிவனுக்குச் செம்மையும் சக்திக்கு பச்சையும் கூறுவதை ஒப்பு நோக்குக. மாடமாவது, இவ்வொளியே நிருத்த மண்டபம்" [246]

என்று விளக்கம் தருவர்.

மனித உடலுக்குள்ளே மறைந்து கிடக்கும் சிவனைத் திருமந்திர ஆசிரியர்,

சாணகத் துள்ளே அழுந்திய மாணிக்கம் [247]

என்கிறார்; அவனைப் போற்றி என்றும் நினைக்க வல்லவர்க்கு அவன் மாணிக்க சோதியாக விளங்குவான் என்பதை,

பேணிப் பெருக்கிப் பெருக்கி நினைவோர்க்கு
மாணிக்க மாலை மனம்புகுந் தானே [248]

என்று அதே பாடலில் எடுத்துரைக்கிறார்.

சிவன் மூலாதார, சுவாதிட்டான சக்கரங்களில் செவ்வொளி யாய் நடிப்பவன்; காமாக்கினியாய் விளங்குபவன். அதனால் அவனை,

அரதன மன்றினின் மாணிக்கக் கூத்தன்[249]

என்கிறார் திருமூலர்.

இறைவன் உடலுக்குள் உறைகின்றான்; அதை உணராதவர் இறைவன் வேறு, தாம் வேறு என்று மயங்குகின்றனர். இதனை,

முத்தின் வயிரத்தின் முங்நீர்ப் பவளத்தின்
கொத்தும் பசும்பொன்னின் தூவொளி மாணிக்க
மொத்துயர் அண்டத் துள்ளமர் சோதியை
எத்தன்மை வேறென்று கூறுசெய் வாரே[250]

என்று திருமந்திரம் குறிப்பிடுகிறது. முத்து, வைரம், பவளம், பொன், மாணிக்கம் ஆகியவற்றின் நிறங்களைப் பெற்றுள்ள சிவன் தலையின் மேலும் உடலினுள்ளும் சோதியாக இருக்கின்றான்; அவனைச் சீவன் தன்னிலிருந்து வேறுபட்டவன் என்று கருதுகிறது.

சிவானந்தத்தை உணர்ந்து திளைப்பவரது உடலில் மாணிக்கத்தையும் விட ஒளி வீசுபவனாக இறைவன் வந்து தங்குவான்.[251] பச்சைக் கல்லின் மீது சிவப்புக்கல் பொருந்தும் பொழுது புதிய கருநிற ஒளி வீசுவதைப் போலக் குருவால் பிரணவ உபதேசம் செய்யப்பெற்ற சீடனின் தன்மையும் மாறி அமையும். இதனைத் திருமந்திரம்,

வந்த மரகத மாணிக்க ரேகைபோற்
சந்திடு மாமொழிச் சற்குரு சன்மார்க்கம்
இந்த இரேகை இலாடத்தின் மூலத்தே
சுந்தரச் சோதியுட் சோதியு மாமே[252]

என்று பாடுகிறது. தக்க குருவின் மாமொழியாகிய உபதேசம் பெற்ற சீவனின் உடலில் புருவ மத்தியில் சீவ ஒளிக்குள் சிவஒளி தோன்றும்; இறுதியில் சீவன் சிவனாகும்போது சீவ ஒளி சிவ ஒளியில் அடங்கும் என்பது இப்பாடலின் பொருள்.

3. மரகதம்

இலிங்கமாக வைத்து வழிபடுதற்குரிய பொருள்களுள் மரகதமும் ஒன்று.[253] வைசியர்கள் மரகத லிங்கத்தை வணங்குவர்.[254] 'மாணிக்கத்துள் மரகத சோதி'[255] என்று திருமந்திரம் குறிப்பது தலையின்மேல் விளங்கும் செவ்வொளியுள் கொடிபோன்று பின்னிக் கிடக்கும் பச்சை ஒளி என்பதைக் குறிக்கும். செவ்வொளி, சிவன்; பச்சையொளி, சக்தி. செவ்வொளியுடன் மூலாதாரத்தில் உள்ள சக்தியைச் சேர்க்கவல்லவர் ஊனுடலில் ஒளியாக இறைவனைக் கண்டு இறுதியில் அவனோடு இணைவர் என்பது திருமந்திரம் உணர்த்தும் செய்தி.

4. முத்து

முத்தும் லிங்க வழிபாட்டிற்கு ஏற்றது.[256] முத்தும் பவளமும் சேர்ந்த ஆரத்தை அணிந்தவள் சக்தி;[257] முத்து போன்ற பல்லை உடையவர்கள் பெண்கள்.[258]

குண்டலினிப் பயிற்சியால் சிரசில் உள்ள சகஸ்ரதளத்தில் சென்று மூலாதாரத்தில் உள்ள மூலாக்கினியைக் கலக்கச் செய்பவர்கள் முத்துப் போன்ற சிவசக்தியைத் தம் உடலில் முத்துப் போன்ற வெண்ணிற ஒளியாகக் காண்பர்.[259]

சிவத்தை நேரே பத்திகொண்டு அறிந்துகொள்ள முடியாது; இறையுணர்வு கொண்டு ஊர்த்துவ சகஸ்ரதளம் மலரப் பெற்ற குருவின் துணையோடுதான் ஒருவன் குண்டலினி சக்தியை மேலெழச் செய்து பேரின்பம் நுகரமுடியும். இந்தக் கருத்தினை,

ஒத்துல கேழும் அறியா ஒருவனென்
றத்தன் இருப்பிடம் ஆரறிவார் சொல்லப்
பத்தர்தம் பத்தியிற் பாற்படில் அல்லது
முத்தினை யார்சொல்ல முந்துகின் றாரே[260]

என்னும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது. இங்கு முத்து என்பது 'முத்துப் போன்ற வெண்ணிற ஒளியில் விளங்குகின்ற' சக்தியைக் குறிக்கிறது.

5. வயிரம்

சிரசின் மேலுள்ள அண்டத்தில் சோதியாகவும், உடலில் சோதியாகவும் விளங்கும் சிவனை, எத்தன்மை கருதி வேறானவன் என்று கூற இயலும் என வினா எழுப்புமிடத்தில் திருமந்திரம், 'முத்தின் வயிரத்தின்' என்று இறைவன் இயல்பையும் ஒளியையும் விளங்கச் செய்கிறது.[261]

6. மணி

மணி என்று தனியாக நவமணிகளுள் ஒன்று சொல்லப்படவில்லை எனினும் 'நீலம்' என்னும் ஒன்றனை இது குறிக்கிறது என்று கொள்ளலாம்; பிற மணிகளையும் குறிக்கும் ஒரு பொதுச் சொல்லாகவும் இது வழங்கப்படும்.

ஆய்ந்துகொள் வார்க்கரன் அங்கே வெளிப்படும்
தோய்ந்த நெருப்பது தூய்மணி சிந்திடும்[262]

என்னும் பாடலில் 'சுழுமுனையின்மேல் சென்றவர்க்குத் துன்பம் களையும் சிவன் நாத தத்துவத்தில் வெளிப்படுவான்; நாதத்தில் விளங்கும் சிவன் பரிசுத்தமான ஒளியை வீசிக்கொண்டு இருப்பான்' என்னும் கருத்து உணர்த்தப்படுகிறது; ஈண்டுத் தூய்மணி என்னும் தொடர் வழங்கப்பட்டுள்ளது.

'எறிமணி'[263] என்றும், 'பொன்மணி, பன்மணி, நன்மணி, சொன்மணி'[264] என்றும் பலவாறாக மணி திருமந்திரத்துள் ஆளப்பட்டிருத்தலைக் காண்கிறோம். பெரும்பாலும் 'ஒளி' என்னும் பொருளில் அது வழங்கப்பட்டுள்ளது.

சிவபெருமானைப் பற்றிச் சொல்லும் ஓரிடத்தில் திருமூலர் நீலம் என்னும் சொல்லாலேயே மணியைக் குறிக்கின்றார். அது,

உத்தமன் எங்கும் உகக்கும் பெருங்கடல்
நித்திலச் சோதியன் நீலக் கருமையன்[265]

என்னும் பாடற்பகுதியால் விளங்கும்.

நீலமணி போன்ற விந்தினை நெஞ்சிற் கட்டியவன் என்று சொல்லுமிடத்திலும் இஃது இடம் பெற்றுள்ளது.[266]

தூய்மையான சிவந்த மணி போன்ற சிவனை மரணத் தறுவாயில் நினைந்து உருகுவது அஞ்ஞானிகளால் இயலாது என்று குறிக்கும் பாடலிலும் ஆசிரியர் 'தூய்மணி' என்னும் தொடரைப் பயன்படுத்தியுள்ளார்.[267]

தேவியின் திருமேனி யழகை வருணித்துப் பாடும் இனிய பாடல் ஒன்றிலும் 'நல்ல மணிபொதிந்த ஆடை'யினை அணிந்தவள் அவள் என்று திருமந்திரம் குறிக்கிறது.[268]

7. பளிங்கு

படிக லிங்கம் அந்தணர் வழிபாட்டிற்குரிய லிங்கமாகும்[269] சிவனது பஞ்ச முகங்களில் நடுமுகம் வெண்பளிங்கு போன்றது.[270] இஃது உச்சியில் உள்ளது; இதனை ஈசானம் என்றும் கூறுவர்.

பிராணாயாமம் செய்பவரது உடல் பளிங்குபோலத் தூய்மை உடையதாய் இருக்கும்; முதுமை அடைந்தாலும் அவரது உடல் இளமையாகவே காணப்பெறும். மூலாதாரத்தில் உள்ள சக்தியே மேலேறும் போது மாற்றமடைந்து சுழுமுனையில் விளங்குவாள்.[271] பளிங்கு போன்ற சீவன் பவளம் போன்ற சிவனில் ஐக்கியமாகும். இதனை,

பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே[272]

என்கிறது திருமந்திரம். பளிங்கு மாணிக்கத்தின் நிறத்தை ஏற்க வல்லது. அது மாணிக்கம் போன்ற சிவஒளியில் ஐக்கியமாகி மாணிக்க நிறமாகவே காட்சியளிக்கும்.[273]

8. கல்

சூரியகாந்தக் கல், சந்திரகாந்தக் கல் என்று இருவகையான கற்களைத் திருமந்திரம் சுட்டுகிறது.

சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தஞ் சூழ்பஞ்சைச் சுட்டிடா

> **சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்**
> **ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே**[274]

என்னும் திருமந்திரப் பாடல் சூரிய காந்தக் கல்லின் இயல்பினைச் சுட்டி ஒருண்மையை விளக்குகிறது. சூரியகாந்தக் கல்லும் பஞ்சும் ஒரே இடத்தில் இருந்தாலும் கல் பஞ்சைச் சுடாது; ஆனால், சூரிய ஒளி சூரியகாந்தக் கல் வழியாகப் பஞ்சைச் சூழும் போது பஞ்சு பற்றியெரியும். அதைப்போல் சீவனாகிய சூரிய காந்தக் கல்லைச் சூழவுள்ளது பாசமாகிய பஞ்சு; சீவனும் பாசமும் மட்டும் இருக்கும்போது சீவனால் பாசத்தைச் சுட்டெரிக்க முடியாது; சூரியனைப் போன்ற குருவின் உபதேசத்தால் அவ்வழி நிற்கும் சீவன் பாசத்தைச் சுட்டெரிக்கும் என்பது இவ்வுவமையின் விளக்கமாகும்.

> **கதிர்கண்ட காந்தம் கனலின் வடிவாம்**
> **மதிகண்ட காந்தம் மணிநீர் வடிவாம்**
> **சதிகொண்ட சாக்கி யெரியின் வடிவாம்**
> **எரிகொண்ட ஈசன் எழில்வடி வாமே**[275]

என்னும் திருமந்திரப் பாடல் இருவகைக் கற்களையும் குறிப்பிடுகிறது. சூரியனைக் கண்ட சூரியகாந்தக் கல் நெருப்பின் வடிவமாக ஒளிவீசும்; சந்திரனைக் கண்ட சந்திரக்காந்தக் கல் முத்துப் போன்ற நீர் வடிவமாகும். சக்கிமுக்கிக் கற்கள் மோதுவதால் தீ என்ற புதுப்பொருள் உண்டாகும். மூலாதாரத்தில் உள்ள அக்கினி மண்டலத்தைத் தன்னுள் அடக்கிக்கொண்ட சிவன் அக்கினியாக மாறாது, அக்கினியைக் குளிர்ந்த சந்திர ஒளியாக மாற்றுவான். சூரியகாந்தக் கல்லும், சந்திரகாந்தக் கல்லும் சூரிய சந்திரர்களின் தன்மையைப் பெறுவதுபோல், சிவன் அக்கினியின் தன்மையைப் பெற்று அக்கினி ஆகாது, அதனையும் குளிர்ந்த ஒளியாக மாற்றும் தனித் தன்மை வாய்ந்தவன். சீவன்தான் பாவனை நிலையில் சிவனால் சிவனாக்கப்படுமே அன்றிச் சிவன் எந்நிலையிலும் சீவனின் தன்மைகளைப் பெறாது; சீவனாக மாறாது. இந்தத் தத்துவ விளக்கத்திற்கு இக்கற்கள் சிறந்த உவமைகள் ஆயின.

இவ்வாறு நவமணிக் கற்களையும், பளிங்கையும், சூரிய சந்திரகாந்தக் கற்களையும் வாழ்வியல் சிந்தனைகளைத் தெளிவு படுத்துவதற்குப் பயன்படுத்திக் கொண்டுள்ளது திருமந்திரம்.

தொகுப்புரை

உருவத்தால் மனிதனாக இருப்பதால் மட்டும் மனிதனாகப் பிறந்ததற்குரிய பயன் கிட்டாது. மனிதன் மனத்தினைக் கட்டுப்

படுத்திப் புலனடக்கம் செய்து, உலகப்பற்றை நீக்கி, இறைப் பற்றொன்றையே பற்றுக்கோடாகக் கொண்டு உய்வடைய வேண்டும் என்பது திருமூலர் கொள்கை. இதனை விளக்குதற்கு அவர் திருமந்திரத்தில் விலங்குகளின் பல்வேறு பண்புகளையும் செயல்களையும் உவமைகளாகவும், உருவகங்களாகவும், குறியீடு களாகவும் பயன்படுத்தியுள்ளார் என்பது இதுவரை ஆய்ந்து காணப்பட்டது.

கன்று தாய்ப்பசுவின் பாலை யுண்ணுதல் போன்று சீவன் இறையுணர்வைப் பெறுதல் வேண்டும்;

தாய்ப்பசுவைப் பிரிந்த கன்று கதறுதலைப் போன்று சீவன் கதறிச் சிவனை அடையவேண்டும்;

பசுவாக உள்ள சீவன் பாசம் நீங்கிச் சிவனாக முயலுதல் வேண்டும்; பாலில் நெய் கலந்திருத்தலைப் போன்றும், நீரில் பால் கலந்திருந்தலைப் போன்றும் சீவனில் கலந்துள்ள சிவனை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்;

வெண்ணிற எருது போன்ற வெண்மையான ஒளியைச் சீவன் தன்னுள் காணவேண்டும்;

இடகலை பிங்கலைகளை ஒன்றுபடுத்த சுழுமுனை என்னும் கடா அமையும்; யோகத்தினால் சுழுமுனை திறக்கச் சகஸ்ரதள மும் திறக்கும்; இதுவே இறைவனை அடைய முதற்படி;

ஆன்மாவாகிய அமைச்சன் சித்தமாகிய எருமைக்கு அறிவுரை கூற, அச்சித்தம் இறையுணர்வு பெறும்;

ஆட்டின் மடியில் பால் ஊறும்; அதரில் அன்று. அதுபோல் சிவகுருவின் அருளால் மட்டுமே சீவன் சிவானந்தம் அடைய முடியும்; சரியை, கிரியை, மந்திரம் முதலானவற்றால் அன்று.

மனம் நாய் போன்றது; அலையும் தன்மையது; அதைக் கட்டுப்படுத்த வேண்டும்; நாய் கதிரவனைப் பார்த்துக் குரைப்பது போன்றது சமயவாதிகள் வாதம் செய்வது; இதனால் இறைவனை அடைய முடியாது;

மாயவித்தை காட்டிப் பொருள்சேர்க்கும் போலி ஞானிகள் கழுவடி நாய்களைப் போன்றவர்கள்; வினைநீங்கிய சிவஞானிகள் அத்தகையோரல்லர்;

உயிருள்ளபோதே பிராணசெயம் பெறாதவர் மடம்புகு நாயினைப் போன்றவர்கள்; காமச் செயலில் விருப்பமுடையோர் மலமுண்ணும் நாயனையராவர்;

கலைகளாகிய குதிரைகளைத் தன்மையறிந்து இயக்குபவன் இறையடியைச் சேருவான்; மெய்யைவிட்டு அகண்டத்தைப்

பற்றியிருப்போர்க்குப் பிராணனாகிய குதிரை வசப்பட்டு நிற்கும்; நவத்துவாரங்களை அடக்கி வாசியாகிய குதிரையை மேல்நோக்கிச் செலுத்தினால் சீவயாத்திரை செய்து சிவனை அடையலாம்;

பூதங்கள், தன்மாத்திரைகள், புலன்கள் அனைத்தும் யானைகள்; இவற்றை அடக்கி வென்றவனே இறையின்பம் பெறவியலும்; பிரணவமாகிய விந்து நாதங்களில் யானை போன்ற இந்திரியங்கள் வசப்படும்; புலன்களாகிய யானைகள் கரும்பாகிய உடலை அழிக்குமுன், சீவன் யானைவடிவ இறைவனை மனத்தில் தியானிக்க, ஞானம் உண்டாகும்; சீவன் குருவருளால் ஆன்ம ஒளியை உணரும்போது பஞ்சபூதங்கள் முதலானவை பரத்தில் ஒடுங்கிவிடும்;

முயலாகிய சிவன் ஞான சாதனையில் தர்க்கம் செய்பவர் கட்கு அப்பாற்பட்டவன்; சரியை, கிரியை, யோகம் ஆகிய நெறிநிற்பவர் ஞானம்பெற்று அவனை அடைவர்;

காடாகிய உடலில் புலன்களாகிய சிங்கங்கள் உள; அவற்றின் பல்லையும் நகத்தையும் வெட்டினால் அவை அடங்குவதுபோல் புலன்களையும் புறம்செல்லவொட்டாது அடக்க வேண்டும்; அதனால் இறைவனை எய்தலாம்;

தசநாடிகள் புலிகள் அனையன! ஆன்மாவாகிய புலி பதுங்கி னாலும் புலனை வென்றால் மன அடக்கம் வரும்; அதனால் கோள்களின் இயக்கம் மனிதனைப் பாதிக்காது;

காமவாயு, நரியை ஒத்தது; அது தங்கும் கொட்டில் விந்துப்பை; காட்டு நரியின் ஊளைகேட்டு நாட்டு மக்கள் அஞ்சுவ தில்லை; அதுபோல் மனம் ஒன்றுபடாத சாதகன் செய்யும் சரியை முதலானவற்றால் எந்தப் பயனுமில்லை;

சீவன் மான்கன்றினைப்போல் எப்போதும் இளமையுடன் விளங்கும்; சிவனது கருணையும், இளமையும், சக்தியும், அசுத்த மாயையும் மானாக உருவகிக்கப்பட்டுள்ளன;

காமம், குரோதம் முதலிய ஆறும் ஒட்டகங்கள்; புலன்களை அடக்குதல் ஆமை ஓட்டினுள் தன்னை அடக்கிக்கொள்வது போன்றது; நற்றவம் செய்யாதவரின் இல்லறம் முதலைக்கஞ்சி, கரடியின் கையில் சிக்கியதோடொக்கும்; மாயையில் சிக்கி, மும்மலங்கள் சூழ விளங்கும் சீவன் பன்றியோடு ஒத்தது; குண்டலினி பாம்பனையது; அதனைச் சித்ரணி நாடிவழி மேலேற்ற அமுதம்பெற்றுச் சிவனையடைவர் சாதகர்;

சீவனாகிய வெள்ளெலி முக்குண வசப்பட்டு நிற்பது; சீவன் உடும்பெனப் பிரணவத்தைப் பற்றிக்கொண்டு குண்டலினி யோகம் செய்தால் உய்தி பெறும். சீவனாகிய வேடம் மீனாகிய விந்துவைச் செயம்செய்து சிவனாகும்.

— இவை விலங்குகளை முன் வைத்துத் திருமூலர் உணர்த்தும் தூய சிந்தனைகளாகும்.

ஐம்புலன்களைக் கூடும் பறவைகளாக உருவகிக்கிறார் திருமூலர்; இவை உலக மாயையில் சிக்கினால் சீவன் சிவ ஒளியில் திளைக்க முடியாது; காமம் முதலிய ஆறனையும் 'ஆறு பறவைகள்' என்றும், கீழிறங்கும் நூறு நாடிகளை 'நூறு பறவைகள்' என்றும் திருமந்திரம் குறிக்கிறது; புலன்களாகிய 'கூபப் பறவைகள்' தம் செயலொழிதல் வேண்டும் என்றும் சுட்டுகிறது.

சீவன்கள் பறவைகள்; அவை தங்கும் காடுகளே உடல்கள்.

வீரிய நீர் சிற்றின்பத்தால் வீணாதல் என்பது 'கூத்தி வளர்த்த தோர் கோழிப்புள்'ளிற்கு ஒப்பாகும்.

கிளியின் மொழி இனிதாதல்போலக் குண்டலினி யோகத் தாலும் இனிமை தோன்றும்.

இல்லறக் கடமையின்போது உலக நினைவுடனும், முடிந்தபின் சிவ சிந்தனையுடனும் இருக்கும் சீவனைப் பாசம் அணுகாது; அது 'பனையுள் இருந்த பருந்து' ஒக்கும்.

பருந்தின் நிழல்பட்டுப் பாம்பு அடங்குதல் போன்றது விருப்பு வெறுப்பற்ற ஆன்மாவின் உபசாந்த நிலை. பாம்பு கடித்த வனுக்குக் கருடமந்திரம் எவ்வாறோ அத்தகையது சீவனுக்கு ஞானகுருவின் நினைவு.

உடலின்பத்தில் திளைக்காத ஆன்மா 'பிறவாத வண்டு' ஆகும்; ஆன்மா, பெடைவண்டு; சீவனுக்கு ஒளிகாட்டும் சிவன், ஆண்வண்டு.

கொக்காகிய சீவன் இறையருளாகிய மீன் கிடைக்கும்வரை பாசி படர்ந்த குளமாகிய உலகை நோக்கிக் காத்திருக்கும். பிராணாயாமம் செய்யும் சீவன் இறையொளி முழுமையாகக் கிடைக்கும்வரை கொக்குப் போல் பொறுத்திருக்கும்.

சீவன் யோகநிலையில் உள்ளபொழுது தோன்றும் ஒலி 'புட்கள் சிலம்பு'தலுக்கு ஒப்பாகும்.

இறைவனுக்குரிய ஆன்மா தாயின் உடலில் வளர்தல் என்பது குயிலின் முட்டையைக் காக்கை வளர்ப்பதற்கு இணையாகும். மூலாதாரத்தில் தோன்றும் ஒலி குயிலின் குரலை ஒத்தது.

சக்தியின் பாதங்கள் மயிலின் தோகை போன்று மிகவும் மென்மையானவை.

சிவன் சீவனிடமுள்ள வினைகளைப் பிரிப்பது அன்னம் நீரிலிருந்து பாலினைப் பிரிப்பது போன்றதாகும்.

வண்டு மலருக்கு மலர் தாவி அலையும்; அன்னம் தான் வாழும் தாமரை மலரிலேயே இருந்து மகிழும். அதுபோலக் கிரியையாளர் இறைவழிபாடு செய்தல் வேண்டும்.

அழியக்கூடிய உயிர் உடம்பாகிய முட்டையை, இரண்டு முட்டைகளாக விளங்கும் சூரிய சந்திரர்களான கண்களின் உதவியால் அழியாததாக்க வேண்டும்.

— இவை பறவைகள் பற்றிய உவமை உருவகங்களின் மூலம் திருமந்திரம் வழங்கும் வாழ்வியற் செய்திகளுள் சில.

சிவப்பயிர் செழித்து வளர, மனம் என்னும் நிலம் பண்பட்டு இருத்தல் வேண்டும்.

சுக்கிலம் விளைநிலம்; இடைகலை, பிங்கலை ஆகியன கரைகள்; பிராணாயாமம் நீர்; இவற்றின் சிறப்பால் சிவப்பயிர் தழைக்கும்.

சிவப்பயிர் தழைக்க ஞான உழவே வேண்டும்; அடயோகமாகிய களருழவு பயன்தராது.

சிற்றின்பத்தில் ஈடுபடுதல் வித்தினைக் குற்றியுண்பதாகும்; அடயோகநெறி வித்தினைச் சுட்டு உண்பதாகும்; விந்துசெயம் பெற்று, சீவனுள் இறைநடம் காணல் வித்தினை வறுத்தலாகும்.

சுரோணிதம், அத்திப்பழம்; சுக்கிலம், அறைக்கீரை வித்து தாயின் வயிறு, உலை; அடும்கூழ், உயிர்.

ஞானசாதனையின் முதல் துடிப்பு, வழுதலை வித்து; வைராக்கியத்தின் அடுத்த வெளியீடு, பாகற்கொடி; தத்துவ ஆராய்ச்சி செய்யப் பூசணிமலர் பூக்கும்; இறுதியில் ஞான வாழ்வின் தலைமைப் பேறாகிய வாழைக்கனி கிட்டும்.

உடலாகிய வித்து வளர்ந்து புலனடங்கி இறுதியில் பேரின்பம் நுகருமாயின் அவ்வான்மா மெய்வித்து; இன்றேல் பொய்வித்து.

நெல்லின் முளை, ஆன்மா; சூழ்ந்திருக்கும் உமியும் தவிடும், மும்மலங்கள்.

சீவன் குண்டலினி யோகத்தால் சிரசில் உள்ள சகஸ்ரதள மலரில் சிவனொடு ஒன்றுதல் என்பது கூகை குருந்தமரத்தின் மீது ஏறுதற்கு ஒப்பானது.

சிவன், ஆலமரம்; ஆல்—அமர்—அம், அதாவது நஞ்சு அமரும் அழகிய கண்டத்தை உடையவன்.

மலரும் மணமும் இணைந்திருப்பது போலச் சிவனும் சக்தியும் ஒன்றியிருப்பர்.

உலகவாழ்வு, காஞ்சிரம்பழம் போன்றது; அதை ஒதுக்குதல் வேண்டும்.

உலகில் வாழ்ந்தாலும் உலக நடப்புக்களில் பற்றற்று விளங்கும் மக்கள் 'புளியுறு புன்பழமும்' அதன் தோடும் போன்றவர்கள்.

சீவன் எட்டியும் வேம்பும்போல் தீமை செய்யும் உலகபோகம் விட்டு, வாழையும் கற்கண்டும் தேனும்போல் நன்மைசெய்யும் சிவபோகத்தை நாடவேண்டும்.

— இவை தாவரங்களின் அடிப்படையில் திருமந்திரம் விளக்கும் வாழ்வியற் சிந்தனைகளில் சில.

சுரோணிதம் பொன்னிறம், சுக்கிலம் வெண்ணிறம்; இவ்விரண்டும் அழியாது இருப்பின் சுழுமுனை திறக்கும்.

விந்துசெயம் பெற்றவர் சிவநீரால் தம் உடல் பொன்னிறமாக்கப் பெறுவர்; பொன்தகட்டில் நவாக்கரி, சாம்பவி சக்கரங்களை வரைந்து வழிபட்டால் வளம் பெருகும். செம்பு போன்ற மலம் நிறைந்த உடலில் 'சிவாய நம' என்று செபித்தால் உடல் பொன்னொளி பெறும்.

இரும்பு பொன்னானபின் மீண்டும் இரும்பாகாது; அதுபோல, குருவருளால் சிவத்துடன் இணைந்த சீவனுக்கு மீண்டும் பிறவியில்லை. — இவை உலோகங்களின் அடிப்படையில் திருமந்திரம் தரும் செய்திகளுட் சில.

தாயம் ஆடுதற்குப் பலகை, காய்கள், கட்டை ஆகியன தேவை என்றாலும் ஆடும் மனிதன் இன்றி ஆட்டமில்லை; அதுபோல, உடலிலுள்ள புலன்களைக் கட்டுப்படுத்திச் சிவானந்தம் பெறுவதற்குச் சீவனின்றேல் ஒரு பயனுமில்லை என்னும் கருத்து விளையாட்டைக் கொண்டு திருமந்திரம் விளக்கும் ஒரு செய்தி.

பவளம், மாணிக்கம், மரகதம், முத்து, பளிங்கு முதலானவற்றால் லிங்கம் செய்து வழிபடலாம். சூரியகாந்தக்கல்வழி சூரிய ஒளி பாய்ந்தால் சூழ்ந்த பஞ்சு எரியும்; அதுபோல, சீவன் குருவினருளால் பாசத்தைச் சுட்டெரிக்கும்.

இங்ஙனம் விலங்குகள், பறவைகள், தாவரங்கள், உலோகங்கள், விளையாட்டு, நவமணிகள் முதலானவற்றின் மூலம் திருமந்திரம் பல அரிய சிந்தனைகளை மக்களுக்கு வழங்கியுள்ளது.

அடிக்குறிப்புகள்

1 தொல். பொருள். நூ. 571
2 மே. கு. நூ., இளம்பூரணர் உரை, ப. 560
3 திருமந்திரம், பா. 2874
4 ,, பா. 2875
5 ,, பா. 2877
6 ,, பா. 2883
7 ,, பா. 2884
8 ,, பா. 2918
9 ,, பா. 30
10 ,, பா. 943
11 ,, பா. 1453
12 ,, பா. 2446
13 ,, பா. 2627
14 பிரம்மஸ்ரீ கணபதி சுவாமிகள், ஊனுடம்பு ஆலயம், பக். 88—91
15 திருமந்திரம், பா. 1643
16 ,, பா. 1435
17 ,, பா. 2406
18 ,, பா. 2410
19 ,, பா. 2411
20 ,, பா. 2409
21 ,, பா. 2016
22 ,, பா. 2193
23 ,, பா. 134
24 ,, பா. 2115
25 ,, பா. 450
26 ,, பா. 89
27 ,, பா. 632
28 ,, பா. 2111 (வணங்கும் தன்மை)
29 ,, பா. 2111 (எருது உருவ அமைப்பு)
30 ,, பா. 1140
31 ,, பா. 2889
32 ,, பா. 2925
33 ,, பா. 2937
34 ,, பா. 1108
35 ,, பா. 1558
36 ,, பா. 1199
37 ,, பா. 1671
38 ,, பா. 2148
39 ,, பா. 753
40 ,, பா. 2893
41 ஜி. வரதராஜன், திருமந்திரம்—1, ப. 593
42 திருமந்திரம், பா. 457
43 ,, பா. 564
44 ,, பா. 549
45 ,, பா. 565
46 ,, பா. 566

47 திருமந்திரம், பா. 2128

48 ,, பா. 2131

49 ,, பா. 2159

50 ,, பா. 2276

51 ,, பா. 2603

52 ,, பா. 722

53 ,, பா. 3025

54 ,, பா. 2888

55 ,, பா. 206

56 ,, பா. 606, 607

57 ,, பா. 1127

58 ,, பா. 2023

59 ,, பா. 2034

60 ஜி. வரதராஜன், திருமந்திரம்— 3, உரை, ப. 148

61 திருமந்திரம், பா. 1985

62 ,, பா. 2094

63 ,, பா. 2361

64 ,, பா. 2567

65 ,, பா. 285

66 ,, பா. 2290

67 ,, பா. 2344

68 ,, பா. 2910

69 ,, பா. 2512

70 ,, பா 2884

71 ,, பா. 2026

72 ,, பா. 2214

73 ,, பா. 2888

74 ,, பா. 2893

75 ,, பா. 2881

76 ,, பா. 2993

77 ,, பா. 41

78 ,, பா. 738

79 ,, பா. 1132

80 ,, பா. 89

81 ,, பா. 385

82 ,, பா. 2893

83 குறள், 126

84 திருமந்திரம், பா 133

85 ஜி வரதராஜன், திருமந்திரம்—3, உரை, ப. 211

86 திருமந்திரம், பா 2158

87 ,, பா. 2304

88 ,, பா. 1642

89 பட்டினத்தார் பாடல்கள், திருத்தில்லை, 11

90 திருமந்திரம், பா. 2916

91 ,, பா 2887

92 ,, பா 2892

93 ஜி. வரதராஜன், திருமந்திரம்—3, உரை, ப. 593

94 திருமந்திரம், பா. 293

95 திருமந்திரம், பா. 539
96 ,, பா. 2910
97 ,, பா. 2923
98 ,, பா. 2897
99 ,, பா. 2905
100 ,, பா. 2908
101 ,, பா. 2891
102 ,, பா. 2664
103 ப. இராமநாத பிள்ளை, திருமந்திரம், ப. 1074
104 திருமந்திரம், பா. 2220
105 ,, பா. 2873
106 ,, பா. 1244
107 ,, பா. 1392
108 ,, பா. 1398
109 ,, பா. 1403
110 ,, பா. 2896
111 ,, பா. 47
112 ,, பா. 2513
113 ,, பா. 2659
114 ,, பா. 3033
115 ,, பா. 2885
116 ,, பா. 2902
117 ஜி. வரதராஜன், திருமந்திரம்—3, ப. 599
118 திருமந்திரம், பா 194
119 ,, பா. 2097
120 ,, பா. 161
121 ,, பா. 591
122 ,, பா. 2927
123 ,, பா. 2934
124 ஜி. வரதராஜன், திருமந்திரம்—3, உரை, ப. 614
125 திருமந்திரம், பா. 488
126 ,, பா 2810
127 ,, பா. 1163
128 ,, பா. 85
129 தொல். பொருள். இளம்பூரணர் உரை, பக். 296—297
130 குறள். 2, 3, 4, 7—10
131 குறள், உரைப்பாயிரம், பரிமேலழகர் உரை, ப. 1
132 திருமந்திரம், பா. 2944
133 ,, பா. 120
134 ,, பா. 1497
135 ,, பா. 163
136 ,, பா. 728
137 ,, பா. 2871, 2872
138 ,, பா. 2920
139 ,, பா. 41
140 ,, பா. 188
141 ,, பா. 2100
142 ,, பா. 2880

143 திருமந்திரம், பா. 2886
144 ,, பா. 489
145 ,, பா. 1970
146 ,, பா 2086
147 ,, பா. 660
147a ,, பா. 120, 1964, 1970
148 ,, பா. 160
149 ,, பா. 2009, 3025
150 ,, பா. 2086
151 ,, பா. 2869
152 ஜி. வரதராஜன், திருமந்திரம்—3, உரை, ப. 581
153 திருமந்திரம், பா. 2886
154 ,, பா. 2884
155 ,, பா. 489
156 ,, பா. 1932
157 ,, பா. 29, 1338, 1405
158 ,, பா. 2921
159 ,, பா. 1706
160 ,, பா 2087
161 ,, பா. 2884
162 ,, பா. 2914
163 ,, பா. 2915
164 ,, பா. 2916
165 ,, பா. 2899
166 ,, பா. 2917
167 ,, பா 109, 165, 285, 2960, 3042
168 ,, பா. 610
169 ,, பா. 2989
170 ,, பா. 470
171 ,, பா. 726, 1084
172 ,, பா. 1085, 1144
173 ,, பா. 1100
174 ,, பா. 1325, 1[illegible]19
175 ,, பா. 2828
176 ,, பா. 2949
177 ,, பா. 1063
178 ,, பா. 1839, 817, 1838
179 ,, பா. 1735
180 ,, பா. 1836, 1837, 1848
181 ,, பா. 1719
182 ,, பா. 1137, 3014
183 ,, பா. 456
184 ,, பா. 2892
185 ,, பா. 2931
186 ஜி. வரதராஜன், திருமந்திரம்—3, உரை, ப. 613
187 திருமந்திரம், பா. 2946
188 ,, பா. 1064
189 ,, பா. 315

190 திருமந்திரம், பா. 2634, 3038
191 ,, பா. 2721, 2963
192 ,, பா. 2997
193 ,, பா. 2992
194 ,, பா. 2593
195 ,, பா. 2901
196 ஜி. வரதராஜன், திருமந்திரம் – 3, உரை, ப. 598
197 திருமந்திரம், பா. 2365
198 ,, பா. 2639
199 ,, பா. 2667
200 ,, பா. 324, 325, 326, 329, 334, 385, 719, 808, 2081, 2365, 2523, 2724, 2976
201 ,, பா. 1506, 3029
202 ,, பா. 116
203 ,, பா. 2299
204 ,, பா. 849
205 ,, பா. 2900
206 ,, பா. 2838; ஜி. வரதராஜன், திருமந்திரம்—3, ப. 565, எட்டு ஆசைகள்
207 சுந்தரர் தேவாரம், ப. 415
208 திருமந்திரம், 5, 7, 40, 271, 277, 300, 626, 756, 812, 907, 1628. 2064, 2360, 2516, 2695, 2859, 2980, 3007, 3034, 2744
209 ,, பா. 1456, 2740, 2742, 2723, 2749
210 ,, பா. 1047, 1147, 1369, 1412, 1413, 2640
211 ,, பா. 1087
212 ,, பா. 1106, 1107, 1248
213 ,, பா. 1820, 2781
214 ,, பா. 815, 834, 836
215 ,, பா. 847
216 ,, பா. 903
217 ,, பா. 905, 906, 907, 2709
218 ,, பா. 2054
219 ,, பா. 1302, 1323, 1327
220 ,, பா. 2910
221 ,, பா. 407, 831
222 ,, பா. 1719
223 ,, பா. 1311
224 ,, பா. 902, 905, 1720
225 பத்திரகிரியார் பாடல்கள், பா. 179
226 திருமந்திரம், பா. 593
227 ,, பா. 1398, 1403
228 ,, பா. 2309
229 ,, பா. 2592
230 ,, பா. 866
231 ,, பா. 2051
232 ,, பா. 2894
233 ,, பா. 2866

234 அபிதான சிந்தாமணி, ப. 942
235 திருமந்திரம், பா. 1719
236 ,, பா. 2819
237 ,, பா. 72
238 ,, பா. 1393
239 ஜி. வரதராஜன், திருமந்திரம்—3, பாடல் 2695 உரை
240 திருமந்திரம், ப.ா. 2695
241 ,, பா. 1719
242 ,, பா. 1082
243 ,, பா. 1317, 1377, 1400
244 ,, பா. 130
245 ,, பா. 131
246 ஜி. வரதராஜன், திருமந்திரம்—1, ப. 65
247 திருமந்திரம், பா. 1843
248 ,, பா. 1843
249 ,, பா. 2743, 2761
250 ,, பா. 2819
251 ,, பா. 2827
252 ,, பா. 2670
253 ,, பா. 1719
254 ,, பா. 1721
255 ,, பா. 131
256 ,, பா. 1719
257 ,, பா. 1376, 1393
258 ,, பா. 2832
259 ,, பா. 1194, 1214, 1382, 1408, 2819, 2984 3019
260 ,, பா. 2626
261 ,, பா. 2819
262 ,, பா. 296
263 ,, பா. 296
264 ,, பா. 1009, 1083, 1544
265 ,, பா. 3019
266 ,, பா. 1506
267 ,, பா. 1376, 1403
268 ,, பா. 1376, 1403
269 ,, பா. 1719
270 ,, பா. 1735
271 ,, பா. 1214
272 ,, பா. 114
273 ,, பா. 2482
274 ,, பா. 117
275 ,, பா. 1653

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே

— *திருமந்திரம் 1823*

இயல் — ஐந்து

திருமந்திரமும் ஆன்மீக வாழ்வும்

ஆன்மீக வாழ்வு

திருமந்திரம் ஒரு வாழ்வியல் நூல். உலக இயக்கமும் மனித வாழ்க்கையும் பின்னிப் பிணைந்துள்ள தன்மைகளைத் தொடர்பு படுத்திக் கூறுவது. ஆன்மா அடைய வேண்டிய பக்குவத்தை இனிது விளக்குவது. சமுதாயத்தைச் சார்ந்து வாழும் மனிதன் தன் வாழ்க்கையை இரு பகுதிகளாகப் பகுத்து வாழக் கடமைப் பட்டவன். முதற்பகுதி இல்லறம்; பிற்பகுதி துறவறம்; இம் முறையிலன்றி, இல்லற வாழ்க்கையை மட்டும் மேற்கொண்டு பிறந்து, உண்டு, உறங்கி இறக்கும் மனிதரும் உண்டு. மாறாக, முற்றிலும் துறவு பூண்டு வாழும் வாழ்க்கையையும் சிலர் மேற் கொள்வர். இம்மூன்று நிலைகளில் வாழும் மனிதர்களின் வாழ்க்கை நெறிகள் திருமந்திரத்தில் சுட்டப்பெறுகின்றன.

உலக மக்களின் ஆன்மா இறையுணர்வில் திளைத்துப் பிறவி நீக்கம் பெறவேண்டும் என்பது திருமந்திரத்தின் உயரிய] நோக்கம். துறவறச் சிறப்பையும், இல்லற மேன்மையையும் ஒரு பாடல் உணர்த்துகிறது:

> மொழிந்தது மூவர்க்கும் நால்வர்க்கும் ஈசன்
> ஒழிந்த பெருமை இறப்பும் பிறப்பும்[1]

என்னும் பாடலில் 'மூவர்க்கும்' என்பது சிவயோக மாமுனி, பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆகிய மூவரைக் குறிக்கிறது; சிவ பெருமான் இவர்களுக்கு உலகுடன் இருந்து உலகுக்கு அருளும் நெறியை உணர்த்தினார். 'நால்வர்க்கும்' என்பது சனகாதி நால்வரைக் குறிக்கிறது; இவர்களுக்குச் சிவபெருமான் உலகை விட்ட துறவற நெறியை அருளினார். இருநெறியிலும் இறை யுணர்வில் ஈடுபட்டுப் பிறவி நீக்கம் பெறுவதே குறிக்கோள்

ஆகும். இவர்கள் அனைவர்க்கும் ஆன்ம உபதேசம் செய்து, இறப்பையும், அதைத் தொடர்ந்து வரும் பிறப்பையும் நீங்கச் செய்தார் சிவபெருமான். திருமூலர் நெறி, இந்த இருநெறிகளையும் இணைப்பதாகும்.

பதிற்றுப்பத்துள் மூன்றாம் பத்து, ஆன்மீக வாழ்வினால் சுவர்க்கம் சென்றதற்கான சான்றினைத் தருகின்றது. பாலைக் கௌதமனார் எனும் புலவர் பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாடி, "யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகல் வேண்டும்" என்று பரிசில் வேண்டினார்; அவர் விரும்பியபடியே சேர மன்னனும் ஒன்பது பெருவேள்விகளை வேட்பித்தான்; பத்தாவது வேள்வியிற் புலவரும் அவர் மனைவியும் காணாராயினர்.[2] பாலைக் கௌதமனார் இல்லறத்தில் ஈடுபட்டவர்; பின் துறவற நெறியை மேற்கொண்டவர். யாகத்தின் மூலம் தான்மட்டு மல்லாது தன் மனைவியோடும் வீடுபேறடைந்தார். இதனால் வீடுபேறு என்ற ஒன்று உண்டு என்பதும், அதனை அடையும் தகுதி உலகத்தில் பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கு உண்டு என்பதும், அதில் ஆண் பெண் என்னும் வேறுபாடு இல்லை என்பதும் பெறப்படும். எனவே, இல்லற நெறி, துறவறநெறி ஆகிய இருநெறிகளில் நிற்போரும் வீடுபேறடையும் தகுதியுடையவராவர்.

இல்லற வாழ்க்கை

இல்லறத்தார் யார்?

இல்லறம் என்பதற்குத் திரு. வி. க. பின்வரும் விளக்கம் தருகிறார்:

> "இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்தலே அறம்; அதற்கு மாறுபட்டு வாழ்தல் மறம். ஒருத்தி ஒருவனுடனும், ஒருவன் ஒருத்தியுடனும் வாழ்வது இயற்கை அறமென்று இதுகாறும் சொல்லப்பட்டு வந்தது. இவ்வியற்கை அறத்தை உலகம் 'இல்லறம்' என்று சொல்கிறது. இல்லறம் என்பது அறக்கூறுகள் யாவும் சேர்ந்த ஒரு முழுமை என்க.
>
> அறம் என்பது ஒரு மரம் போன்றது. திருமணம், பிள்ளைப் பேறு, அன்பு, விருந்தோம்பல், ஒழுக்கம், பொறை, ஒப்புரவு, ஈகை, அருள், தவம், வாய்மை, துறவு, மெய்யுணர்வு முதலியன அம்மரத்தின் உறுப்புக்களாகிய

வேர், மன்றம், பட்டை, கவடு, கோடு, விளார், தளிர், இலை, மலர், காய், கனி முதலியன போன்றன. இவ்வறக் கூறுகள் யாவும் பிறந்து வளர்ந்து பயனளிக்க வேண்டிய தாயகம் இல்லறமாகும்'' [3]

இத்தகைய இல்லறத்தில் இருந்து கடமைகளை இனிது நிறைவேற்றுபவன் இல்லறத்தான் ஆவான்.

வள்ளுவர் இல்லறத்தானை 'இல்வாழ்வான்' என்பார். அவன் யார் யாருக்குத் துணைநிற்கவேண்டும் என்பதைத்,

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கும்
இல்வாழ்வா னென்பான் துணை [4]

என்று குறிக்கிறார். 'துறந்தார்' என்போர் இல்வாழ்க்கையிலிருந்து தன்னை முற்றும் துறந்த துறவு வாழ்க்கை மேற்கொள்வோர் ஆவர். 'துவ்வாதார்' என்போர் வறியவர் அல்லது ஏழையர் அல்லது உறுப்புக் குறைந்தோர் ஆவர். 'இறந்தார்' என்னும் சொல்லுக்கு விளக்கம் கொடுக்க முற்படும் உரையாசிரியர்கள் மண்ணுலகைவிட்டு உயிர் நீத்தவர்கள் என்று பொருள் கொண்டு, இறந்தோர்க்குரிய ஈமச் சடங்குகளைச் செய்யக்கூடிய கடமையுடையவன் இல்வாழ்வான் என்பர். [5]

இக்கருத்துகளுக்குச் செயல்முறை விளக்கமாக இருப்பவனையே திருமந்திரம் 'இல்லறத்தான்' என்கிறது.

களவு, கற்பு ஆகிய இரு கைகோள்களைக் குறிக்கும் தொல்காப்பியர், கற்பினைப் பற்றிக் குறிக்கும்போது,

கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே [6]

என்று கூறுவர். இந்நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர்,

''கற்பென்று சிறப்பித்துக் கூறப்படுவது, வேள்விச் சடங்கோடே கூட ஒத்த குலத்தோனும் மிக்க குலத்தோனுமாகிக் கொள்ளுதற்குரிய முறைமையினையுடைய தலைவன், ஒத்த குலத்தாளும் இழிந்த குலத்தாளுமாகிய தலைவியைக் கொடுத்ததற்குரிய முறைமையினையுடைய இருமுதுகுரவர் முதலாயினார் கொடுப்பக் கோடற்றொழில்'' [7]

என்று உரை வரைவர். திருமந்திரத்தில் களவுமணம் பற்றிய செய்தி இடம்பெறவில்லை; பெற்றோரும் உற்றாரும் சூழவிருந்து நடத்தும் கற்பு மணமே பேசப்படுகிறது. இக்கற்பு மணத்திற்கு முன்னோடியாக இன்ன மணப்பெண்ணை இன்ன மணமகனுக்கு இன்ன நாளில் திருமணம் நடைபெறும் என்று முடிவு செய்வர். இதனை,

வாசந்தி பேசி மணம்புணர்ந் தப்பதி [8]

என்னும் பாடலடி குறிப்பிடுகிறது. 'வாசந்தி' என்னும் சொல் 'நிச்சயதாம்பூலம்' என்னும் பொருள்தரும். இவ்வாறு சுற்பு வழியில் திருமணம் செய்துகொள்ளும் தலைவனுக்கு— இல்லறத் தானுக்கு உரிமையுடைய பொருள்கள்

மதுவூர் குழலியும் மாடும் மனையும் [9]

என்று ஒரு பாடற்பகுதியும்,

ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரும் மக்களும் [10]

என்று மற்றொரு பாடற்பகுதியும் குறிக்கின்றன. அவையாவன: மனைவி, செல்வம், வீடு, சுற்றம், தன்மக்கள் ஆகியன. இவற்றைச் செல்வங்களாகக் கொண்ட இல்லறத்தான், நிலையற்ற வாழ்வை நிலையென்று எண்ணி நல்ல உணவினை உண்டு, மனைவியோடு இன்பம் துய்த்து, நோயுற்று, இறுதியில் இறந்து போகிறான். இதனைத் திருமூலர்,

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை யுண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்த தென்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே [11]

என்று பாடுகிறார். இதில் 'இடப்பக்கம்' என்பது இதயத்தைக் குறிக்கிறது; சற்றுமுன் மனைவியோடு இன்பம் துய்த்த தலைவன் இப்போது இதயவலி ஏற்பட்டுச் செயலற்றுக் கிடக்கிறான். இதுவரை மனிதனைச் சூக்குமமாக இயக்கிக் கொண்டிருந்த பஞ்ச பூதங்களும் செயலற, மனிதனது உடலைவிட்டு ஆன்மா பிரிந்து விட்டதைக் 'கிடந்தொழிந்தாரே' என்னும் தொடர் சுட்டு கின்றது. இவ்வாறு இறந்தானை அவ்வில்லறத்தானின் மக்கள் 'தந்தையே' என்றழைப்பினும் உணர்வு பெற்றுத் திரும்பிப் பார்ப்பதில்லை; ஒரு நொடியில் அவன் வாழ்வு முடிந்தது; உடல் மட்டும் கிடந்தது. [12] அவன் வாழ்ந்த வாழ்வின் சிறப்புக்களை,

மன்றத்தே நம்பி மாடம் எடுத்தது
மன்றத்தே நம்பி சிவிகைபெற் றேறினான்
மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கினான் [13]

என்னும் பாடலால் அறியலாம். இல்லறத்தான் (நம்பி) மாடிவீடு கட்டி மகிழ்ந்திருந்தான்; பல்லக்கில் (சிவிகை) ஊர்ந்து பவனி வந்தான்; பொதுவிடத்தில் 'இயல்புடைய' மூவர்க்கும் புத்தாடை வழங்கினான். இவ்வாறு செல்வமும் செல்வாக்கும் பெற்று வாழ்ந்தவனுக்கு மனைவி அருகிருக்கும் போதே இறப்பு வருகின்றது. திருமந்திரம் இதனை,

மையிட்ட கண்ணாளும் மாடும் இருக்கவே
மெய்விட்டுப் போக விடைகொள்ளு மாறே [14]

என்று கூறுகிறது.

இல்லறத்தில் ஈடுபட்டுத் தன்னை யுணராது உலகாயதமாக வாழ்க்கை நடத்துபவன் இல்லறத்தான் என்பது இவற்றால் அறியப்படும்; இவனோடு தொடர்புடைய பிற இல்லற மாந்தர்கள் பலர்; அவர்களுள் தாயும் மகளும் குறிப்பிடத்தக்கவர்கள். பேரின்ப உணர்வினை உணர்த்த முனையும் திருமூலர்,

மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா றெங்ஙனே [15]

என்று கூறுகிறார்; இல்லறத்தில் உள்ள தாய் சிற்றின்பமாகிய இவ்வொரு நிலையை மட்டும் மகளுக்குச் சொல்லித்தர மாட்டாள்; ஆனால் பிற அனைத்து ஒழுகலாறுகளும் தாய்வழி மகள் அறிந்து கொள்வாள்.

இல்லறத்தானோடு சுற்றத்தார்கட்குள்ள உறவைச் சொல்லும் போது பெரிதும் இல்லறத்தானின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட மக்களின் செயல்களே குறிக்கப்படுகின்றன. அழுதகலும் அன்புடையவர், [16] கத்தியெடுத்துக் காடு செல்பவர், [17] மதுவூர வாங்கியே வைத்தகன்றவர், [18] தேடிய தீயினில் தீயை வைப்பவர், [19] நீரினில் மூழ்கி நினைப்பொழிபவர், [20] பாசத் தீச்சுட்டுப் பிண்டமிடுபவர் [21] என்று திருமூலர் குறித்தலைக் காணலாம். நீர்க்குமிழி போன்று தோன்றி மறையும் உலக வாழ்க்கையை மேற்கொண்டு மறைபவர்கள் இவர்கள்.

எனவே இல்லறத்தான் யாக்கை நிலையாமையை உணர்ந்து வீடுபேறு பெறுதற்கு முயலவேண்டும் என்பது திருமூலர் கருத்து.

இறையுணர்வு — வழிபாடு — பயன்

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு அன்பின் ஐந்திணையாகிய அகவாழ்வு மேற்கொண்ட மக்கள் வழிபட்ட தெய்வங்கள் திருமால், முருகன், இந்திரன், வருணன், கொற்றவை ஆகியோராவர். [22] இளங்கோவடிகள் பாலை நிலத்திற்கு இலக்கணம் வகுக்கின்றார்; கொற்றவை வழிபாடும் சிலம்பில் காணப்படுகிறது. [23]

மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த
கொற்றவை நிலையு மத்திணைப் புறனே [24]

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. போர்க்களத்தில் கொற்றவைக்குப் பரவுக்கடன் கொடுக்கும் வீரர் கொற்றவை வழிபாடு செய்கின்றனர் ஒருவழிப் பிறக்கும் தேவரைப் போன்றில்லாமல் பிறப்பில்லாத் தெய்வங்களும் பாடாண்திணைக்கு உரியர் என்று பேராசிரியர் கூறுகின்றார். [25]

> "கொடிநிலை— கீழ்த்திசைக்கண்ணே நிலைபெற்றுத் தோன்றும் வெஞ்சுடர் மண்டிலம்; கந்தழி— ஒரு பற்றுக் கோடின்றி அருவாகித் தானே நிற்குந் தத்துவங் கடந்த பொருள்; வள்ளி— தண்கதிர் மண்டிலம் என்று சொல்லப் பட்ட குற்றந் தீர்ந்த சிறப்பினையுடைய முற்கூறப்பட்ட மூன்று தெய்வமும் முற்கூறிய அமரரோடே கருதுமாற்றால் தோன்றும்"[26]

என்று நச்சினார்க்கினியர் தரும் உரைவிளக்கம் மூன்று தெய்வங் களும் பிறப்பும் இறப்பும் அற்றவை என்பதைக் காட்டுகின்றது. இதில் கொடிநிலை கீழ்த்திசையில் தோன்றும் கதிரவன்; வள்ளி குளிர்ச்சி பொருந்திய கதிரினை உடைய சந்திரன்; கந்தழி அருவ மான பற்றுக்கோடு அற்ற தானே நிற்கும் பொருளான சிவன்.

இவற்றால் இறைவழிபாடு சங்க காலத்தும், அதற்கு முன்பும் இருந்தமை தெளிவாகின்றது. இல்லறத்தான் உலக போகங்களைப் பெறுவதற்கு வழிபடும் முறைகளையும், அவ்வழிபாட்டுக்கு உரிய பொருள்களையும், வழிபாட்டால் ஏற்படும் பயன்களையும் திருமூலர் தெளிவாகக் கூறுகின்றார்.

ஆதியும் அந்தமுமில்லாத ஒப்பற்ற ஒரு பொருள் சிவன். சிவனுக்கு மேலானவள் பராசக்தி. இச்சக்தியே தாயாகவும், தாரமாகவும் இருந்து உலக இயக்கத்துக்காகச் சிவனோடு செயல் படுவாள்.[27] உலகம் சிவசக்தியின் விளையாட்டால் உருவானது.[28] இதனைப் படைத்து மகிழும் சக்தி ஒருபோது சிவ மாகவும், சிவம் ஒருபோது சக்தியாகவும் விளங்கும்.

திருமந்திரத்தில் சிவவழிபாடு முதலில் இடம்பெறுகிறது; அடுத்து, சக்தி வழிபாடு கூறப்படுகிறது. இல்லறத்தானுக்குரிய சிவசக்தி வழிபாடும், அதன் பயனும் நான்காம் தந்திரத்தில் விளக்கப்படுகின்றன. இப்பகுதியில் இடம்பெறும் வழிபாட்டு முறைகளும் சக்கர அமைப்புகளும் முற்றிலும் இல்லறத்தாருக்கே உரியவை. இவற்றைப் புறவழிபாடு எனல் பொருந்தும்.

'பொருள் இல்லார்க்கு இவ்வுலகில்லை' என்றார் வள்ளுவர்.[29] தன்னைக் காத்துக் கொள்வதற்கும், தன்னைச் சார்ந்தோரை விடாது காப்பதற்கும் இல்லறத்தானுக்குப் பொருள் பெரிதும் தேவைப்படுகிறது. எனவே அச்செல்வத்தை அருளும்படி அவன் இறைவனை வேண்டுகின்றான். அதற்குப் பயன்படுவதே திருவம்பலச் சக்கரம். இதனை இன்றும் பலர் வீடுகளிலும் அங்காடிகளிலும் வைத்து வழிபடுகின்றனர். திருமந்திரம் 914— 928 பாடல்களில் இதன் அமைப்பு விளக்கப்படுகின்றது.


திருவம்பலச் சக்கரம் என்பதற்கு விளக்கம் தரும் ஜி. வரதராஜன் அவர்கள்,

> ''சக்கரம் என்பது கோடுகள் குறுக்கும் நெடுக்குமாக இட்டு எழுத்துக்களைக் கட்டங்களில் அடைத்து வழிபடுவதற்குரியது. திருவம்பலச் சக்கரம் என்றால் சிதாகாயப் பெருவெளியில் ஆனந்தக் கூத்தாடும் பெருமான் சத்தியோடு மந்திர வடிவமாய் நின்று நிலவும் சக்கரம்'' [30]

என்று கூறுகின்றார்.

திருவம்பலச் சக்கரத்தில் 'க்ஷகாரம்' நீங்கிய ஐம்பது எழுத்துக்களையும் இருபத்தைந்து அறைகளில், அறை ஒன்றுக்கு ஈரெழுத்தாக அமைத்து, அதன் மேல் பிரணவ வட்டமிட்டு மகாரத்தில் 'க்ஷ'வ்வை அமைக்க ஐம்பத்தோர் அட்சரங்களும் முடிவடையும். [31]

இச்சக்கரத்தை அடுத்து நான்கு சக்கரங்களைத் தொடர்ந்து அமைக்க வேண்டும். இச்சக்கரங்களின் வெளிவட்டத்தில் 'ஹர ஹர' என்றும், அதனை அடுத்த உள்வட்டத்தில் 'ஹரிஹரி' என்றும், அதற்கும் அடுத்த உள்வட்டத்தில் 'ஹம்சம்' என்ற அசபையையும் அமைத்தல் வேண்டும்; நடுவில் உள்ள இருபத்தைந்து இரேகைகளின் முடிவில் சூலம் இடுதல் வேண்டும். [32] சூலத்தின் நுனியில் சத்தியெழுத்தை எழுதுதல் வேண்டும்; சூலத்தைச் சுற்றி வளைத்து 'ஓ' என்பதையும், சூலங்களுக்கு இடையில் திருவைந்தெழுத்தாகிய 'நமசிவாய'த்தையும் எழுதுதல் வேண்டும். இவ்வெழுத்துக்களே சிவன் தங்கும்

1. பிருதிவி - நாற்கோணம் -  - நிலம்

2. அப்பு - பிறைவட்டம் -  - நீர்

3. தேயு - முக்கோணம் -  - தீ

4. வாயு - அறுகோணம் -  - காற்று

5. ஆகாயம் - வட்டம் -  - வெளி

இடமாய்.[33] ஐந்தெழுத்தே பஞ்ச பூதங்களாகவும் விளங்குகின்றது. பஞ்ச பூதங்களுக்குரிய வரிவடிவம்[34] அ, இ, உ, எ, ஒ என்பன; இவற்றிற்குரிய தூலவடிவம் இருபத்தைந்து கட்டங்களிலும் அடைக்கப்பட வேண்டும். பஞ்ச பூதங்களுக்கும் உரிய தூலவடிவங்கள் இன்னின்ன என்பதனை 929 ஆம் பாடல் விளக்குகின்றது[35] இறுதியில் உள்ள வட்டத்தில் சிவசிவ என்ற மகா வாக்கியத்தை அடைத்ததும் திருவம்பலச் சக்கரம் முழுமை அடைகின்றது.

திருவம்பலச் சக்கரத்தில் இயந்திர வடிவில் எழுந்தருளும் சிவனைத் தாமரை, நீலோற்பவம், செங்கழுநீர், கருநெய்தல், பாக்குப்பூ, மகிழம்பூ, புன்னை, மல்லிகைப்பூ, செண்பகம், பாதிரி, செவ்வந்தி முதலிய கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ ஆகியவற்றால் வழிபடுவர்.[36] இவற்றோடு புனுகு, கத்தூரி, சந்தனம், குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், காரகிற் குழம்பு முதலிய நறுமணப் பொருட்களைப் பனிநீரில் நன்றாகக் குழைத்துச் சக்கரத்திற்கு இட்டு, அன்போடு அருச்சனை செய்து, அமுதம் நிவேதனம் செய்து விளக்கேற்றி வழிபடுவர்.[37]

இன்புடனேவந் தெய்திடும் முத்தியே[38]

என்பதனால் இம்மையில் இன்பம் அடைவதற்குரிய பொருட்செல்வங்கள் அனைத்தையும் பெறுவதோடு முத்தியடைவதற்கும் இவ்வழிபாடு வழிவகுக்கும் என்கிறார் திருமூலர்.

இல்லறத்தான் நாளும் சிவசிந்தனையில் ஈடுபடுவதால் அவன் விரும்பும் பொருட்செல்வமும் நாளாக நாளாக அவனுக்குத் தேவைப்படாது இறையன்பை மட்டும் வேண்டும் நிலைக்குச் செல்வான் என்பதை இப்பாடல் குறிப்பாக உணர்த்துகிறது. இத்தகைய கிரியை வழிபாட்டை ஞானியர்கள் விரும்பமாட்டார்கள் என்பதை வேறொரு பாடல் குறிப்பிடுகின்றது.[39]

உமாகாந்தன் வழிபாடு

எட்டு அறைகள் வெளியிலும் ஓர் அறை உள்ளிருக்கும் படியாகவும் அமைத்துப் பொருந்திய சிகாரத்தினை எட்டு அறைகளிலும் ஒலிவடிவமாய் நிறைந்துள்ளது என்று நினைத்து, பின்னர்ப் பிரணவ எழுத்தாகிய ஓங்காரத்தால் சூழவிட்டு இறையுணர்வோடு தியானிப்பவர்களுக்கு இவ்வுடல் உயிர் பெற்ற பேறாக இறைவன் உமையோடு வெளிப்பட்டு அருள் புரிவான்.[40]

திருவம்பலச் சக்கர வழிபாடு எல்லா மக்களாலும் பெரிதும் வணங்கப்படுவது; உமாகாந்தன் வழிபாடு ஞானிகளால் மட்டும் வணங்கப்படுவது பெரியபுராணத்தில் ஆனாய நாயனார்

புராணத்தில் உமையோடு சிவன் வெளிப்பட்டு நாயனாரை ஆட்கொண்டருளியதற்கான அகச்சான்று காணப்படுகிறது.[41]

இவையன்றி, வழக்காற்றில் இல்லாத அல்லது மிகவும் அருகிவிட்ட சில வழிபாடுகளும் உண்டு. இவற்றுள் சில உலக மாயையில் சிக்கிய மக்கள் ஒருவரை ஒருவர் கட்டுப்படுத்துவதற்கும், வசியப்படுத்துவதற்கும், செயலறச் செய்வதற்கும், இறக்கச் செய்வதற்கும் மாந்திரீகர்களைக் கொண்டு செய்வனவாகும்.

1) **தம்பனம்:—** எதிரியைச் செயல்படாதவாறு கட்டுதல் தம்பனம் எனப்படும். இதில் ஏழுவகை உண்டு.[42]

2) **மோகனம்:—** பிறரை மயங்க வைப்பது மோகனம் ஆகும். இது ஐந்து வைக்கப்படும்.[43]

3) **உச்சாடனம்:—** விரட்டுதல் என்பது பொருள். இவ்வகையான வழிபாட்டு முறை பரவலாக உலகில் காணப்படுகின்றது. இறையருள் பெற்ற சான்றோர்களும் கூட, தீய ஆன்மாக்கள் ஆதிக்கம் செலுத்தும் மக்களை அவற்றை விரட்டுவதன் மூலம் காக்கின்றனர். இந்த உச்சாடனம் எட்டு வகைப்படும்.[44]

4) **மாரணம்:—** மந்திரத்தால் பிறரை இறக்கச் செய்யும் வித்தை.[45]

ஒருவருடைய எண்ண அலைகள் மற்றவர்களைத் தாக்கும் என்பது இவற்றின் அடிப்படை. அறிஞர் மீ. ப. சோமு அவர்கள்,

> ''மாந்திரீகத்தில், பிராணப் பிரதிஷ்டை முதலிய சடங்குகளின் நோக்கம், செய்பவனிலிருந்து தேவைப்பட்ட பொருளில் ஆற்றலைப் பதிக்கிறான் என்பதே ஆகும். அதுவே பல ஆண்டுகள் நிலை பெற்றுத் தாயத்துகளாகவும், ஆலயக் கருவறைகளாகவும் ஆகின்றன. விஷம், நோய் முதலியவைகளைத் தீர்க்க, மாந்திரீகன் தன்னுடைய எண்ணச் சக்தியைப் பயன்படுத்துகிறான். எண்ணும் திறன் மூளையில் உள்ளபடியால் ஒரு சிறிய தத்துவம் நுண்ணிய நிலையில் கலந்து தேவைப்பட்ட பொருளில் பதிவு பெறுகிறது. வெகு தூரத்தில் உள்ள பெரியோர்களின் ஆசி ஆபத்துக் காலத்தில் பக்தனுக்கு உதவியுள்ளதைப் பெரியோர்களின் வரலாறுகளில் காண்கிறோம். எண்ண அலைகள் புறப்பட்டு உலகம் முழுவதும் ஒரு சிறிது நேரத்தில் பரவி விடுகின்றன. ஒரு விநாடிக்கு 18,600 மைல் வேகத்தில் நடைபெறுகின்றது என்பதை ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்''[46]

என்று குறிப்பிடுகின்றார். இந்த அடிப்படையில் மாரணமும் வழக்காற்றில் வந்திருக்கலாம். எண்ண வலிமையுள்ள ஒருவனின் ஒலியலைகள் சாதாரண மனிதனை அழிக்கவும் கூடும்.

5) **வசியம்:—** பிறரைக் கவர்வது இது. வசியம் ஆறு வகைப்படும்.[47]

6) **ஆகர்ஷணம்:—** ஆகர்ஷணம் என்றால் அழைத்தல். இந்த அழைப்பு ஏழு வகைப்படும்.[48]

புராணங்களில் மனிதர்கள் தெய்வங்களைத் தவத்தின் மூலமாக அழைத்ததற்குச் சான்றுகள் உண்டு. சிவனைத் தெய்வ மாகக் கொண்டு இவ்வழிபாடுகள் உலகில் நடைபெறுகின்றன. ஒரோவிடத்து நடைபெறுவன தம்பனம் முதலாகச் சொல்லப் பட்ட ஆறு வழிபாடுகளாகும்.

சக்தி வழிபாடு

சக்தியை உலக மக்கள் பல பேதங்களில் வழிபடுகின்றனர். பராசக்தியின் கூறுகளே கலைமகளாகவும், அலைமகளாகவும், மலைமகளாகவும் விளங்குகின்றன. அவளே பரமேசுவரனோடு அபின்னமாகப் பிரிப்பின்றி இருந்து ஐந்தொழில் புரிபவளாவாள். சக்தியின் வடிவம் பலவகை என்பதைத் திருவாசகம், ''ஆறு கோடி மாயா சத்திகள்'' என்று குறிப்பிடுகின்றது.[49]

சக்தி ஒருத்தியே பல வடிவங்களாக விளங்கக் கூடியவள். அதனால்தான்,

தானான மூவுரு வோருருத் தன்மையள்[50]

என்று திருமந்திரம் கூறுகின்றது. கலைமகள், அலைமகள், மலை மகள் என விளங்கும் சக்தியைத் 'திரிபுரை' என்று அழைப்பர். இவளே

> ''சுத்த மாயையாகவும், அசுத்த மாயையாகவும், விந்து வாகவும், வைகரி வாக்காகவும், ஓம் என்னும் பிரணவ மாகவும், உள்ளொளியாகவும், தாமேயான மந்திரமாகவும், சத்தியின் மூர்த்தியாகவும் விளங்குவள். அவளே அக்கினி, சூரியன், சந்திரனாகப் பேரழகுடன் திகழ்ந்து உலகைக் காப்பவள் கருநிறைமுடைய இச்சக்தி நாரணனுக்குத் திதித் தொழிலை நடத்த மாயா உருவை வழங்கியவள். சிவனோடு கருநிறத்தில் பொருந்தி சிவசத்தியாக விளங்கும் இவ்வம்மையை வணங்குபவர் மனத்தில் ஓங்கும் மணி போன்ற ஒளியாக விளங்குபவள். மணிபோன்ற ஒளி தியானத்தால் பேரொளியாக (மன — உள் — ஓங்கும் —

மணி = மனோன்மணி) வளரத் தன்னை வணங்குபவர்க்கு வீடுபேற்றை அளிப்பவள்'' [51]

என்று திருமந்திரம் தெளிவுபடுத்துகிறது. வீடுபேறடைவதே திரிபுரையினை வணங்குவதால் கிட்டும் கிடைத்தற்கரிய சிறப்பாகும்.

இராஜேஸ்வரியின் உருவம், வழிபாடு, பயன்

தாளணி நூபுரம் செம்பட்டுத் தானுடை
வாரணி கொங்கை மலர்க்கன்னல் வாளிவில்
ஏரணி அங்குச பாசம் எழில்முடி
காரணி மாமணிக் குண்டலக் காதிக்கே [52]

என்னும் பாடலில் இராஜேஸ்வரியின் உருவம் சித்தரிக்கப்படுகின்றது. மனத்தில் இவ்வுருவத்தினை நினைந்து வழிபட்டால் அவ்வாறு வழிபடும் அடியவர்க்கு அனைத்தும் வசியப்படும் என்பது ஜி. வரதராசன் தரும் விளக்கம். [53] இவ்விளக்கம் ஏற்புடையதே. ஏனெனில், தனக்கு இன்னல்தரும் மனிதர்களையும் உயிரினங்களையும் ஒருவன் இராஜேஸ்வரியைத் தியானித்து வசியப்படுத்திவிடலாம்.

இராஜேஸ்வரியைத் துதித்துப் பாடிப் பரவினால் அவள் தன்னை வணங்குபவர்க்கு வெளிப்படுவாள்; அப்பொழுது அவளை மனித உருவில் உள்ளவர்கள் காணலாம். இறைவி,

பார்த்திடு மங்குச பாசம் பசுங்கரும்பு
ஆர்த்திடும் பூம்பிள்ளை யாகுமாம் ஆதிக்கே [54]

என்னும் வடிவில் காட்சி தருவாள். அங்குச பாசங்களைக் கைக்கொண்டு பசுங்கரும்பினையுடைய அழகிய பெண்ணாக அவள் தோன்றுவாள் என்பது திருமந்திரம் காட்டும் அகச்சான்று. தியானத்தின் அளவு நீட்டித்து உடல் ஒளிமயமானால் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய முக்காலங்களும் தோன்றும். [55]

வயிரவி வழிபாடு – பயன்

வயிரவக் கடவுளின் சத்தி வயிரவி. வயிரவியை வணங்குவதற்குப் பயன்படும் மந்திரம் 'வயிரவி மந்திரம்'. வயிரவியின் இயல்புகள் பற்றித் திருமந்திரம் விரிவாகக் கூறுகிறது:

''மென்மையனவள். சீந்திற் கொடி போன்று கீழ்நோக்கியும் மேல்நோக்கியும் படருந்தன்மையுடையவள். நெறியினின்று தவறுபவர்களைத் தண்டிப்பவள். எல்லாக் கலைகளிலும் விளங்கும் அறிவை ஒன்றாகப் பெற்றவள்.

முள்முருக்கம் பூப்போன்ற சிவந்த நிறமுடையவள். இரத்தினக் கல்லைப் போன்று சிவந்த ஒளிவீசுபவள்''[56]

வயிரவிக்குரிய அணிகலன்கள் இன்னின்ன என்பதனைச் சொல்ல வரும் திருமூலர், நிராதாரக் கலைகள் விளங்கும் சந்திர மண்டலமே பல மணிகள் இழைத்துள்ள முடியாக அவளுக்கு விளங்குகிறது என்றும், அவள் அழகான ஆகாயத்தைக் காதாக உடையவள் என்றும், அவள் பொன்னைப் போல ஒளி வீசுபவள் என்றும் கூறுகின்றார்.[57]

சகஸ்ரதளத்தின் நடுவிலுள்ள வயிரவியைச் சூழ்ந்து எட்டுக் கன்னியர் உள்ளனர். இவர்கள் எட்டெட்டுச் சக்திகளாகப் பிரிந்து பராசக்தியை வணங்குகின்றனர். அவ்வாறு வணங்குவதன் பயனாக வயிரவியைக் காண்கின்றனர்.[58]

அணிகள் மனிதனை விடச் சிறியவை; இவ்வாறே பிரபஞ்சத்தைத் தனக்குரிய அணிகலனாகத் தேர்ந்து அவள் அணிந்திருக்கிறாள் என்கிறார் திருமூலர். அதிலும் ஆகாயம் காதணியாக அமைந்துள்ளது என்பதை நோக்கும்போது வயிரவியின் பெருமையும் பிரபஞ்சத்தின் சிறுமையும் நன்கு புலப்படும். வயிரவியைச் சூழ உள்ள எட்டுக் கன்னிகளே பிரணவத்தில் உள்ள கலைகளாகும். வாமை, சேட்டை, ரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலபிரமதனி, சர்வபூததமனி ஆகிய எட்டுக் கலைகள் பிரணவத்தில் உள்ளன. இவர்களது ஆட்சியால் அறுபத்து நான்கு சக்திகளும் தொழிற்படும்.

பொன் ஒன்றே பல அணிகலன்களாக உரு மாறுவதைப் போலப் பெருமையுடைய வயிரவி சக்தியே சிவனாகவும், பிரமனாகவும், திருமாலாகவும் விளங்குகின்றாள்.[59] மும்மூர்த்திகளாக உள்ள வயிரவி மூலாதாரத்தில் உள்ளபோது பாலை என்றும், சூரிய கண்டமாகிய அநாகதத்தைக் கடந்தபோது தருணி என்றும், சகஸ்ரதளத்தை அடைந்தபோது பதிவிரதை என்றும் பெயர் பெறுகின்றாள்.[60] இத்தகைய ஆற்றல் நிறைந்த தேவியை வணங்கினால் பிறவி வராது என்பது வழிபாட்டுக்குரிய பயன்.[61] வயிரவியை வழிபடுவதற்குரியன எளிய பொருள்கள் அல்ல. நீர்த்தன்மையுடைய விரியம், ஆற்றலின் எல்லை ஆகியன அவளுக்குச் சாத்தும் மலர்கள். அவளைச் சிந்திப்பதால் குயில் ஒலி போன்ற நாதம் கேட்கும்.[62] விந்துசெயம் செய்து, மனத்தினை ஒருமைப்படுத்தி, குயிலொலி போன்ற நாதம் கேட்குமாறு வழிபாடு தொடர்ந்து செய்பவர்க்கு வயிரவி பிறவிநீக்கத்தை அருளுவாள்.

வயிரவச் சக்கரம் — வழிபாடு — பயன்

வயிரவர் சிவனது கோரமூர்த்தங்களில் ஒன்றாகும். பகை முதலிய இடையூறுகளைப் போக்க இவரை வழிபடுதல் வழக்கம். இதற்கான சக்கரம் 'வயிரவச் சக்கரம்' எனப்படும்.

வயிரவர்க்கு உரிய நிறம் செம்மை; அவருக்கு ஆறு கரங்கள் உண்டு.[63]

ஆமேவப் பூண்டரு ளாதி வயிரவன்
ஆமே கபாலமுஞ் சூலமுங் கைக்கொண்டங்
காமே தமருக பாசமுங் கையது
வாமே சிரத்தொடு வாளது கையே[64]

என்னும் பாடல் வயிரவர் கையிலுள்ள ஆயுதங்களைக் குறிக்கின்றது. அவை கபாலம், சூலம், தமருகம், பாசம், வெட்டுண்ட தலை, வாள் ஆகியன.

பதினைந்து திதிகளில் வழிபாட்டிற்குரியனவல்லாத சப்தமி, அட்டமி, தசமி, துவாதசி, சதுர்த்தசி ஆகியன நீங்க, ஏனைய வளர்பிறை முதல் சட்டி வரை ஆறு ஆதாரங்களில் பொருந்திப் பின் ஒன்பதாம் திதியாகிய நவமியில் நெற்றிக்கு மேலும், பதினோராந் திதியாகிய ஏகாதசியில் பிடரிப்பக்கமும், பதின்மூன்றாம் திதியாகிய பௌர்ணமியில் இடக்காதின் பக்கமும் ஆக உடலின் பத்து இடங்களில் வயிரவரை அறிந்து நாளும் அவர் உருவத்தை நினைந்து தியானம் செய்தல் வேண்டும்.

தியானத்தின் பயனாக வயிரவரைத் தியானிப்பவருடைய பகைவரின் ஆற்றல் குன்றும்; பகைவனைக் கருணை காட்டாது பந்தாடி அழிக்கலாம் என்கிறது திருமந்திரம்.[65]

பூசனை செய்யப் பொருந்தியோ ராயிரம்
பூசனை செய்ய மதுவுட னாடுமால்
பூசனை சாந்து சவாது புழுகுநெய்
பூசனை செய்துநீர் பூசலை வேண்டுமே[66]

என்பது திருமந்திரப் பாடல் வயிரவரை வழிபடுவதற்கு நல்ல தேன், சாந்து, சவ்வாது, புனுகு முதலியவற்றை விரும்பிப் படைத்தலோடு, வயிரவர் நாமத்தை ஓராயிரம் முறை செபித்தல் வேண்டும். இவ்வாறு செபித்தால் பகை நீங்கும்; அதுமட்டுமல்லாமல் பகைவர்க்குள் கலகத்தையும் வயிரவர் வழிபாடு தோற்றுவிக்கும். கல்வியறிவற்ற காழ்ப்புணர்ச்சியுள்ள மக்களிடையே இவ்வழிபாடு வழக்கிலிருக்கும் எனலாம்.

சாம்பவி மண்டலச் சக்கர வழிபாடு — பயன்

சிவசக்தியின் மற்றொரு பெயர் சாம்பவி. சிவசக்தி விளங்கும் சிவலிங்கத் திருவடிவம் நிறைந்த சக்கரம் இது. இவ்

வழிபாட்டினை அருவுருவ வழிபாடாகக் கருதலாம். சாம்பவி மண்டலச் சக்கரம் அமைக்கும் முறையைத் திருமந்திரம் இரு பாடல்களில் விளக்குகின்றது. [67]

இருபது கோடுகள் குறுக்கு நெடுக்காக அமைய இச்சக்கரம் ஒரு சதுரமாக அமைகின்றது. சதுரத்தின் நடுவிலுள்ள குறுக்கு நெடுக்காக விளக்கும் பத்துக் கட்டங்களில் நான்கு இலிங்கங்கள் அமையவேண்டும். இந்நான்கு இலிங்கங்களின் இடைவெளியின் நடுவில் நான்கு இதழ்களையுடைய நான்கு பூக்கள் உண்டு; அதைப் போலவே நடுவிலும் ஒரு பூ நான்கு இதழ்களில் அமையும். இந்நான்கு இலிங்கங்களைச் சுற்றிலும் ஒரு வரிசையில் முப்பத்தைந்து மெய்யெழுத்துக்களையும் வலமாக எழுத வேண்டும். சிவாயநம என்னும் ஐந்தெழுத்தினை நான்கு இலிங்கங்களிலும் எழுதவேண்டும். ஏனைய இடங்களில் வடக்குத் தெற்காகப் பக்கத்திற்கு நான்கு இலிங்கங்கள் சிவாயநம என்ற எழுத்துடன் இருபுறமும் விளங்கும். அவ்வாறே கிழக்கு மேற்காக இருபுறமும் பக்கத்திற்கு இரண்டு இலிங்கங்கள் சிவாயநம என்னும் எழுத்துக்களுடன் விளங்கும். சக்கரத்தில் இடம்பெறும் முப்பத்தைந்து எழுத்துக்களும் மெய்யெழுத்துக்களாகும். இதனை ஆன்மா உணர்ந்து தத்துவங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டால் பிறவி ஆனமாவைத் தொடராது.

'சிவாயநம' என்னும் ஐந்தெழுத்தினை மூலாதாரத்திலிருந்து நடுநாடி வழியாகச் சிரசைக் கடந்து செல்லும்படி 'நமசிவய' என்று மாற்றினால் சாம்பவி மண்டலச் சக்கர வழிபாடு செய்வோர் ஒளிமண்டலத்தை அடைவார்கள். சக்திமயமான இவ்வொளியில் இரண்டறக் கலந்தவர்கள் நினைப்பவை எல்லாம் நடக்கும்.

> "சிவசக்தி ஒளியில் திளைக்கும் இவர்களுக்கு எல்லாப் புறச் செல்வங்களும் தாமே வந்தடையும். பகை என்பது இவர்களை வந்து அணுகாது. பிறரது ஏளன நகைப்புக் குரிய நிகழ்ச்சிகளும் இவர்களை வந்தடையா. நாள்தோறும் தீவினைகள் இறைவணக்கத்தால் நீங்கிவிடும்; அதனால் பிறவி நீங்கும். உடல் ஆனந்தவடிவாகத் தோன்றும். 'நமசிவாய' என்று உள்ளத்தில் எண்ணி வழிபடுபவர் களுக்கு உந்தியிலிருந்து சிரசு முடியப் பிரணவம் உதிக்கும். இப்பிரணவ ஓங்காரமே இறைவனின் முதல்நிலை. சிவனும் சக்தியும் நாதவிந்து தத்துவங்களிலிருந்து உடலைப் படைக் கின்றனர். உயிருக்கு வினைப் போகங்களை ஊட்டிய சக்தி ஆன்மாவின் பக்குவமுணர்ந்து சிவனை நோக்கத்

தத்துவங்கள் விந்தில் அடங்க, ஆன்மா தன்னை உணர்ந்து தெளிந்த நிலையை விந்து செயத்தால் அடைகின்றது. இந்நிலையில் உடலில் நாதம் உதித்துப் பின் நாதாந்தத்தில் அடங்க, ஆன்மா இறைவனுடன் இரண்டறக் கலந்து முத்தியடையும். வீடுபேறாகிய பெரும்பயன் சாம்பவி மண்டலச் சக்கர வழிபாட்டினால் கிட்டுகின்றது''[68]

— இவை இச்சக்கர வழிபாட்டின் தன்மைகள், பயன்கள் ஆகியன குறித்துத் திருமந்திரம் தரும் செய்திகளாகும்.

புவனாபதி சக்கரம்

புவனை என்பது சக்திக்குரிய ஒரு பெயர். சக்திக்குரிய மற்றொரு வழிபாட்டு முறையைப் புவனாபதி சக்கரம் தருகிறது.

புவனாபதிக்குரிய எழுத்துக்கள் பதினைந்து. அவை பொன்மை, செம்மை, வெண்மை என்ற மூன்று நிறங்களை உடையன; ஒவ்வொரு நிறத்துள்ளும் ஐயைந்து எழுத்துக்கள் இடம்பெறுகின்றன.[69] இவை முறையே

1. வாக்பவ கூடம்
2. காமராஜ கூடம்
3. சக்தி கூடம்

என்று மூன்று காண்டங்களாகப் பிரிக்கப்படுகின்றன.[70]

புவனாபதிக்குரிய வழிபாடு (1) புறவழிபாடு, (2) அக வழிபாடு என்று இருவகைப்படும்.

1. புறவழிபாடு:

புவனாபதியின் உருவத்தைத் திருமந்திரப் பாடல்,

செய்ய திருமேனி செம்பட்டுடை தானுங்
கையிற் படையங் குசபாசத் தோடபய
மெய்யில் அணிகலன் இரத்தின மாமேனி
துய்ய முடியும் அவயவத்தில் தோற்றமே[71]

என்று சித்திரிக்கின்றது. சிவந்த திருமேனியை உடைய புவனாபதிக்குச் சிவந்த பட்டாடை உரியது; கைகளில் அங்குசம், பாசம் ஆகியவற்றோடு அபய முத்திரையும் விளங்கும். திருமேனியில் அணிந்துள்ள பல்வேறு அணிகலன்களோடு இரத்தினம் பதித்த வையும் கிரீடமும் காணப்படும் புவனாபதிக்குரிய படையல் 'ஹ்ரீம்' என்று சொல்லி மந்திரிக்கப்பட்ட பால், அன்னம் ஆகியவை. இவற்றைப் படையலிட்டுப் பின் 'நாரதாய சுவாகா' என்று சொல்லி வணங்கி, புவனாபதி தன்னுள் கலந்திருப்பவள் என்று நினைத்து, அன்னத்தை உண்ண வேண்டும்; அப்படிச் செய்பவர்கள் விரும்பும் அனைத்தையும் அவள் தருவாள்.[72]

புவனாபதிக்குரிய புற வழிபாடு உலகில் பெரிதும் காணப் படுவது. இன்று இதே முறையில் வழிபாடு செய்பவர்கள் அனைத் தையும் பின்பற்றினாலும் திருமந்திரம் குறிப்பிடுவது போல 'நாரதாய சுவாகா' என்று சொல்லி வழிபடுவதில்லை.

புவனாபதியைச் சக்கர வடிவில் வழிபடுவது இது.

செப்புத் தகட்டில் அறுகோணம் இட்டு, அதனுள்ளுக்குள் ஸ்ரீம், ஹிரீம் எழுதி, உச்சியிலும் ஹிரீங்காரம் எழுதி, எல்லாக் கோணங்களையும் சூழ வட்டமிட வேண்டும். அதன்பின் பதினாறு உயிரெழுத்துக்களையும் அகரமுதலாக எழுதுதல் வேண்டும்; வட்டத்தின் மேற்பகுதி தாமரை இதழின் வடிவமைப் பைப் பெறுதல் வேண்டும். இதழ்களின் நடுவிலுள்ள வெளியில் ஹ என்னும் எழுத்தையும் உ என்னும் எழுத்தையும் சேர்த்த ஸ்ரீ என்னும் எழுத்தினை எழுதி, இதழ்களுக்கு மேலே கிரோம், சிரோம் என்பனவற்றை எழுதிப் பின் சக்கரத்தின் இடப்பக்கத்தில் ஆம்கிரோம் என்றெழுதி, வலப்பக்கத்தில் குரோம் சிரோம் என்று எழுதி, குற்றமற்ற ஹிரீம் என்னும் பீசத்தால் சக்கரத்தைச் சூழப் புவனாபதிச் சக்கரம் முழுமையடையும்.[73]

2. அகவழிபாடு:

திருமூலர் நன்கு ஆராய்ந்து புவனாபதியைத் தவிரச் சிறந்த தெய்வம் வேறில்லை என்று முடிவு கூறுகின்றார். இதனை,

ஓரில் இதுவே உரையும்இத் தெய்வத்தைத்
தேரில் பிறிதில்லை யானொன்று செப்பக்கேள்
வாரித் திரிகோண மனமின்ப முத்தியுந்
தேரில் அறியுஞ் சிவகாயந் தானே[74]

என்னும் பாடல் தெளிவுறுத்தும். கடலைப் போன்று பரந்து விரிந்துள்ள முக்கோண அமைப்பில் மனம் நித்தியானந்தத்தையும் அகண்டத்தையும் தியானித்தால் அது சிவனை வழிபட்டதற்கு ஒப்பாகும்.[75] பராசக்தி ஒருத்தியாக இருந்தாலும் அவளே இறைவனுக்கு அங்கமாகவும் விளங்குகின்றாள். இவளை மனத் தினால் வழிபட்டால் முத்தி கிட்டும். அவள் சிவகுருவோடு பொருந்தி நிற்பதில் எட்டுச் சக்தியாக விளங்குவாள்.[76] காம மிக்கு உழலும் கிழ்மக்களுக்கு இச்சக்தி கிட்டாதவளாவாள்.[77]

புவனாபதியை வழிபடுவதால் இம்மை வாழ்வுக்குத் தேவை யான எல்லாச் செல்வங்களும் கிடைப்பதோடு மட்டுமல்லாமல், அம்மை வாழ்வுக்குரிய வீடுபேறும் கிட்டும் என்பது திருமந்திரத் தால் தெளிவாகின்றது.

நவாக்கரி சக்கரம்

நவாக்கரி சக்கர வழிபாடும் சக்தி வழிபாடாகும். நவம் என்றால் ஒன்பது. ஒன்பது பீசங்களை உடைய சக்தியை வழிபடுவது நவாக்கரி வழிபாடாகும். ஒன்பது எழுத்துக்களையும் முதலாகக் கொண்டு ஒன்பது முறை செபிப்பதால் நவாக்கரி சக்கரம் எண்பத்தொரு எழுத்துக்களை அடைப்பதற்கேற்ற எண்பத்தோர் அறைகளை உடையதாகிறது.

நவாக்கரி சக்கர அமைப்பினைச் சொல்லும்போது திருமூலர் பெண்ணை முன்னிலைப்படுத்திக் கூறுகின்றார்.

> ''சுயம்புவாகத் தோன்றிய அச்சக்கரத்தைப் பற்றிச் சொல்லும்போது மதிக்கத் தகுந்த பத்துக் கோடுகளைக் குறுக்கும் நெடுக்குமாக இடவேண்டும் என்பர். பத்துக் கோடுகளின் இடையே ஒன்பது கட்டங்கள் குறுக்கும் நெடுக்குமாக அமைவதால் கிடைக்கும் அறைகள் எண்பத்தொன்றாகும். கட்டங்களுக்கு வெளியிலுள்ள 'மதி மண்டலம்' இக்கட்டங்களைச் சூழவரும் ஓங்காரமாகும். ஓங்காரத்துக்கும் கட்டங்களுக்கும் இடையில் உள்பகுதியை மதிமண்டலமாகக் கொள்ளலாம். இப்பகுதிக்கான நிறம் பொன்னிறம். கட்டங்களுக்கு அடிப்படையான நிறம் சிவப்பு. கருணையுடைய சக்தியின் அட்சரங்கள் அடைக்கும் கட்டங்கள் பச்சைநிறமாக இருக்கும். இதனை அமைப்பதற்குரிய பொருள் பூவரசு மரத்தின் பட்டையாகும்'' [78]

— இவை நவாக்கரி சக்கரம் பற்றித் திருமூலர் தரும் கருத்துகளாகும்.

வெள்ளி, பொன், செம்பு முதலிய தகடுகளிலும் இந்தச் சக்கரத்தை வைத்து வழிபடலாம். இருப்பினும் பூவரசு சிறப்புடையது.

அரைத்த சந்தனச் சாந்து, குங்குமப்பூ, கத்தூரி, மணம் பரப்பும் பலவகையான வாசனைப் பொருள்களின் கூட்டுக் கலவை, சவ்வாது, புனுகு நெய், பச்சைக் கற்பூரம், பசுவின் கோரோசனை ஆகிய ஒன்பது பொருள்களையும் சக்கரத்திற்கு இட்டு, [79] உப்பின்றிச் செய்த வெண்பொங்கலை நெய்யுடன் சேர்த்து, ஆராய்ந்து எடுக்கப்பட்ட தூய்மையான இடத்திலிருந்து தீவளர்த்துப் பிராணனையும் படைத்தல் வேண்டும். [80] பிராணனைப் படையலிடுதல் என்பது தன்னையும் இறைவிக்கு அர்ப்பணித்துக் கொண்டு மனம் ஒன்றி வழிபட வேண்டும் என்னும் கருத்தினைக் கொண்டதாகும்.

மனம் ஒன்றி ஆயிரக்கணக்கான முறை நவாக்கரி மந்திரத்தைச் செபித்தல் வேண்டும். இளம் வாலைப் பெண்ணாகச் சக்தி உள்ளத்தில் தோன்றும் அளவும் செபிக்க வேண்டும் என்பார்,

அர்ச்சனை ஆயிரம் ஆயிரம் சிந்தியே [81]

என்று கூறுவர்.

தொடர்ந்து தேவியை மனத்தால் வழிபட்டால் தாயும் தந்தையுமாக அருள்புரியும் ஒளிவடிவான நவாக்கரி ஆறு கரங்களை உடையவளாய் வெளிப்படுவாள். ஆறு கரங்களில்,

பந்தமா சூலம் படைபாசம் வில்லம்பு
முந்தை கிலீமெழு முன்னிருந் தாளே [82]

என்று கூறுதற்கேற்ப, மழு, சூலம், தோட்டி, பாசம், வில், அம்பு ஆகிய ஆறு ஆயுதங்கள் உள. ஆறு ஆதாரங்களே ஆறு ஆயுதங்கள் என்பது குறிப்புப் பொருள். மனத்தில் தோன்றும் நவாக்கரியைச் சுற்றிலும் அறுபத்து நான்கு சக்திகள் உளர்; வாமை முதலிய கன்னிகள் எண்மரும் இருப்பர். இவள் கனல் திருமேனியள். பொன்னாலான காதணி, கிரீடம், ஆடை ஆகியன அணிவாள். [83] இரு கைகளில் தாமரையும் குமுதமும் ஏந்தியிருப்பள். அபயமளிக்கும் தளிர் போன்ற கரங்களை உடையவள். முத்து பவளமும் கலந்த மாலையணிந்த மார்பினையும், மாணிக்கம் பதித்த கிரீடத்தையும், சிலம்பணிந்த பாதத்தையும் உடையவள். இவள் புலன்வழிப் போகாத நெஞ்சுடையவராய் மனமொன்றி வழிபடுவாருக்கு வெளிப்பட்டு அருள் புரிவாள். [84]

நவாக்கரி சக்தியைக் கண்டவர்களின் வினைகள் நீங்கும்; அதிலும் கொடுமையைத் தரும் பழவினைகள் ஓடிப் போகும்; இப்பிறவியில் அறியாமையால் வந்து சேரும் ஆகாமியமாகிய வினைகள் நீங்கும். எஞ்சியிருப்பன நமக்கென்று விதிக்கப்படும் இப்பிறவிக்கான பிராரத்த வினை மட்டுமே. இதுவும் வழிபாட்டினால் குறைய, சந்திர மண்டல ஒளியை அனுபவத்தில் உணரலாம். [85]

நவாக்கரி தன்னை வணங்குபவர் நினைத்ததை எல்லாம் தருபவள் ஆவாள். [86] இந்த உலகில் எல்லா நன்மைகளும் உண்டாகும்; காலன் விதித்த ஆயுள் நவாக்கரியின் அருளால் மேலும் நீட்டிக்கும்; சூரியனைப் போல் புகழ் பரவும்; பொன், வெள்ளி, நவரத்தினம் முதலியவை தானே வந்தடையும்; பராசக்தியின் அருளும் ஞானமும் கிட்டும்; தேவர்கள் வாழ்வு வந்தடையும்; நவாக்கரியை வழிபடுபவர்களுக்குப் பரமேசுவரனும் அருளுவான். [87]

பொன், வெள்ளி, செம்பாலான நவாக்கரியை ஹிரீம், ஐம், கௌம், கிரீம், ஹௌம், ஔம், சௌம், கிலீம், ஸ்ரீம் ஆகிய பீசங்களைக் கொண்டு வழிபடுபவருக்கு முகப்பொலிவு ஏற்படும்; நாட்டையாளும் மன்னனும் சாதகர் வசமாவான்; பகைவர்களும் இல்லாமற் போவர்.[88]

அமரர் வாழ்வின்மீதும் பற்றுக்கொள்ளாமல் மந்திரங்களைச் செபித்து நவாக்கிரியை வழிபடின் பிறவியறும்; நாவசையாமல் செபித்தால் உலகையே வெல்லலாம்; குரு உபதேசப்படி நடந்தால் துன்பங்களும் இன்பங்களேயாகும்; நன்மைகள் யாவும் சொன்ன படி நடக்கும்; தன்னை வணங்குபவர்களுக்கு— நிறைமொழி மாந்தர்களுக்கு— நவாக்கரி உரிய ஆற்றல்களை வழங்குவாள்.[89]

பல்வேறு வடிவங்களை நவாக்கரியில் கண்டு வணங்குவதால் உலக உயிர்கள் இவ்வழிபாடியற்றுவோரை இறையாகவே கருதி வணங்கும்; உள்ளத்தில் உள்ளவாறு உண்மை பேசுபவர்கள் சக்தியை வணங்காமல் தலைவராவர்; சாதகர் விருப்பப்படி பஞ்ச பூதங்களும் செயற்படும்; அவர்கள் விருப்பப்படி மழை பொழியும். சக்தியைப் பஞ்ச பூதங்களிலும் சாதகர் காணுவர். சக்தி உயிர்களுக்குச் செய்யும் உதவிகளையும் அறிவர்; உயிர்க் குயிராக இருக்கும் அவள்வழியே உயிர்கள் தொழிலாற்றுவதையும் உணரலாம்.[90]

சக்தியை வழிபடுபவர்கள் கொல்லாமையை மேற்கொள்வ தால் மீண்டும் கருவில் சென்று சேரமாட்டார்கள்.[91] இத்தகைய பெறுதற்கரிய பேறுகளைத் தருபவள் நவாக்கரி. இவ்வுண்மையை உணராது உலகவாழ்வே நிலையென்று இருப்பவர் வீடு பேற்றினைப் பெறாது கெடுவர். இதனை,

கலப்பறி யார்கடல் சூழுல கெல்லாம்
உலப்பறி யாருட லோடுயிர் தன்னைச்
சிலப்பறி யார்சில தேவரை நாடித்
தலைப்பறி யாகச் சமைந்தவர் தானே[92]

என்ற பாடல் விளக்குகின்றது.

கடல் சூழ்ந்த உலகின் எல்லா இடங்களிலும் சக்தி கலந்துள்ளாள்; உடலோடு கூடிய உயிர் அழியக் கூடியது; அதனால் அழிவு வராமல் தடுத்து ஆளக்கூடியவள் சக்தி; இதனை உணர்ந்து சிறு தெய்வங்களை வழிபடாமல் அவளை வழிபட வேண்டும்; அப்படி வழிபடுபவர்கள் நாதத்தை உணர்வர்; நாதத்தை உணராதவர்க்கு நாதாந்தமும் முத்தியும் கிட்டாது. இதனை மேற்கண்ட திருமந்திரப் பாடலால் அறியலாம்.

சிவசக்தியை அடைந்தவர்க்குத் தேவரும் ஒப்பாகார்; வீடுபேறு அடைந்தவனுக்கு இல்லாத பொருள் எதுவும் இல்லை. அதனால் திருமூலர்,

இல்லடைந் தானுக்கு இல்லாதில் ஆனையே [93]

என்கிறார். சாதகனது ஆன்மாவையே சிவசக்தி தனக்குரிய இடமாகக் கொண்டமையால்— உலகம் முழுவதும் அவனோடு கலந்து சாதகன் பரந்து விளங்குவதால்— எல்லா இடங்களிலும் சிவசக்தி நிறைந்திருப்பதால் இவர்கள் இல்லாத இடம் என்பதே இல்லை; சிவசக்திக்குரிய பண்புகளை ஆன்மா வழிபாட்டினால் பெறுகிறது. இவற்றை அகச்சான்றாக இருந்து இப்பாடலடி விளக்குகிறது.

உலக வழிபாட்டில் ஈடுபட்டுள்ள மக்கள் நல்ல பாடல்களைப் பொருளுணர்ந்து நினைந்தால் குழம்பிய மனம் தெளிவடையும் என்பது வேதம் ஒப்புக்கொண்ட கருத்து. [94] குமரகுருபரர் மீனாட்சியம்மையைச் சிறப்பித்துப் பாடும்பொழுது,

தொடுக்கும் கடவுட் பழம்பாடற் றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ் சுவையே [95]

என்று பழம்பாடல் வடிவாக உள்ள சக்தியைக் குறிப்பிடுகின்றார். இவளை வணங்குபவர் உள்ளத்தில் கிடக்கும் அகந்தையாகிய கிழங்கு அகழ்ந்து எடுக்கப்படுகிறது; அகந்தை உள்ளத்தில் இருக்கும்வரை தெளிவில்லாத மனிதன் இப்போது அகந்தை வெளியேறியபின் தூய்மை அடைகிறான்; அவன் உள்ளம் கோயிலாக விளங்குகிறது; மனம் கோயிலானபின் அதில் சுடர் விடும் விளக்காக மீனாட்சியம்மை வந்து வீற்றிருப்பாள். குமர குருபரரின் இந்தக் கருத்து மேற்கூறிய திருமந்திரப் பாடலின் நோக்கத்தோடு இணைந்துவிடுகிறது.

மனம் தெளிவடைந்தாலும் உலகப் பொருள்களை விரும்பும் மனிதர் சிலபோது உருவ வழிபாட்டை விரும்புவர்; இத்தகைய மக்களுக்குச் சக்தி நீல வடிவினளாக நீலவொளியுடன் காட்சி தருவாள்; அவளோடு சிவனும் ஆனந்த நடனம் ஆடுவான். இதனை,

அங்கி தமருகம் அக்குமா லைபாசம்
அங்குசம் சூலம் கபால முடன்ஞானம்
தங்கு பயந்தரு நீலமும் முடன்
மங்கையோர் பாகமாய் மாநட மாடுமே [96]

என்னும் திருமந்திரம் குறிப்பிடுகின்றது. சிவன் அக்கினிச் சட்டி, உடுக்கை, உத்திராக்கமாலை, பாசக்கயிறு, தோட்டி, முத்தலை வேல், மண்டையோடு முதலியவற்றை ஏந்திக்கொண்டு, நீல

நிறமான உமையை இடப்பக்கத்தில் உடையவனாய்ச் சிறப்பு மிக்க சிவானந்த நடனம் ஆடுவான்.

பரம்பொருளை விரும்புபவர் பரமுத்தர் எனப்படுவர். இவர்கட்கு உருவ வழிபாடு தேவையில்லை. பரம்பொருளை ஒரோவழி விரும்பி உலகப் பொருள்களின்மீதும் பற்றுடைய வராய் விளங்குபவர் அபரமுத்தர்; இவர்கட்கு உருவ வழிபாடு வேண்டப்படுகிறது. அதனால் சிவனுக்குரிய உருவ அமைப்பு இப்பாடலில் விளக்கப்பட்டுள்ளது.

அருவுருவமாக விளங்கும் இலிங்க வழிபாடு பற்றி முன்னர்க் கூறிய திருமூலர், இப்பாடலில் 'அர்த்தநாரீஸ்வரன்' என்று வழங்கப்படும் உமையொரு பாகனுக்குரிய வடிவத்தை உள்ளவாறே விளக்கியுள்ளார்.

இல்லறத்தானுக்கு விதிக்கப்பட்டவை — விலக்கப்பட்டவை

இல்லறத்தானுக்கு விதிக்கப்பட்டவை:

இல்லறத்தில் ஈடுபட்டுள்ள மனிதனுக்கு உரிய செயல்கள் என்பவை வேறு; விதிக்கப்படுபவை என்பவை வேறு. இல்லறம் மேற்கொள்பவன் உறுதியாகப் பின்பற்றவேண்டிய விதிமுறைகள் சில உண்டு; இவற்றை விதிக்கப்பட்டவை எனலாம். இவ்விதி முறைகளை அழியா இலக்கியங்கள் காட்டும் வாழும் பாத்திரங்கள் வாயிலாக உணரலாம். இம்முறையில் இல்லறத்தான் செய்ய வேண்டிய கடமைகள் சிலவற்றை ஆகமமும் சாத்திரமுமாகிய திருமந்திரம் எடுத்துக் கூறுகின்றது.

திருவள்ளுவர் 'மங்கலம் என்ப மனைமாட்சி'[97] என்று இல்லறத்தில் வாழ்வானுடைய சிறப்பினைக் கூறுகிறார். வீடு அன்பும் அறமும் உடையதாக இருத்தல் வேண்டும்; அன்பின் அடிப்படையில் பண்பும், அறத்தின் பயனாக வீடுபேறும் இல்லறத் தானை வந்துசேரும் என்று வள்ளுவர் கருதுகிறார்.[98] இல்லறத் தான் இயல்புடைய மூவரைப் பாதுகாப்பதோடு,

> **தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்என்றாங்கு**
> **ஐம்புலத்தா றோம்பல் தலை**[99]

என்பதற்கேற்ப நடந்துகொள்ள வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

> **இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த**
> **நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே**[100]

என்று புறநானூறும்,

அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும்[101]

என்று சிலப்பதிகாரமும்,

அருந்து மெல்லட காரிடம் அருந்து மென்றழுங்கும்
விருந்து கண்டபோ தென்னுறு மோவென்று விம்மும்[102]

என்று கம்பராமாயணமும் துறவியர், விருந்தினர் முதலானோரை ஓம்புதல் குறித்துச் சிறப்பாகப் பேசுகின்றன. திருமூலர் குறிப்பிடும் இல்லறத்தானும் மாடு, மனை, செல்வம், மனைவி, மக்களோடு செழுங்கிளை தாங்கும் செல்வனாக வாழ்பவன்; அவன் தன் மனையாளைப் பிரியாது வாழ்ந்து அவளோடு பல அறச் செயல்களைப் புரிபவன்; இரண்டாம் தந்திரத்தில் 'பாத்திரம்' என்ற தலைப்பில் இல்லறத்தான் அறவழியில் சேர்த்த பொருளைச் சேமித்து வைப்பதற்குரிய சேமவைப்பு சிவஞானியர் ஆவர் என்று குறிப்பிடுகின்றார். துறந்தோருக்குப் பணிவிடை செய்யவேண்டியது இல்லறத்தானுடைய கடமை. எள்ளளவு பொன்னை ஞானிக்குக் கொடுத்தாலும் அதனால் இம்மை யின்பமும் மறுமைக்குரிய வீடுபேறும் கிட்டும்; ஆனால் உலகளவு பொன்னை அஞ்ஞானியர்க்குக் கொடுத்தால் அதனாற் பலன் ஏது மில்லை என்கிறார் திருமூலர்.[103]

குற்றமற்ற ஞான குருவுக்கும், தூய்மையான பெரியோருக்கும், காமம், வெகுளி, மயக்கம் ஆகியவற்றை விட்டவர்க்கும் பொருள் கொடுத்து அவ்வந் நிலையில் நிற்கச் செய்பவன் ஞானம் பெறுவ தால் அவனுக்கு நரகம் இல்லாமற் போகும்; சொர்க்கம் கிட்டும் என்று திருமந்திரம் குறிப்பிடுகின்றது.[104]

காமம் வெகுளி மயக்கம் ஆகிய மூன்றையும் விட்டவர் ஞானியர். அவர்களுக்கு அளவான உணவை ஏற்கும் வண்ணம் கொடுப்பதால் அவர்களுக்கு வெகுளி தோன்றாது. இல்வாழ்வான் ஞானிக்குக் கொடுப்பதனால் முக்குற்றம் கீழ்ப்படுத்தப்பட்டு ஞானம் மேலோங்குகின்றது. மேலும் உலகம் இயங்க மழை முறையாகப் பெய்தல் வேண்டும்; அதற்குத் தவமுடைய நல்லாரும் ஞானியரும் வேண்டும்; அவர்கள் ஞானம் கெடாது ஓங்கத் துறவறத்தில் நிற்க வேண்டும்; அதற்கு இல்லறத்தார் உதவுதல் வேண்டும். எனவே இல்லறத்தான் தனக்கு விதிக்கப்பட்டபடி துறந்தாரை முறையாகக் காத்தால் நரகம் செல்லாது சொர்க்கம் புகுவான் என்று திருமந்திரம் தெரிவிக்கிறது.

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்[105]

என்னும் பாடலில் உள்ள பன்மை விகுதி இல்லறத்தான் குடும்பத்தினரோடும் விருந்தினரோடும் உண்டு மகிழ்ந்தான் என்று கொள்ளக் கிடக்கிறது.

இல்லறத்தில் ஈடுபட்டு நற்செயல்களைச் செய்யும் மக்களிடையில் தீய செயல்களைச் செய்பவரும் உண்டு. இவர்கள் தாங்கள் செய்த பிழைகளை உணர்ந்து நல்லனவற்றைச் செய்து நன்மையடைதல் வேண்டும் என்னும் கருத்தோடு திருமந்திரம் மனிதன் விலக்கவேண்டியவற்றையும் எடுத்துச் சொல்லுகின்றது.

இல்லறத்தானுக்கு விலக்கப்பட்டவை :

சங்க இலக்கியத்தில் மருதத்திணைக்கு உரிய உரிப்பொருளாக விளங்குவது ஊடலும் ஊடல் நிமித்தமும் ஆகும். இதற்கு அடிப்படையாக இருப்பது பரத்தையிற் பிரிவு என்பது.[106]

ஆடவன் தனக்குரிய வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொள்ளும் பெண்ணைப் பொதுவாகத் தலைவி, கிழத்தி அல்லது உரிமை மகளிர் என்பர்; ஆனால், தலைவன் வேறு பெண்டிரை நாடிச் செல்லும்போது அவர்களை வரைவின் மகளிர் என்றும், பொதுப் பெண்டிர் என்றும், பரத்தையர் என்றும் பல்வேறு பெயர்களில் வழங்குவர்.[107]

திருமந்திரத்தில் உலகமக்களின் நன்மை கருதிச் சொல்லப்படும் செய்திகளில் மனிதன் விலக்கத்தக்கனவற்றுள் முதன்மையானதாக இடம்பெறுவது பரத்தையர் தொடர்பு.

மனிதன் தன் நிலையிலிருந்து உயர்ந்து இறைநிலை அடைய முடியும் என்பதனைத் திருமூலர் ஆய்ந்து கண்டார்; அதனை உலகுக்கு உணர்த்த முற்பட்டார்; எளிய மனிதன் இறைநிலைக்கு உயரவேண்டுமானால் அவன் புலனடக்கம் பெறல் வேண்டும்; ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றை விடுதல் வேண்டும்.

உடலாலும் உள்ளத்தாலும் மனிதன் விலக்கவேண்டிய பொருள்களுள் காமமும் ஒன்று; இல்லறத்தில் ஈடுபடுபவனுக்கு அளவான காமம் வரையறுக்கப்பட்டுள்ளது; துறவிகள் போகத்தில் ஈடுபட்டாலும் விந்துநீக்கம் செய்யமாட்டார்கள் என்பது விந்துசெயம் என்ற தலைப்பின் கீழ் உரைக்கப்பட்டுள்ளது.[108] விந்து உடலில் வற்றிப் பின் அமுதமாக மாறுகிறது என்பது திருமந்திரத்தில் பேசப்படும் ஒரு செய்தி. இவற்றை உணராது சிற்றின்பத்தில் மிகுந்த விருப்பம் கொண்டு விலைமகளிரை நாடிச் சென்று மக்கள் உலக மாயையில் சிக்கி அழிகின்றனர். இதனை உணர்த்த வேண்டி, 'வேதச் சிறப்பு' என்ற தலைப்பில் இயலும்

இசையும் கூத்துமான முத்தமிழாக விளங்கும் இறைவனை அறியாதவர்கள் பரத்தையரின் புறஅழகில் மயங்கி அவர்களின் ஆடலிலும் பாடலிலும் ஈடுபட்டு அழிதல் தகாது என்று அறிவுறுத்துகின்றார்.[109]

பொதுமகளிரின் இழிகுணங்களை 'மகளிர் இழிவு' என்ற தலைப்பில் ஐந்து பாடல்களில் குறுப்பிடுகின்றார் திருமூலர்.[110]

> ''இலை முதலிய அழகு மிளிர எட்டி கொத்தாகப் பழுத்திருந்தாலும் அஃது உண்ணுவதற்கு உரியதன்று; அதுபோல, காண்பவர் கண்ணையும் கருத்தையும் கவரும் அழகுடைய வராகப் பரத்தையர் இருந்தாலும் அவர்களைச் சேர்தல் கூடாது''[111]

என்றும்,

> ''பரத்தையர் தரும் சிற்றின்பம் கனவு போன்றது; அதனையே நிலையான வாழ்வில் காணும் நனவு போன்ற உண்மையானது என்று விரும்புதல் கூடாது''[112]

என்றும் திருமந்திரம் பரத்தையரை நாடிச் சிற்றின்பம் காண்பாருக்கு இதமாக எடுத்துச் சொல்கின்றது.

பரத்தையர் உண்மையான அன்போடு ஆடவரிடம் பழகுவது இல்லை; அவர்தம் நோக்கமெல்லாம் அவர்கள் தரும் பொருள் மீதுதான். தன்னோடு பழகவரும் ஆடவனிடம் பொருளில்லை என்றால் அவனை விலக்குவர்; அடுத்து வருபவனிடம் மிகுதியான பொருள் இருந்தால் முதலாமவனைப் புறக்கணிப்பர். இத்தகைய பரத்தையரை,

> இயலுறும் வாழ்க்கை இளம்பிடி மாதர்
> புயலுறும் புல்லின் புணர்ந்தவ ரேயினும்
> மயலுறும் வானவர் சாரஇரும் என்பார்
> அயலுறப் பேசி அகன்றொழிந் தாரே[113]

என்று பாடுகிறார் திருமூலர். இவர்களை விட்டு விலகவேண்டும் ஆடவர் என்பது அவர் கருத்து.

பரத்தையரை விட்டு விலகாது இருப்பவர்க்கு ஞானமும், அதன் பயனாய்க் கிடைக்கும் சிவானந்தமாகிய தேனும் கிட்டாது என்பதனை,

> இயங்கும் மடவார்தம் இன்பமே எய்தி
> முயங்கும் நயங்கொண்ட ஞானத்து முத்தார்
> இயங்கும் இடையறா ஆனந்தம் எய்துமே[114]

என்னும் பாடல் காட்டுகின்றது.

இல்லறத்தானுக்கு விலக்கப்பட்டனவற்றுள் மற்றொன்று பிறன்மனை நயத்தலாகும். திருவள்ளுவர் பிறன்மனை

நயத்தலினால் வரும் கேடுகளை விளக்கிக் கூறியிருக்கின்றார்.[115] திருமந்திரம் மூன்று பாடல்களில் இதே கருத்தை விளக்கிச் சொல்கிறது.

பிறன் மனைவியை விரும்புவதற்குக் காரணம் அறியாமை.[116] அன்புடைய மனைவி வீட்டில் இருந்து தன் கடமையைச் செய்தாலும் பிறருக்கு உரிமையுடைய ஒருத்தியை விரும்புபவர் காமுகர். வீட்டுப் பலாக்கனியை உண்ணாது, காட்டில் உள்ள ஈச்சம்பழத்தை விரும்பி அங்குச் செல்பவனும் பிறன்மனை நயப்பவனும் ஒத்தவர் ஆவர். முக்கனிகளில் ஒன்றான பலாவின் சுவையையும் பெருமையையும் உணராதவன்தான் சுவையற்ற ஈச்சம்பழத்தை விரும்புவான்; அதுபோல, மனைவியின் அன்பையும் மாண்பையும் உணராதவன்தான் பிறன்மனையை விரும்புவான். காட்டு விலங்குகளும், ஈச்சமர முள்ளும் ஈச்சம் பழம் பெறுதற்குத் தடையாக நின்று துன்பம் தரும்; அதுபோல, பிறன்மனை நயப்பவனும் சிறுமையும் கேடும் அடைவான்.

திருத்தி வளர்த்ததோர் தேமாங் கனியை
அருத்தமென் றெண்ணி அறையிற் புதைத்துப்
பொருத்தமி லாத புளிமாங் கொம்பேறிக்
கருத்தறி யாதவர் காலற்ற வாறே[117]

என்னும் பாடலில் பிறன் மனைவியை விரும்புபவன் கெடுவான் என்பதோடு அவன் மனைவியுங் கெடுவாள் என்கிறது திருமந்திரம். திருத்தி வளர்க்கப்பட்ட மாமரத்திலிருந்து பெற்ற மாங்கனியை உண்ணாமல் அறையில் புதைத்தல் என்பது, தான் அரிதின் முயன்று பெற்ற தன் இனிய மனைவியினை விரும்பாது ஒதுக்கி வைத்தலைக் குறிக்கிறது; வலிய புளியமரத்தின் உச்சியிலுள்ள தான் விரும்பத்தகாத புளியங்காயை விரும்பி மரமேறுதல் என்பது வலிமை மிகுந்த மாற்றானின் மனைவியைத் தனக்குப் பொருத்தமில்லாதவள் என்றறிந்தும் அவளை விரும்பி முயற்சி செய்தல் என்பதைக் குறிக்கிறது. புளியமரம் ஏறுபவன் மேலிருந்து கீழே விழுந்து அழிவது போல, மாற்றான் மனைவியை விரும்புபவனும் துன்புற்று இறப்பான்; அவன் மனைவியும் துன்புறுவாள்; இல்லற அமைதியும் கெட்டுப் போகும்.

கம்பராமாயணம் இக்கருத்தை இனிது எடுத்துரைக்கிறது. பிறன் மனைவியான சீதையை விரும்பிய இராவணனின் அழிவும், அதனால் வருந்தி உயிர்துறக்கும் மண்டோதரியின் செயலும்[118] மேற்கண்ட திருமந்திரப் பாடலின் கருத்தை வலியுறுத்துகிறது. பொருளின் மீது பற்றுடையாரும், பெண்ணாசை யுடையாரும் அறியாமையாகிய இருளில் மயங்கிக் கெடுவர் என்று மற்றொரு

திருமந்திரப் பாடலும் குறிக்கிறது.[119] காமம் மிகுவதனால் மனிதனின் பேரின்ப வாழ்வுக்கு ஏற்படும் தடைகளை இல்லறத் தானுக்குக் கூறும் நோக்கில் திருமந்திரம் இக்கருத்துகளை எடுத்துரைக்கிறது.

இல்லறத்தில் உடலோம்பல்

பதியைப் போலப் பசுவும் அனாதி; உயிர் பக்குவமடைய உடல் தேவைப்படுகின்றது; உடலின்றி உயிரால் எந்த ஒரு செயலையும் செய்ய இயலாது. கருப்பையில் உயிர் தோன்றுவது முதல் முழுவளர்ச்சி அடையும்வரை உள்ள பத்து மாதங்களில் நிகழும் உடலின் தோற்ற வளர்ச்சிகளைக் 'கர்ப்பக் கிரியை' என்னும் பகுதியில் திருமந்திரம் விளக்கிக் கூறுகின்றது.[120] இதில் நல்ல ஆரோக்கியமான குழந்தை பெறுதற்கான வழிமுறைகள் விளக்கப்படுகின்றன.

சீவன் பக்குவமடையும் காலத்தையும் பூமியில் அது வாழ வேண்டிய கால எல்லையையும் இறைவன் முடிவு செய்கிறான். கரு முதலில் தந்தையின் உடலில் உருவாகின்றது. இதனைத் தந்தையே அறிந்து கொள்வதில்லை. திருமந்திரம்,

புருடன் உடலிற் பொருந்துமற் றோரார்[121]

என்று இக்கருத்தை உணர்த்துகிறது. ''கரு இரண்டு மாதங்கள் தந்தை உடலில் தங்கிப் பின்னர்ப் பெண் உடலில் புகும்'' என்று ஜி. வரதராஜன் கூறுவர்.[122]

விந்தும் சுக்கிலமும் ஒன்று சேரும்போது ஆன்மாவுக்குரிய இருபத்து நான்கு தத்துவங்களும் பொருந்துகின்றன; அதாவது, தன்மாத்திரைகள் ஐந்து,[123] ஞானேந்திரியங்கள் ஐந்து,[124] கன்மேந்திரியங்கள் ஐந்து,[125] தன்மாத்திரையிலிருந்து தோன்றும் பஞ்ச பூதங்கள் ஐந்து,[126] அந்தகரணம் நான்கு[127] ஆகியன. புருட தத்துவம் இவற்றோடு சேராது.

ஒழிந்த முதலைந்தும் ஈரைந்தோ டேறிப்
பொழிந்த புனல்பூதம் போற்றுங் கரணம்
ஒழிந்த நுதல்உச்சி உள்ளே ஒளித்ததே[128]

என்னும் பாடல் இதனைக் குறிப்பிடுகின்றது. இதில் இடம் பெறும் 'ஒழிந்தநுதல்' என்னும் தொடர் இருபத்து நான்கு தத்துவங்களும் சூக்குமமாக ஒடுங்கியிருக்கும் இடம் என்னும் பொருளைத் தருகிறது. இவ்வுச்சி இன்று 'மூளை' என்று குறிப் பிடப்படுகின்றது; இதில் சிறப்பாக அறிவு முன்மூளையில் இடம் பெறும்; பொதுவான அறிவு பின்மூளையில் இடம்பெறும். இவை இரண்டும் இணைந்துள்ள பகுதி உச்சிப்பகுதி. கருவினுள் முதன்

முதல் பாய்வது தசவாயுக்களில் ஒன்றான தனஞ்சயன் என்பதாகும். இதனை 'நீள்வாயு' என்கிறார் திருமூலர்.[129] உடலை விட்டு உயிர்விலகிச் சென்றபின் இறுதியாக உடலைவிட்டு நீங்குவது இவ்வாயுவாகும்.

கரு வளரும்போது அருவமாய் ஒவ்வொரு தத்துவப் பொருளும் அதனுடன் வந்து சேர்கின்றன.

> போகின்ற எட்டும் புகுகின்ற பத்தெட்டும்
> மூழ்கின்ற முத்தனும் ஒன்பது வாய்தலும்
> நாகமும் எட்டுடன் நாலு புரவியும்
> பாகன் விடானெனிற் பன்றியு மாமே[130]

என்னும் பாடல் ஈண்டுக் குறிக்கத்தக்கது. 'போகின்ற எட்டு' என்பது அருவமாய்ப் போகின்ற புரியட்டக சரீரமாகும்; எட்டு: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், மணம், புத்தி, அகங்காரம் என்பன. அடுத்துக் கருவின் உடலை இயக்கும் பத்து வாயுக்களும் காமாதி அட்ட விகாரங்களும் 'புகுகின்ற பத்தெட்டு' எனப் பட்டன; பத்து வாயுக்களாவன: 1. தனஞ்சயன், 2. பிராணன், 3. அபானன், 4. உதானன், 5. வியானன், 6. சமானன், 7. நாகன், 8. கூர்மன், 9. கிருகரன், 10, தேவதத்தன் என்பன. விகாரங்கள் எட்டாவன: காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம், துன்பம், அகங்காரம் ஆகியன. 'விகாரம்' என்றதனால் ஆன்மா இவற்றை நீக்க வேண்டும் என்பது கருத்தாகும்.

கரு வளரும்போதே ஒன்பது துவாரங்களும் வளருகின்றன. இவற்றை 'ஒன்பது வாய்தல்' என்று திருமந்திரம் குறிக்கின்றது. 'வாய்தல்' என்பது வாயில் என்னும் பொருளைத் தரும். அவை: கண்கள் இரண்டு; செவிகள் இரண்டு; நாசித் துவாரம் இரண்டு; வாய் ஒன்று, கருவாய் ஒன்று, எருவாய் ஒன்று ஆக ஒன்பதாகும். இவற்றை இறைவனாகிய பாகன் மனித உடல் நன்கு அமையும் பொருட்டு கருவில் பெற வைக்கிறான்; ஆனால், இவை முறையாக உடலில் பொருந்தாவிடில் மனிதப்பிறப்பு பன்றியைப் போல இழிந்ததாய் விடும்.

இப்பாடலில் 'புரவி' என்னும் சொல் குறிக்கப்படுகின்றது. புரவி என்பது பிராண இயக்கம். இது உலகியலில் ஒன்றி வாழ்பவர்க்குக் கண்டத்திற்குக் கீழ் எட்டு விரற்கடை அளவு செல்லும்; யோகியர்க்குக் கண்டத்திற்குக் கீழ் நான்கு விரற்கடை அளவு செல்லும். எனவே, திருமூலர் 'எட்டுடன் நாலு புரவியும்' என்கிறார்.

மனிதன் உருவத்தால் ஒத்திருந்தாலும் பண்புகளால் பெரிதும் வேறுபடுகின்றான். இதற்கான காரணத்தைத் திருமந்திரம் ஆராய்ந்து சொல்கிறது. பாரம்பரியம் ஒரு மனிதனின் குணங்களுக்குக் காரணமாகின்றன என்று இன்றைய மருத்துவ உலகம் கூறுகின்றது; இதனைத் தாங்கியிருப்பவை 'குரோமோசோம்கள்' என்றும் கூறுவர். திருமந்திரம் இதனை வேறு வகையில் கூறுகிறது.

ஆணும் பெண்ணும் ஒன்று சேரும்போது, விந்தும் கருவும் ஒன்று சேர்கின்றன; அப்போது விந்து கருவினை எதிர்த்துச் சென்றால் பிறக்கும் குழந்தை உருத்திரனைப் போலத் தாமத குணம் பெறும்; மாறாக, சுரோணிதம் எதிர்த்து வரும்போது பிறக்கும் குழந்தை திருமாலுக்குரிய சத்துவ குணம் பெறும்; விந்தும் கருவும் சமமாகக் கலந்திருக்கும்போது பிறக்கும் குழந்தை பிரமனைப் போல இராசத குணம் பெறும்; இம்மூன்று குணங்களும் ஒத்திருக்கும் ஒருவன் பேரரசை ஆளும் தகுதி உடையவனாகவும் விளங்குவான் என்கிறது திருமந்திரம்.[131]

கருப்பையில் உருவம் பெற்றபின் அக்கரு மயக்க நிலையில் வளரும்; அதற்குச் சத்தி தத்துவங்கள் சேர்க்கின்றாள். அதன் பிறகு குழந்தையின் பேருறக்கம் நீங்கி நினைவு உண்டாகின்றது.[132] விந்து— கரு ஆகியவற்றின் கலப்பால் உருவாகும் குழந்தைக்கு அதன் கையளவில் எண்சாண் உடம்பு உண்டாகின்றது.[133] இவ்வுடலாகிய மண்ணை நல்ல முறையில் கருப்பையாகிய சூளையில் வைத்துச் சுட்டுப் பக்குவப்படுத்துபவன் இறைவன். இதனை,

இன்புற் றிருவர் இசைவித்து வைத்தமண்
துன்பக் கலசம் அணைவான் ஒருவனே
ஒன்பது நீர்ச்சால் கலசம் பதினெட்டு
வெந்தது சூளை விளைந்தது தானே [134]

என்னும் திருமந்திரம் உணர்த்துகின்றது. இவ்வுடல் எலும்பும் நரம்பும், குருதியும் தசையும் கலந்து அமைக்கப்பட்டது. இந்தக் கருத்தை,

என்பால் மிடைந்து நரம்பு வரிக்கட்டிச்
செம்பால் இறைச்சி திருந்த மனைசெய்து
இன்பால் உயிர்நிலை செய்த இறையோங்கும்
நன்பால் ஒருவனை நாடுகின் றேனே [135]

என்று தெரிவிக்கிறது திருமந்திரம். திருவள்ளுவரும் உடம்பினை, 'என்புதோல் போர்த்த உடம்பு' என்பர்.[136] மேற்கண்ட பாடலில் 'உயிர் தங்குவதற்கு ஏற்ற உடலை அமைத்த இறைவனை

நான் தேடுகிறேன்' என்று தம்மை உள்ளடக்கிக் கூறுகிறார் திருமூலர்.

கருப்பையில் விந்து கருவுடன் சேரும் வேகத்திற்கு ஏற்பக் குழந்தையின் ஆயுள் உறுதிசெய்யப்படுகின்றது. குழந்தையின் வயதை முடிவு செய்யும் ஆற்றல் மனிதனுக்குப் பொதுவாக இல்லை; எனினும் யோகியர் இதனை அறிந்து நல்ல குழந்தையைப் பெறுவதற்கு ஏற்ப விந்தினைக் கருவினுள் செலுத்துவர்; அப்படிச் செல்லும் விந்துவின் வேகமும் குழந்தையின் ஆயுளும் எத்தகையன என்பதைத் திருமந்திரம் செப்புகின்றது:

பாய்ந்தபின் னஞ்சோடில் ஆயுளும் நூறாகும்
பாய்ந்தபின் நாலோடில் பாலினில் எண்பதாம்
பாய்ந்திடும் வாயும் பகுத்தறிந் திவ்வகை
பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலு மாமே [137]

என்னும் பாடல் இதைச் சுட்டும். ஐந்து அல்லது நான்கு என்பன ஐந்து விரற்கடை அல்லது நான்கு விரற்கடை ஓடி விழுதல் என்பதைக் குறிக்கும்.

குறையுள்ள குழந்தைகள் பிறத்தற்கான காரணங்களையும் திருமந்திரம் ஆய்ந்து கூறுகின்றது. விந்தைச் செலுத்தும் வாயுவின் தன்மைக்கேற்பக் குழந்தையின் வயது உலகில் உறுதியாகின்றது. இது யோகியர்க்கன்றிப் பிறருக்குத் தெரியாது; பிறர் தங்கள் கட்டுப்பாட்டில் விந்தின் வேகத்தை இயக்க முடியாது. விந்தினை இயக்கும் வாயுவின் ஆற்றல் குறைந்தால் கருவில் வளரும் குழந்தையின் உடலில் குறைகள் தோன்றும். இக்குறை தூலமான உடலில் தோன்றுவதால் இதனை அனைவரும் பார்க்க வாய்ப்புண்டு.

இவ்வகையில் மூன்று குறைகளைத் திருமந்திரம் ஒரு பாடலில் கூறுகின்றது:

பாய்கின்ற வாயுக் குறையிற் குறளாகும்
பாய்கின்ற வாயு இளைக்கின் முடமாகும்
பாய்கின்ற வாயு நடுப்படிற் கூனாகும்
பாய்கின்ற வாயுமா தர்க்கிலை பார்க்கிலே [138]

இப்பாடலால் விந்தினைச் செலுத்தும் வாயு குறைந்தால் குழந்தை குள்ளமாக இருக்கும்; வாயு மெலிந்தால் முடமாகப் பிறக்கும்; வாயு தடைப்படின் கூனாக அமையும் என்பன அறியப்படுகின்றன. இவ்வாயு ஆணின் விந்தினை இயக்க மட்டும் பயன்படுகின்றது; பெண்ணின் கருவில் வாயு இல்லை; இதனை கடைசி அடி தெளிவு படுத்துகின்றது.

தாயின் உடலிற் தங்கும் கழிவுகள் முழுவதும் வெளியேற்றப் படாத நிலையிலும் குறைபாடு உடையதாகக் குழந்தை பிறக்கும். இவை தீர்க்கப்பட வேண்டுமாயின் முதலில் தாயின் உடல் தூய்மையுடையதாய் இருத்தல் வேண்டும்.

மாதா உதரம் மலமிகில் மந்தனாம்
மாதா உதரம் சலமிகில் மூங்கையாம்
மாதா உதரம் இரண்டொக்கில் கண்ணில்லை
மாதா உதரத்தில் வைத்த குழவிக்கே [139]

என்னும் திருமந்திரம் சில குறைபாடுகளின் காரணங்களைச் சுட்டிச் செல்லக் காணலாம். தாயின் உதரத்தில் மலம் மிகுந்தால் குழந்தை மந்தபுத்தி உடையதாக இருக்கும்; நீர் மிகுந்திருந்தால் குழந்தை ஊமையாகப் பிறக்கும்; மலம், நீர் இரண்டும் மிக்கிருந் தால் குழந்தை குருடாக விளங்கும் என்று கூறுகிறது திருமந்திரம். இதனை நன்குணர்ந்த மருத்துவர்கள் தாயின் உடலில் கரு வளரும் பத்துத் திங்களிலும், குறிப்பிட்ட சில மாதங்களில் தாயின் உடலிலுள்ள கழிவுகளை அகற்றித் தூய்மைப்படுத்துவர். இம்முறை உலகில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற ஒன்றாகும்.

போக காலத்தில் ஆண்மகனிடம் ஏற்படும் பிராண இயக்கத்திற்கேற்பக் குழந்தை ஆணாகவும், பெண்ணாகவும் பிறக்கும் என்னும் கருத்தினையும் திருமந்திரம் தெரிவிக்கின்றது.

குழவியும் ஆணாம் வலத்தது வாயில்
குழவியும் பெண்ணாம் இடத்தது வாயில் [140]

என்னும் பாடற்பகுதி, போக காலத்தில் ஆணிடம் பிராணன் சூரிய கலையில் அதாவது வலநாசியில் இயங்குமாயின் ஆண் குழந்தை என்றும், சந்திரகலையில் இயங்குமாயின் பெண்குழந்தை என்றும் கூறுகின்றது.

விந்தாகிய சுக்கிலத்தைச் செலுத்தும் பிராணவாயுவை அபானன் என்னும் மலக்காற்று எதிர்த்தால் விந்து சிதைந்து இரட்டைக் குழந்தையாகும் என்பதை,

குழவியும் இரண்டாம் அபானன் எதிர்க்கில் [141]

என்னும் பகுதி உணர்த்துகிறது. வலநாசி, இடநாசி ஆகிய சூரிய கலையிலும் சந்திர கலையிலும் பிராணன் ஒத்தியங்கினால் அப்போது கருவினுள் செலுத்தப்படும் விந்து ஆணுமல்லாது பெண்ணுமல்லாது அலியினை உருவாக்கும். இந்தக் கருத்தை,

குழவி அலியாகும் கொண்டகால் ஒக்கிலே [142]

என்பதனால் அறியலாம். மேலும் ஆணின் குணமும் பெண்ணின் குணமும் சமமாக ஒத்திருந்தாலும் அலியே பிறக்கும் என்கிறார் திருமூலர்:

ஆண்மிகில் ஆணாகும் பெண்மிகில் பெண்ணாகும்
பூணிரண் டொத்துப் பொருந்தில் அலியாகும் [143]

என்பதனால் கூட்டுறவின்போது ஆண்பண்பு மிகுந்தால் குழந்தை ஆணாகும் என்பதும், பெண்பண்பு மிகுந்தால் குழந்தை பெண்ணாகும் என்பதும், ஆண் பெண் குணங்கள் சமமானால் அலியாகும் என்பதும் பெறப்படுகின்றன. அலியாகப் பிறந்தவர்களைச் சமுதாயம் இல்லற வாழ்வுக்கு ஏற்றவர்களாகக் கருதுவதில்லை.

மலட்டுத்தன்மை பற்றியும் திருமந்திரம் ஒரு பாடலில் தெரிவிக்கின்றது. பிராணவாயு புணரும் இருவருக்கும் ஒத்து இயங்குமானால் கருவுட் கொண்ட குழந்தை அழகாக விளங்கும்; ஆனால், அந்த நேரத்தில் இருவருக்கும் பிராணவாயு தடுமாறினால் பெண்ணிற்குக் கரு உண்டாவதற்கு வாய்ப்பு இல்லை. இதனை,

கொண்டதும் இல்லையாம் கோல்வளை யாட்கே [144]

என்கிறது திருமந்திரம். இன்று மலட்டுத்தன்மைக்குப் பல காரணங்கள் அறிவியல் நோக்கில் கூறப்படுகின்றன; இருப்பினும் திருமூலர் கூறும் இக்கருத்தும் மலட்டுத்தன்மைக்கு ஒரு காரணமாக இருக்கலாம் என்பது ஆராய்தற்குரியது.

இறைவனிடத்து ஆன்மாவின் பக்குவத்துக்கு ஏற்ப உடம்பு சூக்குமமாய் ஒடுங்கியுள்ளது; ஆன்மா மீண்டும் தன் வினைப் பயனை அடைய வேண்டும் என்பதற்காகத் தூல உடலை மீண்டும் பெற விரும்புகிறது. அலைகடலில் நீரோடு கலந்துள்ள உப்பு, சூரியனின் வெப்பத்தால் திரண்டு படிகவடிவம் பெறுவதைப் போலக் கடல்போன்ற இறைவனோடு கலந்துள்ள ஆன்மா தான்செய்யும் வினைப் போகங்களுக்கேற்ப அவன் கருணையினால் மீண்டும் தூலஉடல் பெற்றுக் கரு உவாகின்றது. இதனை,

பரத்திற் கரைந்து பதிந்தநற் காயம்
உருத்தரித் திவ்வுடல் ஓங்கிட வேண்டித்
திரைக்கடல் உப்புத் திரண்டது போலத்
திரித்துப் பிறக்குந் திருவரு ளாலே [145]

என்று திருமந்திரம் விளக்குகிறது. சூக்குமமான ஆன்மா இறையருளால் தந்தை, தாய் ஆகியவர்களைக் காரணமாகக் கொண்டு தூல உடலைப் பெறுகின்றது.

நலமிகுந்த உடலையுள்ள குழந்தை உருவாவதற்குப் பிராணனின் இயக்கம் இன்றியமையாததாக வேண்டப்படுவதைப் போலவே தூலஉடலுடன் கூடிய உயிர் உலகில் நன்முறையில் இயங்குவதற்கும் பிராண இயக்கம் இன்றியமையாததாக

வேண்டப்படுகின்றது. சுவாசத்தின் தன்மையைக் கொண்டு இல்லறத்தானின் ஆயுள் இன்றும் மருத்துவர்களால் கணக்கிடப் படுகின்றது. இத்தகைய பிராணனின் இயக்கத்தையும், அதன் குறைகளையும் 'ஆயுள் பரீட்சை' என்னும் தலைப்பின்கீழ் திருமந்திரம் ஆராய்கின்றது.[146] மனிதனின் ஆயுட்காலம் என்பது உயிரும் உடம்புமாக இணைந்து இயங்கும் இயக்கமாகும். உயிரை உடலில் தங்கவைப்பது பிராண இயக்கமாகிய சுவாச மாகும்; சுவாசம் நீண்டு சென்றால் ஆயுள் நீளும்; சுவாசம் குறைந்து சென்றால் ஆயுள் குறையும். சீரான பிராண இயக்கம் இல்லறத்தானின் நலமான உடலோடு கூடிய ஆயுள் நீட்டிப்புக்கு வழி செய்வதாகும்.

பிராணனுக்கு ஓசை உண்டாதலின் பிராணனை ஓசை என்றே குறிப்பிடுகின்றார் திருமூலர்:

ஓசையும் ஈசனும் ஒக்கும் உணர்வின்கண்[147]

என்பது திருமந்திரம். பிராண இயக்கத்தில் உண்டாகும் சூக்குமை வாக்குகள் சிவனோடு ஒப்பவைத்து எண்ணத்தக்கன. இவ்வோசையோடு கூடிய பிராண இயக்கம் நிற்கும் நாளைக் கண்டறியும் முறையைத் திருமந்திரம் கூறுகிறது.

உச்சந்தலையில் வைத்த கையைக் கண்களால் நோக்கும்போது பருத்துமின்றிச் சிறுத்துமின்றி அளவாய்த் தோன்றினால் நன்மை; இதற்கு மாறாகக் கை பருத்துத் தோன்றினால் ஆறு மாதங்களில் இறப்பு வரும்; கை இரண்டு பங்கு பருத்துத் தோன்றினால் ஒரு மாதத்திற்குள் இறப்பு உண்டாகும்.[148]

பிராண இயக்கத்தைக் கொண்டே ஆயுள் கணக்கிடப் படுகிறது; அதனால் ஒவ்வொரு விரற்கடையளவு சுவாசம் அதிகரிக்க ஆயுள் அதற்கேற்பக் குறையும் என்பதைத் திருமந்திரம் குறிப்பிடுகின்றது.

ஆறு விரற்கடை அளவு சுவாசம் வெளியேறினால் எண்பது ஆண்டுகள் வாழலாம்;

ஏழு விரற்கடை அளவு சுவாசம் வெளியேறினால் அறுபத்திரண்டு ஆண்டுகள் வாழலாம்;[149]

எட்டு விரற்கடை அளவு சுவாசம் வெளியேறினால் ஆயுட் காலம் ஐம்பதாகும்;

ஒன்பது விரற்கடை சுவாசம் வெளியேறினால் மூத்து அழியும் ஆயுட்காலம் முப்பது ஆகும்.[150]

பத்து விரற்கடை சுவாசம் வெளியேறினால் ஆயுட்காலம் இருபத்தெட்டு ஆண்டுகள் ஆகும்;

பதினைந்து விரற்கடை சுவாசம் வெளியேறினால் ஆயுட்காலம் இருபத்தைந்து ஆண்டுகளாகும்.[151]

பிறப்பு, சுவாசம், இறப்பு முதலியவை உடலின் பொதுத் தன்மைகள்; கண்ணிற்குப் புலப்படக் கூடியவை; ஆனால், கருவில் உயிர்வந்து தங்குதல் போன்றவை நம் கண்ணுக்குப் புலப்படாதவை. அவ்வாறு கண்ணிற்குப் புலப்படாது நம் உடலைச் சுற்றி ஐவகைக் கோசங்கள் உள்ளன; ஐந்து கோசங்களும் உடலுடன் கொண்டுள்ள தொடர்பை விளக்கும் பகுதி 'உடலிற் பஞ்சகோசம்' என்ற பகுதியாகும்; எட்டாம் தந்திரத்தில் இக்கருத்துகள் இடம்பெறுகின்றன.

உடலானது உண்ட உணவின் சாரம், இரத்தம், மாமிசம், தோல், நரம்பு ஆகியவற்றோடு பொருந்தி, எலும்பு கொழுப்போடு மூளை, சுக்கிலம் முதலியவை ஒன்றுசேர மயக்கமான காரியத்தில் ஈடுபட்டு அழியும்.[153] இவ்வுடல் பாம்பு சட்டை உரிப்பது போலவும், முட்டையிலிருந்து குஞ்சு வெளி வருவது போலவும் இறை ஆணையால் உயிர்விடும்; இங்ஙனம் நீங்கிய உயிர் பிறக்கும்போது தான்பெய்த வினைக்கு ஏற்பச் சூக்கும சரீரத்தில் பொருந்தி நரக சொர்க்கப் பயனை அனுபவிக்கும். மீண்டும் பழமையான வினை தொடரச் சூக்கும சரீரத்தைப் பற்றிவந்து வேறொரு உடலில் புகும். திறமை பொருந்திய யோகி மீண்டும் தன் உடலில் வந்து புகுவது போல, இறப்புக்குப் பின் தன் வினைக்கேற்பச் சொர்க்க நரகத்தில் உயிர் இறை விதித்தபடி கருவில் உள்ள உடலில் புகும்.[154] இதனை,

> உண்டு நரக சுவர்க்கத்தில் உள்ளன
> கண்டு விடுஞ்சூக்கங் காரண மாச்செலப்
> பண்டு தொடரப் பரகாய யோகிபோற்
> பிண்டம் எடுக்கும் பிறப்பிறப் பெய்தியே[155]

என்னும் திருமந்திரப் பாடல் சுட்டுகிறது. இப்பாடலில் உள்ள 'பரகாய யோகிபோல்' என்னும் அடியின் மூலம், இயல்பாகவே யோகிக்குப் பிறிதோர் உடலில் தன் உயிரைச் செலுத்தும் ஆற்றல் உண்டு என்பதையும், அதுபோல உயிருக்குப் பிறவி தோறும் இறப்புக்குப் பின்னர் ஏற்படுகின்றது என்பதையும் அறியலாம். இச்செயல்களையெல்லாம் நல்வினைப் பயனாலும், குருவின் அருளாலும் யோகி எடுத்த பிறவியிலேயே செய்து முடிக்கிறான். இயல்பாகவே உடலில் ஒருகூறாக உள்ள மனோமய கோசம் எனப்படும் உடலியலமைப்பை உலக போகத்தில் ஈடுபடுத்தும் சாதாரண மனிதன் மறந்துவிடுகிறான்; அல்லது

தன்னை அந்நிலைக்கு உயர்த்திக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடுத்திக் கொள்ளும் தன்மை இல்லாதவனாய் வாழ்நாளை வீணாளாக்கிக் கொள்கிறான்.

இவ்வுடல் பஞ்ச பூதங்களின் கூட்டுறவால் ஆனது என்பதனைத் திருமந்திரம்,

காயப்பை யொன்று சரக்குப் பலவுள
மாயப்பை யொன்றுண்டு மற்றுமோர் பையுண்டு
காயப் பைக்குள் நின்றகள்வன் புறப்பட்டால்
மாயப்பை மண்ணா மயங்கிய வாறே [156]

என்னும் பாடலில் விளக்குகின்றது. மாயப்பை என்பது உடலாகிய அன்னமய கோசம்; சரக்குப் பலவுள மாயப்பை என்பது வினைகளாகிய சரக்குகளையுடைய பிராணமய கோசம்; மற்றுமொரு பை என்பது மனமயகோசம், 'கள்வன்' என்பது இங்கு அறிவு விளங்கும் விஞ்ஞானமயகோசம்; காரண உடல் என்பது ஆனந்த மயகோசம் எனப்படும். உயிர் உடலை விட்டு நீங்கினால் அறிவு நீங்கிப் பருவுடல் அழியும். பிராண மயம், மனோமயம், விஞ்ஞானமயம் ஆகிய மூன்றும் நுட்பமான உடல்; இவ்வுடலில் தான் பிருதிவிக் கூறான (மண் தத்துவம்) ஐந்து உண்டு. அவை: மயிர், தோல், எலும்பு, நரம்பு, தசை என்பன.

நீரின் கூறானவை ஐந்து. அவை: நீர், உதிரம், மூளை, நிணம், சுக்கிலம் (பெண்ணுக்குச் சுரோணிதம்).

தீயின் கூறானவை ஐந்து. அவை: ஆகாரம், தூக்கம், பயம், மைதுனம், சோம்பல்.

வாயுவின் கூறானவை ஐந்து. அவை: ஓடல், இருத்தல், கிடத்தல், நடத்தல், தத்தல்.

ஆகாயத்தின் கூறானவை ஐந்து. அவை: குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம்.

இவற்றோடு கன்மேந்திரியங்கள் ஐந்தும், வாயுக்கள் பத்தும், நாடிகள் பத்தும், வாக்குகள் நான்கும், வினை மூன்றும் குணம் மூன்றும் சேர்ந்து அறுபதாகும். கண், கால் முதலிய பஞ்சேந்திரியங்களை மறைக்கின்ற தூல, சூக்கும, அதிசூக்கும உடலுமாக அறுபத்தெட்டுத் தத்துவங்களால் ஆனது மனித உடல். [157]

இல்லறத்தான் தலைவிக்குப் பூப்புத் தொடங்கிய ஆறுநாள்களுக்குப் பின் அவளோடு சேரலாம்; சேர்க்கைக்கு உரிய காலம் விடியற்காலை பொழுதுபுலர்வதற்கு முன்னுள்ள நான்கு நாழிகையே ஆகும். முன்னிரவில் போகம் செய்பவர் வீரியம் இழப்பர்; ஆயின் பின்னிரவில் போகம்செய்பவர் எய்தும் பயனை உணர்வதால் எய்தி வீரியம் இழப்பதில்லை. இதனால் பின்னிரவில்

வலப்பக்க மூக்கில் பிராணன் இயங்கும்போது பெண்ணைச் சேர்வது உத்தமம்.[158]

சந்ததியின்பமும் சேர்க்கையின்பமும் சிறப்படைய வேண்டுமாயின் ஆணும் பெண்ணும் தாம் சேர்வதற்கு முன் நாளில் குடலில் உள்ள மலத்தைப் போக்கி, வாதம், பித்தம், சிலேத்துமம் என்னும் மூன்றையும் தத்தம் நிலையில் இருக்கச்செய்து பின் சேர்தல் வேண்டும்.[159]

பூப்பு நாளிலிருந்து முதல் ஆறுநாள்கள் நுரை என்ற சத்தற்ற நிலையும், இறுதியிலுள்ள ஐந்துநாள்கள் திரை என்ற சோர்வுற்ற நிலையும் இருக்கும்; இவ்விரு காலங்களில் போகம் செய்தால் கருத்தரிக்காது. இதனையறிந்து இல்லறத்தான் போகம் துய்ப்பானேயானால் குடும்பக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்தவனாகின்றான்; இந்நெறியைக் கடைப்பிடிப்பவர் வேறு கருத்தடை அல்லது அறுவை முறைகளை நாடவேண்டாம்.

உடலும் நோய்களும்

பிறவியே துன்பமயமானது; அஃது ஒரு பெருநோய். இந்தப் பெருநோயின் இடையிடையே சிறுநோய்கள் பல உடலை வருத்துகின்றன. அவற்றிற்கான காரணங்களையும், நீக்குதற்குரிய வழிகளையும் திருமந்திரம் விளக்குகின்றது.

மக்கள் தம் செயல்களை நன்னெறிப்படுத்திக் கொள்வதற்கும், குறையற்ற சிறந்த சமுதாயம் உருவாவதற்கும் திருமந்திரத்தில் இடம்பெறும் நோய் பற்றிய கருத்துகள் பெரிதும் உதவுகின்றன. நோய்கள் பற்றி யோகியரைவிட இல்லறத்தானுக்கே வற்புறுத்திக் கூறப்படுகின்றன. ஏனெனில் துறவறத்தில் ஈடுபட்டவன் தன் உடற்கூறுகளையும், அதில் ஏற்படும் மாற்றங்களையும் நன்கு அறிந்தவன். இதற்கும் மேலாக ஆசையை அறுத்தவன்; தவறு செய்யும் இயல்புடையவனும் அல்லன். அளவோடு செயல்படும் கட்டுப்பாடும் அவனுக்கு உண்டு. ஆதலால் திருமந்திரத்தில் இல்லறத்தானுக்கே நோய்பற்றிய அச்சம் ஊட்டப்படுகிறது.

தங்களை நோய் அணுகும் என்ற காரணத்தினால் மக்கள் தீமைகளையும் அறமற்ற செயல்களையும் விட்டு விலகி, நன்மைகளைச் செய்து வாழ முற்படவேண்டும் என்பது திருமந்திர உட்கிடக்கை. அறம் செய்வார்க்கு இந்த நோய்கள் வாரா என்று சிலவற்றை வரிசைப்படுத்துவதால் அறம் செய்யார்க்கு அவை வரும் என்று அறியப்படுகிறது.

இருமலும் சோகையும் ஈளையும் வெப்பும்
தருமம்செய் யாதவர் தம்பால தாகும்
உரும்இடி நாகம் உரோணி கழலை
தருமஞ்செய் வார்பக்கல் தாழகி லாவே [160]

என்னும் பாடல் நோய்களைப் பற்றித் தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

தருமம் செய்யாதவரை இருமல், சோகை, கோழை, சுரம் ஆகியன சென்று அடையும்; இவை சேர்ந்தாரை மெல்லக் கொல்வன. தொண்டை நோயாகிய உரோணியும், வயிற்றுக் கட்டியாகிய கழலையும் அறம் செய்யாதாரை அணுகும் பிற நோய்களாம்; இவை விரைந்து கொல்வன. பாம்புக் கடியும், இடியும், மின்னலும் இத்தகையவர்க்கு மரணத்தை உண்டு பண்ணும். இவற்றால், அறஞ்செய்யாதார் வாழ்வில் நோய் வாய்ப்பட்டுத் துன்புறுவர் என்று திருமந்திரம் எச்சரிக்கின்றது.

கோயிலில் உள்ள இலிங்கத்தைப் பெயர்த்தெடுத்து வேறோர் இடத்தில் வைப்பவர் இறப்பதற்கு முன்னர்ப் பெருநோயால் பீடிக்கப்பட்டுத் துன்பமடைவர் என்று நந்தி சொல்வதாகத் திருமந்திரம் எடுத்துரைக்கிறது. [161]

சிவதீட்சை பெறாது பெயரளவில் அந்தணராக இருப்பவர் வழிபாடு செய்தல் ஆகாது; இத்தகைய அந்தணனது தகுதியறியாது கோயிலில் நியமித்த குற்றத்துக்கு மன்னன் ஆளாகிப் பொல்லாத நோயினால் அவதியுறுவான். [162] கோயில் கல்லைத் திருடினால் ஆளும் பட்டத்தரசர் வெட்டி வீழ்த்தப்படுவார்; வேதியர் வெட்டப்படுவர்; முனிவரது தவமும் முற்றுப் பெறாது என்கிறது திருமந்திரம். [163]

வேதாகமங்கள் குறிப்பிடும் முறைக்கு மாறான வழிபாடு நடந்தால் மன்னன் மட்டுமல்லாமல், அவனது ஆட்சியின் கீழுள்ள நாடும் மக்களும் அளவிட முடியாத நோய்களால் வருந்துவர் என்னும் செய்தியையும் திருமந்திரம் தருகிறது. [164] 'அறத்தான் வருவதே இன்பம்' [165] என்னும் குறட்கருத்தை, நோயினால் வரும் துன்பத்தைச் சுட்டித் தெளிவுறுத்துகிறது திருமந்திரம் எனலாம்.

உடலில் உள்ள பத்து வாயுக்களின் திரிபினாலும் நோய்கள் சில வருகின்றன என்கிறார் திருமூலர். இருநூற்று இருபத்து நான்காவது புவனத்தில், அதாவது அநாசிருதையில், தனஞ்செயன் உள்ளது. அநாசிருதை என்றால் 'ஒன்றையும் ஆதரிக்காதது' என்பது பொருள்.

தனஞ்செயன் தனித்து இயங்குவதோடு மட்டுமல்லாமல் ஏனைய ஒன்பது வாயுக்களோடும் கலந்துமிருக்கின்றது. இவ்வாறு அது கலந்திருப்பதனால்தான் உயிர் உடலில் நிலைத்துள்ளது. உடலைவிட்டு உயிர் பிரிந்தபின் எல்லா வாயுக்களும் நீங்கும்; இறுதியில் உடலை வீங்கச் செய்து உச்சி வெடித்தபின் வெளியேறுவது தனஞ்செயன். இதனை அறிந்த யோகிகள் தனஞ்செயனைத் தம்முடல்விட்டு நீங்காதவாறு தங்கவைத்துக் கொள்வர். தனஞ்செயன் என்னும் வாயு பிற வாயுக்களோடு திரிபடைந்து இயங்கினாலும், தன்னில் திரிபடைந்து இயங்கினாலும் வீக்கம் தொடர்பான பல வியாதிகள் உடலில் தோன்றும். கழலை, சிரங்கு, குட்டம், இரத்த சோகை, கால்வாதம், கூன், முடம், கண்ணில் வீக்கம் முதலியன தனஞ்செயன் திரிபால் ஏற்படுவன என்கிறார் திருமூலர்.[166]

கண்ணில் 'ஆணி' எனப்படும் பூவிழுதல், காசம் எனப்படும் படலம் முதலியன தனஞ்செயன் திரிபால் வருவன அல்ல; இவை கூர்மன் என்னும் வாயு கண்ணில் பொருந்தாவிடில் உண்டாவன.[167] தனஞ்செயன் சிரசிலும் கூர்மன் கண்ணிலும் விளங்குவன என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

துறவற வாழ்க்கை

துறத்தலாகிய அறத்தைச் செய்பவன் துறவி; அவன் பிரபஞ்சம் எத்தன்மையது என்பதையும், இங்குத் தான் பிறந்த தன் காரணத்தையும் உணர்ந்து, தன் வாழ்வினைக் கூத்தாடி அழிக்காமல், இவ்வுலக மாயைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, பற்றற்றவனாய், உலக மக்களின் நன்மை தீமைகளிற் பங்கு கொண்டு, உலகை இயக்கும் பேரருட் சக்தியுடன் இரண்டறக் கலப்பவன் ஆவான்; ஈசனோடாயினும் ஆசையற்றவன் அவன்.

துறவறத்தான் யார்?

இல்லறத்தார், இல்லம் துறந்தார், இல்லம் துறந்து உள்ளமும் துறந்த துறவறத்தார் ஆகிய மூவரின் ஆன்ம பக்குவத்தைப் பற்றிப் பட்டினத்தார்,

> அறந்தான் இயற்றும் அவனிலுங் கோடி அதிகம்இல்லம்
> துறந்தான் அவனின் சதகோடி உள்ளத் துறவுடையோன்
> இருந்தான் அறக்காற்று அறிவோடிருந்திரு வாதனையற்று
> இருந்தான் பெருமையை என்சொல்லுவேன் கச்சியே கம்பனே[168]

என்று திருவேகம்ப மாலையிற் பாடுகிறார். அவர்தம் கூற்றுப் படி, இல்லறத்திலிருந்து அறஞ்செய்பவனிலும் துறவியின் சிறப்பு மேலானது; இந்நிலையில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டவன் இல்லறத்தானைக் காட்டிலும் பலகோடி மடங்கு மேலானவன்; உலகியலில் இன்ப துன்பங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு காட்டிற்குச் செல்பவன் அவனினும் மேலானவன்; இவர்கள் அனைவரையும் விடச் சிறப்புடையவன் உள்ளத்துறவு பூண்டு வாழ்பவன்.

திருமூலர் ஒரு துறவி; எனவே துறவறத்தின் மேன்மையையும், அதன் பல்வேறு படிநிலைகளையும் திருமந்திரத்தில் இனிது விளக்கியுள்ளார்.

ஆறாம் தந்திரத்தில் துறவு, தவம், தவதூடணம், அவவேடம், திருநீறு, ஞானவேடம், சிவவேடம், அபக்குவன், பக்குவன் முதலிய தலைப்புகள் உண்மைத் துறவிகளின் தன்மைகளைப் பற்றியும் செயல்களைப் பற்றியும் வரையறுத்துப் பேசுகின்றன.

சிவன்:

துறவறத்தில் ஈடுபட்டுள்ள நல்லதொரு துறவிக்குச் சான்றாகத் திருமூலர் சிவபெருமானையே சுட்டுகின்றார்:

> **அறவன் பிறப்பிலி யாரும் இலாதான்**
> **உறைவது காட்டகம் உண்பது பிச்சை**
> **துறைவனுங் கண்டீர் துறந்தவர் தம்மைப்**
> **பிறவி யறுத்திடும் பித்தன் கண்டீரே** [169]

என்பது அப்பாடல். சிவன் நியதிகளை யுடையவன்; பிறப்பற்ற தனியன்; தத்துவக் காட்டை நீத்தவன்; அவன் பிச்சையாக ஏற்பது சீவபோதம்; ஆதலால் சிவனே மிகச் சிறந்த துறவி; அவனே பற்றுகளை நீத்தவரின் பிறவியை நீக்கி முத்தியளிக்க வல்லவன். திருவாசகம்,

> **கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை**
> **தாயுமிலி தந்தையிலி தான்றனியன் காணேடி** [170]

என்று சுட்டுவது இங்கு ஒப்பிடத்தக்கது. இவ்வாறு ஆன்மாக் களை உலகு துறக்கச் செய்து தவநிலையில் ஈடுபடச் செய்பவனும் சிவனே யாவன்.

வழிபாடு — அதன் பயன்:

உலகைத் துறந்து இருவினைகளற்று இறைவனின் திருவடிப் பேற்றினை அடையவேண்டும் என்று விருப்பம் கொள்கிறான் துறவி.

பதைத்தொழிந் தேன்பர மாவுனை நாடி
அதைத்தொழிந் தேன்இனி யாரொடுங் கூடேன்
சிதைத்தடி யேன்வினை சிந்தனை தீர
உதைத்துடை யாயுகந் தாண்டரு ளாயே [171]

என்பது திருமந்திரப் பாடல். ''இறைவா! பரபரப்பு நீங்கி, உலக வாழ்வில் அலுத்து, மக்களோடு தொடர்பு நீங்கியதனால் என்வினை கெடுத்து, என் கவலை நீக்கி, என்னை மகிழ்ச்சியோடு ஆண்டருளுவாயாக'' என்பது இதன் கருத்து. இவ்வாறு வேண்டி, அட்டாங்க யோகத்தின்படி தியானம் மேற்கொண்டு வழிபட முற்படுகின்றான் துறவி; தன்னுள் மறைந்துள்ள இறைவனைக் காண முயலுகின்றான்; இடையறாது அவனை எண்ணுவதால் துறவிக்கு முக்தி கைகூடுகிறது; முத்தி கைகூடிய உத்தமர் உள்ளம் எதற்கும் நடுங்குவதில்லை; நமனுமங்கில்லை; [172] அதனால் அது சிவானந்தத்தில் திளைத்திருக்கும். அப்பரடிகளும் இவ்வாறே

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம் [173]

என்று முழங்குவர். மற்றோரிடத்தில் திருமூலர்,

இராப்பகல் இல்லை
படும்பயன் இல்லை பற்றுவிட் டார்க்கே [174]

என்று பாடுகிறார். இங்கு 'இரவு' என்னும் சொல் மாயை முதலிய அறியாமையாகிய இருளைக் குறிக்கும்; மாயை ஆகிய இருள் நீங்கினால் இரவே பகலாகும். இவ்விரவு பகலை இராமலிங்க அடிகளார் தம் திருவருட்பாவில்,

முடுகிய அஞ்ஞானந்த காரமெலாம் தவிர்த்து [175]

என்றும்,

விடிந்ததுபேர் ஆணவமாம் காரிருள் நீங்கியது
வெய்ய வினைத்திரள் எல்லாம் வெந்ததுகாண் [176]

என்றும்,

ஆணவ இருட்பேய் அழிந்தது கழிந்தது
மாயைமால் இரவு புலர்ந்தது [177]

என்றும்,

தூக்கங் கெடுத்தான் சுகங்கொடுத்தான்
ஏக்கந் தவிர்த்தான் அருள்அறுத்தான் [178]

என்றும் பலவாறு பாடியுள்ளார். சித்தர்களும் இத்தகைய கருத்துகள் அமையப் பாடியுள்ளனர்.

ஆங்கார முள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்தே
தூங்காமற் றூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம் [179]

பிறப்பும் இறப்புமற்றுப் பேச்சுமற்று மூச்சுமற்று
மறப்பும் நினைப்புமற்று மாண்டிருப்ப தெக்காலம் [180]

தூங்காமற் றூங்கியாங்கே காக்கும் போது
ஆதியென்ற பராபரையு மரனு மொன்றாய்
அண்ணாக்கின் வட்டத்துள் ளாகும் பாரே [181]

என்பன அவற்றுட் சில.

இரவும் பகலுமென் றென்னதைச் சொல்லலாம் சிங்கி— அது
இரவு பகலிடை பிங்கலை வாசியே சிங்கா!
இடைகலை பிங்கலை எண்ணத்தைச் சொல்லலாம் சிங்கி— அது
இடைகலை சந்திரன் பிங்கலை சூரியன் சிங்கா!
எண்ணத்தைச் சொல்லலாம் சந்திரன் சூரியன் சிங்கி— அது
கலையும் பொருந்தும் நடுச்சுழு முனையே சிங்கா! [182]

என்னும் விளக்கத்தை ஞானரத்தினக் குறவஞ்சியில் தருகிறார் பீர்முகமது. இவற்றால், இரவு— சந்திரன்— இடகலை— இட நாடி என்பதையும் பகல்— சூரியன்— பிங்கலை— வலநாடி என்பதையும், இவ்விரண்டும் இணையும் இடமே சுழுமுனை என்பதையும் அறியலாம். இதுவே இரவு பகலற்ற இடம்; இவ்விடத்தில் பிராணனை நிறுத்தித் தவம் செய்பவர் சிவனருள் பெற்றுப் 'பிறப்பினை நீக்கும் பெருமை' பெற்றாராவர். [183] என்பது திருமூலர் வாக்கு பிறவியை நீக்கும் பெருமை மிக்க தவத்திற்கு இடையூறாக எவர் வரினும் சிந்தை சிவனை விட்டு விலகாது நிற்கும் என்கிறார் திருமூலர். [184] மாணிக்கவாசகரும் தவத்தின் முடிவில் தேவர் பதவி பெற்றாலும் எத்தகைய வாழ்வை யும் மேற்கொள்ளேன் என்பதனை,

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு [185]

என்று பாடுகிறார்.

தவ வைராக்கியம் உடையவர்களாய் மன உறுதியுடன் போர்க்களத்தில் இருந்தாலும் சுற்றுப்புறச் சூழலால் சிந்தை தடுமாறாது இறையுணர்வில் இருப்பவர்களுக்குத் தவமில்லாத வர்களால் காணமுடியாத [186] இறைவன் வெளிப்பட்டு அருளுவான். இதனை,

அமைச்சரும் ஆனைக் குழாமும் அரசும்
பகைத்தெழும் பூசலுட் பட்டார் நடுவே
அமைத்ததோர் ஞானமும் ஆத்தமும் நோக்கி
இமைத்தழியா திருந்தார் தவத் தாரே [187]

என்னும் திருமந்திரம் தரும் அகச்சான்றால் அறியலாம்.

புறநோக்கில் ஈடுபடாது அகநோக்கு உடையவர்க்கு முத்தி கிட்டும்; அகநோக்கினை விடுத்துச் சாத்திரம் பேசும் சதுரர் களால் இறைவனைக் காண இயலாது. சிவனது திருவடிப்பேறும் கிட்டாது. மௌனியாய் மோன நிலையடைந்து அகமுகப்

பார்வை செலுத்தினால் அது இறையருளில் நன்கு பதிந்துவிடும்; சிறந்த தவமுடையவர் முத்தியடைவர்; ஞானத்தைப் பெறுவதற்குச் செய்யும் முயற்சியே தவம்; ஞானம் பெற்றபின் தவமும் தேவையில்லை. ஞானசமாதி கூடியபின் தவமும் தனிமுயற்சியும் தேவையில்லை. இத்தகைய ஞானமும் முத்தியும் இல்லற ஞானிக்கும் பொருந்தும்.[188]

துறவற வாழ்வின் பயன் என்ன என்பதற்கு மிகச் சிறந்த சான்றாக விளங்குபவர் இராமலிங்க அடிகளாராவார்.

> ''அண்மைக் காலத்தில் நம்மிடையே வாழ்ந்த இராமலிங்க அடிகள் தம்முடைய அருட்பாவிலே பல இடங்களில், தம்முடைய அருட்பெருஞ்ஜோதியின் ஞானப்பயன் மனித குலத்திற்கு மட்டுமல்லாது, எல்லா உயிர்களுக்குமே கிட்ட வேண்டுமென்ற தமது ஞான இச்சையைப் பற்பல விதங்களிலே மீண்டும் மீண்டும் எழில்மிக்க சொற்களிலே வெளியிடுகிறார்'' [189]

என்று குறிப்பிடுகிறார் மீ. ப. சோமு. எனவே, உலகின் தன்மையுணர்ந்து, தன்னையுணர்ந்து இறையுணர்வில் திளைப்பவர்கள் இறையனுபவம் பெற்று முத்தியடைவர். தவத்தின் பயன் முத்தியடைதல்[190] என்பதே திருமந்திரம் கூறும் முடிபாகும்.

துறவிகளின் ஒழுகலாறுகள்

தவத்தில் ஈடுபடும் துறவிகள் செய்ய வேண்டியவை இன்னின்ன என்று வரையறை செய்கின்றது திருமந்திரம். தவவேடம், திருநீறு, ஞானவேடம், சிவவேடம் ஆகிய பகுதிகளில் துறவிகளின் புற இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

> பூதி யணிவது சாதன மாதியிற்
> காதணி தாம்பிர குண்டலம் கண்டிகை
> ஓதி யவர்க்கும் உருத்திர சாதனம்
> தீதில் சிவயோகி சாதனம் தேரிலே [191]

என்றும்,

> யோகிக் கிடுமது உட்கட்டுக் கஞ்சுளி
> தோகைக்குப் பாசத்துச் சுற்றும் சடையதொன்
> றாகத்து நீறணி யாங்குஅக் கபாலம்
> சீகத்த மாத்திரை திண்பிரம் பாகுமே [192]

என்றும் இரண்டு பாடல்களில் சிவவேடம் குறித்துப் பாடுகின்றார் திருமூலர்.

திருநீறு, காதில் தாமிரக் குண்டலம், கழுத்தில் முப்பத்திரண்டு உருத்திராக்கங்கள் கோத்த மாலை ஆகியன வேதாகமங்களை

ஒதித் தீமையில்லாத வீடுபேற்றை வேண்டிச் சிவயோகத்தில் ஈடுபடும் யோகிக்கு உரிய சாதனங்களாகும். மேலும், உள்ளாடை, கைப்பை, தோகையாலாகிய சட்டை, சுற்றிய சடை, உடம்பு முழுவதும் அணியும் திருநீறு, அங்கையில் மண்டையோடு, பிரப்பங்கோல் ஆகியனவும் துறவிக்குரியனவாம் சட்டையணியும் சிவயோகியரைப் பற்றிய குறிப்புத் திருவாசகத்தில்,

பள்ளி குப்பாயத்தார் அன்னே [193]

என்று குறிப்பிடப்படுவது ஈண்டு நோக்கத்தக்கது. இவைகளே யன்றி, காதணியாகிய குண்டலமும் கழுத்தணியாகிய உருத்திராக் கமும், சிவசிவ ஒலியும், ஊதுகின்ற வெண்சங்கும், மேலான ஆறுகட்டியும், [194] மண்டையாகிய சட்டியும் (பிச்சைப் பாத்திர மும்), குற்றமில்லாத பாதக் குறடும், யோகத்திற்குரிய இருக்கை யும், பட்டம், யோக தண்டம் ஆகியனவும் [195] சிவயோகிக்கு உரிய பொருள்களாம்.

அரசு, ஆல், அத்தி முதலிய தாவரங்கள் வேள்வித்தீயில் உருமாறி, வெண்ணிறமான விபூதியாக ஒளிவீசும். அவ்வாறே, சிவனின் திருவடியை உணர்ந்து அனுபவிக்க விரும்புபவர்களும் மனிதவுடல் ஒளியுடலாக மாறிய பின்பே இறைவனை அடைய முடியும். இதனை உணர்த்தவே வெண்ணீற்றினை அணிகின் றனர் என்னும் கருத்தையும் திருமந்திரம் விளக்குகின்றது. [196]

துறவறத்தில் ஈடுபட்டுப் புறத்தில் தம்மைத் தூய்மை செய்து தவக்கோலம் பூண்டவர்கள் அகத்தூய்மை பெறுவதற்குக் குருவினை நாடல் வேண்டும். சீவனின் பக்குவத்திற்கு ஏற்பச் சிவனே குருவாகத் தோன்றி ஆட்கொள்வான். திருமூலருக்குக் குருவாக இருந்து உபதேசித்தவர் நந்தியே ஆவார். [197] குருவாக வருபவர்கள் மானிடச் சட்டை தாங்கி வருதலும் உண்டு; அவ்வாறு வருபவர்களையும் சிவகுருவாகக் கொள்ளல் வேண்டும். [198] ஸ்ரீ காஞ்சி முனிவர் அவர்கள்,

> ''ஈசுவரன் வேணுமா? அதற்கு அவனைத்தான் நேரில் உபாசிக்கணும் என்றில்லை. அவனைப் பிடித்துக் கொண்டுவர நம்முடைய உபாசனா சக்தி போகவே போகாது. அதனால் ஒரு குருவைப் பிடித்துக்கொண்டு விட்டால் போதும். நமக்காக அவர் பிரார்த்தித்தோ, சண்டைபோட்டோ அவனை இழுத்துக்கொண்டு வந்து விடுவார்!
>
> இப்படித் தனக்குக் கிடைத்த ஈசுவர தரிசனம் தன்னுடைய சிஷ்யர்களுக்கு அல்லது தன்னைச் சேர்ந்த மற்றவர்

களுக்குக் கிடைக்கும்படியாகப் பல மகான்கள் பண்ணியிருக்கிறார்கள்.

சோமாசிமாற நாயனார் கதையில் இப்படித்தான் பார்க்கிறோம். அவர் தம்மால் நேராக ஈசுவரனை வருவித்துக் கொள்ள முடியாதென்று சுசீந்திரமூர்த்தி சுவாமிகளிடம் போய் வேண்டிக்கொள்ள, சுசீந்திரமூர்த்தி அப்படியே வரவழைத்துவிட்டாரென்று கதை. இவர்களைக் குரு சிஷ்யர்களென்று சொல்ல முடியாது; ஆனாலும், இதிலிருந்தே ஈஸ்வரனோடு நெருங்கியிருக்கிற குரு அவனைச் சிஷ்யனுக்கும் நெருக்கமாகக் கொண்டுவந்துவிட முடியுமென்று தெரிகிறது''[199]

என்று சொல்வதனால் குரு இறைவனாக இருக்கலாம்; இறைவனே மனிதவடிவு தாங்கியும் வரலாம் என்றறிகிறோம். பெரிய புராணத்தில் சிவபெருமான் முதிய அந்தணராக வந்து சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட செய்தியும் நினைக்கத் தக்கது.[200]

தனக்கெனச் சீடர்களைத் தேர்ந்தெடுக்கும் குருவினைத் திருமந்திரம்,

அறிவுடை யானரு மாமறை யுள்ளே
செறிவுடை யான்மிகு தேவர்க்குத் தேவன்
பொறியுடை யான்புலன் ஐந்தும் கடந்த
குறியுடை யானொடுங் கூடுவன் நானே[201]

என அடையாளம் காட்டுகின்றது. குரு அறிவுடையவனாகவும், வேதம் புகழும் பிரணவத்துள் விளங்குபவனாகவும், தேவர்க்குத் தேவனான சிவனுடன் இரண்டறக் கலந்தவனாகவும் இருத்தல் வேண்டும் என்பது இதனால் அறியப்படுகிறது. குரு தேவர்களுக்குத் தேவனான சிவனுக்கு ஒப்பாகிறான் என்பதை,

''பக்தி யோகத்தாலோ, ஞானயோகத்தாலோ தன்னை உபாஸிப்பவர்களை மறுபடி இந்த லோகத்துக்குத் தள்ளாமல் பரமாத்மாவான தன்னிடமே அடக்கம் பண்ணிக் கொண்டு விடுவதாகப் பகவான் செய்கிறார். பக்தன் ஞானியாகிவிட்டால் செத்துப் போன அப்புறம்தான் பரமாத்மாவிடம் ஐக்யமாக வேண்டும் என்றில்லை. அவன் இந்த லோகத்தில் இருக்கிற மாதிரி பிறத்தியாருக்குத் தோன்றும் போதே மோக்ஷத்தில்தான் இருந்துகொண்டிருப்பான்... ஆனால் இந்த மாதிரிப் பண்ணி ஜயித்து மீளுகிறவன் எங்கேயாவது கோடியில் ஒருத்தன்தான் இருப்பான்''[202]

என்று ஜெயேந்திர சரஸ்வதி சங்காராச்சார்ய சுவாமிகள் அருளியிருக்கும் வாக்கினால் அறியலாம். குரு தெய்வத்தோடு இம்

மானுட உடலில் இருக்கும் போதே ஐக்யப்படுகிறான் என்பது அவர்கள் கருத்து; ஆதலால் 'தேவர்க்குத் தேவன்' என்று திருமூலர் குறிப்பிடுவது ஏற்புடையதே. ஐம்புலனை வென்றவனே உண்மை யான குரு; அத்தகைய குருவோடு தாம் கலந்திருந்ததாகத் திருமூலர் குறிப்பிடுகிறார்.

உலகப் பற்றற்றவனையும், வீடுபேறடைய வேண்டும் என்ற நோக்கம் உடையவனையும் தமக்குரிய சீடராகக் குரு ஏற்றுக் கொள்வார்.[203] அதன்பின் குரு சீடனுக்குரிய உபதேசங்களைக் கூற முற்படுவார்.

குரு வாயிலாகச் சீடன் குண்டலினியின் ஆற்றலால் நாதம் உதிக்கும் என்பதைத் தெரிந்து கொள்கிறான்; அதே நேரத்தில் தான் உலகாயதமாக மும்மலங்களில் ஆழ்ந்து காமத்தை விலக்காத வரை தனக்கு நாதம் உதிக்காது என்பதையும் உணர்ந்து கொள்கிறான். உபதேச முறையை இவ்வாறு விளக்கும் திருமந்திரம்,

அஞ்சில் அமுதுமோ ரேழின்கண் ஆனந்த
முஞ்சில் ஓங்காரமோ ரொன்பான் பதினொன்றில்
வஞ்சக மேநின்று வைத்திடிற் காயமரங்
கிஞ்சுகச் செவ்வாய்க் கிளிமொழி கேளே[204]

என்று உணர்த்துகிறது. முஞ்சில் என்பதற்குத் தருப்பை என்பது பொருள்.

> "குரு உபதேசம் பெறும்போது இழப்பின்றியிருக்க மந்திர சக்தியுடைய தருப்பையினால் செய்யப் பெற்ற கயிற்றைச் சீடனின் இடுப்பில் குருவானவர் அணியச் செய்வார். இதன் தத்துவம் வீரிய இழப்பின்றிக் காயத்திரியைச் செபிக்க அவ்வீரியமானது மாறிச் சிரசில் ஒளியையும் நாதத்தையும் உண்டாக்கும் என்பதாகும்"[205]

என்னும் கருத்து இங்கு நினைக்கத்தக்கது. குருவருளால் பிரணவ நாதத்தைச் சீடன் குண்டலினி ஆற்றலை விழித்தெழச் செய்து உணர்ந்து கொள்கிறான். அத்தகைய சீடனுக்கு மேலும் சில உபதேசங்களைக் குரு உபதேசிப்பான். இதனை,

மலையுளும் வானகத் துள்ளும் புறத்தும்
உலையுளும் உள்ளத்து மூழ்கின் றேனே[206]

என்னும் பாடல் விளக்குகின்றது. இதில் மலை என்பது சிரசு; வானகம் என்பது நெற்றி நடுமுதல் பிரமப்புழை வரை உள்ள பகுதி; புறம் என்பது விரிந்த சகஸ்ரதளம்; உலையுள் என்பது மூலாதாரமாகிய உலை; உள்ளம் என்பது மனமண்டலம். குரு உபதேசித்தபடி சீடன் தன் உடலில்,

1. சிரசிலும், அதன் மேலும் உணர்வை எழச்செய்தல்,
2. மூலாதாரத்துள்ள இறையுணர்வை மேலெழச் செய்தல்,
3. பிரமப்புழையிலுள்ள சகஸ்ரதளத்தை மலரும்படிச் செய்தல்

என்னும் முச்செயல்களையும் செய்து இறையனுபவத்தைத் தன்னுள் காண்பான்.

இவ்வாறு சீடன் இறையனுபவத்தைத் தன்னுள் காணக் குருவின் அருளாசியும் உபதேசமும் மிகவும் இன்றியமையாதது. திருவாசகம்,

பற்றாங்கவை அற்றீர்பற்றும் பற்றாவது பற்றி
நற்றாங்கதி அடைவோமெனிற் கெடுவீரோடி வம்மின்
தெற்றார்சடை முடியான்மன்னு திருப்பெருந்துறை யிறைசீர்
கற்றாங்கவன் கழல்பேணின ரொடுங்கூடுமின் கலந்தே [207]

என்று திருப்பெருந்துறை யீசனது சிறப்பைக் கற்றவர்தம் அடிபேணி அவரோடு கலந்து இறையனுபவம் பெறுங்கள் என்று அழைக்கிறது. குருவருளால் இதுவரை காணாத சிவானந்தத்தைக் குருவால் உணர்ந்த சீடனுக்குச் சிவன்பால் காதல் மேன்மேலும் பெருகும்; அப்படிப் பெருகுவதால் சிவனை அடைய வேண்டு பவருக்குச் சிவத்தைப் பற்றிய அறிவும், சிவத்தின் மேல் காதலும், நோன்பும், ஒழுக்கமும் பெருகுதல் காணத்தக்கது. [208] உபதேசம் பெற்றுச் சிவானந்தத்தை முதன்முறையாக உணர்ந்தவர், அதிலேயே திளைத்துத் தாம் செய்ய வேண்டுவனவற்றையும் மறந்திருத்தலும் உண்டு. இதனைத் திருவாசகம்,

சீல மின்றி நோன்பின்றிச்
செறிவே யின்றி அறிவின்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச்
சுழன்று விழுந்து கிடப்பேனை [209]

என்று விளக்குகின்றது. இவ்வாறு உபதேசம் பெற்றுத் தவத்தில் சிறந்து சிவஞானம் பெற்றவர்களுக்குச் சிவவேடமும் தேவை யில்லை; இத்தகைய ஞானிகள் சமயங்களுள் உயர்வுதாழ்வு கருதார்; வாதப்போர் முதலியவற்றிலும் ஈடுபடார். [210] இவர்கள் சிவ ஒளியில்— சிவ உணர்வில் மட்டுமே திளைத்திருப்பர். [211] இவர்களது ஒளிமண்டலத்தில் உருவமற்ற சற்குரு விளங்கும். [212] இந்நிலையடைந்த ஞானியர் சாதாரண தவயோகியைக் காட்டி லும் உயர்ந்தவராக இருப்பர். [213] குருவருளால் சீடனின் மலம் நீக்கப்படுவதால், [214] மலம்நீங்கிய சீடன் முத்திபெறும் தகுதி யுடையவனாகிறான். [215] பக்குவப்பட்ட சீவனுக்கு இறையனு பவத்தை ஊட்டி இறையின்பம் பெறச்செய்து முத்தியடையச்

செய்பவர் குருவே ஆவார். அதனால்தான் திருமந்திரம் குருவின் பெருமையை,

குருவன்றி யாவர்க்குங் கூடவொண் ணாதே [216]

என்று பாடுகிறார்.

பட்டினத்தார்,

விண்டவர்கள் கண்டவரோ? கண்டவர்கள் விண்டவரோ? [217]

என்று இறையனுபவத்தைப் பற்றிக் கூறுவர். இதற்கு மாறாகத் திருமூலர், இறையனுபவத்தை முதலில் தான் உணர்ந்து பின் தான் பெற்ற அனுபவத்தைத் தன் சீடனுக்குக் காட்டிக் கொடுப்பான் குரு என்று விளக்குகிறார். ஒழுக்கம் மிக்க துறவியே இதனைச் செய்ய முடியும்; போலித் துறவிகளால் இறையனுபவத்தை உணரவும் முடியாது; உணர்த்தவும் முடியாது.

பரிசனவேதி என்பது உலோகங்களைப் பொன்னாக மாற்றக் கூடியது; அது, பட்ட உலோகங்கள் பொன்னாவதைப் போலக் குருவின் திருவடி தீட்சை பெற்றவர் யாவரும் மும்மலம் தீர்ந்து சிவகதி பெறுவர் என்பது திருமந்திரம் தரும் அகச்சான்று. [218] இத்தகைய பரிசனவேதி ஒழுக்கத்தில் தவறாது அகமும் புறமும் தூய்மையான துறவி; இத்துறவியே உலக மக்களின் மலங்களை நீக்கக் கூடியவர்; மக்களின் மலமறுத்துப் பேரின்பம் பெறச் செய்வதே துறவிகளுக்குரிய ஒழுகலாறாம்.

போலித் துறவிகள்

இம்மை — அம்மை, பிறப்பு — இறப்பு, இரவு — பகல், நன்மை — தீமை, இன்பம் — துன்பம், இல்லறம் — துறவறம் என வாழ்வின் கூறுகள் ஒவ்வொன்றனுக்கும் இருநிலைகள் உள்ளன. அவ்வாறே மெய்ப்பொருளாகிய இறைவனை அடைகின்ற நிலையிலும் இருநிலைகள் உள்ளன. இல்லற வாழ்க்கையில் தோல்வியடைந்தவர்கள் உண்மைத் துறவிகளுக்குள்ள சிறப்பையும், சமுதாயத்தில் இல்லறத்தார் துறவியரைப் பாதுகாத்துப் போற்றுவதையும் கண்டனர்; முயற்சியும் உழைப்புமின்றிச் சமுதாயம் துறவிகளுக்குத் தரும் மதிப்பை மட்டும் கருத்திற்கொண்டு போலித் துறவிகளாக நடமாட முற்பட்டனர். அதனால் திருமூலர் இத்தகைய போலித் துறவிகளின் நடமாட்டத்தைக் கண்டிக்கும் நோக்கத்தோடு அவவேடம், அபக்குவன், இராசதோடம் என்னும் தலைப்புகளில் தம் கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார்.

உள்ளத்தில் இறையுணர்வு இல்லாதவர்கள் புறத்தில் மட்டும் தவவேடம் பூண்பதனால் பயனில்லை. வேடம் பூண்டு தவநெறி நில்லாதவர்கட்கு மன்னன் தண்டனை முதலியன கொடுப்பான்.

உடைகோவணம் உண்டு உறங்கப் புறந்திண்ணை யுண்டுணவிங்கு
அடைகாய் இலையுண்டு அருந்தத் தண்ணீருண்டு அருந்துணைக்கே
விடையேறும் ஈசர் திருநாம முண்டுஇந்த மேதினியில்
வடகோடு உயர்ந்தென்ன தென்கோடு சாய்ந்தென்ன வான்பிறைக்கே [219]

என்று பட்டினத்தார் பாடுவதுபோல உண்மைத் துறவியாக மாறியவர்களும் உண்டு.

அறியாமை யுடையவர் நூலும் சிகையும் அணிவதால் நாட்டில் உள்ளவர் வாடவும், மன்னன் பெருமை குன்றவும் நேர்கின்றது; அதனால் போலித் துறவியர் ஆடம்பரமாக விளங்கும் பூணூலையும் சிகையையும் களைந்து விடுவது நல்லது; நாட்டுக்கும் மன்னனுக்கும் அது நன்மை பயக்கும்.

ஞான மிலாதார் சடைசிகை நூல்நண்ணி
ஞானிகள் போல நடிக்கின்றவர் தம்மை
ஞானிக ளாலே நரபதி சோதித்து
ஞானமுண் டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே [220]

என்பதற்கேற்ப மன்னன் இத்துறவிகளை ஞானிகள் சிலரைக் கொண்டு சோதித்தறிவான். அறிந்தபின் பழகிய யானையைக் கொண்டு புதிய யானைகளைப் பிடிப்பது போன்று ஞானம் கைவந்தவர்களின் கருணையால் தவத்தில் தவறிய துறவிகட்கும் ஞானம் உண்டாக்குதற்கு முயல்வான் மன்னன். [221]

ஆடம்பரமும் உணவு உண்பதுமே குறிக்கோளாகக் கொண்டு பொய்த் தவவேடம் புனைவதை விடுத்து சிவனது திருவடியைக் கண்டு இன்பமடைதல் சிறந்தது; தாழ்ந்த குலத்தில் தோன்றியோர் வேடம் பூண்டு கள்ளுண்ணுதல் போன்ற பழிக்கத்தக்க செயல்களைச் செய்யின் அவர்களின் தவவேடம் களையப்பட வேண்டியதே ஆகும். [222]

திருமந்திரம் சுட்டும் 'அபக்குவன்' [223] ஆணவம் முதலான ஐந்து மலமுடையவர்; காமத்தினை நீக்காதவர்; பொய் கலந்து பேசுபவர்; பிறப்பு இறப்புக்கு அஞ்சாதவர்; இத்தகையவனைச் சிறந்த ஞானியர் சீடனாகக் கொள்வதற்கு ஒப்புக்கொள்ள மாட்டார்கள். பக்குவமில்லாத இவர்கள் திருமந்திரம் குறிப்பிடும் ''ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்'' [224] என்பதற்கு மாறாக ஞானமில்லாதவரையும் குருவாக ஏற்றுக்கொள்வர். இவர்களை,

குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே [225]

என்று எள்ளி நகையாடுகிறார் திருமூலர். மேலும்,

ஏயெனில் என்னென மாட்டார் பிரசைகள் [226]

என்று பிறிதோரிடத்தில் குறிக்கிறார். இறைவனே முன்வந்து ஆட்கொள்ள முற்பட்டாலும், பலர் தாம் பருகும் தாய்ப்பாலை இறைவன்தான் தாய்க்குக் கொடுத்தான் என்பதை உணராது, உலகமாயையில் சிக்கி, வாயொன்று சொல்ல, மனமொன்று சிந்திக்க, சிவாக்கினியைக் காணாதவராக ஏங்குவர்.

கொலையே களவுகள் காமம் பொய்கூறல்
மலைவான பாதகமாம் [227]

என்று 'பஞ்சத்துரோகம்' பற்றிக் கூறுகிறது திருமந்திரம். இவற்றைச் செய்பவர் பாசத்தில் உழல்பவராவர். அகநோக்கற்று ஒளியினைக் காணமாட்டாதவர்கள் இவர்கள். சிவப்பேற்றினை அடையவேண்டும் என்ற பேராசையால் மனோவாக்குக் காயங்களால் தூய்மையடையாது ஞானமில்லாக் குருவினைக் கொண்டு பிராணாயாமம் செய்வர்; அதனால் பிராணன் ஆறு ஆதாரங்களில் முறையாகப் பொருந்தாது; எனவே ஒலி, ஒளி ஏற்பட வாய்ப்பில்லாமல் போகும்; சீவன் சிவனாதலுக்கும் வாய்ப்பில்லை. அபக்குவர்க்கு இவ்வகையில் பிராணன் முறை மாறிப்போக வாய்ப்புண்டு; முறை மாறினால் உயிரிழப்பும் ஏற்படக் கூடும். எனவே, பக்குவமடைந்தபின் மெய்ஞ்ஞானி கிடைத்தால்தான் துறவும் ஞானமும் பயனுடையனவாக அமைந்து முத்தி கிட்டும். ஏனையோர்க்கு முத்திகிட்ட வாய்ப்பில்லை.

இறைவனை அடைதல்

உலகில் நாம் கண்ணால் காணக்கூடிய பொருள்கள் உண்டு; காண முடியாத பொருள்கள் உண்டு; உணர்வால் உணரும் பொருள்களும் உண்டு. இம்மூன்றில் இறைவன் ஊனக்கண்ணால் காணக் கூடியவன் அல்லன்; அவன் மிகவும் நுண்மையானவன்; ஆதலால், உலக மக்களிடையே கடவுள் உண்டு, இல்லை என்னும் இருவேறு வாதங்கள் எழுந்தன. முடிந்த அளவு சிந்தையைச் சிவன்பால் வைத்து, முடிந்த அளவு இறைவனைப் பற்றியும் ஆன்மாவைப் பற்றியும் இறைவன் இல்லை என்பவர்களுக்கு

எடுத்துச் சொல்லவேண்டும் என்கிறார் திருமூலர். இறைவன் 'இல்லை' என்று அவர்கள் சொன்னாலும்,

இல்லை யெனினும் பெரிதுளன் எம்மிறை
நல்ல வரனெறி நாடுமின் நீரே [228]

என்று கூறல் வேண்டும். எனவே இறைவன் உண்டு என்று தெளிந்து சிவநெறி செல்லுங்கள் என்று திருமந்திரம் கூறுகின்றது.

உலக வாழ்க்கையில் மக்கட்குப் பிறவிகள் தொடர்வதன் காரணம் தம்மைப் பற்றிய உண்மையை உணராமையே ஆகும். தம்மைத் தாம் உணர்ந்து கொள்வதற்காகவே உயிர்களுக்கு இச்சையை ஊட்டுகிறான் இறைவன். உயிர் இல்வுலகின் மீது கொண்டுள்ள இச்சை பயனற்றது என்பதை உணரும் வரை பிறவி தொடரும்; பிறவி தொடரும்வரை மண் — விண், சொர்க்கம்— நரகம் ஆகியனவும் தொடரும்.

மனிதன் உலகில் தன்னை உணர்ந்து இறையுணர்வு பெற்ற போது இயற்கையை இறைவனாக வணங்கினான்; இவ்வியற்கை வணக்கத்திற்குக் காரணம் மனிதனிடம் ஏற்பட்ட அச்ச உணர்வே ஆகும். இதுவும் மரணத்தின் அடிப்படையில் எழுந்ததே. மனித உடல் மூத்து அழிவதை,

அழிகின்ற வோருடம் பாகுஞ் செவிகண் [229]

என்னும் திருமந்திர வாக்குத் தெளிவுபடுத்துகின்றது. இதுபோல் தன் உடலும் அழிதலாகாது என்று நினைத்து, தன்னை மரணத் திலிருந்து காத்துக் கொள்ள வேண்டும் என்னும் எண்ணத்தில் ஆதியில் இறைவனை வணங்கினான்; பின், காலப் போக்கில் உயிர் வேறு, உடல் வேறு என்பதனை அனுபவத்தால் உணர்ந்து, பஞ்சபூதங்களைப் பற்றி யறிந்து, தன்னையும் தான் வாழும் உலகையும் இயக்கும் ஓராற்றல் உண்டு என்று அறிந்தான்; அதுவே இறையுணர்வாக உருவானது. இதன் வளர்ச்சியே மதம். மதம் என்பது இறைவன், உலகம், உயிர் என்னும் மூன்றன் கூட்டமைப்பை விளக்கும் நெறி.

இறைவனை அடைதற்குரிய வழிமுறைகள்

இறைவனை அடைதல் வேண்டும் என்றுணர்ந்த மனிதன் அதற்குரிய வழிகளைக் கண்டறிய முற்பட்டான்; இதன் விளை வாகப் பக்தியோகம், ஞானயோகம் என்னும் இருநெறிகள் தோன்றின. [230] இவற்றுள், பக்தியோகம் என்பது எல்லாம் இறைவனே என்று அவன் பாதங்களை இறுகப் பற்றுக்கோடாகக் கொள்வது; இந்நிலையினைச் 'சரணாகதி தத்துவம்' என்றும் கூறுவர். புற — அக ஒழுகலாறுகள் மூலம் இறைவனை வழிபட்டுச்

செருக்கற்ற ஞானம் கைவரப் பெற்று இறைவனை அடைதல் இதன் கருத்து.

ஒரே ஊருக்குப் பலவழிகள் இருத்தல் போலச் சிவானந்தம் என்னும் பேரூருக்கு ஆறுவழிகள் உண்டு; அதில் எந்த வழியாகச் சென்றாலும் ஊரை யடையலாம். இதனை,

ஒன்றது பேரூர் வழிஆறு அதற்குள[231]

என்ற பாடலடி விளக்குகிறது. 'வழி ஆறு' என்பது ஆறு சமயங்களைக் குறிக்கின்றது. அச்சமயங்கள்: சைவம், வைணவம், சாக்தம், சௌரம், காணாபத்தியம், கௌமாரம் என்பன. திருமந்திரம் ''சிவனவன் வைத்ததோர் தெய்வம்''[232] என்பதை ஓர்ந்துணர்ந்து, ''அவன் வைத்த பழவழி நாடி'' மக்கட்குச் சிவ நெறியை எடுத்துரைக்கிறது.[233] இதனடிப்படையில் திருமந்திரம் இறைவனை அடைவதற்கான பல படிநிலைகளை விளக்குகிறது.

1. சுத்த சைவம்

சடங்குகளில் மனம் நிலைபெறாது, தலைவனான சிவனை அறிந்து, பின் தன்னையும் தன்னைப் பிணைத்துள்ள தளைகளையும் கடந்து, தியானம் செய்து, இறைவன் திருவடிப் பேற்றினை அடைதல் சுத்த சைவம் ஆகும். உலகைப் படைக்கும் இறைவன் சத்து; அறிவு வடிவானவன் என்று தெரிந்து கொள்ளுதல்; உயிராகிய தன்னை அறிதல்; பசு, பாச நிலைகளை நீக்கி, அசுத்த, சுத்த மாயைகளில் தோயாமல் அழியாத சிவத்தைத் தியானித்தல் முதலியன சுத்தசைவத்திற்குரிய செயல்முறைகள். இதனை,

சத்தும் அசத்துஞ் சதசத்துத் தான்கண்டு
சித்தும் அசித்துஞ் சேர்வுறா மேநீத்தும்
சுத்தம் அசுத்தமுந் தோய்வுறா மேநின்று
நித்தம் பரஞ்சுத்த சைவர்க்கு நேயமே[234]

என்னும் திருமந்திரம் விளக்குகின்றது.

இறைவனை எண்ணிப் பதினாறு கலைகளையுடைய சந்திர கலையை அறிந்து, சிவயோகத்தில் ஈடுபட்டு, அ, உ, ம, விந்து நாதங்களைத் தெரிந்து, சாந்தியதீதக் கலையான புருவநடுவில் பொருந்திச் சிவத்தைக் காண்பர் சுத்த சைவர். இவர்கள் சைவ சித்தாந்தர் ஆவர். இத்தன்மை அடைந்தவர்கள் இவ்வுலகினைக் கண்டு அஞ்சாதவராவர்; நாத முடிவில் விளங்கும் சிவத்தை உணர்ந்து கொள்வர்.[235] இவ்வாறு சுத்த சைவர்க்குரிய செயல்களையும், அவர்தம் சிறப்புகளையும் திருமந்திரம் எடுத்துக் கூறுகின்றது.

2. அசுத்த சைவம்

இந்நெறியில் செல்பவர் சைவ சமயத்திற்குரிய சின்னங்களே அணிந்து கொள்வர். இரு காதணிகள், திருநீறு, தலைமாலை, செபமாலை, கண்டமாலை என்னும் உருத்திராக்கமாலை ஆகியன அணிவர்;[236] இவற்றோடு பொன்னால் ஆன கடுக்கன்கள், சிவவேடத்திற்குரிய ஆடைகளை இடையிலும் மேற்புறத்தும் உடுப்பர்; உபதேசம் பெற்றுச் சைவ ஆகமங்களைச் சொல்வர்.[237] இத்தகையவர் அக ஒழுக்கத்திற்குக் கொடுக்கும் சிறப்பைப் போலவே புற ஒழுக்கத்திற்கும் சிறப்புக் கொடுப்பர்.

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், வீண்மீன் என்பவற்றின் கூட்டத்தால் ஆனது உடல்; இவ்வுடலில் பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன், விந்து, நாதம், சத்தி, சிவன் என ஒன்பது வடிவங்களில் இவர்கள் சிவனைக் காண்பர். சரியை, கிரியை வழிகளில் நிற்கும் அசுத்த சைவர் கடுஞ்சுத்த சைவராவதற்கும் தகுதியுடைவராவர். இவர்கள் பிரணவத்தை உணர்ந்து மோனநிலை கைவரப்பெற்று அட்டமா சித்திகளை அடைந்து இறைவனைச் சேர்வர்.[238] இவ்வாறு திருமந்திரம் அசுத்த சைவர்களைப் பற்றிக் கூறுகிறது.

3. மார்க்க சைவம்

மார்க்க சைவத்தில் நிற்பவர்கள் மனித நிலையிலிருந்து உயர்ந்து சிவத்தன்மை அடைந்து சிவபோகத்தில் திளைப்பர். இவர்கள் பொன்னால் செய்த உருத்திராக்கத்தை அணிவர்; திருநீறாகிய வெண்ணீற்றையும் புறத்தில் அணிந்திருப்பர்.[239] ஆகமக் கருத்துக்களை உணர்ந்து வீடு பேற்றிற்கும் உதவும் எண் வகைப் பொருள்களைச் சிந்தித்திருப்பர். அவை: ஆன்மாவாகிய தான், சதாசிவமாகிய இறைவன், பதி, பசு, பாசம், முன்வினைப் பயன், நல்வினை — தீவினை, குற்றமற்ற வீடு பேறு ஆகியன.[240] ஞானத்தால் எல்லாம் சிவனே என்று சிந்தையைத் தெளிவித்துப் பசுவுக்குத்தான் பாசத் தொடர்பு ஏற்படும் என்பதையும், பதியாகிய இறைவனுக்குப் பாசம் கிடையாது என்பதையும் உணர்வர். இதற்குச் சான்றாக,

> விண்ணினைச் சென்றணு காவியன் மேகங்கள்
> கண்ணினைச் சென்றணு காப்பல காட்சிகள்
> எண்ணினைச் சென்றணு காமல் எனப்படும்
> அண்ணலைச் சென்றணு காபசு பாசமே[241]

என்னும் பாடல் விளங்குகிறது. விண்ணில் உள்ள மேகங்களுக்கு விண்ணோடு ஒட்டுறவு இல்லை; கண்ணில் காணப்படும் காட்சிப்

பொருள்கள் கண்களைத் தாமாக வந்து பொருந்த மாட்டா; அவை போல, வினைகள் பசுவைப் பற்றி நிற்குமே யன்றி, எண்ணத்திற்கு அப்பாலுள்ள அண்ணலாகிய சிவபரம் பொருளைச் சென்று அடையா. இவ்வாறு மார்க்க சைவத்தினர் உண்மை உணர்ந்து, சமய நிந்தனைகளை விட்டுச் சிவத்தன்மை பெறுவர்.

4. கடுஞ்சுத்த சைவர்

முதல் மூவகைச் சைவரும் புறச்சின்னங்களை அணிவர்; கடுஞ் சுத்த சைவர்க்கென்று புறச்சின்னம் ஏதுமில்லை; இவர்கள் மனத்தால் பாசத்தையும் ஆடம்பரத்தையும் நீத்தவர்கள்; சிவஞானத்தை மட்டுமே விரும்புபவர்கள். ஐங்கோசங்களையும் ஆறாதாரங் களையும் கடந்து, சுத்தமாயையும் நீத்து, பிறவிக்குக் காரணமான பாசங்களையும் விட்டு, தம்மைத் தாம் அறிந்து கொள்வர். ஆகமங்கள் குறிப்பிடும் பதமுத்திகளில் சேராதவர்கள். பிரணவப் பொருளான இறைவனைப் பரமுத்தியால் அடைவர்.[242]

நானென்றுந் தானென்றும் நாடிநான் சாரவே
தானென்று நானென் றிரண்டிலாத் தற்பதந்
தானென்று நானென்ற தத்துவ நல்கலால்
தானென்று நானென்றுஞ் சாற்றுகில் லேனே[243]

என்னும் பாடலும் இதனை விளக்குகிறது. ''அறிபவனாகிய நான் அறியப்படு பொருளாகிய சிவனை நாடிச் சேர்ந்தபோது, சிவன் சீவன் என்னும் இரண்டற்று, தானே நான் என்னும் உண்மையை உணர்த்தியதால், அறிபவன்— அறியப்படுபொருள் ஆகிய இருநிலைகளற்றுச் சாயுச்சிய நிலை எய்தினேன்'' என்பது இதனால் உணர்த்தப்படுகின்றது.

> ''நான் என்ற அறிபவன், அது என்ற அறியப்படு பொருளுடன் ஒன்றியபோது இருபொருளாக இல்லாமல் ஒரே பொருளாக ஆயிற்று என்ற 'தத்துவமசி' மகாவாக்கியப் பொருளையும் ஒப்பிட்டுக் கொள்க. தத்— துவம்— அசி— அது நீ ஆகிறாய்''[244]

என்று ஜி. வரதராஜன் இப்பாடலுக்குத் தரும் விளக்கம் கடுஞ் சுத்த சைவர் அடையும் சாயுச்சிய நிலையின் பெருமையை உணர்த்துவதாகும்.

இறைவனை அடைவதற்கான வழிமுறைகளில் மதத்தைக் குறிக்கும் புறச்சாதனங்களை அணிதல் முதல்நிலை; மனமடக்கித் தளை நீக்குதல் இரண்டாம்நிலை; ஆகம கருத்துகளை உணர்ந்து வீடுபேற்றைச் சிந்தித்திருத்தல் மூன்றாம்நிலை; சமய சிந்தனை

களை நீக்கிப் புறச்சின்னங்கள் அணியாது மனத்தினால் இறைவனை நினைந்து பரமுத்தி உணர்ந்து, சாயுச்சிய நிலை பெற்று இறைவனோடு இரண்டறக் கலந்து, சீவன் சிவனாதல் நான்காம் நிலையாகிய இறுதிநிலை. இந்த இறுதிநிலையைக் கடுஞ்சுத்த சைவரிடம் காண்கிறோம்.

5. சரியை

சரியை வழியில் செல்வது என்பது உலக வாழ்வில் ஈடுபாடு கொண்டிருக்கும் மக்கள், அது நிலையற்றது என உணர்ந்து இறைவனுக்குத் தொண்டு செய்ய முற்படுவது ஆகும். ஆலயத் தொண்டுகள் செய்து இறைவன் பெருமையைப் பாடுவது சரியை நெறி. இதனைத் திருமூலர் தம் மாணாக்கர்களான கஞ்சமலை யான், காலங்கி முதலானோரை முன்னிலைப்படுத்திக் கூறுகின் றார். அவ்வாறு சரியை நெறியில் இறைவனைப் பணிந்தால் சிவன்,

கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே [245]

என்பதற்கேற்ப அருள்புரிவான். தன்னை உணர்ந்து வழிபடுவார் உள்ளத்தை அவன் கோயிலாக ஏற்பான்; பின் அடியவர் தம் மும்மலங்களை நீக்குவான். இதனால் சரியை நெறிநிற்பவர் மனம் தெளிவுற்றுத் தாம் உலகவாழ்வுக்காகச் செய்யும் செயல்களைத் தள்ளி, இறைவாழ்வுக்கான தொண்டுகளை மேற்கொள்வது என உறுதிகொண்டு திருப்பணி செய்வர் என்று திருமந்திரம் எடுத்துரைக்கின்றது.

6. கிரியை

சரியையாளரைப் போன்று கோயில்களைத் தேடிச்சென்று வழிபாடு செய்யாது எல்லாவிடத்தும் சிவன் நிறைந்துளான் என்னும் மனத் தெளிவோடு இறைவன் திருவடியை சரணடைந்து,

தத்தும் வினைக்கடல் சாரரது காணுமே [246]

என்பதற்கேற்ப, மேன்மேலும் பெருகிவரும் வினைகள் தம்மை வந்து அணுகாதிருக்கத் தத்துவ நீக்கம் பெறுவர், கிரியை நெறி யாளர். சந்தனம் முதலான மணப்பொருள்களை அளவில்லாமல் தூவி வழிபடினும் மனம் ஒன்றவில்லையெனில் அதனால் பயனில்லை என்பதை உணர்ந்தவர்கள் கிரியையாளர். அகமும் புறமும் ஒன்றி வழிபாடு செய்வாரோடு சிவன் சோதி வடிவாகக் கலந்துவிடுவான். இக்கருத்துக்கு அகச் சான்றாக,

என்பினுட் சோதி இலங்குகின் றானே [247]

என்னும் திருமந்திர அடி விளங்குகின்றது.

மனம் தெளிந்து, உணர்வு ஒன்றி, கிரியை புரிந்தால் வழிபடும் உள்ளத்தில் இறைவன் ஒளியாகத் தங்குவான் என்பது கிரியை மார்க்கம் தரும் செய்தியாகும்.

7. யோகம்

உலகவாழ்வில் முழுவதுமாக ஈடுபடுபவர் சரியையாளர்; உலக நினைவற்று உள்ளமொன்றி வழிபாட்டினை மேற்கொள்பவர் கிரியையாளர்; இந்நிலையில் அவர்தம் என்பிலும் இறைவன் தன் அருட்கருணையால் சோதி வடிவாகக் கலப்பான். கலந்தபின்பு யோகநிலையை ஆன்மா நாடும். இந்நிலையில் மூலாதாரத்திலுள்ள குண்டலினியோடு பிராணனைக் கூடச் செய்து பின் சிவனோடு பொருந்தச் செய்வர். யோகியர்க்கு இந்த யோகநிலையில் உடல் உணர்வுகளும் பிற தொடர்பான சிந்தனைகளும் அற்றுவிடும். இதனை,

> சொறியினுந் தாக்கினுந் துண்ணென் றுணராக்
> குறியறி யாளர்க்குக் கூடலு மாமே [248]

என்னும் பாடற்பகுதி தெரிவிக்கிறது. உள்ளம் ஒன்றிய யோகியர் தேவர்களாலும் எளிதில் காணவியலாத இறைவனை [249] ஊழிகள் தோறும் தொடர்ந்துவரும் அனுபவத்தால் கண்டு சிவவடிவம் பெறுவர்.

உலக வாழ்வுக்குத் துணைவரும் இலக்கண இலக்கிய அறிவினை வளர்க்கும் நூல்கற்பார்க்குப் பிறவிநீக்கம் கிட்டாது. [250] இதற்கு மாறாகச் சந்திரன், சூரியன், சுழுமுனை ஆகிய கலைகளை வழிப்படுத்திச் சிரசில் சேர்ப்பவன் நிர்வாண நிலையடைந்து ஒளிவடிவான சிவனைக் கண்டு தானும் சிவனாகிறான் என்கிறார் அழுகணிச் சித்தர். [251] இறைவனை அடையும் நெறிகளுள் அகமொன்றி இறையன்போடு செய்யப்படும் யோகமும் ஒன்றாகும்.

8. ஞானம்

இறைவனை முழுவதுமாக அறிந்துகொள்வது ஞானம் ஆகும். சரியை, கிரியை, யோகம் இவற்றால் சிறிதுசிறிதாகச் சிவானந்தத் தேறலை நுகர்ந்த ஆன்மா பேரின்பமாகிய இறையின்பத்தில் திளைக்கும் நெறி ஞானநெறி. இதன் சிறப்பை,

> ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை
> ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
> ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவாம்
> ஞானத்தின் மிக்கார் நரரின்மிக் காரே [252]

என்று திருமந்திரம் குறிப்பிடுகின்றது. ஞானத்தை விடச் சிறந்த அறம் நாட்டில் வேறெதுவும் இல்லை; ஞானத்தைவிடச் சிறந்த சமயமும் வேறில்லை; ஞானத்துக்குப் புறம்பான எந்நெறியும் வீடு பேற்றை அளிக்காது என்பது இதன் கருத்து. எனவே, ஞானம் ஒன்றே சிறந்த அறம், நல்ல சமயம், வீடுபேற்றுச் சாதனம் என உணரலாம். இதனை முயல்வோர் அருவிநீரின் சலசலப்பினைப் போலத் தோன்றும் எண்ணமற்ற நாதாந்தத்தில் திளைப்பர்.[253] திருவாசகம்,

ஞானவாள் ஏந்துமையர் நாதப்பறை அறைமின்[254]

என்று இதுபற்றிக் கூறுகின்றது.

ஞானத்தினால் கிட்டிய நாதத்தில் திளைத்துக் கொண்டிருப்ப வர்க்கு மௌனம் கைகூட நாதாந்தம் ஏற்படும்;[255] மௌனியான பின், நான், எனது என்ற செருக்கற்ற ஆன்மாவாகி வீடுபேற்றை நாடிச் சீவன் முத்தனாகும்;[256] சீவன் முத்தனானவன் தானும் இறைவனைப் போன்றே ஒளிவடிவினன் என்று உணர்ந்து கொள்வது ஞானத்தின் சிறப்புப் பேறு.

ஞானச் சமயமே நாடுந் தனைக்காண்டல்
ஞான விசேடமே நாடு பரோதய
ஞானநிர் வாணமே நன்றறி வாளரும்
ஞானாபி டேகமே நற்குரு பாதமே[257]

என்று திருமந்திரம் ஞானச் சமயத்தின் பயன் கூறுகிறது.

''ஆன்மா தன்னை அறிதல் ஆன்ம தரிசனம்;
ஆன்மா பரையை அறிதல் சிவ தரிசனம்
ஆன்மா இடையறாது பரையில் நிற்றல் சிவயோகம்;
ஆன்மா குருமண்டலத்தில் அழுந்தல் சிவபோகம்''[258]

என்று ஜி. வரதராஜன் மேற்கண்ட பாடலுக்குக் குறிப்புரை விளக்கம் தருகிறார். 'ஞானச் சமயமே' என்னும் மேலே உள்ள பாடலில் திருமூலர் ஞானத்தில் சமய தீட்சை, ஞானத்தில் விசேட தீட்சை, ஞானத்தில் நிருவான தீட்சை, ஞானாபிடேகம் ஆகிய நான்கனையும் நான்கடிகளில் விளக்கியிருக்கும் திறம் நினைத்து மகிழத்தக்கதாகும்.

ஞானத்தில் பேரின்பம் பெற்றமையைப் பட்டினத்தார் தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.[259]

ஞானநிலைக்கு வரும்வரை சரியை, கிரியை, யோகம் முதலிய நிலைகளில் நிற்கலாம்; ஞானம் கைவந்த பிறகு இச்செயல்கள் எதுவும் தேவையில்லை என்பதை அகப்பேய்ச் சித்தர்,

சரியை ஆகாதே அகப்பேய் சாலோகம் கண்டாயே
கிரியை செய்தாலும் அகப்பேய் கிட்டுவது ஒன்றுமில்லை
யோகம் ஆகாதே அகப்பேய் உள்ளது கடைக்கால்
தேக ஞானமடி அகப்பேய் தேடாது சொன்னேன் [260]

என்று பாடியுள்ளார்.

குதம்பைச் சித்தர் அறிவுப் பொருளான சிவத்தோடு ஒன்றியவர்க்கு ஞானமும் தேவையில்லை என்கிறார். [261]

சரியை முதலான நான்கு நெறிகளும் ஆன்மாவை இறைவன் அருகில் கொண்டு செல்வதற்கான படிநிலைகள் என்பதைத் தெளிவுபடுத்துகிறார் சட்டைமுனி; [262] சிவவாக்கியருக்கும் இக்கருத்து உடன்பாடானது. [263]

9. சன்மார்க்கம்

தான் அவனாம் தன்மையடைதல் சன்மார்க்கம் ஆகும்; இந்நெறியில் நிற்பவர்கள் காலனை வென்ற இறைவனது திருவுள்ளக்குறிப்பை உணர்ந்தவர்களாவர். திருமந்திரம்,

கூற்றத்தை வென்றார் குறிப்பறிந் தார்களே [264]

என்று இதனை எடுத்துரைக்கிறது. உடலையும் ஆன்மாவையும் வேறுபடுத்துபவன் கூற்றுவன்; இதனை நன்குணர்ந்த ஞானிகள், விந்து நாத மயமானது ஆன்மாவே, உடலன்று என்பதை உணர்ந்தவர்களாவர். ஆதலால், இவ்வுடல் இருந்தாலும், இல்லையென்றாலும் அதற்காக அவர்கள் வருந்துவதில்லை. சிவன் எல்லாப் பொருட்களிலும் கலந்திருப்பதைப் போல இஞ்ஞானியரும் பஞ்சபூதங்களிலும் கலந்திருப்பர். எனவே இத்தகையவரைக் கூற்றுவன் நெருங்க மாட்டான். மேலும் இவர்கள் முத்தியடைவதனால் இவர்களுக்குப் பிறப்பும் இறப்பும் இல்லாமற் போகும்.

சன்மார்க்க நெறியில் குரு முக்கிய பங்கு பெறுகிறார். குருவிடம் சிவத்தின் ஆற்றல் பதிந்துள்ளதால் குருவையே சிவமாகக் காண்பதும், பூசை செய்து வழிபடுவதும், தியானம் செய்து அவரைத் தீண்டித் திருவடிகளைச் சிரமேல் சூடுவதும் சன்மார்க்க நெறிக்கான வழிமுறைகளாம்; இவற்றைப் பின் பற்றுபவர் முத்தியடைவர். [265]

உடல்வேறு, உயிர்வேறு என்று தெளிந்தவர் இறைவனை அடைவர்; இத்தெளிவற்றவர் இறைவனோடு இரண்டறக் கலக்கும் தன்மையற்றவர்; பிறப்பும் இறப்பும் அவர்களைத் தொடர்ந்துவரும். [266] சன்மார்க்கத்தில் நிற்பவரது முகமே சிவன்

உறையும் பீடமாகும்; அவர்தம் உடலே கோயில்; இத்தகைய சன்மார்க்கத்தாரைக் காண்பதே சிவதரிசனம் காண்பதற்கு ஒப்பானது.[267]

சன்மார்க்கநெறி ஒளியைக் காண்பது என்பதனால் பிற மார்க்கங்களைக் காட்டிலும் மேலானது என்கிறது திருமந்திரம்.[268] இந்நெறியினை மேற்கொண்டு, 'சமரச சுத்த சன்மார்க்க சங்கம்' அமைத்து ஒளிவடிவாக இறைவனை வழிபட்டு ஒளியுடல் பெற்றவர் இராமலிங்க அடிகளாவார். அவர் சாதிமத வேறுபாடற்ற சன்மார்க்கத்தை,

இச்சாதி சமயவிகற் பங்களெலாம் தவிர்த்தே
எவ்வுலகும் சன்மார்க்கப் பொதுவடைதல் வேண்டும்[269]

என்று உலகுக்கு வலியுறுத்தி இறைவனைப் பாடிப் பரவினார். இங்குப் 'பொது'வென்பது 'சிதாகாயப் பொதுவெளி' என்று கொள்வதே பொருத்தமாகும்.

.0. சகமார்க்கம்

பசுவாகிய ஆன்மா பதியோடு நெருங்கிப் பழகுவதை சகமார்க்கம் என்னும் தோழமை நெறியிற் காணலாம். இந்நெறி பிறப்பு இறப்புகளைத் தவிர்த்து முத்தியளிக்கக் கூடியது; துவாதசாந்தப் பெருவெளியில் நிற்பவர் இறவாநிலை அடைவர்; சகமார்க்கம் தோழமை நெறி என்பதனால் இந்நெறி நிற்பவர் யோகத்தால் சிவசாரூபம் பெறுவர். சிவசாரூபம் அல்லது சிவரூபம் பெறுதல் என்பது 'ஒளியுடல் பெறுதல்' என்பதாகும். ஒளியுடல் பெற்றவர் உலக மக்கள் அடையும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் பெற்றவராவர். இவர்கள் புலனைந்தையும் வென்றவராதலால் இவர்தம் உள்ளத்தில் இறைவன் பொருந்துவான். அவன் ஆன்மாவைப் பிணித்துள்ள தத்துவங்களை நீக்கி வீடளிப்பான். இக்கருத்துகளைத் திருமந்திரம் மூன்று பாடல்களில் தெரிவிக்கிறது.[270]

இறைவனிடம் தோழமையோடு பழகுவதான இந்நெறி பிற மார்க்கங்களில் காணமுடியாத ஒன்று; இந்நெறி நின்று வீடுபேறு பெற்றவர் சுந்தரமூர்த்தி நாயனார். இவரை இறைவனே வலிந்து வந்து ஆட்கொண்டார் என்பது பெரியபுராணத்தாற் அறியப் பெறும் செய்தியாகும்.[271]

11. சற்புத்திர மார்க்கம்

மகன் தந்தைக்குப் பணிவிடை செய்யும் முறையில் பக்தியுடன் வழிபடுவது சற்புத்திர மார்க்கமாகும். நின்றும் கிடந்தும்

தொழுவாருக்கு இறைவன் வெளிப்பட்டு அருள்வான்; அத்துடன் 'ஹம்' என்ற சூரியனையும், 'ஸம்' என்ற சந்திரனையும் இணைத்து மனத்தால் உயர்ந்து இறையின்பத்தைப் பருகி, இறைவனைப் பற்றுக்கோடாகக் கொண்டு நிற்பர்; இம்மார்க்கத்தினரைக் கருவில் செலுத்துகின்ற வினைக்கூட்டங்களும் சென்று பணியும்.[272] ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்தர் இந்நெறி நின்று வீடு பெற்றவராவார்.

12. தாசமார்க்கம்

திருக்கோயிலைத் தூய்மைப்படுத்துதல், விளக்கேற்றுதல் முதலான தொண்டுகள் செய்யும் நெறியே தாச மார்க்கம் என்பது. இதனைத் திருமந்திரம்,

எளிய னல் தீபமிடல் மலர் கொய்தல்
அளிதின் மெழுகல் அதுதூர்த்தல் வாழ்த்தல்
பளிமணி பற்றல் பன்மஞ் சனமாதி
தளிதொழில் செய்வது தான்தாச மார்க்கமே[273]

என்று விளக்குகிறது.

இறைப்பணி செய்யும் இவர்கள் உண்மைப் பரம்பொருள் இன்னது என்று உணராது வருந்துவர். இவர்கள் தம் ''விதி வழியே சென்று வேந்தனை நாடும்'' தன்மை உடையவராவர்.[274] வேந்தனாகிய இறைவனை நாடியபின் புலனடக்கி வணங்குவர்; அந்நிலையில் புறவழிபாடுகள் முடிவுபெற்று அகவழிபாடு தோன்றும்.

தெளிவடையும் மனம் உலகமயமாகச் செயல்பட முற்படும் பொழுது மலமாசுகளால் மூடப்படுகின்றது. குளத்தில் கல்விழுந் தால் நீங்கும் பாசி, கல் நீரின் அடிமட்டத்திற்குச் சென்றவுடன், மீண்டும் நீரின் மேற்பரப்பில் வந்து மூடிக்கொள்ளும்; அதுபோல, தொண்டு செய்யும்போது தெளிவடையும் மனம், அது முடிந்தபின் மும்மலங்கள் பாசிபோல வந்து ஆன்மாவைப் பிணைப்பதால் தாசமார்க்கத்தார் இறைவனை இடையறாது நினைக்கும் தன்மை யற்றவர் ஆவர் என்று திருமந்திரம் சுட்டுகின்றது.[275] இந்த நெறியில் நின்று. இடையறாது இறைவனை நினைந்து, உழவாரப் படைகொண்டு ஆலயத் தூய்மை செய்து, வீடுபேறு அடைந்தவர் திருநாவுக்கரசர் என்பதைப் பெரிய புராணம் மூலம் அறியலாம்.[276]

13. சாலோகம்

சாலோகம் என்பது இறைவன் உலகம் என்னும் பொருள் தரும். இறைவனுடன் ஆன்மாவுக்கு ஏற்படும் தொடர்புகளை இது விளக்குகின்றது.

சரியை நெறி	— சாலோகம்	— இறைவன் உலகில் நிற்பவர்; இறைத்தொண்டு செய்பவர்.
கிரியை நெறி	— சாமீபம்	— இறைவன் அருகில் நின்று வழிபாடு செய்பவர்.
யோக நெறி	— சாரூபம்	— இறைவன் உருவம் பெறுதல்; புலனடக்கி உடலும் உள்ளமும் தூய்மையடைபவர்.
ஞான நெறி	— சாயுச்சியம்	— இறைவனுடன் இரண்டறக் கலப்பவர்; இறைவன் வேறு, ஆன்மா வேறு என்று இரண்டாக இல்லாமல் இறைவனோடு ஒன்று படுவர்.

— திருமந்திரம் சாலோகம் முதலான நான்கற்கும் இத்தகைய விளக்கம் தருகிறது.[277] இவற்றிற்கு ஒப்பான கருத்துகள் காசுமீர சைவத்திலும் இடம் பெறுகின்றன:

> "முத்தியடைவதற்கு நால்வகை உபாயங்கள் கூறப்பட்டுள்ளன. அவை ஆணவோபாயம், சாக்தோபாயம், சாம்பவோபாயம், அனுபாயம் என்பன. உயிர்களின் மெய்யுணர்வு வளர்ச்சிக்கேற்ப ஏதேனும் ஒன்றைத் தொடங்கி இப்படி முறையை அவர்கள் மேற்கொள்ள வேண்டும். சைவசித்தாந்தத்திலும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்றும், தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்றும் பேசப்படுவதைக் காண்கிறோம்.[278]

என்று பெ. திருஞானசம்பந்தன் அவர்கள் கூறுவது இங்கு நோக்கத்தக்கது. இவ்வழிமுறைகள் ஒன்றோடு ஒன்று தொடர்புடையனவாய் இறைவனை நோக்கிச் செல்லும் ஆன்மாவின் பயணத்திற்குத் துணையாக நிற்பனவாய் உள்ளன.

14. சாமீபம்

சாமீபம் என்னும் சொல் இறைவன் அருகில் இருத்தல் என்ற பொருள் தருவதாகும்.

> **பாசம் பசுவான தாகும்இச் சாலோகம்**
> **பாச மருளான தாகும்இச் சாமீபம்**
> **பாசஞ் சிரமான தாகும்இச் சாருபம்**
> **பாசங் கரைபதி சாயுச் சியமே**[279]

என்பது திருமந்திரம். சாலோக முத்தியில் பாசத்தன்மை கெடுவதில்லை; பாசத்தன்மை கெடாதபோது பிறவி தொடர்வதற்கு

இடமுண்டு; ஆதலால் பிற முத்திகளை நோக்கச் சாலோகம் சிறப்பிலது. சாமீப முத்தியில் ஆன்மா இறைவன் அருகில் இருத்தலால் பாசம் ஆன்மாவைப் பந்தப்படுத்தாது, ஆன்மாவுக்கு அருளாய் நிற்கிறது. சாமீபத்தில் அருளாய் நின்றதைக் காட்டிலும் மிக்க மேன்மையுடைய தன்மைகளைச் சாரூபத்தில் பாசம் ஆன்மாவுக்கு அருளும்; சாயுச்சிய நிலையில் பாசம் முழுவதுமாகக் கரைந்து ஆன்மா பதியினை அடையும். இப்பாடல், நால்வகை நிலைகளையும் இவ்வாறு இனிது விளக்குகிறது. பரமூர்த்தி அடைந்த ஆன்மாவை மீண்டும் பிறவிக்கு வாராது தடுக்கும் படிநிலைகளில் ஒன்றே சாமீபம் என்று கொள்ளலாம்.

15. சாரூபம்

இறைவன் உருவம் பெறுதல் 'சாரூபம்' ஆகும். சாரூபநிலை யோகத்தில் நின்று சமாதி கைகூடியவர்களுக்குக் கிட்டுவதாகும். ஞானநெறி நிற்பவர்களுக்கு மட்டுமே இறைவன் உருவம் கிட்டும். இத்தன்மையடைந்தவரது உடல் யோகந்தினாலும், பிராணாயாமத்தினாலும் ஒளியுடல் ஆகும்.

அங்கத் துடல்சித்தி சாதன ராகுவர்
இங்கிவ ராக விழிவற்ற யோகமே[280]

என்னும் திருமந்திர அடிகள் இதனை நன்கு விளக்குகின்றன.

16. சாயுச்சியம்

சாயுச்சியம் என்பது இறைவனோடு இரண்டறக் கலத்தல் என்னும் பொருள்படும். சாயுச்சியம் என்னும் சொல்லிலுள்ள சாருதல் என்னும் பகுதி சிவனோடு இரண்டறப் பொருந்தியிருத்தலைக் குறிக்கும். இறைவனோடு பொருந்துதலும் நான்கு வகையாகப் பகுக்கப்படுகின்றது. முதல்நிலை, விழிப்பின்கண் தன்னை மறந்திருத்தல்; இரண்டாவது நிலை, ஐம்புலன்களில் ஒன்றான கண் விழித்திருப்பினும் அது தன் செயல் மறந்திருத்தல்; மூன்றாவது நிலை, சிவத்துடன் ஆன்மா ஒன்றுபடுதல்; நான்காவது நிலை, இறையனுபவத்தில் திளைத்த உயிர் அதிலேயே நிலைபெற்று மேன்மேலும் திளைப்பதாகும். இந்த நான்காவது நிலையே சாயுச்சிய நிலை. இதுவே வீடுபேறடையும் சிவானந்த நிலையான பேரின்பம் எனலாம்.

17, சத்திநிபாதம்

ஆன்மாவைப் பற்றியிருக்கும் மலங்கள் நீங்க அருளைத்தரும் சத்திகள் ஆன்மாவில் வந்து பதிதல் 'சத்திநிபாதம்' எனப்படும். சத்திகளின் பதிவுக்கேற்ப ஆன்மா விளக்கமுற்று ஒளிநிலை

பெறும். இச்சத்திநிபாதம் நான்கு படிநிலைகளை உடையது. அவை: அ) மந்தம், ஆ) மந்ததரம், இ) தீவிரம், ஈ) தீவிரதரம் என்பன.

அ) மந்தம்:— அற்பமான உலகியல் அறிவுடையவன் மந்த நிலையில் இருப்பவனாவான்.

இருட்டறை மூலை யிருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி யவனை மணம்புரிந் தாளே [281]

என்பது 'மந்தம்' பற்றி விளக்கும் திருமந்திரம். சுவாதிட்டானத்துக்குத் தொடர்பாயுள்ள மூலாதாரத்திலிருக்கும் குண்டலினி சக்தி என்னும் குமரி, அஞ்ஞானத்திலுள்ள ஆன்மாவாகிய குருட்டுக் கிழவனுக்குக் கூடலாகிய ஞானம் உண்டாதற் பொருட்டு, அஞ்ஞானமாகிய குருட்டினை நீக்கிப், பதி, பசு, பாசம் ஆகியவற்றின் குணவியல்புகளை அறியுமாறு செய்து, ஆசையை உண்டாக்கித் தன்னோடு சேர்த்துக்கொண்டாள் என்பது இப்பாடலின் கருத்து. குண்டலினி சத்தி 'மந்த' சீவர்களுக்கு ஞானத்தைக் கொடுத்து அருள்புரிவாள் என்பது திருமந்திரம் உணர்த்தும் செய்தி.

இருளின் நடுவில் விளக்குப் புகுந்து எரிவதைப் போல ஆணவமான இருள்சூழ்ந்த மூலாதார சக்தி குண்டலினி மோகத்தினால் நடுநாடி வழியாக மேலே சென்று குருமண்டலமான ஒளி மண்டலத்தில் பொருந்தும்போது,

அருள்சூழ் இறைவனும் அம்மையு மாமே [282]

என்றவாறு சிவசக்தி வெளிப்பட்டு ஆன்மாவை இறைவனோடு சேர்ப்பள்.

குண்டலினியைக் குமரி என்றும், அஞ்ஞான ஆன்மாவைக் குருட்டுக் கிழவன் என்றும், அருளொளி மயமாக ஆதலை 'விளக்கதுபுக்கு எரிந்தாற்போல' என்றும் உருவக உவமைகளால் திருமூலர் தெளிவுறுத்தியிருக்கும் ஆன்மீகச் செய்தி எண்ணி மகிழ்தற்குரியது.

ஆ) மந்ததரம்:— மந்தமாக இருந்து மந்திரங்களை உபாசித்தல் 'மந்ததரம்' ஆகும்.

சிற்றின்பத்தை விடுத்து மூலாதாரத்தில் உள்ள கன்னியான சத்தியை நினைத்துத் தம் செயலைப் பேரின்பம் நோக்கி மாற்றி யமைப்பவர்களைப் பிறவி தொடராது என்னும் கருத்தினை

மந்ததரச் செயற்பாடாகவும் பயனாகவும் உணர்த்துகிறார் திருமூலர்.

கன்னித் துறைபடிந் தாடுங் கருத்துண்டேற்
பின்னைப் பிறவி பிறிதில்லை தானே [283]

என்னும் பாடற்பகுதி இதனை விளக்கும்.

இ) தீவிரம்:— யோகப் பயிற்சியினால் இறைவனை அடைபவர் 'தீவிரம்' என்னும் நிலையைச் சார்ந்தவர் ஆவர். இந்நிலையில் உள்ளவர்கள் சகஸ்ரதளத்தின் தன்மையை அறிந்து கொண்டவர்கள்; சக்தியையும் உணர்ந்தவர்கள். அதனால், தேவர், மனிதர், அசுரர், விலங்கு, பறவை, நீர்வாழ்வன, தாவரம் ஆகிய ஏழ்பிறவிகளை உணர்ந்தவர்கள் ஆவர். இப்பிறவிகளில் தாம் பெற்ற இருவினைகளை அறிந்தவர்கள். இதுவரை தம் உள்ளத்தில் தங்காத இறைவன் யோகத்தாலும் பக்குவத்தாலும் மலம் நீங்கிய தம்மிடத்துத் தங்கியதை உணர்ந்து மேலும் மேலும் யோகத்தில் நிலைப்பர்; அதனால் சிவக்கனியாக மாறுவர். பின்னர், பிறருக்கு ஞானம் தரும் குரு ஆவர். பிறர் தம்மை வணங்குதலைக் கண்டும் ஆணவம் கொள்ளார்; சமத்துவ நிலையில் நின்று தம்மை வணங்குவாரைத் தாமும் வணங்குவர். அதுமட்டுமல்லாமல்,

அணுகும் உலகெங்கு மாவியு மாமே [284]

என்று திருமந்திரம் குறிப்பிடுவதைப் போல அவர்கள் உலகெங்கும் சென்றுமீளும் ஆற்றலுடையவராகவும் திகழ்வர்.

ஈ) தீவிரதரம்:— தீவிரதரம் என்பது ஞானம் பெற்று அதன் வழி நிற்றல் ஆகும். ஞானம் பெற்றவன் நன்மை தீமைகளால் பாதிக்கப்பட மாட்டான். அனைத்தும் இறைவன் செயல் என்றிருப்பான். விந்து நாதமற்று இரவுபகலற்ற நாதாந்தத்தை உணர்ந்தவன் இவன். சிவன்,

ஊனை விளக்கி உடனிருந் தானே [285]

என்பதற்கேற்ப, உள்ளத்துப் புகுந்து ஊனுடலைப் பிரகாசிக்கச் செய்து உயிருடன் பொருந்தி நிற்பான்.

சக்தியின் அருளால் சிவன் சீவர்களுக்கு அருள்புரிந்து ஒளிபெறச் செய்து இரண்டறக் கலத்தலே சத்திநிபாதம் தெளிவுறுத்தும் செய்தி எனலாம்.

18. ஆறந்தம்

மேற்கூறிய நெறிகளில் மட்டுமல்லாமல் ஆறு அந்தங்களின் வழியாகவும் இறைவனை அடையமுடியும் என்பதை 'ஆறந்தம்' என்னும் பகுதியில் திருமந்திரம் விளக்குகிறது.

அந்தம் என்றால் முடிவு என்பது பொருள். ஆறு முடிவுகளாகத் திருமந்திரம் குறிப்பன: வேதாந்தம், சித்தாந்தம், நாதாந்தம், யோகாந்தம், கலாந்தம், போதாந்தம் என்பன.[286] அந்தங்கள் ஆறனையும் அறியும் சுத்தரே பிரபஞ்சத்தின் தோற்ற ஒடுக்கங்களை அறிந்தவராவார்.

1) வேதாந்தம்:— வேதத்தின் அந்தமான உபநிடதங்கள் கூறும் முடிவு, வேதாந்தம். அது 'நானே பிரமம்' என்பது.

2) சித்தாந்தம்:— சித்தர்கள் அறிந்து கண்ட முடிவு, சித்தாந்தம். 'நீ சிவம் ஆகிறாய்' என்பது அது.

திருமந்திரம் இவ்விரண்டையும் இணைத்து,

தானான வேதாந்தம் தானென்னும் சித்தாந்தம்[287]

என்று குறிப்பிடுகின்றது.

> ''தானான வேதாந்தமாவது, (அஹம் பிர்மாஸ்மி) நானே பிரமம் என்பது. சித்தாந்தமாவது, (சிவத்துவ மசி) நீ சிவம் ஆகின்றாய் என்பது. சொல்முறையில் வேறுபாடன்றிப் பொருளில் இல்லை''[288]

என்று ஜி. வரதராஜன் கூறுவது ஈண்டு எண்ணத்தக்கது.

வேதாந்தம் சித்தாந்தம் இரண்டும் ஆன்மா மலநீக்கம் பெற வேண்டும் என்று குறிப்பிடுகின்றன. இருப்பினும் மலநீக்கம் பெற்ற ஆன்மா தனித்து நிற்கின்றது. சிவன் நிலையான ஒன்று; அதனுடன் இரண்டறக் கலப்பதில்லை. 'நானே தெய்வம்' என்ற பொருளில் தன்னைத் தெய்வமாகப் பாவிப்பது 'அகம் பிரமம்' என்ற வேதாந்தத்தின் முடிவு. அது துவைதத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆனால், சித்தாந்தம் தரும் முடிவான 'தத்துவமசி' என்னும் மகா வாக்கியத்தின்படி 'நீ சிவம் ஆகின்றாய்' என்பதனை நோக்க, மலமற்ற ஆன்மா சித்தர்கள் ஆய்ந்து கண்ட முடிவின்படி பாவனையை மேற்கொள்ளாது இறைவனுடன் இரண்டறக் கலந்துவிடுகிறது; இஃது இரண்டல்லாத ஒன்று என்னும் அத்வைத முடிவாகும்.[289]

3) நாதாந்தம்:— நாதத்தின் முடிவைக் கண்டவர்கள் இறைவனை அடைவர் என்பது நாதாந்தம். குண்டலினியை எழுப்பி யோகத்தில் திளைப்பவர் உடலில் எழும் ஒலிகள் ஒலித்து அடங்கும்போது ஆன்மா இறைவனைச் சென்று சேரும். அப்போது அது முப்பத்தாறு தத்துவங்களையும் நீத்து மலமற்று விளங்கும். இதனை,

எள்ளலின் நாதாந்தத் தெய்திடும் போதமே[290]

என்னும் திருமந்திரப் பாடல் அடி விளக்குகின்றது.

4) யோகாந்தம்:— அட்டாங்க யோகநெறி நின்று சமாதியில் பொருந்தி அங்குச் சிவத்துடன் ஒன்றுபடும் போது, சீவனைப் பிணித்துள்ள தத்துவங்கள் விலக, ஆன்மா பற்றுக்களை விட்டு, விருப்பு வெறுப்புகள் அற்ற உபசாந்த நிலை அடையும். இதுவே யோகியர் கண்ட யோகத்தின் முடிவு அல்லது யோகாந்தம் ஆகும்.[201]

5) கலாந்தம்:— விந்தின் ஒடுக்கத்தினால் இறைவனுடன் கலத்தல் 'கலாந்தம்' ஆகும். நிவிர்த்தி, மேதை முதலிய கலைகளில் உள்ள விந்து சக்தியில் ஒடுங்குவதனால் ஒளியுடல் பெற்றுத் தெளிந்து இறையுடன் இணைதல் என்பது இதன் விளக்கம். மந்திரம், தந்திரம் முதலிய வேறு ஐங்கலைகளாலும் இவற்றைத் தெளிந்து கொள்வர்; இதனால் ஞானம் ஏற்பட்டுச் சிவ சீவ ஐக்கியம் உண்டாகும் என்பது கலாந்த[202] நெறி.

6) போதாந்தம்:— ஆன்ம அறிவின் முடிவு 'போதாந்தம்' ஆகும்.[203] தன்னை யுணர்ந்த ஆன்மா தத்துவ நீக்கம் பெற்று இறையுடன் ஒன்றுபடுதல் போதாந்தமாம்.

இறைவனை ஆன்மா அடைவதற்குரிய வழிமுறைகளாகச் சுத்தசைவம் முதல் ஆறந்தம் வரை பதினெட்டு நெறிகளைத் திருமூலர் வகுத்திருக்கிறார். இவற்றில் ஏதாவது ஒன்றனை இப் பிறவியில் மேற்கொண்டாலும் எழுமையும் இறைவனை அடைவதற்குரிய நன்னெறியில் செல்லலாம் என்பதை மனிதன் உணர்ந்து கொண்டால் உய்தியுண்டு என்பது உறுதி.

சைவ சமயம்

சைவ சமயச் சாத்திர நூல்களுக்கெல்லாம் மூலமாகவும் முதன்மையானதாகவும் விளங்குவது திருமந்திரம்.

> ''சைவ சமயத்தின் தோற்றம் கற்பனைக்கெட்டாதது; வரலாற்றுக் காலத்துக்கு உட்பட்ட சைவம், ஆரியத்தின் வருகைக்கும், அதற்கு முற்பட்டதுமான இருநெறிகளின் இணைப்பாகும்''[204]

என்று சைவத்தின் தோற்றம் குறித்து வரலாற்றாசிரியர் கூறுவர். மொகஞ்சதாரோ, ஹாரப்பா ஆகிய இடங்களில் மேற்கொள்ளப் பட்ட அகழ்வாய்வுகளிலிருந்து சைவசமயம் பற்றிய குறிப்பாகச் சிவனுரு அல்லது அதற்கு முற்பட்ட வடிவ வழிபாடு பற்றிய செய்திகளை அறிகிறோம்.[205]

உலகின் மிகப்பழைய உயிரோட்டமுள்ள சமயம் சைவமே ஆகும் என்று சர். ஜான் மார்ஷல் கூறுவது உண்மையேயாம்.[206]

சைவம் சிவனுடன் சம்பந்த மாவது[297]

என்று திருமூலர் சைவத்துக்கு இலக்கணம் கூறுகிறார்.

தொன்மைக் காலத்தில் மக்கள் சமுதாயத்தில் இருந்த சூரிய வழிபாடே காலப் போக்கில் சிவ வழிபாடு ஆயிற்று.[298] சிவப்பு நிறம் என்னும் பொருளுடைய சிவன் என்னும் சொல் சூரியனை முதலிற் குறித்தது; சிவன் என்னும் சொல் சேமம் (நலம்), செம்மை என்னும் பொருள்களிலும் வழங்கப்படுகிறது; செம்மை நிறமுடையதாலும், உலக மக்களுக்கு நன்மை செய்வதாலும் சூரியனையே தொன்மைக் காலத்தில் மக்கள் தொழுதனர்; இவ்வழிபாடே பின்னர்ச் சிவ வழிபாடாயிற்று[299] என்னும் கருத்தும் நிலவுகிறது.

பல சமயங்களின் பெயர்கள் தோற்றுவித்தவர்களின் பெயரை ஒட்டியே வழங்கப்படுகின்றன; அவ்வாறே சைவமும் சிவன் என்னும் பெயருடைய ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டிருக்கலாம் என்றும் கருதுவர்.[300]

சிவன் என்னும் பெயர் தொல்காப்பியத்திலும், சங்கப் பாடல்களிலும் இடம் பெறவில்லை. ஆயினும் சிவனைக் குறிக்கும் வேறு பல தொடர்கள் அவற்றில் உள்ளன.[301]

'சைவம்' என்னும் சொல் முதன்முதலில் மணிமேகலையில் தான் காணப்படுகிறது.[302] எனினும் சைவ சமயக் கோட்பாடுகள், வழிபாடு முதலியன தொல்காப்பியர் காலத்திற்கும் முந்தியன என்பதில் ஐயம் ஏதுமில்லை.

கி. பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புறச்சமயத் தாக்குதல்களிலிருந்து மெல்ல விடுபட்டுச் சைவ சமயம் புத்துயிர் பெறத் தொடங்கிற்று. திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், சுந்தரரும், ஏனைய நாயன்மார்களும் தொடர்ந்து பணியாற்றிச் சைவம் பரவ வழிசெய்தனர்.

சைவ சாத்திரங்களின் தோற்ற காலம் எதுவாக இருந்தாலும் அதுவே சைவ சமய வளர்ச்சியின் உச்சநிலை ஆகும். சைவத் திருமுறைப் பாடல்களின் விளைவாகவும் சாரமாகவும் தெளிவாகவும் விளங்குவதே சித்தாந்த சாத்திரம் என்று கூறலாம். அவற்றுள் தலையாயதாக விளங்கும் ஒரு பெருநூல் திருமந்திரம் என்பதில் ஐயமில்லை.

வீடுபேறு

வீடுபேறு பெறுதலே ஆன்ம ஈடேற்றம் ஆகும்; அதனை நோக்கியே சமயங்களின் வாதங்களும் அமைந்துள்ளன. வீடு

என்றால் விடுபடுதல்; பேறு என்றால் பெறுதல். விடுதல் என்பது உயிர் ஆகிய ஆன்மா உடற்பற்றையும், உலகப்பற்றையும், தொண்ணூற்றாறு தத்துவங்களையும் விடுதல் என்பதாகும்; பெறுதல் என்பது பேரின்ப நிலையைப் பெறுதலாகும். இப்பேரின்ப நிலை அடைந்த உயிர் பிறப்பு, இறப்பு என்னும் பந்தங்களிலிருந்தும் விடுபடுகிறது.

தத்துவங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட ஆன்மா விற்குக் கிட்டுதற்கரிய பெரும்பேறாகிய பேரின்ப நிலை கிட்டு கிறது; இதையே வீடுபேறு என்பதாகக் கொள்ளலாம்.

சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர் [303]

என்னும் குறளில் சிற்றின்பம் என்பது காம உணர்வு என்னும் பொருளில் மட்டுமல்லாது, தீவினைகள் முதலானவற்றால் வரும் சிறிதுநேர இன்பம் என்னும் பொருளிலும் ஆளப்படுவதாகும். 'மற்றின்பம்' என்னும் சொல் பேரின்பமாகிய இறையின்பத்தைக் குறிப்பதாகும்.

அன்பு, அறம், கொல்லாமை, கள்ளுண்ணாமை, வாய்மை முதலானவை நன்மையின் வழிவரும் இன்பங்களாகும்; இவை ஆன்மாவை உயர்ந்த பேரின்பத்துக்கு அழைத்துச் செல்லும் தன்மையுடையவை. இதற்கு விளக்கமாக அமைகிறது,

பெற்ற சிற்றின்பமே பேரின்ப மாயங்கே
முற்ற வரும்பரி உந்தீபற
முளையாது மாயையென்று உந்தீபற [304]

என்னும் திருவாசகப் பாடல். பேரின்பம் காண்பவரிடம் மாயை தோன்றாது என்பதும், மாயை அற்றவருக்கு வினை ஏற்படாது என்பதும் இதனால் தெளியக் கிடக்கின்றன. இவற்றால் சிற்றின்பம் தோன்றி மறைவது என்பதும், பேரின்பம் நெடிது நிலைத்து நிற்பது என்பதும் அறியப்படுகின்றன.

சிற்றின்பம் விரும்புவார் பெண்களை நாடி, சொல்லாடி, இன்பம்துய்த்துத் தம்மை மறந்திருப்பர்; பேரின்பம் விரும்புவார் செயலும் இத்தகையதே. சிதாகாயப் பெருவெளியை விரும்பும் ஆன்மா, பேரின்பத்தை நாடுகின்றது; அதற்காகக் குண்டலினி யோகம் மேற்கொள்ளும்போது பேரின்ப உணர்வு உதிக்கின்றது; இவ்வுணர்வால் நாத தரிசனம் ஏற்பட்டுத் துவாதசாந்தத்திற்குச் சென்று, உடலுணர்வு கெட்டு, இன்பநுகர்வு கிட்டுகின்றது. இதில் ஆன்மா தன்னையே மறக்கின்றது. இதனை,

புணர்ச்சியுள் ஆயிழை மேலன்பு போல
உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்கவல் லாருக்
குணர்ச்சியில் லாது குலாவி உலாவி
அணைத்தலும் இன்பம் அதுவிது வாமே [305]

என்று திருமந்திரம் விளக்குகின்றது.

சிற்றின்பத்தில் இன்பமாக நின்ற சிவனே பேரின்பத்திலும் நிற்கிறான். [306] வீடுபேற்றினை அடைவதற்குரிய தகுதி மனிதனுக்கு மட்டுமே உண்டு. [307] திருவிளையாடற் புராணம் நாரை வீடுபேறு அடைந்ததாகக் கூறுவது விதிவிலக்கு. [308]

தத்துவங்களின் கூட்டமே ஆன்மா; தத்துவங்களை விட்ட ஆன்மா பரம்; தத்துவங்களோடு பிணைந்துள்ள ஆன்மா அவற்றினை நீத்து பரமாக வேண்டும். [309]

தத்துவங்கள் தொண்ணூற்றாறு; ஆன்மாவைப் பிணைத்துள்ள முப்பத்தாறு தத்துவங்கள் அகக்கருவிகள் எனப்படும்; ஏனைய அறுபது தத்துவங்கள் புறக்கருவிகள் எனப்படும். இவையனைத்தையும் நீத்த ஆன்மா அண்டமாகவும், இலிங்கமாகவும் உள்ள பரனோடு உறைவது வீடுபேறு. [310]

வீடுபேறாகிய பேரின்பம் நாத விந்துக்களின் கூட்டால் ஏற்படும் நாதாந்தக் கூத்து என்கிறது திருமந்திரம் [311]

சிவனையே நினைந்திருப்பவர்களைச் சிவன் முனிவர்கள் சூழ எதிர்கொண்டழைத்து வீடுபேறு அளிப்பான்; மேலும் தேவர்கள் பூரண கும்பத்துடன் வரவேற்பர். ஒளிமண்டலத்தில் வீற்றிருந்தவன் இவன் என்று அனைவரும் பாராட்ட ஆன்மா வீடடையும். [312]

தேவர்கள் புடைசூழ, ஐந்தெழுத்தைக் குழலில் வாசித்த ஆனாய நாயனாரை, இறைவன் விடையொரு பாகராக வந்து வீடுபேறளித்தார் என்று பெரியபுராணம் கூறுகிறது. [313]

வீடுபேறடைந்தவர்களைப் பிறவி தொடராது; [314] அவர்கள் மீண்டும் மீண்டும் பிறப்பைத் தரும் சொர்க்க— நரக வாழ்வையும், தேவர் வாழ்வையும் விரும்பார். [315]

'வீடு பேறு என்பது பொய்; இறைவனை மனிதன் அடைய முடியாது; சீவன் சிவனாகாது' என்று மறுப்பவர்கள் உணவிற்காகத் தாவித் திரியும் குதிரையாகப் பிறந்து அழிவர். [316] இவர்களுக்கு வீடுபேறு கிட்டாது; பிறவிப் பெருங்கடலில் ஆழ்ந்து வருந்துவர்; இவர்கள் உள்ளம் மேட்டுநிலம் போன்றது; அங்கு நீர்

எவ்வாறு தங்குவதில்லையோ அதைப்போல நிலையற்ற மனமுடையவரிடமும் இறைவன் தங்கமாட்டான்; பிறவியாகிய கடலிலிருந்து கலங்கும் இவர்களுடைய ஆன்மாவாகிய கப்பலை இறைவன் கரைசேர்க்க மாட்டான்.

குளத்தில் உள்ள தாமரைக்கொடி நீரில் இறங்குபவரைச் சுற்றிக்கொள்வதைப் போல இறையன்பில் ஈடுபட்டு வீடுபேறடைதலைக் குறிக்கோளாகக் கொண்டவர்களையும் வீடுபேறு பொய் என்று இகழ்பவர்கள் தடுப்பார்கள்; இறையுண்மையை உணராத இவர்கள் மூடர்கள்; இவர்கள் இரங்கத்தக்கவர்கள்; இவற்றிற்கும் மேலாக ஞானியரை நிந்திப்பவர்கள் தீவினைகளைச் சேர்த்துக் கொண்டு பெரிதும் வருந்துவர். இவ்வாறு 'மோட்ச நிந்தை' என்னும் தலைப்பின்கீழ் பல கருத்துகளைத் திருமூலர் கூறுகின்றார். [317]

வீடுபேற்றின் இயல்பு, அடைவோர் தன்மை, மறுப்போர் நிலை ஆகியனவற்றைத் திருமந்திரம் பல்வேறு பகுதிகளில் இனிது விளக்கியுள்ளது என மகிழலாம்.

உடல் வழிபாடு

உடல் வழிபாடு என்னும் தொடருக்கு உடலை வணங்குதல் என்பது ஒரு பொருள்; வழி — நெறி, படுதல் — ஒரு நெறியில் செல்லுதல் என்று கொண்டு, இத்தொடருக்கு 'உடலை ஒரு நெறியில் செலுத்துதல்' என்றும் பொருள் கொள்ளலாம். உடலை ஒரு நெறியிற் செலுத்தி வணங்கினால் உடலினுள் ஒலியும் ஒளியும் தோன்றும் என்று சித்தர்கள் ஆய்ந்து கண்ட முடிவை ஏற்றுக் கொள்ளலாம்.

உடல் வழிபாடு என்பது அகவழிபாடாகும்; இதன் இன்றியமையாமையைத் திருமந்திரம் வலியுறுத்திக் கூறியுள்ளது. தல யாத்திரை செய்து மனமொன்றாது செய்யும் புறவழிபாட்டினால் பயன் இல்லை; அப்பரடிகளும்,

> கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
> கொங்குதண் குமரித் துறை யாடிலென்
> ஓங்கு மாகடல் ஓதநீர் ஆடிலென்
> எங்கும் ஈசன் எனாதவர்க் கில்லையே [318]

என்று இதுகுறித்துப் பாடுவர்; சிவவாக்கியரும் புறவழிபாட்டினை,

> **கோயிலாவது ஏதடா? குளங்களாவது ஏதடா?**
> **கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே**

கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே
ஆவதும் அழிவதும் இல்லைஇல்லை இல்லையே [319]

என்று மறுத்து, அகவழிபாட்டினைப் போற்றிப் பாடியுள்ளார்.

நோய்நொடிகளுக்கு இடமளித்து அழியக்கூடிய இந்தப் பருவுடலின் கூட்டமைப்புப் பாதுகாவலோடு அமைந்தது. ஐந்து இந்திரியங்கள், ஆறு ஆதாரங்கள், முப்பது எலும்பிணைப்புகள், பதினெட்டுப் பொருத்துகள், ஒன்பது பந்தல்கள், பதினைந்து எலும்பு வரிசைகள் ஆகியனவெல்லாம் சேர்ந்தது உடம்பு என்கிறார் திருமூலர். [320]

வாழ்வின் முற்பகுதியில் உடலை இழிவுடையதாகக் கருதியிருந்த திருமூலர், பின் உடம்பினுள் உத்தமனான சிவனைக் கண்டார்; அதனால் உடம்பையே கோயிலாகக் கொண்டார்; தன் வாழ்வின் முற்பகுதியில் உடலை இழுக்கென்று நினைத்தது தவறு என்று தெளிந்து, பின்னர்ப் போற்றி வளர்த்தார். இதனை,

உடம்பினை முன்னம் இழுக்கென்றி ருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்
றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே [321]

என்று குறித்துள்ளார் திருமூலர். இறையனுபவம் பெற்ற உடலை,

வானோர் உலகீன்ற அம்மை மதித்திடத்
தேனே பருகிச் சிவாலய மாகுமே [322]

என்று திருமந்திரம் குறிக்கின்றது. சிவாலயமான உடம்பின் உண்மையை உணர்ந்து போற்றியமையால் திருமூலரின் உடல் மக்கள் உடலைப் போல் அழியவில்லை.

உடல் அழிந்தால் உயிராகிய ஆன்மா உடலில் வாழ்வதற்கும் பக்குவம் பெறுவதற்கும் வாய்ப்பில்லாமல் போகும் என்பதால் திருமூலர் உடம்பை வளர்த்து இறவாவரம் பெறுதற்கான மெய்ஞ் ஞானத்தையும் அடைந்தார்; தாமடைந்த மெய்ஞ்ஞான உணர்வைத் திருமந்திரம் வாயிலாக உலகிற்கும் உணர்த்தினார். [323] கொங்கணச் சித்தரும் உடலின் சிறப்பைப் பாடியுள்ளார். [324]

ஊத்தைச் சடலத்தை உற்றுப்பார்த்த சிவவாக்கியர் ‘நமசிவாய’ என்னும் ஐந்தெழுத்தினை வரிசைப்படுத்தி எழுதும் முறையிலேயே மனித உடலின் புறத்தோற்றம் தோன்றுகின்றது என்று வரையறை செய்கிறார். [325]

தூலஉடல் புறஅளவில் 'என்சாண்' ஆக அமைந்தது.[326] எண்சாண் அளவான உடலில் உள்ள ஆறு ஆதாரங்களையும் அவற்றின் தொடர்பையும்,

நாலிதழ் ஆறில் அவிர்ந்தது தொண்ணூறு
தானித மானவை நாற்பத்து நாலுள
பாலித மானவன் பங்கய மூலமாய்த்
தானித மாகித் தரித்திருந் தாளே[327]

என்னும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது. நான்கு இதழ்களை உடையது மூலாதாரம்; இரண்டு இதழ்களையுடையது நடுநாடி. இவற்றினிடையே நாற்பத்து நான்கு இதழ்களையுடைய ஆதாரங்கள் உள்ளன. இவற்றின் இதழ்களின் கூட்டுத்தொகை நாற்பத்து நான்கு. அவை: சுவாதிட்டானம் ஆறு, மணிபூரகம் பத்து, அநாகதம் பன்னிரண்டு, சுழுத்தி பதினாறு என இதழ்களைக் கொண்டுள்ளன. மூலாதாரம், நடுநாடி ஆகிய இரு ஆதாரங்களையும் நாற்பத்துநான்கு இதழ்களும் செயலினை அறிதல், செயல்படுத்துதல் ஆகியனவற்றைச் செய்வதாகிய ($44 \times 2 = 88 + 2 = 90$) தொண்ணூறு நாடிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்தச் சக்கரங்களை இயக்குபவளும் ஆதாரமாக இருப்பவளும் சக்தியே ஆவாள். இப்பாடல் தரும் கருத்து இதுவே.

கோயில்களில் கொடியேற்றுதல் என்னும் முறை ஒன்றுண்டு. இதன் உண்மை விளக்கம், மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சத்தியை பிராணாயாம முறையில் முதுகந் தண்டினூடே நடுநாடி வழியாக மேலேற்றுதல் என்பதாகும்; படிப்படியாகத் தொடர்ந்து குண்டலினியை மேலேற்றுதல் வேண்டும்; அவ்வாறு செய்யும் போது பிராணன் உடலின் அகப்பகுதியில் உள்ள ஆறு ஆதாரங்களிலும் பொருந்தி இறுதியில் ஏழாவது சக்கரமான சகஸ்ரதளத்தினைச் சென்று மோதும்போது ஆயிரம் இதழ்களையுடைய அது விரிவடையும். இதுவே அகவழிபாட்டு முறையாகும். விரிவடைந்த சகஸ்ரதளத்தில் இறைவன் சக்தியோடு விளங்குவான்.

இந்த அகவழிபாட்டினை மேற்கொள்ளும்போது நவதுவாரங்களும் அடைபட்டு இருத்தல் வேண்டும்; அவை அடைபடுவதால் பிராணன் உடலை விட்டு விலகாது நின்று சுழுமுனையைத் திறந்துகொண்டு, சகஸ்ரதளத்தில் சென்று மோதும்.[328] சகஸ்ரதளத்தை நெகிழ்ந்து அசைப்பது,

நெளிதரு கால்கொம்பு[329]

என்கிறது திருமந்திரம். இது முதுகந்தண்டின் கீழ்ப்பகுதியில் உள்ள மூலாதாரமாகும். பூரகம், கும்பகம், இரேசகம் இவற்றினை

மேற்கொள்ளும்போது அசைக்கும் கொம்பாகிய பல் நிமிர்ந்து பிராணனை மேலேற்றும். இதனையே விநாயகர் அகவல், 'கோடாயுதம்' என்று குறிப்பிடுகிறது.[330]

சகஸ்ரதளத்தில் வெளிப்படும் இறைவனுக்கு இடைகலை, பிங்கலை நாடிகள் இரண்டும் பாதங்கள்; இவற்றை இணைக்கும் சுழுமுனை மூக்கு; வாசியோகத்தால் வெளிப்படும் சிவந்த ஒளியே சிவனது முகம்; சந்திர சூரியர்களுடன் விளங்கும் அக்கினியே நெற்றிக்கண். இவ்வாறு இறைவன் உடலை உணர்ந்து கொள்ள வேண்டும் என்று விளக்குகிறது திருமந்திரம்.[331]

உயிர்களிடம் நிலைத்துள்ள இறைவனைத் தியானத்தினால் வணங்கினால் தலையின் இடப்பக்கமாகிய வடக்கும், வலப்பக்க மாகிய தெற்கும் இணையும்; அதாவது சூரிய கலையும் சந்திர கலையும் இணையும். இதனை,

வடக்கும் கிழக்குமாக நூலை இழைப்போம்[332]

என்கிறார் பாம்பாட்டிச் சித்தர். அவ்வாறு இணைத்தால் மனமாகிய கோயில் திறக்கும்.

இறைவன் வீட்டுச் சுவர் மாடங்களில், மண்டபங்களில், பூசையறைகளில், ஆலயங்களில், வேடம் பூண்டவரிடத்தில் உள்ளான் என்று எண்ணி அலைந்து திரிவதால் பயனில்லை; உடம்பினுள் உள்ளான் அவன் என்று உணர்ந்து வழிபட்டால் காட்சி தருவான்; இறைவன் பொய்கலந்த உள்ளத்தில் தங்க மாட்டான். திருமந்திரம்,

பொய்கலந்தார்முன் புகுதாப் புனிதன்[333]

என்று குறிக்கிறது. இறையுணர்வில் திளைத்து நிற்பவர்கள் உலக சிந்தனை விட்டவர்கள்; இவர்கள் இறைவனை இடை விடாது நினைத்துக் கொண்டிருப்பதனைப் 'பரிச யோகம்' என்பர். இதனை,

எட்டுக்கொண்டார் தம்மைத் தொட்டுக்கொண்டே நின்றார்
விட்டாருலகமென் றுந்தீ பற
வீடே வீடாகுமென் றுந்தீ பற[334]

என்று திருவாசகம் உரைக்கிறது.

குண்டலினி யோகம் செய்பவர் குருவருளால் அவருணர்த்திய முறையில் உடலை ஆராதனை செய்தால் சிறப்புகள் பெறுவர்.[335] உடலில் ஒலி தோன்றும்; ஒளி பிறக்கும். அது மட்டுமல்லாமல் சகஸ்ரதள அமுதமுண்டு இறவாவரம் பெறுவர்.

ஒலி — ஒளி

உண்மைப் பொருளைத் தம் உடலில் உணர்ந்து உள்ளன்போடு வழிபடுபவர்களுக்கு இறைவன் வெளிப்படுவான். இதனை,

> உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
> வள்ளற் பிரானார்க்கு வாய்கோபுர வாசல்
> தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
> கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே [336]

என்று திருமந்திரம் பாடுகிறது. உடம்பு, ஆலயம், உள்ளம், கருவறை; வள்ளல், சிவன்; வாய், கோபுரவாசல்; புலனைந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து; காளா மணிவிளக்கு, சீவன் சிவத்துடன் பொருந்தியபோது தோன்றும் பெருஞ்சோதி. உள்ளம் சூக்குமம் என்றும், உடம்பு தூலம் என்றும் அறிதல் வேண்டும். இறைவன் உடலை ஆலயமாகக் கொள்கிறான்; புறவுலகியல் வழிபாட்டின் போது ஒலியின் வடிவாக மணியை அடித்தலும், ஒளியின் வடிவாகத் தீபம் ஏற்றலும் நிகழ்கின்றன. அவ்வாறே புலனொன்றி இறைவனை வணங்கும்போது, உடலில் 'இடியும் முழக்கமும் ஈசர் உருவம்' [337] என்பதற்கேற்ப ஒளியும் ஒலியும் தோன்றுகின்றன. இடி — ஒளி; முழக்கம் — ஒலி. இவ்வாறு ஒலியும் ஒளியுமாக — விந்து நாதமாக — உள்ள ஈசனை உடலிற் கண்டு மகிழ்வதும், ஒலியை உணர்வதும், ஒளியை அறிவதும் உடல்வழிபாட்டின் பாற்படுவனவாகும்.

திருமந்திரம் உடலில் இறைவனைச் சிவசக்தியாய்க் காண்கிறது விந்து — சத்தி; நாதம் — சிவம். விந்தின் வடிவம் வட்டம்; நாதத்தின் வடிவம், தண்டம். [338] நாதமும் விந்தும் கலந்து உருப்பெறுவதே ஆன்மலிங்கம் என்று ஆன்மாவே இலிங்கமாதலைத் திருமந்திரம் விளக்குகிறது; இச்சக்தி பிரணவ வடிவமாகவும் விளங்குவாள் [339] மூலாதாரத்தில் உள்ள மூலக்கனலை மேலெழுப்பும்போது நாதம் தோன்றும். [340] மாணிக்கவாசகரும் இறைவனை,

> உய்யவென் னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்றமெய்யா [341]

என்று போற்றுகிறார்.

சித்ரணி நாடி வழியாக மலைபோன்ற சிரசைப் பிராணன் சென்றடையும் போது ஒலியோடு கூடிய இறைவனைக் காணலாம். இறைவன் சந்திரமண்டலத்தில் ஒலியாகவும் விளங்குகிறான் [342] நாதத்தின் நிறம் செம்மை என்பதனை,

புறமதும் எங்கும் புகுந்தொளிர் விந்து
நிறமது வெண்மை நிகழ்நாதம் செம்மை [343]

என்று திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

காற்றைப் பூரகம் செய்யும்போது 'ஹம்' என்ற ஒலியும், கும்பகம் செய்து வெளியேற்றும்போது 'ஸம்' என்ற ஒலியும் நாதத்தைத் தோற்றுவிக்கும் மந்திரமாகும். அகர உகர மகரங்களின் சேர்க்கையால் பின்புற மூளையில் ஒலி தோன்றும். இதனை,

தானே அகார உகாரமதாய் நிற்கும் [344]

என்று குறிக்கிறது திருமந்திரம். அதனால்,

ஏற்றுகின்றேன் நம்பிரான் ஓர் எழுத்தே [345]

என்று திருமந்திரம் இறைவனை 'ஓம்' என்னும் ஓரெழுத்தால் ஏத்தும் வழிபாட்டையும் சுட்டுகிறது.

'நமசிவய' என்னும் ஐந்தெழுத்தை இடைவிடாது ஒலிப்பதால் ஆகாயத்தில் ஒலி உண்டாகி, முகம், இதயம், உந்தி, குறி ஆகிய இடங்களுக்கு விரிந்து மூலாதாரத்தை அடையும்; பின், குதம் சுருக்கப்பட்டுப் பிராணன் அபானனுடன் சேர்ந்து மேலெழும்போது சகஸ்ரதளத்தில் சென்று மோதும்; சிரசின் முன்னும் பின்னும் இறைவன் தோன்றுவான்; பிறரால் அறியப் படாத இறைவன் தன்னையுணர்ந்து கொண்டவர்முன் வெளிப் படுவான். திருமூலர் இம்முறையில் இறைவனைக் கண்டவர் என்பதால்,

தானே யெழுந்த மறையவ னாமே [346]

என்று பாடுகிறார்.

கண்பார்வையைப் புருவ நடுவில் செலுத்தித் தியானம் செய்யும் போது, பத்துவித ஒலிகள் தெளிவாகக் கேட்கும் என்று வரையறை செய்கிறது திருமந்திரம். அவை:

மணிகடல் யானை வார்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வளைபேரி கையாழ் [347]

என்பனவாம். இவ்வொலிகள் சிறிதுசிறிதாகக் குறைந்து நாதாந்தம் ஏற்படும். பிராணன் ஐம்பத்தொரு அட்சரங்களையும் பொருந்திச் சகஸ்ரதளத்தில் மோதும்போது ஏற்படும் வன்மையான ஒலியானது மென்மையடைந்து நாதாந்தம் தோன்றும். இந்நிலையே முப்பத்தாறு தத்துவங்களையும் தானல்ல என்று ஆன்மா உணர்ந்துகொண்ட நிலை; நாதமும் நாதாந்தமுமான

சிவசக்தியின் திறமுணர்ந்து இறைவனோடு ஒன்றுபட்டநிலை. இந்நிலை சார்ந்தோர் அடையும் பயன்கள்:

1. இறைவனை அடைதல்
2. இளமை பெறுதல்
3. தரிசனம் கிட்டுதல்
4. ஆன்மா மலமற்றுப் பொன்போல் விளங்கல்
5. எங்கும் செல்லவல்ல ஆற்றல் பெறுதல்

என்று திருமந்திரம் தெரிவிக்கிறது.[348]

ஒளி:— ஓவியர்கள் தெய்வங்களையோ, சான்றோர்களையோ வரையும்போது உருவங்களின் பின்னால் தலைப்பகுதியைச் சுற்றி ஓர் ஒளிவட்டம் தீட்டுவர். அவ்வாறே மனிதர்களின் தலைப் பகுதியில் ஒளிதோன்றும்; இவ்வொளி தலையைவிட்டு விலகி யிருக்கும் என்று திருமந்திரம் கூறுகின்றது.[349]

சிவபூமியில் இறைவனை வைத்து வழிபட்டால் சிரசின்மேல் நட்சத்திரங்கள் போன்ற ஒளிதோன்றும் என்பதை விளக்கும் மந்திரப் பாடல்,

மேரு நடுநாடி மிக்கிடை பிங் கலை
கூருமிவ் வானின் இலங்கைக் குறியுறும்
சாருந் திலைவனந் தன்னை மலயத்தூ
டேருஞ் சுழுமுனை இவைசிவ பூமியே[350]

என்பதாகும். இப்பாடலின் இரண்டாவது அடிக்கு விளக்கம் தரும் ஜி. வரதராஜன்,

> ''இலங்கை— தீவு, நிலத்தொடர்பின்றி நாற்புறமும் கடல்சூழ இருப்பது. வானின் இலங்கைக் குறியுறுதலாவது, சகஸ்ரதளத்தின் மேல் உடல் தொடர்பின்றி இடைபிங்கலை சுழுமுனை ஆகிய மூன்றும் நட்சத்திரங்கள்போல் மின்னுதல்''[351]

என்று கூறுகிறார். இந்தியா, உடல்; இலங்கை, தலையின் பின்னே விலகி நிற்கும் ஒளி.

இறைவன் ஒளிவடிவானவன் என்பதைத் திருமந்திரம் 'விடை யுடையான்' என்னும் தொடரால் சுட்டுகிறது.[352] சிவன் சாதகனுக்கு வெண்ணிற ஒளியில் தோன்றுவான் என்பது இதன் குறிப்பு. சத்தி, நீல ஒளியில் வெளிப்படுவாள்.[353]

யோகத்தை விளக்கும் சக்தி ஒளியைப் பீடமாகக் கொண்டு விளங்குவாள்; அவளது ஒளிபெற்ற முகம் தெற்குப் பக்கம்

என்னும் வலக்கண்; அவள் உதரநடுவாகிய மணிபூரகத்தில் சூரியனாகக் காட்சி தருவாள்; அவள் சந்திரனாக விளங்குவது வடபுறமாகிய இடக்கண்— இவ்வாறு திருமந்திரம் சக்தி விளங்கும் இடங்களை ஒளிப்பகுதிகளாகக் கூறுகிறது.[354]

இல்லறத்தானுக்கு தலையின் மீது வெண்ணிற ஒளி படரும் என்பதும், துறவறத்தானுக்குப் பொன்னைவிட ஒளிவீசும் புலித்தோல் போன்ற மஞ்சள்நிற ஒளிதோன்றும் என்பதும் திருமந்திரம் தரும் மற்றொரு செய்தியாகும்.[355]

பிராணனை மேலேற்றும்போது ஆறு ஆதாரங்களில் பொருந்திப் பிராணன் சுழுமுனை வழியாக மேற்செல்லும் பொழுது ஒவ்வோர் ஆதாரத்திலும் ஒவ்வோர் ஒளி தோன்றும்.

சாதகனது உடலில் ஒளி தனியாகவும், ஒலி தனியாகவும் தோன்றுவது மட்டுமன்றி, இரண்டும் கலந்து தோன்றுவதும் உண்டு. நாதம் உதித்து அடங்குவதைப் போலல்லாமல் ஒளி சிறிசிறிதாகச் சாதகனது தியான அளவுக்கு ஏற்பப் பெருகிச் செல்லும் இயல்புடையது.

முத்துப் போன்ற வெண்ணிறமான விந்து வற்றி ஒளியாக மாறுகின்றது; இவ்விந்து நாதங்களின் விகிதத்தைத் திருமந்திரம்,

விந்துவும் நாதமும் ஒக்க விழுந்திடில்
விந்தவும் நாதமும் ஒக்க விரையதாம்
விந்திற் குறைந்திடு நாதம் எழுந்திடில்
விந்துவை எண்மடி கொண்டது வீசமே[356]

என்று பேசுகிறது. ஒளியை விட நாதம் எட்டு மடங்கு கூடுதல் ஆகும்.

விந்து, நாதம் ஆகிய இரண்டும் சமமாக இருப்பின் ஆகாயக் கோசத்தில் ஒளி விளங்கும். ஆகாயக் கூற்றிலுள்ள எட்டு வீரிய அணுக்கள் கொண்டது ஒரு தூல அணுவாகும். விந்துநீக்கம் செய்து உலகவாழ்வு மேற்கொண்டவர்க்கு ஒளி மண்டலம் அமையாது; குண்டலினி மூலாதாரத்தில் காமநோக்கில் செயற் படும்போது ஒளியைத் தோற்றுவிக்காது என்பதால் அதனைக் 'கள்ள ஒளி' என்பர்.[357]

மூலாதாரத்தில் ஆரஞ்சு, சிவப்பு நிறமாக உள்ள சக்தி, சூரிய சந்திர கலைகளின் இணைப்பால் சுவாதிட்டானத்தில் செந்நிற ஒளியாக மாறி, மணிபூரகம் அநாகதத்தில் பொருந்தி, வீசுத்தியை அடையும்போது செம்மை குறைந்து புகைநிறமாக மாறும். பின், நடுநாடி வழியாகப் பிரணவம் நுழைந்து உச்சியிலுள்ள

சகஸ்ரதளத்தை விரியச் செய்யும்; நடுநாடியில் பிரணவம் நுழையும்போதே வெள்ளை ஒளி முத்தினைப் போல் தோன்றும்.

ஒளி பெருகும்போது ஆன்மாவும் தத்துவங்களைவிட்டுப் புலன் அடங்குவதால் இருளில்லாத மலமற்ற நிலை ஏற்படுகிறது; அதனால் விடிவு என்பது இல்லாமல் போகிறது; இந்நிலையில் ஆன்மா பரஞ்சோதியான இறைவனுடன் ஒன்றுபடுகிறது. இதனை,

> பரஞ்சோதி யாகும் பதியினைப் பற்றாப்
> பரஞ்சோதி என்னுட் படித்ததற் பின்னைப்
> பரஞ்சோதி யுண்ணான் படியப் படியப்
> பரஞ்சோதி தன்னைப் பறையக் கண்டேனே[358]

என்று திருமந்திரம் கூறுகிறது. தான் தன்னுள்கண்ட ஒளியையும் ஒலியையுமே திருமூலர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஒளியை உடலில் வழிபட்டவர்கள் பெறும் பயன்களாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்:

1. தத்துவங்கள் அழியும்; மலங்கள் நீங்கும்.
2. ஒளியின் தன்மை அறிந்து இறைவனோடு கலப்பர்.
3. செவ்வொளி பெற்று அனைத்துலகும் சென்று வருவர்.
4. சாந்தியதீதக் கலையில் இருப்பவர் வேண்டுவன பெறுவர்.
5. காலத்தை வெல்வர்.
6. பிராண ஒளியே உலகம் முழுவதும் பரந்திருக்கக் காண்பர்.
7. சூக்கும உடலை ஒளியாகக் காண்பர்.
8. பதினான்கு மண்டலங்களைப் படைத்து அழித்தல் செய்யலாம்.
9. உடல் ஒளிபெறும்.
10. தேவதரிசனம் கிட்டும்.
11. பேரின்பமான வீடுபேறு கிடைக்கும்.

சிவன் சிவனாதல்

சாதகன் உடலின் ஆறு ஆதாரங்களில் பொருந்திய பிராண இயக்கத்தின் அளவைக் குறைத்து, மூலாக்கினியை மேலேற்று கிறான்; அது சகஸ்ரதளத்தைச் சென்றடைந்து மோதும்; சீவன் உடலில் காமேசுவரன் காமேசுவரியாக மூலாதாரத்தில் செயல்

படும். அப்போது ஒளியாக விளங்கும். இறைவனை ஒளியாகத் தன்னுடலில் கண்ட சீவன் ஒளியின் அளவு தன்னுடலில் பெருகுதலைக் கண்டு அதில் நிலைத்து நின்று இறுதியில் சீவன் மலம் நீங்கிச் சிவனைப்போல் ஒளியாகிறது. பின் சீவனும் சிவனும் பேதமற்று 'நீ அது ஆகிறாய்' என்று குரு உணர்த்தியதற் கேற்பச் சீவன் இறைத்தன்மையைத் தனக்குள் பெற்றுத் தன் தன்மை மாறிச் சிவனோடு ஒன்றாதலே சீவன் சிவனாதலாகும். சீவன், சிவன் என்ற இரண்டற்றுச் சீவன் சிவனாதலே அத்வைதம்.

சீவன்:— இவ்வகண்டத்தில் சீவன் வாழ்வதற்காக ஏற்படுத்தப் பட்டுள்ள உலகங்கள் இருநூற்று இருபத்து நான்கு; அண்டங்கள் ஒன்பது; இவை சிவனின் ஆளுகைக்கு உட்பட்டன. இவற்றில் வாழும் சீவர்களின் தகுதிக்கு ஏற்ப அண்டங்கள் விதிக்கப்படு கின்றன.

1. ஐம்பூதங்களால் ஆன அண்டம் — பூதாண்டம்
2. வெவ்வேறு வகையான பூதங்கள் கலப்பதால் ஆன அண்டம் — பேதாண்டம்
3. நல்வினை — தீவினைக்கேற்ப அனுப — வங்களைப் பெறும் அண்டம் — போகாண்டம்
4. யோககாலத்துக்கு ஏற்ப யோகிகள் நிலைபெறும் அண்டம் — யோகாண்டம்
5. யுகத்தோற்ற காலத்தில் உயிர்கள் பிறக்கும் அண்டம் — மூதாண்டம்
6. சிவப்பேறு பெற்று முத்தியடைந்— தவர்கள் வாழும் அண்டம் — முத்தாண்டம்
7. ஆசையுள்ள உயிர் உடலை விட்டபின் வாழும் அண்டம் — மோகாண்டம்
8. சீவன் உடலோடு வாழும் அண்டம் — தேகாண்டம்
9. மிகுந்த வேட்கையுடையவர் வாழும் அண்டம் — தாகாண்டம்

என்பன அண்ட வகைகள்.[359] எட்டாவது அண்டத்தில் சீவன் உடலோடு வாழ்கின்றது. இதற்குமுன், மாணிக்கவாசகர் கூறியதுபோல், ஒரு 'செல்' உயிரி முதல் வினைகளுக்கேற்பப் படிப்படியாக வடிவெடுத்து இறுதியில் மனிதனாகப் பிறக்கின்றது. இச்சீவனின் தோற்றம் சிவன் அனாதியாக இருப்பதுபோன்று அனாதியானது; ஆனால் சீவனைப் பாசம் பிணைத்துள்ளது.

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நிலாவே [360]

என்பது திருமந்திரம். ஆதலால் சிவனைப் போல் சீவனும் பாசமும் தொன்மையானவை. பாசம் பசுவைப் பிணித்துள்ளது; பசுத்தன்மையும் பாசமும் சிவனைச் சென்றடையாது. சீவனுடைய பக்குவத்துக்கேற்பச் சிவன் பொருந்தினால் பாசமும் பசுத்தன்மையும் நீங்கச் சீவன் சிவனாகும்; ஆன்மா சத்தாகிய இறைவனோடு கூடிச் சத்தாகின்றது. அது பிறவிச் சூழலில் சிக்கிக் கொண்டிருக்கும் பொழுது அசத்து; அறிவற்றது. மாயையுடன் கலந்து அறிவற்றதாக உள்ள ஆன்மாவைச் சதசத்து என்பர்; ஆன்மா அருவமானது; வடிவற்றது; அருவமான சீவனின் அளவை அணுவோடு ஒப்புமைப்படுத்திக் கூறுகிறது திருமந்திரம்.

மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு
மேவிய கூறது ஆயிர மாயினால்
ஆவியின் கூறுநூ றாயிரத் தொன்றே [361]

என்பது அப்பாடல். கோவின் மயிரை நூறாகப் பகுத்து, அதனை ஆயிரம் கூறாக்கினால் அதுவே அணுவின் அளவாகும்; அதையும் நூறாயிரம் கூறுபடுத்தால் அது ஒரு சீவனின் அளவாகும் என்பது இதன் கருத்து. மிக நுண்மையான இச்சீவன் மாயையில் சிக்கி, மும்மலம் உடையதாய், காற்றாடியின் ஓலையும், கொள்ளிக் கட்டையின் வட்டமும், கடலின் அலையும், தயிர்கடையும் மத்தும் போலப் பாவபுண்ணியத்துக்கேற்ப சொர்க்க— நரகத்தில் பொருந்திப் பூமியை அடைந்து பருவுடலுடன் வாழ்கின்றது. இக்கருத்துகள் சீவன் சிவசக்தியின் அருளால் மாயை கூட்ட உலகில் வந்து பிறக்கும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

சிவன்:— சிவன் எங்கும் நிலைத்துள்ளவன். இந்த உண்மையை அப்பரடிகள்,

ஊனாகி யுயிராகி யதனுணின்ற வுணர்வாகிப்
பிறவனைத்து நீயாய் நின்றாய் [362]

என்று தெரிவிக்கிறார். திருமந்திரமும் சுயம்புவான சிவன் இந்த உலகில் எங்கும் நிறைந்துள்ளான் என்பதனை எதிர்மறைப் பொருளில்

ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
யாரறிவார் இந்த அகலமும் நீளமும்
பேரறி யாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறி யாமை விளம்புகின் றேனே [363]

என்று உணர்த்துகிறது. முதலிரண்டடிகளில் இறைவன் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்துள்ளான் என்பது கூறப்படுகின்றது; அடுத்து, இறைவன் பெருஞ்சுடராக உள்ளான் என்று அவன் ஒளிவடிவத்தினை எடுத்துரைக்கிறது; அவனது மூலமும் (வேரும்) அறிய இயலாதது என்பதை இறுதியடி சுட்டுகிறது.

பேரண்டமாக விளங்கும் இறைவன் ஆன்மாவைப் போல அணுவிலும் நுண்மையானவன் என்பதை,

அணுவில் அணுவினை ஆதிப் பிரானை
அணுவில் அணுவினை ஆயிரங் கூறிட்டு
அணுவில் அணுவை அணுக வல்லார் [364]

என்று திருமந்திரம் தெரிவிக்கிறது.

சிவன் ஐந்தொழில்களைச் செய்து உலகைக் காக்கின்றான். அதுமட்டுமல்லாமல் பரசிவம், சத்தி, நாதம், பரவிந்து, சதாசிவன், மகேசன், உருத்திரன், திருமால், பிரமன் ஆகிய ஒன்பது நிலைகளும் உலகில் விளங்கப் படைப்பவனும் சிவனே ஆவான்.

சிவன் ஆன்மாக்களை தத்துவங்களோடு கூட்டிப், பின் பாசத்தைப் போக்கி அருளுவதோடு, அவற்றோடு ஒன்றாயும் வேறாயும் கலந்திருக்கிறான்; நான்கு வேதங்களையும், ஆறு அங்கங்களையும், உப அங்கங்களாகிய நான்கனையும் பதினான்கு வித்தைகளாக உலகுக்கு உணர்த்துகின்றான்; சிவன் உமை காண அண்டகோசத்தில் நடித்துக்கொண்டு மேற்கண்ட செயல்களையும் செய்கிறான்.

எங்கும் திருமேனி எங்கும் சிவசக்தி
எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம்
எங்கும் சிவமா யிருத்தலால் எங்கெங்குந்
தங்கும் சிவனருட் டன்விளை யாட்டதே [365]

என்கிறது திருமந்திரம். எங்கும் நிறைந்து, எங்கும் ஒளிவீசி, ஆனந்த நடனமாடி, உயிர்களையும் உலகையும் இயக்கும் சிவனின் திருவடிவம் அஞ்ஞானத்தில் ஆழ்ந்த உலக மக்களுக்காக இங்குச் சித்திரிக்கப்படுகின்றது.

திருந்திய நல்ல சிகரத்தின் நெடில் வடிவமான 'சீ' என்ற உடுக்கையை உதறிய கையும், அருமையான தவத்தினரை வா என்று அணைத்த மலர்போன்ற இடக்கையும், பொருந்துமாறு அமைத்த யகரமாகிய பொன்போன்ற கையும், திருந்துகின்ற நகரமாகிய அக்னியையுடைய இடக்கையும், மகரமாகிய மலத்தை யடக்கி ஊன்றிய திருவடியும் சிவனுக்கு உரியன.[366] மற்றொரு பாடல்,

இருளார்ந்த கண்டமும் ஏந்து மழுவும்
சுருளார்ந்த செஞ்சடைச் சோதிப் பிறையும்
அருளார்ந்த சிந்தையெம் ஆதிப் பிரானைத்
தெருளார்ந்தென் உள்ளே தெளிந்திருந் தேனே[367]

என்று இறைவனின் புறவழகை எடுத்துக்காட்டுகின்றது. இதில் திருமூலர் தாம் தெளிந்து கண்டுகளித்த இறைவனது வடிவை மக்களுக்கு விளக்குகிறார்.

சீவன் சிவனாதல்:— ஆதியும் அந்தமும் இல்லாத, மலமற்ற விமலனான சிவனை, மலத்தில் உழலும் ஆன்மா மலம்நீக்கி இன்பம்பெற்று, பெருஞ்சோதியான இறைவனை ஒளியால் கலத்தலே சீவன் சிவனாதல் ஆகும்.

சீவனுக்கும் சிவனுக்கும் உள்ள தொடர்பு சமயகுரவர் ஆகிய சுந்தரரை ஆவணம் காட்டி ஆட்கொண்ட தொடர்பு எனலாம். சுந்தரர் தீவிரப் பக்குவராக இருந்தமையால் சிவன் அதற்கேற்ப ஆவணம் காட்டி ஏற்றுக்கொண்டார். பிறருக்கும் ஆவணம் எழுதப்பட்டுள்ளது. அதில் சாட்சிக் கையொப்பம் இட்டவர் திருமால். இதனை,

என்தாயோ டென்னப்பன் ஏழேழ் பிறவியும்
அன்றே சீவனுக் கெழுதிய ஆவணம்
ஒன்றா யுலகம் படைத்தான் எழுதினான்
நின்றான் முகில்வண்ணன் நேரெழுத் தாயே[368]

என்னும் மந்திரப் பாடல் இனிது விளக்குகிறது.

இன்பத்திலே பிறந்து இன்பத்திலே வளர்ந்து இன்பமடைய வேண்டும் என்ற நோக்கத்திற்காகச் சோறொடு கூரையென்ற இவற்றையும், இவற்றின் தொடர்பான பிறவற்றையும் பெறும் பொருட்டு, செய்யும் செயல்களால் இருவினைகளை அடைகின்றது சீவன். வினைகள் சீவனை மும்மலங்களால் சூழ்ந்து நிற்கும்; இந்நிலையில் சீவன் மூவகையாய்ப் பிரிந்து விடுகிறது.

அ) சகலர்:— பிரமன் முதல் அனைத்து உயிர்களாகப் பிறந்து இறப்பவர்கள்; பிறவிக் குருடர் போன்று உலக வாழ்வில் உழல்பவர்; மும்மலம் உடையவர்.

ஆ) பிரளயாகலர்:— உலக வாழ்வின் நன்மை தீமைகளை உணர்ந்தும் உலக வாழ்விலிருந்து மீளாது உலக வாழ்வில் சிக்கிக் கெடுபவர்; அசுத்த மாயையில் உள்ளவர்கள்; இவர்கள் சீகண்டரும் நூற்றெட்டு உருத்திரர்களுமாவர். ஆணவம், மாயை ஆகிய இருமலம் உடையவர்கள்.

இ) விஞ்ஞானகலர்:— இறைவனை நினைந்து உலக வாழ்வில் ஈடுபடுபவர்; இக்காரணங்களால் சகலர் நீண்ட பயிற்சியால் பல பிறவிகள் எடுத்து இறைவனை அறிவர்; பிரளயாகலர் சில பிறவிகளில் இறைவனை அறிவர்; விஞ்ஞானகலர் எடுத்த பிறவியிலேயே இறைவனை அறிவர். ஆணவ மலம் மட்டும் உடையவர்கள்.

இறையனுபமில்லாத சகலர் தம்மை நினைந்து வருந்திக் கெடுகின்றனர்; தன்னைச் சீவன் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே சிவன் சீவனுக்கு உலகப் பற்றையும் அதன் தொடர்பால் வரும் துன்பங்களையும் தருகின்றான். துன்பத்தைக் கொடுத்து, உலக ஆசை பற்றற்றது என்பதையும் சிவசக்தி சீவனுக்கு உணர்த்துகிறாள். இதனை,

> என்னை யறிந்திலேன் இத்தனை காலமும்
> என்னை யறிந்தபின் ஏதும் அறிந்திலேன்
> என்னை யறிந்திட் டிருத்தலுங் கைவிடா
> தென்னையிட் டென்னை உசாவுகின் றானே [369]

என்னும் திருமந்திரப் பாடல் விளக்குகின்றது.

சீவன் தன்னை உணரும் பக்குவம் பெற்றதும் சிவன் தன் திருவடிகளைக் குருவின் வடிவத்திலிருந்து சீவனது தலையின்மீது பதிக்கிறான்; அப்போது சீவனின் மலங்கள் நீக்குகின்றன. மலம் நீங்க மனம் உலக வாழ்வில் ஈடுபடுவதால் ஏற்படும் துன்பமும், அதன் காரணமாக ஏற்படும் சோர்வும் கெடும்; அதனால் ஆன்மா ஒளி பெறும் தகுதி அடைகின்றது; அதன்பின் சீவன் சிவனருளால் சிவத்தன்மை அடைந்த அடியார்களுக்கு அடிமைசெய்ய முற்படுகிறது; அடியவரோடு சேர்ந்து பக்குவப்பட விரும்பும் சீவனை, பக்குவப்பட்ட சிவனருள் பெற்ற சிவனடியார்கள் தம்முள் ஒருவனாக ஏற்றுக்கொள்வர். இதனை,

அடியார் அடியார் அடியார்க் கடிமைக்
கடியனாய் நல்கிட் டடிமையும் பூண்டேன்
அடியார் அருளால் அவனடி கூட
அடியா னிவனென் றடிமைகொண் டானே [370]

என்கிறது திருமந்திரம்.

அடியவர் கூட்டத்துள் ஒருவனாகி விளங்கும் சீவன் தன்னுள் இறைவனை நினைக்கத் தொடங்கும்; அப்போது அச்சீவன் உள்ளத்தில் இறைவன் வந்து தங்கி, அச்சீவனுக்குப் புலப்படுவான். இறைவனை நினைந்து நடுநாடியில் இறைவனைக் கூடினால் தத்துவங்கள் நீத்கமடைகின்றன; அப்போது சீவனும் சிவனைப் போல நின்மலனாகின்றது; நின்மலமான மனத்தில், மலம் நிறைந்திருந்தபோது ''புரையற்ற பாலினுள் நெய்கலந்தாற் போல'' இருந்த இறைவன், இப்போது வெளிப்படுவான். இதனைத் திருநாவுக்கரசர்,

விறகில் தீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியன் [371]

என்கிறார்.

இறைவன் தன்மையை உணராதார் நெஞ்சம் மும்மலம் நிறைந்த இருளாகக் காணப்படும்; அவர்கள்,

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார் [372]

என்று கூறுகிறது திருமந்திரம். இத்தகைய மக்கள் உடம்பைவிட்டு உயிர் போகும்போதாவது சிவனை நினைத்தால் நன்மை பெறுவர்.

இறையருள் பெற்ற உயிர் புலனடக்கம் உடையது; அவர்கள் உள்ளம் சாத்திரம் ஓதும்போதும் பொறுமையுடன் இருக்கும்; சிவமேதான் என்று உணர்ந்து தெளிவடையும்; அச்சத்தைக் கெடுத்துத் தன்னை ஆண்டவன் சிவன் என்று தெளிந்த சீவன், இதுவரை தான்— அவன் என்று இரண்டாக இருந்தமை மாறி, இப்போது ஒன்றானமையை உணர முற்படும். இதனை,

தானென் றவனென் றிரண்டாகுந் தத்துவம்
தானென் றவனென் றிரண்டுந் தனிற்கண்டு
தானென்ற பூவை யவனடி சாத்தினால்
நானென் றவனென்கை நல்லதொன் றன்றே [373]

என்று திருமந்திரம் குறிப்பிடுகின்றது. சீவன் வேறு, சிவன் வேறு என்றிருந்தபோது ஆன்மா சுட்டியறியும் அறிவுடையதாக இருந்தது; இரண்டும் ஒன்று என்று தெளிந்த சீவனின் சுட்டறிவு

நீங்கி விரிகின்றது; இந்நிலையில் சிவன் சீவனுக்கு, "காட்டாதன வெல்லாங் காட்டிப் பின்னும், கேளாதனவெல்லாம் கேட்பிக் கும்"[374] என்பர் மாணிக்கவாசகர். திருமூலர் இந்தப் பேற்றினை அடைந்தவர் என்பது,

> காணாத கண்ணுடன் கேளாத கேள்வியும்
> கோணாத போகமும் கூடாத கூட்டமும்
> நாணாத நாணமும் நாதாந்த போதமும்
> காணா எனவந்து காட்டினன் நந்தியே[375]

என்னும் திருமந்திரத்தால் பெறப்படும். இதனால், தூல உடலால் பெற்ற அனுபவங்களுக்கு மாறான அனுபவங்களைச் சூக்குமமான இறைவனது ஒளியில் ஒன்றிய சீவன் பெறுகிறது என்னும் உண்மை புலப்படுகிறது. இந்நிலை அடைந்த சீவன் மௌனநிலை அடை கிறது; மௌனநிலை அடைந்த ஆன்மா அடுத்துச் சதாசிவநிலை எய்துகிறது. சதாசிவநிலை என்பது உருவமுடைய பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசன், சதாசிவன் ஆகியோரது நிலையைக் கடந்த மௌனநிலை; அதாவது, சீவன் ஆறு ஆதாரங் களைக் கடத்தலும், நாதமும் விந்தும் உடலில் ஏற்படுதலும், சீவன் சிரசைக் கடந்தபோது ஐவரின் ஆட்சிக்கு உடல் உட்படுத லும், மனம் எண்ணுதலும், புத்தி சிந்தித்தலும் இல்லாத நிலையில் சீவனே சிவனாகின்றது; சிவனைப்போல் எங்கும் நிறைந்து விளங்குகின்றது[376]

முக்குற்றம் நீங்கிய சீவன் சிவனாதலைத் 'தொந்தத்தசி' என்று 'முப்பதம்' என்னும் தலைப்பின்கீழ் எடுத்துரைக்கிறது திருமந்திரம். இதில், தொம்பதம் என்பது ஆன்மாவுக்குரிய பதம்; இப்பதத்தில் ஆன்மா கருவிகள் தொண்ணூற்றாறும் தானல்ல என்று தெளிவுறும்; தற்பதம் என்பது பரத்துக்குரிய பதம்; அசிபதம் என்பது சீவனும் பரனும் ஒன்று கலத்தல் ஆகும். இந் நிலையைத் திருவாசகம்,

> கறந்தபால் கன்னலொடு நெய்கலந் தாற்போல்[377]

என்கிறது.

இவ்வாறு சீவனும் சிவனும் ஒன்றாதலை நான்கு வேதங் களும் —

இருக்கு	— பிரஞ்ஞானம் பிரம்மம்	— அப்பியாச வாக்கியம்
யசுர்	— அகம் பிரம்மாஸ்மி	— அனுபூதி வாக்கியம்
சாம	— தத்துவமசி	— உபதேச வாக்கியம்
அதர்வண	— அயத்மா பிரம்மம்	— சம்மத வாக்கியம்

என்று குறிப்பிடுகின்றன.[378]

நான்கு வேதங்களும் கூறும் கருத்தினை ஆகமங்களும் விளக்கு கின்றன. இதனைத் திருமந்திரம்,

மன்னிய சோகமா மாமறை யாளர்தம்
சென்னிய தான சிவயோகமாம் ஈதென்ன
அன்னது சித்தாந்த மாமறை யாய்பொருள்
துன்னிய ஆகம நூலெனத் தோன்றுமே[379]

என்று விளக்கிக் கூறுகிறது. இதில் இடம்பெறும் 'சோகம்' என்னும் சொல்லும் 'ஹம்சம்' என்னும் சொல்லும் தொடர்பு உடையன. பிராண இயக்கம் உலக இயக்கத்தில் இருக்கும்போது அறியாமையில் கிடக்கின்றது; உலகைவிட்ட நிலையில் அறியாமை ஒழிந்து பஞ்ச பூதத்தாலான தூல உடல்கெட்டு, அருவமாகி, சிவ உருவம் 'சங்கார ரூபம்' ஆகின்றது.[380] இது வேதாந்த முடிவு. இதனைச் சித்தாந்தம் பஞ்சாக்கிரத்தில் மலமற்ற எழுத்துக்க்ள் 'சிவய' என்பன என்றும், இம்மூன்றில்,

யகரம் — ஆன்மா — துவம் பதத்துக்குரியது
சிகரம் — சிவம் — தத்பதத்துக்கு உரியது
வகரம் — அருள் — அசி பதத்துக்கு உரியது

என்றும், யகரமாகிய ஆன்மாவையும் வகரமாகிய அருளையும் சிகரமாகிய சிவத்துடன் பொருத்தும்போது, 'ஆன்மா செயலற்றுச் சிவமாகும்' என்றும் விளக்குகின்றது.[381] இக்காரணங்களால் சோகம் என்பதும் சிவோகம் என்பதும் ஒன்றே. இதனைச் சிவஞான சித்தியார்,

பண்டை மறைகளும் அதுநானா னேனென்று
பாவிக்கச் சொல்லுவதில் பாவகத்தைக் காணே[382]

என்று குறிப்பிடுகின்றது.

எனவே, சித்தாந்தமும் வேதாந்தமும் ஒப்புக்கொண்ட சீவன் சிவனாகும் என்ற சிவசாயுச்சிய முடிவினை ஆகம நூலான திருமந்திரமும் தெளிவாக விளக்கியுள்ளமை அறிந்து மகிழலாம்.

தொகுப்புரை

திருமந்திரம் ஒரு வாழ்வியல் நூல்; இல்லறத்தார்க்கும் துறவறத்தார்க்கும் ஆன்ம ஈடேற்றத்திற்கும் பிறவி நீக்கத்திற்கும் வீடுபேற்றிற்கும் வழிகாட்டுவதே திருமந்திரத்தின் உயரிய நோக்கம்.

இல்லறத்தார் யாக்கை நிலையாமையை உணர்ந்து வீடுபேறு பெறுதற்கு முயலவேண்டும்.

இறைவழிபாடு தமிழகத்தில் தொன்மைதொட்டு வருவதாகும். திருமந்திரம் சிவவழிபாடு, சக்திவழிபாடு ஆகியனவற்றை விளக்குகிறது.

சிதாகாயப் பெருவெளியில் ஆனந்தக் கூத்தாடும் பெருமான் சத்தியோடு மந்திர வடிவமாய் நின்று நிலவும் சக்கரம் திருவம்பலச் சக்கரம். இதனை முறையாக வழிபடுவதால் இல்லறத்தானுக்குப் பொருட்செல்வம் கிடைப்பதோடு முத்திக்கும் வழிகிட்டும்.

உமாகாந்தன் வழிபாடு ஞானியர் மேற்கொள்ளும் வழிபாடு. தம்பனம், மோகனம், உச்சாடனம், மாரணம், வசியம், ஆகர்ஷணம் ஆகியன சிவனை வழிபட்டுச் செய்வன.

சக்தி பல வடிவங்களில் விளங்குபவள்; அவளை வணங்குபவர்க்கு வீடு பேற்றினை அளிப்பாள். இராஜேஸ்வரி வழிபாடு செய்வோர்க்கு அவள் அணிகலன்கள் புனைந்த அழகிய தோற்றத்தோடு காட்சியளிப்பாள். வயிரவி மும்மூர்த்திகளாக விளங்குபவள்; வயிரவி மந்திரம், வயிரவி சக்கரம் ஆகியன மிக்க பலனைத் தருவன.

சிவசக்தி விளங்கும் மற்றொரு சக்கரம் சாம்பவி மண்டலச் சக்கரம்; இந்தச் சக்கர வழிபாடு செய்வோரைப் பகை அணுகாது; நினைப்பவை நடக்கும்; ஒளிமண்டலம் சென்று இன்புறுவார்கள்.

புவனாபதியை அகவழிபாடு, புறவழிபாடு என இருவகைகளில் வழிபடலாம். இதனால் செல்வங்கள் கிட்டும்; வீடுபேற்றிற்கும் வழியுண்டு.

நவாக்கரி சக்கர வழிபாடு செய்பவர்களுக்கு அவள் ஆயுதம் தாங்கிய ஆறு கரங்களோடு காட்சி தருவாள்; வினைகளை நீக்குவாள்; புகழ் பெருக்குவாள்; செல்வம் தருவாள்; பகையைப் போக்குவாள்; பிறவியை அறுப்பாள்.

இல்லறத்தான் செய்ய வேண்டிய கடமைகள் சிலவற்றை விதிக்கிறது திருமந்திரம். விருந்தோம்புவது அவன் முதற்கடமை; துறந்தார்க்குப் பொருள் கொடுத்துப் பணிவிடைகளும் அவன் செய்ய வேண்டும். நற்செயல்களையே புரிய வேண்டும்; தீயன அனைத்தையும் விலக்க வேண்டும்.

இல்லறத்தான் விலக்க வேண்டிய சிலவற்றையும் திருமந்திரம் கூறுகிறது. அவற்றுள் முதலாவது பரத்தையர் தொடர்பு; அடுத்தது, பிறன்மனை நயத்தல்; மூன்றாவது பொருட்பற்று.

கருவின் வளர்ச்சியை விரிவாக விளக்கும் திருமந்திரம் தாமத, இராசத, சத்துவ குணங்கள் அமைதல் குறித்தும், குறள், முடம், கூன் பிறத்தல் குறித்தும், மந்தபுத்தி, ஊமை, குருடு தோன்றுதல் குறித்தும், ஆண் குழந்தை, பெண் குழந்தை, இரட்டைக் குழந்தை, அலி ஆகியன பிறத்தல் குறித்தும், மலட்டுத்தன்மை குறித்தும், ஆயுள் குறித்தும், உடலின் பல்வேறு கூறுகள் குறித்தும், போகம் நுகரவேண்டிய காலம் குறித்தும் காரண காரியங்களோடு பல செய்திகளைத் தருகிறது.

மனிதனுக்கு வரும் நோய்கள் எந்தக் காரணங்களினால் வருகின்றன என்பதையும் ஆராய்ந்து சொல்கிறது திருமந்திரம். இருமல், சோகை, ஈளை, வெப்பு முதலியன அறம் செய்வாரைச் சாரா; உரோணி, கழலை, பாம்புக்கடி, இடி, மின்னல் ஆகியனவும் அவர்களைத் துன்புறுத்தா. கோயில் இலிங்கத்தை அகற்றுவோர் பெருநோய்க்கு ஆளாவர்; கோயில் கல்லைத் திருடுவோர் அரசனால் வெட்டப்படுவர். வேதாகமங்களுக்கு மாறாக வழிபாடு நடைபெற்றால் மன்னனோடு மக்களும் அளவிட முடியாத நோய்களால் வருந்துவர். தனஞ்செயன் என்னும் வாயுவின் திரிபால் சிரங்கு, குட்டம், சோகை, கால்வாதம், கூன் முதலியன உண்டாகும்; கூர்மன் என்னும் வாயுவின் திரிபால் கண் நோய்கள் வரும்.

துறவறத்தின் மேன்மையைத் துறவியாகிய திருமூலர் தம் நூலில் நன்கு விளக்கியுள்ளார். ஆறாம் தந்திரத்தில் துறவு பற்றிய விளக்கம் மிகுதியாக உள்ளது.

சிவனே மிகச் சிறந்த துறவி என்று காட்டும் திருமந்திரம், இறைவனை வழிபட்டுத் திருவடிப் பேற்றினை அடையவேண்டும் என்பதே துறவியின் நோக்கம் என்று உணர்த்துகிறது.

அட்டாங்க யோகப்படி தியானம் மேற்கொண்டு வழிபாடு செய்து தன்னுள் மறைந்துள்ள இறைவனைக் காண்கிறான் துறவி. அவன் அச்சம் விலகுகிறது; இருள் மடிகிறது; அவன் பகலைக் காண்கிறான். இரவு பகலற்ற இடத்தில் பிராணனை நிறுத்தித் தவம் செய்வார் பிறப்பினை நீக்கும் பெருமை பெறுவர்.

புறநோக்கில் ஈடுபடாது அகநோக்கு உடையவர்க்கே முத்தி கிட்டும்; ஞானத்தைப் பெறுவதற்குச் செய்யும் முயற்சியே தவம்; ஞானசமாதி கூடியபின் தவமும் தேவையில்லை.

துறவிகளின் ஒழுகலாறுகளையும், திருமந்திரம் விரிவாகச் சுட்டியுள்ளது. தவவேடம், திருநீறு, குருவருள் முதலியன குறித்தும் அது பேசுகிறது.

ஐம்புலனை வென்றவனே உண்மையான குரு. சீடன் குரு வாயிலாகக் குண்டலினி ஆற்றலை உணர்ந்து எழுப்புவான்; இறையனுபவத்தைத் தன்னுள் காண்பான். குருவின் திருவடி தீட்சை பெற்றவர் சிவகதி பெறுவர். போலித் துறவிகள் தண்டிக்கப் பெறுவர்; அவர்கள் தொடர்பு கூடாது.

இறைவனை அடைதற்குரிய வழிமுறைகள் பல. சுத்தசைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடுஞ்சுத்த சைவம், சரியை, கிரியை, யோகம், ஞானம், சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திர மார்க்கம், தாசமார்க்கம், சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச் சியம், சத்திநிபாதம், ஆறந்தம் ஆகிய பதினெட்டு நெறிகளைத் திருமந்திரம் தெளிந்த முறையில் ஆராய்ந்து சொல்லி அவற்றின் பயன்களையும் குறிப்பிட்டுள்ளது. இவற்றுள் ஏதாவது ஒரு நெறியைப் பின்பற்றி இறைவனை அடைதற்கு மனிதன் முயல வேண்டும் என்பதைத் திருமந்திரம் வலியுறுத்துகிறது.

'சைவம் சிவனுடன் சம்பந்த மாவது' என்று திருமந்திரம் சைவத்துக்கு இலக்கணம் வகுக்கிறது.

தத்துவங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட ஆன்மா விற்கு வீடுபேறு என்னும் பேரின்ப நிலை கிட்டும். சிற்றின்பம் தோன்றி மறைவது; பேரின்பம் நெடிது நிலைத்திருப்பது. வீடு பேறு அடையும் தகுதி மனிதனுக்கு மட்டுமே உண்டு.

வீடுபேறடைந்தவர்களைப் பிறவி தொடராது; அவர்கள் தேவர் வாழ்வையும் விரும்பார். வீடுபேற்றினை மறுப்போர் பிறவிப் பெருங்கடலில் சிக்கித் துயருறுவர்.

உடம்பு சிவாலயம் என்று உணரவேண்டும்; உடல் அழிந்தால் ஆன்மா ஈடேற வாய்ப்பில்லை. எனவே, உடலைப் போற்றுதல் வேண்டும்.

விந்து நாதமாக விளங்கும் ஈசனை உடலிற் கண்டு மகிழ்வதும், ஒலியை உணர்வதும், ஒளியை அறிவதும் உடல் வழிபாட்டால் கிடைப்பன.

இறைவன் ஒளிவடிவானவன்; சிவன் சாதகனுக்கு வெண்ணிற ஒளியில் தோன்றுவான்; சக்தி நீல ஒளியில் வெளிப்படுவாள்.

ஒளியினை உடலிற் கண்டவர்கள் பல பயன்பாடுகளைப் பெறுவர்.

சீவனும் சிவனும் பேதமற்று 'நீ அது ஆகிறாய்' என்று குரு உணர்த்தியதற்கேற்பச் சீவன் இறைத்தன்மை பெற்றுச் சிவனோடு ஒன்றாதலே 'சீவன் சிவனாதல்' ஆகும். சித்தாந்தமும் வேதாந்தமும் ஒப்புக்கொண்ட இந்த உண்மையைச் செந்தமிழ் ஆகம நூலான திருமந்திரம் தெளிவாக விளக்கியுள்ளது.

அடிக்குறிப்புகள்

1 திருமந்திரம், பா. 71
2 பதிற்றுப்பத்து, மூன்றாம் பத்து, பதிகம்.
3 திரு. வி க., பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கை ப. 203
4 குறள், 42
5 ,, 43
6 தொல். பொருள். 142
7 மே கு. நூ., நச். உரை, ப. 163
8 திருமந்திரம், பா. 150
9 ,, பா. 155
10 ,, பா. 157
11 ,, பா. 148
12 ,, பா. 149
13 ,, பா. 149
14 ,, பா. 151
15 ,, பா. 2944
16 ,, பா. 192
17 ,, பா. 160
18 ,, பா. 155
19 ,, பா. 162
20 ,, பா. 145
21 ,, பா. 15
22 தொல். பொருள். புறத்திணையியல், நூ. 5
23 சிலம்பு, காடுகாண்காதை, அடிகள் 64—65
24 தொல். பொருள். புறத்திணையியல், நூ. 59
25 மே. கு. நூ., பேராசிரியர் உரை, ப. 88
26 மே. கு. நூ., நச். உரை, ப. 267

27 திருமந்திரம், பா. 1178
28 ,, பா. 1172
29 குறள், 247
30 ஜி. வரதராஜன், திருமந்திரம்— 2, உரை, ப. 16
31 திருமந்திரம், பா. 924 ஐம்பத்தோர் எழுத்து விளக்கம்.

அ	— ந	— அயன்	— நிலம்	—	9 எழுத்து
இ	— ம	— அரி	— நீர்	—	11 எழுத்து
உ	— சி	— அரன்	— நெருப்பு	—	4 எழுத்து
எ	— வ	— ருத்திரன்	— காற்று	—	15 எழுத்து
ஒ	— ய	— சதாசிவன்	— ஆகாயம்	—	12 எழுத்து
					51—1—50

இதில் க்ஷகரம் நீங்க 50 எழுத்துக்களால் அடைபடுவது திருவம்பலச் சக்கரம்.

32 திருமந்திரம், பா. 925
33 ,, பா. 926
34 ,, பா. 927
35 ,, பா. 929
36 ,, பா. 1003
37 ,, பா. 1004
38 ,, பா. 1005
39 ,, பா. 1008
40 ,, பா. 995
41 பெரியபுராணம், ஆனாய நாயனார் புராணம், பாடல் 38
42 திருமந்திரம், பா. 997
43 ,, பா. 998
44 ,, பா. 999
45 ,, பா. 1000
46 மீ.ப. சோமு, சித்தர் இலக்கியம்—1, ப. 77
47 திருமந்திரம், பா. 1001
48 ,, பா. 1002
49 திருவாசகம், போற்றித் திருவகவல், பாடல் அடி 44
50 திருமந்திரம், பா. 1049
51 ,, பா. 1045—1047
52 ,, பா. 1049
53 ஜி. வரதராஜன், திருமந்திரம்—2, உரை, ப. 80

54 திருமந்திரம், பா. 1068
55 ,, பா. 1069
56 ,, பா. 1082
57 ,, பா. 1083
58 ,, பா. 1084
59 ,, பா. 1087
60 ,, பா. 1099
61 ,, பா. 1103
62 ,, பா. 1086
63 ,, பா. 1294
64 ,, பா. 1293
65 ,, பா. 1292
66 ,, பா. 1295
67 ,, பா. 1300, 1301
68 ,, பா. 1301, 1303, 1304, 1306
69 ,, பா. 1307
70 ஜி. வரதராஜன், திருமந்திரம்— 2, உரை, ப. 193
71 திருமந்திரம், பா. 1316
72 ,, பா. 1317, 1318
73 ,, பா. 1312 — 1314

அகர முதலாகப் பதினாறு எழுத்துக்கள் என்று திருமந்திரம் குறிப்பிடுகின்றதே தவிர இன்னின்ன எழுத்துக்கள் என்று குறிப்பிடவில்லை. எனவே, திருமூலர் காலத்தில் வழக்கிலிருந்த புவனாபதி சக்கரத்திற்குப் பயன்படுத்திய எழுத்து வடிவமே இன்றளவும் பயன்படுத்தப் படுகிறது. இச்சக்கரங்களை வடிவமைத்துக் கொடுக்கும் சிலருக்கு மட்டுமே பதினாறு உயிரெழுத்துக்களையும் ஒலிக்கும் முறை தெரிந்திருக்கலாம். சக்கரத்தை வைத்து வழிபடும் மக்கள் செவ்வாடை அணிந்து தேவியை மனத்தில் தியானித்துச் சக்கரத்தை வழிபடுவர் என்றும் கொள்ளலாம்.

74 ,, பா. 1308
75 ,, பா. 1309

76 திருமந்திரம், பா. 1310
77 ,, பா. 1310
78 ,, பா. 1364 — 1366
79 ,, பா. 1368
80 ,, பா. 1366
81 ,, பா. 1369
82 ,, பா. 1370
83 ,, பா. 1371
84 ,, பா. 1376
85 ,, பா. 1322
86 ,, பா. 1325
87 ,, பா. 1326, 1328
88 ,, பா. 1330, 1331
89 ,, பா. 1332, 1336—1338
90 ,, பா. 1339, 1341, 1345, 1351, 1352
91 ,, பா. 1347, 1348
92 ,, பா. 1363
93 ,, பா. 1417
94 ,, பா. 2830
95 குமரகுருபரர், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், பா. 60
96 திருமந்திரம், பா. 2780
97 குறள், 60
98 ,, 45
99 ,, 43
100 புறம். 6/19—20
101 சிலம்பு. கொலைக்களக் காதை, 71—73
102 கம்பராமாயணம், சுந்தரகாண்டம், பா. 343
103 திருமந்திரம், பா. 501
104 ,, பா. 507
105 ,, பா. 148
106 தொல். பொருள். நூ. 187
107 மே. கு. நூ. பரத்தைக்குரிய பெயர்கள்:
சேரிப்பரத்தை — தொல். 295, இளம்பூரணர் உரை.
இற்பரத்தை — தொல்.. நச்சினார்க்கினியர் உரை, 233
பொது மகளிர் | நாலடியார், ப. 285
வரைவின் மகளிர் |
108 திருமந்திரம், பா. 105

109 திருமந்திரம், பா. 56
110 ,, பா. 98
111 ,, பா. 204
112 ,, பா. 205
113 ,, பா. 206
114 ,, பா. 330
115 குறள், 115
116 திருமந்திரம், பா. 206
117 ,, பா. 202
118 கம்பராமாயணம், யுத்த காண்டம், பா. 239
119 திருமந்திரம், பா. 203
120 ,, பா. 216 — 234
121 ,, பா. 454
122 ஜி. வரதராஜன், திருமந்திரம்—1, உரை, ப. 218
123 தன்மாத்திரைகள் 5: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.
124 ஞானேந்திரியங்கள் 5: நாக்கு, தோல், கண், செவி, மூக்கு
125 கன்மேந்திரியங்கள் 5: வாக்கு, கால், கை, எருவாய், கருவாய்
126 பஞ்ச பூதங்கள் 5: நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்
127 அந்தகரணங்கள் 4: மனம், புத்தி, சித்தம், அகங்காரம்
128 திருமந்திரம், பா. 455
129 ,, பா. 456
130 ,, பா. 457
131 ,, பா. 458
132 ,, பா. 460
133 ,, பா. 464
134 ,, பா. 468
135 ,, பா. 461
136 குறள், 80
137 திருமந்திரம், பா. 479
138 ,, பா. 480
139 ,, பா. 481
140 ,, பா. 482
141 ,, பா. 482
142 ,, பா. 482
143 ,, பா. 478
144 ,, பா. 483

145 திருமந்திரம், பா. 491
146 ,, பா. 363—372
147 ,, பா. 771
148 ,, பா. 770
149 ,, பா. 774
150 ,, பா. 775
151 ,, பா. 776
152 ஜி. வரதராஜன், திருமந்திரம்—3, பக். 192—200
153 திருமந்திரம், பா. 225
154 ஜி. வரதராஜன், திருமந்திரம்—3, உரை,
155 திருமந்திரம், பா. 2133
156 ,, பா. 2122
157 ,, பா. 2126
158 ,, பா. 1941
159 ,, பா. 1955
160 ,, பா. 263
161 ,, பா. 515
162 ,, பா. 519
163 ,, பா. 519
164 ,, பா. 518
165 குறள், 39
166 திருமந்திரம், பா. 655
167 ,, பா. 656
168 பட்டினத்தார் பாடல்கள், திருவேகம்ப மாலை, பா. 1
169 திருமந்திரம், பா. 1616
170 திருவாசகம், பா. 257
171 திருமந்திரம், பா. 1691
172 ,, பா. 1624
173 திருநாவுக்கரசர் தேவாரம், பா. 1
174 திருமந்திரம், பா. 1624
175 திருவருட்பா, பெறாப்பேறு, பா. 6
176 ,, அனுபவ மாலை, 71
177 ,, திருப்பள்ளியெழுச்சி, 3
178 ,, சுத்த சிவநிலை, பா. 41
179 பத்திரகிரியார், மெய்ஞ்ஞானப் புலம்பல், பா. 2
180 மே. கு. நூ., பா 207
181 மே. கு. நூ.

182 பீர்முகம்மது, ஞானரத்ன குறவஞ்சி, கண்ணிகள் 55—58
183 திருமந்திரம், பா. 1625
184 ,, பா. 1627
185 திருவாசகம், பா. 6
186 திருமந்திரம், பா. 1627
187 ,, பா. 1630
188 ,, பா. 1631, 1632, 1639
189 மீ. ப. சோமு, சித்தர் இலக்கியம், ப. 150
190 திருமந்திரம், பா. 1648, 1650, 1652
191 ,, பா. 1662
192 ,, பா. 1663
193 திருவாசகம், பா. 344
194 காமம் முதலான ஆறு பகைகளையும் கட்டியதற்கு அடையாளமாகக் காதில் ஆறு குண்டுகளைக் கோத்து அணியும் காதணி 'ஆறுகட்டி' எனப்படும்.
195 திருமந்திரம், பா. 1664
196 ,, பா. 1667
197 ,, பா. 1581
198 ,, பா. 1584
199 காஞ்சி பரமாசார்ய சுவாமிகள், தினமலர் நாளிதழ், வாரமலர், செப். 23, 1990, இணைப்பு.
200 பெரிய புராணம், தடுத்தாட்கொண்ட புராணம், பா. 65
201 திருமந்திரம், பா. 2636
202 ஜகத்குரு ஜெயேந்திர சரசுவதி சங்கராசார்யர், அருள் வாக்கு—3, ப. 229
203 திருமந்திரம், பா. 1688
204 ,, பா. 2299
205 ஜி. வரதராஜன், திருமந்திரம்—3, உரை, ப. 282
206 திருமந்திரம், பா. 2632
207 ,, பா. 509
208 ,, பா. 1699
209 திருவாசகம், பா. 645
210 திருமந்திரம், பா. 1669
211 ,, பா. 1668
212 ,, பா. 1574
213 ,, பா. 1674
214 ,, பா. 2659

215 திருமந்திரம், பா. 1674
216 ,, பா. 2840
217 பட்டினத்தார், அருட்புலம்பல், பா. 35
218 திருமந்திரம், பா. 2054
219 பட்டினத்தார், பொது, பா. 85
220 திருமந்திரம், பா. 242
221 ,, பா. 240
222 ,, பா. 1658
223 ,, பா. 1680 — 1689
224 ,, பா. 2615
225 ,, பா. 1680
226 ,, பா. 1682
227 ,, பா. 200
228 ,, பா. 2103
229 ,, பா. 2140
230 ,, பா. 2632
231 ,, பா. 1558
232 ,, பா. 1560
233 ,, பா. 1560
234 ,, பா. 1420
235 ,, பா. 1421
236 ,, பா. 1423
237 ,, பா. 1424
238 ,, பா. 1422, 1426
239 ,, பா. 1427
240 ,, பா. 1429
241 ,, பா. 1436
242 ,, பா. 1440
243 ,, பா. 1441
244 ஜி. வரதராஜன், திருமந்திரம்—2, ப. 253, உரை
245 திருமந்திரம் பா. 1445
246 ,, பா. 1451
247 ,, பா. 1456
248 ,, பா. 1457
249 ,, பா. 1458
250 ,, பா. 1461
251 அரு. இராமநாதன், சித்தர் ஞானக் கோவை, அழுகணிச் சித்தர் பாடல், 167

252 திருமந்திரம், பா. 1467
253 ,, பா. 1471
254 திருவாசகம், பா. 1467
255 திருமந்திரம், பா. 1473
256 ,, பா. 1474
257 ,, பா. 1476
258 ஜி. வரதராஜன், திருமந்திரம்—2, உரை, ப. 268
259 பட்டினத்தார் பாடல், பொது 110
260 அரு இராமநாதன், சித்தர் ஞானக் கோவை, அகப்பேய்ச் சித்தர் பாடல், பா. 25, 26
261 மே. கு. நா,, குதம்பைச் சித்தர், பா. 15
262 ,, சட்டைமுனி, பா. 58
263 ,, சிவவாக்கியர், பா. 427
264 திருமந்திரம், பா. 1477
265 ,, பா. 1478
266 ,, பா. 1479
267 ,, பா. 1480
268 ,, பா. 1482
269 திருவருட்பா, பா. 4086
270 திருமந்திரம், பா. 1489, 1491, 1493
271 திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம், தடுத்தாட்கொண்ட புராணம், பா. 70
272 திருமந்திரம் பா. 1500, 1496, 1499
273 ,, பா. 1502
274 ,, பா. 1503
275 ,, பா. 1506
276 திருநாவுக்கரசர் புராணம், பா. 1, உரை, ப. 244
277 ஜி. வரதராஜன், திருமந்திரம்—2,
278 பெ. திருஞானசம்பந்தன், காசுமீர சைவம், ப.40
279 திருமந்திரம் பா. 1509
280 ,, பா. 1510
281 ,, பா 1514
282 ,, பா. 1517
283 ,, பா, 1519
284 ,, பா. 1523, 1526
285 ,, பா. 1529
286 ,, பா. 2370
287 ,, பா. 2372

288 ஜி. வரதராஜன், திருமந்திரம்—3, உரை, ப. 318
289
290 திருமந்திரம் பா. 2375
291 ,, பா. 2376
292 ,, பா. 2377
293 ஜி. வரதராஜன், திருமந்திரம்—3, உரை,
294
295
296
297 திருமந்திரம், பா. 1512
298
299 மா. இராசமாணிக்கம், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, ப. 58
300
301 புறம். 1—6, 55, 56, 166, 198.
கலி. 1, 2, 38, 81, 83, 100, 101, 103, 104
ஐங். 1. அகம். 181. பரிபாடல் 8, 9.
திருமுருகாற்றுப்படை, அடிகள் 153—154; 256
சிறுபாணாற்றுப்படை, அடிகள் 96—97
302 மணி. 27/87
303 குறள், 173
304 திருவுந்தியார்.
305 திருமந்திரம், பா. 283
306 ,, பா. 2807
307 ,, பா. 2209
308 பரஞ்சோதி முனிவர், திருவிளையாடற் புராணம். ப. 93
309 திருமந்திரம். பா. 2774
310 பின்னிணைப்பில் விளக்கப்படம் காண்க
311 திருமந்திரம் பா. 74
312 ,, பா. 2975
313 பெரியபுராணம், ஆனாய நாயனார் புராணம், பா. 40, 41
314 திருமந்திரம், பா. 705, 706, 944, 1103, 1612, 1631, 1892, 2262, 2525
315 ,, பா 1627, 2313, 2318
316 ,, பா. 2558
317 ,, பா. 2561, 2562, 2563, 2565
3 8 திருநாவுக்கரசர் தேவாரம், பாடல் 2, ப. 1502
319 அரு. இராமநாதன், சித்தர் ஞானக் கோவை, பாடல் 30

320 திருமந்திரம், பா. 159
321 ,, பா. 725
322 ,, பா. 719
323 ,, பா. 724—727
324 அரு. இராமநாதன், சித்தர் ஞானக் கோவை, கொங்கணர், பா. 24
325 மே. கு. நா., சிவவாக்கியர், பா. 91
326 திருமந்திரம், பா. 2127
327 ,, பா. 1155
328 ,, பா. 1040, 2603, 2707, 1623
329 ,, பா. 950
330 மீ. ப. சோமு, சித்தர் இலக்கியம், (மேற்கோள்), ப. 77
331 திருமந்திரம், பா. 1038
332 அரு. இராமநாதன், சித்தர் ஞானக் கோவை, பாம்பாட்டிச் சித்தர், பா. 127
333 திருமந்திரம், பா. 2604
334 திருவாசகம், திருவுந்தியார், 23
335 திருமந்திரம், பா. 778, 785
336 ,, பா. 1823
337 ,, பா. 1754
338 ,, பா. 20
339 ,, பா. 402
340 ,, பா. 471, 661, 683
341 சிவபுராணம், பா. 1/34
342 திருமந்திரம், பா. 589, 1201, 1246, 1542, 2421, 2425
343 ,, பா. 1929
344 ,, பா. 901
345 ,, பா. 884
346 ,, பா. 939
347 ,, பா. 606
348 ,, பா. 609, 610, 708, 721, 1070, 1408, 1468, 2157, 2317
349 ,, பா. 637, 771, 905, 1134, 2374, 2389, 2438
350 ,, பா. 2747
351 ஜி. வரதராஜன், திருமந்திரம்—3, உரை, ப. 518
352 திருமந்திரம், பா. 444
353 ,, பா. 1147

354 திருமந்திரம், பா. 1172
355 ,, பா. 271
356 ,, பா. 1276
357 ,, பா. 1117
358 ,, பா. 2842
359 ,, பா. 2728
360 ,, பா. 115
361 ,, பா. 2011
362 திருநாவுக்கரசர் தேவாரம், பா. 2, ப. 436.
363 திருமந்திரம், பா. 95
364 ,, பா. 2008
365 ,, பா. 2722
366 ,, பா. 2797
367 ,, பா. 1740
368 ,, பா. 1876
369 ,, பா. 2366
370 ,, பா. 2424
371 திருநாவுக்கரசர் தேவாரம், பாடல் 10, ப. 1487
372 திருமந்திரம், பா. 2090
373 ,, பா. 2348
374 திருவாசகம், பா. 32
375 திருமந்திரம், பா. 1610
376 ,, பா. 1895
377 சிவபுராணம், அடி 46
378 திருமந்திரம், பா. 2437, 2438, 2440
379 ,, பா. 2403
380 ஜி. வரதராஜன், திருமந்திரம்— 3, உரை, ப. 335
381 மே. கு, நூ., ப. 335
382 சிவஞான சித்தியார், சுபக்கம், ப. 513

இயல் — ஆறு

முடிவுரை

"திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனைகள்" என்னும் தலைப்பில் பல கோணங்களில் இந்த ஆய்வு நிகழ்த்தப் பெற்றிருக்கிறது. பல்வேறு நூல்களோடு ஒத்தும் உறழ்ந்தும் ஆராய்ந்ததன் விளைவாக ஆய்வாளர் கண்ட முடிபுகள் இந்த இயலில் தொகுத்துத் தரப்படுகின்றன.

திருமந்திரம் இம்மை வாழ்விற்கு இன்பம் தருவதோடு முத்திப் பேரின்பத்தையும் வழங்கும் நன்னூல். [1]

சுந்தரர், நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார் முதலானோரால் பாடப்பெற்ற திருமூலர் திருவாவடுதுறையில் திருமந்திர நூலை இயற்றினார். [2]

திருமந்திரம் ஒன்றே திருமூலர் இயற்றியது; அவர் பெயரால் வழங்கும் ஏனையவை அவர் இயற்றினவல்ல; திருமந்திரத்திலும் அவர் மூவாயிரம் பாடல்களே பாடினார். [3]

ஒன்பது ஆகமங்களின் செறிவாகத் திகழ்வது திருமந்திரம். [4]

திருமூலரின் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதி அல்லது ஆறாம் நூற்றாண்டின் தொடக்கம். [5]

தமிழ்ச் சித்தர்களுள் தலையாயவர் திருமூலர்; இவரைத் 'தவராச யோகி' என்று பாராட்டுகிறார் தாயுமானவர். [6]

திருமூலர் அட்டாங்கயோகம் உள்ளிட்ட பல்வேறு யோக நெறிகளை அறுவுறித்தியுள்ளார்; அட்டமாசித்திகளை அடையும் முறைகளையும் அவர் தெளிவுறுத்தியுள்ளார். [7]

மக்கள் அறநெறிகளைப் பின்பற்றி இறையுணர்வோடு உலகிற்குப் பயன்படும் சிறந்த சமுதாய வாழ்வினை மேற்கொள்ள

வேண்டும் என்று திருமூலர் கருதினார்; அதற்கேற்ப அவர்தம் சிந்தனைகள் அமைந்துள்ளன.

திருமந்திரம் 'அன்பே சிவம்' என்பதை அறிவுறுத்தி, மனித ஒற்றுமையையும், மன ஒருமைப்பாட்டையும் வளர்க்கிறது.[8]

ஒழுக்கம், இன்சொல், பொய்கூறாமை, கொல்லாமை, புலால் மறுத்தல், கள்ளும் காமமும் ஒழித்தல், களவை நீக்கல் ஆகிய அறங்களைத் திருமந்திரம் வலியுறுத்துகிறது; ஈதலின் சிறப்பினைச் சுட்டுவதோடு, அதன் பல்வேறு நிலைகளையும் அது எடுத்தியம்புகிறது.[9]

சாதிகளைச் சாடும் திருமந்திரம் மக்கள் சமுதாயத்தில் உயர்வு தாழ்வுகளைச் சுட்டவில்லை; தீண்டாமையை மிகவும் கொடியதெனக் கடிந்து பேசுகிறது. திருமந்திரத்தில் மத வேறுபாடுகளுக்குச் சிறிதும் இடமில்லை; சமயப் பொதுமையை விரும்பும் பொது நூல் அது; சடங்குகளின் நன்மைகளையும் தீமைகளையும் திருமந்திரம் தெளிய உரைக்கிறது.[10]

உலகம் நிலையில்லாதது; உடல் நிலையில்லாதது; செல்வம் நிலையில்லாதது; உயிர் ஒன்றே அழிவற்றது. எனவே, யோக சாதனையில் ஈடுபட்டுச் சிவசொருபத்தில் சொல்லிறந்து வாழ்தல் வேண்டும்.[11]

நல்வினை செய்பவர் சொர்க்கம் அடைவர்; தீவினை இயற்றுபவர் நரகம் செல்வர்.[12]

சோதிடம், ஜாதகம், வாரசூலம் முதலானவை பற்றியும் திருமந்திரம் பேசுகிறது; அரசன் மேற்கொள்ள வேண்டிய அறநெறிகள், அவன் போற்ற வேண்டிய மக்கள், ஒறுக்க வேண்டிய குற்றவாளிகள் பற்றியும் அது நன்கு எடுத்துரைக்கிறது.[13]

திருமந்திரம் பல்வேறு புராணக் கதைகளை அடிப்படையாக வைத்துப் பல அரிய தத்துவங்களை உணர்த்துவதில் வெற்றி பெற்றுள்ளது. சிவன், தேவர், அசுரர், முனிவர், மக்கள் பற்றிய புராணக் குறிப்புகளைத் திருமந்திரம் கருத்து விளக்கத்திற்குப் பயன்படுத்திக் கொண்டுள்ளது.

உலகத்தோற்றம், ஐந்தொழில்கள், சிவன் வடிவம், சிவன் அணிகலன்கள், சிவன் செயல்கள் ஆகிய ஐந்தனையும் தேவி பாகவதம் முதலானவற்றின் அடிப்படையில் ஒப்பிட்டு நோக்கும்போது பல தத்துவக் கருத்துகள் வெளிப்படச்

காண்கிறோம். சான்றாக, 'கண்டம் கறுத்த'தாகிய புராண நிகழ்ச்சியைச் சொல்லலாம்: ''விந்து ஜெயம் பெற்ற சாதகனுக்கு, விந்து மாற்றமடைந்து, கண்டத்தைக் தாண்டிய பின்னரே ஒளி ஏற்படமுடியும்; அது சகஸ்ரதளத்தை மோதி அமுதமாகப் பின் மாற்றமடையும். அதனைக் கேசரியோகத்தில் நாவை மடித்து உண்பவர்கள் நீண்ட ஆயுளைப் பெறுவதோடு ஒளி ஒலிகளைப் பெற்று வீடுபேறும் அடைவர்'' என்பது இதன் உட்கருத்து.[14] இவ்வாறே இருபதுக்கு மேற்பட்ட புராணக் கதைகள் தத்துவ விளக்கங்களாகத் திருமந்திரத்தில் இடம் பெற்றுள்ளன; மேலும், தேவர், அசுரர் குறித்த செய்திகளும் காணப்பெறுகின்றன.[15]

விலங்குகள், பறவைகள், தாவரங்கள், உலோகங்கள், மணிகள் முதலானவற்றின் தொடர்பான விளக்கங்களின்மூலம் பல சிந்தனைகளைத் திருமூலர் தந்திருக்கிறார். உவமைகளாகவும், உருவகங்களாகவும், குறியீடுகளாகவும் அமைந்துள்ள இவை மனிதனை அறியாமை வாழ்விலிருந்து மீட்டு அறிவுநெறியைக் காட்டி உய்தியடையச் செய்ய வல்லனவாகும். ஒன்பதாம் தந்திரத்திலுள்ள 'சூன்ய சம்பாஷணை'யிலும், ஏனைய பகுதி களிலும் திருமூலர் இத்தகைய அரிய கருத்துகளை வழங்கியுள்ளார்.

கன்றுபிரி காராவினைப் போல் கதறிக் கதறியே சீவன் சிவனை அடைதல் வேண்டும்;[16] உலகப்பற்றுடைய ஆன்மாக்கள் கொல்லையில் மேயும் பசுக்களைப் போன்றவை; பாலில் நெய் போலவும், நீரில் பால் போலவும் சீவனின் சிவன் கலந்துள்ளான்; சோராமல் இதனைக் கண்டால் சிவானந்த சுகம் சீவனுக்குக் கிட்டும்.[17]

ஆட்டின் மடியிலன்றி அதரில் பால் கிடைப்பதில்லை; அது போல் குருவின் அருளானது இன்றேல் சீவன் சிவானந்தத்தை அடையமுடியாது.[18]

மனம், நாய் போன்றது; அதனை அலையாதவாறு கட்டுப் படுத்த வேண்டும்; சமயவாதிகள் வாதம் செய்வது நாய் கதிரவனைப் பார்த்துக் குரைப்பது போன்றது.[19] போலி ஞானி கள் நிணத்திற்காகச் சுற்றிவரும் கழுவடிநாய்கள் போல்வர்; சிவஞானிகளோ வீடுபேறு ஒன்றனையே நோக்கமாகக் கொண்ட வர்கள்.[20]

மெய்யைவிட்டு அகண்டத்தைப் பற்றியிருக்கும் சாதகர்க்குப் பிராணனாகிய குதிரை வசப்பட்டு நிற்கும்.[21]

ஐம்பூதங்கள், தன்மாத்திரைகள், ஐம்புலன்கள் ஆகிய யானைகளை அடக்குபவனே இறையின்பம் பெறக்கூடும்;[22] 'மரத்தை மறைத்தது மாமத யானை' என்னும் பாடலில், சீவன் குருவினது அருளால், ஆன்ம ஒளியை உணரும் போது, பஞ்சபூதங்களும் பரத்தில் ஒடுங்கிவிடும் என்னும் கருத்து விளக்கப் படுகிறது.[23]

ஞானசாதனையில் தருக்கம் செய்யாது சரியை, கிரியை, யோகம் முதலான நெறியில் நிற்பவர் சிவனாகிய முயலைக் கண்டு உய்தியடைவர்;[24] சிங்கங்களின் பல், நகம் ஆகியவற்றை வெட்டுவது போலப் புலன்களைக் கட்டுப்படுத்தி அடக்க வேண்டும்.[25] தசநாடிகள் புலிகள் போன்றவை; காமவாயு நரியை ஒத்தது; இவற்றிடம் கவனம் வேண்டும்[26]

சீவன்களாகிய பறவைகள் தங்கும் காடுகளே உடல்கள் என்கிறது திருமந்திரம்;[27] சிற்றின்பத்தில் விந்து வீணாதலைத் திருமந்திரம் "கூத்தி வளர்த்ததோர் கோழிப்புள்" என்று இழித்துப் பேசுகிறது.[28]

உணவு வேண்டும்போது பனைமரக்கூட்டைவிட்டு வெளியே வருவதும், இரை கிடைத்தபின்பு அதிற்சென்று அடைவதும் ஆகவிருக்கும் பருந்துபோல், இல்லறக் கடமையின்போது உலக நினைவுடனும், முடிந்தபிறகு சிவ சிந்தையுடனும் சீவன் விளங்குமானால், அச்சீவனைப் பாசம் அணுகாது.[29]

ஆன்மாவாகிய பெடைவண்டுக்கு ஒளிகாட்டும் ஆண்வண்டு சிவன் என்கிறது திருமந்திரம்.[30]

ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் கொக்குப் போல், பிராணாயாமம் செய்யும் சீவன் இறையொளி முழுமையாகக் கிடைக்கும்வரை பொறுத்திருக்க வேண்டும்.[31] சீவனிடமுள்ள வினைகளைச் சிவன் பிரிப்பது என்பது அன்னம் நீரிலிருந்து பாலினைப் பிரிப்பது போன்றது.[32]

சுக்கிலம் விளைநிலம்; இடைகலை, பிங்கலை ஆகியன கரைகள்; பிராணாயாமம் நீர்; இவற்றின் இழப்பால் சிவப்பயிர் தழைக்கும்; சிவப்பயிர் தழைக்க ஞான உழவு வேண்டும்; அடயோகம் என்னும் களருழவு சிறிதும் பயன்படாது.[33] அத்திப் பழமாகிய சுரோணிதமும், அறைக்கீரை வித்தாகிய சுக்கிலமும் தாயின் வயிறாகிய உலையில் சேர, உயிர்க் கருவாகிய கூழ் (பயிர்) வளர்கிறது.[34]

ஆன்மாவாகிய நென்முளை மீது மும்மலங்களாகிய உமியும் தவிடும் சூழ்ந்துள்ளன; அவற்றை நீக்கவேண்டும்.[35]

உலகவாழ்வு, காஞ்சிரம்பழம் போன்றது; அதனைக் கசப்பானதென உணர்ந்து ஒதுக்கித் தள்ளுதல் வேண்டும்; அவ்வாறு ஒதுக்கி உலக நடப்புகளில் பற்றற்று விளங்கும் மக்கள் புளியம்பழமும் தோடும் போல விளங்குவர்.[36] உலகபோகம் எட்டியும் வேம்பும் போன்றது; சீவன் அவற்றை விலக்கி வாழை யும் கற்கண்டும் அனைய சிவபோகத்தை நாடுதல் வேண்டும்.[37]

இரும்பு பொன்னானால் மீண்டும் இரும்பாகாது; அது போலக் குருவருளால் சிவத்துடன் இணைந்த சீவன் மீண்டும் பிறவி அடைவதில்லை.[38] சூரியகாந்தக் கல்வழியே சூரியஒளி பாய்ந்தால் அதனைச் சூழ்ந்த பஞ்சு எரிந்து போகும்; அதுபோலச் சீவன் குருவருளினால் சூழ்ந்துநிற்கும் பாசத்தைச் சுட்டெரித்து ஆன்மலாபம் பெறும்.[39]

உலகமக்களின் ஆன்மா இறையுணர்வில் திளைத்துப் பிறவி நீக்கம் பெறல்வேண்டும் என்பதே திருமந்திரத்தின் உயர்நோக்கம். எனவே, வாழ்வியல் நூலான திருமந்திரம் மனிதனை மெல்ல மெல்ல ஆன்மீக வாழ்விற்கு அழைத்துச் சென்று, ஒளிகாட்டி, அவனைச் சிவத்தோடு கலத்தற்கு உரியவனாக்க முயல்கிறது.

இல்லறத்தில் ஈடுபட்டுத் தன்னையுணராது உலகாயதமாக வாழ்ந்து பொழுதைக் கழிப்பவன் இல்லறத்தான்; இவன் தன்னைச் சூழ்ந்த சுற்றத்தாரோடு இகசுகம் அனுபவித்து, நீர்க் குமிழி போன்று தோன்றிமறையும் வாழ்க்கை நடத்துகிறான்; இத்தகைய இல்லறத்தான் யாக்கை நிலையாமையை உணர்ந்து வீடுபேறு பெற முயலவேண்டும் என்பதே திருமந்திரத்தின் கருத்து.[40]

உலகம் சிவசக்தியின் விளையாட்டால் உருவானது; சிவ வழிபாடும், சக்தி வழிபாடும் மனிதனுக்குத் தேவை. இதனைத் திருமந்திரம் கூறுகிறது. இது புறவழிபாடு ஆகும். இகவாழ்வில் மனிதன் மகிழ்ச்சியடையத் தேவையான சில வழிகளையும் திருமந்திரம் தெரிவிக்கிறது.

பொருள் மனிதனுக்கு இகவாழ்வில் இன்றியமையாத ஒன்று; திருவம்பலச் சக்கரம் முறைப்படி எழுதி வழிபட்டால் இல்லறத் தானுக்குப் பொருட்செல்வம் கிடைப்பது ஒருபுறமிருக்க, முத்திக்கும் வழிகிட்டும். இதனை வழிபடும் முறையைத்

திருமந்திரம் இனிது விளக்குகிறது. ஞானிகள் மேற்கொள்ளும் வழிபாடு உமாகாந்தன் வழிபாடு எனப்படுகிறது. [41]

சக்தி, தன்னை வணங்குபவர்களுக்கு வீடுபேறு அளிப்பாள்; இராஜேசுவரி வழிபாடு, வயிரவி வழிபாடு, சாம்பவி வழிபாடு, புவனாபதி வழிபாடு, நவாக்கரி வழிபாடு எனச் சக்தி வழிபாடு பலவேறுபட்ட சக்கரங்களால் ஆய வழிபாடுகளாகத் திருமந்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. இவற்றை முறையாக வழிபாடு செய்வதனால் சக்தியின் தரிசனம் கிட்டும்; வாழ்வியற் பயன்கள் கிடைக்கும்; பகையேதும் நெருங்காது; ஒளிமண்டலம் செல்லச் சாதகர்க்கு வாய்ப்பு உண்டாகும்; வினைகள் நீங்கும்; புகழ் பெருகும்; பிறவி அறும். [42]

இல்லறத்திலிருந்து கடமை செய்பவன் ஆற்றவேண்டிய பணிகளைத் திருமந்திரம் வகுத்துக் கூறுகிறது. விருந்தோம்புதல், துறந்தார்க்குப் பொருளீந்து காத்தல், சான்றோர்க்குப் பணி விடைகள் செய்தல், நற்செயல்களையே புரிதல், தீயனவற்றை விலக்கல் ஆகியன இவற்றில் குறிப்பிடத்தக்கன. [43]

பரத்தையர் தொடர்பு, பிறன்மனை நயத்தல், பொருள் மீது பற்று ஆகியனவற்றை இல்லறத்தான் முழுவதுமாக விலக்குதல் வேண்டும். உடலோம்பல் மூலமாக உயிரை — ஆன்மாவைப் போற்றுதல் இன்றியமையாதது. [44]

மனித உடலில் கரு உருவாகும் அறிவியல் நுணுக்கத்தைத் திருமந்திரம் ஆய்ந்து சொல்கிறது. இருதிங்கள் ஆணின் உடலில் தங்கிப் பின்னரே கரு பெண்ணின் உடலில் செல்கிறது; அப்போது ஆன்மாவுக்குரிய இருபத்துநான்கு தத்துவங்களும் பொருந்து கின்றன; தசவாயுக்கள் உடலை இயக்குகின்றன; விலக்க வேண்டியனவாகிய விகாரங்கள் எட்டும் சேர்கின்றன; நவத்துவாரங்கள் உண்டாகின்றன. [45]

விந்து கருவினை எதிர்த்தால் குழந்தை தாமதகுணம் பெறும்; சுரோணிதம் எதிர்த்து வந்தால் சத்துவகுணம் பெறும்; இரண்டும் சமமாகக் கலந்தால் இராசதகுணம் அடையும்; அதன் ஆயுளும் அவற்றின் வேகத்திற்கேற்ப அமையும். [46]

விந்தினைச் செலுத்தும் ஆணின் வாயு குறைந்தால் குழந்தை குள்ளமாகும்; வாயு மெலிந்தால் முடமாகும்; வாயு தடைப் படின் கூனாகும்; இவ்வாயு பெண்ணிடம் இல்லை. [47]

குழந்தை பெறும்போது தாயின் உடல் தூய்மையுடன் இருத்தல் வேண்டும்; மலம் மிகின் குழந்தை மந்தபுத்தி உடையதாகும்; நீர்மிகின் குழந்தை ஊமையாகும்; மலமும் நீரும் மிகின் குருடாகும்.[48]

போக காலத்தில் ஆணிடம் பிராணன் சூரியகலையில் இயங்கினால் ஆண்குழந்தை பிறக்கும்; சந்திரகலையில் இயங்கினால் பெண்குழந்தை பிறக்கும்.[49]

சுக்கிலத்தைச் செலுத்தும் பிராணவாயுவை அபானன் எதிர்த்தால் இரட்டைக் குழந்தை பிறக்கும்; சூரிய சந்திர கலைகளில் பிராணன் ஒத்தியங்கினால் அலி பிறக்கும்; பிராணவாயு புணரும் ஆண்— பெண் ஆகிய இருவரிடமும் ஒத்து இயங்கினால் அழகிய குழந்தை பிறக்கும்; ஆயின், இருவரிடமும் அது தடுமாறினால் கரு உண்டாவது கெடும்; பெண் மலடாகும்.[50]

சூக்குமமான ஆன்மா தாய் தந்தையைக் காரணமாகக் கொண்டு தூல உடம்பினைப் பெறுகிறது. மனித உடலில் உள்ள கூறுகள் அனைத்தையும் திருமந்திரம் ஆராய்கிறது.[51]

இருமல், சோகை, ஈளை, வெப்பு, உரோணி, கழலை, சிரங்கு, குட்டம், கால்வாதம், கூன், கண்வலி முதலான நோய்கள் குறித்தும், இடி, மின்னல், கோயில் திருட்டு, தவறான வழிபாடு முதலியன குறித்தும் திருமந்திரம் முறைப்படி ஆராய்ந்து கூறுகிறது.[52]

தாமே துறவியாதலால், திருமூலர் துறவறத்தின் மேன்மையைத் தம் நூலில் இனிது விளக்கிக் கூறியுள்ளார். உள்ளத் துறவே உண்மைத் துறவு; உயரிய துறவு. சிவனே ஒரு துறவி.[53]

அட்டாங்க யோகத்தால் முக்தி கைகூடும்; துறவியானவர் எவருக்கும் அஞ்சுவதில்லை; அவன் ஆன்மா சிவானந்தத்தில் திளைத்திருக்கும். இதற்குத் தவ வைராக்கியம் வேண்டும்; சுற்றுப்புறச் சூழல்களால் சிந்தை தடுமாறாதிருக்க வேண்டும்; தவத்தின் பயன் முக்தியடைதலே.[54]

தவவேடம், திருநீறு, குருவருள் ஆகிய துறவியின் ஒழுகலாறுகள் குறித்துத் திருமந்திரம் விரித்துரைக்கிறது.[55] குருவின் திருவடி தீட்சை பெற்ற சீடன் சிவகதி பெறுவான்; போலித் துறவிகள் தண்டனைக்குரியர்; அவர்களையும் அவர்களைப் பின்பற்றும் சீடர்களையும் திருமந்திரம் குருடுகள் என்கிறது.[56]

இறைவனை அடைதற்குரிய வழிமுறைகளையும் பதினெட்டு முறையில் பாகுபடுத்தி விரிவாகப் பேசுகிறது திருமந்திரம்; இவற்றுள் ஏதேனும் ஒரு நெறியைப் பின்பற்றி மனிதன் ஈடேற்றம் அடையமுடியும். [57]

வீடுபேறு என்பது மனிதன் அல்லது ஆன்மா அடைய வேண்டிய இறுதிநிலை; உயரியநிலை; பேரின்பநிலை. தத்துவங் களிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்ட ஆன்மாவிற்கே இந்த வீடுபேறு கிட்டும்; இந்தச் சிறப்பும் தகுதியும் மனிதனுக்கு மட்டுமே உண்டு. [58]

உடம்பு, சிவாலயம் என்று கருதப்படல் வேண்டும்; எனவே, உடம்பினை ஓம்பி வழிபட்டாலன்றி ஆன்மா சிவகதி அடைய இயலாது. உடலைப் போற்றினால் வித்துநாதமாக விளங்கும் ஈசனை ஒலியும் ஒளியுமாக உடலிற் கண்டு மகிழலாம். [59]

சீவனும் சிவனும் பேதமற்ற நிலையில் 'நீ அது ஆகிறாய்' என்னும் குருபோதனைக்கேற்பச் சீவன் இறைத்தன்மை பெற்றுச் சிவனோடு ஒன்றாகிறது. இதுவே 'சீவன் சிவனாதல்' என்பது. இதுவே ஆன்மாவின் இறுதிப் பேறு. [60]

ஆய்வுக் களங்கள்

இந்த ஆய்வின் பின்னணியில் மேலும் பல ஆய்வுகள் நிகழ்த்த வாய்ப்புகள் உள்ளன. திருமந்திரம் ஒரு கருத்துக் களஞ்சியம்; மெய்யுணர்வுக் கருவறை; சித்தாந்த மணிக்குவியல்; தத்துவக் கடல். இதில் மூழ்குவோர் அரிய செல்வங்களைச் சுமந்து வருதல் ஒருதலை.

1. திருமந்திரம் உணர்த்தும் வீடுபேற்று நெறிகள்
2. திருமந்திரம் காட்டும் துறவு
3. திருமந்திரத்தில் உவமைகளும் உருவகங்களும்
4. திருமந்திர வழிபாட்டு நெறிகள்
5. திருமந்திரம் உணர்த்தும் இறை, உயிர், தளை

என்னும் ஆய்வுக் களங்கள் இனி ஆய்வாளர்கள் கருத்தில் கொள்ளத் தக்கன; இவற்றிற்கு இந்த ஆய்வு ஒரு முன்னோடி யாக அமையலாம்.

மக்களினம் உயர்நிலை அடையவேண்டும் என்னும் சீரிய கருத்தில் திருமந்திரம் வாழ்வியல் சிந்தனைகளை வாரி வழங்கி யிருக்கிறது; மனிதனின் மாண்புறு வாழ்க்கைக்குத் திருமந்திரம் ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது என்று முடிவாகச் சொல்லலாம்.

அடிக்குறிப்புகள்

1	இந்த ஆய்வேடு,	இயல் 1,	பக். 21
2	மே. கு. நூ.,	இயல் 1,	பக். 22—24
3	,,	,,	பக். 24—26
4	,,	,,	பக். 26—30
5	,,	,,	பக். 34—38
6	,,	,,	பக். 43
7	,,	,,	பக். 45—47
8	,,	இயல் 2,	பக். 66
9	,,	,,	பக். 67—76
10	,,	,,	பக். 77—86
11	,,	,,	பக். 86—93
12	,,	,,	பக். 93—95
13	,,	,,	பக். 95—97
14	,,	இயல் 3,	பக். 107—129
15	,,	,,	பக். 130—140
16	,,	இயல் 4,	பக். 147—152
17	,,	,,	பக். 152—153
18	,,	,,	பக். 155—156
19	,,	,,	பக். 156
20	,,	,,	பக். 157—158
21	,,	,,	பக். 158
22	,,	,,	பக். 160—161
23	,,	,,	பக். 162
24	,,	,,	பக். 163
25	,,	,,	பக். 164
26	,,	,,	பக். 164—165
27	,,	,,	பக். 172
28	,,	,,	பக். 173
29	,,	,,	பக். 174
30	,,	,,	பக். 176
31	,,	,,	பக். 177—178
32	,,	,,	பக். 183
33	,,	,,	பக். 186—187
34	,,	,,	பக். 187—188
35	,,	,,	பக். 191
36	,,	,,	பக். 195

37 இந்த ஆய்வோடு, இயல்4, பக். 196
38 ,, ,, பக். 202
39 ,, ,, பக். 208—209
40 ,, இயல் 5, பக். 223—227
41 ,, ,, பக். 228—230
42 ,, ,, பக். 232—243
43 ,, ,, பக். 243—245
44 ,, ,, பக். 245—248
45 ,, ,, பக். 248—250
46 ,, ,, பக். 250—251
47 ,, ,, பக். 251
48 ,, ,, பக். 252
49 ,, ,, பக். 252
50 ,, ,, பக். 252
51 ,, ,, பக். 253
52 ,, ,, பக். 258
53 ,, ,, பக். 259—260
54 ,, ,, பக். 261—263
55 ,, ,, பக். 263—264
56 ,, ,, பக். 264—270
57 ,, ,, பக். 271—286
58 ,, ,, பக். 287
59 ,, ,, பக். 290—298
60 ,, ,, பக். 298—306

துணை நூற் பட்டியல்

முதன்மை நூல்கள்

வரதராஜன், ஜி., (உரை.) திருமூல நாயனார் அருளிய திருமந்திரமாலை எனப் பெயர் பெற்ற திருமந்திரம், மூன்று பாகங்கள், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1985. (ஆய்வேட்டின் அடிக்குறிப்பில் இந்நூற் பாடல் எண்களே குறிக்கப்பட்டுள்ளன).

இராமநாத பிள்ளை, ப. (பதி.), திருமூலநாயனார் அருளிச் செய்த திருமந்திரம் மூவாயிரம், இரண்டு பகுதிகள், துடிசைகிழார் அ. சிதம்பரனார் குறிப்புரையுடன், கழகம், சென்னை, 1974

.... திருமூலதேவ நாயனார் அருளிச் செய்த திருமந்திரமாலையாகிய திருமந்திரம், 4, 5, 6 தந்திரங்கள், தருமையாதீனம், 1984.

.... திருமூலர் திருமந்திரம், 4, 5, 6 தந்திரங்கள், ஸ்ரீபஞ்சாட்சர தீபம் என்னும் உரையுடன் திருவாவடுதுறை ஆதினம், 1990

குமரகுருபரன் பிள்ளை, டி. எம். (பதி.), திருமூல நாயனார் அருளிய திருமந்திரமாலை எனப் பெயர் பெற்ற திருமந்திரம், பத்தாம் திருமுறை, ஸ்ரீ குமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம், 1968

சுத்தானந்த பாரதியார், திருமந்திர விளக்கம், முதற்பகுதி, சன்மார்க்க விளக்கம், கழகம், சென்னை, 1973

பிற நூல்கள்

இலக்கண — இலக்கிய நூல்கள்

அகநானூறு, கழகம், சென்னை, 1968

ஐங்குறுநூறு, கழகம், சென்னை, 1966

கந்தபுராணம், சு. அ. இராமசாமிப்புலவர் (பதி.), கழகம், சென்னை, 1973

கம்பராமாயணம், வை. மு. கோ. பதிப்பு, சுந்தரகாண்டம், சென்னை, 1970

கம்பராமாயணம் யுத்த காண்டம், சென்னை, 1969

கலித்தொகை, கழகம், சென்னை, 1969

குற்றாலக் குறவஞ்சி, கழகம், சென்னை, 1971

சித்தர் பாடல்கள், அரு. இராமநாதன் (பதி.), பிரேமா பிரசுரம், சென்னை, 1989

சித்தர் பாடல்கள், த. கோவேந்தன் (பதி.), பூம்புகார் பதிப்பகம், சென்னை, 1987

சிலப்பதிகாரம், கழகம், சென்னை, 1969

சிவ புராணம், கார்த்திகேயன் (பதி.), வாசு பிரசுரம், சென்னை, 1966

தாயுமானவர் பாடல்கள், கழகம், சென்னை, 1966

திருக்குறள், பரிமேலழகர் உரை, சக்தி காரியாலயம், சென்னை, 1957

திருக்குறள், உரைக்கொத்து, திருப்பனந்தாள் வெளியீடு, ஸ்ரீவைகுண்டம், 1958

திருவாசகம், அகத்தியர் அருள்பணி மன்றம் வெளியீடு, அம்பா சமுத்திரம், 1992

திருவருட்பா, ஊரன் அடிகள் பதிப்பு, இராமலிங்கர் பணிமன்றம், சென்னை, 1981

திருவிளையாடல் புராணம், பரஞ்சோதி முனிவர் இயற்றியது, கழகம், சென்னை, 1928

தேவி பாகவதம், அரு. இராமநாதன் பதிப்பு, பிரேமா பிரசுரம், சென்னை, 1988

தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, கழகம், சென்னை, 1967

தொல்காப்பியம், பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, கழகம், சென்னை, 1960

தொல்காப்பியம், பொருளதிகாரம், பேராசிரியர் உரை, கழகம், சென்னை, 1972

நன்னூல், கழகம், சென்னை, 1972

நாலடியார், கழகம், சென்னை, 1968

பதிற்றுப்பத்து, ஔவை சு. துரைசாமி பிள்ளை உரை, கழகம், சென்னை, 1973

பத்துப்பாட்டு, கழகம், சென்னை, 1960

பரிபாடல், கழகம், சென்னை, 1963

பெரியபுராணம், யாழ்ப்பாணம் பொன்னம்பலம் பிள்ளை பதிப்பு, வித்தியாநுபால யந்திரசாலை, சாதாரண ஆண்டு

புலவர் புராணம், டி, எம். செந்தில்நாயகம் பிள்ளை, (பதி.), சென்னை, 1931

மணிமேகலை, கழகம், சென்னை, 1969

மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், கழகம், சென்னை, 1976

மூவர் தேவாரம், தலமுறை (அடங்கன்முறை), ஸ்ரீ காமகோடி ஆய்வு மையம், கும்பகோணம் ராஜன் அண்டு கோ பிரிண்டர்ஸ், சென்னை, 1988

வில்லிபுத்தூரார் பாரதம், ஆரணிய பருவம், வை. மு. கோ. பதிப்பு, சென்னை, 1973

ஸ்ரீபகவத் கீதை, சுவாமி சித்பவானந்தர் பதிப்பு, தபோவனப் பிரசுராலயம், திருப்பராய்த்துறை, 1964

நாராயணன், க., சித்தர் தத்துவம், ஸ்ரீ கோமதி அச்சகம், சென்னை, 1988

பரமசிவானந்தம், அ. மு., சமுதாயமும் பண்பாடும், தமிழ்க்கலைப் பதிப்பகம், சென்னை 1962

பரிசுத்த வேதாகமம், இந்திய வேதாகமச் சங்கம், பெங்களூர், 1962

பிரம்மஸ்ரீ கணபதி சுவாமிகள், ஊனுடம்பு ஆலயம், சித்த வித்யா லயம், உடையார்பாளையம் செந்தமிழ் அச்சகம், கோவை, 1988

மாணிக்கவாசகம், இரா., சித்தர்கள் சொன்னவை, அன்னை அபிராமி பதிப்பகம், சென்னை, 1985

மாணிக்கவாசகம், இரா., திருமந்திர ஆராய்ச்சி, அன்னை அபிராமி பதிப்பகம், சென்னை, 1982

மாணிக்கவாசகம், இரா., நம்நாட்டுச் சித்தர்கள், அன்னை அபிராமி பதிப்பகம், சென்னை, 1982

முல்லை முத்தையா, (பதி.) நீதி நூல்கள், பூம்புகார் பிரசுரம், சென்னை, 1977

வரதராஜன், ஜி., திருமந்திர நெறி, ஜெமினி அச்சகம், கும்ப கோணம், 1976

வெள்ளைவாரணன், க., பன்னிரு திருமுறை வரலாறு, பகுதி1, அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1962

வெள்ளைவாரணன், க., பன்னிரு திருமுறை வரலாறு, பகுதி 2, அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1962

ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதீச்வர ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராசாரிய ஸ்வாமிகள், தெய்வத்தின் குரல், 1, 2, 3, பகுதிகள், வானதி பதிப்பகம், 1989

கட்டுரை — திறனாய்வு நூல்கள்

இராமசாமிப் புலவர், சு. அ., திருவருட் கதைகள், கழகம், சென்னை, 1965.

கணேசன், பி. சி., தெய்வ சக்தியும் மனித முயற்சியும், வானதி பதிப்பகம், சென்னை, 1985

கந்தையா பிள்ளை, ந. சி., தமிழ் இந்தியா, கழகம், சென்னை, 1945

கலியாணசுந்தரனார், திரு. வி., பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை, சாது அச்சுக் கூடம், சென்னை, 1981

கோவிந்தன், பா., தமிழர் சமயம், சென்னை, 1967

சித்தலிங்கம், டி. பி., சைவசமயத் தோற்றமும் வளர்ச்சியும், குருகுலம் பிரிண்டர்ஸ், வேதாரண்யம், 1984

சுப்பிரமணிய பிள்ளை, கா., தமிழ் இலக்கிய வரலாறு, கழகம், சென்னை

செகதீசன், அ., தமிழ் இலக்கியத்தில் யோகம், மாருதி பிரஸ், சென்னை, 1987

செயப்பிரகாசு, நா., சிலப்பதிகாரம் காட்டும் சமுதாயம், வான்மழைப் பதிப்பகம், சென்னை, 1979

சோமு, மீ. ப., சித்தர் இலக்கியம், நான்கு பகுதிகள், அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், 1989

திருஞானசம்பந்தன், பெ., காசுமீர சைவம், சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு, சென்னை

அகராதி — களஞ்சியம் — மலர்கள் — இதழ்கள்

அபிதான சிந்தாமணி, ஆ. சிங்காரவேலு முதலியார் தொகுத்துப் பதிப்பித்தது, ஏஷியன் எடுகேஷனல் சர்விசஸ், சென்னை, 1988

கலைக்களஞ்சியம், தொகுதி ஆறு, தமிழ்வளர்ச்சிக் கழகம், சென்னை, 1959

சிவஞான சித்தியார் சுபக்கம், மூன்றாவது திருவாவடுதுறை யாதீன மாநாட்டு மலர், 1954

திருமந்திர மாநாட்டு மலர் — 8, 1962

தினமலர், வாரமலர், 23—9—1990 நாளிதழுடன் இணைப்பு, சென்னை

வாழ்வியல் கலைக்களஞ்சியம், தொகுதி நான்கு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1990

BOOKS IN ENGLISM

Das Gupta, S. N., A History of Indian Philosophy, Vol. V, Cambridge University Press, London, 1955.

Farquhar, J. N., & Griswold. H.D., The Religious Quest of India, Oxford University Press, London, 1920

Findlay, J.N., A. R. E. Examination, George Allen & Unwin, London, 1958

Guru Dutt. Hindu Culture, Hindu Kitabs Ltd., Bombay, 1951

Maraimalai Adigal, Ancient and Modern Tamil Poets, T. M. Press, Pallavaram, 1940

Marshall, Sir John., Mohenjo Daro & The Indus Civilization, Vol. I, London, 1981

Meenakshisundaram, T. P., A History of Tamil Literature, Annamalai University, Annamalainagar, 1965

Nallaswami Pillai, J. M., Studies in Saiva Siddhanta, Kazhagam, Madras, 1984

Narayana Ayyar, C. V., Origin and Early History of Saivism in South India, University of Madras, Madras, 1936

Nilakanta Sastri, K. A., A Historical Introduction to Saivism in the Cultural Heritage of India, Vol. IV, Calcutta, 1956

Nilakanta Sastri, K. A., The Outline Culture and History of Tamils, K. L. Mukhopadhyay, Calcutta, 1964

Rajamanickam, M., Development of Saivism in South India, Dharmapura Adheenam, Dharmapuram, 1964

Shanmugavelan, A., Siddar's Science of Longevity and Kalpa Medicine of India, Sakthi Nilayam, Madras, 1963

Sivapadasundaram, S., The Saiva School of Hinduism, George Allen & Unwin Ltd., London, 1934

White, Leslie A., An Introduction to the History of Sociology, 1966

ENCYCLOPAEDIA

Comoton's Pictured Encyclopaedia, Vol. 13. Chicago, 1956

DICTIONARY

Sivananda, Swami., Yoga Vedanta Dictionary, Motilal Banarsidas Indological Publishers and Booksellers, Delhi, 1973

சுருக்க விளக்கம்


உரை	...	உரையாசிரியர்
கலி	...	கலித்தொகை
கழகம்	...	திருநெல்வேலித் தென்னிந்திய சைவசிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
குறள்	...	திருக்குறள்
சிலம்பு	...	சிலப்பதிகாரம்
தொல். பொருள்.	...	தொல்காப்பியம், பொருளதிகாரம்
நச். உரை	...	நச்சினார்க்கினியர் உரை
நூ.	...	நூற்பா
ப.	...	பக்கம்
பக்.	...	பக்கங்கள்
பா.	...	பாடல், பாடல்கள்
புறம்.	...	புறநானூறு
மணி.	...	மணிமேகலை
மு. கு. நூ.	...	முன்னர்க் குறித்த நூல்
மே. கு. நூ.	...	மேலே குறித்த நூல்

பின்னிணைப்புகள்


நமசிவய — ஐந்தெழுத்தினால் மனித உடலின் புறத்தோற்றம்




படம் — 1
ஆதாரங்களும் இதழ்களும்



படம் — 2
ஆதாரங்களில் பிராணன் மேலேறுதல்



படம் — 3
மூலாதரம் முதல் பிராணன் சித்ரணி வாயிலாக மேலேறுதல்



படம் 1 — ஆதாரங்களும் இதழ்களும்

1. மூலாதாரம் — நாலிதழ்
2. சுவாதிட்டானம் — ஆறிதழ்
3. மணிபூரகம் — பத்திதழ்
4. அநாகதம் — பன்னிரண்டிதழ்
5. சுழுத்தி — பதினாறிதழ்
6. நடுநாடி — ஈரிதழ் — திருமந்திரப் பாடல் 1029

படம் 2 — ஆதாரங்களில் பிராணன் மேலேறுதல்

1. மூலாதாரம் — நாலிதழ்
2. சுவாதிட்டானம் — ஆறிதழ்
3. மணிபூரகம் — பத்திதழ்
4. அநாகதம் — பன்னிரண்டிதழ்
5. சுழுத்தி — பதினாறிதழ்
6. ஆக்ஞை (நடுநாடி) — ஈரிதழ்
7. சகஸ்ரதளம் — ஆயிரத்தெட்டிதழ்

— — பாயும் வழி　　கு — குண்டலினி சக்தி

அ — அபானன்　　பி — பிராண சக்தி

(மீ. ப. சோமு, சித்தர் இலக்கியம், ப. 275. மீ. ப. சோமு இப்படத்தில் இரண்டு சுவாதிட்டானங்களைக் குறிப்பிடுகின்றார்).

படம் 3 — மூலாதாரம் முதல் பிராணன் சித்ரணி வாயிலாக மேலேறுதல்

1. மூலாதாரம்
2. சுவாதிட்டானம்
3. சித்ரணி
4. மணிபூரகம்
5. முதுகந்தண்டு
6. அநாகதம்
7. விசுத்தி
8. நடுநாடி
9. சகஸ்ரதளம்

(அரு. இராமநாதன், சித்தர் பாடல்கள் — 2, ப. 324)

குறிப்பு

படம் 1

இதிற் குறிப்பிடப்படும் ஆதாரங்களிலும், இதழ்களின் எண்ணிக்கையிலும் அறிஞர்களிடையே வேறுபாடு இல்லை.

படம் 2

இதில் பிராணன் அபானன் பாய்ந்து குண்டலினி மேலேறும் முறையை மீ. ப. சோமு விளக்குகிறார்.


படம் 3

குண்டலினியைச் சக்தியின் இருப்பிடமாக மூலாதாரத்தின் தெய்வமாகச் சித்தர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

ஆனால், 'சித்தர் பாடல்கள்' என்னும் நூலில் அரு. இராமநாதன் அவர்கள் கணபதியை மூலாதாரத்திற்குரிய தெய்வமாகக் கொள்கிறார். இவரைத் தவிர யாரும் விநாயகரைத் தெய்வமாகக் குறிப்பிடவில்லை; எனவே அரு. இராமநாதனின் கூற்றுப் பொருந்துமாறு இல்லை எனலாம்.

மேலும், சக்தி சிவனோடு ஒன்றுதல் என்ற தத்துவ விளக்கத்தின் பொருள் விநாயகர் சிவனோடு சிதாகாயத்தில் சென்று சேருகிறார் என்பதும் பொருந்துமாறு இல்லை. இவற்றால் மூலாதாரத்திற்குரிய தெய்வம் சக்தி என்றே கொள்ளலாம்.

அண்டலிங்கம்



அண்டலிங்கம்

இலிங்க தத்துவம் — 96

அகக்கருவிகள் 36. இம்முப்பத்தாறு தத்துவங்களும் ஆன்மாவுக்கு உரியனவாகும்.

கடவுள் உயிர்களுக்கு மாயையை நீக்கி இன்பத்தைக் கொடுக்கத் தம் அருட்சக்தியை மாயையில் பதிப்பிக்கின்றார். அப்போது மாயை ஐந்து பிரிவுகளாகின்றது. அவை:

	கலை	அதிபதிகள்
1.	சாந்தியதீத கலை	சதாசிவன்
2.	சாந்தி கலை	மகேசன்
3.	வித்யா கலை	ருத்திரன்
4.	பிரதிட்டா கலை	திருமால்
5.	நிவர்த்தி கலை	பிரம்மா

கலை — பிரிவு

இவற்றின் உட்பிரிவுகள் சாதாரண தத்துவங்கள் எனப்படும்.

சுத்த தத்துவங்கள்

1. நாதம்
2. விந்து
3. சாதாக்கியம்
4. ஈச்சுவரம்
5. சுத்த வித்தை

சாந்தியதீத கலையின் உட்பிரிவுகள்

1. நாதம்
2. விந்து

சாந்தி கலையின் உட்பிரிவுகள்

1. சாதாக்கியம்
2. ஈச்சுவரம்
3. சுத்த வித்தை

சாதாக்கியத்தில் — அனுசதாசிவர்— பதினெண்மர்
ஈசுவரத் தத்துவத்தில்— அட்டவித்யேசுவரர்— எண்மர்
சுத்தவித்தை தத்துவத்தில்— மகாமந்திரர்கள்— சப்தகோடியர்
வசிக்கின்றனர்.

சுத்தவித்தை

சுத்தவித்தையின் கீழ்ப்பாகத்தில் அபக்குவ மல விஞ்ஞான கலர்கள் வசிக்கின்றனர்.

அட்ட வித்தியேசுவரரில் முதல்வர் அனந்தர். இவர் சதாசிவர் அதிகாரம் பெற்று மிசிர மாயையைப் பிரகாசிக்கச் செய்கிறார். அப்போது மாயை,

1. காலம்
2. நியதி
3. கலை
4. வித்தை
5. அராகம்

என்னும் தத்துவங்களைத் தோற்றுவிக்கிறாள்.

அராகத்தின் கீழ்ப்பகுதி புருடன் எனப்படும். இவை ஏழும் வித்யாகலையின் உட்பிரிவுகள்.

இவற்றுள் மாயை என்னும் தத்துவத்தில் பிரளயாகலர் பக்குவர்களான சீகண்டவீரர், மண்டலர், மண்டலாதிபர் என்னும் அனந்தரின் அதிகாரம் பெற்று அசுத்தமாயையைத் தோற்றுவிப்பர்; அப்போது,

1. சித்தம்
2. புத்தி
3. மனம்
4. ஞானேந்திரியம் 5 (செவி, தோல், கண், நாக்கு, மூக்கு)
5. கன்மேந்திரியம் 5 (வாக்கு, கால், கை, எருவாய், கருவாய்)
6. தன்மாத்திரைகள் 5 (ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம்)

என்னும் 16 தத்துவங்களைத் தன்னுள் அடக்கிய அகங்கார ஆகாயம், காற்று, தீ, நீர், நிலம் என்னும் தத்துவங்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றும். இவற்றுள் சித்தம் முதல் நீர் வரையுள்ள இருபத்து மூன்று தத்துவங்களும் பிரதிட்டாகலையின் உட்பிரிவுகளாகும். பிருதிவி தத்துவம் 1 நிவர்த்தி கலையைச் சார்ந்தது. இந்த இருபத்துநான்கும் அசுத்த தத்துவங்கள்.

புறக்கருவிகள் 60 தத்துவங்கள்

கடவுள் தம் அருள்சக்தியை மாயையுடன் சேர்த்துக் கலக்கிய போது அதிலிருந்து மூன்றாவதாக அசாதாரண தத்துவங்கள் தோன்றி, அவை தம்முள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்தியங்கும்.

1. சுத்தமாயையில் இருந்து நாத தத்துவமும்
2. நாதத்தில் இருந்து விந்துவும்
3. விந்துவில் இருந்து சாதாக்கியமும்
4. சாதாக்கியத்தில் இருந்து ஈசுரமும்
5. ஈசுரத்தில் இருந்து சுத்தவித்தையும்

தோன்றும். இவ்வைந்து அசாதாரண தத்துவங்களும் சிவசக்தி களால் இயக்கப்படுவதால் சிவதத்துவம் எனப்படும்.

அனந்தரால் சூழப்பட்ட மிசிரமாயையில் இருந்து காரிய மாயையும் காரியமாயையில் இருந்து,

1. காலம்
2. நியதி
3. கலை
4. வித்தை
5. அராகம்

என்னும் தத்துவங்கள் தோன்றும். இவ்வைந்தின் சேர்க்கையால் புருடன் தோன்றும். இவ்வேழும் உயிர்களுக்கு அறிவை விளக்கு வதால் வித்தியாதத்துவங்கள் எனப்படும்.

சீகண்டர் அசுத்தமாயையைக் கலக்க, அதிலிருந்து சித்தமும், சித்தத்திலிருந்து புத்தியும், புத்தியிலிருந்து அகங்காரமும் தோன்றும்.

இவ்வகங்காரம்,

1 தைசத அகங்காரம்
2. வைகரி அகங்காரம்
3. பூதாதி அகங்காரம்

என மூன்று வகைப்படும்.

தைசத அகங்காரத்திலிருந்து,

1. மனம்
2. ஞானேந்திரியங்கள் 5

ஆகியன தோன்றும்.

வைகரி அகங்காரத்திலிருந்து,

1. கன்மேந்திரியங்கள் 5

தோன்றும்.

பூதாதி அகங்காரத்திலிருந்து,

1. தன்மாத்திரைகள் 5

தோன்றும். இவையனைத்தும் சூட்சும பூதங்கள் எனப்படும். இச்சூட்சும பூதங்களிலிருந்து தூல பூதங்கள் தோன்றும்:

1. சத்தம் — ஓசையிலிருந்து ஆகாயமும்
2. பரிசம் — ஊறிலிருந்து காற்றும்
3. ரூபம் — ஒளியிலிருந்து தீயும்
4. இரசம் — சுவையிலிருந்து நீரும்
5. கந்தம் — நாற்றத்திலிருந்து நிலமும்

தோன்றும்.

இந்த இருபத்துநான்கு தத்துவங்களும் உயிர்களுக்குப் போகத்தை உண்டாக்குவதால் ஆன்ம தத்துவம் எனப்படும். இத்தத்துவங்களின் செயல்கள் தாத்துவிகங்கள் ஆகும்.

1. நிலத்தின் செயல்—மயிர், தோல், எலும்பு, நரம்பு, தசை.
2. நீரின் செயல் — நீர், உதிரம், மூளை, நிணம், சுக்கிலம்.
3. தீயின் செயல் — உணவு, தூக்கம், பயம், மைதுனம், சோம்பல்.
4. காற்றின் செயல் — ஓடல், இருத்தல், நடத்தல், கிடத்தல், தத்தல்.
5. ஆகாயத்தின் செயல் — குரோதம், லோபம், காமம், மதம், மாற்சர்யம்.

— இந்த இருபத்தைந்தும் பூத செயல்கள்; அதாவது பூத காரியங்கள் எனப்படும்.

கன்மேந்திரியங்களின் செயல்கள்

1. வாக்கின் செயல் வசனம்
2. காலின் செயல் நடத்தல்
3. கை தீயினிடம் இடுதலையும் ஏற்றலையும் செய்யும்
4. எருவாய் நீரினிடமாக மலம்விடும்
5. கருவாய் நிலமிடமாகச் சுக்கிலம் விடும்.

1. காற்றின் செயல் — வாயுக்கள் பத்து

1. பிராணன்
2. அபானன்
3. வியானன்
4. உதானன்
5. சமானன்
6. கூர்மன்
7. நாகன்
8. கிருதரன்
9. தேவதத்தன்
10. தனஞ்செயன்

2. மண்ணின் செயல் — நாடிகள் பத்து

1. இடகலை
2. பிங்கலை
3. சுழுமுனை
4. காந்தாரி
5. அத்தி
6. அலம்புடை
7. சிங்குவை
8. புருடன்
9. சங்கினி
10. குகு

3. விந்துவின் செயல் — வாக்குகள் நான்கு

1. சூக்குமை
2. பைசந்தி
3. மத்திமை
4. வைகரி

4. சித்தம் — குணங்கள் மூன்று

1. சாத்விகம்
2. இராசதம்
3. தாமதம்

5. ஆகாயத்தின் செயல் — வேடணைகள் மூன்று

1. தார வேடணை
2. புத்திர வேடணை
3. அரத்த வேடணை


— இந்த அறுபதும் புறக்கருவிகளாக இயங்கும்.

மாயாகாரியங்கள் மாயையிலிருந்து தோன்றுவன. அவ்வாறு தோன்றி மனிதனை இயக்குகின்றன. இத்தத்துவங்களில் இருந்து ஆன்மா தன்னை விடுவித்துக் கொள்ளும்போது ஆன்மா பதியினைப் போல் அனாதி ஆகும். அனாதியான பசு, அனாதி யான பதியுடன் ஒன்றுதலே வீடுபேறு அடைதல். தத்துவங்கள் ஆன்மாவைப் பிணித்துள்ளவரை உடல் இயங்கும். இத்தத்துவங் கள் செயலற்றபோது இறப்பு ஏற்படும். பின், வினைக்கேற்பப் பிறப்பு ஆன்மாவைத் தொடரும். தத்துவங்கள் தம்மை அறிந்து ஆன்மாவை விட்டு நீங்கும்போது அல்லது ஆன்மா தன்னைத் தத்துவங்களைவிட்டு விடுவித்துக் கொண்டபோது, சீவன், சிவன் என்ற நிலைமாறி சீவன் சிவனுக்குள் அடங்கும். அதாவது பேரின்பப் பேறாகிய வீடுபேற்றினைப் பெறும்.

— (இத்தத்துவங்கள் பற்றிய செய்தியையும் வரைபடத் தையும் தந்துதவியவர் வ. ஆ. அ. மாவட்டம், வேலூர், திருவேங்கடவன் மேனிலைப் பள்ளிச் தமிழாசிரியர் புலவர் எஸ். கந்தசாமி அவர்கள்.)

படம் — 4

இலிங்கப் புணர்ச்சி



படம் — 4

குறிப்பு: இலிங்கப் புணர்ச்சி

விந்து ○ வட்ட வடிவம்


சக்தி ☐ நாதம் தண்ட வடிவம், சிவம்.

சிருட்டியில் தண்டமாகிய சிவத்தை ஆதாரமாகக் கொண்டு விந்துவாகிய சக்தி தொழிற்படுகிறது. அதனால், உருவமான உலகிலும் அருவமான ஆன்மாவிலும் விந்துநாதமான இலிங்கப் புணர்ச்சியுள்ளது என்றறிக.


மூலாதாரந் தொட்டு உன்மனி வரையில் விந்துமயமாக சக்தியும், தண்டமயமாக சிவமும் பொருந்தி ஆகாயத்தாலான அண்டகோசம் அமைந்துள்ளது.

(திருமந்திரம், ஜி. வரதராஜன் உரை, மூன்றாம் பாகம், பா. 1754, ப. 24.)


திருவம்பலச் சக்கரம்



சாம்பவி மண்டலச் சக்கரம்



புவனாபதிச் சக்கரம்



நவாக்கரி சக்கரம்





ஆசிரியையின் இலக்கியப் பணிகள்

திருமதி டாக்டர் G. கௌசல்யா விஜயன், எம்.ஏ., எம்ஃபில், பிஎச்.டி விரிவுரையாளர், தமிழ்த்துறை, டி. கே. எம். மகளிர் கல்லூரி, வேலூர்-1, அவர்கள் இலக்கிய—ஆன்மீகப் படைப்புக் களில் நாட்டமுடையவர். நல்லதொரு எழுத்தாளர்.

ஆன்மீக ஐக்கிய சங்க மலர்களிலும், சப்தகிரி மாத இதழ் களிலும் எழுதும் இவர், கட்டுரைகள் பல கன்னித் தமிழில் வரைவதிலும் ஆர்வமுடையவர். ஓராற்றான் பேச்சாற்றலும், கவிபுனையும் ஆற்றலும் வாய்க்கப் பெற்றவர்.

வடார்க்காடு அம்பேத்கர் மாவட்டத் தலைநகர் வேலூரை அடுத்த 'கழிஞ்சூர்' என்னும் பேரூராட்சியில் 5 - 12 - 1954ல் திரு. R. கஜேந்திரன், திருமதி G. நீலாம்பாளுக்குப் பிறந்த இவர், திரு. S. விஜயன், எம் ஏ., எம் எட் அவர்களின் வாழ்க்கைத் துணைவியராகிக் கணவர் தந்த ஊக்கத்தினால், இறைச் சிந்தனை யில் நாட்டம் செலுத்தினார்

அதன் காரணமாகத் திருமூலரின் சிந்தனைகளில் மூழ்கி, திரு டாக்டர் அரங்க. இராமலிங்கம், எம்.ஏ , எம்ஃபில், பிஎச் டி இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, அஞ்சல்வழிக்கல்வி நிறுவனம், சென்னைப் பல்கலைக்கழகம் அவர்களது மேற்பார்வையின் கீழ் 'திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனைகள்' என்ற பிஎச்.டி பட்டத்தினைச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பெற்றவர். 1995 - டிசம்பரில் 'திருமூலரின் திருமந்திரமேனி' என்ற நூலை வெளியிட்டவர்.

இவ்வாண்டு, 'சமுதாயமும் தவமுனிவர்களும்' என்ற நூலை இரண்டாவதாக வெளியிட்டவர். மூன்றாவது நூலாகத் தாம் பிஎச்.டி ஆய்வில் கண்ட அரிய கருத்துக்களை உள்ளடக்கி 'திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனைகள்' என்னும் நூலை வெளியிடுகிறார். இந்நூல் இன்றைய சமுதாயத்திற்குப் பெரும் பயன் நல்கக்கூடிய நூல்.

மேலும் பல படைப்புகட்கு வழிகோலும் இவர் மென்மேலும் இலக்கியத் துறையில் வளர்ச்சி பெற வாழ்த்துகிறோம்.

—பதிப்பகத்தார்